கொங்கணவர் வாதகாவியம் 3000

(மூலமும் உரையும்)

பாகம் - 1



தாமரை நூலகம், சென்னை - 600 026.

கொங்கணவர் வாதகாவியம்-3000

முதல்காண்டம்-கருத்துரையுடன்

பதிப்பாசிரியர்

ஆர்.சி.மோகன்

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண் - 044 - 23620249

தாமரை வெளியீடு எண் : 88
முதல் பதிப்பு : டிசம்பர் 1992
இரண்டாம் பதிப்பு : மே 2000
மூன்றாம் பதிப்பு : ஜூலை 2013
நான்காம் பதிப்பு : பிப்ரவரி 2018
ஐந்தாம்.பதிப்பு : ஜீலை : 2023

பதிப்புரிமை பெற்றது

நூலைப்பற்றி

நூலின் பெயர் : கொங்கணவர் வாதகாவியம் - முதல் காண்டம்

பதிப்பாசிரியர் : ஆர். சி. மோகன்

வெளியிட்டோர் : தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி
வடபழனி, சென்னை - 26.

பதிப்பு ஆண்டு : ஜீலை :2023

உரிமை : பதிப்பகத்திற்கு

நூல் வடிவம் : டெமி

அச்சுத்தாள் : 16 கி.வெள்ளைத்தாள்

எழுத்துக்கள் : 11 புள்ளி

மொத்த பக்கங்கள் : 300

பிரதிகள் : 1000

நூல் விலை : ரூ. 180.00

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட்
நுங்கம்பாக்கம், சென்னை -34

நன்றி

கொங்கணவர் வாத காவியம் 3000 என்ற இந்த நூலின் பழைய பிரதி ஒன்றைக் கொடுத்து உதவிய வில்லிவாக்கம், லட்சுமிபுரம், கீழ் ஆவடி ரோடு, நான்காவது தெருவில் வசிக்கும் திரு. S. ரத்தினசாமி முதலியார் அவர்களுக்குப் பெரிதும் நன்றிக் கடன் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இவர் தந்தை திரு. சுப்ரமணியமுதலியார் சாதாரணமாக விவசாயம் செய்து ஜீவித்தார். ஆனால் தாத்தா நாராயணசாமி முதலியார் சித்த வைத்தியர். அவர் பயன்படுத்தி வந்த நூலே இது. இதன் முதற் பக்கங்கள் இல்லாததால் எப்போது பதிப்பித்தது என்பதோ எந்த ஆண்டு வெளியிடப்பட்டது என்பதோ தெரியவில்லை.

முதற்பகுதியில் சிதைத்துவிட்ட சுமார் இருநூறு பாடல்கள் சென்னை கீழ்த் திசை ஓலைச் சுவடிகள் நூலகத்திலிருந்து (Oriental Manuscripts Library) சுவடி பார்த்து எழுதப்பட்டது.

எஸ்.பி. இராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்

முதல் பதிப்பின்
பதிப்புரை

சித்தர்கள் வெள்ளைப் பாக்களால் பாடினார்கள். அவை இலக்கண வரம்புக்கு உட்பட்டவையாக இருக்கவில்லை. நாட்டுப்புறச் சொற்களையும், வழக்குச் சொற்களையும் கையாண்டவர். அவற்றில் இலக்கிய நயம் இல்லை என்ற தவறான கருத்துக்கள் அறிஞர்களிடையே மிகுதியும் பரவி உள்ளன. ஐயகோ ! கற்றுணர்ந்தவர்களும் சித்தர்கள் பாடல்களைப் பயின்றவர்களும் கூட இக்கூற்றை மறுக்காதது கண்டு வருந்துகிறோம்.

பரிபாஷைச் சொற்களும் தவறுகளும் மலிந்திருந்ததும் தமிழ் கற்றுணர்ந்தவர்கள் சித்தர் நூல்களை ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளாததற்கு ஒரு காரணமாகும்.

சித்தர் பாடல்களை ஒரு உ. வே. சா. மஹா மஹோ பாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதஐயர்) பதிப்பிக்க எடுத்துக் கொண்டிருந்தால் அவற்றின் தரம் இமயத்தினைத் தாண்டி இருக்கும். ஆனால்.....

சித்தர் பாடல்கள் வழிவழியாக ஒருவர் சொல்ல இன்னொருவர் எழுத என்ற முறைப்படி ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டு வந்தன. அப்படி எழுதப்படும் பொழுது ஏற்பட்ட பிழைகள் எண்ணிடலங்கா ! பிற்காலத்தில் அவற்றை அச்சிட முன்வந்தவர்கள் அவற்றின் விற்பனை வேகம் கண்டு எழுத்துக்களை அள்ளி அடுக்கி அச்சிட்டது போல் சரியாகப் பிழைதிருத்தம் பார்க்காமலும் வரிகளை விட்டும், சொற்களைக் குறைத்தும், திரித்தும், அவரவர்கள் மனம்போன போக்கில் அச்சிட்டு வெளியிட்டு விட்டனர். இதனால் புலவர்களும், கல்வியறிவு மிக்கவர்களும், கண்ணெடுத்தும் பாராத ஒரு துறையினவாகவே சித்தர் பாடல்கள் ஒதுக்கப்பட்டு விட்டன.

ஆனால் கருத்துச் செறிவை எடுத்துக் கொண்டு பார்ப்பதாயின் கம்பன் பாடலில் பத்துப் பாடல்களுக்கு ஒரே ஒரு சித்தர் பாட்டு இணையாக இருப்பதனைக் காணலாம். இலக்கிய நயத்திலும் அவை எள்ளளவும் குறைந்தவை அல்ல. சித்தர் பாடல்களின் இலக்கிய நயத்தை மட்டும் எடுத்துக் காட்டுவது என்றால், ஒவ்வொரு சித்தருக்கும் ஒரு பெருநூலே எழுதலாம். ஏனென்றால் சித்தர்கள் ஒவ்வொரு வரும் அவ்வளவு பாடல்கள் பாடி உள்ளனர். விருத்தம், வெண்பா, கலித்துறை, நேரிசைப்பா, சிந்து என்ற எல்லா வகைப் பாடல்களையும்

இயற்றியுள்ளனர். அவற்றின் சொல்லழகும், கலைநயமும், கற்றோர்க்கு எண்ணிப்பார்க்குந்தோறும் இன்பம் பயப்பனவாம்.

எடுத்துக்காட்டாக கொங்கணவரின் ஒன்றிரண்டு பாடல்களை இங்கே சுட்டிக்காட்டுவது ஏற்புடைத்து என்று கருதுகிறோம்

கொங்கணவர் பராபரையான தாயைப் போற்றுமிடத்து,

தீயாகி மதியாகி ரவியுமாகி
சிறந்துநின்ற வாசியுமா யெட்டுமாகித்
தாயாகித் தந்தையுமாய்த் தாரமாகி
சகவிருக்ஷ முறவினமும் சகமுமாகிப்
பூவாகிக் காயாகிப் பிஞ்சுமாகி
கனியு முன்னே தின்றழித்த காலனாகி
வாயாகிக் கையாகி மனதுமாகி
வாக்கடங்கா வொளியெனவே வழுத்திடாயே.

தாயைப் பற்றி நினைக்கையிலேயே சித்தரது உள்ளம் மெய்மறந்து விடுகிறது. அவள் எப்படி எல்லாம் தோன்றி இந்த உலகத்தினைப் படைத்தாள் என்பதனை நினைக்க நினைக்க உள்ளம் புளகாங்கிதமடைகிறது. தீயாகி, நிலவாகி, சூரியனாகி, அதன்பின் சிறந்த காற்றுமாகி, உயிரினங்களுக்கெல்லாம் தாயும் தந்தையுமாகி, புல் பூண்டு முதலான சகல உயிர்களையும் படைத்து அவை வளர்ந்து முதிர்ச்சி அடையுமுன்னே அழித்துவிடுகின்ற காலனுமாகி, சொல்லுக்கு அடங்காத ஒளியாக எங்கும் வியாபித்து நின்றாய் ! என்று கூறிகிறார்.

படைப்பின் தத்துவத்தினைக் கூறுவதோடு மட்டுமல்லாமல், படைப்பு எவ்வாறு நிகழ்ந்தது என்பதைனையும், சுட்டிக்காட்டி விடுகின்றார். சூரியன், சத்திரன், அககினி என்ற முச்சுடர்களும் அதன்பின் வாயுவும், தோன்றிப் பிறகு உயிர்வாழ்வன தோன்றிய வகையைக் கூறுகின்றார். பாடலின் அழகு மெய்சிலிர்க்க வைக்கின்றது. ஒருகணம் கண்களை மூடிக்கொண்டு சிந்திக்க வைக்கின்றது. நமது மனக்கண் முன்னால் அண்ட சராசரங்களும் மற்ற உயிர் வர்க்கங்களும் தோன்றி மறைகின்றன. ஒரு சிறிய பாடலில் படைப்பைப் பற்றி முழுமையாகக் கூறிவிட்ட சித்தரின் திறம் அடுத்த பாடலில்

வழுத்தியம்மா நீ பிரிந்தால் புவனமேது
வாழ்வேது சாவேது மாயமேது
சுழுத்தியென்ற நித்திரையும் ஞானமேது
சொல்லேது பொருளேது சுகந்தானேது
களித்துநின்ற ஆனந்த வெள்ளமேது
கரையேது சவு சஷ்டி கர்மமேது

ஒளித்து நின்றார் ஈசனம்மா உள்ளுக்குள்ளே
ஓகோகோ உத்தமியே என்று போற்றே.

பாடலைப் படிக்கும் போது உணர்ச்சிப் பெருக்கால் உள்ளம் விம்முகின்றது. தாய்க்கும், மகனுக்கும் உள்ள பாசத்தினை இதைவிடச் சிறப்பாக வர்ணிக்க முடியுமா? என்பதில் ஐயம் ஏற்படுகின்றது. இங்கே தாய் எங்கும் நிறைந்த பராபரை ஆதலால் பிள்ளையாகிய சித்தரின் உள்ளத்தில் பெருக்கெடுக்கும் பக்திப் பிரவாகம் அலைகடந்து போகின்றது. மறுபடியும் மறுபடியும் பாடலைப் படிக்கின்றோம். நம்மையறியாமல் நாமும் ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறோம். நினைக்க நினைக்க உள்ளத்தில் உவகை பொங்குகின்றது. அம்மம்மா, இந்த ஆனந்த அனுபவத்திற்கு உள்ளாக்கிய சித்தரின் பெருமையை எண்ணிப் பார்க்கவும் முடியுமா?

இப்படி ஒவ்வொரு பாட்டாக எடுத்துக் காட்டிக் கொண்டே போகலாம்.

சித்தர் பாடல்களைத் தக்கபடி ஆராய்ந்து அவற்றின் கவிதை நயங்களை உலகிற்கு எடுத்துக் காட்ட வேண்டும். தமிழ்ப் பல்கலைக்கழகம் சித்தர் பாடல் நயம் பற்றி ஆராய்ச்சி செய்வோரை ஊக்குவித்து டாக்டர் பட்டங்கள் வழங்க வேண்டும். அத்துறையில் பல நூல்கள் வெளிவர வேண்டும் என்பதெல்லாம் நம் அவா !

ஆனால் காலமும் பொருள் வசதியும் இடம் கொடாத காரணத்தினால் சித்தர் நூல்களை வெளியிடும் போது முழுவதும் பிழையற்றவையாகக்கூட வெளியிட முடியவில்லையே என்ற எண்ணம் உள்ளத்தினை உலுக்குகின்றது. எல்லாச் சித்தர் நூல்களையும் எப்படியாவது வெளியிட்டு அவை அழிந்து போகாமல் காப்பாற்றி விடவேண்டும் என்ற ஆத்திரத்தினால் உந்தப்பட்டே செயலாற்றும் நிலையில் இருக்கின்றோம். தக்கவர்கள் இப்பணியை மேற்கொண்டு இன்னும் சிறப்பாகச் செய்ய முன்வர வேண்டும் என்று விரும்புகின்றோம். அறை கூவி அழைக்கின்றோம் ! இங்கு,

கொங்கணவர் வாழ்க்கை வரலாற்றினைப் பற்றி சிறிது கூற வேண்டியது அவசியம் என்று நினைக்கிறோம்.

கொங்கணவரின் பெற்றோர் இரும்புக் கலங்கள் செய்து பிழைத்தனர் என்றும், அவர்களுடைய நற்பண்புகள் கண்டு வியந்த சான்றோர் அருளாசியும் பொருட் செல்வமும் கொடுத்து நல்ல முறையில் வாழ வழி செய்தனர் என்றும் அகத்தியர் கூறுகிறார். கொங்கணவர் தக்க வயது அடைந்ததும் பெற்றோரின் தொழிலை மேற்கொண்டு வணிகம் பெருக்கி வளமான வாழ்க்கை நடத்தினார். மணம் செய்து

கொண்டு இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தார் என்றும் அகத்தியர் கூறுகின்றார்.

ஆனால் இந்த வரலாறு வெளியுலகம் அறியாததாகவே மறைந்து விட்டது.

கொங்கணவர் சித்தர்களுடன் தொடர்பு கொண்டு மூலிகைகளுக்காக காடு மலைகளில் அலைந்து திரிந்து வரும் காலத்தில், ஒரு பளிங்கர் கூட்டம் துக்கத்தால் அழுது புலம்பிக் கொண்டிருப்பதனைக் கண்டார். பளிங்கர்களிர் இளைஞனாகிய ஒருவன் இறந்து போய் விட்டதே காரணம் என்று அறிந்தார். உடனே தம் உடலைப் பத்திரப்படுத்திவிட்டு இறந்துகிடந்த பளிங்கனின் உடலில் பிரவேசித்து விட்டார்.

இறந்து கிடந்த பளிங்கன் எழுந்து விட்டதைக் கண்டு பளிங்கர்கள் ஆச்சரியமும், ஆனந்தமும் அடைந்தனர். ஆனால் அவனுடைய பேச்சுக்களும், செயல்களும் மாறுபட்டிருப்பதைக் கண்டு ஐயம் கொண்டனர். கானகத்தில் சித்தரின் உடலைப் பார்த்ததும் உண்மையைப் புரிந்து கொண்டனர். உடனே அந்த உடலை எரித்து விட்டனர். அது முதல் கொங்கணவர் பளிங்கரோடு பளிங்கராகவே வாழத் தொடங்கி விட்டார் என்ற விபரம் கருவூரார் வாதகாவியத்திலிருந்து கிடைக்கிறது.

கொங்கணவர் போகரின் சீடர் என்பது அவருடைய முதல் பாடலிலேயே விளங்கி விடுகின்றது. சிலர் வேறுவிதமாகக் கூறி இருப்பது ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று.

கொங்கணவர் காலம்

கொங்கணவர் வாழ்ந்த காலத்தினைப் பற்றியும் தெளிவாக அறிய முடியவில்லை கொங்கணவர் காலத்தினைப் பற்றிய ஆராய்ச்சி மற்ற சித்தர்கள் வாழ்ந்த காலத்தினைப் பற்றியும் அறிந்து கொள்ள உதவும் என்பதால் இது முக்கியத்துவம் வாய்ந்ததாகின்றது.

ஒரு செய்தி கொங்கணவரை திருவள்ளுவர் காலத்தவராகக் கூறுகின்றது. திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக வாழ்ந்தவர் என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

இன்னொரு வரலாறு கொங்கணவர் திருமழிசை ஆழ்வாரைச் சந்தித்து வாதாடியதாகக் கூறுகின்றது. ஆழ்வாரும் காலத்தினால் முற்பட்டவரே என்றாலும் திருவள்ளுவரும் திருமழிசை ஆழ்வாரும் ஒரே காலத்தில் வாழ்ந்தார்களா என்பது ஆராயப்பட வேண்டியது ஆகும். இதனால் கொங்கணவர், போகர் முதலான சித்தர்கள் வாழ்ந்த காலத்தினை நிர்ணயம் செய்ய முடியாமல் போகின்றது.

கொங்கணவரின் பெருமை

திருமூலர் காலாங்கி நாதர் முதற்கொண்டு எல்லாச் சித்தர்களுமே கொங்கணவரைப் பற்றி மிகவும் பெருமைப் படுத்திப் பாடி உள்ளனர். தவிர மூலவர்க்கத்தார் அல்லாத சித்தர்களில் உரோமரிஷியும், காகபுசுண்டரும், கொங்கணவரைப் பற்றிச் சிறப்பித்துக் கூறியுள்ளனர். ஞானம் பாடியவர்களில் கொங்கணவரே மிகச் சிறந்தவர் என்பதும் அவருடைய ஞானம் நூறு, கடைக்காண்டம் ஐந்நூறுக்கு இணையான நூல்களே கிடையாது என்றும் கூறுகின்றனர்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த கொங்கணவர் வாதகாவியம் மூவாயிரத்தில் முதல் காண்டத்தினை தமிழ் மக்களுக்குச் சமர்ப்பிப்பதில் பெருமை அடைகிறோம். முதல் காண்டம் நமக்குக் கிடைத்த பதிப்பில் 947 பாடல்களே உள்ளன. முழுமையாக யாரிடமாவது இருந்தால் கொடுத்து உதவினால் அடுத்த பதிப்பில் சேர்த்துக் கொள்ள உதவியாய் இருக்கும்.

இந்நூலின் இரண்டாவது மூன்றாவது காண்டங்களும் மற்ற நூல்களும் வெளியிடும் வாய்ப்பினை இறையருள் கூட்டுவிக்கும் என்று நம்புகிறோம்.

வணக்கம்
எஸ்.பி. இராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்.

பதிப்புரை

எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு கொங்கணவர் வாத காவியத்தின் முதல் காண்டம் மறுபதிப்பைக் காண்கிறது. மிக நீண்ட இடைவெளி என்றாலும் தமிழ் மக்களிடையே சித்தர்களைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆவல் பெருகிவருகிறது. சித்தர் நெறி வேரூன்றத் தொடங்கிவிட்டது என்பதையே இது காட்டுகிறது.

கற்ப சாதனையால் நரை, திரை, மூப்பு, இல்லாமல் உடலைக் காப்பாற்றி உலகத்தின்மேல் என்றும் உயிர் வாழும் மரணமிலாப் பெருவாழ்வை அடைய முடியும் என்று கூறவது சித்தர் நெறி ஒன்று மட்டுமே. இன்று உலகம் முழுவதிலும் உள்ள அறிவியலார் அதைப்பற்றி ஆய்வு செய்ய முனைந்துள்ளனர்.

அதே போல் சித்த மருத்துவத்தில் உள்ள அற்புத மூலிகைகளையும் மற்ற பஸ்ம செந்தூர மருந்துகளையும் பற்றியும் உலகம் முழுவதுமே அக்கரை காட்டத் தொடங்கியுள்ளது.

இந்த விழிப்புக்கு உரமூட்ட வேண்டு மென்றால் சித்தர்களின் நூல்களனைத்தும் வெளி வரவேண்டும். அவற்றுக்கு விளக்கம் கூறவும், சித்தர் நெறிகளில் பயிற்சி கொடுக்கவும் தக்க நல்லாசான்களும் வேண்டும்.

உதட்டில் ஒன்றும் உள்ளத்தில் ஒன்றுமாக நடமாடும். ஆரவாரக் காரர்களால் பயனில்லை. உண்மையான உள்ளம் உடையவர்கள் வேண்டும். சரியான பொருளாதார வசதியின்மையால் தாமரை நூலகம் இன்று தடுமாறத் தொடக்கியுள்ளது என்பதை வருத்தத்துடன் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

ஆயினும் சித்தர் நெறி தழைக்க முழுமூச்சுடன் உழைப்பது என்ற பணியில் இன்னும் எம்மால் முடிந்ததனைத்தும் செய்வோம் என்று உறுதி கூற விரும்புகிறேன்.

வணக்கம்

எஸ்.பி. இராமச்சந்திரன்

பொருளடக்கம்

முற்றும்

உ

கொங்கணவ தேவாய நம:

கொங்கணவர் வாத காவியம்-3000

முதல் காண்டம்

பூஜாவிதி

பாரபரத்திலடைந்து நின்ற மூல நாயன்
பதமிறைஞ்சி முக்காலுந் தொழுது போற்றி
நிராமயத்திலுணர்ந்து நின்ற பெரியோர் பாதம்..........
நீங்காமற் தொழுதிறைஞ்சி நெஞ்சில் வைத்துத்
தராதரமா யெனையீன்ற போகர் பாதஞ்
சதா நித்தந் தொழுதிறைஞ்சித் தாசனாகித்
துராதுரைச் சிவனுடைய பாதம் போற்றிச்
சொல்லுகிறே னேழு லட்சஞ் சுருக்கித்தானே! 1

பராபரம் என்றழைக்கப்படும் பரப்பிரம்மத்துடன் இரண்டறக் கலந்து நின்றவரும், நிற்கின்றவருமான திருமூலநாயனாரின் பாதத்தைப் போற்றி முக்காலம் வணங்கியும், நிராமயமான மூலப்பொருளை இன்னதென்று அறிந்து கொண்ட பெரியோர்களின் பாதங்களை வணங்கியும், என்னுடைய குருவான போக நாதருடைய திருவடிகளை மனதில் வைத்து சதா சர்வகாலமும் அஞ்சலி செய்தும், சிவபெருமானுடைய பாதத்தைப் போற்றி வணங்கியும் ஏழு லட்சம் என்ற நூலைக் குறுக்கி மூவாயிரமாகப் பாடுகிறேன்.

(குறிப்பு: ஏழு லட்சம் என்ற நூல் ஆதியில் பார்வதிக்கு சிவபெருமானால் உபதேசிக்கப்பட்ட நூல் ஆகும். இதுவே சித்தர்களுக்கு ஆதி நூலாகும்)

தானென்ற துரைச்சியைத்தான் பூசை பண்ணச்
சங்கையுண்டோ கரையுண்டோ சாங்கமுண்டோ
வானென்ற வைவருந்தான் பூசை பண்ண
மாட்டாமற் பீடமென வணங்கினார்கள்
வேனென்றும் பூசை பண்ண வென்னாற்கூடா
விட்ட குறையாற் றொடர்ந்தாள் வேதாந்தத்தி
பானமென்றால் வெகுபிரிய மென்தாய்க்கப்பா
பரிவாகப் பூசை பண்ணிப் பாரு பாரே. 2

வாக்காலும் மனதாலும் புத்தியாலும் அறியப்பட முடியாதவளான தாயாரை (துரைச்சியை) பூசை பண்ணும் முறையைப் பற்றி வாயால் கூற இயலாது. அதற்கு ஆரம்பமும் முடிவும் கிடையாது. இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த தாயாரைப்பூசை செய்ய முடியாமல் பிரம்மா, விஷ்ணு, ருத்திரர், மகேஸ்வரர், சதாசிவன் என்ற ஐவரும்

பீடமாக நின்று வணங்கினார்கள். அப்படிப்பட்ட தாயாரை வணங்குவதற்கு என்னாலும் முடியவில்லை. விட்ட குறை (பூர்வபுண்யம்) இருந்ததால் அவளைப் பூசிக்கும் பாக்கியம் எனக்கும் கிட்டியது. பானம்-அமிர்தம் என்ற மது என்றால் என் தாயாருக்கு மிகவும் விருப்பம். ஆகையால் பானம் வைத்து பூசை செய்து பார்.

பாரப்பா சாமத்திற் பதியுந் தானும்
பல கூட்டங் கூடாதே பண்பாய் மக்காள்
நேரப்பா யில்லறத்தைச் சுத்தி பண்ணி
நீடிசைகளெட்டு மங்கே பந்தம் பண்ணிக்
காரப்பா கலசமுதற் பூசைபண்ணிக்
கடந்த பின்பு சங்கத்தைப் பூசை பண்ணிச்
சீரப்பா விதியோடே புஷ்பத்தோடுஞ்
சிறந்ததெல்லா மிதினோடே செய்திடாயே. 3

பூசை முறை: தெருவில் அலையாமலும், கூட்டங்கள் கூட்டி ஆரவாரம் செய்யாமலும் கவனமாக வீட்டைச் சுத்தி செய்து அஷ்ட திக்பந்தனங்கள் செய்து, அதன் பின்னர் முறையோடு கலசத்தையும் சங்கையும் புஷ்பத்தால் அர்ச்சித்துப் பூசிக்க வேண்டும்.

செய்திடவே குருவொன்று ஆதாரமொன்று
ஸ்ரீயொன்று போகமொன்று பலிதானொன்றே
வெய்தஞ்சு பாத்திரமும் பரப்பி வைத்திட்
இடிதற் குள்ளே பானு மதி ரெண்டும் பூசி
கைதவன்னிகளை யதிலே பூசை பண்ணு
கைமுறையாய் முத்திரையைக் காட்டு காட்டு
பைதபின்பு முறையோடே அக்ஷதையைப் போட்டு
பருவ முடனியாச விதி பகிர்ந்து செய்யே. 4

அதன் பின்னர் குரு, ஆதாரம், ஸ்ரீ, போகம், பலி என்ற ஐந்து வகையான பாத்திரங்களைப் பரப்பி வைத்து அதனுள் சூரியனையும், சந்திரனையும், அக்கினியையும் பூசை செய்து மந்திரம் செபித்து அக்ஷதை போட்டு முறையாக நியாசங்களை செய்ய வேண்டும். (நியாசம் செய்வதாவது முத்திரை காட்டுவது)

செய்வதுதான் சடங்கவிதி நியாசம் பண்ணு
ஜெகம் புகழும் மாதுகானியாசம் பண்ணு
வைவதுதான் நல்கு சோடச நியாசம் பண்ணு
பராபரைக்கு காமகளா நியாசம் பண்ணு
கொய்வதென்ன குங்குமமாம் நியாசம் பண்ணு
கொள்கி விரோகணியாம் நியாசம் பண்ணு
உய்வதுதான் வெகு காம மீவாள் தாயும்
ஒகோகோ பரங்கிடைக்கு முரைத்திடாயே. 5

இந்தப் பாடலில் பலவகை நியாசங்களைக் (கைகளால் காட்டும் முத்திரை) பற்றிக் கூறப்பட்டுள்ளது. முறைப்படியாக நியாசம் பண்ணினால், தாயானவள் மகிழ்ந்து நீ விரும்பியதை யெல்லாம் அளிப்பாள் என்பதாம்.

உரைத்திடவே பூசைக்குச் சக்கரத்தைக் கேளு
வுற்ற விந்து திரிகோணமு சாவியாறு
நிரைத்திடவே வளையமொன்று மிதழ்தானெட்டு
நேராக மூன்று வரை வாசனாலு
மரத்தி யென்ற சிறுபிள்ளை யிருந்த வீடு
வரைத்திடுவாய் சொர்ணமென்ற பலகை மேலே
முரத்தி யிது வில்லாட்டால்பிம்பம் பண்ணு
மூட்டாட்டால் பற்பத்தின் முயன்று கீறே. 6

மகா பெருமை வாய்ந்த தாயாரைப் பூசிப்பதற்கு சக்கரம் சொல்கிறேன் கேள்! முதலில் விந்து (மையப்புள்ளி) இட்டு அதன் மேல் முக்கோணமும் அறுங்கோணமும் வரைந்து, அந்த அறுங்கோணத்தின்மேல் வட்டம் வரைந்து வட்டத்தின் மேல் எட்டு இதழ் வரைந்து வெளிப்புறத்தில் மூன்று அறைகளைக் கொண்ட நான்கு வாசல் வரைய வேண்டும். இதுதான் தேவி (வாலை ரூபத்தில்) சிறுபிள்ளை ரூபத்தில் வாசம் செய்யும் வீடாகும். இந்தச் சக்கரத்தை தங்கத் தகட்டில் வரைதல் நன்று. முடியா விட்டால் பிம்பமாவது செய்ய வேண்டும். அதுவும் முடியாவிட்டால் பஸ்மத்திலாவது (விபூதி) வரைதல் வேண்டும்.

கீறிய தோர் விந்துவிலே மாயா பீசங்
கீழை நின்ற மூன்றுக்குள் மூன்றே பீசம்
மாறியதோர் ஆறிதழிலாறே பீசம்
வரையாத வெட்டிதழி லெட்டே பீசங்
கூறியதோர் வீதிகளிற் கோடாசத்தி
கொள்கையினால் வாசலிலே குறிப்பைக்கேளா
யாறியதோர் கணபதியுங் கந்தனோடு
மகோரமுகன் வடுகனாய் வாசல் தானே. 7

மேற்படி சக்கரத்தின் மத்தியில் உள்ள விந்துவில், மாயாபீசத்தையும், முக்கோணத்துள் மூன்று பீஜமும் அறுங்கோணத்தில் ஆறு பீசமும், எட்டிதழில் எட்டு பீசமும் வீதிகளில் கோடாசக்திகளும். நான்கு வாசலில் கணபதி, கந்தன், அகோரமுகன் வடுகனும்,.

தானென்ற வாசலது நாலுக் குள்ளே
சதகோடி நவகோடி சத்தியுண்டு
வானென்ற பராபரையாம் விந்துக்குள்ளே
மாயி நின்ற வடிவென்ன வழுத்தப் போறேன்
தேனென்ற மொழியாட்கு வயதோ எட்டு
சிறந்த பிறை ரவி யிரண்டுங் காதிற்றோடு
கோனென்ற ரவிகோடி மேலிற் காந்தி
கொள்கையி நாற் கரங்கள் அணியும்தானே. 8

வாசலுக்கும் இதழ்களுக்கும் இடைப்பட்ட பகுதிகளில் நவகோடி சக்திகளும் நிற்பார்கள். பராபரையான தேவிவிந்துக்குள்ளே நிற்பாள். அவளுடைய வடிவத்தைப்பற்றிக் கூறுகிறேன் கேள்! தேனைப் போன்று இனிமையான மொழியைக் கொண்ட தாயாரின் வயது எட்டாகும். சந்திரனும் சூரியனும் அவளுடைய காதுகளில்

குழைகளாகும். நான்கு கரங்களைக் கொண்ட தாயாரின் மேனியிலிருந்து வீசும் பிரகாசம் கோடி சூரியர்களுக்குச் சமமாகும்.

தானென்ற புஸ்தகந்தான் கரமதொன்று
சாங்கமுத்துத் தாவடந்தான் கரமதொன்று
கானென்ற கஞ்சமது கரமதொன்று
கரத் தடியார் பயந்தீர்த்த கரமதொன்று
வேனென்ற அடியார் தன் நெஞ்சினுள்ளே
விளங்கிய தாய்விந்துவிலே விரைந்து நின்றாள்
பானென்ற பாத்திரத்திற் பூரித்தப்பா
பல சாபங்களை யோட்டிப் பரிந்து போற்றே. 9

அவளுடைய ஒரு கரத்தில் புஸ்தகமும், மற்றொரு கரத்தில் முத்துமணி மாலையும், மற்ற இரு கரங்களில் ஒன்றில் முறையே தாமரையும், மற்றொன்றில் பக்தர்களின் பயத்தைப் போக்கும் அபய முத்திரையும் கொண்டு நிற்பாள். பக்தர்களின் இருதயத்தில் வசிக்கும் தாயானவள் விந்துவில் (சக்கர மையத்தில்) மேற்கூறிய ரூபத்துடன் காட்சியளிப்பாள். முன் சொன்ன ஐந்துவிதமான பாத்திரங்களிலும் நீர் நிரப்பி பல வகையான சாபங்களைத் தீர்த்து தாயாரை வணங்க வேண்டும்.

போற்றி வலக்கரந்தனிலே புட்பம் வாங்கி
பொலிவாக யிடக்கரத்தே சுத்திவாங்கி
தாக்கியதோ ரெண்டெழுத்தை மூலத்தோடும்
தவறாமலேழு மாபரண மப்பா
வாக்கியந்தான் மனதொன்றா யற்சித்தேற
வரிசை சொல்வேன் வல்லோர்க்கு மடுமையாகப்
பாக்கியந்தான் செய்தவரே செய்வதல்லால்
பராபரையை பூசிக்கப் பருவங் கேளே. 10

போற்றி அர்ச்சனை செய்து வலக்கரத்தில் புஷ்பமும் இடக்கரத்தில் சுத்தியும் வாங்க வேண்டும். மேலும் இரண்டெழுத்தை மூலத்துடன் சேர்த்து ஏழு ஆவரணத்தையும் ஒரு நிலைப்பட்ட மனதுடன் அர்ச்சிக்கும் முறையை வல்லோர்க்காக சொல்லப் போகிறேன். இம்முறை பாக்கியம் செய்தவருக்கே கிட்டும். மற்றவருக்கு கிட்டாது. பராபரையை பூசிக்கும் முறையைக் கேள்!

பருவமுட னண்டமெல்லாஞ் சிலம்பிலூட்டும்
பராபரையை யென்று சொல்லும் பலகையால்
நிருபமுட னனைவரையு நிறுத்தி மேலே
நின்றுரைத்த பூரணமே யென்று சொல்வாய்
அருவமுட னுருவமுண்டா யிரண்டாய்த் தாண்டி
யகண்டத்தி லகண்டமென்ற வாத்தாளென்று
சொரூபமுட னிட்களமே துரியா தீதச்
சொல்லடங்காப் பூரணமே யென்று சொல்லே. 11

முறையாக பூசித்தால் அண்டமெல்லாம் அவள் சிலம்பொலியில் (நாதத்தில்) கேட்கும். சக்கரத்தில் அவரவர்களின் ஸ்தானத்தில் அந்தந்த தேவதைகளை நிறுத்தி, தோத்திரம் செய்ய வேண்டும். எவ்வாறெனில் பூரணமே! அருவமுடன் உருவமும்

தாண்டி அகண்டத்தி லகண்டமாய் நிற்கும் ஆத்தாளே! (தாயே!) சொருபமுடன் நிஷ்களமே! துரியாதீதச் சொல்லடங்காப் பூரணமே! என்றும்.

ஞானம்

சொல்லற்று மவுனமற்று ரூபமற்றுத்
தொத்துவதும் தொத்தாது மிரண்டுமற்றே
பல்லற்றுப் பகலற்று யகண்டமற்று
யதுகடந்த நிராகாரத் துரியமற்று
சொல்லற்றுத் தொனியற்றுச் செகமுமற்றுத்
துதிக்கின்ற கிரிகை யற்றுத் தேகமற்று
நில்லற்று நினைவற்று நிறைந்தே யெங்கு(ம்)
நிராகரத்திற் றாயாவா யென்று போற்றே. 12

மேலும் சொல்லற்று, மவுனமற்று, ரூபமற்று, தொத்துவதும், தொத்தாதுமாகிய இரண்டுமற்று, இரவற்று, பகலற்று, அகண்டமற்று, அது கடந்த நிராகார துரிய மற்று, சொல்லற்று, தொனியற்று, செகமுமற்று, துதிக்கின்ற கிரிகையற்று தேகமற்று, நில்லற்று, நினைவற்று, நிறைந்தே யெங்கும் நிராகாரத் தாயாவாய் என்று போற்று!

போற்ற விடமற்று நின்ற பொருளே யென்று
புகழான (அ) சேதனமாய்ச் சேதனமாய் நின்று
மாற்றி யிடச்சத்திய மசத்தியமதாகி
மனவாக்குக் கெட்டாத தாயே யென்றே
யாற்ற யிட நித்த சுத்த புத்த முத்த
லது கடந்த நிற்குணத்திலம்மா வென்று
கோற்ற டுக்கானோடு நின்றா யென்று சொல்லிக்
கொழுந்து விட்டப் புருவமையத் தீயையெண்ணே. 13

போற்ற இடமற்றுநின்ற பொருளே! அசேதனமாய், சேதனமாய் நின்று, சத்தியமாய், அசத்தியமாய் நின்று, மனம் வாக்குக் கெட்டாத தாயே! நித்த, சுத்த, புத்த, முத்த மென்ற யாவும் கடந்த நிற்குணத்தாயே! கோற்றடுக்கானோடு நின்றாய் என்று தோத்திரம் செய்து புருவ மையமான ஆக்ஞா சக்கரத்தில் மனதை வைத்து தியானிக்க வேண்டும். (எவ்வாறெனில்)

தீயாகி மதியாகி ரவியுமாகி
சிறந்து நின்ற வாசியுமா யெட்டுமாகித்
தாயாகித் தந்தையுமாய்த் தாரமாகி
சகவிருக்ஷ முறவினமும் சலமுமாகிப்
பூவாகிக் காயாகிப் பிஞ்சுமாகிக்
கனியுமுன்னே தின்றழித்த காலனாகி
வாயாகிக் கையாகி மனதுமாகி
வாக்கடங்கா வொளியெனவே வழுத்திடாயே 14

தீயாகி, மதியாகி, ரவியுமாகி, வாசியாகி, அஷ்டமா சித்தியாகி, தாயாகி, தந்தையுமாய், தாரமாகி, நண்பனாய், உறவினனாய், சலமுமாகி-பூவாகி, பிஞ்சாகி காயுமாகி, அக்காய் கனிவதற்கு முன்னே தின்று அழித்துவிடும். காலனுமாகி, வாயாகி, கையாகி, மனதுமாகி-வாக்குக்கடங்கா ஒளியே!

வழுத்தியம்மா நீ பிறிந்தாற் புவனமேது
வாழ்வேது சாவேது மாயமேது
சுழுத்தி யென்ற நித்திரையும் ஞானமேது
சொல்லேது பொருளேது சுகந்தானேது
களித்து நின்ற ஆனந்த வெள்ளமேது
கரையேது சவு சஷ்டி கர்மமேது
ஒளித்து நின்றா ரீசனம்மா உள்ளுக்குள்ளே
ஓகோகோ உத்தமியே யென்று போற்றே. 15

நீ பிறிந்தால் புவனமேது? வாழ்வேது? (காட்சியேது) மாயமேது, (சித்து ஏது) யோக நித்திரையும், ஞானமும் ஏது, சொல்லேது, பொருளேது சுகந்தானேது? ஆனந்த வெள்ளமேது?. கரையேது சவுசஷ்டி கர்மமேது? உன்னுள்ளே ஈசனும் ஒளிந்து நின்றார் என்று சொன்னால் உன் பெருமைக்கு நிகரேது?

உத்தமியைக் கண்டுடனே யோக மாச்சே
யோகோகோர் யவள் காண ஞான மாச்சு
சத்தடியார் வாசலிலே யவதாரமாகிச்
சதகோடி யண்டரண்டந் தாண்டி யோடி
யுத்தமியே யுனைவிட்டா லீசனேது
வருகிறதும் போகிறது மிரண்டுமேது
பற்றுமையப் புருவ நடுப் பரையே யென்றுப்
பராபரமாய் நின்றவளைப் பணிந்து போற்றே. 16

உத்தமியான தாயே! உன்னைக் கண்டவுடன் யோகம் கைகூடும். ஞானம் கிட்டும் தாயே உன்னை விட்டால் ஈசனேது? உன்னை தரிசித்தவர்க்கு வருகிறதும் போகிறதும் (பிறப்பு இறப்பு) ஏது? புருவ நடு மையத்தில் நிற்கும் பராபரையே! உன்னை வணங்குகிறேன் என்று போற்ற வேண்டும்.

போற்றிடுவாய் விந்துவிலே ஆயிபாதம்
புகழாக வர்ச்சித்து புட்பந்தூவி
கோற்றிடுவாய் மனமொன்றிப் பரத்தினுள்ளே
கொள்கியுன்னி நினைத்த தெல்லாம் கூடுங்கூடும்
மாற்றிடுவாய் வாசனையை மாயமெல்லாம்
வருகுமப்போ மெய்ஞ்ஞான மனமுஞ் செம்மை
காற்றிடுவாயுன் மனையை நிஷ்டைக் குள்ளே
கைகடந்த ஞானமதைக் கடந்து கேளே. 17

மேற்கூறிய தோத்திரத்தைச் சொல்லி சக்கரத்தின் நடுமையமான விந்துவில் தாயாரை நிறுத்தி புஷ்பத்தால் அர்ச்சிக்க வேண்டும். இவ்வாறு தாயை அர்ச்சித்தால், மனதில் நினைத்ததெல்லாம் கைகூடும். கர்ம வாசனையும், மாயையும் ஒழியும். மெய்ஞ்ஞானம் கிட்டும். இவ்வாறு முதல் ஆவரணமான விந்துவை அர்ச்சித்து ஒரு நிலைப்பட்ட மனதுடன் மூலமந்திரத்தை செபம் செய்து

கடந்த பின்பு திரிகோணத் துள்ளே கேளு
கடுமி ரதி பிரிதிவிபவம் பாளோடு
துடர்ந்து பார் முத்திரையால் வணங்கி நீயுஞ்
சூட்சுமமா யிவ்விரண்டாம் பூசை தாண்டி

யிடர்ந்து பார் லட்சுமியுங் காந்தி கீர்த்தி
யியல்பான ஜகசோதி துஷ்டி புஷ்டி
அடர்ந்தே யாபரணசத்தி யர்ச்சித் தப்பா
வடுக்கா ரகசிய முத்திரையைக் காட்டே. 18

பின்பு இரண்டாவது ஆவரணமான திரிகோணத்தைப் பார்க்க வேண்டும். திரத்தியம்பாள், பிரிதிவியம்பாள், மனோபவா என்ற மூன்று சக்திகளும் மூன்று கோணங்களில் நிற்பார்கள். இவர்கள் மூவரையும் முறையாக போற்றி புஷ்பத்தால் அர்ச்சனை செய்து முத்திரைகள் காட்டி வணங்க வேண்டும். இரண்டாம் ஆவரணத்தைத் தாண்டி லட்சுமி, காந்தி, கீர்த்தி, ஜகசோதி, (ஸரஸ்வதி) துஷ்டி, புஷ்டி என்ற ஆறு தேவிகளையும் மூன்றாவது ஆவரணமான அறுங்கோணத்தில் அமர்த்தி அர்ச்சித்து யோனி முத்திரை காட்டிப் பூசிக்க வேண்டும். பிறகு,

காட்டியிந்த மூன்றாகும் பூசை தாண்டி
கடுகவனங்க குசுமா வனங்க மேகா
யாட்டியணங்காமதனா யணங்கா நந்தி
யணங்கரேகாதி யொடு யணங்கவேதி
நீட்டியணங்காமலி யணங்கா சத்தி
நிறையான யனைவரையு நிறையப்பூசி
பூட்டி மச்ச முத்திரையைப் புகழக் காட்டி
புகழ்ந்து னாலாபரணம் புகழ்ந்து தாண்டே. 19

அனங்ககுசுமா, அனங்கமேகலா, அனங்கமதனா, அனங்காநந்தி (அனங்கமதனதாரா) அனங்கரேகா, அனங்கவேகினி அனங்காங்குசா, அனங்கமாலினி இந்த எட்டு சக்திகளையும் நாலாவது ஆவரணமான எட்டிதழ் கமலத்தில் பூசித்து மச்ச முத்திரையை காட்டி வணங்க வேண்டும். பிறகு,

தாண்டியதோர் முதல் வரையிலணிமா வோடு
தயங்காத மகிமாவும் லகிமாக் கேளு
வாண்டியதோர் கரிமாவும் மலவித்து
மாதிவஸ்து மிகுதேவி பிரார்த்தியோடே
நீண்டி நிண்டப் பிரகாமி புத்தி சத்தி
நிலைத்த சர்வ காமிசத்தினே ரெட்டஞ்சு
வேண்டி நின்று கோமுக முத்திரையைக் காட்டி
விரைந்திரைஞ்சி யஞ்சினுள்ளே வேண்டுவேண்டே. 20

ஐந்தாவது ஆவரணமான முதல் அறையில் அணிமா, மகிமா, லகிமா, கரிமா, (ஆதிவஸ்து) ஈஸத்துவம், வஸித்துவம், ப்ரகாமியம், புத்தி சத்தி என்ற எட்டு யோக சக்திகளை பூசித்து கோமுத்திரை காட்டி, வணங்கிப் பின்பு

வேண்டு ரெண்டா வரைவீதியெண் வராகும்
விரைந்து மபிராமி மயேஸ்வரியுமாகும்
வாண்டியதோர் கௌமாரி நாராயணியும்
வராகி யிந்திராணியோடு சாமுண்டியாகும்

பூண்டியதோர் பூரணையு மெண்வரோடு
புகழங்கு சமுத்திரையைப் புகழ்ந்து காட்டி
ஆண்டினதோராறு மாபரணம் போற்றி
அடுத்துநின்ற மூன்றுவரை அடைவு கேளே. 21

எட்டாவது ஆவரணமான இரண்டாவது அறையில் (வீதியில்) எட்டு சக்திகளான பிரம்மி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, (நாராயணி) வராகி, இந்திராணி சாமுண்டி, மஹாலக்ஷ்மி (பூரணை), என்ற எட்டு சக்திகளை தியானம் செய்து அர்ச்சித்து அங்குச முத்திரை காட்ட வேண்டும். பின்பு மூன்றாவது வீதியில்

கேளப்பா சக்கரத்தின் புறத்தி வீதி
கெடியான சாதுசத்தி கிரியாதேவி
நீளப்பா துர்க்கையொடு மாயாதேவி
நிலையான பத்திரையாஞ் சுவாகாதேவி
யாளப்பா யருந்ததியுஞ் சுமாலியோடு
யைமூன்றுஞ் சத்திகளை யடைவாய்ப் பூசி
வேளப்பா பிலைமுகம் விரைந்து காட்டி
விரைந்திறைஞ்சி யற்சி யேழாபரணமுற்றே. 22

சக்கரத்தின் கடைசி வீதியான ஏழாவது ஆவரணத்தில் சாதுசத்தி (சரஸ்வதி) கிரியாதேவி, துர்க்கை, மாயா, பத்திரை, ஸ்வாஹா, அருந்ததி, சுமாலினி (சுமங்களா), இந்த எட்டு சக்திகளையும் முறையாக பூசித்து பிலைமுக முத்திரையை காட்டி வணங்க வேண்டும். இத்துடன் ஏழு ஆவரணம் முற்றிற்று.

முற்றான வசுதாங்கள் குருகுசண்டன்
மூர்க்கமுள்ள குரோதனு ன்மத்தனோடு
கற்றான கயில முள்ளன் பீஷ்ணனுங்.......................
....................கடந்து சங்கார னெட்டுப் பேர்க்குங்
கொற்றாக பூசைபண்ண மதுவை வைத்துக்
கொள்கி யுன்னிச் சூல முத்திரையைக் காட்டி
பற்றான விந்திரனோ டெட்டும் பூசிப்
பரிவாக னால் வாசற் பூசை கேளே. 23

பிறகு அஸிதாங்கன், குரு, சண்டன், குரோதன், உன்மத்தன், கயிலமுள்ளன் (கபாலன்)பீஷணன், சங்காரன் என்ற எட்டு பைரவர்களுக்கு சுத்தி வைத்து பூசை செய்து சூல முத்திரையைக் காட்ட வேண்டும். அதன்பின் நான்கு வாசலுக்கு முன்னே நிற்கும் இந்திரனோடு எட்டு திக்கு சக்திகளையும் பூசிக்க வேண்டும். அதன் பின்னரே, நான்கு வாசலை பூசிக்க வேண்டும்.

கேளப்பா தெக்ஷணத்தில் வல்லபையுங் காண
கொடிய உத்திரத்தில் துர்க்கையை நீபூசி
தாளப்பா பச்சிமத்தில் கந்(தன்)...............................ரன்
தனித்த கீழ்வாசிலே வடுகன் யோகி
நீளப்பா யீசானத்தில் நின்ற நிர்வாணி
நிலைத்தங்கே பூசித்து நின்ற பின்பு
ஆளப்பா என்று சொல்லி யாமனாயபூசை
யானபின் ; முறை சொல்வே னறிந்து கேளே. 24

தெக்ஷணத்தில் (தெற்கு-வாசலில்) வல்லபையையுங் கணபதியையும் உத்திரத்தில் தூர்க்கையையும், (பச்சிமத்தில் -மேற்கில் தேவதை பெயர் சிதைந்து விட்டது. கீழ்வாசலில் வடுகனும் யோகினியையும், பூசிக்க வேண்டும். (மற்ற விஷயங்கள் மூலத்தில் சிதைந்து விட்டன.)

அறிந்துணர்ந்த பாத்திரம் பலகார மன்னம்
　　மாத்தாளைப் பூசித்து மடுக்காய் காட்டி
நெறிந்து நின்ற குருவான பாத்திரத்தை வாங்கி
　　நேராக குருவுக்கே நீட்டிக் காட்டி
மறிந்துணர்ந்த தூலமொடு சூக்ஷமான
　　மருவிநின்ற காரணமா மூன்றதோதி
பிறிந்துணர்ந்தே யா...............கமத்தைப் பூசைபண்ணிப்
　　பிரிய முடன் சத்தியுடன் பரிவு கேளே. 25

முறையாக பூசித்த பிறகு, அன்னம், பலகாரம், பாத்திரம் இவைகளை வைத்து குரு பாத்திரத்தை எடுத்து மானசீகமாக குருவுக்கு காட்டி, தூல சூக்ஷ, காரண பஞ்சாட்சரங்களை செபித்து குருவைப் போற்றி வணங்கிய பின்னர் சக்தியை பூசிக்க வேண்டும். அதன் முறையைக் கேள்.

பரிவாக சத்தியை நீயலங்கரித்துப்
　　பாணிதனிற் கடங்கொடுத்துப் பூசைபண்ணி
யறிவாக அவள்கையின் கடத்தை வாங்கி
　　யாத்தாளே யெனயினமு மஞ்சல்பண்ணி (தினமும்)
மறிவான போக மென்ற பாத்திரத்தை யீந்து
　　வைத்ததொரு சேஷத்தைப் பானம்பண்ணி
நெறிவாக மூலத்தே மனதையூன்றி
　　நீட்டிமது பூரித்து நிலைத்துப் பாரே. 26

சத்ியை அலங்கரித்து அவள் கையில் கடங்கொடுத்து பூசை செய்து பின்னர் அவள் கையில் உள்ள கடத்தை வாங்கி ஆத்தாளே! (தாயே) என்று போற்றி போக பாத்திரத்தைக் கொடுத்து சேஷத்தை (மிஞ்சியதை) பானம் பண்ணி மூலத்தில் மனதை வைத்து மது பூரித்து (யோக பானம் உட்கொண்டு) மனதை நிலைபடுத்த வேண்டும்.

பாரப்பா வானந்த மான பின்பு
　　பலதீப தூபமெல்லாம் பணிகள்மாறி
யேறப்பா பெலி கொடுத்துத் திக்கிற் போட்டே
　　யெழுந்தருளச் சக்கரத்தை யிருதயத்தினுள்ளே
யாரப்பா வன்னமுடன் பானம் பண்ணி
　　யசையாமற் சமாதி கொண்டு மூலத்தூன்றிக்
காரப்பா வெளிதாக மூலங்காணுங்
　　கன்னி யெட்டும் லகிரியிலே காட்டுவாளே. 27

மனம் ஆனந்த நிலை பெற்ற பின்பு தீப தூபங்கள் காட்டி பலிகொடுத்து அதற்குரிய திக்கிலிருந்து சக்கரத்திலுள்ள தேவியை இருதயத்துள்ளே ஆவாஹனம் செய்து அசையாமல் சமாதியில் நின்று மனதை மூலத்தில்வைத்தால் மூலாதாரம் நன்றாக பிரகாசிக்கும், கன்னிகாான அணிமாதி சக்திகள் வெளிவந்து உலாவுவார்கள்.

காட்டுகையில் நந்தியுள்ளே காண்பார் காண்பார்
கருதிப்பார் சிகாரமென்ற ஞானத்தீதான்
நீட்டுகையில் வல்லபையுங் கணேசன் காண்பார்
நினைவாகக் காண்பதப்பா நீதான் கேளே
யூட்டுகையில் வகாரத்தை யுள்ளே பூரி
யோகோகோ சிகாரமது கோடி பானு
ஒட்டுகையி லொரு வழியா யோடிற்றானா
லுத்தமனே யற்புதமா முத்தி தானே. 28

அவ்வாறு எட்டு சக்திகள் வெளிவந்தால் உள்ளே மறைந்திருக்கும் நந்தியானவர் ஜோதியான பிரகாசிப்பார். அது மட்டும் இன்றி கணேசரும் வல்லபை சக்தியும் தோன்றுவார்கள். அப்பொழுது காற்றை உள்ளே இழுத்து நிறுத்தினால் குண்டலி சக்தியானவள் கோடி சூரியப் பிரகாசத்துடன் பிரகாசிப்பாள். அந்த சக்தி சுஷூம்னா நாடி வழியாக சகஸ்ர ராரத்திற்குச் சென்றால் முக்திகிட்டும்.

முத்தி யெங்கே யென்பதென்று மெண்ண வேண்டா
மூலத்திற் முத்தி முத்தி முக்காற் சொன்னேன்
சத்தி யெங்கே யென்பதென்று மெண்ண வேண்டாஞ்
சகலருக்குங் குண்டலியே சத்தி சத்தி
பத்தி யெங்கே யென்பதென்று யெண்ண வேண்டாம்
பராபரத்தின் பதம் துவே பத்தி பத்தி
யுத்தி யெங்கே யிதற்கெனவு மெண்ண வேண்டாம்
ஓ கோகோ வாசனையை யொழித்திடாயே. 29

முக்தி எப்படி கிட்டும் என்று தயங்க வேண்டாம். மூலாதாரத்தில் உள்ள குண்டலி சக்தி விழித்துக் கொண்டாலே முக்தியாகும். சக்தி எங்கே இருக்கிறாள் என்று சந்தேகப்பட வேண்டாம். மூலாதாரத்தில் உள்ள குண்டலி சக்தியே சக்தி. பக்தி எங்கே கொள்வது என்று தயங்க வேண்டாம். பராபரையின் பாதம் பணிவதே பக்தியாகும் இதற்கெல்லாம் யுக்தி எங்கே ஏற்படப் போகிறது என்று எண்ண வேண்டாம். பற்றுதலான மாயா வாசனையை ஒழித்தால் யுக்தி தானே பிறக்கும்.

ஒழித்திடவே மனதிற்கு மாயை போச்சு
வொன்று மில்லைக் ....பக்குமெங்கே பாரு
அளித்திடவே நினைவாற்பாரெல்லாம்............ப்பொ
யாத்தாள் தானாடுகிற யிந்திரசாலங்
களித்திடவே மதுவை யுண்டு சுழியிலோடி
கையாறு தலங்க ளெல்லாங் காணும் காணுங்
நெளித்திடவே யிடையின்னாம் ரெண்டும் போக்கில்
நிமிஷத்துள் நாலுக்குள் நேரலாமே. 30

வாசனையை (பற்றுதலை) ஒழித்தால் மாயை விலகும். ஆத்தாளான தாய் தன்னுடைய இந்திர ஜாலக் கூத்தால் உலகத்தில் ஜீவர்களுக்குப் பற்று ஏற்படும்படி செய்கிறாள். அதனால் அவளை வணங்குவதன் மூலமே பற்றை ஒழிக்க முடியும். யோக பானம் உட்கொண்டு சுழிமுனை மூலம் வாசியை (மூச்சை) ஆறாதாரங்கள் வழியாக செலுத்தி இடை பிங்கலையை ஒன்று சேர்த்து சகஸ்ராரத்திற்கு ஏற்றினால் நிமிஷத்தில் துரியாதீத நிலையை அடையலாம்.

நேராத பாவிக்கு வாத மேது
நிலையாத மனதுக்கு ஞானமேது
பாராத மோடருக்கு, யோக மேது
பராபரைஎ்ய யறியார்க்குப் பலந்தானேது
காராத சீஷனுக்குக் குருதானேது
கை காட்டாத் தொழில் முறைக்கு கரைதானேது
தீராத கர்மிக்கு அறிவங்கேது
செகச்சால மாடுதற்கு லவணங்கேளே. 31

இவ்வாறு யோகம் பயிலாத பாவிக்கு வாதம் கிட்டாது. மனதை ஒருநிலைப் படுத்தாத பேர்களுக்கு ஞானம் உண்டாகாது. மூலாதாரம் முதல் ஆறு ஆதாரங்களைப் பார்க்காதவர்களுக்கு யோகம் பலியாது. பராபரையான தாயாரை அறியாதவர்களுக்கு எதிலும் பலன் கிட்டாது, கல்வி கற்காத வித்தை அறியாத சீடர்களுக்கு குருவின் அருள் கிட்டாது. குரு தொட்டுக்காட்டாத வித்தை ஒருக்காலும் பலியாது. கர்மத்தில் பற்று கொண்டவனுக்கு அறிவு விளங்காது. யோகமின்மை. பக்தியின்மை, ஞானமின்மை, மனவடக்கமின்மை, கல்வியின்மேல் ஆசையின்மை என்பவை கர்மத்தில் பற்று கொண்டவர்களான பாமரர்களின் லஷணங்களாகும். இனி செகச்சாலம் ஆடுவதற்கு லவணமுறைகள் சொல்கிறேன் கேள்!

உப்புக்கட்டு உருகாஉப்பு

கேளப்பா படிகியுடன் வெடியுப் போடு
கெடியான கல்லுப்புங் காரத்தோடு
தாளப்பா சாரமொடு பண்ணைகண்டர்
தனியேழு மேழுபலந்தானே தூக்கி
நீளப்பா வமுரிவிட்டே யரைத்துக்கொண்டு
நெடிய தொரு பாறையுப்பும் பலமீரேழு
கோளப்பாக் குளம்பினுள்ளே தோய்த்து வாட்டுக்
கொள்கி யதைத் தணலுக்கு ளடர்ந்து வாட்டே. 32

படிகாரம், வெடிஉப்பு, கல்லுப்பு, வெங்காரம், சாரம் (நவச்சாரம்) பண்ணை, துருசு என்பவற்றை வகைக்கு ஏழுபலமாக எடுத்து அமுரி விட்டு அரைத்து வைத்துக் கொண்டு பாறை உப்பை பதினான்கு பலம் எடுத்து அதை மேற்படி உப்புக்குழம்பில் தோய்த்து அனலுக்குள் வைத்து வாட்டி.

வாட்டுகையி லடுக்கடுக்காய் முதிரவாட்டு
மருவியந்த வுப்பினது கோபம் போகும்
நீட்டுகையிற் படிகத்தின் பொரியைப் போட்டு
நினைவாக வறுத்திடுவாய் சாமமப்பா
கேட்டுகையிலிதை வாங்கிப் பின்பு கேளுக்
கெடியாக கட்டுதற்கு வழிசொல் வேன்யான்
மூட்டுகையி லமுரி விட்டு முப்பை யாட்டி
மூதண்ட னாயுருவிச் சாம்பல் போடே. 33

மீண்டும் அதை எடுத்து முன் குழம்பில் தோய்த்து வாட்டவேண்டும். இவ்வாறு பலமுறை செய்தால் உப்பிலுள்ள மாசு அகன்று சுத்தமாகும் சுத்தமான இந்த உப்பை

படிகாரப் பொடியுடன் சேர்த்து ஒரு சாமம் வறுக்க வேண்டும். பிறகு, வறுத்த இந்த உப்பைக்கட்டுவதற்கு வழி முறை சொல்கிறேன் கேள்! உப்பை அமுரிவிட்டு அரைத்து வைத்துக் கொண்டு ஒரு கனமான அடிபாகம் உள்ள சட்டியில் பாதிவரை நாயுருவியின் சாம்பல் போட்டு.

போடந்த வுப்போடே சவுட்டு வில்லைப்
பொலிவாக வுப்பிற்குக் கால்காலப்பா
நீடந்தக் கலையத்திற் பாதி வைத்து
நினைவாக வடுக்கடுக்கா யுப்பை வைத்தே
யோடந்த மேலிட்டு சீலை செய்தே
யொத்தாகப் போலெரித்துமே யுடைத்து வாங்கி
யாடந்த மறுகாலிப்படியே வைத்தே
யதட்டி யொரு புடம்போடக் கட்டும் பாரே. 34

சவுட்டு வில்லையை உப்பிள் அளவில் கால்பங்கு எடுத்து சாம்பலின் மேல் பதியவைத்து அதன்மேல் உப்பை வைத்து மேலும் நாயுருவியின் சாம்பல் கொட்டி மூடிச் சீலை செய்து எரித்துப் பின்னர் உடைத்து வாங்கி மீண்டும் அமுரிவிட்டு அரைத்து முன்போல் புடம் போட்டால் உப்பு கட்டும்.

பாரப்பா வாட்டொன்று வறுப்பதொன்றுப்
பரிவாக வெரிப்பொன்று புடந்தா னொன்று
நேரப்பா வெகுபதனமாகச் செய்வாய்
நிலைக்க மட்டுங் கைமுறையாய் நினைவாய்ப்பண்ணு
வாரப்பா வெதிருனக்கு வாத மாட
வாகாகா சகலசித்து மடங்குமுப்பில்
பேரப்பா வுப்பென் பாரிதுவே சத்தி
பிலத்த பின்பு சிவனாச்சுப் பேசொண்ணாதே. 35

உப்பை ஒருமுறை வாட்டியும், ஒருமுறை வறுத்தும் ஒருமுறை எரித்தும், ஒருமுறை புடம்போட்டும், முறையாகவும் வெகு ஜாக்கிரதையாகவும், கைமுறை தப்பாமல் செய்தால் வாதமாடுவதில் உனக்கு எதிரானவர் யாரும் கிடையாது என்ற நிலை ஏற்படும். சகலசித்தும் இந்த உப்பினால் ஆடலாம். இதன் பேர் உப்பு என்பார்கள். கட்டுவதற்கு முன் இது சக்தியாகும். கட்டிய பின் இதுவே சிவனாச்சு. இதை எவரிடமும் சொல்லாதே.

பேசாத வுப்பினது பெருமை கேளு
பெருங் குருவாஞ் சுண்ண முமாம் பெருத்த நீராங்
காசாத செந்தூரங் களங்க மாகுங்
கைவிட்ட மெழுகாகுங் கட்டுமெல்லாம்
வாசாம கோசர மாமிதிலே வித்தை
வாதி யென்ற பேரறிவார் மற்றோர் காணார்
கூசாம லொன்றிற்குத் தொட்டுக் காட்டக்
கோடான கோடி தொழி லுப்பிலாச்சே. 36

இந்த உப்பின் பெருமையை கூறுகிறேன் கேள்! இதனால், சரக்குகள் குருவாகும்; சுண்ணமாகும். செயநீராகும். இதனால் செந்தூரம் கைகூடும். களங்கும் சித்தியாகும்,

மெழுகும் பலிதமாகும். இது எல்லா சரக்குகளையும் கட்டும். மேலும் இதனால் கோசர வித்தையும் ஆடலாம். இதை உண்மையான வாதி (இரசவாதம் செய்பவர்) மட்டுமே அறிவார். இந்த உப்பினால் கோடான கோடி தொழில்கள் சித்தியாகும்.

ஆச்சென்ற வுப்பை விட்டால் வாதம் போச்சே
யாகாகா வாச்சரிய மம்மாள் நாதம்
போச்சென்றே யண்ட மெல்லாந் துடைத்தாள் சொன்னாள்
பொய் மெய்யோ வென்றவாயிற் போடுமண்ணை
நீச்சன்றோ வுன்னை விட்டால் வாத வேலை
நிலைப்பதன்றோ வுப்பறிந்தால் நிமிஷத்துள்ளே
மூச்சன்றோ சிவனுக்கு முயிருமாச்சு
முயன்று பார் வாதத்துக் குயிர்தானுப்பே. 37

இந்த உப்பை விட்டால் வாதம் பலிக்காது. இதையே ஆயியின் நாதம் என்பர். இதனால் அண்டமே பொன்னாகும். வாதம் பொய்யோ மெய்யோ என்று சந்தேகம் கொண்டவர் வாயில் மண்ணை அள்ளிப் போடு. இந்த உப்பை சித்தி செய்து கொண்டால் வாத வேலைகள் நிமிஷத்தில் பலிதமாகும். சித்தி செய்து கொண்டவரைத் தவிர வாதத் தொழிலில் பெருமை பெற முடியாது. சிவனுக்கும் மூச்சான காற்று உயிராவது போல் வாதத்திற்கு இந்த உப்பே உயிராகும்.

உப்பாவதே தென்றாலுரு காவுப்பு
வுத்தமனே மற்ற தெல்லாஞ் சாரமில்லைச்
செப்பென்றாற் செப்பாதே சீஷனுக்கு
ஜெகஜாலத் துறைமார்க்க மனந்தமுண்டு
கப்பென்ற வஞ்சு கொப்பில் மனந்தான் சென்று
கையடங்கா மாயம் போலிதுவுமாமே
யொப்பென்றா லிதற்கொப்பு மென்ன சொல்வே
னுத்தமி தானொப்புப்பை யுணர்ந்து பாரே. 38

உப்பு என்பது தீயில் இட்டால் உருகி ஓடக்கூடாது. அதற்குத்தான் உப்பு என்று பெயர், மற்ற உப்பெல்லாம் (உருகி ஓடக்கூடிய தன்மை கொண்டதெல்லாம்) உப்பாகாது. அதில் சாரமும் கிடையாது. இம்முறையை சொல் என்று மன்றாடினாலும் சொல்லாதே! இந்த உப்பைக் கொண்டு அநேகவிதமான ஜெகஜால வித்தைகள் ஆடலாம். இவ்வுப்பிற்கு சரிசமமான வஸ்து உத்தமித்தாயான மனோன்மணியைத் தவிர வேறொன்றுங் கிடையாது.

உப்புக் குரு

பாரப்பா கட்டினதோ ருப்பை வாங்கிப்
பருவமுட னெட்டி லொன்று வீரம்பூரம்
நேரப்பா வெண்குரு வாலரைத்துப் பூசி
நேரான சட்டியிலே யிதனை வைத்துச்
சேரப்பா வாகைக்காய் சுட்ட சாம்பற்
றிரமாக விதிலிட்டுத் தீ கீழிட்டு (திரமாக)
வேரப்பா கற்றாழை வேராற்கிண்டு
விடி காலை மாலை ரெண்டு சாமம்தானே 39

கட்டிய உப்பை எடுத்துக் கொண்டு அதற்கு எட்டில் ஒரு பங்கு வீரம், பூரம் எடுத்துக் கொண்டு வெண்கருவால் அரைத்து உப்பின்மேல் பூசி ஒரு அடிகனத்த சட்டியில் வைத்து வாகைக்காய் சுட்ட சாம்பல் போட்டு தீமூட்டி கற்றாழை வேரால் கிண்ட வேண்டும். இவ்வாறு காலை மாலை இரண்டு சாமம் செய்.

தானென்ற தினமொன்று சாமம் ரெண்டு
சங்கை சொல்வேன் பதினொருநாள் தப்பாதாட்டு
வானென்ற வெளுப்பொவ்வா சங்க மொவ்வா
மகத்தான குருவாகு மைந்தா கேளு
கானென்று மலைவானேன் தழைகாய் தேடி
கைவிட்ட குருவிது தான் காட்டு முன்னே
வேனென்றே தட்டி யெல்லாம் வேதையோடும்
விடுபட்ட மதயானை யுப்புத்தானே. 40

தினம் இரண்டு சாமமாக பதினொரு நாள் முறையாகச் செய்தால் வெளுத்து குருவாகும். இந்த குருமருந்திடம் சங்கின் வெண்மையும் தோற்றுப் போகும். இந்த சுலபமான முறையைக் கைவிட்டு எதற்காக இலை தழைகளைத் தேடி அலைய வேண்டும்? உண்மையான குருமருந்து இதுதான். இம்மருந்து பட்ட இடமெல்லாம் பொன்னாகும் அப்படிப்பட்டது இந்த உப்பின் மகிமை.

உப்புச் சுண்ணம்

உப்பை யினிச் சுண்ணமாய்ச் செப்பக்கேளு
முருவான வுப்பதுதான் பலந்தான் ரெண்டு
கப்பை யினி யெட்டி லொன்று வழலைச் சுண்ணங்
காணிதற்குச் சமனாகும் வீரம்பூரம்
மப்பை யெனு வெண்கருவா லரைத்து பூசி
யமளி பெற யூதிடவே மணிபோலாச்சு
குப்பை யன்ன மற்ற தெல்லா மிதுவே வித்துக்
கோடி சுண்ண மிதலாகுங் குறியாய்ப் பாரே. 41

கட்டிய உப்பு இரண்டு பலம் எடுத்துக்கொண்டு, உப்பின் எடைக்கு எட்டில் ஒருபங்கு வழலைச் சுண்ணமும், சுண்ணத்தின் எடைக்கு சரியாக வீரம் பூரம் சேர்த்து, வெண்கரு விட்டரைத்து உப்பின் மேல் பூசி குகையில் வைத்து ஊதினால் மணிபோலாகும். இது சகலவிதமான சுண்ணங்களுக்கும் ஆதியாகும். இதனால் கோடிவிதமான சுண்ணங்கள் பலிதமாகும்.

குறிப்பான சுன்னத்தின் முறைமை யெல்லாம்
கொட்டினேன் பிற்காண்டம் நடுக்காண்டத்துள்
மறிப்பான வாதிமகனுப்பைக் காண்பான்
மாடறியா னாதிவித்தை யாயினாதம்
நெறிப்பான சீஷனுக்கு முப்பைச் சொல்லு
நேர்திருட்டுச் சீஷனுக்குச் சொல்ல வேண்டாம்
கறிப்பாகந் தப்பிடிலோ ருசி போமாப் போற்
கைமுறையைத் தப்பிவிட்டாலுப்பு போச்சே. 42

சுண்ணம் செய்யும் முறைகளெல்லாம் கடைக்காண்டத்திலும் நடுக்காண்டத்திலும் கூறியுள்ளேன். உண்மையான வாதியே இவ்வுப்பைக் காண்பான். மாடான சோம்பேறி, ஆயிநாதமான இந்த உப்பை அறியமாட்டான். இம்முறையை நல்ல நெறிமுறையைப் பின்பற்றும் சீடர்களுக்கே கற்றுத்தர வேண்டும். முறைகெட்ட சீடர்களுக்குச் சொல்லக் கூடாது. சமைக்கும் முறை தப்பினால் உணவின் சுவை மாறுவது போல் கைமுறை தப்பினால் உப்பு முறை பாழாகும். உப்பும் பலியாது. வேதையும் கிட்டாது.

உப்புச் செந்தூரம்

போச்சென்று மெண்ணாதே யின்னஞ் சொல்வேன்
புகழாக செந்தூர வழியைக் கேளு
காச்சென்ற சூதமொன்று நாத மூன்று
கைமுறையாயுருக்கி யதில் வீரந்தூவி
பாச்சென்ற பனியில் வைக்க திருதியாகும்
பருவமுடனிதை வாங்கி யுப்பைத் தோய்த்து
வாச்சென்று தணல்காட்டிப் பறியைச் சுற்றி
வாங்க மட்டும் நேர்மையாய் வாட்டு வாட்டே. 43

செந்தூரம் சொல்கிறேன் கேள்! சூதம் ஒரு பங்கும் நாகம் மூன்று பங்கும் சேர்த்து உருக்கி அதில் வீரத்தைப் பொடி செய்து தூவி பனியில் வைத்தால் செயநீராகும். இந்த நீரில் கட்டிய உப்பைத் தோய்த்து தணலில் காட்டி தங்கத்த கடால் சுற்றி செயநீர் விட்டு வாட்ட வேண்டும். உப்பானது தங்கத்தை வாங்கும் வரை வாட்டு.

வாட்டிடவே யுட்புகுந்து பறிதானப்பா
வளமாகச் சிவந்தோடு முப்புமப்பா
வூட்டிடவே சிவக்காட்டாற் பின்னும் வாட்ட
வுறவாகச் செவந்த பின்பு வேதைகேளு
நீட்டிடவே பரிசமுதற் றூமவேதை (தூம)
நிலைமாற்றுப் பதினாறு நினைவாய்ப்பாரு
காட்டிடவே சரக்கெல்லாம் கொல்லுங் கொல்லுங்
கரைசொல்ல வென்னாலுங் கடைப்படாதே. 44

உப்பானது தங்கத்துடன் சேர்ந்து செந்தூரமாகும். அப்படி சிவக்கவில்லை என்றால் மேலும் செயநீர்விட்டு சிவக்கும் வரை வாட்ட வேண்டும். சிவந்த உப்பினால் உண்டாகும் வேதை கூறுகிறேன் கேள்! பரிசம் மற்றும் தூம வேதையால் லோகங்கள் பதினாறு மாற்றுள்ள தங்கமாகும். இது சகலவித சரக்குகளையும் கொல்லும். இதன் பெருமைக்கு எல்லையே கிடையாது.

உப்புக் களங்கு

கடைப்படாக் களங்கமொன்று சொல்லக் கேளு
கைவிட..............................த் திரந்தான் காண்பதற்கு
மிடைப்படா வுப்பு நின்றே யுருகு ங்கால
மிடைக்கிடையே நாகமிட விசைந்தேயாடும்
படைப்படா தந்தெடைக்கு ஆடைக்கு சூதம்போடு
பறிபோடு வவ்வெடையிற் பாதியப்பா
தடைப்படா நின்றாடு மதிலே வீரந்
தாக்கிடுவாய் தங்கத்தி னெடைதான் காப்பா 45

கட்டிய உப்பை எடுத்து குகையிலிட்டு உருக்கி எடைககு எடை நாகம் சேர்த்து அந்த எடைக்கு சூதமும் சூதத்தின் எடையில் பாதி தங்கமும் தங்கத்தின் எடை வீரமும் சேர்க்க வேண்டும்.

காணப்பா வொன்றாய் நின்றாடும் போது
காட்டந்த வுப்பெடைக்குக் கெந்தி கெந்தி
தோணப்பா வெடுத்துடனே களங்கமாகுஞ்
சொல்லுதற்கு நாவேது தூரவோடும்
வீணப்பா மற்றதெல்லா முப்பை விட்டால்
விளம்பரிதா மென்றுசிவன் தாய்க்குச் சொன்னார்
ஆணப்பா பெண்ணாகும் பெண்ஆணாகும்
அடங்காத கவனமுதலொடுக் குந்தானே. 46

இவையாவும் ஒன்றாகச் சேர்ந்து உருகும் பொழுது உப்பின் எடைக்கு கெந்தி சேர்த்தால் களங்காகும். இதனுடைய பெருமையைச் சொல்வதற்கு நாவே கிடையாது. வெகுதூரம் வேதையோடும், இந்த உப்பை விட்டால் மற்றதெல்லாம் வீணாகும். மிகவும் ரகசியமான இம்முறையை சிவன் பார்வதிக்கு சொன்னார், இவ்வுப்பினால் ஆண் பெண்ணாகும், பெண் ஆணாகும் கவுனசித்தியும் பலிதமாகும். (ஆகாயத்தில் சஞ்சரிக்கும் வித்தை).

தானென்ற வுப்பை யல்லோ லோக வாதி
தனித்தனியே கட்ட றிவே னென்பாரைய்யா
கோனென்ற குருவறியார் நூலைக்காணார்
.............................ன் விதங்காணா ராட்டுங்காணார்
தேனென்ற மலர்த்தாளை பணியச் செய்யார்
செகச்சால வார்த்தை சொல்வார் திருட்டு வாதி
ஊனென்ற வுடம்பெடுத்தாற் பொய் சொல்லாம
லுத்தமனே பூரணத்தி லிருக்க நன்றே. 47

திருட்டுவாதியானவன் இவ்வுப்பைக் கட்டுவேன் என்பான். ஆனால் குருமுறையை அறியமாட்டான். குருமுறையைப் பற்றிக் கூறும் நூலையும் அறியமாட்டான். முறையான கட்டை அறியமாட்டான். தாயாரின் மலர்ப்பாதத்தை பணியமாட்டான். ஆனால் லோகத்திலுள்ள மக்கள் மயங்கும் விதத்தில் பேசுவான். அதனால் மனித உடம் பெடுத்தவன் இவ்வாறு பொய் பேசாமல் மனத்தைப் பூரணத்தில் நிறுத்தினால் நன்மையாகும்.

நன்றெனவே யான் சொன்ன நூலைப்பார்த்து
நலமுற்றோர் நம்போல நன்றாய் வாழ்வார்
அன்றெனவே சொன்னதெல்லா மறந்தானாகி
லறியாமல் வாதத்தி லழிவான் சொன்னேன்
வின்றெனவே யிதைத் தவிர்ந்தே யுள்ளே நோக்க
வேதாந்த ரூபமென விளங்குவார்கள்
கன்றெனவே யான்சொன்னேன் பிழை போக்கய்யார்
கருத்தூன்றி பார்த்துரைத்துக் கருதி டாயே. 48

நான் சொன்ன இந்நூலைப் பார்த்தவர்கள் என்னைப் போலவே நலம் பெற்று நன்றாய் வாழ்வார்கள். நான் சொன்னதை மறக்காமல் தன்உள்ளே நோக்கினால் சொரூப சித்தியடைவார்கள். மக்கள் பிழைக்க வேண்டும் என்பதற்காக இந்நூல் இயற்றினேன். கருத்தூன்றிப் பார்த்து அறிந்துகொள்.

உப்பு மெழுகு

கருதிடவே கல்லுப்புச் சுண்ணமெட்டு
காட்டு ரெண்டு சாரமதிற் கணக்குப் பார்த்துச்
சுருதிடவே வீரமதி லஞ்சு போடு
தயங்காதே பூரமதி லொன்று போடு
விருதிடவே யிதை மெழுகா யரைப் பாயானால்
விளங்கி யிதற் பூரமெடைத் தங்கங் கூட்டப்
பொருதிடவே யிதற் கொப்பாம் லோக மேது
போட்டிடவே கல்லோடு மேமமாமே. 49

கல்லுப்புச் சுண்ணம் எட்டுப் பங்கு எடுத்து, அதனுடன் சாரம் ரெண்டு, வீரம் ஐந்து, பூரம் ஒன்று சேர்த்து மெழுகுபோல் அரைத்துப் பூரம் எடைக்கு தங்கம் சேர்த்தால் அதற்கு ஒப்பான லோகம் எதுவும் கிடையாது. அதனால் கல் முதல் எல்லாம் தங்கமாகும்.

ஏமமெங்கே பிறந்துதென்றா லுப்பிற்குள்ளே
யெடுத்துரைத்தா ரெனையாண்ட மூலநாயன்
காமமெங்கே பிறந்துதென்றாலென்னைப் பெற்றக்
கருணைநிதி போகருமே காட்டினார் காண்
வாமமெங்கே பிறந்துதென்றால் வஸ்துக்குள்ளே
மருவிநின்ற தென்று சொன்னார் மயேசனப்பா
தாமமெங்கே பிறந்துதென்றாற் றாயுமீசன்
சகலருக்கு முப்பை விட்டால் ருசியும் போச்சே. 50

ஏமம் (தங்கம்) எங்கு பிறந்ததென்றால் இவ்வுப்பில் தான். இம்முறையை மூலநாயரான திருமூலர் எனக்கு எடுத்துரைத்தார். என்னைப் பெற்ற போகர் எடுத்துரைத்தார், வாமமாகபட்டது வஸ்துக்குள் பிறந்தது என்று ஈசன் சொன்னார். தாமமான ருசி பிறந்ததும் இந்த உப்பிலேயே என்று தாயும் ஈசனும் சொன்னார்கள்.

உப்பு செயநீர்

உரிசை பெற வுறங்கி நிற்கும் வாதிகாளே
யுப்பாலே யப்பாச்சு வப்புப்பாச்சு
வரிசை பெற வாதமெங்கே யுப்புக்குள்ளே
மகத்தான குளிகையெங்கே யுப்புக்குள்ளே
பரிசமென்ற தம்பனமோகனத் தோடெட்டும்
போரான சத்து முதற் றூமவேதை
கரிசலென்ற வித்தை யெல்லாமுப்புக் குள்ளே
காண்கிற தோர் குருபதத்தைக் கலந்துபோற்றே. 51

அப்பால் (நீரால்) உப்பும், உப்பால் அப்பும் (நீரும்) உண்டாயின. வாதம் எங்கே என்றால் இந்த உப்புக்குள்ளே தான். குளிகை எங்கே என்றால் இந்த உப்புக்

குள்ளேதான். தம்பன முதல் மோகனத்தோடு எட்டு சித்தும் இந்த உப்பால்தான் சத்தும் தூம வேதையும் களிசல் வித்தையும் இந்த உப்புக்குள்ளேதான். இவையாவும் அடைய குருபதத்தை வணங்கிப் போற்ற வேண்டும்.

போற்றிய பின் செயநீரைச் சொல்லக்கேளு
பொற் கொடிக்கு யீசனன்று புகன்றவாறு
மாற்றறியாப் பேரின்ப ஞானவீடு
வாய் திறந்து சொல்லாதே மவுனமாகும்
மேற்றறிய வுப்பான சுண்ணம் பத்து
மிதற்கு நேர் சாரமிட்டே யிழைத்தே யாட்டுத்
தேற்றறிய நீராகு மிதிலே வீரஞ்
சொற்பமா யோரெடைதான் போடு போடே. 52

செயநீர் கூறுகிறேன் கேள்! பொற்கொடியான பார்வதிக்கு ஈசன் முன்பு சொன்ன முறை இதுவேயாகும். உப்புச் சுண்ணம் பத்துப் பலம் எடுத்து அந்த எடைக்கு சாரம் சேர்த்து இழைத்தால் செயநீராகும். அந்த நீரில் வீரம் ஓர் எடை போடு.

போட்டுடனே சிவப்பாகுஞ் செயநீரப்பா
புகழாக விந்த நீரெல்லாங் கட்டுங்
காட்டுடனே தங்கத்தை மென்று வாங்குங்
கைகாட்ட நவலோகம் பொன்னுமாகும்
தேட்டுடனே கற்பூரந் துவைத்து வாட்டிச்
சுகமாக வூது குகை சுண்ணமாகும்
மாட்டுடனே யிப்படித்தான் பூரமேன்மை
யறிந்தவனே முழுவாதி யறிவார் மாடே. 53

வீரத்தைப் போட்டவுடன் செயநீரானது சிவந்த நிறமாகும். இந்த செயநீரானது எல்லா வகையான சரக்குகளையும் கட்டும். தங்கத்தை மென்று விழுங்கும். நவலோகம் அனைத்தும்தங்கமாகும். இந்நீரில் கற்பூரத்தை தோய்த்து வாட்டி குகையில் வைத்து ஊதினால் சுண்ணமாகும். பூரத்தையும் இவ்வாறு செய்தால் சுண்ணமாகும். இந்த செயநீரை அறிந்தவனே முழுமையான ரசவாதியாவான். மற்றவர்களெல்லாம் மாடாவார்.

வங்கச் சுண்ணம்

அறியாத செயநீரில் தோய்த்து வாட்ட
வறுபத் துனாலுமப்பா மெழுகேயாகும்
பிறியாத வேதையிதிற் கோடா கோடி
பேசுதற்கு வாயில்லை யுப்பை விட்டால்
மறியாத சீஷனுக்குக் காட்ட வேண்டாம்
வாதமெல்லா முப்பாலே வளர்ந்துதப்பா
நெறியாகப் பூசைப்பண்ணி மூலம் பாரு
நேரான வுப்பினது வீரங் கேளே. 54

இச்செயநீரில் அறுபத்து நாலு சரக்கையும் தோய்த்து வாட்டினால் மெழுகாகும். இந்த செயநீனால் சரக்குகள் மெழுகானால் சகல லோகங்களும் பொன்னாகும். இதைப் பற்றிக் கூறுவதற்கு நாவேயில்லை. இம்முறையை பணிவில்லாத சீடர்களுக்கு

கற்றுத்தர வேண்டாம். வாதம் என்ற சொல்லே இந்த உப்பால்தான் உண்டாயிற்று (கல்லுப்பால்). உப்பினால் ஏற்படும் வேதையைக் கண்டு இறுமாப்பு அடையாமல் முறையாக பூசை திரவியங்களுக்கு செலவு செய்து பூசை பண்ணி மூலத்தில் மனதை நாட்ட வேண்டும். இந்த உப்பினால் (செயநீரின்) மகிமையை கூறுகிறேன் கேள்.

கேளப்பா கற்பூரச் சுண்ண மொன்று
கெடியான வீரமொன்று ரெண்டுங் கூட்டத்
தேளப்பா சரக்கான செந்துக் கெல்லாஞ்
சிகப்பென்றால் வெகுசிகப்பு அருணன் போல
வாளப்பா விதையெடுத்து வங்கத் தூட்டி
மருவியொரு புடம் போட மலரும் பூப்போல்
கோளப்பா ரசத்துக்கே காலன் காலன்
கூப்பிட்டா லேனென்னும் வாதந்தானே. 55

முன்செய்த கற்பூரச் சுண்ணம் ஒரு பலமும், வீரம் ஒரு பலமும் சேர்த்து மத்தித்தால் சரக்கு அருணன் போல் சிகப்பு நிறம் கொள்ளும். இச்சரக்கை வங்கத்துடன் (ஈயத்துடன்) சேர்த்துப் புடம்போட்டால் வெண்தாமரை போல் சுண்ணமாகும். இச்சுண்ணம் ரசத்துக்கு காலனாகும் (ரசத்தைக் கொல்லும்). மேலும் இதனால் வாதம் கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்கும் (அதாவது ரசவாதம் மிக எளிதாக சித்தியாகும்).

தூரிசுச் சுண்ணம்

தானென்ற வங்கத்தின் சுண்ண மொன்று
தயங்காத வீரமொன்று ரெண்டுங் கூட்டி
வானென்ற தங்கத்திற் பூசியூத
மலருமே பூப்போலே மைந்தா கேளு
கோனென்ற தங்கத்தின் சுண்ண மொன்று
குறிப்பான வீரமொன்று கூட்டி யாட்டிக்
கானென்ற சூதமரை பூரங்கால் தான்
கைமுறையாய் வெள்ளையு ரங்காலுங் கூட்டே. 56

வங்கச் சுண்ணம் ஒருபலம், வீரமொரு பலம் இரண்டையும் கூட்டி தங்கத்தின் மேல் பூசி உலையில் ஊற்றி ஊதினால் தங்கம் சுண்ணமாகும். இச்சுண்ணத்தை ஒரு பலம் எடுத்து அதனுடன் வீரமொரு பலம் கூட்டி அரைத்து அதனுடன் சூதம் அரை பலமும் பூரம் கால் பலமும் வெள்ளை பாஷாணம் அரைக்கால் பலமும்.

கூட்டியதிலே குரு வண்டு மன்பத் தொன்று
குறிப்பான புழுகதிலே யரைதான் போட்டு
மாட்டியெல்லாங் குக்கு டத்தின் பிச்சாலாட்டு
வகையான வொருபலமாந் துரிசிக்கப்பி
நீட்டியங்கே ரவிபடவே போடுபோடு
நிலையேழு தினத்துள்ளே நீறிப் போகும்
மாட்டியங்கே யாடுதற்கு யிதுவே ஆசான்
அன்ட முதலறுபத்து நாலும் நீறே. 57

குருவண்டு ஐம்பத்தொன்றும், புனுகு அரைபலமும் கூட்டி கோழியின் பிச்சால் அரைத்து, அரைத்த சரக்கை ஒரு பலம் துருசின் மேல் பூசி சூரிய ஒளிபட வைத்தால்

ஏழு நாளில் நீறிச் சுண்ணமாகும். சகல சரக்கையும் சுண்ணமாக்குதற்கு இதுவே குருவாகும். இத்துருசுச் சுண்ணத்தால் அறுபத்து நாலு சரக்கும் சுண்ணமாகும். (நீறும்)

அண்டச் சுண்ணம்

நீறாவதே தென்றால் சொல்லக்கேளு
நிறையான யண்ட மொன்று போட்டதொன்று
கூறாத வீர மிட்டுக் கூட்டிப் போடு
குப்பென்று பற்றி யண்டங் கூகைநீறாந்
தாறாக வின்னீரில் வீரமாட்டுச்
சரக்கெல்லாம் போட்டிடவே தவள நீறாம்
வேறாக நவலோகம் படவே நீறாம்
வேதை சொல்ல முடியாது விரைந்து கேளே. 58

அண்டம் ஒன்று எடுத்து அதனுடன் துருசு சுண்ணம் ஒரு பங்கும் வீரம் ஒரு பங்கும் சேர்த்துப் புடம்போட்டால் சுண்ணமாகும். இச்சுண்ணத்துடன் வீரம் சேர்த்து எந்த சரக்குடன் சேர்த்துப் புடம்போட்டாலும் சுண்ணமாகும். மேலும் இச்சுண்ணம் (அண்டச்சுண்ணம்) பட்ட மாத்திரத்திலேயே நவலோகம் அனைத்தும் சுண்ணமாகும். வேதையும் பலிதமாகும். இச்சுண்ணத்தின் போக்கை யாராலும் சொல்ல முடியாது.

விரைந்து சொன்ன நீறெல்லாங் குருவேயாச்சு
வேறான சரக்கையிந்த நீறாற்கட்டு
கரைந்து நின்று கண்விட்டுக் கரியிலாடுங்
காட்டு முன்னே நவலோகங் கனகமாகும்
மரைந்து நின்ற மாற்றதுவு மறுபத்தாறா
யாடலா மண்ட மொன்று கோடி காலந்
துரந்து நின்ற குருவெடுத்துப் பச்சை கூட்டி
சுகமாகப் புடம் போடத் தொந்த மாமே. 59

அண்டச்சுண்ணம் சேர்த்து செய்த சுண்ணங்களெல்லாம் குரு மருந்தாகும். இந்த குருவால் பலவகையான சரக்குகளை கட்டி கரியோட்டில் வைத்துருக்கினால் கண்விட்டாடும். இதனுடன் நவலோகத்தை சேர்த்தால் பொன்னாகும். இப்பொன் அறுபத்து நாலு மாற்றுக் கொண்டதாயிருக்கும். இக்குரு மருந்துடன் பச்சை சேர்த்து புடம் போட்டால் தொந்தமாகும். (பச்சை என்றால் துரிசு என்று பொருள். ஆனால் இங்கு முன்னமே துருசு சுண்ணம் கூறிவிட்டதால் இது பச்சை கற்பூரத்தை குறிக்குமோ என்ற ஐயம் ஏற்பட காரணமாகிறது.)

தொந்தமென்றால் நூறு மட்டுந் தொந்த மாகுஞ்
சொல்லறி யேனிதுமேலே சூக்ஷ மேற்ற
பந்தமென்றாலிது பந்தம் வாதத்திற்குப்
பயல் முதலாய்க் கிழவன் மட்டும் பார்க்கலாகும்
மந்தமென்றாலிது மந்த மென்று சொல்ல
அரனாலு முடியாது வடியேன் காணேன்
அந்தமென்ற தித்தினையு முப்பாலப்பா
தனியுப்புக் குயிரேது பூரந்தானே. 60

இத்தொந்தம் நூறு மட்டும் ஓடும். இந்த தொந்தத்தால ஏற்படும் வேதையைப் பற்றி சொல்ல முடியாமல் விழிக்கிறேன். இம்முறையை கிழவன் முதல் சிறுவன் வரை செய்து பார்க்கலாம். இதைப் பற்றிக் கூறுவதற்கு சிவனாலும் முடியாது. அடியேனாலும் முடியவில்லை. இவையாவும் மூல உப்பான கல்லுப்பால் சித்தியாயிற்று. தனி உப்பிற்கு உயிரில்லை பூரத்துடன் சேர்ந்தால் உயிர் உண்டாயிற்று.

சூதக்கட்டு

தானென்ற குருவாகு முப்பாற்கேளு
கண்ணுகிறேன் சூதத்தைக் கைதூக்காமல்
கானென்ற வுப்பொன்று சூதம் நான்கு
காட்டியப்பா முலைப்பாலைக் கலந்தே யாட்டி
யூனென்று முருட்டியதை யுண்டைப் பண்ணி
யுணர்வான காரத்தை மேலேபூசி
வானென்றே யாற வைத்துப் புடத்தைப் போடு
வாங்கி யிதைக் குகைக்குள்ளே வைத்தே யூதே. 61

குரு உப்பு ஒரு பங்கும் சூதம் நான்கு பங்கும் சேர்த்து முலைப்பால் விட்டு அரைத்து உருட்டி உருண்டையாக்கி வெங்காரத்தை மேலே பூசி உலர வைத்துப் புடம் போட்டு வாங்கி குகையில் வைத்து ஊத வேண்டும்.

ஊதையில் மணிபோலா மிடைபோகாது
வொட்டியோட்டித் தொந்திக்க வொரு நூறேறும்
பாதையிலே வெகுகோடி வேதையாகும்
பாரப்பா வெள்ளியிட்டால் வெள்ளியாகும்
போதையிலே பொன்னிட்டாற் பொன்னுமாகும்
பொற்கொடிக்கு மீசனன்று புகன்றவாறு
மாதையிலே யிதுலகுவாய் முன்னே பார்த்து
மற்றதெல்லாம் பின்புபார் மைந்தா நீயே. 62

ஊதும் பொழுது மணிபோல் உருகி நிற்கும். ஆனால் அதன் எடையில் எந்த மாற்றமும் இருக்காது. இம்மணியை ஓட்டில் வைத்து தொந்தித்தால் கோடி வரை வேதையோடும். (லோகத்தின் எடைக்கு கோடியில் ஒரு பங்கு இம்மணியைச் சேர்த்தால் பொன்னாகும்.) இம்மணியுடன் வெள்ளி சேர்த்து உருக்கி வைத்துக் கொண்டு எந்த லோகத்துடன் சேர்த்தாலும் லோகங்கள் வெள்ளியாகும். அதேபோல் தங்கம் சேர்த்து உருக்கி வைத்துக் கொண்டால் சகலலோகங்களும் தங்கமாகும். இம்முறை[illegible]ய முன்பு ஒரு சமயம் ஈசன் பார்வதிக்கு சொன்னார். வேதையிலே இது ல[illegible]கும் (சுலபமானதாகும்). ஆகையால் முதலில் இதைச் செய்து பார்த்து மா[illegible]றி செய்துக் கொள்.

உப்பின் பெருமை

மைந்தனே யுப்புடை பெருமைச் சொல்ல
வாக்குண்டோ மனமுண்டோ வாதவேதை
மைந்தனே உப்பை விட்டால் வாதம் போச்சு
3 வாய் வாதத் திருடருடன் வாய் பேசாதே

மைந்தனே யுப்பதுவுஞ் சித்தியாச்சு
மருவி யிதைக் கட்டினபின் சிவனுமாச்சு
மைந்தனே வெகு கடினம் கட்டுதற்கு
வாய்திறந்து வுப்பென்ற வார்த்தைபோடே. 63

உப்பின் பெருமையை கூறுவதற்கு வாயால் முடியுமா? அல்லது மனதால்தான் நினைத்துப் பார்க்க முடியுமா? இவ்வுப்பு (ஆதியுப்பான கல்லுப்பு) இல்லாத வாதம் பலிக்காது. இவ்வுப்பை அறியாமல் வெறும் வாயை மெல்லும் வாய்வாதம் பேசுவோரிடம் பேசுதல் கூடாது. ஆதியுப்பான இது (பச்சை உப்பு) சக்தியாகும். கட்டின பிறகு இந்த உப்பே சிவமாகும். இவ்வுப்பைக் கட்டுவது மிகவும் கடினமாகும்.

போடப்பா வேழுவகைப் பால் தானுண்டு
போக்கோடே தனித்தனியே வுப்பில் விட்டு
ஆடப்பா வாதமென்ற கம்பத்தேறி
யதற்கடிக்க முளை வேண்டாங் கயிறு வேண்டாம்
நீடப்பா வுப்பான வுருக்குக் கம்பம்
நிலைத்துதப்பா சராசரங்க ளெங்குந்தானாய்
கூடப்பா வுப்பை விட்ட வாதி யானாற்
கூப்பிட்டுக் கைப்பிடித்து போடு சொட்டே. 64

ஆதியுப்பைக் கட்டி வாதம் புரிவதற்கு ஏழு வகை பால் உண்டு. அந்தப் பாலை தனித்தனியே உப்பில் விட்டு வாதம் என்ற கம்பம் ஏறி சித்து விளையாடலாம். இதற்கு புத்தியும் வேண்டாம். யுக்தியும் வேண்டாம். இவ்வுப்பு உலகம் முழுவதும் தானாகவே பரவிக் கிடக்கிறது. இவ்வுப்பை விட்டு வாதம் பார்க்கும் வாதியை அழைத்து அவனிடம் ஒரு சொட்டு விட்டு வாதம் பார்க்கச் சொன்னால் அதிசயப்படுவான்.

போடுகிற வகை சொல்வேன் கேளுகேளு
புகழான தில்லைப்பால் படிதா னொன்று
நாடுகிற வராக னொன்று துரிசிச் சுண்ணம்
நலம் பெறவே யதிற் போட்டு நன்றாய்க் கிண்டி
யோடுகிற சூதமது பலந்தான் பத்து
வுத்தமனே யதில் விட்டு மூட்டு தீயைப்
போடுகிற க்ஷணமே வட்டுப் போலாம்
புகையாம லுறைந்து கட்டு மிதுதான் காணே. 65

ஏழு வகை பாலின் மூலம் வாதமாடும் முறையைக் கூறுகிறேன் கேள்: ...ப்பால் ஒரு படி எடுத்து அதில் துருசுச் சுண்ணத்தை வராகன் எடை போட்டு ...றாகக் கிளறிப் பின்பு அந்தப் பாலில் ஒரு பலம் ரசத்தை விட்டு அடுப்பேற்றித் தீயை மூட்டி எரித்தால் அடுத்த வினாடியே ரசம் கட்டி வட்டுப்போல் திரண்டு நிற்கும். (தில்லைப்பால் ஒரு வகை மூலிகையின் பால்)

எருக்கின் உபயோகம்

காணப்பா விந்த ரசங் காயசித்தி
கைகடந்து வெகுதூரங் காட்டவோடும்
பூணப்பா விதையுண்டாற் சட்டைபோகும்
புகழான கொப்பாலே வெள்ளியாகும்

மாணப்பா விதைத் தயிலமெல்லாங் கட்டும
மதினுடைய வேர் சூதஞ்சாம்பலாகும்
தோணப்பா விதற்கெல்லாமுப்பைத் தூவு
சொல் முறையை மறவாதே சூட்டு சூட்டே. 66

திரண்டு நின்ற ரசத்தால் காயசித்தி பலிதமாகும் (சித்தியாகும்). இதனால் இரசவாதமும் சித்தியாகும். தில்லைப்பால் என்ற இம்மூலிகையின்விதையை உட்கொண்டால் தேகத்தில் சட்டை வாங்கும். இம்மூலிகையின் கொம்பால் லோகங்கள் வெள்ளியாகும். விதையிலிருந்து எடுக்கப்படும் தயிலத்தால் எல்லாவகையான சரக்கும் கட்டும். இம்மூலிகையின் வேரால் ரசம் எனப்படும் சூதமாகப்பட்டது சாம்பலாகும் (பஸ்பமாகும்). இவை யாவும் சித்தியாக மறக்காமல் முன் கூறிய உப்பைத் தூவ வேண்டும்.

லிங்க மெழுகு

சூட்டியதோ ரெருக்கம்பால் படியொன்றுக்குள்
சுகமாகக் காசிடைதான் துரிசுச் சுண்ணம்
மூட்டியதோர்க் கடிகையிலே முறிந்து நீரா
முத்தமனே யின்னீரை வேறே வாங்கிக்
கூட்டியதோர் சாதிலிங்கம் பலந்தான் பத்து
கூடவிடு வெடியுப்புப் பலந்தானஞ்சு
மாட்டியிதைப் பொடியாக்கி யதிலே போட்டு
யடுப்பேற்றி யெரிக்கையிலே மெழுகுமாமே. 67

ஆமிந்த மெழுகு தன்னை நவலோகத்தில்
ஆயிரத்துக் கொன்றிடவே பத்து மாற்றாம்
போமிந்த மெழுகு தொட்டாற் சரக்கு கட்டும்
போக்கு மெத்தச் செல்லறியேன் புத்தியோர்க்கு
வோமிந்த கள்ளிப் பாலிப்படியே யாகும்
உத்தமனே சவ்வீர மிப்படியே பண்ணு
வேமிந்தச் சரக்கெல்லாம் வெவ்வேறாக
வேதையுமோ வெகுதூரம் விசிறும் பாரே. 68

எருக்கம்பால் ஒரு படி எடுத்து அதில் காசு எடை துருசுச் சுண்ணம் சேர்த்தால் ஒரு கடிகையில் முறிந்து நீராகும். அந்த நீரை மற்றொரு பாத்திரத்தில் ஊற்றி அதில் சாதிலிங்கம் பத்து பலத்தையும் வெடியுப்பு ஐந்து பலத்தையும் பொடித்துப் போட்டு அடுப்பில் வைத்து எரித்தால் மெழுகாகும். இம்மெழுகை நவலோகத்தில் ஆயிரத்திற்கு ஒரு பங்கிட்டால் பத்து மாற்றுடைய தங்கம் கிட்டும். மேலும் இம்மெழுகால் தொடப்பட்ட எல்லா சரக்கும் கட்டும். கள்ளிப்பாலில் இதேபோல் சவ்வீரம் சேர்த்து மெழுகு செய்தால் வேதை வெகு தூரமோடும்.

சவ்வீர மெழுகு

விசிறுகிறே னிலைக்கள்ளிப் பாலைவாங்கி
வெண் குழலில் வார்த்த தனிலிங்கம் போடு
கசறுகிற காசிடைதான் லிங்கம் ரெண்டு
கைமுறையாய்ப் பொடித்திட்டுக் கவசமூடிப்

பசறுகிற நெல்லிட்டுப் பாங்காய் வேகப்
பச்சை நிறம் போலாகும் லிங்கமென்றால்
மசறுகிற மாண்பர்களே லிங்கத்திற்கு
மாட்டியுப்புக் குருபூசி வாட்டு வாட்டே. 69

வாட்டியிந்த லிங்கமெடை வீரம் போட்டு
வாகான சவுக்காரச் சுண்ணம் பாதி
மூட்டியதிற் பூரமிட்டுப் புழுகுபோடு
முயன்றரைத்துப் பூசியிதின் மேலே வாட்டி
நீட்டியதைக் கவசமிட்டு புடத்தைப் போடு
நிலைத்து நின்ற குருவாகும் லிங்கராசன்
ஆட்டியதில் வாதமொன்றோ கவனமொன்றோ
வாகாகா திருநடன மாடுந்தானே. 70

இலைக்கள்ளிப் பாலை வெண்குழலில் வார்த்து அதில் இரண்டு காசெடை லிங்கத்தை பொடித்துப்போட்டு கவசம் செய்து நெல்லில் வேகவைத்தால் சுத்தமான லிங்கமாகயிருந்தால் பச்சை நிறமாகும். இந்த லிங்கத்திற்கு உப்பு குருவைப் பூசி வாட்டிப் பின்பு அந்த லிங்கத்தின் எடைக்கு வீரமும் வீரத்தில் பாதி சவுக்காரச் சுண்ணமும் அதனுடன் பூரமும், புனுகும் சேர்த்து அரைத்து லிங்கத்தின் மேல் பூசி வாட்டி கவசம் செய்து புடம் போட்டால் லிங்கம் குருவாகும். இந்த குரு லிங்கத்தால் வாதமும் கவுனமும் சொன்னபடி கேட்கும்.

சூத குரு

திருநடன மாடுதற்கு மொன்றுகேளு
சிறக்கவொரு சேரிரசங் கல்வத்திட்டு
கருநட்ட மானதொரு வுப்புச் சுண்ணந்
தன்னிலிடு பலமரைதான் தாய்தானொன்று
கருதிட்ட மாங்காயின் பாலை வார்த்துக்
கைமுறையாய் பதினொருநாட் கலந்தே யாட்டு
வொருதிட்ட மாகவொன்றாய் வழித்து வாங்கி
யோகோகோ அயச்சிமிழி லொடுக்கிடாயே. 71

ஒடுக்கியதைக் கவசமிட்டுப் புடத்திற்போடு
வுத்தமனே சூதமது குருவுமாகும்
மடுக்கியிதை யேழுதினங் குன்றி யுண்ணில்
மகத்தான சித்தியுமாஞ் சட்டைபோகுந்
தடுக்கியிந்தக் குருபட்டா லெல்லாஞ் சாகுஞ்
சதகோடி நவகோடி வேதை யோடும்
மிடுக்கிவிட்ட வுப்போடு மாடுமப்பா
வென்ன சொல்வேன் என்னாலும் முடியாவாறே. 72

ஒரு சேர் சூததை (ரசத்தை) எடுத்து அதில் அரைப்பலம் உப்புச் சுண்ணத்தையும் ஒரு பலம் தாயான கெந்தகத்தையும் சேர்த்து மாங்காய்ப் பால் விட்டு பதினாரு நாள் அரைத்து அந்த மருந்தை ஒரு இரும்புச் சிமிழில் வழித்துக் கொண்டு கவசம் செய்து புடம் போட்டால் சூதமானது (இரசமாகப்பட்டது) குருவாகும் (குரு

மருந்தாகும்). இம்மருந்தை ஏழு நாட்கள் குன்றி அளவு உட்கொண்டால் தேகத்தில் சட்டை உரிந்து இளமை உண்டாகும். மேலும் இந்த ஒரு மருந்தால் சகல சரக்கும் கட்டும். வேதையோ சதகோடி அண்டம்வரை பாயும். இவை யாவும் சூதத்துடன் சேர்ந்துள்ள உப்புச் சுண்ணத்தின் மகிமையாகும்.

சூத நாகம்

வாறுகேள் கப்பட்டி பால்தானப்பா
வாகாகப் படியொன்று வாங்கிக் கொண்டு
தாறுகேள் சூதமஞ்சு நாகம் ரெண்டு
தனித்ததொரு தங்கமொன்று சேரக்கூட்டி
வேறுகேள் பொடிபண்ணி பாலிற் போட்டு
விரைந்ததிலே சவ்வீரம் ரெண்டு போட்டு
கூறுகேள் பலம்பத்து மொன்றாய்க் கொட்டிக்
கொள்கிடு நீ கல்லுப்புச் சுண்ண மொன்றே. 73

ஒன்றோடே பதினொன்றாம் பலமதெல்லாம்
உத்தமனே யரைத்துருட்டி யுலர்த்திப் பின்பு
கன்றோடே யயச்சிமிளிலடைத்துப் பின்புக்
கவசமிட்டுக் கடும்புடமாய்க் கட்டிப்போடு
தன்றோடே குருவாகு ணாகமப்பா
தடவினதே கலந்தோடுந் தங்கமாகும்
வன்றோடே யிசைந்த மலர்க்குழலாட்கீசன்
வாய்திறந்து சொன்னகுரு மட்டில்லாதே. 74

கப்பட்டி என்ற மூலிகையின் பாலை ஒருபடி எடுத்துக் கொண்டு அதில் சூதம் ஐந்து பலம், நாகம் ரெண்டு பலம், தங்கம் ஒரு பலம் பொடி பண்ணிப் போடவும். மேலும் சவ்வீரம் ரெண்டு பலமும் கல்லுப்புச் சுண்ணம் ஒரு பலமும் போட்டு நன்றாக அரைத்து இரும்புச் சிமிழில் வழித்து வைத்துக்கொண்டு அச்சிமிழுக்குக் கவசம் செய்து காடைப்புடம் போட்டால் நாகம்குருவாகும். இக்குருபட்டஇடமெல்லாம் தங்கமாகும். இம்முறை முன்பு ஒரு சமயம் வண்டுகள் மொய்க்கும் வாச மலர்களைச் சூடிய பார்வதிக்கு சிவபெருமான் உபதேசித்ததாகும்.

சூதக்கட்டு (வேறு)

மட்டில்லாச் சூதமது பலந்தான் பத்து
வார்த்து மயப் பாத்திரத்தில் வரிசையாகக்
குட்டில்லாக் குண்டலியாம் பாலையப்பா
கொட்டு வொரு சேரையிதில் குமுறிப்போகும்
கட்டில்லாதேன் வேண்டா முப்புச் சுண்ணம்
காட்டியொரு பலமதிலே கலந்து கிண்டில்
வட்டில்லா வடடுப் போற் சூதங்கட்டும்
வளமாக யெரித்திட்வே மணியு மாமே. 75

பத்து பலம் சூதத்தை ஒரு இரும்புப் பாத்திரத்தில் வார்த்து அதில் ஒரு சேர் குண்டலிப் பாலை சேர்த்து அதனுடன் உப்புச் சுண்ணத்தை ஒரு பலம் போட்டு

நன்றாகக் கலந்து கிண்டினால் சூதம் வட்டுப்போல் கட்டும். அதை அடுப்பேற்றி எரித்தால் மணியாகும்.

மணியான சூதத்திற் சாரணையை காட்ட
மதியளவுங் கவனமுன்னி வாங்கும் வாங்கும்
பிணியான தொன்று மில்லை வாயில் வைக்கப்
பேரான காயமுமோ பெலத்த சித்தி
தணியாத வேதையிதிற் கோடிக் கோடுஞ்
சச்சுதானந்த வெளி தானுங் காணுங்
கணியான புரியட்டம் நாலையுண்ணுங்
கதிர் முனைக்கோ காற்றுமில்லைக் களங்கும் போச்சே. 76

அம்மணிக்கு சாரனை தீர்த்தால் மனோ வேக சஞ்சாரம் செய்யும் சக்தி ஏற்படும். இம்மணியை வாயில் வைத்துக் கொண்டால் வியாதிகள் அகன்று காயசித்தி ஏற்படும். மேலும் இந்த மணியால் வேதை கோடிக்கு ஓடும். சச்சித்தானந்த வொளி கண்ணில் தோன்றும். புரியட்ட காயத்தில் நாலையுண்ணும், சகலவித களங்கமும் விலகும்.

களங்கற்று நின்ற வெளி காணுங் காணுங்
கைகடந்த பூரணமோ காணுங் காணுங்
முளங்கற்ற நிர்மலமோ காணுங் காணும்
ஒகோகோ நிர்க்குணமே காணுங் காணும்
விளங்கற்ற நிராதாரங் காணுங் காணும்
வேதாந்த முடிவடங்கக் காணுங் காணும்
மொளங்கற்று மெங்கு மொன்றாய் நின்றசோதி
யொளி யென்னக் காணுமிந்தக் குளிகைதானே. 77

அது மட்டுமின்றி களங்கமற்றதும், பூரணமாயிருப்பதும், நிர்மலமானதும், குணங்களற்றதும், ஆதாரம் இல்லாததும் (எந்த ஒரு ஆதாரமும் இல்லாமல் தானே அனைத்துக்கும் ஆதாரமாய் நிற்பதும்) வேதத்தின் இறுதியான கருத்தால் விளங்கப் பெறுவதும் எங்கும் வியாபித்து நின்று பிரகாசிக்கும் பரஞ்சுடர் (பரஞ்சோதி) இந்த மணியின் மகிமையால் நம் கண்முன் தோன்றும்.

தானென்ற வாணவத்தைப் போக்கும் போக்குஞ்
சங்கற்பமான தெல்லாந் தவமேயாகும்
வேனென்ற பிறவியெல்லாம் வெந்து நீரு
மெடு படாவாசனையும் விரைந்து போகும்
மூனென்ற விந்து வெல்லாமு மிறு.குங்கற்போல்
உறுதியுடலாக வென்று முணர்ந்து வாழ்வார்
வானென்ற மனஞ் சேரும் வாசிகாணும்
மகத்தான குளிகையது வளப்பந்தானே. 78

மேலும் இம்மணியின் மகிமையால் நம்மிடமுள்ள அனைத்துவித ஆணவமும் விலகும். சங்கற்பம் செய்த மாத்திரத்தில் அமைத்தும் சித்தியாகும். பிறவி அகலும், பூர்வ ஜென்ம வாசனை விலகும், விந்து இறுகி உடலும் இறுகும் மனமானது வாசியுடன் சேர்ந்து லயப்படும். (இவையாவும் சூதமணியின் மகிமைகளாகும்.)

முதற்குரு இன்னதென்பது

வளப்பமெல்லா முப்பாலே மைந்தா கேளு
வரிசை சொல்வே னுப்புடைய மார்க்க மெல்லாந்
தளப்பமென்று மெண்ணாதே யுற்றுக் கேளு
தனித்தமுதற் குரு லவணம் வழலையப்பா
வளப்பமென்ற பாறையுப்பு ரெண்டாம் பக்ஷம்
இதின் பிறகு வெடியுப்பா மறிந்து கொள்ளு
இளப்பமல்ல வமுரியுப்பா மிதை விட்டாக் கால்
இசைந்த மற்ற லவண மெல்லா மிழுக்குத்தானே. 79

வரிசையுடன் உப்பின் பெருமை கூறுகிறேன் கேள்! முதல் குரு லவணம் வழலையாகும், (வழலையுப்பு) பாறையுப்பு இரண்டாம் பக்ஷமாகும். (வழலையை விடசற்று தாழ்ந்தது). வெடியுப்பு மூன்றாம் பக்ஷமாகும். (இது பாறையுப்பைவிட சற்று தாழ்ந்தது) இவை மூன்றும் இல்லாவிட்டால் அமுரியுப்பு சிறந்ததாகும். (இது கடை பக்ஷமாகும்) மற்ற லவணங்கள் (உப்புகள்) எல்லாம் உபயோகமற்றதாகும்.

இழுக்கான வுப்பை யெல்லாம் வலு வேயாக்கும்
மெடுத்திடப்பா முந்தி முந்தி வழலைச் சுண்ணம்
மழுக்கான சரக்கை யெல்லாஞ் சலவையாக்கும்
மடங்காத புகையடக்கிச் சத்து பண்ணும்
பழுக்காத சரக்கை யெல்லாம் பழுக்கப் பண்ணும்
படுமுன்னே தாதுவெல்லாம் படுதீ பற்றுங்
கொழுக்காதே யிதைக்கண்டு கெர்ச்சிக்காதே
கொள்ளாதே கர்மநோய் குடிலமாமே. 80

உபயோகமற்ற லவணங்கள் அனைத்தையும் உபயோகம் உள்ளதாக மாற்றக்கூடியது வழலைச் சுண்ணமாகும். சகல சரக்கையும் சுத்தியாக்கும். சகல சரக்கையும் புகையடங்கச் செய்து சத்தாக மாற்றும். சரக்கனைத்தையும் பழுக்கச் செய்யும். தாதுக்கள் அனைத்தையும் சுண்ணமாக்கும். இவற்றை அறிந்து கொண்டதால் கர்வம் கொண்டு கர்ச்சனை செய்யக்கூடாது.

குடிலமா மகாரமென்ற மூன்றுக்கே தான்
குறிப்பாக வறிந்து கொள்ளு வழலைராஜன்
குடிலமப்பா பாறையுப்புச் சூதத்திற்கு
குமுறிடவே கட்டியது மணிபோலாடுங்
குடிலமப்பா வெடியுப்புச் சரக்குக் கெல்லாங்
கூறரிது யிதின் பெருமைக் கூறினேன் யான்
குடிலமப்பா லவணமென்ற மற்ற தெல்லாங்
குறிப்பறிந்து கொள்வதற்கு கூறினேனே. 81

மேற்கூறியவையும் வழலை ராஜன் என்ற வழலையின் மகத்துவங்களாகும். பாறையுப்பானது சூதத்தைக் கொல்லும். கட்டி மணி போலாக்கும். வெடியுப்பானது பல சரக்குகளையும் கட்டும். மெழுகாக்கும், இவையாவற்றையும் லவணங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்காகக் கூறினேன்.

கூறினே னுப்பினுது பெருமை யெல்லாம்
குவிந்தடியேன் பார்த்ததின் பின்னறிந்த மட்டும்
மாறினே னென்னாலே முடியாதென்று
மறிந்துணர்ந்த பெரியோரே யறிந்து பாருந்
தேறினே னுப்பை முதற் றொட்டே யாடிச்
செக சாலங் கடந்த பின்பு சித்திகூடி
மாறினேன் குளிகையிட்டு வீதியோடி
மகத்தான பெரியோரை வணங்கினேனே. 82

உப்பின் பெருமைகளைப் பற்றி நான் செய்து பார்த்த வரைக்கும், என்னால் அறிந்து கொண்ட வரைக்கும் கூறினேன். இதற்கு மேல் என்னால் கூறமுடியவில்லை. ஆகையால் உங்களால் முடிந்த வரை நீங்கள் அறிந்து பார்த்துக் கொள்ளுங்கள். முதலில் நான் உப்பைக் கட்டி அதனால் பலசித்துகள் விளையாடி அதனால் காயசித்தி செய்து கொண்டு குளிகையைச் செய்து (ரசமணி) ஆகாயத்தில் சஞ்சரித்து மகான்களான பெரியோரைச் சந்தித்துப் போற்றி வணங்கினேன்.

பூநீறு மெழுகு

வணங்குதற்கு மின்ன மொரு வித்தை கேளு
வாய்திறந்து சொல்லாதே சூளுவாய்ச் சொல்வேன்
இணங்குதற்குப் பூனீறு பூத்தாப் போலே
யெடுத்ததனைப் படியிரண்டா யளந்துகொண்டு
பிணங்குதற் கமுரிபடி யாறு வாரு
பேரான கற்சுண்ணம் படிதா னொன்று
தணங்குதற்குக் கரைத்து வைத்ததிலே கேளு
சாத்திடுவாய்ப் படிநாலு வமுரிதானே, 83

அமுரி விட்ட பின்பு மொரு படிதானுப்பு
வப்பனே பொடித்ததிலே கலக்கிப் போடு
கமுரி விட்டு மூடிவைத்தே யஞ்சா நாளிற்
கலங்காம லிறுத்ததனைத் தாழிக்குள்ளே
திமுர விட்டுக் கடைந்துடனே நுரைமேற்கட்டுஞ்
சிறக்க வொரு யகப்பை கொண்டு சேர்த்துப்போடு
நிமிர விட்டுக் கரத்தாலே யெடுத்தாயானால்
நிச்சயமாயறிந்து கொள் நீறாங்கைய்யே. 84

மிகவும் சுலபமான இன்னுமொரு வித்தையைக் கூறுகிறேன் கேள்! இரண்டுபடி பூனீரை எடுத்துக் கொண்டு அதில் ஆறுபடி அமுரியை வார்த்து அதனுடன் கற்சுண்ணம் ஒருபடி போட்டு நன்றாகக் கரைத்து மேலும் ஒருபடி அமுரிவிட்டு ஒரு படி கல்லுப்பை பொடித்துப் போட்டு நன்றாகக் கலக்கி ஐந்து நாள் அசையாமல் தெளிய வைத்து-தெளிந்த நீரை ஒரு தாழிக்குள் விட்டு நன்றாகக் கடைந்தால் நீரின் மேல் நுரை கட்டும். அந்த நுரையை ஒரு அகப்பைகொண்டு வழித்து எடுக்க வேண்டும். எந்தக் காரணத்தாலும் கையால் எடுக்கக் கூடாது. கையால் தொட்டால் நிச்சயமாய்க் கை வெந்து போய்விடும்.

கைவெந்தாப் போலப்பா சரக்குஞ் சாகும்
காட்டவொரு குருவேணுங் காணமாட்டான்
பைவந்த நுரை யெல்லாம் வாங்கி வாங்கிப்
பருவமுடன் பீங்கானுக்குள்ளே போடு
மெய்வந்த நுரை போக தண்ணீர் நிற்கும்
வெறுந் தண்ணீரதை யகல வீசிப் போடு
வய்வந்த நுரைக்குள்ளே போடுதற்கு
மறைகிறேன் மருந்து வகை யறைகிறேனே. 85

கை எவ்வாறு வெந்து போகுமோ அவ்வாறே சரக்கும் கெட்டுப் போகும் இதைக் காட்டுவதற்கு ஒரு குருவின் நல்ல துணை வேண்டும். நுரையை எல்லாம் ஒரு பீங்கானில் எடுத்து சேகரித்துக் கொண்டு அடியில் நிற்கும் வெறுந்தண்ணீரை வீசி எறிந்துவிட வேண்டும். சேகரித்து வைத்துக் கொண்ட நுரையில் போட வேண்டிய சரக்குகளை பற்றி கூறுகிறேன் கேள்!

வகையான சாரமது பலந்தான் பத்து
மாட்டுகையில் நெட்டேறிமண்டை வேகும்
பகையான வெண்காரம் பலந்தான் பத்து
பருவமுடன் வெடியுப்பு பலம தொன்று
தகையான வீரமது பலமி ரெண்டுந்
தனித்தனியே பலமொன்று மதனில் போட்டு
துகையான பலங்கேளு பத்து மஞ்சுஞ்
சூட்டியெல்லாங் கலக்கி யயுச்சட்டிவாரே. 86

வார்த்திதனை யடுப்பேற்றி யெரிநற்பாக
வற்றி யெல்லாங் குழம்பாக வருதல் கண்டு
கோர்த்திதனிற் சிங்கமென்ற துரிசியொன்று
கொட்டப்பா விராகன் ரெண்டாங் கொடிய சுண்ணம்
போர்த்திதனை வழித்து மொரு பீங்கானூட்டிப்
பொற் கொடிக்கு முன்வைத்துப் பூசைபண்ணி
ஆர்த்திதனை ரவியில் வைக்க மெழுகே யாகும்
அம்மம்மா வண்டமெல்லா மாடுந்தானே. 87

சாரம் பத்து பலம், வெண்காரம் பத்து பலம், வெடியுப்பு ஒரு பலம், (மற்ற சரக்குகளின் பெயரும், அளவும் சிதைந்துவிட்டன). ஆக ஐம்பது பலம் கொண்ட சரக்குகளையெல்லாம் கொட்டிக் கலக்கி அயச்செட்டியில் வார்த்து அடுப்பில் வைத்து நாலில் ஒன்றாக சுண்டவைத்து குழம்பு பதத்தில் துரிசு ஒரு பங்கு, கடுங்காரச் சுண்ணம் இரண்டு வராகன் சேர்த்து வழித்து பீங்கானில் பூசை செய்து வெப்பத்தில் வைத்தால் மெழுகாகும். இம்மெழுகால் அண்டமே அதிரும் (ஆடும்).

வீரக்கட்டு

ஆட்டுகிற மெழுகிலொரு காசு தூக்கி
யப்பனே வீரமிரு காசிலப்பு
நீட்டுகிற சீலை சுற்றி விளக்கில் வாட்டு
நிலைத்ததிலே சரிகை வெள்ளிபோலே நிற்கும்

பூட்டுகிற வீரமல்லாப் பரிச வேதைப்
புகழாக வெகுதூரம் போகும் போகும்
மூட்டுகிற பிலங்கேளு வீரத்திற்கு
முத்தமனே பறித்தகட்டைச் சுற்றி வாட்டே. 88

சுற்றதிலே தங்கத்தைச் சுழித்து வாங்குஞ்
சூட்சமிது துறைக்கெல்லாந் தாய்தான் சொன்னேன்
மற்றதிலே சிறு திடத்தில் தங்கஞ் சொல்வேன்
மருவியிதை மறவாதே வாட்டு தங்கம்
வித்தையிலே தங்கமில்லா வித்தை யுண்டோ
வேதாந்த மில்லாத ஞான முண்டோ
பத்தையிலே மவுனமில்லாப் பத்து முண்டோ
பருவமுடனிதை யறிந்து பாருபாரே. 89

மேற்படி மெழுகில் ஒரு காசெடை எடுத்து அதை இரு காசெடையுள்ள வீரத்தின் மேல் பூசி சீலை செய்து விளக்கில் வாட்டினால் வெள்ளி சரிகை போலிருக்கும். இவ்வீரத்தால் பரிசவேதை சித்தியாகும். மேலும் வீரத்திற்கு பலம் உண்டாக்கும் வகையைக் கூறுகிறேன் கேள்! வெள்ளிச் சரிகை போலிருக்கும் வீரத்தின் மேல் தங்கத்தகட்டை சுற்றி வாட்டினால் வீரம் தங்கத்தை தன்னுள்ளே வாங்கிக் கொள்ளும். இவ்வீரத் தங்கம் ரசவாத வித்தைக்கு தாயாகும். இத்தங்கத்தை எந்த லோகத்தில் தடவிவாட்டினாலும் தங்கமாகும். தங்கமில்லாத வித்தை வித்தையாகாது. (தங்கம் செய்ய முடியாத மருந்து மருந்தாகாது). வேதாந்தத்தை உணர்த்தாத ஞானம் ஞானமாகாது. மவுனத்தை அளிக்காத சமாதி சமாதியாகாது. (மவுனத்தைத் தவிர உலகத்தில் நமக்கு வேறுவித நண்பன் கிடையாது) இவை யாவற்றையும் முறையாக அறிந்துணர வேண்டும்.

அறிந்திந்த மெழுகாலே யறுபத்தாறு
மப்படியே வாட்டினால் மணிபோல் நிற்கும்
பிறிந்து நின்ற வுபரசங்கள் நூறுஞ் சத்தாம்
பேரான வண்டமெல்லாம் மெழுகாய் போகும்
கறிந்திந்த மைனவித்தைக் கெதுதானொப்புக்
கறையடங்கா வேதையுமாங் காயசித்தி
மறிந்த பிலமேதிதற் குயிரோ வென்றால்
மகத்தான சவுக்கார மெழுகுதானே. 90

மேற்கூறிய வீரமெழுகால் அறுபத்து நாலு சரக்கும் கட்டும். கட்டிய சரக்கை குகையிலிட்டு வாட்டினால் மணிபோல் கண் விட்டாடும். உபரசங்கள் நூறும் சத்தாகும். அண்டமெல்லாம் மெழுகாகும். இந்த மெழுகு வித்தைக்கு சமம் வேறு எதுவும் கிடையாது வேதை முதல் காயசித்தி வரை பலிதமாகும். இந்த மெழுகுக்கு சவுக்காரம்தான் உயிராகும்.

மெழுகான சவுக்காரத் துடனே வீரம்
விரவியப்பா நவலோகத் தூட்டிப் போட
சுளுகான சுண்ணமுமாங் குருவுமாகும்
தொடுமுன்னே சூதத்தைத் துடித்துக் கொல்லும்

மழுகாதே வடதுமெத்தப் போகு தென்றே
யறிந்துண்ண விச்சூதங் காயசித்தி
விழுகாதே பெண் மாய்கைப் பையிற்குள்ளே
வேதாந்த நூலை நித்தம் விரைந்துபாரே. 91

சவுக்காரத்துடன் வீரம் சேர்த்து நவலோகத்தில் தடவிப் புடம் போட்டால் சுண்ணம் முதல் குரு மருந்து வரை சித்தியாகும். இதனால் சூதம் சாகும். மடிந்த சூதத்தை உட்கொண்டால் காயசித்தி ஏற்படும். ஆனால் ஒரு காலும் பெண் மாய்கை என்ற பையினுள் சிக்காமல் அனுதினமும் வேதாந்த நூலை ஆராய வேண்டும்.

பாரப்பா சவுக்கார வித்தை யாதி
பராபரைக்குப் பரனன்று பகர்ந்த வாறு
நேரப்பா சவுக்கார முப்பே கண்டாய்
நினைவாகக் குருசெய்வா னிலைத்த வாதி
போரப்பா வெள்ளி பொன்னின்மலையைப் பண்ணு
புகழாக வீசனன்று பூசும் நீறு
ஆரப்பா விதையறிவார் சித்தர் காண்பார்
ஆகாகா வாதமிதிலடங்கிப் போச்சே. 92

இச் சவுக்கார வித்தையே ஆதி வித்தையாகும். இவ்வித்தையை முன்னொரு சமயம் சிவபெருமான் பார்வதிக்கு சொன்னார். சவுக்கார உப்பை குரு மருந்தாகச் செய்து கொண்டால் அனைத்துவித வாதமும் பலிதமாகும். இதுவே ஈசன் பூசும் திருநீறாகும். இதை சித்தர்களைத் தவிர மற்ற எவரும் அறிந்திருக்க மாட்டார்கள்.

அப்பிரக சுண்ணம்

அடங்காத அப்பிரகச் சுண்ணம் பண்ண
அறைகிறே னடவாக வப்பாகேளு
மடங்காதே யொன்றாலு மாத்தாள் நாதம்
வாதி என்றாலிதை யறிவார் மற்றோர்காணார்
முடங்காதே இதைப்பிடித்துக் காடிக்குள்ளே
மூட்டியதில் நெல்போட்டு ரெட்டுக்குள்ளே
துடங்காதே தேய்த்துவரக் கீழேவீழுஞ்
சுத்த நவநீதமிது துறையைக் கேளே. 93

அப்பிரகத்தை சுண்ணம் செய்யும் முறையைப் பற்றி கூறுகிறேன் கேள்! ஆயிநாதம் என்ற அப்பிரகத்தை காடிக்குள் அமிழ்த்தி நெல்லும் போட்டுத் தேய்த்தால் சுத்த நவநீதமாக வெண்ணை போல் கீழே விழும்.

கேளப்பா வாழையது கிழங்குச் சாறு
கெடியான வாடுதின்னாப் பாளைச் சாறும்
நீளப்பா வார்த்தரைத்து வில்லைதட்டி
நினைவாக யுலர்த்தி யதை யூதிப்போடு
தாளப்பா மணியுடனே மணத்தக்காளித்
தனிச்சாறா மிரண்டாலே யரைத்தேயூது
வேளப்பா விதனாலே விளங்க மாளும்
விரவியினி யூதுதற்கு மினி சொல்வேனே. 94

இந் நவநீதத்தை வாழைக்கிழங்கு சாற்றாலும, ஆடு தீண்டாப்பாளைச் சாற்றாலும் அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து குகையில் வைத்து ஊதினால் மணியாகும். அம்மணியுடன் மணித்தக்காளிச் சாறு சேர்த்து அரைத்து குகையில் வைத்து ஊதினால் அப்பிரகம் மடியும். மேலும் ஊதுமுறையைச் சொல்கிறேன் கேள்!

மேலான வெருக்கம்பால் படிதானொன்று
விட்டதிலே பத்தண்ட வெள்ளை நீரைக்
கோலாலே சுத்திவைத்து மிதிலேவாரு
குலாவி நன்றா யரைக்கும் போதின்னங்கேளு
மாலான தேவியிதில் நாலிற்கொன்று
மாட்டியரைத் தெடுத்துலர்த்தி யூதிப்போடு
சேலான வப்பிரேகம் வெளுக்குஞ் சற்றேத்
திரும்பியந்தப் பாலினா லரைத்து கட்டே. 95

கட்டியதோர் வில்லைதனை யூதிப்பின்புக்
கடுகியஞ்சுதர மரைத்தே யூதிப் பாலில்
ஒட்டியது கறுப்பாக விருந்துதானால்
உத்தமனே கற்சுண்ணங் கீழ்மேலிட்டுக்
கொட்டியதில் நீர்வார்த்து நீற்று நீற்றுக்
குன்றாமலன் பத்தோர் தடவை செய்யப்
பிட்டியதுபோல் வெளுப்பாயிருக்கும் பாரு
பேராகப் பின்பு செய்யும் பிரிவுகாணே. 96

மடிந்த அப்பிரக மணியுடன் எருக்கம்பால் ஒரு படியும் அண்ட வெள்ளை நீரையும் விட்டு அரைக்க வேண்டும். அரைக்கும் சமயத்தில் நாலில் ஒரு பங்கு துருசை சேர்த்து அரைத்து உலர்த்திக் கொண்டு குகையில் வைத்து ஊதினால் அப்பிரகம் சற்று வெளுக்கும் மீண்டும் முன் போல் பால்விட்டு அரைத்து குகையில் வைத்து ஊத வேண்டும். இவ்வாறு ஐந்து முறை அரைத்து ஊதினால் அப்பிரகம் வெளுத்த நிறங்கொள்ளும். இப்படி செய்தும் அப்பிரகம் கறுப்பாக இருந்தால் ஒரு கலயத்தில் கல் சுண்ணத்தைப் பாதி வரை போட்டு அதன்மேல் அப்பிரகத்தை வைத்து மேலும் சுண்ணத்தைப் போட்டு நீரை வார்த்து நீற்ற வேண்டும். இதுபோல் ஐம்பத்தொரு முறை செய்தால் நன்றாக வெளுத்த நிறங்கொள்ளும்.

காணப்பா விவ்வெடைக்கு எட்டிலொன்று
கடுகியதிற் சவுக்காரச் சுண்ணம் போட்டு
பூணப்பா சுண்ணநீர் விட்டே யாட்டிக்
கழகாக வூதிடவே வெளுப்பாஞ் சுண்ணம்
வீணப்பா மற்றதெல்லா மிதற்குமீடோ
வெள்ளி முதல் பொன்னாகும் லோகசித்தித்
தாணப்பா விவ்வெடைக்குச் சாரம் போட்டுச்
சுகமாக முலைப்பாலை யூற்றி யாட்டே. 97

வெளுத்த அப்பிரகத்தின் எடைக்கு எட்டிலொன்று சவுக்காரச் சுண்ணத்தைப் போட்டு சுண்ணநீர் விட்டு அரைத்து உலர வைத்து குகையில் வைத்து ஊதினால் வெளுப்பான சுண்ணம் கிட்டும். இந்த சுண்ணத்திற்கு ஈடு எதுவும் கிடையாது.

இச்சுண்ணத்தால் வெள்ளி முதல் எல்லா லோகமும் பொன்னாகும். இச்சுண்ணத்தின் எடைக்கு சாரம் (நவச்சாரம்) சேர்த்து முலைப்பால் விட்டரைத்து,

ஆட்டுகையிற் சவ்வீரங் கூடப்போட்டே
யதிலிங்கம் வெள்ளையுடன் பூரங்காரம்
நீட்டுகையி லின்னாலிற் பூசிவாட்டு
நிமிஷத்தில் நாலுமங்கே விரைத்துப் போகும்
கூட்டுகையி லின்னாலும் வராகன் நாலு
கொள்கி யிதிலெருக்கம் பால் குத்தியாட்டிப்
பூட்டுகையில் வங்கமது பலந்தான் ரெண்டிற்
புகழாகப் பூசியிதை யுலரப்போடே. 98

அரைக்கும்பொழுது சவ்வீரமும் சேர்த்து அரைத்து லிங்கம், வெள்ளை, (வெள்ளை பாஷாணம்) பூரம், காரம் இவை நான்கின் மேல் பூசி வாட்டினால் ஒரு நிமிஷத்தில் நால்வகை சரக்கும் கட்டிப் போகும். கட்டிய இச்சரக்கில் வகைக்கு ஒரு வராகன் எடுத்து எருக்கம்பால் விட்டு அரைத்து இரண்டு பலம் வங்கத்தின் மேல் பூசி உலரப் போட்டு.

உலர்ந்ததன்மே லப்பிரேகச் சுண்ணம்பூசு
வுத்தமனே சீலைசுற்றிப் புடத்தைப்போட
வலர்ந்ததுவும் வங்கமப்பா சுண்ணமாகும்
ஆகாகா விதைக்காட்டச் சூதஞ்சாகும்
மலர்ந்துதப்பா வாதமென்ற மலராங்கஞ்சம்
வாய்திறந்து போகாது வழியோ மெத்தக்
கலந்துதப்பா சூதமென்ற யானைகட்டக்
கடுநெகிழ்தங் கடுநெகிழ்தங் கண்டிடாயே. 99

அதன்மேல் அப்பிரகச் சுண்ணத்தையும் பூசி, சீலை சுற்றி புடம் போட்டால் வங்கமானது நீறிச் சுண்ணமாகும். இச்சுண்ணத்தை சூதத்தின் மேலிட்டால் சூதம் சாகும். இதனால் வாதம் என்று தாமரை புஷ்பமாகும்.

கண்டுநீ சூதத்திற் வங்கச்சுண்ணங்
காட்டு முன்னே தயிராகுங் கல்லுமாகும்
மொன்றுநீ காரமிட்டு வுருக்கவாடும்
ஓகோகோ வாச்சரிய மென்தாய் சொன்னாள்
பாண்டிடவே யிதில்ரெண்டு வித்தை சொல்வேன்
பறக்கும் ரசகுளிகை சொல்வேன் பரிசஞ் சொல்வேன்
ஆண்டிடவே பூரணத்தில் வழியுஞ் சொல்வேன்
ஆயிதன் நாதவித்தை யதிகந்தானே. 100

சூதத்தில் வங்கச் சுண்ணத்தை சேர்த்தால் சூதம் தயிராகி மேலும் அது கட்டி கல்லுமாகும். கட்டிய சூதத்துடன் காரம் சேர்த்து உருக்கினால் மணிப்போல் கண்விட்டாடும். இவ்வாச்சரியமான வித்தையை தாயார் எனக்கு சொன்னாள். இந்த சூதமணியில் இரண்டு வகையான வித்தை கைகூடும். ஒன்று பரக்கும் ரசக்குளிகை மற்றொன்று பரிச வேதையாகும். இவையாவும் ஆயிநாதமான அப்பிரகத்தின் மகிமையாகும் (இன்னும் இதனால் அனேக வித்தை கைகூடும்)

ரசிதச் சுண்ணம்

அதிகமென்று மீசனன்று சொன்னார் சொன்னார்
ராயியிதைக் கேட்டெனக்கு மருளிச்செய்தாள்
பதிகமென்ற விச்சூத மொன்றுக்குள்ளே
பாச்சப்பா மூன்றுவெள்ளிப் பண்பாய்வாங்கி
மதிகமென்ற புழுகோடு வீரம்பூசி
மகத்தான சுண்ணமென்ற குகையில் வைத்து
விதிகமென்ற புடம்போட வெள்ளிச் சுண்ணம்
வேதை யெங்கே வங்கத்தில் நூற்றுக்கொன்றே. 101

ஒன்றான வெள்ளியப்பா மாற்றைக் கேளு
வோகோகோ பதினாறு பதினெட்டாகுந்
தன்றான நவலோகம் பற்றுப் பற்றுந்
......................து வெள்ளியது சார்ந்து பாரு
கன்றான சூதத்தை வெள்ளி..............................
கண்டோர்கள் சிரிப்பார்கள் கடந்து சொல்வேன்
......................பொன்னாகாட்டால்
வாயேது கையேது வரி............................(வரிசை காணே) 102

இவ்வித்தையை ஈசனான சிவபெருமான் முன்னொரு சமயம் பார்வதிக்கு சொன்னார். தாயான பார்வதிதேவி எனக்கு சொல்லித் தந்தாள். முன் சொன்ன சூதமணியில் ஒரு பலம் எடுத்து அதனுடன் மூன்று பங்கு வெள்ளி சேர்த்து புனுகையும் வீரத்தையும் பூசி பஞ்ச சுண்ணக் குகையில் வைத்து புடம் போட்டால் வெள்ளிச் சுண்ணமாகும். இச்சுண்ணத்தை வங்கத்தில் நூற்றுக்கு ஒன்று தாக்கினால் பதினாறு முதல் பதினெட்டு மாற்றுள்ள பொன் கிட்டும். இச்சுண்ணம் நவலோகத்தைப் பற்றும், இந்த சூதிவெள்ளியால் நவலோகமும் பொன்னாகும். இதை கண்டவர்கள் ஆச்சரியம் அடைவார்கள் (சில வரிகள் சிதைந்து விட்டன ஆகையால் பொருள் தெரியவில்லை)

தங்கச் சுண்ணம்

வரிசையுடனிச் சூதம் வராகனொன்று
மருவி நின்று முருகையிலே மூன்று தங்கம்
பரிசையுடன் கொடுத் தொன்றாய் வாங்கிக்கொண்டு
பருவமுடன் சவ்வீரம் பூரஞ் சூதம்
அரிசையுடன் புழுகோடு நாலும் பூசி
யமர்த்தி யஞ்சு சுண்ணமென்ற குகையில் வைத்து
கரிசையுடன் புடம் போடு தங்கச் சுண்ணம்
கை கடந்த மாற்றாகுங் கனிவாய் பாரே. 103

கனிவான குருவோடு வீரங் கூட்டிக்
கலந்தப்புத் துருசியின்மேல் கண்ட(ர்) வெள்ளை
யினிவான துருசி வெள்ளை வீரத்திற்கு
யெட்டி லொன்று பூசியதை வாட்டு வாட்டு
முனிவான வீரமது வயிரம் போலாம்
மூட்டு நவலோக முன்னூறுக் கொன்று
பனியான பறிக்குருவை சூதத்தூட்ட
படுமுன்னே ரசயானை பட்டவாறே. 104

முன் செய்த சூதத்தை (வங்கச் சுண்ணத்தால் கட்டிய சூதத்தை) ஒரு வராகன் எடை எடுத்து குகையிலிட்டு உருக்கி அதனுடன் மூன்று வராகன் எடையுள்ள தங்கத்தை சேர்த்து ஒன்றாக உருக்கி அதன்மேல் சவ்வீரம், பூரம், சூதம், புனுகு, இவை நாலையும் பூசி புடம் போட்டால் தங்கம் சுண்ணமாகும் இச்சுண்ணத்துடன் வீரம் சேர்த்து துருசின் மேல் பூசி புடம் போட்டால் துருசு வெளுத்து சுண்ணமாகும், இத்துருசுச் சுண்ணத்தை வீரத்தின் மேல் பூசி வாட்டினால் வீரம் வயிரம்போல் இறுகிக் கட்டும். இவ்வீரத்தை நவலோகங்களில் முந்நூருக்கும் ஒரு பங்கு சேர்த்துருக்கினால் தங்கமாகும். தங்கச் சுண்ணத்தை சூதமான இரசத்துடன் சேர்த்தால் இரசமானது கட்டும்.

பட்டு நின்ற மதயானை யுருகும்போது
பற்றுக்கு மஞ்சிலே தங்கம் போட்டு
கட்டு நின்ற வப்பிரேகச்சத்து மூன்று
கலந்தொன்றா யுருகையிலே காட்டு கெந்தி
மட்டு நின்றா யிவ்வெடைக்கு மூன்று கெந்தி
வாகாக வயக்குப்பிக் குள்ளேயிட்டு
விட்டு நன்றாய் வாலுகை யிற்றினந்தான் மூன்று
விடாமலெரி செந்தூரம் விளங்குந் தானே. 105

விளங்குகின்ற செந்தூரம் பணந்தா னொன்று
விடாமலுண்ணு மண்டலத்தில் மேனி பொன்னாம்
மளங்குகின்ற சூதத்திற் சாரணை யைத்தீரு
வாகாக கேசரசத்தி லாடலாகும்
பிளங்குகின்ற செந்தூரம் நூற்றுக் கொன்று
பேதித்து நவலோகம் பெருத்த பொன்னாம்
வளங்குகின்ற முறையிது தானாயினாதம்
வளமான பரிசனத்தை மகிழ்ந்து கேளே. 106

கட்டின ரசத்தை குகையிலிட்டு உருக்கி அதனுடன் ஐந்தில் ஒரு பங்கு தங்கமும் மூன்று பங்கு அப்பிரக சத்தையும் சேர்த்துருக்கி இவ்வெடைக்கு மூன்று பங்கு கெந்தி சேர்த்து இரும்புக் குப்பியில் வைத்து மூடி வாலுகையில் வைத்து, விடாமல் மூன்று நாட்கள் தொடர்ந்து எரித்தால் செந்தூரமாகும். இச்செந்தூரத்தை தினமும் பணஎடை எடுத்து ஒரு மண்டலம் உட்கொண்டால் தேகமானது பொன்போல் பிரகாசிக்கும். தங்கச் சுண்ணம் சேர்த்து கட்டின சூதத்திற்கு சாரணை தீர்த்தால் கேசரத்தில் ஓடலாம். மேற்கூறிய செந்தூரத்தை நூற்றுக்கு ஒரு பங்கு நவலோகத்தில் இட்டு உருக்கினால் நவலோகம் பொன்னாகும். இவையாவும் ஆயிநாதமான அப்பிரகத்தின் செயலால் விளைந்தவைகளாகும்.

கவுரி சுத்தி

கேளப்பா கவுரியது பலந்தானஞ்சு
கெடியான பாண்டத்தில் போடு நீயும்
வேளப்பா வமுரி யொரு படிதான் வாரு
விளங்கியதோர் பழச்சாறு மதிலே பாதி
தாளப்பா வெடியுப்பு கல்லுப்போடு
தனிச்சீன மொன்று முப்பலமே போடு
வாளப்பா விதைக் கலக்கி கொதிக்க வைத்தே
யதனோடு பிரட்டி மெள்ள வறுத்து வாங்கே. 107

ஐந்து பலம் கவுரியை எடுத்து அதை அடிகனத்த பாண்டத்திலிட்டு அமுரி ஒரு படியும், பழச்சாறு அரைப்படியும் வார்த்து அதனுடன் வெடியுப்பு, கல்லுப்பு, சீனம் இவை மூன்றையும் வகைக்கு மூன்று பலம் போட்டு கலக்கி கொதிக்க வைத்து அப்படியே எடுத்து வறுத்து வாங்கி,

வாங்கி யிந்தப் பலகை யெல்லாந் துடைத்துபோட்டு
வளமான வெடியுப்புச் சீனமுப்புத்
தாங்கி மெள்ள அரைத்து மிதைப் பூசிப் பூசி
தகித்த தொரு கரியோட்டில் வாட்டுவாட்டு
வோங்கி யிந்தப்ப..............................ளே நாகங்காணும்
முத்தமனே விதை பற்றி வுரைப்போ............
..........................யிந்தப் பலகை யொன்று சூதமொன்று
சேர்ந்தப...சேரு சேரே. 108

அதை நன்றாக துடைத்து வைத்துக் கொண்டு வெடியுப்புச் சீனத்தை நன்றாக அரைத்து அதை கவுரியின் மேல் பூசி கரியோட்டில் வைத்து வாட்டவேண்டும். (இதற்குமேல் பாடல் சிதைந்து விட்டதால் பொருள் விளங்கவில்லை.)

(109 பாடல் முதல் 130 ஆம் பாடல் வரை ஏட்டில் சிதைந்து விட்டன)

ஞானம்

காண வென்றா லென்னூலைக் கருதிப்பாரு
கையறியாமிலேச் சருக்குங் காணுங்காணுந்
தோண வென்றாற் றோணாது நாயன் சொன்ன
திருமந்திரத்திலையோ தொழிலோ மெத்தப்
பூண வென்றாற் பூணாது மற்ற நூல்கள்
புகழறிந்த பெரியோர்க்குப் போக்குத்தோணும்
மூண வென்றால் நிலையாது சிவன் சொல்லப்பா
வுத்தமித்தாய் விடுவித்த முரைத்தவாறே. 131

அனைத்தையும் செய்து பார்க்க வேண்டும் என்றால் முறையாக என் நூலைப் பார். இதிலுள்ள எல்லா விஷயங்களும் மிலேச்சர்களுக்கும் புரியும். இதைத் தவிர திருமூலர் எழுதிய நூலில் அதிக விஷயங்கள் உள்ளன. ஆனால் அதைப் புரிந்துக் கொள்வது மிகவும் கடினம். மற்ற சித்தர்கள் எழுதிய நூல்களும் அவ்வாறேயாகும். என் நூலைத்தவிர மற்ற நூல்களைப் புரிந்துகொள்ள விஷயம் அறிந்த பெரியோர்களால்தான் முடியும். நான் எழுதிய அனைத்து விஷயங்களும் சிவனிடமிருந்து பார்வதி தேவி அறிந்து சொன்னதாகும்.

உரைத்தமொழி கேட்டு நித்த மூலத்துள்ளே
யொன் றொன்றாய்ப் பார்த்து நித்தமுறைத்துக் கண்டு
நிரைத்தந்த வினத்தோடே வரிசையோடே
நிறை நிறையாய்ப் பாடுகிறேன் நினைவாய்ப்பாரு
கரைத்த புளிக் குளம்பாகுமிந்த நூல்தான்
காணாத நூல்க ளெல்லா மிதுக்குட் சக்கை
நரைத்த தலைகறுப்பாகும் மேனி பொன்னாம்
நாதாந்தம் வேதாந்த,,் நூல்தான் காணே. 132

தேவி கூறியதைக் கேட்டு அநுதினமும் மூலத்தில் மனதை வைத்து நன்றாக அறிந்துகொண்டு ஒரு வார்த்தையும் விடாமல் மிகவும் வினையத்தோடும் வரிசையாகவும் இந்நூலில் பாடி வைத்துள்ளேன். இந்நூல் கரைத்த புளிக்குழம்புக்கு சமமாகும். மற்ற நூல்களெல்லாம் புளிகரைத்தபின் மீதியுள்ள சக்கைக்கு சமமாகும். இந்நூலில் சொல்லியுள்ள முறைகளை சரியாகச் செய்து உட்கொண்டால் நரைத்த மயிர் கறுக்கும். தேகமானது பொன்போல் மின்னும்.

நாலாக வெளியினுள்ளே நின்ற சோதி
நாட்டியதைப் பாரு வாத சித்திக்
கோலாக வொன்றொன் றாய்க் கடந்து கூடும்
கொள்கியதோ ரொன்றா னவரையினுள்ளே
சேலான கண்ணுடைய மணித்தாயப்பா
சேர்ந்திருந்த கொலுக்காணக் கண்ணுண்டோ சொல்
மேலான பதமிதுதா னடுக்காய்ச் சென்றால்
வேதாந்த முடிவான வெளியுமாச்சே. 133

பரிவெளியில் நின்று பிரகாசிக்கும் ஜோதியில் மனதை வைத்து தியானித்தால் வாதம் சித்தியாகும். நாலான வெளியில் நின்று பிரகாசிக்கும் ஜோதியை ஒவ்வொரு அறையாகத் தாண்டிச் சென்று அதனுடன் மனதால் கூடி நிற்கவேண்டும். முதல் வரையில் மீனைப் போன்ற கண்ணுடையதாய் கொலுவிருப்பாள். இது கண் கொள்ளாக் காட்சியாகும். அடுக்கடுக்காயுள்ள அறைகளைத் தாண்டிச் சென்றால் வேதாந்தப் பரிவெளியில் கலக்கலாகும்.

வெளி யென்றாலிரண்டு வெளியல்லக் கேளு
வேதாந்த வுன்ம..................ஒளி விளக்காய் நின்றாள்
ளொளி யென்றா லொளியுமல்ல......................
(மற்ற வரிகள் பாடலில் சிதைந்துவிட்டன.) 134

................................மைந்தா கேளு
மற்றதெல்லாரு.......................................
பூண்டதுவே மனமென்றாற் போக்கும்
...............................கூத்தாம்பொல்லா மாய்கை
காண்டதுவே...............................சொன்னேன்
கண்டபடிவாத நூற்கருவுஞ் சொன்னேன்
னாண்டதுவே யிந்த முறைக்கேற்குமப்பா
வாச்சரிய.........................முகமாங் குருவினாட்டே. 135

(134ஆம் பாடலும்- 135 ஆம் பாடலும் சிதைந்து விட்டதால் பொருள் விளங்கவில்லை.

சார செயநீர்

ஆட்டுதற்கு மூஞ்சல் வைக்க செயநீர் சொல்வேன்
அப்பனே யிதுவுமுற்றற் கிளிஞ்சில் வாங்கி
மாட்டுதற்குச் சுண்ணாம்பைக் கரைத்து நீயும்
வாகாக வுவரு மண்ணையதிலே போட்டு

மூட்டுதற்குக் கிளிஞ்சிலிட்டே யெரிநாற்சாமம்
முத்து போற் சிப்பியுமாங் கிளிஞ்சிலெல்லாம்
ஊட்டுதற்கு மிதையிடித்து வடித்துக் கொண்டு
வுத்தமனே யெண் பலந்தான் தூக்கி வையே. 136

தூக்கி யிந்த வெடைசார மிதிலே போட்டுத்
துவளவரை நெட்டெழும்பு மட்டும் நீதான்
தேக்கி யிதை பீங்கானி லெடுத்து வைப்பாய்த்
தினமேழு கடந்த பின்பு செய்யக் கேளு
வாக்கியமாம் வெண்காரம் பலந்தானொன்று
வாருருக்குக் குகையினுள்ளே மாவைப் போட்டுப்
பாக்கிய மாஞ் சாரமிதில் நின்றே யாடும்
பருவமுடன் குகையுடைத்து பண்பாய் வாங்கே. 137

ரசவாதம் என்ற ஊஞ்சல் வைக்க செயநீர் ஒன்று சொல்கிறேன் கேள்! நீரில் சுண்ணாம்பைக் கரைத்துப் பின் அந்நீரில் உவர் மண்ணைக் கரைத்து அதில் முத்திய கிளிஞ்சலைப் போட்டு நான்கு சாமம் எரித்தால் சிப்பி வெளுத்து முத்துப் போல் பிரகாசிக்கும். அந்தச் சிப்பியை இடித்து தூள்செய்து எட்டு பலம் எடுத்துக் கொண்டு அந்த எடைக்குச் சமமாக சாரத்தைச் சேர்த்து நன்றாக அரைத்து பீங்கானில் வைத்துக் கொள்ளவும். ஏழு நாள் சென்ற பிறகு வெண்காரம் ஒரு பாலம் பொடி செய்து உருக்குக் குகைக்குள் வெண்கார மாவைத்தூவி மேற்படி சாரத்தையிட்டு உருக்கினால் சாரம் குகைக்குள் உருகி நின்றாடும். இதைப் பத்திரப்படுத்திக் கொண்டு,

வாங்கி யிந்த சாரவட்டை வைத்துக் கொண்டு
வரிசைசொல் வேனிதன் மேலே மைந்தா கேளு
தாங்கி யிந்தச் சாரவட்டுப் பலந்தானாலு
தன்னி லொக்க வெடியுப்பு பலந்தானாலு
வோங்கி யிதைப் பொடிப்பண்ணி யோட்டிலிட்டு
வுத்தமனே யடுப்பெரிக்க யுருகி நீராம்
பாங்கி சைந்த வெள்ளையிதிற் பலந்தானாலு
பருவமுடன் பொடிப் பொடியாய் பண்ணித்தூவே. 138

தூவவே புகையாமலிறுக்கிக் கொண்டு
சோளம் போற்பொரிந் திருக்குமங்கங்கேதான்
பாவவே நமுத்த பின்பு வேறே வேறே
பருவமுடன் பலமூன்று பொரிந்த வெள்ளை
காவவே..........................வெடியுப்பப்பா
கலங்காதே சாரவட்டுப் பலமு மூன்று
....
.... 139

வெடியுப்பு நாலு பலம் எடுத்து அதனுடன் மேற்சித்தப்படுத்திக் கொண்ட சாரவட்டிலிருந்து நாலு பலம் எடுத்துக் கொண்டு இரண்டையும் பொடி செய்து ஓட்டிலிட்டு எரித்தால் உருகி நீராகும். இதனுடன் வெள்ளைப் பாஷாணம் நாலு பலம் பொடி செய்து தூவி குகையிலிட்டு உறுக்கினால் சோளம் போல் பொரியும். மீண்டும் முன் போல் மூன்று பலம் பொரித்து (இதற்கு மேல் பாடல் சிதைந்து விட்டது.)

140 ஆம் பாடல் முழுமையாக மூலத்தில் சிதைந்து விட்டது.

ஆமப்பா முந்தின தோர் சாரவட்டு
மதுக் கொண்டு
தாமப்பா வேளையது பொரிதானாலு
சாந்தப்வச்சாரம் பலந்தனாலு
வோமப்பா விவைமூன்றுங் கூட்டியாட்டி
உத்தமனே மெழுகாகுமுண விலே தான்
சோமப்பா சாரமது பலந்தான் பத்திற்
சித்கெனவே யப்பியதில் வளமாய் செய்யே. 141

செய்வதுதான் வளையலினால் சீலையொன்று
சிறக்க வொரு குகைக்குள்ளே கிளிஞ்சி நீறு
கைவதுதான் கவசமொடு மதிலேவைத்துக்
காணவதின் மேற் கிளிஞ்சிலது சாம்பற்போட்டு
கொய்வதுதான் சில்லிட்டுச் சீலைசெய்து
குழிவெட்டி முப்பதெருக் குள்ளேபோடு
வைவதுதான் சாரமுள்ளே யுருகியப்பா
யானையது தந்தம் போலாகுங் கட்டே. 142

சாரவட்டு பத்து பலம் எடுத்துக் கொண்டு இதனுடன் பொரிகாரம், சாரம் இவை மூன்றையும் வகைக்கு நாலு பலம் எடுத்துக் கொண்டு (ஒரு சரக்கு பாட்டில் விடுபட்டுள்ளது அது என்ன சரக்கு என அறிய முடியவில்லை) மெழுகு பதமாகும் வரை அரைத்து பத்து பலம் சாரத்தின் மேல் அப்பி வளையல் உப்பினால் சீலை செய்து ஒரு குகைக்குள் கிளிஞ்சல் சுண்ணத்தைப் போட்டு அதன்மேல் சீலை செய்த சாரத்தை வைத்து மேலும் அதன்மேல் கிளிஞ்சல் சுண்ணம் போட்டு சில்லால் மூடி சீலைசெய்து பூமியில் ஒரு முழம் குழிதோண்டி அதனுள் முப்பது எரு அடுக்கி புடம் போட்டால் சாரம் இறுகி தந்தம் போல் கட்டியிருக்கும். (சாரம் கட்டும்) (பாடல் 141 ல் 4ஆம் வரியில் உள்ள சரக்கு நவச்சாரமா அல்லது எவச்சாரமா என்று தெரியவில்லை. ஏனெனில் அவ்வரியில் எழுத்துக்கள் சிதைந்து விட்டன.)

கட்டென்றா லிதுகட்டுச் சாரமப்பா
சகியாது யொரு நாளுங் கடினமெத்த
வொட்டென்ற கவச முடனொறுக்கி வைத்தே
யுத்தமனே யரைத் தரைத்துப் பனியில் வைப்பாய்
தொட்டென்ற செயநீரா மிதற்குப் பேரு
சொல்லாதே யொருவருடன் சுறுக்குமெத்த
பட்டென்ற வூசலப்பா விதினாலாச்சுப்
பாரப்பா மூல குரு பாடினாரே. 143

கட்டென்றால் இதுதான் முறையான கட்டாகும். கட்டிய இந்த சாரமானது ஒரு நாளும் கசிவு ஏற்படாது புடம் போட்டு ஆறிய பின் சாரத்தை கவசமொடு சேர்த்துப் பொடித்து பீங்கானிலிட்டு பனியில் வைத்தால் செயநீராகும். சுறுக்கு முறையான இந்த செயநீர் முறையை எவருக்கும் சொல்லாமல் ஊஞ்சல் வித்தை செய்தால் பலிதமாகும். இம்முறை திருமூலர் தன்னுடைய நூலிலும் கூறியுள்ளார்.

ஊஞ்சற்சார செயநீரில் நாககத்தி

பாடுகின்ற னூஞ்சலை யான் விரித்து நன்றாய்ப்
பருவமுட ன் புடமெரிப்புப் பண்பாய்க் கேளு
மாடுகிறேன் (ச) தம்பலச்சார் பழச்சாறொன்று
மடவாகத் தாம்பூலச் சாற்றிற் பத்து
நாடுகிறேன் பழச்சாற்றில் கல்லுப்போடு
நலமான வெடியுப்புச் சீனாக்காரம்
மூடுகிறேன் சாரமொடு நாலுங்கேளு
வுத்தமனே வகைக்குமரைப் பலமுங் கூட்டே. 144

கூட்டியிதைப் பழச்சாற்றிற் பலமுங் கொண்டு
கொட்டயி...................ந்தை யுருக்கி நீயும்
மாட்டியிதிற் பதி னொன்றுந் தீர்ந்த பின்பு 145

(145-146 ஆம் பாடல்கள் சிதைந்து விட்டன.)

ஊஞ்சல் முறையை புடபாகம் மற்றும் எரிப்பு பாகத்துடன் கூறுகிறேன் கேள்! எலுமிச்சம் பழச்சாறு படி ஒன்றும் தாம்பூலச்சாறு படி பத்தும் எடுத்துக்கொண்டு பின்னர் கல்லுப்பு. வெடியுப்பு, சீனாக்காரம், சாரம் இவை நான்கையும் வகைக்கு அரை பலம் எடுத்து பழச்சாற்றில் போட்டு கரைத்துக்கொண்டு (இதற்கு மேல் அதாவது 145 ஆம் பாடல் மூன்றாம் வரி முதல் 146 முடிவு வரை சிதைந்து விட்டன.)

ஆமப்பா மறுநாள் முன்புடத்திற் சாரம்
மதிப்போடு ரெண்டு பல மாட்டு மாட்டு
சாமப்பா நாகமதிற் சாயங் காலந்
தன்னி லொரு காசெடைதான் வீரம்போடு
வோமப்பா மூன்று நாள் பலமே சார
மொக்கவிட்டே யாட்டிடுவாய் நாலுசாமம்
நாமப்பா விதையிறுத்து நாக ரசம் வாங்கி
நலம் பெறவே சட்டியிட்டுப் பதங்க மேற்றே. 147

மறுநாள் முன் புடத்தின் சாரத்தை இரண்டு பலம் மாட்ட வேண்டும். (முன் பாடல் சிதைந்து விட்டதால் முழுமையான பொருளை புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகையால் சாரத்தை எதனுடன் மாட்ட வேண்டும் என்று தெரியவில்லை) மாலையில் நாகத்தில் காசெடை வீரம் போட்டு மூன்று நாள் பலம் சாரத்தைச் சேர்த்து நான்கு சாமம் அரைத்து நன்றாக இறுத்து நாகரசம் வாங்கிக் கொண்டு சட்டியிலிட்டு பதங்கமேற்ற வேண்டும். (ஒவ்வொரு நாளும் ஒரு பலம் சாரம் சேர்த்து நாள் ஒன்றுக்கு நான்கு சாமமரைத்து ரசம் வாங்க வேண்டும்).

ஏற்றியிந்த ரசத்தெடைக்கு நாகஞ்சேர்த்தே
யியல்பாகப் பொடி செய்து வைத்துக்கொண்டு
மாற்றியிந்தச் சூதமெடை வீரம் போட்டு
மருவியெல்லாம் வெங்குழலி லிட்டுக் கொண்டு
தோற்றியிதிலே முது(ள்)ளி மேனிச் சாறும்
சுழலவிட்டு வாயடைத்து சுற்றிச்சீலை
ஆற்றியிதை நெல்விட்டு வேக வைத்து
யதின் பிறகு வாங்கியிதை கல்வத்தூட் டே... 148

பதங்கமேற்றிய ரசத்தினெடைக்கு நாகம் சேர்த்து பொடி செய்து வைத்துக்கொண்டு ரசத்தி னெடைக்கு சமமாக வீரம் போட்டு இவையாவற்றையும் வெங்குழலி லிட்டுக் கொண்டு ஏழு துளி குப்பை மேனிச்சாற்றை சேர்த்து குழலின் வாயை அடைத்து சீலைசெய்து நெல்லுக்குள்ளிட்டு வேக வைத்தெடுத்து கல்வத்திலிட்டுக் கொண்டு

ஊட்டியிதின் மேல் வீரம் பலந்தான் தூவு
வுத்தமனே குழகுழத்து ரசம் வேறாகும்
பூட்டியிதைக் காட்ட லகுக் குழலிலிட்டுப்
புகழாக நெல்லோடே புழுக்கிப் போடு
வாட்டி யிந்த ரசம் வாங்கு மூஞ்சலுக்கு
வப்பனே நாகரச மென்று பேரு
நீட்டியிதைப் பலமொன்றே யண்டவோட்டில்
நிலைக்கவொரு சீலைசுற்று மண்டத்திற்கே. 149

அதனுடன் வீரம் ஒரு பலம் தூவி இழைத்தால் குழகுழத்து ரசமாகும். இந்த ரசத்தை குழலிலிட்டு நெல்லோடு சேர்த்து புழுங்க வைத்து ரசத்தை வாங்கிக் கொள். இதற்கு நாக ரசம் என்று பெயராகும். (இது ஊஞ்சலுக்கு மிகவும் அவசியமாகும்). ஒரு பலம் அண்ட ஓட்டிற்கு சீலை சுற்றி,

அண்டத்தி லிந்த ரசம் வார்த்து நீயும்
மடவாகத் தந்தி கொண்டே யுரிபோற்கட்டி
மண்டுற்ற சங்கிலியை யிதற்குள்ளே மாட்டி
மாநட்டு விட்டமிட்டு வூஞ்சற் றூக்கித்
தண்டுற்ற யண்டமொன்று மிப்படியே தூக்கித்
தனக்குள்ளே காற்பலந்தான் வீரமிட்டு
பண்டுற்ற வூஞ்சல் ரெண்டு மொன்றாய்த் தூக்கி
பருவமுட னிருபதெருவிற் புடத்தைப் போடே.. 150

புடத்துமே லூஞ்சல் நின்றே யாடும் போது
புகழான செயநீரை ரெண்டில் வாரு
வடத்துமேல் தீயேறி வற்ற வற்ற
வப்பனே வார்த்து வரச் செயநீர்தன்னை
கடத்துமே புடமொன்று தீர்ந்த பின்பு
கலந்திந்தப் படிபோடு மிருபத் தொன்று
தடத்துமேல் நாகரசஞ் செயமுமாகும்
தப்பாது வீரமங்கே மெழு குமாமே. 151

அதனுள் நாகரசம் ஒரு பலம் வார்த்து தந்திக் கம்பிகள் கொண்டு உரிபோல் கட்டி அதை சங்கிலி கொண்டு பிணைத்து விட்டமிட்டு ஊஞ்சலாக கட்டி, பின்னர் அண்டத்தை எடுத்து, அதனுள் கால் பலம் வீரம் போட்டு முன்போல் (நாக ரசத்தை செய்ததுபோல்) ஊஞ்சலாக கட்டி இரண்டையும் சேர்த்து இருபது எருவில் புடத்தைப் போடவேண்டும். புடம் போடுகின்ற சமயத்தில் (தீமூட்டிய பிறகு) இரண்டிலும் செயநீரை வார்த்து பின்பு சூடேறி செயநீர் வற்ற வற்ற மீண்டும் மீண்டும் செயநீரை வார்க்க வேண்டும். புடம் முடிவடைந்த பிறகு மீண்டும் முன்போல் இருபத்தோர் முறை புடம் போட்டால் நாகரசம் செயமாகி வீரம் மெழுகாகும்.

மெழுகான வெண்ணெய் தனையெடுத் துக்கொண்டு
மேல்மூடு சவ்வீர மெழுகுமேலே
கழுகான வெய்யிலிலே போடுபோடு
கைமுறையாய் கரியோட்டிற்குள்ளே வாட்டு
சுழுகான சூதமதில ரும்பிக் காணுஞ்
சுத்தரச மாகுமட்டுஞ் சுழலவாட்டு
வழுகாதே வாதமெங்கே யென்றே யேங்கி
யடங்காத வேதையிதி லாடலாமே. 152

(சவ்) வீர மெழுகை எடுத்து இதன் மேல் (நாகரச) வெண்ணையை பூசி வெய்யிலிலிட்டு உலர்த்தி கரியோட்டிற்குள் வைத்து வாட்டினால் சூதமானது அரும்பிக்காணும். முழுமையாக சுத்தரசமாகுவரை சுழல வாட்டினால் வாதம் எங்கே என்று ஏங்கி தவிக்காமல் வேதைத் தொழில் செய்யலாம்.

ஆடலாமிந்த ரசத்தெடை சேர் தங்கம்
அடவாக வுருட்டியதை யண்டத் தேற்றிக்
கூடலா முட்டைகளின் நடுவே வைத்துக்
கோழியடை கோழியதுமேலே வைத்து
நீடலா மற்ற முட்டை குஞ்சேயானால்
நிலைத்து தையா வேமரசம் நெடியவேகம்
வீடெல்லாம் பொன்னாகக் குளிகை யொன்று
விளங்கியதிற் பச்சை ரசம் பத்துவாரே. 153

சுத்த ரசமான பின் இந்த எடைக்கு நேராக தங்கம் சேர்த்து உருட்டி ஒரு முட்டைக்குள் வைத்து மூடி கோழி முட்டைகளை அடைகாக்கும் பொழுது இந்த முட்டையை அம்முட்டைகளுக்கு நடுவே வைத்து மற்ற முட்டைகள் குஞ்சு பொரித்த பின்னர் ரசமுள்ள முட்டையை எடுத்து பத்திரமாக வைத்துக்கொள்க. இதனால் வீட்டையே தங்கமாக்கும் குளிகையை செய்து கொள்ளலாம். (அது எவ்வாறெனில்) அடைகாத்த முட்டைக்குள்ளிருக்கும் தங்க ரசத்துடன் பத்து பலம் பச்சை (சாதாரண) ரசத்தை வார்த்து.

வார்த்தப்பா யரைத்துருக்கில் நின்றே யாடும்
வளமான செய சூதமிதுவே கேளு
கோர்த்தப்பா விச்சூத மொன்று வாங்கிக்
கொள்ளவினி பத்திடையாம் நாகத்துள்ளே
சேர்த்தப்பா வுருக்கிடவே நாகங் கட்டும்
சேர்ந்திடவே யிப்படிதான் பத்து தொந்த
மூத்தப்பா நாகவித்தை யதிலே பத்து
முருகையிலே பத்தெடைதான் சூதங்கூட்டே. 154

கூட்டி யெல்லா முருக்கையிலே பத்து தங்கம்
கொள்கி நீவாங்கி நின்றே யாடும்போது
காட்டி யொன்றாய்க் கருனாகம் பத்தும்போடு
கைமுறை யாயுருக்கி யதை மணிபோல் வாங்கி

நீட்டி யொன்றாய் மணிமேலே பூசக்கேளு
நிலைத்து நின்ற வெடியுப்பை மேலேபூசி
யாட்டி யென்ற கற்பூரச் சீலையைப்பூசு
யதின் மேலே சீலைசுத்திக் குகையில் வையே. 155

நன்றாக அரைத்து குகையில் வைத்துருக்கினால் செயசூதமாகும். இச்செய சூதத்திலிருந்து ஒரு பலம் எடுத்துக் கொண்டு இதனுடன் பத்து பலம் நாகத்தை சேர்த்து உருக்கினால் நாகம் கட்டும். இந்நாகத்துடன் பத்தெடை சூதம் (ரசம்) சேர்த்து உருக்கி அதனுடன் பத்து பலம் தங்கத்தைச் சேர்த்து உருக்கிக்கொண்டு பின்னர் இதனுடன் பத்து பலம் கருநாகத்தை (கருநாகம் என்பது ஒருவகை வைப்பு உலோகமாகும்) சேர்த்து உருக்கி மணியாய் வாங்கி இம்மணியின் மேல் வெடியுப்பை அரைத்து பூசி அதன்மேல் கற்பூர சீலையை அரைத்துப்பூசி பிறகு சீலைசெய்து குகையில் வைத்து,

வைத்த குகை யிருபத்தஞ் செருவால் மூடி
வளமாகப் புடம் போட்டு மாயிபாதம்
கைத்தவ மாய்ப் பூசை பண்ணு காணும்மூலங்
கைமுறையாய்ச் செந்தூரமாகும் பாரு
வொத்த வெள்ளி வொரு..................லொன்றுபோடு
வோகோகோ பனிரெண்டு மாற்று காணும்
மெய்த்தவமே செய்து குன்றி தினந்தானுண்ணு
விளங்கியதோர் மண்டலத்தில் சித்தியாமே. 156

குகையை இருபத்தைந்து எருவால் மூடி புடம் போட்டு ஆயியான தாயை பூசை செய்து புடமாறியபின் எடுத்துப்பார்த்தால் செந்தூரமாயிருக்கும். இச்செந்தூரத்தை வெள்ளியுடன் சேர்த்துருக்கினால் பன்னிரண்டு மாற்றுள்ள தங்கம் கிட்டும். மேற்படி செந்தூரத்தை தினமொன்றுக்கு குன்றியளவு வீதம் ஒரு மண்டலம் உட்கொண்டால் தேகம் சித்தியாகும். என்றுமழியாத் தன்மைப் பெறும்.

ஆமப்பா வேமரசக் குளிகையாலே
யாடலா நவகோடி யடவாய்க் கேளு
போமப்பா நவலோகத் துள்ளே பூட்டும்
புகழான முன்போலே வொவ்வொன்றாகக்
காமப்பால் வித்தை யென்ன விதுபோதாதோ
கலந்த சிவன் வசியமுமாங் கவனமாகும்
வாமப்பாலு ண்டுள்ளே களித்துமூலம்
வழுவாமற் பார்த்தவற்குச் சித்தியாமே. 157

ஏமரசக் குளிகையால் நவகோடி சித்துகள் விளையாடலாம் முன்போல் நவலோகத்திலும் தனித்தனியாக சேர்த்து செய்தால் வெவ்வேறு மாற்றுள்ள தங்கமும் செந்தூரமும் கிட்டும். லோகங்கள் சித்தியாகும். இதனால் சிவபெருமான் வசியமாவார். கெவுன வித்தையும் கைகூடும். முறையாக உன்னுள்ளேயிருக்கின்ற மூலத்தில் மனதை அலைய விடாமல் நிறுத்தினால் எல்லாம் சித்தியாகும்.

சித்தியிலே மெத்த வுண்டு சொல்ல மாட்டேன்
சிறப்பான நாகரசவூஞ்சல் கேளு
பத்தியிந்த நாகரசம் வாங்கிக் கொண்டு
படிபாதியிதிற் போடுதங்க ரேக்கு
கொத்தியிதை யுண்ட பின்பு வையாதே கேளு
குலாவியிது மெழுகாகுமப்பாற் கேளு
வத்தியிந்த ரசந் தொகுப்பா யாடலாகும்
அப்பனே யிதைக் குளிகையாகக் கேளே. 158

சித்தியடைவதற்கு நிறைய முறைகளுள்ளன. அதை வெளிப்படையாக கூறமாட்டேன். நாக ரச ஊஞ்சல் முறையில் மற்றொரு முறை கூறுகிறேன் கேள்! நாக ரசத்தை ஒரு நிறையாக எடுத்துக் கொண்டு அந்நிறைக்கு சரிபாதி தங்கம் சேர்த்தால் இரண்டும் இணைந்துமெழுகாகும். இம்மெழுகை குளிகையாக்கும் முறையைக் கேள்!

நாக வங்க சுண்ண வெங்காரம்

கேளப்பா வங்கமைந்து நாகமைந்து
கெடியாக வொரு பலமுமுருகும் போது
வேளப்பா வெள்ளையது பலமுங்கால்தான்
வெடியுப்பே பலமூன்று வேறே வைத்து
தாளப்பா வெள்ளையுடன் வெடியுப்பேதான்
தனித்தனியே மாறியிடு தயிர்போற் பொங்குஞ்
சூளப்பா விதைவாங்கி கல்வத்திட்டுத்
தூக்கி யிதிற் பாதியிடை சாரம் போடே. 159

வங்கத்தையும், நாகத்தையும் வகைக்கு ஐந்துபலமெடுத்து இரண்டையும் ஒன்றாக சேர்த்து உருக்கும்போது வெள்ளை கால் பலமும் வெடியுப்பு மூன்று பலமும் தனித்தனியாக சேர்த்தால் சரக்குகள் இணைத்து தயிர் போல் பொங்கும் இத்தயிரை வாங்கி உரலிலிட்டு இதினடைக்கு பாதி சாரம் சேர்த்து

போட்டரைக்கில் நெட்டேறும் பாரு பாரு
புகழாகப் புடம்போட்டுப் பீங்கானில் வைப்பாய்
கூட்டரைக்க நாகவங்கஞ் செயநீராகும்
கெடியான வீரமொடு பூரஞ்சூதம்
மாட்டரைக்கால் வராக னெடை வழலைப் போடு
வகை நாலுஞ் செயநீரும் புழுகுகூட்டி
நாட்டரைக்க கொழம்பாகுமிதனை வாங்கி
நலமான வெங்காரப் பலகைக் கேற்றே. 160

ஏற்றுவது வெண்காரம் வராகனைந்து
யிதமாகப் பூசியப்பா ரவியிற் போடே
மாற்றுவது தினமேழு காய்ந்த பின்பு
மகத்தான கட்டிதுதான் தந்தம்போலாம்
போற்றுவது மிக்காரங் குருவேயாகும்
புகழான செந்தூரம் போடலாகும்
மாற்றுவது வறு........................நாகத்திற்கு
மப்பனே வெண்கார மமுத மாமே. 161

நெட்டேறும் வரை அரைத்து புடம் போட்டு பீங்கானில் எடுத்து பனியில் வைத்தால் செயநீராகும் (நாகமும் வங்கமும் செயநீராகும்) பிறகு வீரம், பூரம், சூதம், இவை மூன்றையும் வகைக்கு அரைக்கால் பலமும், வழலை ஒரு வராகன் எடையும் போட்டு புனுகுங் கூட்டி, நாகவங்க செயநீர் விட்டரைத்து குழம்பு பதமாக வாங்கி ஐந்து வராகனெடை வெங்காரத்தின் மேல் பூசி ரவியில் ஏழு நாட்கள் காயவைத்து எடுத்துப் பார்த்தால் வெங்காரம் தந்தம் கட்டும். கட்டிய இக்காரம் குருவாகும். இதனால் செந்தூரங்கள் சித்தி செய்து கொள்ளலாம். இக்காரம் அமுதத்திற்கு சமமாகும். (பாட்டில் சில எழுத்துகள் சிதைந்து விட்டன.)

துருசு சுண்ணம்

அமுதமென்ற வெண்காரக் கவசத் தோடே
யப்பனே...............காசெடையே தூக்கித்
திமிதமென்ற நாக ரச வீரத்தோடு
..........................க்கீழை நின்ற சுண்ணமூன்று
குமுதமென்ற வெண்கருவு மெருக்கம் பாலும்
கூட்டி யொன்றா யாட்டையிலே கொள்கை கேளு
வுமுதமென்ற குருவண்டு முப்பத்தொன்று
வுரம் பூரஞ் சவ்வீரஞ் சூதங் கூட்டே. (வீரம்) 162

கூட்டுவது புழுகோடே பிறிவாய்க் கேளு
கொள்கையைந்து மொன்றே கால் வராகன்கூட்டி
யாட்டுவது முன் மருந்தோ டொக்கச் சேர்த்தே
யப்பவினித்துருசி னெடை சொல்லக்கேளு
மூட்டுவது வொருகட்டி வராகனேழு
மூச்சு விட்டுப் போகாதே பூசுபூசு
நாட்டுவது ரவியில் வைப்பாய் தினந்தானஞ்சு
நலமாக காய்ந்த பின்பு நன்றாய்க் கேளே. 163

மேற்படி வெங்காரத்தை கவசத்தோடே சேர்த்து காசிடை எடுத்து அதனுடன் நாகரசம், வீரம் (சரக்கு சிதைந்துள்ளது). (ஒரு வகை சரக்கின்) சுண்ணம். இவை மூன்றையும் வெண் கருவும், எருக்கம்பாலும் விட்டரைக்க வேண்டும். அரைக்கும் சமயத்தில் குருவண்டு ஐம்பத்தொன்றும், வீரம், பூரம், சவ்வீரம், சூதம், புனுகு இவை ஐந்தும் வகைக்கு ஒன்றே கால் வராகன் எடை வீதம் கூட்டி நன்றாக அரைத்துக் கொண்டு ஏழு வராகன் எடையுள்ள துருசை ஒரே கட்டியாக எடுத்து அதன் மேல் இம்மருந்தைப் பூசி ஐந்து நாள் சூரியனில் காய வைத்துப் பின்னர்

கேளப்பா வைந்து வகைக்குகைச் சுண்ணந்தான்
கெடியாக வராகனைந்து கிளைத்து போட்டு
தாளப்பா வெண்கருவை விட்டே யாட்டு
தவறாமல் நாலுபுறந் தடவிக் காய்ச்சி
நாளப்பா தினமூன்று காய்ந்த பின்பு
நற்சுண்ணச்சீலை யொன்று மேலே சுற்று
காளப்பா சுண்ணாம்புக் கீழ் மேலிட்டு
கடுகி யொரு சாமந்தீக் காட்டிடாயே. 164

ஐந்து வகைச் சுண்ணத்தை வகைக்கு விராகனிடை எடுத்து வெண்கரு விடடரைத்து முன்பு மருந்து பூசிக் காய வைத்த துருசின் மேல் இச்சுண்ணத்தைப் பூசி, மூன்று நாள் சூரிய வெப்பத்தில் காய்ந்த பின்பு நல்ல சுண்ணாம்பால் சீலை செய்து, ஒரு மண் பாண்டத்தில் பாதி வரை சுண்ணாம்பு போட்டு அதன்மேல் சீலை செய்த துருசை வைத்து அதன் மேல் சுண்ணாம்பைக் கொட்டி மூடி ஒரு சாமம் எரிக்க வேண்டும்.

காட்டையிலே திருப்பி வைத்து காட்டு காட்டு
கைமுறையாய் வெளுப்போடுங் கண்டர் சுண்ணம்
மூட்டையிலே யிவை நாலும் பூர மொன்று
மூட வெள்ளை வழலையொன்று வீரமொன்று
தீட்டையிலே சூத மொன்றா யெட்டுங் கூட்டி
திறமாக வெண்கரு வாலாட்டு வாட்டு
பூட்டையிலே வில்லையைப் போற் பிடித்து நன்றாய்
புகழான கிளிஞ்சி னீர் நடுவே வையே. 165

வைத்தெரிப்பாய் சாம மொன்று நீதானப்பா
மகத்தான குருவதுதான் வாய் பேசாதே
கைத்தெரித்தார் மன்மதனைச் சிவந்தானன்று
கடியதோரஞ் செழுத்தின் கருணையாலே
ஐந்தெரித்த விக்குரு வினாமங்கேளா
யாகாகா வஞ்செழுத்தால் கண்டநாதன்
பைத்தெரித்த பஞ்சசத்தியென்று பேராம்
பராபரைக்கு மீசனன்று பகர்ந்த வாறே. 166

(மீண்டும் தலைகீழாக வைத்தெரித்து) எடுத்துப் பார்த்தால் துருசு வெளுத்து சுண்ணமாகும். இச்சுண்ணத்தை நாலு பலமெடுத்து இதனுடன் பூரம், வழலை, வீரம், சூதம் இவை நான்கையும் வகைக்கு ஒரு பலம் கூட்டி முட்டையின் வெண்கருவை விட்டரைத்து வில்லை செய்து கிளிஞ்சல் சுண்ணத்தின் நடுவே வைத்து, ஒரு சாமமெரித்தால் குருவாகும். (குரு மருந்தாகும்) இக்குருவிற்கு பஞ்சசக்தி என்று பெயர். இது சிவபெருமான் முன்பு பார்வதிக்கு சொன்னதாகும்.

வாறுகேளிக் குருவில் பூரஞ்சேர்த்து
வைத்தெரிக்க நூறுமட்டும் தொந்தமேறும்
வாறுகேளிக் குருவில் வீரமேறு
மகத்தான....................நூறு தொந்தம்
வாறுகேளிக் குருவில் கண்டரேறும்
....................வஞ் செழுத்தில் மருவிப் போச்சு
வாறுகேளிக் குருவி......................ன்
வைத்த முத்தி மண்போட்டு மூடினாரே. 167

மூடினதோர் முட்டையெல்லாம் திறந்து வாங்கி
முத்துப்போல் லொருகயிற்றிற் கோர்த்தேன் கோர்த்தேன்
ஆடினதோர் ஆட்டெல்லா மூலநாயன்
னடிதொழுதே யடிமையென வாடினேன்யான்

தேடினதோர் தேட்டாமை நாலே நாலு
செகமெல்லாம் நிறைந்து நின்ற தெய்வமொன்று
கூடினதோர் கூட்டெல்லாந் துருசினாலே
கோடி குருவாடலாங் குறியாய்ப் பாரே. 168

இக்குருவில் பூரம் சேர்த்து வைத்தெரித்தால் நூறு வரை தொந்தமேறும். அதேபோல் வீரத்தையும் குருவிலேற்றினால் நூறு தொந்தமேறும். இக்குருவில் கண்டரை ஏற்றினாலும் நூறு வரை தொந்தமேறும். இம்முறையை சித்தர்கள் மறைத்து விட்டார்கள். அம்மறைப்பையெல்லாம் நீக்கி முத்துக் கோர்ப்பது போல் கோர்த்தேன். இவை யாவற்றையும் திருமூல நாயனாரிடம் தொண்டு செய்து கற்றறிந்தேன். இந்த துருசு குருவினால் கோடி வகை சித்துகள் விளையாடலாம்.

பாரப்பா நாலுவிதத் தொந்தமேறும்
பருவமுடன் நூறுமட்டும் பண்பாய் கேளே
சேரப்பா வொவ்வொன்றிற் றொழிலோ கோடி
செகச்சால மிதிலாடித் தேர்ந்தபின்பு
கோரப்பா நாலை நீ மனது நூலால்
குறையாமலாறு தளங் கூட்டியாடும்
ஆரப்பா வுனக்கீடு யிதுவே மார்க்க
மறைகிறேன் பறிக்குருவை யறைகிறேனே. 169

இக்குருவினால் (பூரம், வீரம், துருசு, பஞ்சசக்தி) நாலு வித தொந்தமும் நூறு வரை கிட்டும். ஒவ்வொன்றிலும் கோடி தொழில் புரியலாம், செகச்சால மாடலாம். இவை நாலையும் மனதான நூலால் கோர்த்து ஆறுதளமேறினால் உனக்கீடு யாரும் இல்லை. இனித் தங்க குருவைப் பற்றி கூறுகிறேன் கேள்.

அறைகிறேன் பஞ்சசத்திக் குருவால் வீரம்
அணைத்தரைத்து பறிநாலுக் கொன்றேபூசு
அறைகிறேன் ரவியிட்டுக் கலந்த பின்னர்
அப்பனே யண்டத்தோல் கீழ்மேலிட்டு
அறைகிறேன் புடமொன்று போடு நீதான்
ஆகாகா பறியெல்லாம் பொருமிநீரும்
அறைகிறேன் குருத்தானாட வேதை
ஆத்தியடி வீற்றிருந்து தோன்றறிவாய்த்தானே. 170

பஞ்ச சக்திக் குருவால் வீரத்தை அரைத்து நாலு பலம் தங்கத்திற்கு ஒரு பலம் மருந்தைப் பூசிச் சூரிய வெப்பத்தில் காயவைத்துக் கொண்டு ஒரு புது ஓட்டில் அண்டத்தோலை போட்டு அதன் மேல் மருந்து பூசிய தங்கத்தை வைத்து மேலும் அண்டத்தோலைப் போட்டு மேலோடு மூடி புடம் போட்டால் தங்கம் சுண்ணமாகும். இதைக் கொண்டு வேதையாடும் முறையை தாயான தேவியின் அடியைப் போற்றி யறிந்துகொள்.

அறிவான விக்குருவால் வீரங்கூட்டி
யாதி குருக் கண்டரையுஞ் சேர்த்தே போடு
பறிவான வாகாச மெழுகிற் பூசிப்
பேராக வாட்டிப்பதை யுருக்கவாடு

நெறிவான விம்மணி தானூற்றுக் கோடும்
நேர்பாக சூதமிட்டாற் பிடித்துக்கொள்ளும்
பொறிவான நாகரசஞ் சூதமொன்றாற்
போக்கோடே நூறு தொந்தப் புகட்டியேத்தே. 171

மேற்கூறிய தங்க சுண்ணத்துடன் வீரமும் தூரிசுகுருவும் சேர்த்து அரைத்து இதை (158 ஆம் பாடலில் சொன்ன) மெழுகின் மேல் பூசி வாட்டி உறுக்கினால் மணியாகும். இம்மணிக்கு சமெனடை சூதம் சேர்த்தால் மணி சூதத்தை வாங்கும். (பிடித்துக் கொள்ளும்) இந்நாக ரச சூதிமொன்றால் முறையாக நூறு தொந்தம் புகட்டினால்,

ஏத்தையிலே வெகுகோடி தொழிலோவுண்டு
வென்னாலே முடியாது வேது சொல்வேன்
மாத்தையிலே செந்தூரஞ் செய்தாயானால்
வழங்கிய தோராயிரத்துக் கொன்றேயோடுஞ்
சேத்தையிலே களங்கமொடு குருவைப் பண்ணு
திறமாக மணிபண்ணு சேருதங்கம்
பாத்தையிலே யிதனாலே தொழிலோ மெத்த
வறிந்துபார் கைமுறையை அறிந்து பாரே. 172

வெகுகோடி தொழில்கள் செய்யலாம். அதைப் பற்றிக் கூறுவதற்கு என்னாலும் முடியாது. இச்சூதமணியை செந்தூரம் செய்து லோகங்களில் ஆயிரத்துக்கொரு பங்கு சேர்த்துருக்கினால் ஏமமாகும் (தங்கமாகும்). மேலும் இம்மணியைக் கொண்டு களங்கும் குருவும் மணியும் செய்து கொள்ளலாம். இம்மணியின் எடைக்கு தங்கம் சேர்த்துருக்கினால் பல வகையான தொழில்கள் செய்து கொள்ளலாம்.

முறையாக நாக ரசமுருகும்போது
மூட்டப்பா சரி...........ண்டு நேரிற்
குறையாதே யிரண்டெடைக்கு நிமிளை போடு
கூட்டியதையுருக்கி யொரு மணியாய் வாங்கி
யறையாதே கண்டர் வெள்ளை வீரம் பூரம்
அப்பனே குருவண்டு புழுகோடைந்து
நிறையாக மணிக் கோர்க்க தூக்கிப் பூசி
நேர்மேலே கற்பூரச் சிலையைப்பூசே. 173

நாக ரசத்தை உருக்கி அவ்வெடைக்குச் சரியாக (சேர்க்கக் கூடிய சரக்கின் பெயர் சிதைந்துவிட்டது) சரக்கை சேர்த்து, இவ்விரண்டின் எடைக்கு சமமாக நிமிளை போட்டு உருக்கி ஒரு மணியாய் செய்துக் கொண்டு, இம்மணியின் மேல் துருசுச்சுண்ணம், பூரம், வீரம், குருவண்டு, புனுகு இவை ஐந்தையும் அரைத்துப் பூசி இதன் மேல் கற்பூர சிலையை பூச வேண்டும்.

பூசியப்பா சீலை செய்து புடத்தைப் போடு
புகழான நாகரசங் குருவுமாகும்
தேசியப்பா விதின் பேரு வாதத்தேசி
சிறந்த பச்சைத்தொடு முன்னே சிலையே பொன்னாங்

காசியப்பா சரசோதி யமுனைமூன்றுங்
கண்ணிமைக்குள் காணவொரு குளிகையாகும்
வீசியப்பா குருவலையை யெறிந்தாயானால்
வேதை யென்ற மீனெல்லாம் விளங்குந்தானே. 174

பிறகு சீலைசெய்து புடம்போட்டால் நாகரசமாகப்பட்டது குருவாகும். இக்குருவின் பெயர் வாததேசியாகும். இதனால் எதையும் தொட்டமாத்திரத்தில் தங்கமாக்கலாம். மேலும் வாயு வேகத்தில் பறக்கக்கூடிய ககனமணியும் செய்து கொள்ளலாம். இம்மணியின் உதவியால் காசி முதற்கொண்டு கங்கை உற்பத்தியாகும் இமயம் வரை கண்ணிமைக்கும் நேரத்திற்குள் சுற்றி வரலாம். நாகரசக் குரு என்ற வலையை வீசினால் வாதம் என்ற மீன்கள் தங்கமும் அகப்படும்.

ஊஞ்சல் மகிமை

விளங்குதற்கு வூஞ்சலிலே கோடிகோடி
விரித்துரைக்க வென்னாலு முடியாதப்பா
பிளங்குதற்கே யாதி யென்ற துருசு பாரு
பேரண்டம் போட்டொன்றிற் பிடிநீறாகும்
முளங்குதற்கு பதமளவு மேற்றிக் காட்டும்
மூதண்டக் குளிகையுமா மூட்டிப் பாரு
வளங்குதற்கு யிதுவாதமல்லா யானால்
வஸ்துவென்ன விதுக்கீடோ வகுத்துப் பாரே. 175

இந்நாக ரச ஊஞ்சலினால் கோடானு கோடி வித்தையாடலாம். இதை விரித்துரைக்க என்னாலும் முடியாது. முதலில் ஆதியான துருசைக் கண்டு (துருசை நீற்றி) அதில் பேரண்டம் இட்டால் அதுவும் சுண்ணமாகும். இச்சுண்ணத்தால் மூதண்டக் குளிகைகள் செய்து வாதிமெனும் வித்தையை செய்து பார்க்கலாம். இக்குளிகைக்கு சரிசமம் வேறு எந்த வஸ்துவும் கிடையாது.

வகுத்திந்த வூஞ்சலிட மகிமை கேளு
மகத்தான பூரணமாம தீதக் கொம்பில்
பகுத்தானாற் சரிதை முதல் ஞான மட்டும்
பாங்கான சங்கிலியா லதிலே பூட்டி
................புகழ்ந்ததன் மேற் சதாசிவனைப் பலகையாக
மகத்தான நால்..................ரும் நாற் கால்களாகத்
தொகுத்ததன் மேலுன்மனைத் தாயிருந்தே வூஞ்சற்
சுத்துகிறாள் செகசாலஞ் சுத்துறாளே. 176

இவ்வூஞ்சலின் மகிமையை கூறுகிறேன் கேள்! பூரணமான கொம்பில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற சங்கிலியால் கட்டி அதில் சதாசிவனை பலகையாய் பூட்டி பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன் ஆகிய நால்வரை நான்கு கால்களாக கொண்ட அவ்வூஞ்சலில் தாயான மனோன்மணி செகஜாலம் செய்து கொண்டு சுற்றி வருகிறாள்.

சுத்துகிற தெங் கெயெனிலோமூன்றாம் வீதி
சுகமாக யான் பார்த்தேன் நீயும்பாரு
பத்துறது முந்திமுந்தி மூன்றாம்மூலம்
பலித்து தென்றாலாறு மனைபகற் போற்காணும்
மத்துறது முந்திமுந்தி யங்கென்றூணு
மடியிலே பளிச்சென்றுஓ டுமப்பா
எத்துறது போற் பார்த்தாலே யேதுமில்லை
யேழை மதிபோகாதே யிறுக்கிப் பாரே. 177

எங்கே சுற்றுறாள் என்றுநீ கேட்பாயாகில் அது மூன்றாம் வீதியான சுழுமுனையே யாகும். முறையாக இதை நான் அறிந்து கொண்டேன். நீயும் அதே போல் முதலில் மூலத்தில் மனதை யங் சென்று வாசி வைத்து ஊன்றிப் பார்த்தால் ஆறு வகையான ஆதாரமும் பளிச்சென்று தோன்றும். இவையாவையும் மேலாக பார்ப்பதால் பயனில்லை மனதை நன்றாக நிலை நிறுத்தி பார்க்க வேண்டும். (ஏழைமதி-தாழ்மையான புத்தி மட்டமான சிந்தனை) யோகம் செய்யும் காலத்தில் மதி தடுமாற்றமோ தாழ்வான எண்ணங்களோ இருக்கக் கூடாது.

இறுக்கையிலே குப்பென்று நந்தி காணி
லிசைந்திரண்டு கோணத்திற் கணேசன்சத்தி
உறுக்கையிலே கண்டிடுவாய் குட்டிக்கொண்டு
வுற்றுப்பார் சத்தியெட்டு மொன்றாய்க் காணும்
குறுக்கையிலே மாட்டி யொன்று யாறுங் காணுங்
கூர்ந்து பார் நால்வரையுங் குறியாய்க் காணு
மறுக்கையிலே மனமானால் மைந்தாகாணு
மாயம் வந்து மேலிட்டால் மண்ணாய்ப் போமே. 178

இவ்வாறு முறையாக யோகம் செய்தால் மூலத்தில் நந்தி பிரகாசிக்கும். மூலாதாரத்திலுள்ள கோணத்தில் கணேசனையும், வல்லபா சக்தியையும் கண்டு போற்றி நன்றாக கட்டிக் கொண்டால் எட்டு வகையான சக்திகளும் வெளிவந்து பிரகாசிப்பார்கள். இம்மாதிரியே ஆறு தளங்களையும் முறையாகக் கண்டு மனதை நிலைநிறுத்திப்பார்த்தால் மனம் செம்மையாகும். அவ்வாறில்லாமல் மாயம் வந்து புகுந்து கொண்டால் எல்லாம் மண்ணாய்ப் போகும் (மாயம்-பெண் மாய்கை)

மண்ணேது நீரேது தீயுமேது
மகத்தான மாருதமும் வானுமேது
கண்ணேது மூக்கேது காதுமேது
கலந்துண்ணும் வாயேது பரிசமேது
பண்ணேது வதன் பேரேயிதுக்கும் பேரு
பருவமுடனுன்னிடத்தே பாரு பாரு
வொண்ணேது வென்றுரைத்தால் மனமேயென்று
முத்தமனே மாண்டவிட மூஞ்சலாமே. 179

ஊஞ்சலிலே யென் தாயாரி ருந்தேயாடி
யொழிந்துணர்ந்த யென் மனதைக் கயிறாய்க்கட்டி
யஞ்சலிலே யரனிமுக்கவாத் தாளாட
வண்டபகிரண்ட மெல்லாம் மாடவாடப்

பஞ்சலிலே பூரணமுங் குலுங்கி யாடப்
பரமுதலாய் வராட்டியனும் பதறியாடத்
தொஞ்சலிலே சனகாதி சூழ்ந்து மாடச்
சுத்தசிவ சித்தர்களுந் துதித்தார்காணே. 180

மண்ணும், நீரும், நெருப்பும், காற்றும், ஆகாயமும், மூக்கு, காது, வாய், பரிசம் இவையாவும் தாயான தேவியில்லையேல் அழிந்து போகும். தாயாகப்பட்டவள் சகல கருவிகளும் (தத்துவங்களும்) நெருங்க முடியாத இடமான-தத்துவங்களற்றவிடமான பரிவெளியை (என் இருதய கமலத்தை) ஊஞ்சலாய்க் கொண்டும் மனதை ஊஞ்சல் கயிறாகவும் கொண்டு சிவபெருமான் ஊஞ்சலை இழுக்க அண்ட பகிரண்ட மெல்லாம் குலுங்க, பூரணமும் குலுங்க சகலலோக பாலர்களும் ஆட, சனகாதி முனிவர்களும்சூழ்ந்து நின்று ஆடுமளவிற்கு மிகவும் அழகாக ஆடுகிறாள். அவ்வாட்டத்தைக் கண்டு சித்தர்கள் அனைவரும் மனதால் போற்றித் துதிக்கின்றார்கள்.

துதிக்கையிலே நாதவொலி நின்று வோங்க
சுகாதீதப் பூரணத்தே சுழன்று சொக்கி
மதிக்கையிலே மனமிறந்த நிராகாரத்தை
வாய்திறந்து சொல்லுதற்கு நாமமேது
பதிக்கையிலே நிற்குணமோ நிரஞ்சன மோகாணேன்
பாங்கான கரையில்லாப் பழியோகா ணேன்
உதிக்கையிலே மூலத்தே நின்றே யேறி
னோடினே னுற்பனத்தைக் கண்டி லேனே. 181

நானும் அவ்வாறே கண்டு போற்றித் துதித்தேன். துதிக்கும் சமயத்தில் நாதவொலியானது மிகவும் பலப்பட்டு மனமும் புத்தியும் என்றென்றும் அழியாமலிருக்கும் பூரணத்தில் சொக்கி நின்ற நிலையை நான் என்னவென்று கூறுவேன்? அச்சமயத்தில் என்னையோ பிரிதொன்றையோ நிற்குணத்தையோ நிரஞ்சனத்தையோ (உருவமற்ற வஸ்துவையோ, உருவமுள்ள வஸ்துவையோ) எதையுமே காணவில்லை. பரம் பொருளின் எல்லையையும் காணவில்லை. மூலாதாரத்தில் மனதை நாட்டி சுழிமுனை வரை ஏறிய எனக்கு எதுவும் புரியவில்லை.

கண்டிலேன் பூரணத்தின் கரையே காணும்
கைமுறையாய்ச் செனகாதி காணார் காணா
ரொன்றிலே மூலகுருத் தானுங்காணா
ரோகோகோ சுகர்முதலாய்ச் சித்தர் காணார்
விண்டிலேன் நிஷ்களத்தின் கரையைச் சொல்ல
வேதாந்தவ.......................தமுதல் விளம்பக்காணேன்
எண்டிலேன் மனமோடி யண்டிற்றானா
லல்விடத்தே லயித்து நின்றே யழுந்துவாரே. 182

எவ்வளவு முயன்றும் (பரம்பொருளான) பூரணத்தின் எல்லையைக் காண முடியவில்லை. நான் மட்டுமின்றி சனகாதி முனிவர்களும், திருமூலரும், சுகரும் மற்ற எந்த சித்தர்களும் நிஷ்களமான பூரணத்தின் எல்லையை கண்டதில்லை. பூரணத்தில் மனமானது லயித்து நின்றால் தான் பிறர் என்ற பேதமற்ற, இரண்டறக் கலந்துவிட்ட நிலை உண்டாகும்.

அழுந்துவது மெவ்வாறோவென்று கேட்கின்
அளவு மிஞ்சி மதுவுண்ட லகிரிபோலே
அழுந்துவது மெவ்வாறோ வென்று கேட்கின்
அப்பனே சோதிமரப் பாலைப் போலே
அழுந்துவது கோரக்கர் கற்பமிஞ்சி
லறிவொடுங்கி மயக்க போலாகு மாகும்
அழுந்துவது யிதுமூன்று மப்போவல்ல
ஆனந்தப் போதை மெத்த வதிகந்தானே. 183

மனம் எவ்வாறு லயிக்கும் என்று நீ கேட்பாயாகில் மது அதிகமாக வுண்டலாகிரியைப் போலும், சோதிமரத்தின் பாலை உட்கொண்டதைப் போலும், கஞ்சா உண்டதைப் போலுமல்லாமல் இவைகளைவிட மிக அதிகமான ஆனந்த போதை கொண்டு லயிக்கும்.

அதிகமென்றா லெம்மட்டு மென்றாயானா
லாதியில்லை யந்தமில்லை யளவு மில்லை
பதிகமென்ற பூரணமே தெய்வம் தெய்வம்
பல தெய்வ மொன்று மில்லை பாரு பாரு
உதிகமென்ற தாது வெங்கே மூலத்துள்ளே
உத்தேறி யந்தமது போதம் போதம்
விதிகமென்ற விட்டகுறை வந்தா லெய்தும்
வெறும் வாயையலத்து நின்ற வீணர் பாரே. 184

இந்த ஆனந்த போதையினளவு எவ்வளவு என்று நீ கேட்பாயாகில் இதற்கு ஆரம்பமும் முடிவும் கிடையாது. அளவில்லா ஆனந்தத்தை அளிக்கும் பூரணமே தெய்வமாகும். அதைத் தவிர உலகத்தில் வேறு தெய்வம் கிடையாது என்றறிந்து கொள். இப்பூரணம் தாது வடிவமாக (விந்துவாக) மூலத்துள் பிரகாசிக்கிறது. அதனுடைய அந்தம் ஆனந்த போதமாகும். இவையாவும் விட்டகுறை (பூர்வபுண்யம் என்று சொல்லப்படுகிற ப்ராப்த கர்மம் உள்ள) மனிதர்களுக்குத் தான் கிட்டும். வெறும் வாயை மெல்லும் வீணர்களுக்கு கிட்டாது.

வீணர் திருட்டுவாதி

வீணரா யலந்து வதுமேதோ வென்னில்
விட் டகுறை துடர்ந்த படிவிளங்கிக் கேளு
பூணராய்ப் பூண்பார்கள் மூலத்துள்ளே
பெண்ணாசை பொன்னாசை மண்ணினாசை
ஆணராய்க் காமியத்தைச் சுழன்று நின்றே
யாச்சரியம் வேதாந்த மனைத்தும் பார்ப்பார்
காணராய்க் கண்டுவிட்டோம் ஞானமென்பார்
கழுதைகள்தான் மெத்தவுண்டு கண்டு கொள்ளே. 185

வீணர்களின் குணத்தைப் பற்றியும், நடத்தை பற்றியும் உனக்கு கூறுகிறேன் கேள். பூரணம் எனப்படும் வஸ்து மூலத்துள்ளிருக்கிறது என்பார்கள். (ஆனால் அதை அறிந்திருக்கமாட்டார்கள்) பெண், மண், பொன் ஆகியவற்றின் மேலுள்ள ஆசைகளை

விலக்காமல் காமியகர்மத்திலேயே சுழன்று கொண்டு வேதாந்தம் அனைத்தையும் அறிந்து முழுமையான ஞானத்தை அடைந்து விட்டோம் என்று கூறிக்கொள்வார்கள். இவ்வாறு கூறும் கழுதை குணம் படைத்த மக்கள் உலகத்தில் அதிகம் உண்டு அதை நீ அறிந்து கொள்ள வேண்டும்.

கண்டு கொள்ளுமிப்படியே வாத நூலைக்
காப்பறியார் வாதமெல்லாங் கண்டோ மென்பார்
பெண்டு கொள்ளு முன்னேதான் பிள்ளையைந்து
பெற்று விட்டேனென்று சொன்னவாறு மொக்கும்
முண்டு கொள்ளாவாயுமில்லை வறுமை மெத்த
வுவட்டித்துப் பாற்சோறு...............மென்பார் போலச்
சிண்டு கொள்ளுஞ் சிகண்டி மெத்தவுண்டு வுண்டு
திறமாகச் சீஷரைத் தெளிந்து பாரே. 186

மேலே கூறியதைப் போலவே சிலர் வாத நூல்களைப் படிப்பார்கள். ஆனால் அந்நூலின் காப்பு செய்யுளின் பொருளைக்கூட முழுமையாக அறிந்திருக்க மாட்டார்கள். அதுமட்டுமின்றி நூலைப் படித்தவுடனேயே வாதத் தொழிலைக் கண்டு கொண்டோம் என்று இறுமாப்புக் கொள்வார்கள். இவர்கள் கூறுவது எப்படி உள்ளது எனில் திருமணம் ஆவதற்கு முன்னமே ஐந்து குழந்தைகளைப் பெற்றுவிட்டேன் என்று கூறுவதற்கு ஒப்பாகும் வாதத்தில் தேர்ச்சி பெற்று விட்டேன் என்பார்கள். ஆனால் மிகவும் வறுமையில் துன்புறுவார்கள். இப்படிப்பட்ட பேடி மக்கள் உலகத்தில் அதிகமுண்டு என்றறிந்து கொள்.

தெளிந்து நீயவர் குணத்தைப் பார்க்கும் போது
செப்புகிறேன் திருடருட திறமையெல்லாம்
வளிந்துநீ நூறு படிக்கிலொவ் வொன்றாக
மவுனம் போற் றிருடியவர் வரைவாரேட்டில்
நளிந்துநீ சொல்லர்தே கருவையப்பா
நலம்பெறவே சரக்குமுறை யரைப்பும் பார்ப்பார்
ஒளிந்துநீ கருமுறையை மாறிமாறி
யுத்தமனே காட்டாம லூட்டிடாயே. 187

அடுத்து திருட்டு சிஷ்யனின் குணத்தைக் கூறுகிறேன் கேள்! நீ கல்விக் கற்றுக் கொடுக்கும் சமயத்தில் ஒவ்வொன்றாக நூல்களை திருடி வைத்துக் கொண்டு தன்னுடைய ஓலையில் எழுதிக் கொள்வான். அதை அறிந்து கொண்டு அவனிடம் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். எந்த விதமான கருவையும் சொல்லித் தரக்கூடாது. அப்படி இருந்தாலும் நீ சரக்குகளை அரைக்கும் பொழுது பக்கத்திலிருந்து கொண்டு உன்னிப்பாக கவனிப்பான். அச்சமயத்தில் கருமுறையை அவனுக்கு காட்டாமல் மாறி மாறி செய்து அவனைக் குழப்பிவிட வேண்டும்.

ஊட்டுகையிற் கருப்பார்ப்பார் செயநீர்பார்ப்பார்
ரூதையிலே வரிசைமுறை யூணிப்பார்ப்பார்
நாட்டுகையிற் குருத்தொழிலை நன்றாய்ப் பார்ப்பார்
நலமான செந்தூர பதத்தைப் பார்ப்பார்

நீட்டுகையில் நவலோகம் வாங்கி பார்ப்பார்
நினைவாகப் புடமுறையை யுற்றுப்பார்ப்பார்
ஆட்டுகையிற் குளிகையுட சாரணையைப் பார்ப்பார்
அங்கங்கே கருமறைத்தே யாடுவாடு. 188

மேலும் நீ செய்யும் கருவையும், செயநீரையும், ஊது முறை மற்றும் குருத்தொழில், செந்தூரம் செய்யும் முறை, நவலோகத்தில் மருந்தை கொடுக்கும் முறை, புடம்போடும் முறை, குளிகை முறை மற்றும் சாரணை முறை யாவையும் கவனமாக ஊணிப்பார்ப்பான். அதை அறிந்து நீ எதைச் செய்தாலும் கருவை மறைத்தே செய்.

ஆடுகையிற் பார்த்ததெல்லாம் வந்துதென்று
மறிந்து கொண்டேனெனச் சொல்லி யப்பாற் செய்வார்
நாடுகையி லொன்றோடு மொன்று தப்பி
நலமழிந்து தொழிலொன்று நன்றாகாது
ஊடுகையில் மறந்தேனோ கருத்தப்புண்டோ
யூட்டுகிற வரிசையிலே வூன்றினேனோ
கூடுகையிற் குறித் தெட்டைப் போட்டி ட்டேனோ
கோர் வைத்தப்பிப் போச்சென்று கூறுவாரே. 189

நீ செய்த யாவற்றையும் கவனித்தவன் உன்னை விட்டு விலகி தனியாக செய்து பார்ப்பான். அவன் செய்து பார்க்கும் பொழுது கைமுறைகள் தப்பியும், எண்ணிக்கை தப்பியும் வாதம் வராமல் தவித்துப் போவான். அப்பொழுது அவன் தான் செய்த முறை சரிதானா? அல்லது ஏதாவது சரக்கினை சேர்க்காமல் விட்டோமா அல்லது வரிசை தப்பி விட்டோமோ? என்று மனங்கலங்கி வாதம் போச்சென்று அழுது புலம்புவான்.

கூறுகிறேன் சீஷரைநீ சேர்க்க வேண்டாங்
கோடி தனமீந்தாலுங் கும்பிட்டாலும்
மாறுகிற புத்தி கண்டால் முகம் பாராதே
வாதமுண்டோ வில்லையென்று வழியைப்போக்கு
தேறுகிற புத்தியுள்ள சீஷனானால்
திருட்டு வகை போட்டு மெள்ள செய்யமாட்டான்
மாறுகிற குணம் பாரு வணக்கம் பாரு
அறிந்தந்த குணங் கண்டே யணைத்திடாயே. 190

இப்படிப்பட்ட சிஷ்யனை ஒருக்காலும் நீ சேர்த்துக் கொள்ளாதே! கோடி தனமீந்தாலும் கற்றுக் கொடுக்க வேண்டாம். மாறுகின்ற புத்தியுடையவர்களும், ஸ்திர புத்தியற்றவர்களுமான சிஷ்யர்களின் முகத்தையும் பார்க்காதே! வாதம் உண்டோ இல்லையோ என்று சந்தேகத்திற்கு இடம் உண்டாகும் அளவிற்கு அவன் புத்தியை குழப்பு. இவ்வாறெல்லாம் இல்லாமல் நல்ல புத்தியுள்ள சிஷ்யனாக இருந்தால் திருட்டு வேலைகளை செய்ய மாட்டான். அப்படிப்பட்ட சிஷ்யனின் நல்ல குணங்களைக் கண்டறிந்து கொண்டு பிறகு நீ அவனை சிஷ்யனாக ஏற்றுக்கொள்!

அணைத்திட்டேனிப்படி நான் பார்த்து பார்த்தே
யைந் நூற்றினோடைம் பத்தேழு பேரைக்
குணத்திட்டங் கண்டபின்பு கற்பமீந்தேன்
கொள்கை யவனுக்குரைத்த பின்புகுளிகையீந்தேன்

துணைத்திட்டந் தப்பாமற் கேம விதி
தொட்டோடே யாடவிட்டுத் துறையுஞ் சொன்னேன்
நினைத்திட்ட சித்தர் முன்னே பேசி வென்று
யென்பிள்ளை யென்னிடத்தே வந்தார்காணே. 191

நானும் இப்படியே கண்டறிந்து கொண்டு ஐநூற்று ஐம்பத்தேழு பேரை சிஷ்யராக ஏற்றுக் கொண்டேன். பிறகு அவர்களின் குணத்தை கண்டு கற்பத்தை கொடுத்தேன். கொள்கையை உபதேசித்து குளிகையை கொடுத்தேன்! திட்டங்கள் தப்பாமல் ஏமமுறைகளை அவர்களையே செய்யச் சொல்லி பக்கத்திலிருந்து பார்த்தேன். சகலசித்து முறைகளையும் சொல்லிக் கொடுத்து மலைகளிலுள்ள சித்தர்களுடன் பேசிப்பார்த்து மேலும் வேண்டியவற்றை அறிந்து கொள்ளுங்கள் என்று கூறி அனுப்பி வைத்தேன். சென்றவர்கள் என்னிடமே திரும்பி வந்தார்கள். (காரணம் குரு பக்தியாலும், தன் குருவைவிட யாரும் அதிகமாக அறிந்தவர்கள் இல்லை என்ற காரணத்தாலும்)

பிறப்பு சித்தானது

வந்தாரே ஐநூற்றோடைம்பத் தேழ்பேர்
மகத்தான போகருக்கு நாங்களுண்டு
தந்தாரே யருளோடு பொருளு மாசான்
சவு சஷ்டி வித்தையு மன் சார்வு சொன்னார்
விந்தாரே கருவூரார் சம்பாரென்றார்
வெருந்தாடி யண்ணருமோ வெறிந்து போட்டு
பந்தாடுங் குளிகை யொன்று வைத்துக் கொண்டு
பரத்தோடு கூடிநின்று பழகினாரே. 192

எனக்கு என் சிஷ்யர்கள் எப்படியோ அப்படியே நாங்கள் போகருக்கு சிஷ்யர்களாக இருந்தோம். (நாங்கள் சிஷ்யர்களாக இருந்த காலத்தில்) முறையான கற்பத்தையும், வாதத்தையும், சவுசஷ்டி வித்தையும் அதன் சார்வையும் சொல்லிக் கொடுத்தார். அச்சமயத்தில் கருவூரார் என்றவரும் போகருக்கு சிஷ்யராக வந்து சேர்ந்தார். அவருக்கும் சகலவிதமான சித்துமுறைகளைச் சொல்லித் தந்து குளிகையும் கொடுத்து அருளினார். அக்குளிகையினால் பரமான ஜோதியில் சேர்ந்து நின்று சமாதி யோகம் பழகினார்.

பழகின தோரன்னருக்கு மடியேனுக்கும்
பரியாசச் சண்டை முன்னே பழக்கமுண்டு
தழகினதோ ரெனை யழைத்துப் போகனாயன்
சகலமுறை கைகாட்டித் தந்து யாண்டார்
இளகினதோர் சேத்துக்குள் கம்பம் போல
விடித்திடித்துச் சோதித்தேனேழு லட்சம்
புளகினதோர் மூலத்தின் நந்தி சொல்லப்
போக்கெல்லாம் பார்த்தனைந்து பொங்கினேனே. 193

கருவூராருக்கும் எனக்கும் பரிகாசச் சண்டை அடிக்கடி வருவது உண்டு அச்சமயத்திலெல்லாம் என்னை போகதேவர் அழைத்து புத்திகூறி சகல முறைகளை கற்றுக் கொடுத்து தடுத்தாட்கொண்டார். மேலும் இளகினசேற்றுக்குள் கம்பத்தை குத்தினால் எவ்வாறு நுழையுமோ அவ்வாறே எனக்கு அடிக்கடி புத்திகூறி நன்றாக

சோதித்து ஏழு லட்சம் என்ற நூலை உபதேசம் செய்தார். அவர் கூறியதைக் கேட்டு சமாதியில் நின்று மூலாதாரத்தில் மனதை வைத்தேன். அங்கு நந்தியானவர் போகர் எதை உபதேசித்தாரோ அதையே உபதேசித்தார். அதைக் கண்டு மகிழ்ச்சியால் பொங்கினேன்.

பொங்கியுள்ளங் கொள்ளா மலிந்த நூலைப்
போக்கோடே மூன்றுகாண்டம் புகட்டினேனான்
தங்கியுள்ளே பொய்களில்லை கவடுமில்லைத்
தவறுவகை யொன்றுமில்லை சாதித்தேனான்
அங்கியென்ற மூலத்தினாசான் சொன்னா
ராத்தாளும் மப்படியே யருளிச் செய்தாள்
கெங்கையென்ற தாயாரைச் சடையில் வைத்தோர்
கேள்மகனே என்று சொல்லிக் கேட்பித்தாரே. 194

மகிழ்ந்து அப்படியே விட்டு விடாமல் எல்லாவற்றையும் வாத காவியம்-3000 என்ற இந்நூலில் எழுதியுள்ளேன். இந்நூலில் கூறியுள்ள அனைத்து முறைகளும் என்னால் செய்து பார்த்தவைகளாகும் இதில் கபடோ! பொய்யோ! சூதோ மற்றும் வேறுவிதமான தவறோயில்லை. சமாதியில் நான் நின்ற பொழுது என் குருநாதர் என்ன சொன்னாரோ அதையே தேவியான ஆத்தாள் சொன்னாள் அது மட்டுமின்றி கங்கா தேவியை தலையில் வைத்துள்ள சிவபெருமானும் மகனே கேள்! என்று கூறி அனைத்தையும் சொல்லித் தந்தார் (அவற்றையே இந்நூலில் கூறியுள்ளேன்).

கேட்பித்த குருவாரு சிகாரனாயன்
கெடியான தாயாரு மகாரச் சத்தி
நாட்பித்த ரெண்டுமொன்றாய்க் கூடிநிற்கில்
நந்தியென்ற குருவாச்சு நாமமாச்சு
மூட்பித்த ஞானி யென்று பேருமாச்சு
மூத்தநவ சித்தனென்று பேருமாச்சு
ஊட்பித்த விட்டகுறை யாலேயாச்சு
யுற்ற குருனாதனெய்த யுண்மை தானே. 195

சொல்லித்தந்த குருவான 'சி' கார தேவர் மற்றும் தாயாரான மகார சக்தியும் சேர்ந்து நின்ற பொழுது நந்தி என்ற பெயருள்ள குருவுண்டானார். இவருக்கே ஞானியென்றும், நவசித்தரென்றும் பெயர் உண்டாயிற்று. இவையாவும் காணுவதற்கு விட்டகுறை வேண்டும். அதோடில்லாமல் குருவின் அருளும் வேண்டும். (இப்பாட்டில் கூறியவைகள் யாவும் சித்தர்களுடைய தத்துவமாகும்).

உண்மையுள்ள குருபதத்திற் றொண்டுபண்ணு
வோடிமுன்னே கேளாதே யொன்றுமாகா
வண்மையுள்ள குணங்கண்டால் தானே சொல்வார்
வாய்திறந்து கேட்டதினால் வருவதில்லை
தண்மையுள்ள குணமாகி யேவற்கேளு
சங்கற்பத் துன்மார்க்கச் சட்டை போக்கு
நுண்மையுள்ள புத்திகொண்டு காரு காரு
நோக்கறிந்து வார்த்தை கண்டுபேசிடாயே. 196

அதனால் முறையாக மற்றும் உண்மையாக குருவுக்கு தொண்டு செய்ய வேண்டும். எடுத்தவுடனேயே எதையும் கேட்கக் கூடாது. உன்னிடத்திலுள்ள குணங்களைக் கண்டு அவரே உபதேசம் செய்வார். நாம் கேட்பதால் ஒன்றும் வராது. தன்மையுள்ளவனாகவும், நல்ல குணம் படைத்தவனாகவும் இருந்து கொண்டு குருதேவர்கூறும் எந்தவிதமான காரியத்தையும் செய்ய வேண்டும். சங்கற்பம் என்ற துன்மார்க்கச் சட்டையைப் போக்கி, புத்தியால் நல்லது கெட்டதைப் பகுத்தறிந்து கொண்டு கெட்டதை நீக்கி, குருவின் நோக்கத்தை அறிந்துகொண்டும் அவர் சொல்லும் வார்த்தைகளின் பொருளைப் புரிந்துகொண்டும் நீ மறுமொழி கூறவேண்டும்.

பேசிடவே காலம் வந்து நேர்ந்துதானாற்
பேரான மூலத்தைப் பேணிச்சொல்வா
ராசிடவே வங்கென்று யுள்ளே பூரி
யப்பனே சிங்கென்று மூலங்கும்பிக்
கூசிடவே ரேகந்தான் வெளி கொண்டாலுங்
குறியுள்ள ரேசித்துக் கூட்டு கூட்டு
வேசிடவே சலித்தாக்கா லொன்று மில்லை
வேளைகண்டு மிடைகலையில் விரைந்து கூட்டே. 197

இவ்வாறு குருவினிடத்திற் விரதம் காத்து நின்றால் உபதேசிக்கும் பருவம் வரும் பொழுது மூலத்தைத் தொட்டு காட்டுவார். அப்பொழுது மூலத்தில் மனதை வைத்து 'வங்' கென்று மூச்சை இழுத்து, 'சிங்' கென்று உள்ளே நிறுத்தி பிறகு மூச்சை வெளிவிட வேண்டும். யோகத்தில் சலித்தால் ஒன்றும் பலியாது. சரியான சமயம் அறிந்து இடது நாசி வழியாக காற்றை உள்ளே இழுக்க வேண்டும்.

கூடுவது மெக்கால மெப்போ வென்றுக்
கொள்கிநின்று யலையாதே கூறக்கேளு
நீடுவது யன்னமரை தண்ணீர் கால்தான்
நிதம்வுண்ணு வொரு பொழுது நீதானப்பா
வூடுவது மிடத்திய......................வூடே
யுற்றுணர்ந்து மனமொன்றா யூணிப்பாரு
தேடுவது.................................லை மூலஞ் சித்தி
சிவசத்தி ரெண்டு மொன்றாய்த் தெளிந்தசித்தே. 198

இவையாவும் எப்பொழுது செய்ய வேண்டுமெனில் அன்னத்தை அரைவயிறும் தண்ணீரை கால் வயிறும் ஒரு வேளை உட்கொண்டு முறையாக மேற்கூறியபடி செய்தால் மூலம் சித்தியாகி சிவசத்தி இரண்டும் தெளிவாய்த் தோணும்.

சித்து ரெண்டு மொன்றாய்ச் சேர்ந்ததல்லச்
சிறப்பாக.........................லத்திற் செப்பக்கூடா
நித்தசுத்த புத்தமுத்த நினவு மல்லா
நிராகார நிற்குணமே நெருப்பு மல்ல
சுத்தசுத்த நிஷ்களத்தி னாதியல்ல
சிவ்வென்று மவுனமுத்து மூலம் பார்த்தால்
பத்தசுத்த நிராகாரம் படிகம் போல
பார்க்கிறதும் பாராதும் ரெண்டும் போமே. 199

மூலம் சித்தியானால் மனம், அறிவு, நினைவு இவையாவும் நீங்கி நிற்குணமும், நிராகாரமுமானதுமான பரம்பொருள் படிகம் போல் பிரகாசிக்கும். இதனால் த்ருக் த்ருசயம் எனப்படும், (பார்ப்பது-பார்க்கப்படுவது என்ற பேதம் ஒழிந்து ஒன்றாகும்).

யோகப் பருவம்

இரண்டாகி நின்றதப்பா வாசிதானும்
மிந்துடனே யொன்றாகி.................வும் போச்சுப்
பண்டாகப் பழகினது மிதுவே மார்க்கம்
பார்க்கையிலே கற்பமுண்டு பாருபாரு
தண்டான சுழிமுனையாம் ஞானமார்க்கஞ்
சார்ந்தவற்கு மரசான யோகமாகும்
நன்றான வகாரத்தை யுள்ளே பூசி
நலம் பெறவே சிகாரத்தைக் கும்பித்தோங்கே. 200

இரண்டாகி நின்ற வாசியானது ஒன்றானால் எல்லா வகையான மாயையும் விலகும். இதுதான் ஆன்றோர்கள் பழகின மார்க்கமாகும். இம்முறையை கற்பமுண்டு மூலாதாரம் முதல் தண்டுவடம் வழியாக சுழுமுனைவரை வாசியை ஏற்றினால் ராஜயோகம் பலிதமாகும். மீண்டும் சொல்கிறேன் கேள். வங்கென்று மூச்சை உள்ளே இழுத்து “சிங்” கென்று உள்ளே நிறுத்த வேண்டும்.

ஏங்கையிலே நினைவாக யோங்கி யோங்கி
யொருகடிகை யிறுகடிகை நின்றுதானால்
வாங்கையிலே பளிச்சென்று மூலத்தில்தான்
.....................ற் புக்கிடிலோ வருஷம் நாலாம்
பாங்கையிலே யிதுவு..........................லாரும் பாரு
படிப்படியாய் நிஷ்களத்திற் பாங்காய்த் தோன்றுந்
தேங்கையிலே குளிர்ந்தமதி வெள்ளஞ்சிந்துந்
தேகமுமே பொன்னிறம் போற் சிறக்குந்தானே. 201

இவ்வப்பியாசத்தை முறையாகப் பழகி வருங்கால் மூச்சானது ஒரு கடிகை முதல் இரண்டு கடிகை வரை உள்ளேயே நின்றால் மூலமானது பளிச்சென்று தோன்றும். இவ்வாறு நான்கு வருடம் செய்ய வேண்டும். இதை போலவே ஆறு தளத்திலும் மூச்சை நிறுத்தி படிப்படியாக ஏறினால் நிஷ்களமான பிரம்மத்தை அறிந்து கொள்ளலாம். மேலும் சித்தாடும் வல்லமையும் உண்டாகும். தேகம் பொன் போல் பிரகாசிக்கும்.

சிறப்பான சிவயோக மென்றுபேரு
சிறந்திட்ட குண்டலித்...................யென்றுபேரு
சிறப்பான வாசி யென்று மிதுக்கேபேரு
சீரான........................ழி யோக மென்றுபேரு
திறப்பான யரசனென்று மிதுக்கே பேரு
சேர்ந்துணர்ந்த சபையென்று மிதற்கே பேரு
வுறப்பாக விதைபார்த்தால் ஞானசித்தி
யுத்தமனே காயசித்தி யுணந்து பாரே. 202

இவ்வித யோக முறைக்கே சிவயோகம் என்றும், குண்டலி யோகமென்றும், வாசியோகமென்றும், சுழியோகமென்றும், ராஜயோகமென்றும், அசபையென்றும், பெயர்

வழங்கப்படுகிறது. இவற்றை முறையாகச் செய்து தேர்ச்சி பெற்றால் காயசித்தியும், ஞான சித்தியும் பலிதமாகும்.

உணர்வற்று வுடலற்று யோகமற்று
யோடுவது மாடுவது மிரண்டுமற்று
பணர்வற்று நினைவற்றுப் பாசமற்றுப்
பார்க்கிறதும் பாராது மிரண்டுமற்றுச்
சுணர்வற்று லெச்சையற்றுக் கூச்சமற்று
சொல்வதுவுஞ் சொல்லாது மிரண்டுமற்று
நிணர்வற்ற நிஷ்களத்தில் நிலைத்துப் போகும்
நேராகக் குண்டலியை நிலைத்துப் பாரே. 203

அதோடு மட்டுமல்லாமல் உணர்வற்றும் உடலற்றும், யோகமற்றும், ஓடுவதற்றும், ஆடுவதற்றும், நினைவற்றும், பாசமற்றும், பார்ப்பதும், பார்காததுமாகிய இரண்டும் அற்றும் லெச்சை, கூச்சம், சொல்வது, சொல்லாதது போன்றவைகள் அற்று, நிஷ்களமான பிரம்மத்திடம் மனமும் புத்தியும் லயித்துப் போகும். அப்படிப்பட்ட குண்டலி யோகத்தை செய்து பார்.

நிலைத்திட்டால் காயசித்தி யோகசித்தி
நேரான வாதசித்தி ஞானசித்தி
குலைத்திட்டால் மாயசித்தி வந்துகூடும்
குழைஞ்சலை வா...........யிலே கூடமாட்டா
னலைத்திட்டப் பேய்மனது மண்டோ.............தே
யதினாலே மென்முறைக்கப் பூசை சொன்னேன்
கலைத்திட்டமாக நின்று மாயிபாதம்
கைமுறையாய் பூசித்து மதுவையுண்ணே. 204

குண்டலி யோகத்தில் நிலைத்தால், யோக சித்தியும், ஞானசித்தியும், காயசித்தியும், வாதசித்தியும் கைகூடும். இதிலிருந்து தவறினால், மாயசித்தி (மாயை) வந்து பிடித்துக் கொள்ளும். ஆகையால் மனதை பேய்போல் அலையவிடாமல் நான் முன்பு கூறிய தாயாரின் பூசையை முறையாக அறிந்து செய்து மதுவை உண்ண வேண்டும்.

உண்ணவென்றே னான் மதுவை யேதுக்கப்பா
வுரைத்து நன்றாயுட் புகுதவேணு மென்று
மன்னவென்று சிலபேர்கள் சொல்வாரப்பா
மாய்கையிலே பெண்ணோடே மடிந்துமாய்வார்
வண்ண வேண்டாம் வர்மத்தைக் கொடுத்தாரையோ
மாயியங்கே நில்லாமல் மறைந்து போனாள்
தண்ண வேண்டாங் கூத்தாலே கெட்டுப் போன
சண்டாளர் செல்வதென்ன நரகந்தானே. 205

மதுவை எதற்காக உட்கொள்ளச் சொன்னேனென்றால் மனமானது மூலத்தில் சென்று உரைவதற்காகவே. இவ்வாறு செய்யாமல் மன்னன் என்று பெயர் கொண்டவர்கள் பெண் மாய்கையில் அழிந்து போனார்கள். யோகத்திற்காக மதுவை உண்ணாமல் வேறு வகைக்காக உட்கொண்டவரிடத்தில் ஆயியான தாய் விலகிச்

சென்று மறைந்து போனாள். பிறகு மாயையின் கூத்தில் விழுந்து கெட்டுப் போனவர்கள் போய்ச் சேருமிடம் நரகம் தான்!

தானென்ற வெளிப்பூசை யாலே யுண்டு
சமரசமாய் மூலத்தைச் சார்ந்த பின்பு
வானொன்றிப் போச்சுமனம் பூசை போச்சு
வாசனையும் பூசனையும் மண்ணாய் போச்சு
கானென்றே யிருந்தா................ணாட்டில் வாழ்ந்தென்
கண்கெட்ட குருடன் முன்னிற் பார்ப்பே..................
ஊனென்ற யுடல்போச்சு பொன் போலாச்சு
யுத்தமனே மூலமதை யுன்னிப்பாரே. 206

வெளிப் பூசையை செய்து தாயின் அருளால் கிட்டிய பலி மீதமான மதுவை உட்கொண்டு மூலத்தில் சார்ந்து கொண்டால் வெளிப்படையான பூசைவிலகி மனப்பூசை சித்தியாகும். ஆகையால் மனம் ஒரு நிலையாக நிலைத்து ஊனான இக்காயம் பொன் போல் ஆகும். ஆகையால் உத்தமனான நீ மூலத்தில் மனதை வை!

அங்கோல விதைத் தைலத்தால் லிங்கக்கட்டு

உன்னியுன்னிப் பார்த்தாலும் படித்தோராலே
யுரைத்தாலு முரைக் கொட்டா தென்று சொல்லி
மன்னிமன்னிக் காடுசென்றே யிலையைத்தின்று
வாயுவங்கே பூரித்து வழியாகாது
இன்னமின்ன மொன்று மினி யெண்ணவேண்டா
மெனை யாண்ட போகர்முத லெல்லாருந்தான்
அன்னையன்னை யெனக்கேட்க வாத்தாளைத்தான்
அவள் சொன்ன வாதமங்கே கோலமாச்சே. 207

பல நூல்களை நன்றாக கூர்ந்து படிப்பதாலும் அதிலுள்ள முறைகளை செய்து பார்க்க வேண்டுமென்று மனதிலாவல் கொண்டு அதற்காக காட்டை நோக்கிச் சென்று அங்குள்ள இலைகளைப் பறித்துத் தின்று மூச்சை உள்ளே நிறுத்தி யோகம் செய்து வாதம் பார்த்தாலும் வாதம் சித்திக்காது (பிறகு எப்படித்தான் சித்திச் செய்து கொள்வது என்று யோசிக்க வேண்டும். அதற்கு நான் ஒரு முறையைக் கூறுகிறேன் கேள்) என்னைத் தடுத்தாட் கொண்டு அருள் புரிந்த குருவான போக நாதரும் மற்ற எல்லா சித்தர்களும் தாயே! அம்மா! என்று தேவியை நோக்கி கேட்க அச்சமயத்தில் தேவியால் அருளப்பட்ட வாதமே அங்கோல வித்தையாகும்.

வேறு (சந்தம்)

அங்கோல விதைதா னப்பா
வடவாகப் படிதா னொன்று
பங்கோலக் குன்றி தானும்
பருவமாய்ப் படிதா னொன்று
தங்கோல வுரலுக் குள்ளே
தனிரெண்டு மிடித்து நன்றா
யொங்கோல மணியாம் நல்ல
வுயர்சாறு நிரம்பவாரே. 208

வார்த்துமே நனைத்த பின்பு
வாகுட னரைத்துக் கொண்டு
கோர்த்ததின் மருந்து போடக்
கூறுகிறேன் கேளு கேளு
நார்த்ததிற் கெந்தி ரெண்டு
நலங்கிய சாரம் ரெண்டு
போர்த்ததி லிங்க மொன்று
புகழான கார மொன்றே. 209

ஒன்றான பலங்க ளாறு
முறவாக வெருக்கம் பாலில்
நன்றாக வரைத்துக் கொண்டு
நாட்டுமுன் மருந்தோ டொக்கத்
தன்றாகப் பிசைந்து வொன்றாய்த்
தனிக்காசு போலே வில்லை
யொன்றாகப் பிடித்து நன்றா
யுலர்த்திடா யுலர்த்தி டாயே. 210

அங்கோல விதையும், குன்றி விரையும் வகைக்கு ஒரு படி எடுத்து அதை கல்லுரலில் போட்டு நன்றாக இடித்துக் கொண்டு மணிச்சாறை ஒரு நிறையாக எடுத்து முன் இடித்த மாவுடன் சேர்த்து நன்றாக அரைத்து பின்பு, கெந்தி இரண்டு பலமும், சாரம் இரண்டு பலமும், லிங்கம் ஒரு பலமும், காரம் ஒரு பலமும். ஆக ஆறு பலமுள்ள இம் மருந்துகளை ஒன்றாக சேர்த்து எருக்கம் பால் விட்டு அரைத்துக் கொண்டு இதை முன் அரைத்த மருந்துடன் சேர்த்து நன்றாகப் பிசைந்து காசுபோல் வில்லையாகத் தட்டி உலர்த்த வேண்டும்.

உலர்த்திய வில்லை தன்னை
யுறவாகக் கலையத் தூட்டி
மலர்த்திய கலையத் தூரில்
வாகாகத் தமரும் போட்டுப்
பிலர்த்திய தமரு வாய்க்குப்
பிறம்பொரு கலையம் வைத்தே
யலர்த்திய குழியில் வைத்திட்
டதன் மேலே சீலை செய்யே. 211

செய்தபின் புடத்தைப் போடு
தேவியைத் தியானம் பண்ணி
நெய்தபி னிரணந் தானு
நேராக விறங்கும் பாரு
கய்தபின் தைலத்துள்ளே
கழஞ்சுதான் துருசிச் சுண்ணம்
அய்தபின் போடு நன்றா
யப்பனே குப்பிவைய்யே. 212

உலர்த்திய வில்லைகளை ஒரு கலையத்தில் போட்டு கலையத்தின் தூரில் முறையாக தமரிட்டு தமரின் வாய்க்கு நேராக மற்றொரு பானையை வைத்து-அவற்றை

பூமியில் குழிதோண்டி அக்குழியில் வைத்து மேற் பானைக்கு சீலை செய்து. தேவியை தியானித்து புடம் போட்டால் தமரின் வழியாக தயிலமிறங்கும் இத்தயிலத்தில் துருசுச் சுண்ணம் ஒரு கழஞ்சு சேர்த்து நன்றாக குழப்பிக் கொண்டு. பிறகு

வைத்திட்ட தைலந் தானும்
வளமாக லிங்கத் துக்குப்
பைத்திட்ட நாலு தூக்கம்
பரிவாகச் சுறுக்குப் போடு
கைத்திட்ட முழுக்கட் டாச்சு
காட்டிடு லோகத் துள்ளே
யைத்திட்ட பத்துக் கொன்றா
யணைத்திடாய் மாற்றோ வெட்டே. 213

இத்தயிலத்தில் நாலு பலம் லிங்கத்தை சுறுக்குப் போட்டு, எடுத்துப் பார்த்தால் லிங்கம் நன்றாகக் கட்டியிருக்கும். கட்டிய லிங்கத்தை லோகங்களில் (நவலோகத்தில்) பத்துக்கொரு பங்கு சேர்த்துருக்கினால் எட்டு மாற்றுடைய தங்கமாகும்.

தேவதாளித் தைலத்தால் லிங்கக்கட்டு

எட்டிய தேவதாளி யிலகு மங்கோலத் தோடு
மட்டிய பூவரச வளமான குன்றியோடே
யொட்டி வாலு ளுவை யோடு வுயரைஞ்சு விரைதானப்பா
பட்டிய வகையொன் றொன்று படியொன்று கூடக் கூட்டே. 214

கூட்டிய படிகளைந்துங் குமுறவே யிடித்துக்கொண்டு
வூட்டிய மேனிச்சாறு வுறவாராயெருக்கம் பாலுங்
காட்டிய மைபோனன்றாய்க் கலரவே யரைத்து வைத்துத்
தீட்டிய மருந்து போடத்திறஞ் சொல்வேன் திறஞ்சொல்வேனே. 215

தேவதாளி விதை, அங்கோல விதை, பூவரசன் விதை, குன்றிவிதை வாலுளுவை விதை இவ்வைந்து விதைகளையும் வகைக்கு ஒரு படி எடுத்து ஒன்றாகச் சேர்த்துக் கொண்டு நன்றாக இடித்து மாவாக்கி இம்மாவுடன் குப்பைமேனிச்சாறும் எருக்கம்பாலும் விட்டு நன்றாக மைபோல் அரைக்க வேண்டும். பிறகு இதனுடன் சேர்க்க வேண்டிய மருந்தைப் பற்றி கூறுகிறேன் கேள்!

திறமான கெந்திநாலு சேர்ந்த மால்தேவியொன்று
வுறமான சாரமூன்று வொடுங்காத யிணங்கன் ரெண்டு
நிறமான காரம்ரெண்டு நேரான கல்லுப்பொன்று
அறமான விவைகளெல்லா மப்பனே பலந்தான்தூக்கே. 216

தூக்கியே கள்ளிப்பாலிற் சுகமாக வரைத்து நன்றா
யாக்கிய மருந்தோடொக்க வணைத்திதையொன்றாய் சேர்த்துத்
தாக்கியே காசுபோலே சமனாக வில்லைப்பண்ணிப்
போக்கிய கலையத்திட்டுப் பூப்புடத்தைலம் வாங்கே. 217

கெந்தி நாலு பலம் துருசு ஒரு பலம், சாரம் மூன்று பலம், வெடியுப்பு ரெண்டு பலம் காரம் ரெண்டு பலம், கல்லுப்பு ஒரு பலம். இவையாவற்றையும் ஒன்றாக

சேர்த்து கள்ளிப்பால் விட்டரைத்து இதை முன்னரைத்த மருந்துடன் சேர்த்துப் பிசைந்து பிசைந்து காசு போல் தட்டிவில்லை செய்து கலையத்துள் வைத்து பூப்புடம் போட்டு தயிலமாக வாங்க் வேண்டும்.

வாங்கிய தைலத்துள்ளே மாட்டவே மருந்துகேளு
பாங்கிய துருசிச்சுண்ணம் பரவிய சாரச்சுண்ண
மோங்கிய காரச்சுண்ண மொவ்வொன்று களஞ்சி மூன்று
தாங்கியே கொட்டிக் கிண்டித் தாய்பதம் பூசிப்பாயே. 218

பூசிக்க வல்லாயானாற் புரட்டியே லிங்கம் வாட்டு
ஆசிக்க முழுக்கட்டாகு மணைப்பது நவலோகத்தில்
தேசிக்கத் தாதுவெல்லாஞ் செனத்திலே வாட்டக் கட்டும்
வேசிக்க வினத்தைக் கண்டு விரவியே வேதைபாரே. 219

தயிலமாக வாங்கிக் கொண்டு அதனுடன் துருசுச் சுண்ணம், சாரச்சுண்ணம், காரச்சுண்ணம் இவை மூன்றையும் வகைக்கு ஒரு கழஞ்சி சேர்த்து நன்றாக கிண்டி தாயைப் பூசித்துப் பின் இத் தயிலத்தில் லிங்கத்தை புரட்டி வாட்டினால் லிங்கம் கட்டும். கட்டிய லிங்கத்தை நவலோகத்தில் சேர்த்து உருக்கினால் தங்கமாகும். மேலும் இத்தைலத்தால் அறுபத்து நாலு வகையான தாதுக்களில் எதை வாட்டினாலும் ஒரு வினாடியில் அது கட்டிவிடும். கட்டிய தாதுவால் வேதை மிகவும் சுலபமாக கைகூடும்.

இரும்புக் களங்கம்

பாரிந்தத் தைலம்பட்டாற் பதையாமற் சூதஞ்சாகும்
பாரிந்தத் தைலம்பட்டாற் பரிவுடன் வீரஞ்சாகும்
பாரிந்தத் தைலம்பட்டாற் பருநாகம் வங்கஞ்சாகும்
பாரிந்தத் தைலத்துள்ளே பதையாம விரும்புசாமே. 220

சாமாவ தேதுலோகந் தண்ணி போலுருகிளாடுந்
தாமாவ தேதுகேளு தங்கம்போற் கனலிட்டாடுங்
காமாவ தேதிங்கெல்லாங் கபளிக்கும் நீட்டநீட்டப்
போமாவ தேது லோகம் பூட்டி நீயிருபத்தொன்றே. 221

மேற் கூறிய தைலத்தால், சூதம், வீரம், நாகம், வங்கம், இரும்பு இவையாவும் மாரணமாகும். அதாவது மடிந்து தவளம்போலாகும் மேலும் இத்தைலத்தால் இரும்பானது தண்ணி போலுருகி தங்கம் போல் கண்விட்டாடும். இந்த இரும்பை லோகங்களில் இருபத்தொன்று தாக்கினால் லோகங்கள் தங்கமாகும்.

ஒன்றேனும் வீரம்லிங்க முடன் சிலைமாலின் தேவி
தொன்றேனும் ராஜவர்த்தஞ் சிறந்திடுந் துத்தஞ்சூதம்
பன்றேனு மேழுதானும் பாங்குடன் வராகனேழு
கன்றேனும் பறியே மூன்று காட்டிடாய் காட்டிடாயே. 222

வீரம், லிங்கம், மனோசிலை, துருசு, ராஜவர்த்தம், துத்தம், சூதம்(ரசம்) இவை ஏழையும் வகைக்கு வராகன் எடை (மொத்தம் ஏழு வராகன்) எடுத்துக் கொள்ளவும். தங்கம் மூன்று பலம் எடுத்துக் கொள்ளவும்.

காட்டிய விரும்புதானுங் கடும்பல மூன்று வைத்து
ஓட்டியே யுருகும்போது வுறப்போடு பறியைநீயும்
நீட்டியே யேழுமப்பா நிலைத்திடவொவ்வொன்றாகக்
கூட்டியே காரத்தோடு கொடுத்திட விழுங்கும்பாரே. 223

பாரிந்த யிரும்புதானும் பருகிய களங்கமப்பா
கோரிந்த நவலோகத்திற் கொடுத்திடா யிருபத்தொன்று
தாரிந்த மாற்றுப்பத்து தப்பாது பாரு பாரு
ஆரிந்த விரும்பின்வேதை யசையாது வுப்புவொன்றே. 224

மூன்று பலம் இரும்பை ஒட்டிலிட்டு உருக்கி உருகும் சமயத்தில் முன்பு எடுத்த மூன்று பலம் தங்கத்தை சேர்க்க அதன் பிறகு முன்கூறிய ஏழு வகை மருந்தையும் வரிசையாகவும் ஒவ்வொன்றாகப் போட்டுருக்கி கடைசியில் காரத்தைச் சேர்த்தால் இரும்பானது அனைத்தையும் உட்கொண்டு களங்காகும். இக்களங்கை நவலோகத்தில் இருபத்தொன்று தாக்கினால் நவலோகங்கள் தங்கமாகும் (லோகங்களுடன் சேர்த்து உருக்கும் முறைக்கே தாக்குதல் என்று பெயர்) இத்தங்கம் வேதியல் பொருளால் பாதிக்கப்படாது. (செயற்கை முறையில் தயாரித்த இத்தங்கம் இரசாயனத்தால் எந்தவித மாறுதலும் அடையாமல் எப்பொழுதும் தங்கமாகவே இருக்கும்)

குன்றித் தைலம்

அசையாமல முரியொன்றே யப்பனே தைலஞ் சொல்வேன்,
பசையான சாரம்ரெண்டு பருகிய சீனம்ரெண்டு
யிசையான யிணங்கன்ரெண்டு யியல்பலமாறுங்கூட்டி
தசையான நாறும்பூவைத் தனிப்பலம் நாலும்போடே. 225

போட்டிதைக் கல்வத்துள்ளே புகழானவமுரி வார்த்தே
யாட்டிதை நாலுசாம மப்பனே ரவியில் வைப்பாய்
நீட்டிதைவற்ற வற்ற நிரை நிரையமுரி வார்த்துச்
சாட்டிதை மெழுகுபோன்ற தனிப்பதம் பார்த்து வாங்கே. 226

அமுரித்தயிலம் சொல்கிறேன் கேள்! சாரம் ரெண்டு பலம், சீனம் ரெண்டு பலம், வெடியுப்பு ரெண்டு பலம், இவை ஆறு பலத்தையும், ஒன்றாகச் சேர்த்துக் கொண்டு இதனுடன் நாலு பலம் நாறும் பூவைச் சேர்த்து, கல்வத்திலிட்டு அமுரியை வார்த்து நான்கு சாமம் விடாமலரைத்து ரவியில் வைத்து உலர்ந்த பின் மீண்டும் அமுரியை வார்த்து மெழுகு பதமாகும் வரை அரைத்துக் கொண்டு பின்னர்

(வேறு)

வாங்கிவைத்து மாட்டவின்ன மருந்து கேளு
வளமான குன்றிமணி படியோ நாலு
தாங்கியிடித் திதற்குள்ளே மேனிச்சாறு
ததும்பவிடு வூறுதற்குச் சார்ந்த பின்பு
வோங்கியனா தோலோடு மெழுகுபோலே
வுழன்றெடுத்து முன்மெழுகுங் கூடப்போட்டுத்
தேங்கிரெண்டும் பிசைந்துறவாய் வில்லைபண்ணிச்
சிதறாமல் வுலருதற்கு ரவியிற் போடே. 227

நாலுபடி சூர்றிமணியை மேனிச்சாறில் ஊற வைத்து, பின்பு அதை அப்படியே கல்வத்திலிட்டு மெழுகுபோல் அரைத்து முன்னரைத்த மெழுகுடன் சேர்த்து பிசைந்து வில்லையாகத் தட்டி ரவியில் காயவைத்து,

போட்டெடுத்துக் கலயத்து ளிதனை வைத்துப்
புகழ்பெறவே யடித்தூரிற் நமரே போடு
காட்டெடுத்து வாய்மேலே சில்லுப் போட்டுக்
கடுங்குழிக்குள் கலையமொன்று கவிய வைத்து
நீட்டெடுத்த சந்துக்கு மண்ணே செய்து
நிலை நிலையா யெருவிட்டுத் தீயைப் போடு
வூட்டடுக்கப் பற்றியபின் னுமியைப் போட்டு
வுறவாக வாயில் பத மூணிப்பாரே. 228

ரவியில் காயவைத்த வில்லைகள் ஒரு கலையத்திற் போட்டு அடித்தூரில் தமரிட்டு பானையின் வாய்க்கு சில்லை வைத்து சீலை செய்து தமரின் வாய்க்கு நேராக மற்றொரு பானை வைத்து இரண்டு பானைக்கும் இடையில் உள்ள மண்ணால் மூடிஇவற்றை அப்படியே அசைக்காமல் பூமியில் குழி தோண்டிப் புதைத்து எருவை வைத்து தீமூட்டி உமியைக் கொட்டி மூட வேண்டும். புடம் முடியும் வரை மனதை ஒரு நிலையாக வைத்து மூலத்தை தியானம் செய்ய வேண்டும்.

ஊணியது வெந்துநன்றா யுறுதியாகி
வுற்றுப்பார் பதறாதே குளிரு மட்டும்
பேணியதை யெடுத்திடக் கீழ்க்கலையத் துள்ளே
பெருகியந்தத் தைலமது பெருகிநிற்கும்
வாணியிந்தத் தைலத்தாற் கட்டுமார்க்கம்
வகையுரைத்தாள் வகைகளெல்லாம் வளமாய்ச் சொல்வேன்
தூணிலிங்கஞ் சுறுக்கிடவே கட்டிப் போகுந்
துடிப்படவும் வெள்ளைசாங் கெவுரிசாமே. 229

புடம் வெந்து நீறாகிக் குளிர்ந்த பிறகு மேல் சட்டியை நீக்கி கீழுள்ள சட்டியை எடுத்துப் பார்த்தால் அச்சட்டியில் தைலம் நிரம்பியிருக்கும் இத்தைலத்தால் லிங்கத்தை சுறுக்கு போட்டால் லிங்கமானது கட்டியிறுகும் மேலும் இத்தைலத்தால் வெள்ளையும் (வெள்ளை பாஷாணமும்) கெவுரியும் சாகும் (மடியும்)

சாகுமப்பா மால்தேவி சிலையும் பாரு
தனியைந்துங் கட்டிடவே சகலங்கட்டும்
வேகுமப்பா பேரண்டந் தீயில்லாமல்
வெருவியதோர் தைலத்தின் விளக்கங்கேளு
ஆகுமப்பா பாஷாண மைந்து தானு
மதற்குள்முன் செய்வதுதா னறையக்கேளு
போகுமப்பா வூறலெல்லாம் பழச்சாறூட்டு
புரிந்தபின்பு முலைப்பாலைப் புகழவூட்டே. 230

அதே போல் துருசும், மனோசிலையும், சாகும (மடிந்து கட்டும்) கட்டிய இவ்வைந்து சரக்கால் எல்லா வகையான சரக்கும் கட்டும். பேரண்டமானது இத்தைலத்தால் நெருப்பில்லாமலேயே வேகும். இத்தைலத்தால் கட்டு முறையை

கூறுகிறேன் கேள்! முன் கூறிய ஐந்து வகையான (லிங்கம், துருசு, வெள்ளை, கெவுரி, மனோசிலை), பாஷாணங்களையும் பழச்சாறில் ஊற வைத்து அதிலுள்ள மாசுக்களையெல்லாம் நீக்கிப் பிறகு இவ்வைந்தையும் முலைப்பாலில் ஊற வைத்து அவற்றிலுள்ள நஞ்சுகளை நீக்கிக் கொண்டு,

ஊட்டியபின் வாட்டிடவுற் பனமே கேளா
யுயன்றிணங்க னிருகார முறவா முப்புத்
தீட்டியபின் சாரமொடு கண்டராறுந்
திகையாதே பலமாறுஞ் சேரக்கட்டி
நீட்டியதை மூன்றுபங்காய் வைத்துக்கொண்டு
நெடுங்கம்பி லிங்கமது பலமேயொன்று
கூட்டியிதைக் கரண்டிக்குள் பங்குவொன்று
கொடுத்து மெள்ளப் பிரட்டி யுண்ணக் குமட்டி வாட்டே.231

ஊற வைத்த சரக்குகளை வாட்டும் முறைகளை கூறுகிறேன் கேள்! வெடியுப்பு, பொன்காரம், வெங்காரம், கல்லுப்பு, சாரம், துருசு ஆகிய இவ்வாறு வகையான சரக்குகளையும் வகைக்கு ஒரு பலமெடுத்து ஒன்றாகக் கூட்டி, கூட்டிய சரக்குகளை மூன்று பாகமாகப் பிரித்துக் கொண்டு, பிறகு முன்பு முலைப்பாலில் ஊற வைத்துள்ள லிங்கத்தை ஒரு பலமெடுத்து அதனுடன் முன் மருந்தின் ஒரு பாகத்தைக் கூட்டி கரண்டியிலிட்டுப் புரட்டி வாட்ட வேண்டும்.

வாட்டிடுநீ யிப்படிதான் ரெண்டுபங்கும்
வயிரம்போ லிங்கமது வளமாய்ச் சாகும்
நீட்டிடுநீ யிம்முறையைப் பின்னாலு மப்பா
நிலைநிலையாய்ச் சுறுக்கோடு வாட்டித் தீர்த்துக்
கூட்டிடுபின் தைலத்தைச் சுறுக்குநீயுங்
கொடிய கட்டா மம்மம்மா கூறப்போகா
ஆட்டிடுபின் கட்டியதோ ராச்சரியங் கேளா
யம்மம்மா குன்றயி னாச்சரியந்தானே. 232

மீண்டும் முன்போல் லிங்கத்துடன் மற்றொரு பங்கைச் சேர்த்து வாட்டி அதன் பிறகு மூன்றாவது பங்கையும் சேர்த்து வாட்டி லிங்கத்தை தைலத்தால் சுறுக்கு போடவயிரம் போல் கட்டும். இவ்வாறே மற்ற நாலு வகையான பாஷாணத்தையும் முன்போல் மருந்து சேர்த்து வாட்டி தைலத்தால் சுறுக்கு போட்டால் நாலு வகையான பாஷாணமும் கட்டி வயிரம் போலாகும். இவையாவும் தைலத்தின் மகிமையாகும்.

தானென்றே முன்சொன்ன தயிலம் போக்கிச்
சாதிக்கும் பாஷாணந் தனக்குமப்பா
கானென்றே சுறுக்கோடு காரஞ்சாரங்
கைவிட்டு மறக்காதே மறந்தாயானால்
வேனென்றே யூறலரு வேதையோடா
வேதைவிட்டா லோகமெல்லாம் விழலாய்ப் போகும்
பானென்றே யுண்டமைத்தா ளாத்தாள் சொன்னாள்
பார்த்தவர்க்கு வாதரசம் பலிக்குங் காணே. 233

முன்சொன்ன முறைகளான தைலத்தால் சுறுக்குப் போடுதல் காரசாரம் சேர்த்து வாட்டுதல் போன்றவைகளை மறந்தாயானால் பாஷாணத்தின் ஊறல் அகலாது. வேதை முகத்தில் லோகத்துடன் சேர்த்துருக்கினால் வேதையானது பாழாகும். முன் சொன்ன தைலமுறைகள் யாவும் ஆத்தாளான தாய் சொன்னதாகும். இவற்றை முறையாக செய்து பார்த்தவர்க்கு வாதம் பலிதமாகும்.

காணுநீ கட்டியதோர் லிங்கந் தன்னை
கைமுறையாய்க் காட்டுகிறேன் வேதை யோடப்
பூணுநீ தங்கத்திற் சமனாயூட்டு
போடுங்கால் வெண்காரம் புகட்டிப் போடு
ஆணுநீ தங்கமது ரசமே யூட்டி
லடித்துடனே நொறுங்குமது வப்பா பாரு
தாணுநீ தங்கமது குருவே யாச்சு
சாதிக்கும எித்ததுதான் தயவாய்ப் பாரே. 234

கட்டிய லிங்கத்தால் வேதை செய்யும் முறையைக் கூறுகிறேன் கேள்! தங்கத்தை ஒரு நிறையாக எடுத்து அவ்வெடைக்கு கட்டிய லிங்கத்தைச் சேர்த்து வெண்காரமிட்டு உருக்கினால் தங்கமானது நொறுங்கி குருவாகும் இக்குருவால் வேதை சித்தியாகும். (அதன் முறையைக் கேள்!)

தயவுடனே யிக்குருவைச் செம்பு மூன்றிற்
றாக்கொன்று தனிச்செம்பு வுடையும்பாரு
துயவுடைய துய்யானிற் பத்துக்கொன்று
சூட்டிந்தச் செம்புதனைத் துலக்கமாகு
மயவுடைய மாற்றேழு மப்பாகாணு
மசையாது வுப்புக்கு மடித்துப் போகா
ஓயவுடைய வன்னி கெற்ப மோடும் வேதை
யுற்றுப்பார் காயசித்தி யுறைக்கும் பாரே. 235

தங்க குருவை செம்புடன் மூன்றிற்கொன்று என்ற விகிதத்தில் சேர்த்துப் பார்! செம்பானது உடைந்து நொறுங்கும். தங்க குருவை வெள்ளியில் பத்துக்கொன்று சேர்த்து மேற்கூறிய நொறுங்கிய செம்பையும் சேர்த்தால் ஏழு மாற்றுள்ள தங்கம் கிட்டும். இத்தங்கமானது இரசாயனத்தால் எந்த வித மாறுதலுமடையாது மேலும் இதனால் காயசித்தியும் பலிதமாகும்.

உறைத்துண்ணச் சித்தருக்கு மண்டலத்தினுள்ளே
யொரு பணங்காண் தினமுண்ணும் பெண்ணைப் போக்கி
மறைத்துண்ணும் புளியுப்பை வாசனையைப் போக்கி
மகத்தான கற்பமிது வல்லாலுண்டோ
நிறைத்துண்டோ ரென்னீல மூலமூர்த்தி
நிலவரமா யுண்டுசட்டை நீக்கிப்போட்டா
ரெறைத்தொன்று வாசியெல்லா முள்ளே புக்கி
விருந்துண்ணுங் கற்பத்தை யேறப்பாரே. 236

தங்க குருவை ஒரு மண்டலம் பண விடை எடுத்து உட்கொண்டு புளி, உப்பு, பெண் இவை மூன்றையும் நீக்கி கற்ப நெறியில் நின்றால் தேகமானது சட்டை கக்கி வாசியெல்லாம் மூலத்தில் ஒடுங்கி நிற்கும். இவ்வாசியைக் கொண்டு மேலேறு.

ஏறவெங்கே பார்ப்பதுதா னென்ன வேண்டா
மெளிதாக வாதார மேறிப்பாரு
தேறவெங்கே கண்டுநீ தெளிந்து தானாற்
சித்தாகுஞ் சிவனெங்குஞ் சிதறிப் போகா
னாறாவெங்கே பூரணத்தி லூணியேறா
யளவற்ற நிற்குணத்தை யப்பா பாரு
மாறவெங்கே யொன்றுமில்லை மனதுமில்லை
மருவிநிற்கு மப்புமுப்பு வளம்போற் காணே. 237

எங்கே பார்ப்பது எவ்விடம் ஏறுவது என்று தயங்கி நிற்க வேண்டாம். மூலத்தை நோக்கி ஆறாதாரத்தை கண்டு ஏறு. சித்து ரூபமாயிருக்கும் சிவபெருமான் அப்பொழுது நம்முடைய சித்தத்தில் நின்று பிரகாசிப்பார். ஆகவே பூரணத்தில் மனதை நாட்டி ஆறாதாரம் ஏறினால் ரூப மற்ற நிற்குணத்தில் சித்தம்லயித்துவிடும். அப்பொழுது சாதகன் (யோகம் பயிலுபவன்) தன்னையோ பிறிதொன்றையோ காண மாட்டான். நீரில் உப்பு எவ்வாறு ஒன்றாய்க்கலந்து விடுகிறதோ அதுபோல மனம் மற்றும் எல்லா புலன்களும் நிர்க்குணமான பரப்பிரம்மத்திடம் இரண்டறக்கலந்துவிடும்.

காணுமந்த மால்தேவிக் கட்டையப்பா
கலருசமன் சவ்வீரங் கல்வத் திட்டுப்
பூணுமந்த நீறோடு பொரிகாரம் போட்டுப்
புகழ்பெறவே யரைத்து நன்றாய்ப் பொடியாய் வில்லை
தோணுமந்தப் பணம் போலே கட்டி வைத்துச்
சுகமான தங்கத்துக் கிடையே யூட்டா
யாணுமந்தத் தங்கத்தைச் செம்புரெண்டி
லடவாக வொன்றுவிட்டே யாண்மை பாரே. 238

கட்டிய துருசை எடுத்து அதற்குச் சமமாக சவ்வீரத்தையும் பொரிகாரத்தையும் சேர்த்து கல்வத்திலிட்டு நன்றாய் அரைத்து பண எடை யுள்ள வில்லையாய்த் தட்டி வில்லை யின் எடைக்கு சம அளவு தங்கத்தைச் சேர்த்து இரண்டு பங்கு செம்புடன் ஒரு பங்கு தங்கம் சேர்த்தால் கிடைக்கும் பலனை கூறுகிறேன் கேள்! (பாட்டில் பூணுமந்த நீறோடு என்று வருவதல் அது எந்த சரக்கை உணர்த்துகிறது என்று தெளிவாகவில்லை. அதாவது வெடியுப்பு செயநீரா அல்லது துருசையும் சவ்வீரத்தையும் சேர்த்ததால் உண்டாகிய நீறா என்று தெரியவில்லை).

ஆண்மையாஞ் செம்பெடுத்து வெள்ளிபத்தி
லடவாக வொன்றீய வப்பா லெட்டு
தேண்மையாய்ச் சொல்வதல்ல பார்த்துச் சொன்னேன்
கெடியான மால்தேவி விரும்பிலூட்ட
வேண்மையா யுருகியே யீயம் போலா
மெளிதான வியமல்ல வேறும் வேதை
தோண்மையாய் நாகமிடு லிங்கம் போடு
சுகமாகத் திசைமாற்றஞ் கூட்டு நாரே. 239

நூறிடுவ ்த திலையே யெண்ண வேண்டா
நுகர்ந்த நவலோகத்தி னுகர்ந்து பாரு
வேறிடவே மனோசிலையின் வேதை கேளு
விளங்கியதோர் மதியெட்டுச் செம்புநாலு
தேறிடவே நாகம்ரெண்டு தங்கம்ரெண்டு
சிறந்து நன்றா யுருகுமப்போ சிலைதானொன்று
கூறிடவே யிட்டூது குமட்டியூது
குறையாது திசைமாத்துக் குறிப்பாய் பாரே. 240

மேற்கூறிய இரண்டு பலச் செம்பில் ஒரு பலத்தை எடுத்து பத்து பலம் வெள்ளியுடன் சேர்த்தால் எட்டு மாற்றுடைய தங்கம் கிட்டும். (துருசையும், சவ்வீரத்தையும், பொரிகாரத்தையும் சேர்த்தரைத்து வைத்துள்ள வில்லைகளில்) தங்கத்தை சேர்க்காமல் வில்லையின் எடைக்கு இரும்பை சேர்த்தால் இரும்பானது உருகி ஈயம் · போலாகும். இது சாதாரண ஈயமல்ல வேதை புரியக் கூடிய ஈயமாகும். இவ்வீயத்துடன் நாகமும் லிங்கமும் சேர்த்துருக்கி நூற்றுக்கொன்று நவலோகத்துடன் சேர்த்துருக்கினால் பத்து மாற்றுள்ள தங்கங்கிட்டும்.

முன்பு கட்டிய மனோசிலையின் வேதையைப் பற்றி கூறுகிறேன் கேள்! (இம்மனோசிலை முன்கூறிய ஐந்துவகை பாஷாணக் கட்டில் சொன்னதாகும்). வெள்ளி எட்டு, செம்பு நாலு, நாகம் ரெண்டு, தங்கம் ரெண்டு இந்நான்கு லோகத்தையும் ஒன்றாக சேர்த்துருக்கி இவற்றுடன் ஒரு பங்கு மனோசிலையை சேர்த்துக் கரியிலிட்டு நன்றாய் ஊதினால் பத்து மாற்றுள்ள தங்கங்கிட்டும்.

குறிப்பான வெள்ளைதனை வங்கத்தூடே
குறையாமற் சமன்போடு குடிலஞ்சாகும்
நெறிப்பான குடிலத்தை வெள்ளி ரெண்டில்
நேரிட்டுப் பொடியாகும் நிலைக்குஞ் சூதம்
மறிப்பாகச் சமனூட்டு மாண்டுகட்டு
மாண்ட குருவா மட்டு மறைவிற் றீயைப்
பொறிப்பாக மணல் மறைவிற் போட்டுவாநீ
புகழ்பெறவே வெண்கருவாற் போடுவாயே. 241

(முன்கூறிய ஐந்துவகைப் பாஷாணத்தில் வெள்ளைப் பாஷாணத்தால் வேதை செய்யும் விதம்). கட்டிய வெள்ளைப் பாஷாணத்திற்கு சமன் ஈயத்தை சேர்த்தால் வங்கம் மடியும். மடிந்த வங்கத்தை வெள்ளி ஒன்றுடன் சேர்த்தால் வெள்ளியானது பொடியாகும். இப்பொடிக்கு சமன் சூதத்தை சேர்த்தால் சூதமானது மடிந்து கட்டும். கட்டிய சூதத்தை வெண்கருவால் அரைத்து மணல் மறைவில் முப்பது முறை புடம்போட வேண்டும்.

போட்டுவா முப்பதிலே சீதஞ்சூதம்
புகழ்பெறவே செயகுரு வாய்ப்பூட்டக் கேளு
காட்டுவாய் வங்கத்தி லூற்றிக் கொண்டு
கைகண்ட ரசிதமது கடுகுசீனம்
பூட்டிடுவாய் செம்பிலேயு மிரும்பிலேயும்
புகழ்மாற்று பத்தாகு மன்பதுக் கொன்று
நீட்டுவாய் ரசிதமிது நிலைக்கனத்தை
நீக்குமப்பா வீயத்தை நீட்டியூதே. 242

இவ்வாறு பத்து முறை புடம் போட்டால் சூதமானது குருவாகும். இக்குருவை வங்கத்தில் நூற்றிற்கொன்று சேர்த்தால் ரசிதமாகும். இந்த ரசிதத்துடன் கடுகளவு சீனத்தை சேர்த்துக் கொண்டு இரும்பிலும், செம்பிலும் ஐம்பதுக்கொன்று சேர்த்துருக்கினால் பத்து மாற்றுள்ள தங்கமாகும். இந்த ரசிதத்தால் சொல்லமுடியாத அளவிற்கு வேதையுண்டாகும். (ஆகவே வேண்டிய பொழுது சூதகுருவை வங்கத்துடன் சேர்த்து உருக்கி வேதை செய்து கொள்.)

ஊதியபின் கெவுரியிட யுற்பனத்தைக் கேளு
யோடுறதோர் வேதையிட வுறுதிகேளு
ஆதியபின் கெவுரிதன்னைக் கருநாகத் தூட்டா
யப்பனே சமபாக மீயங்கூட்டு
மாதியபின் னீயத்தைத் தங்கத்தி லூற்றி
வளம்பெறவே தங்கம் ரெண்டுக் கொன்றேயப்பா
தாதியபின் தங்கத்திற் சூதஞ்சேரு
தடவாகப் புடம்போடு சாகும்பாரே. 243

(ஐந்து வகைப் பாஷாணக் கட்டில் ஒன்றான கெவுரியின் வேதை முறை). கவுரியால் வேதை புரியும் முறையைக் கேள்! கெவுரியை கருநாகத்துடன் சேர்த்து அதற்கு சமன் ஈயம் கூட்டி இவ்வீயத்துடன் தங்கத்தை சேர்த்து உருக்கிக் கொண்டு தங்கம் இரண்டு பங்கிற்கு ஒரு பங்கு சூதத்தை சேர்த்துப் புடம் போட்டால் சூதமானது மடியும்.

பாரிந்தச் சூதத்தை நவலோகத்திற்
பாய்ச்சிடவே நாலைந்தோடாறு மேழு
கோரிந்த மாற்றாகு மன்பதுக் கொன்றேடுங்
கொடுத்தநவலோக மெல்லாங் கறுப்பாய்க்காணும்
வாரிந்தக் கெவுரியுட வழங்கியதோர் வழக்க
மகத்தான வூரப்பா வளமாய்ச் சுட்டு
சேரிந்த வஞ்சனத்தின் தொழிலைச் சொன்னேன்
செகமறியப் பார்த்து நன்றாய்ச் செப்பினேனே. 244

இச்சூதத்தை நவலோகத்தில் ஐம்பதுக்கொன்று சேர்த்துருக்கினால் நான்கு முதல் ஏழு மாற்றுவரைக் கொண்ட வேதைத் தங்கம் கிட்டும். கவுரியை நவலோகத்தில் சேர்த்தால் லோகங்கள் கருத்தநிறங் கொள்ளும். இவ்வாறு முறையாக செய்து பார். இங்கு கூறியவைகள் யாவும் முன்பு என்னால் செய்து பார்க்கப் பட்டவையாகும். அதை இவ்வுலக மக்கள் அறியும் பொருட்டு இந்நூலில் கூறி வைத்தேன்.

செப்பியதோர் முன்சொன்ன தயிலம் ரெண்டில்
சேர்ந்திடுங் கெந்தகமுங் காரஞ்சாரம்
மொப்பியதோ ரமுரி கொண்டே யரைப்பாயப்பா
முற்பனந்தா னொருவருக்கு முறை செய்யாதே
அப்பியதோர் விரையோடே யமுரிகூட்டி
லாகாகா கல்லுப்போ டெல்லாஞ் சாகுங்
கப்பியல்லோ மற்றதெல்லாங் கண்டுபாரு
கைவிட்ட சூல்பத்திரங்காண் தயிலந்தானே. 245

முன்பு கூறிய குன்றிமணித் தயிலம் ரெண்டு பங்கு எடுத்து அதனுடன் கெந்தகம், காரம், சாரம் மூன்றையும் சேர்த்து அமுரிவிட்டு அரைத்து வைத்துக் கொள். இதனால் கல்லுப்பு முதல் எல்லா சரக்கும் மடியும். (குன்றிமணி விரையுடன் அமுரி சேர்ந்தால் சகல சரக்கும் கட்டும்). இம்முறையை உலகிலுள்ளோர்க்கு சொல்லாதே.

தானென்ற வாதிகள்தான் சமையங்கூட்டிச்
சாதிக்கு நூலறியார் தற்கஞ் சொல்வார்
கானென்ற யிருவர்க்கும் வார்த்தை வாதங்
கைமுறையுங் காணார்கள் கரையுங் காணார்
தேனென்ற செம்பினி லூறல் போக்கார்
சேர்ந்தவின லோகத்தின் சேர்வுங் காணா
வானென்ற வெள்ளி செம்பு ரெண்டுங்கூட்டி
மாட்டுவார் களங்கெல்லா மண்ணாய்ப் போமே. 246

வரட்டு வாதியும், சமயவாதியும் இருவரும் பலகூட்டங்கூட்டி தங்கம் செய்வார்கள். ஆனால் உண்மையான பொருளை அறிந்திருக்க மாட்டார்கள். அதைப்பற்றிக் கூறும் நூல்களை பார்த்திருக்க மாட்டார்கள். முறையாக வேதை முறையை அறியாமலும் செம்பின் ஊறல் (மாசு) நீக்கும் முறையை அறியாமலும் அப்படியே செம்பையும், வெள்ளியையும் சேர்த்து களங்குகள் செய்வார்கள். இதனால் வேதை மண்ணாய்ப் போகும்.

போமந்த ரவிமதியை யீயங்குத்திப்
புகழ்பெறவே யூதியதைப் பொன்னே யென்பார்
வாமந்த மாற்றிதுக்கு மூன்றோ நான்கோ
வர்ணமுண்டோ முறையென்பார் மருள்வாரப்பா
காமந்த வூறியது கையோனாறுங்
களங்கதிக மதினாலே கடிகிச்சூறல்
வோமந்த வாதிகளுக் குள்ளபாடா
மோகோகோ வாச்சரிய முளறினாரே. 247

செம்பையும், வெள்ளியையும் சேர்த்துருக்கி அதனுடன் ஈயத்தை சேர்த்து குகையில் வைத்து ஊதி பொன் என்பார்கள். இப்பொன் மூன்று முதல் நான்கு மாற்று வரையிருக்கும் என்பார்கள். மேலும் இதற்கு ஈடு எதுவும் கிடையாது என்பார்கள். இதை களங்காக செய்வார்கள். செய்த மருந்துக்கு வீரியம் இருக்காது. இவ்வாறு உலகை ஏமாற்றித் திரியும் வாதிகள் உளறுவார்கள்.

லிங்கக் கட்டு

உளறாதே லிங்கமொன்று கட்டக்கேளு
வுற்பனமாய்ச் சொல்லுகிறே னுறைத்துப்பாரு
தளறாதே முன்சுறுக்கு வாட்டுந் தீர்த்து
சாங்கமறப் பண்ணினபின் சாற்றக்கேளு
அளறாதே கவுசிக்க மருந்து சொல்வே
னடுக்கடுக்கா யணைத்துவர வரப்புநீயும்
நளறாதே கண்டரொடு சூடன்ரெண்டு
நாட்டியரை சமபாகம் ரவியிற் போடே. 248

லிங்கத்தைக் கட்டுவதற்கு மற்றொரு முறையைக் கூறுகிறேன் கேள். முன் செய்தது போல் லிங்கத்தை சுறுக்கு போட்டு வாட்டவேண்டும். (அதாவது குன்றிமணி தைலத்தால் சுறுக்குப்போட்டு 231ஆம் பாடலில் கூறியபடி லிங்கத்தை வாட்ட வேண்டும்). இந்த லிங்கத்தின் மேல் பூசுவதற்கு மருந்தைக் கூறுகிறேன் கேள்! துருசையும் சூடனையும் சமஅளவாக எடுத்து நன்றாக அரைத்து சூரிய வெப்பத்தில் காயப்போட வேண்டும்.

போடுநீ யிணங்கனொடு காரம்ரெண்டு
புகழ்பெறவே யரைத்து நன்றாய்ப் போடுவெய்யில்
நீடுநீ கல்லுப்புச் சீனம்ரெண்டு
நிறைசரியா யரைத்தரைத்து நீட்டாய் வெய்யில்
யாடுநீ சாரமொடு யண்டத்தோலு
மளவுசரியா யரைத்து யப்பா நீயுங்
கோடுநீ லிங்கமது பலமும் ரெண்டு
குதற்பாமற் சுறுக்கு முதல் வாட்டுந்நீரே. 249

வெடியுப்பையும், காரத்தையும் சமஅளவாக எடுத்து நன்றாக அரைத்து ரவியில் காயப்போட்டு அதேபோல் கல்லுப்பையும் சீனத்தையும் சரிநிறை எடுத்து அரைத்து வெய்யிலில் உலர்த்திக் கொண்டு பிறகு சாரத்தையும், அண்டத்தோலையும் சமஅளவு எடுத்து அரைத்து வெய்யிலில் காயப்போட்டு எல்லாவற்றையும் தனித்தனியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

தீர்ந்த லிங்கக் கட்டியின்மேற் பூசக்கேளு
சிறந்திடு நற்கற்பூரஞ் சிறந்த வீரம்
வாந்தநல்ல புழுகோடு வுரமுங்கூட்டி
வளமான குறும்பியோ யஞ்சுங்கூட்டி
மாந்தவிடை வராகனொன்று வகைக்கு மப்பா
வளமாக யரைத்து நன்றாய் லிங்கத்தப்பி
சேர்ந்த தணற்கரியோட்டிற் சிவக்கவாட்டி
சிக்கெனவுந் தயிலமுண்ணுந் திறமைபாரே. 250

கற்பூரம், வீரம், புனுகு, உரம், குறும்பி இவை ஐந்தும் வகைக்கு வராகனிடை எடுத்து நன்றாக அரைத்து கட்டிய லிங்கத்தின் மேலே பூசி கரியோட்டில் வைத்து சிவக்க வாட்டினால் லிங்கம் மருந்தையுண்ணும். பிறகு அதன் மேல் பூசும் தைலத்தைப் பற்றி கூறுகிறேன் கேள்! (உரம் என்ற சரக்கு எதை குறிக்கிறது என்று புரியவில்லை).

திறமையொத்த லிங்கத்தின் மேலேகேளு
சேர்ந்துரைத்த நண்டு நெய்யிற் குன்றிவித்தை
அறமையுற மேற்பூசி மேலே கேளு
அப்பிடுநீ கண்டருடன் சூடன் தோண
திறமையுட னதுமேலே யிணங்கள் காரம்
நிறை நிறையாய் லிங்கத்தி னிடையே தாக்கு
உறமை யுடனது மேலே சீனமுப்பை
யுற்பனமாய்ப் பூசியிதை யுணரவாட்டே. 251

நண்டு நெய்யிற் குன்றி விதையை அரைத்து அதை லிங்கத்தின் மேலே பூசி அதன் மேல் (முன்பு அரைத்து வெய்யிலில் காயவைத்திருந்த சரக்குகளில் முதல்

சரக்கான துருசு சூடனையும், லிங்கத்தின் எடைக்கு சமஅளவு எடுத்து பூசி அதன்மேல் வெடியுப்பும் வெண்காரமும் சேர்த்த மருந்தை லிங்கத்தின் எடைக்கு சமமாக பூசி அதற்குமேல் கல்லுப்பும் சீனமும் சேர்த்தரைத்த மருந்தை லிங்கத்தின் நிறையாக எடுத்து பூசவேண்டும். ஒரு மருந்து பூசியபின் மற்றொரு மருந்தைப் பூசுவதற்கு முன் நன்கு உலரவைத்து நண்டு நெய்யில் குன்றி விதை சேர்த்தரைத்த தைலத்தில் துவைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். மருந்துகளை பூசியபின் கரியோட்டில் வைத்து வாட்ட வேண்டும்.

வாட்டி நன்றாய்க் கரியோட்டில் வளமாய் நீயு
மறுகியதின் மேற்சார மண்டம் போடு
நீட்டி நன்றாய் முறைமுறைக்கு நண்டு செய்யும்
நிலைத்துவரக் குன்றியப்பா நினவையுன்னிப்
பூட்டிநன்றாய் வாட்டியதைப் புகலக்கேளு
பொலிவான சேங்கொட்டை யிருபத்தைந்து
காட்டி நன்றாய் வெட்டிவெட்டிக் கரண்டிக் குள்ளிட்டு
கனல் வைத்துக் கெந்தகங் கால்பலமும் போடே.. 252

வாட்டிய பிறகு அந்த லிங்கத்தின்மேல் சரமும் அண்டத்தோலும் சேர்த்தரைத்து ரவியில் காயவைத்திருந்த மருந்திலிருந்து லிங்கத்தின் நிறைக்கு சமமாக எடுத்துப் பூசி நண்டு நெய் தைலத்தில் தோய்த்து வாட்டவேண்டும். பிறகு இருபத்தைந்து சேங்கொட்டைகளை எடுத்துக்கொண்டு அவற்றைத் துண்டு துண்டாய் வெட்டி ஒரு கரண்டியினுள் போட்டு அதனுடன் கெந்தகத்தை கால் பலம் சேர்த்து.

போடுநீ மேஷத்தின் கொழுப்புக் கேளுப்
புகழ்மஞ்சட் கருவுமட்டும் போடுபோடு
ஆடுநீ தணல்மேலே தைலமானா லந்தித்தக்
கவசமொடு லிங்கம்போடுத்
தோடுநீ தைலமுண்ணத் திறமாய்நீயுந்
திரும்பியதைப் பிரட்டிமெள்ளத் திறமாய்வாட்டுக்
கோடுநீ மலைதோறுஞ் செய்யுமார்க்கங்
கொள்கினேன் முழுக்கட்டுக் கொள்கினேனே. 253

அதனுடன் ஆட்டின் கொழுப்பையும், முட்டையின் மஞ்சள் கருவையும் கூட்டிக் கொண்டு தணலின்மேல் காட்டினால் தைலமாகும். இத்தயிலத்தில் மேற்படி லிங்கத்தை மெள்ளப் புரட்டிப் புரட்டி வாட்டினால் லிங்கம் கட்டும். (தயிலம் வாங்க வாங்க மேலும் தைலத்தை சேர்த்து வாட்ட வேண்டும்) இக்கட்டு முறை மலைகளில் வசிக்கும் சித்தர்களின் கட்டுமுறையாகும். இம்முறையே முழுமையான கட்டுமுறையாகும்.

செம்பினூறல் போக்க

கொள்கினேன் முழுமுறையாய்ச் செம்புசுத்திக்
குறையாமல் பார்த்தவற்குப் பொன்னேயாகும்
நள்கினே னென்றுமெள்ள நழுவிவிட்டால்
நாய்போலே யலைவார்கள் வாதம் பொய்யாம்
நெள்கினேன் செம்பினுட வூறல்போக
நிலைக்கவொரு முறைசொல்வேன் நினைவாய்க் கேளு
அள்கினே னண்டத்தோல் பலமதொன்று
யதற்கெடையாய் சாரத்தை யணைத்துப்பாரே. 254

செம்பை முழு `மயாகச் சுத்தி `செய்வதற்கு மார்க்கம் கூறுகிறேன் கேள். இம்மார்க்கத்தை சரியாக அறிந்து செய்து பார்த்தால் வாதத்தொழில் சித்தியாகும். இவ்வாறுயில்லாமல் கவனக்குறைவாகவும், முழுமையான சுத்தி செய்யாமலும் வாதத்தொழிலில் ஈடுபட்டால்பலிதமாகாது. அண்டத்தோல் ஒரு பலம் எடுத்துக் கொண்டு அதனுடன் ஒரு பலம் சாரத்தையும் சேர்த்து நன்றாக அரைக்க வேண்டும்.

அணைத்து ரெண்டுமான மட்டுமரைப் பாயப்பா
யதற்குள்ளே கால்பலந்தான் காரம்போடு
யிணைத்து வொன்றாய்ப் பொடியாக்கி வைத்துக்கொண்டு
யெடுபலந்தான் செம்பையொருக் குகையில்வைத்து
பிணைத்துநின்று வுருக்குமப்போப் பொடியைத்தூவுப்
பேரான வூறலறும் பிலக்குஞ் செம்பு
கனத்த செம்பு வூறலற்றால் கனகமாகுங்
கண்கெட்ட வாதிகளே கருதிப்பாரே. 255

இரண்டும் ஒன்று சேர்ந்து மாவான பின்பு கால் பலம் வெங்காரம் கூட்டி நன்றாக மத்தித்து பொடியாக்கி கொண்டு ஒரு பலம் செம்பை எடுத்து குகையில் வைத்து உருக்கி முன் பொடி செய்த மருந்தை தூவினால் செம்பானது ஊறலற்று பலக்கும் பார்ப்பதற்கு அசல்பொன் போன்றேயிருக்கும். வாதமுறையை பற்றி முழுமையாக அறியாத குருட்டு வாதிகளே! நான் கூறியபடி முறையாகச் செய்து பாருங்கள்.

பாருநீ செம்பினுட வூறலற்றால்
பளிச்சென்று வெளுப்போடும் பருவங்கேளு
தூருநீ யண்டத்தோல் சாரங்காரந்
தனிமுத்து மெடைபோல தயவாய்க்கூட்டிக்
கோருநீ சவ்வீரப் பலமோ கால்தான்
கூட்டியொக்கப் பொடியாக்கிக் குமுறவைத்துத்
தேருநீ முன்செம்பை யுருக்கியப்பா
திறமாகத் தூவிமெள்ளச் செந்தியேறே. 256

செம்பானது ஊறலற்றால் (மாசு நீக்கி சுத்தமானால்) பளிச்சென்று பிரகாசிக்கும். மாசு நீங்க வில்லையானால் முன்போல் அண்டத்தோல் சாரம் இவை இரண்டையும் வகைக்கு ஒரு பலமெடுத்து நன்றாக அரைத்து அதனுடன் கால் பங்கு காரங்கூட்டி மேலும் நன்றாய் அரைத்து இச்சரக்குடன் கால் பலம் செவ்வீரத்தையும் கூடப்போட்டு பொடித்துக் கொண்டு முன் சுத்தி செய்த செம்பை எடுத்து குகையில் வைத்து உருக்கிப் பொடியைத் தூவினால் செம்பானது சூரியன்போல் பிரகாசிக்கும்.

ஏறுநீ யிரதத்தூ ளிட்டுமிட்டே
யெழிலாக நாலுதர மிளைக்க வேண்டாந்
தூறுநீ பொன்னுக்கு வித்தாஞ் செம்பு
சோங்கமுட னூறலற்றாத் தங்கமாகும்
வேறுநீ வெறுஞ் செம்பைப் பூட்டினாக்கால்
விழலாகும் வாதமெல்லாம் விரைந்து பாரு
சோறுநீ வேணுமென்றாற் சுத்தி பண்ணு
சுழன்றலைய வேணுமென்றாற் சும்மாபாரே. 257

இவ்வாறு நான்கு முறை பொடியைத் தூவி உருக்கினால் செம்பின் ஊறல் நீங்கி முழுமையான சுத்தியாகும். இச்செம்பு தங்கத்திற்கு ஆதியாகும். இம்முறையை அறியாமல் வெறுஞ்செம்பை உருக்கி வாதம் செய்தால் வாதமானது விழலாய்ப் போகும். ஆகையால் வாதம் வேண்டுமென்றால் முறையாக சுத்தி செய்ய வேண்டும். முறையாகச் சுத்தி செய்யாமல் வாதம் செய்து நாய்போல அலைய வேண்டாம்.

பாரென்று மாயிசொல்லப் பார்த்துக் கண்டேன்
பண்பான நூல்முறையிற் பாடிப்போட்டேன்
யாரென்றேன் பார்த்தவர்க்கு வாத சித்தி
யறியாட்டா லொன்றுமில்லை யப்பா கேளு
நேரென்று சொன்னமுறை யென்னூற்றப்பில்
நினைவு கெட்ட கொங்கணனோ வென்று சொல்லும்
வாரென்ற வென்னூலைப் பார்த்துக் கெட்டோர்
வையகத்தி லொருவரில்லை வளமாய்ப் பாரே. 258

இம்முறைகள் யாவும் ஆயியான மனோன்மணித் தாயாரிடமிருந்து நேரடியாக கற்றுக் கொண்டவையாகும். அதை அப்படியே மறைக்காமல் இந்நூலில் பாடிவிட்டேன் ஆகையால் இந்நூலை முழுமையாகப் படித்து முறையாகச் செய்து பார்த்தால் வாதம் சித்தியாகும். இல்லையேல் வாதம் சித்தியாகாது. இந்நூலில் கூறியுள்ளவைகளில் ஒரு தொழிலேனும் தப்பானால் 'நினைவு கெட்ட கொங்கணனே' என்று சாடுங்கள். என்னூலைப் பார்த்து வாதம் செய்து கெட்டவர்கள் இவ்வுலகத்தில் ஒருவருமில்லை.

வளமான வென்னூலுக் கேதுவொப்பு
மற்றொன்று மொவ்வாது மகத்தாம் போதங்
களமான பூரணமும் நாளுநேராங்
கைகாட்டக் குருவேண்டாங் கைப்புண்ணுக்குந்
தளமான கண்ணாடி வேணுமோதான்
சமுதாயம் போலென்னூலைச் சாதித்தோர்க்கு
உளமான நெஞ்சினுள்ளே யுரைத்துப்பாரு
ஒரு சொல்லுந் தப்பாது வூணுவூணே. 259

என்னுடைய இந்நூலுக்கு சமமானது வேறொன்றும், இவ்வுலகத்தில் இல்லை. என்னூலை நன்றாகப் படித்து சிந்தித்துச் செயல்பட்டால் எல்லா வகையான தொழிலும் சித்தியாகும். இவற்றைத் தொட்டுக் காட்ட குருவின் உதவிகூட வேண்டாம் (எல்லாம் தானே சித்தியாகும்.) ஒரு சொல்லுந் தப்பாது அப்படிப்பட்ட பெருமை கொண்டதாகும் இந்நூல்!

ஊணியதோர் சுத்தித்த செம்பு ரெண்டு
உறப்போடு லிங்கமொன்று மொப்பாயப்பா
பேணியதோர் தங்கமொன்று நாலுஞ் சேரப்
பெருகியதோர் காரமிட்டுப் பெலக்கவூது
வேணியதோர் மதிபத்தி லொன்றேயீய
விளங்கிடுமே மாற்றெட்டு விரைந்து பாரு
ஆணியதோர் நாகமொன்று நாலிற்கூட்ட
அப்பனே தசமாற்றா மறிந்து பாரே. 260

சுத்தி செய்தசெம்பை இரண்டு பலமெடுத்து இதனுடன் லிங்கமும் தங்கமும் வகைக்கு ஒரு பலங்கூட்டி ஒன்றாய்ச் சேர்த்து குகையில் வைத்து காரமிட்டுருக்கி வெள்ளியில் பத்துக்கொன்று சேர்த்துருக்கினால் எட்டு மாத்துடைய தங்கமாகும். அதனுடன் நாலிற்கு ஒரு பங்கு நாகம் சேர்த்துருக்கினால் பத்து மாற்றுடைய தங்கங்கிட்டும்.

அறிந்தளந்த நூலோடே மூலநாயன்
அய்யனுட நூலெல்லா மகண்டகாடு
பிறிந்தடியேன் சொன்னநூல் பேதைக்கொங்கை
பெரியோர்கள் சொன்னதெல்லாம் பிறவிக் கொங்கை
முறிந்து நின்று மனமடைந்தால் முதிர்ந்த கொங்கை
முயன்றவர்க்கு மனமுவந்த மூலக்கொங்கை
மறிந்துறைத்த நாயனார்க்குச் சலியக்கொங்கை
மாற்கங்காண் நூலுக்கு மனத்திற் பாரே. 261

சுத்தி முறை

மனமே நீ மயங்காதே செம்பு போலே
வளமாகச் சுத்திபண்ண யிரும்பை நீயுங்
கனமேனி நாகத்தை வங்கந்தன்னைக்
கைமுறையாய்ச் சுத்திபண்ணுகளிம்பு போகுந்
தனவிரும்பின் சவுடுபோனாற் றங்கந் தங்கஞ்
சமமான விரும்போடு தாயாம் நாதம்
வனமேனி யலையாதே காரசார
மகத்தான கட்டிதுதான் மனதிற் காணே. 262

செம்பை மட்டும் சுத்தி செய்து வாதம் பார்த்தால் போதாது. செம்பைப் போன்றே இரும்பையும், நாகத்தையும், வங்கத்தையும் சுத்தி செய்ய வேண்டும். இரும்பிலுள்ள மாசுக்களை நீக்கினால் செம்பைப் போன்றே இரும்பும் பிரகாசிக்கும். இரும்புக்கு சம அளவு ஆயிநாதமும் காரசாரமும் சேர்த்துருக்கினால் இரும்பானது சுத்தியாகும். இது மிகவும் சுலபமான முறையாகும்.

காணவைந்து லோகத்தி னூறற் போனால்
கண்காண வாதியுட வாசலெல்லாம்
பூண வைந்தே வாதத்தின் பூதமாச்சுப்
புகழான வர்ணமது ரசமேயாச்சு
தோணவங்கே திரிகுண சயிலமார்க்க
சொற்கார சாரமதே பூமியாச்சு
ஊணவங்கே சொர்ணமது வித்தேயாச்சு
உற்றுப்பார் வாதத்தி னுண்மைகாணே. 263

பஞ்ச லோகத்தையும் முறையாக சுத்தி செய்து ஊறல்போக்கினால் அந்த லோகத்திற்குரிய பூதங்கள் கிரமமாக ஒன்றினுள் ஒன்று ஒடுங்கும். (அதாவது, பிரிதிவி அப்புவிலும், ;அப்பு தேயுவிலும், தேயு வாயுவிலும், வாயு ஆகாசத்திலும் ஒடுங்கும்). இவ்வாறு முறையாக பூதங்கள் ஒடுங்கினால் வர்த் தொழிலானது மிக எளிமையாக சித்தியாகும். இதுவே வாதத் தொழிலின் சூக்ஷமமாகும்.

உண்மையிந்தப் பயிர்தனக்கு நீரைக்கட்ட
உற்றுப்பார் காமநீ ருறுதியப்பா
வண்மையுடன் பொன்போட்டாற் பொன்னேயாகு
மாற்றியதில் வெள்ளியிட்டால் வெள்ளியாகுந்
தன்மையுட னினமுறையே சாதித் தேறச்
சாதித்துயான் கண்டராசவீதி
கண்மையுடன் மறந்துவிட்டால் வாதம் பொய்யாங்
கசடரே கருத்திலுன்னிக் கலந்துபாரே. 264

வாதமான இந்தப் பயிருக்கு எப்படி நீரை வார்க்கிறோமோ அதன்படியே வாதம் சித்தியாகும். அதாவது பொன் சேர்த்தால் தொட்டதெல்லாம் பொன்னாய் விளையும். வெள்ளியிட்டால் வெள்ளியாய் விளையும். இதை முறையாக சாதித்தால்தான் பலிதமாகும். நானும் இவ்வாறே வாதத் தொழிலை செய்து பார்த்தேன். நான் சொன்ன சூக்ஷ்மத்தை மறந்தால் வாதம் பொய்யாகும். ஆகையால் தவறில்லாமல் செய்து பார்!

கலந்துபார் சத்தியோக்குங் காரசாரங்
கைகண்ட விசாரமொக்குங் கனத்தலோக
மலந்துபார்ச் சந்தோஷந் தங்கத்திற்கு
மடவான சாதுசங்கஞ் சூதத்திற்கு
மலந்துபார் பூஷணத்தின் மார்க்கத்தேற
மகத்தான குளிகையது வழியேகாட்டு
முலந்துபார் மூலத்திலோ மென்றோடி
லுறுதியாய் வாசிவைத்தே யுரைத்துப்பாரே. 265

சத்திநாதத்திற்சமன் காரசாரஞ் சேர்த்துப் பொடித்து உருக்கு முகத்தில் பொடியைத் தூவி லோகங்கள் உருக்கினால் முழுமையான சுத்தியாகும். லோகங்களைக் கட்டி முறையாக உபயோகித்தால் பிரம்ம விசாரத்தை ஏற்படுத்தும் தங்கமானது மனதிற்கு சந்தோஷத்தை அளிக்கும். சூதத்தால் சாது சங்கம் (மகான்களின் கூட்டுறவு) ஏற்படும் அது எவ்வாறெனில், சூதத்தால் செய்யப்பட்ட குளிகையானது ஞான வழியைக் காட்டும். இக்குளிகையை வைத்துக் கொண்டு மூலாதாரத்தை மனதால் தியானம் செய்து 'ஓம்" என்று உச்சரித்து வாசியை அவ்விடத்தில் நிறுத்த வேண்டும்.

உறைத்து மனமொன்றாகி யுற்றுப்பார்த்தா
லொன்றும் பொய் போகாது வுமையாள் சொன்னாள்
வெறைத்துமனம் பொய்மெய்யோ வென்றுமெண்ண
மெய்யான வார்த்தையெல்லாம் விழலாய்ப்போகு
மறைச்சியென்ற சிறுபிள்ளை யாயிபாதம்
மறவாமற் பூசைபண்ணு வருங்காண் ஞானம்
இறைச்சியென்ன மதுவென்ன வென்று சொன்னா
லெழுபிறப்பும் நாய்செனம மெடுப்பார் தாமே. 266

இவ்வாறு செய்தால் மனமானது ஒரு நிலைப்பட்டு ஞானம் சித்திக்கும்! இதுவரை கூறியவைகள் யாவும் பொய்யாகாது. ஏனெனில் இவை யாவும் உமையவளின் திருவாக்கால் சொல்லப்பட்டவைகளாகும். இவற்றின்மேல் நம்பிக்கை கொள்ளாமல் உண்மையோ! பொய்யோ! என்று நினைத்தால் சகல வார்த்தைகளும் பொய்யாகும்,

(இவ்வாறு மனதில் ஐயம் கொள்ளாமல்) வேத மாதாவான பாலாதேவியை அனுதினமும் மறவாமல் பூசை செய்தால் ஞானமாகப்பட்டது தானே வந்தடையும் தேவியை வணங்காமல் மதுவும் மாமிசமும் புசிப்பாள் என்று சொல்லி நிந்தித்தால் நிந்திப்பவர் தொடர்ந்து வரிசையாக ஏழு பிறவிகள் வரை நாயாகப் பிறப்பார்கள்.

எடுப்பார்கள் பூசையைத்தான் தூஷித்தோர்கட்
கிகத்தாளப் பெருவயிறு மீளைகாணுந்
தொடுப்பாகப் பேய்பிடிக்கும் பித்தங்கொள்ளுஞ்
சோறு சோறென்றலைந்து சொக்கிப் போவார்
கொடுப்பார்க ளாருமற்று மதியுங்கெட்டுக்
கூடிநின்ற குடும்பமெல்லாங் கொள்ளைபோகும்
நெடுப்பார்க ளவரவர்க ளென்றுதேவி
நிச்சயமாய்ச் சாபமிட்டால் நிசந்தான்காணே. 267

தாயாரை தூஷித்தவர்கள் அடையும் கதியைப் பற்றி மேலும் கூறுகிறேன் கேள்! பெருவயிறு, ஈளை போன்ற வியாதிகள் உண்டாகும். அதுமட்டுமின்றி பேய்பிடிக்கும், பித்தமதிகமாகி பயித்தியம் பிடிக்கும். சோறு சோறு என்று தெருத் தெருவாய் அலைவார்கள். ஆனால் யாரும் அவர்களுக்கு உணவளிக்க மாட்டார்கள். அதனால் புத்திகெட்டு மாள்வார்கள். இவர்கள் மட்டும் மாள்வதன்றி இவர்களுடன் சேர்பவர்களும் சேர்ந்த குடும்பங்களும் கொள்ளை போய், கதியற்று புலம்புவார்கள். தேவியானவள் தன்னை நிந்திப்பவர்கள் இக்கதிகளை அடையட்டும் என்று சபித்தாள்.

காணப்பா வுட்சமய மாறதுண்டு
கடந்தபின்பு புறச்சமய மாறதுண்டு
பூணப்பா பன்னிரண்டுக் கவளே தெய்வம்
போக்கறியாப் புல்லர்களோ மெத்தவுண்டு
வீணப்பா குளித்தனென்பார் நீறுபூசி
வெகுசுத்தம் நாங்களென்பார் சைவமாடு
தோணப்பா விதினாலே யுண்டோ வேது
தோஷம் வந்து சுற்றுகிற துறையதாமே. 268

நம்முடைய மதத்தில் (ஆறு பிரிவுகள் உண்டு). உட்சமயங்கள் ஆறும், புறச்சமயங்கள் ஆறும் உண்டு. இந்த பன்னிரண்டு வகையான சமயங்களுக்கும் தாய் ஒருத்தியே தெய்வம். இதை அறியாதவர்கள் உலகத்தில் அனேகம்பேர் உள்ளனர். இதில் சிலர் குளித்துவிட்டு திருநீறு பூசிக்கொண்டு நாங்கள் சுத்தத்தை கடைப்பிடிப்பவர்கள் என்று கூறுவார்கள். (இவர்களை சித்தர்கள் சைவமாடு என்று அழைப்பார்கள்). இவ்வாறு கூறிக்கொண்டு சுற்றுபவர்கள் தோஷத்தை அடைவார்கள்.

துறையான வாறாறு சமையத்துள்ளே
துரியமென்று மாயிபதஞ் சூட்டுவார்கள்
மறையான வேதாந்த மாயிபாதம்
வரிசையுடன் பூசைபண்ண வருங்காண் ஞானம்
நிறையாக நின்றக்கால் முத்திமுத்தி
நிலைதப்பிச் செய்திடிலோ நிலையாப் பாவம்
உறையாமல் மூலத்தே நின்றாயானா
லுத்தமனே மாயமுறு ஞானம்போமே. 269

பன்னிரண்டு சமயத்தோர்களும் ஞானத்தால் பிரகாசிக்கும் தாயின் பாதத்தைப் பணிவார்கள். தாயான தேவியை முறையாக பூசித்தால் ஞானம் கட்டாயமாக நம்மை வந்தடையும். மேலும் முக்தியும் கிட்டும் முறையில்லாமல் தவறாக பூசித்தால் பாவம் வந்தடையும். அதுமட்டுமின்றி ஞானம் அழிந்து அஞ்ஞானம் சூழ்ந்து கொள்ளும்.

போகாம லாயிபதம் பூசைபண்ணிப்
பொற்குடத்தில் மதுவையுண்டு புளகமாகி
வேகாமல் வேகுதற்குப் புலனைச்சுட்டு
விரைந்தேறி வெறும்பாழை மேவு மேவு
சாகாமற் சாகுமப்பா கருவியெல்லாஞ்
சங்கற்ப விகற்பமெல்லாந் தானே போகும்
வாகாம லென்னசட மூத்தைப் பாண்டம்
வரிசையுட னிதின் குணத்தை வகுக்கக் கேளே. 270

ஆயியான தேவியை பூசை செய்து பூஜையின் பலிமீதமான மதுவை உட்கொண்டு புளகாங்கிதமடைந்து மனதை மூலத்தில் நிறுத்தி ஐம்புலனையும் சுட்டு உட்பாழையும், வெளிப்பாழையும் கடந்து நின்றால் (96 தத்துவங்களான) கருவிகளெல்லாம் சாகும். சங்கற்பவிகற்ப சட்டைகளெல்லாம் தானே சுழலும். இனி எண்சாண் உடம்பின் குணத்தைப் பற்றி கூறுகிறேன் கேள்!

சடக்குறிப்பு கருவி மகத்துவம்

கேளப்பா புழுக்குரம்பை யுதிரக்கட்டைக்
கெடியான நரம்பு மச்சைக் கேள்நீர்ப் பாண்டம்
பாளப்பா மலக்குப்பைப் பாவக்கூடு
பார்க்கையிலே யொன்பதிடம் பாழாம்பொத்தல்
நாளப்பா நிலையு மில்லை நமன்கை யாடு
நல்வினைக்குந் தீவினைக்கும் நயந்தகாடு
சூளப்பா சஞ்சலமும் நினைவுங்கோடி
சொல்லுறுதி யில்லாத சுணங்கத் தோலே. 271

தோலிலே கட்டியபா லாருக்காகுந்
தோலான சுணங்கனுட தோலும் பாலும்
காலிலே யொட்டிய தோர் நாகம் போலக்
கடைகெட்ட தேகமது நம்பவேண்டாம்
பாலிலே யொட்டிநின்ற மோரைப்போலப்
பரந்துநின்று வாடுதப்பா பரிசஞ் சொன்னேன்
கோலிலே வூதுகின்ற காற்றுப் போலக்
கூடிற்று மனமதிலே குறிப்பாய்ப் பாரே. 272

புழுக்கூடு, உதிரக்கட்டை, கழிநீர்பாண்டம், மலக்குப்பை, பாவக்கூடு என்றெல்லாம் இகழத்தக்க இச்சரீரம் நிலையில்லாதது. யமனிடம் அகப்பட்ட ஆடு போன்றது. நல்வினையாலும் தீயவினையாலும் உண்டானதும், எப்பொழுதும் சஞ்சலத்துடனிருப்பதுமான இச்சரீரம், காலைச் சுற்றிய பாம்பு கடிக்காமல் விடாது என்பதுபோல, என்றேனும் ஒரு நாள் அழியக்கூடியதாகும். இதை உண்மை என்று நம்பி ஏமாந்து மாய வாழ்வில் சிக்கித்தவிக்க வேண்டாம். இச்சரீரத்தினுள் மனதானது

புகுந்து ஆட்டுகின்றது ஆகையால் மனதைக் கண்டுபிடித்து அதை அடக்க முயற்சி செய்ய வேண்டும்.

கண்ணே போதம்

பாரப்பா மனதுக்கு வடிவுமில்லை
பரிவான வுருவுமில்லை யருவுமில்லை
நேரப்பா சூரியனுங் கிரணம் போலே
நிலையான விளக்கதுவு மொளியும் போலே
சேரப்பா மின்னலுடன் காந்தியும் போற்
சேர்ந்துநின்ற கண்ணொளியின் திறத்தைப்போல
ஆரப்பா விதைக்காண்பா ரறியமாட்டா
ரறிந்துணர்ந்தாற் போதமது வாகுந்தானே. 273

மனதானது வடிவமில்லாத ஒரு பொருள்! அதற்கு உருவமுமில்லை, அருவமுமில்லை. சூரியனும் அதன் கிரணமும், விளக்கும் அதன் ஒளியும், மின்னலும் அதன் காந்தியும், எவ்வாறு ஒன்றைவிட்டு ஒன்று பிரிவதில்லையோ, அதே போல் கண்ணொளியுடன் மனதானது ஊடுருவி நிற்கிறது. அதை அறிந்து கொண்டவர்க்கு ஆனந்தக்களிப்பு உண்டாகும்.

தானென்ற மனதையுள்ளே மாட்டிக்கொண்டு
சண்ணுதப்பா சண்டாளக் கருவிப்பாசங்
கானென்ற வாங்கார முரலுமாச்சுக்
கள்ளரென்ற வைவருமோ ருலக்கையாச்சு
ஊனென்ற பெண்ணாசை யுருவமாக
ஓகோகோ விடிக்குதப்பா வொண்டொட்டாமல்
வானென்ற வெளியிலெங்கே மனந்தான் புக்கும்
வாய்கடந்த நீச்சாச்சு மாயக்கூத்தே. 274

சண்டாளக் கருவிகளான (தொண்ணூற்றாறு தத்துவங்களும்) அகங்காரத்தை உரலாகவும், ஐம்புலன்களை உலக்கையாகவும், பெண்ணாசையைப் பயனாகவும் கொண்டு மனதை தன்னகத்தே சிக்க வைத்து ஆன்மீக வழியில் செல்லவிடாமல் இடிக்கிறது. இதையும் மீறிக்கொண்டு மனதானது பரவெளியில் சென்றுநோக்கினால் மாயக்கூத்தாக இருப்பதைக் காணலாம்.

கூத்தொழியப் போறதில்லை வொரு நாளுந்தான்
கோடான கோடிசென்ம மெடுத்தே யாடுஞ்
சேத்தொழியப் போறதில்லை மாயப்பாம்பு
செய்வதன்றோ வென்றுசொல்லித் திரிய வேண்டாம்
பார்த்தொழிய வேணுமென்றால் மூலத்தூடித்
பதறாமல் விவேகமென்ற வாளால் வெட்டு
காத்தொழிய வேறுமுண்டோ ஜீவத்துக்குக்
கட்டு கட்டுக் கள்ளனைநீ கடுகிப்பார்த்தே. 275

இம்மாயக் கூத்தானது ஒரு நாளும் ஒழியாது. கோடி சென்மங்கள் உண்டாக்கி துன்பத்தை உண்டாக்கும். இம்மாயப் பாம்பானது அழியவே அழியாது. இதை

ஒழிப்பதற்கு என்ன செய்வது என்று ஏங்கித் திரிய வேண்டாம், இம்மாயத்திலிருந்து பிழைக்க வேணுமென்றால் மூலத்தில் மனதை வைத்து விவேகம் என்ற வாளால் வெட்டியெறிந்தால் ஜீவனானது மாயையிலிருந்து பிழைக்கும். இதைத் தவிர வேறு உபாயம் இல்லை.

காந்த மயம்

கடுகியெங்கே பார்ப்பதென்றால் மூலம்பாரு
கையறியா மிலேச்சருக்குங் காணுஞ்சோதி
முடிகியங்கே தளங்காணும் முட்டிப் போகும்
மூதண்ட முப்பாழுங் கடந்து போகுங்
குடிகியங்கே தமர்வாசற் குள்ளே புக்குக்
கோடிமதி கோடிரவி கூறொப்பாது
நெடிகியங்கே பூரணத்தைக் கரையோ காணோம்
நேர்ந்துடனே காந்தயம் போல் நேரும்பாரே. 276

மனதைக் கட்டுப்படுத்தி மூலத்தில் நிறுத்திப் பார்த்தால், மிலேச்சருக்கும் ஜோதியானது வெளியாகத்தெரியும். இச்சோதியை பார்த்த மகிமையால் ஆறுதளமும் வெளிப்போன்று பிரகாசிக்கும். பிரகாசிக்கும் இத்தளங்களெல்லாம் கடந்து முப்பாழையும் தாண்டி பரவெளியில் சென்று கோடி சூரியனைப் போல் ஜீவனானது பிரகாசிக்கும். இப்பரவெளிக்கு எல்லையே கிடையாது. மனதானது மூலத்தில் லயித்தால் போதும். இரும்பை எவ்வாறு காந்தம் இழுக்கிறதோ அதேபோல் பூரணமானது ஜீவனைத் தன்னுள்ளே இழுத்துக் கொள்ளும்.

நேருவது மெவ்வாறா வென்று கேட்டால்
நிலையான தீபமுண்ட நெய்போல் நெய்போல்
கூறுவது வருணசலம் ரவியுண்டாப் போல்
கூறஞ்சு வர்ணமுண்ட படிகம்போல
கோருவது சலத்தடங்குங் குமிழி போலக்
கூப்பிட்ட சத்தமவன் கேட்டாப் போல
வோடுவது மொடுங்குவது மிதுவே மார்க்க
முத்தமனே மனத்தோடே வுன்னுவுன்னே. 277

இவையாவும் எவ்வாறு நிகழும் என்று கேட்டால் தீபச்சுடரானது எவ்வாறு நெய்யை இழுத்துக் கொள்கிறதோ! மழை நீரை எவ்வாறு சூரியன் உட்கொள்கிறதோ! வர்ணங்களைப் படிகம் எவ்வாறு கிரகித்துக் கொள்கிறதோ! ஒருவன் கூப்பிட்டால் மற்றவன் எவ்வாறு அதை அறிந்து கொள்கிறானோ, அதேபோல பூரணமானது மனதை தன்னகத்தே இழுத்து ஒடுக்கிக் கொள்கிறது.

துருசிக் குரு வண்டினம்

உன்னவொரு குருமார்க்கம் வண்டிற் சொல்வேன்
வோகோகோ வாச்சரியம் வொருவர் காணார்
பன்னமுள்ள கொழுஞ்சியடி யெருக்கிற் பாரு
பலமான கழுதைவண்டு சொற்போல் மேலே

அன்னயதைக் கைப்பிடித்து முதுவிற்சுண்டு
அரிசிபோல் முட்டைவிழும் அய்யாகேளு
கன்னவிதில் வீரமுடன் பூரம் போட்டுக்
கலந்துமிரு காசெடையாந் துருசிக்கப்பே. 278

வண்டினத்தில் குரு முடிக்கும் உபாயம் கூறுகிறேன் கேள். இந்த முறையை இதுவரை எவரும் அறிந்ததில்லை எருக்கன் செடியின் அடியில் தேடிப் பார்த்தால் கழுதை வண்டு என்ற ஒரு வண்டு இருக்கும். அந்த வண்டின் முதுகில் சொறிப் பிடித்தாற் போலிருக்கும். இவ்வகை வண்டைப் பிடித்துவந்து அதன் முதுகை சுறண்டினால் அரிசிபோல் முட்டைகள் விழும். இம்முட்டையுடன் வீரமும் பூரமும் சேர்த்து இரு காசெடை எடையுள்ள துருசின் மேல் பூச வேண்டும்.

அப்பயிலே கைபட்டால் கைபோம் வெந்து
ஆகாகா முகர்ந்து விட்டால் மூக்குப்போகும்
வெப்பயிலே மேலிலிட்டால் விரிந்து போகும்
வெகுகடினம் வெகுகடினம் விஷமோ மெத்தச்
செப்பயிலை யெனவேண்டாஞ் செப்பக்கேளு
சேர்ந்தவொரு குச்சிகொண்டு சிறக்கவப்பு
ஒப்பயிலே ரவிபடவே விரிந்து நீரா
மோகோகோ கழுதைவண்டி னுண்மைதானே. 279

பூசும் பொழுது கையால் எடுத்துப் பூசக் கூடாது. ஏனெனில் கை வெந்து போகும். மேலும் இம்மருந்தை முகர்ந்தால் மூக்கு போய்விடும். மிகவும் கொடிய விஷத்தன்மை கொண்ட இம்மருந்தை குச்சியாலேயே எடுத்துப் பூச வேண்டும். மருந்து பூசிய துருசை வெய்யிலிலிட்டால் விரிந்து நீராகும் (சுண்ணமாகும்). இது கழுதை வண்டின் மகத்துவமாகும்.

உண்மையென்ற குருவாலே யெல்லா நீறு
மோடுறதுங் கோடிமட்டு முயறும் வேதை
வண்மையென்ற குருவாலே சூதங்கட்டும்
வாகான போட்டொன்றி லண்ட நீறுந்
தண்மையென்ன விதில்வேகந் தங்கம் நீறுஞ்
சகலமெல்லாங் குருவாகத் தாயுமாகும்
நுண்மையென்ன வெகுநுண்மை நுகர்ந்துபாரு
நோக்கெட்டாத் துறையிதிலே நோக்கு நோக்கே. 280

இத்துருசு குருவால் எல்லா வகையான பொருளும் நீறும் கோடி மட்டும் வேதையுண்டாகும். மேலும் இக்குருவால் சூதம் கட்டும், அண்டம் நீறும், தங்கமும் நீறும், சகல சரக்கையும் குருவாக மாற்றும் தாயும் இதுவே. இதன் நுண்மை அனுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் தெரியும்.

நோக்கையிலே நோக்குவந்து கவிழ்ந்தாப் போலே
நூறுசங்க மற்புதமாந் துறையுமுண்டு
பார்க்கையிலே பரத்திலொன்று மனத்தைப் போலப்
பலகோடி குளிகையுண்டு சொல்ல மாட்டேன்

சேக்கையிலே மூலத்தில் வாசிபோலச்
செந்தூர வித்தையிதிற் றெகுட்டிடாது
தாக்கையிலே யுன்மனையைக் கண்டாப் போலச்
சகலமெல்லா மெழுகாகுஞ் சாதித்தாடே. 281

இக்குருவால் பல அற்புதங்கள் புரியலாம். சகல சரக்கையும் செந்தூரமாக்கலாம்; மெழுகுமாக்கலாம். பல வகையான குளிகை செய்யலாம். ஆனால் இவைகளைச் செய்யும் முறையை நான் சொல்ல மாட்டேன். நீயே செய்து பார்த்துக் கொள்.

ஆடலா மிக்குருவா லுப்புக்கட்டு
மாச்சரிய மிந்தவுப்பு வம்மாள் நாதம்
நீட்டுகையி லுப்பினுட வாசங் கண்டால்
நிமிஷத்திற் சரக்கெல்லாம் நீட்டிச்சாகுந்
தாட்டுகையி லிப்படியே காரஞ்சாகுஞ்
சமுசயமோ வொன்றுமில்லை சாரஞ்சாகுங்
கூட்டுகையி லிதுரெண்டா லெல்லாஞ் சாகுங்
கூறினேன் வாதத்தின் குணந்தான் மூன்றே. 282

மேலும் இக்குருவால் சகல வகையான உப்புகளும் கட்டும். எல்லா வகையான சரக்கும் சாகும். இதைப்போலவே காரமும், சாரமும் சந்தேகமில்லாமல் சாகும். மடிந்து இக்காரசாரத்தால் எல்லாம் சாகும். மூன்று வகையான குணம் கொண்ட வாதத்தை நான் கூறிவிட்டேன்.

மூன்று குணங் கண்டாயே யுயிரைக்கேளு
முந்தியங்கே பூசையிலே மறந்தேன் சொல்ல
ஆண்டுகொண்ட சவுக்காரச் சுண்ணம் போடு
வாண்மையுள்ள வங்கத்தின் சுண்ணம்போடு
பூண்டுகொண்ட வண்டினுட முட்டைபோடு
போட்டரைத்துத் துரிசியின் மேற் பூசுபூசு
மாண்டு கொண்ட துருசியங்கே நீறிப்போகும்
மகத்துவந்தான் சொன்னதொன்றும் வழி தப்பாதே. 283

மூன்று குணம் கொண்ட இம்மருந்துக்கு உயிர் கொடுக்கும் சரக்கைப் பற்றி மருந்து பூசும் இடத்தில் கூற மறந்துவிட்டேன். ஆகையால் இவ்விடத்தில் கூறுகிறேன் கேள்! சவுக்காரச் சுண்ணம், வங்கச் சுண்ணம், வண்டு முட்டை ஆகிய மூன்றையும் சேர்த்தரைத்து துருசின்மேல் பூசினால் தான் துருசு சுண்ணமாகும். நான் சொன்னதில் ஒன்றும் தப்பாது.

மருந்து முடிக்க காலம்

தப்பாது பங்குனியாஞ் சித்திரையி னுள்ளே
தவறாமற் சகலகுரு வெல்லாம் பண்ணு
ஒப்பாது தைமாசி ரெண்டுக்குள்ளே
வுறவாகச் செயநீரை யூட்டி வாங்கு
கொப்பான அற்பசி கார்த்திகை யினுள்ளே
கொள்கியதோ [illegible] நக்கினத்தைக் கூட்டிப்பாரு
செப்பான ஆடி தொட்டு ஆவணியினுள்ளே
சிறப்பான திராவகத்தைச் சேர்த்து வாங்கே. 284

சேர்ந்திட்ட வைகாசி ஆனிரெண்டுந்
திறமாகச் சாரணையைத் தீர்த்துவாடு
ஏந்திட்ட புரட்டாசி மார்கழி யிரண்டி
விரைந்தெ டுப்பாய் செந்தூர மியல்பாயப்பா
பாந்திட்ட பனிரெண்டுஞ் சரியாய்ச் சொன்னேன்
பார்க்கிறதோர் தொழில்முறைதான் பண்பாய்க் கேளு
சாந்திட்ட வரிசைதப்பிற் சரக்காகாது
சாதகத்தின் முறையிதுவே சார்ந்து பாரே. 285

பங்குனி, சித்திரை இவ்விரண்டு மாதத்தில் சகல விதமான குரு மருந்துகளையும் பண்ண வேண்டும். தை, மாசி மாதங்களில் செயநீரையும், ஐப்பசி, கார்த்திகையில் உருக்கினத்தால் செய்யப்படும் மருந்துகளையும், உருக்கினகட்டுகளையும், ஆடியிலும் ஆவணியிலும், திராவகத்தையும், வைகாசி ஆனி மாதங்களில் குளிகைக்கு சாரணை கொடுத்தலையும் புரட்டாசி, மார்கழி இவையிரண்டில் செந்தூரங்களையும் முடித்துக் கொள்ள வேண்டும். இவற்றிற்கு நேர்மாறான காலங்களில் செய்தால் தொழில் முறைகள் தப்பும். சரக்குகள் சித்தியாகாது. ஆகவே முறையாக அந்தந்தக் காலங்களில் அந்தந்தச் சரக்குகளை முடித்துக் கொள்.

பாரப்பா சவுக்காரம் வங்கம் ரெண்டு
படாதிருந்தாற் துரிசிக்குப் பிராணனில்லை
சேரப்பா கெந்தகமுந் தாளகமும் போனாற்
சேர்ந்திட்ட செந்தூரஞ் சேரப்போச்சு
நேரப்பா வெடியுப்புச் சீனம் போனால்
நேரான திராவகத்தின் நிறந்தான் போச்சு
கூரப்பா வமுரியுட கூர்மை போனாற்
கூட்டோடே செயநீருங் கொள்ளை போச்சே. 286

சவுக்காரமும், வங்கமும் துருசுடன் சேர்க்கவில்லையென்றால் துருசுக்கு உயிர் இருக்காது. கெந்தகமும், தாளகமும் சேர்க்காமல் செந்தூரம் சித்தியாகாது. வெடியுப்பும் சீனமும் சேரவிட்டால் திராவகத்தில் வீர்யம் இருக்காது. அமுரி சேர்க்காமல் செயநீர் செய்தால் செயநீர் நாசமாகும்.

போச்சப்பா வுருக்கினந்தான் காரத்தோடே
புகழான வீரமிட்டால் நீறும் போச்சு
ஆச்சப்பா புடம்விட்டால் சாரணையும் போச்சு
யந்தந்த யினந்தப்பில் வர்ணம் போச்சு
நீச்சப்பா தங்கம் விட்டால் வாதவேலை
நேரான ரசம்போனா லெல்லாம் போச்சு
போச்சப்பா யினியென்ன பேணிப்பாரு
போட்டான வொளிப்பில்லை யென்னூல் காணே 287

உருக்கினத்துடன் காரமும் வீரமும் சேர்த்தால்தான் சுண்ணம் ஆகும். புடத்தை விட்டால் சாரணை ஏறாது. அந்தந்த இனத்துடன் அந்தந்த இனம் சேர்ந்தால்தான் வர்ணம் நிலைக்கும் (இல்லையேல் பாழாகும்). வாத வேலையை தங்கம் இல்லாமல் செய்தால் பலிதமாகாது. இரசம் இல்லாமல் செய்யும் எந்த தொழிலும் சித்தியாகாது.

பேச்சால் என்ன லாபம் காரியத்தில் ஈடுபடு. ஒளிவுமறைவு இல்லாமல் என் நூலில் எல்லாவற்றையும் கூறிவிட்டேன்.

காணப்பா சுண்ணம் விட்டால் செயநீர் போச்சு
கைமுறையாய்ச் சாரம் விட்டாற்கட்டோ போச்சு
வீணப்பா கற்சுண்ணம் விட்டால் போச்சு
வேகாதே வேகுதற்குத் தீநீராச்சுத்
தோணப்பா கிறாவணத்தை விட்டா யானாற்
சுழன்றுள்ளே புக்குவதுந் தூரப் போச்சு
ஆணப்பா யறிந்தமட்டு மினத்தைச் சொன்னே
னறியாத வடியார்க்கு மடியான்தானே. 288

சுண்ணமில்லாத செயநீரும், சாரமில்லாத கட்டும், தீநீரில்லாத வேக்காடும், பாழாய் போகும். திராவகத்தை விட்டு உருக்கினால்தான் லோகம் கழன்று மடியும் (இல்லையேல் மடியாது) நான் அறிந்த மட்டும் அறியாத அடியார்க்காக சொல்லி வைத்தேன்.

சரக்கு விவரம்

தானென்ற துருசியது குருவே யானாற்
சாகாமற் சேர்த்திருந்த பசுமை வேணும்
மானென்ற சாரமது வுருகும் போது
மயிர் போலே புகைஞ் சோடி மறுக வேணும்
வேனென்ற வெண் கார முருகும் போது
வெருளாதே பொங்கிநின்றே யாட வேணும்
கானென்ற வெடியுப்புக் கட்டே யானால்
கல்லுப்போ லிறுகுமட்டும் பாரு பாரே. 289

துருசு குருவானால் அதனுடன் கூடிநிற்கும் பசுமை நிறம் நீங்கக்கூடாது. சாரம் உருகும்பொழுது மயிர்ப்போல் புகை உண்டாக வேண்டும். வெங்காரம் உருகும் பொழுது பொங்கி நின்று ஆடவேண்டும். வெடியுப்பு கட்டினால் கல்போல் இறுகித் தந்தம் போலிருக்க வேண்டும்.

இறுகியே வெளுப் போடிக் கல்லுப் போலே
யிருக்கு மட்டுங் கல்லுப்பை யிறுகக்கட்டு
மறுகியது வெடித்ததுவைத் தேய்த்துப் பார்த்தால்
மண் போலே யிருந்தாக்கா லென்றுந்தப்பா
தறுகியிது கட்டல்ல வெறிஞ்சு போடு
சார்வாகக் கரியிலிட்டு வுருகும் போது
குறுகியது கரிக்கொடுத்தால் குணமொன்றில்லை
கூறினேன் லவணத்தின கூறைத்தானே. 290

வெளுத்த கற்களைப்போல் வெண்ணிறங் கொண்ட தாயிருக்கும் கல்லுப்புக் கட்டு. இதை நெருப்பிலிட்டு வெடிக்கவைத்து தேய்த்துப் பார்த்து மணல் போலிருந்தால் முறையில்லாத கட்டு என்றறிந்து அதைத் தூக்கி எறிந்துவிட வேண்டும். அவ்வாறு செய்யாமல் கரியிலிட்டு உருக்கி உருகும் சமயம் மேலும் மருந்திட்டு உருக்குவதால் பயனில்லை.

கூறான சீனமது பொங்கொண்ணாது
குமிழிவிட்டுப் பொன் போலே யாடவேணும்
வாறான சூடனதே யெரியொண்ணாது
மருவியதோர் கற்பூர முருகொண்ணாது
தாறான துருசியது யிளகொண்ணாது
தனித்த தொரு யிந்துப்புத் தாண்டொண்ணாது
ஆறான வாறிதிலே பெருகுங் கோடி
யறிந்திந்தப்படி செய்வான் வாதி தானே. 291

சீனத்தை நெருப்பிலிட்டால் பொங்காமல் பொன்போல் நின்று ஆடவேண்டும். சூடனானது கட்டினால் நெருப்பில் எரியாது, கற்பூரம் கட்டினால் நெருப்புக்கு உருகாது. துருசானது கட்டினால் நெருப்புக்கு இளகக் கூடாது. இந்துப்பு கட்டினால் நெருப்புக்கு அசையாது. வாதியானவன் இம்முறைப்படியே செய்வான்.

வாதியென்று வந்தொருத்த னெதிர்த்தா னானால்
வரிசையுட னிந்த வகைக் கட்டைக் கேளு
ஆதியென்று மந்தமென்று மறி யேனானா
லாயிரமாங் காலியினா லவனைச் சண்ணு
ஓதிநின்ற யோகி யென்று வந்தானானா
லுத்தமனே மூலத்தி னுண்மைகேளு
காதியென்று கைமுறையை யறியேனென்றாற்
கலங்காதே பாதரட்சைக் கொண்டு சண்ணே. 292

வாதி என்று கூறிக்கொண்டு உன்னிடம் சண்டை செய்ய வந்தால் அவனிடம் லவணத்தின் கட்டு குணங்களை பற்றிக் கேள். அவன் தெரியாது என்று சொன்னால் அவனை பிரம்பால் அடித்து துரத்திவிடு. யோகி என்று கூறிக்கொண்டு உன்னிடம் வாதம் புரியவந்தால் மூலத்தின் உண்மையை அவனிடம் கேள்! தெரியாது என்று கூறினால் பயப்படாமல் அவனை உன்னுடைய செருப்பால் அடித்துத் துரத்து.

உண்ணுவது மனந்தானே

சண்ணுவது தோஷமல்ல புத்தியுண்டாஞ்
சார்வாக ஞானிவந்தே யெதிர்த்தானானால்
உண்ணுவது மனந்தானே யெங்கே யென்று
வுற்றுக்கே ளுண்மைசொன்னாற் றெண்டம்பண்ணு
பண்ணுவது மயக்கமுற்று வறியே னென்றாற்
பாஷாண்டி போவென்று பரிந்து தள்ளு
கண்ணுவது கவனிவந்து யெதிர்த்தா னானால்
காட்டினதோர் சாரணையைக் கருதிக் கேளே. 293

அவ்வாறு அவனை அடிப்பது ஒருகாலும் தோஷமாகாது புத்தி உண்டாகும் ஞானி என்று கூறிக்கொண்டு உன்னை எவரேனும் எதிர்த்தால் அவனிடம் மனதை உண்ணும் இடத்தைக் கேள்! பதிலளித்தால் அவனை வணங்கு இல்லையேல் பாஷாண்டியே! இவ்விடத்தைவிட்டு ஓடிவிடு என்று கூறித் துரத்திவிடு. கவனசித்தி பெற்றவன் என்று எவனேனும் கூறிக்கொண்டு வந்தால் அவனிடம் சாரணை தீர்க்கும் முறையைக் கேள்!

கேட்கையிலே சாரணையை யறியே னென்றாற்
கௌனி யல்ல திருடனென்று கேளுவூணி
வாட்கையிலே வாயுளறி நின்றானானால்
மாரிலே யறைஞ்சிருத்தி வகையைக் கேளு
தீட்கையிலே திருட்டுண்டோ சித்துண்டோ சொல்
சேர்ந்தாட வாசியுண்டோ செப்பென்றே கேள்
தாட்கையிலே குருவுண்டோ வென்று கேளு
சற்று தப்பிற் றென்றாக்கால் நன்றாய்க்கட்டே. 294

சாரணை முறையை நான் அறியேன் என்றால் அவனை திருடன் என அறிந்து கொள். மேலும் அவனை விடாமல் மேன்மேலும் கிளறிகிளறி கேள்விகளை கேள். அதாவது எத்தனை திருட்டு முறையையும், சித்துமுறையையும், வாசி முறையையும் அறிந்திருக்கிறாய் என்று கேள். அவற்றைக் கற்றுத்தந்த குரு யார்? என்று மாரிலே அறைந்து கேள். இதில் ஏதேனும் ஒரு பொய் உள்ளது என்று தோன்றினாலும் அவனை ஒரு கம்பத்தில் கட்டு.

கட்டையிலே யடிமையென்று சரணஞ்செய்தாற்
கட்டவிழ்த்து மூலத்தீ கருத்தைப் போட்டு
விட்டெழுத்து விடாதெழுத்து ரெண்டுங்காட்டு
மேலாகக் குருபதத்தை விளங்கிப் போட்டு
தொட்டெழுத்தக் குளிகை யெங்கே யென்று கேட்டுச்
சொல்முறையாய் வேதையொன்று சூட்டி நீட்டு
பட்டிடத்தே குளிகையைத்தான் போடச் சொல்லிப்
பரிவாகச் சீஷனெனப் பண்ணிக் கொள்ளே. 295

அவனை கட்டுகின்ற பொழுது சரணம் என்று காலில் விழுந்தால் அவனுடைய கட்டுக்களை அவிழ்த்து விட்டு மூலத்தில் உள்ள தீபத்தைக் காட்டி, விட்ட எழுத்தையும் விடாத எழுத்தையும் காட்டி, அதற்கு மேல் உள்ள குருபதத்தையும் காட்டி, குளிகை முறையையும் வேதை முறையையும் காண்பித்து அருகில் இருந்து அவனைச் செய்யச் சொல்லி உன்னுடைய சீடனாக ஆக்கிக்கொள்!

பண்ணியந்தக் குளிகையிடச் சாரணையைக் காட்டுப்
பரிவாகக் காயசித்தி பண்ணச் சொல்லு
வொண்ணுவது மென்னவென்றால் மனமென்றெண்ணு
மோகமது மென்னவென்றால் மூலமெண்ணு
கண்ணுவது ஞானமென்றால் மனம் போய்ச் சென்று
கலந்தவிட முத்தியென்று கருவாய்க்காட்டு
அண்ணுவது குளிகையிட்டே யாடும்போது
வவ்வாசி கொண்டுள்ளே யாடச்சொல்லே. 296

அவனையே சாரணை தீர்க்கச் சொல்லி அதன் முறையையும் காண்பித்து காயசித்தியையும் அதைச் செய்யும் வகையையும் சொல்லி, மூலத்தையும், மனதையும், ஞானத்தையும், முத்தியையும், குளிகை கொண்டு வாசியை ஏற்றும் முறைகளையும் காண்பித்து அவற்றை அப்பியாசிக்கச் செய்.

ஆடுகையி லிப்படியே யாடச் சொல்லு
மமர்ந்திருந்த விடந்தோறு மூலத்தூடி
ஊடுகையி லுட்புகுந்தே பார்த்தேயேறி
உன்மனார்ந் தத்தடுக்க வூனச்சொல்லு
நாடுகையி லாறுவர்க்க மென்று கேட்டால்
நலம்பெரிய மூலவர்க்க நாமஞ் சொல்லு
கூடுகையில் குருவாருவென்று கேட்டாற்
குழந்தையென்ற கொங்கணர்க்கே யடிமை யென்றே. 297

மேலும் மனதைக் கொண்டு மூலத்திலுள்ள வாசியை சுழுமுனை நாடியின் வழியாக ஆறு ஆதாரங்களைக் கடந்து வாசியையும் மனதையும் பரவெளியில் லயிக்கச்செய். நீர் யாருடைய வர்க்கத்தை சேர்ந்தவர் என்று கேட்டால் மூலர் (திருமூல) வர்க்கத்தைச் சேர்ந்தவன் என்றும் குரு யார் என்று கேட்டால் கொங்கணவர் என்றும் சொல்.

அடுமையென்றால் மூன்றுகண்ட முண்டோ வென்னி
லாகாக கடகத்தி லிருக்கு தெண்ணு
கடுமையென்றால் வாதாட வானீயென்று
கண்ணிமைக்குட் பறக்கிறேன் பிடிநீயெண்ணு
கொடுமையென்ற கொங்கணர்க்குப் பிள்ளையானாற்
கூட்டியுன்னைப் பிடிக்கறியோ மென்பார் சித்தர்
நெடுமையுள்ள வைந்நூற்று வன்பத்தேழ்வர்
நேராகச் செயஸ்தம்பம் நிறுத்தினாரே. 298

மூன்று காண்டம் என்ற நூல் இருக்கிறதா (அப்படியொன்று உண்டோ) என்று கேட்டால் அது கடகத்தில் பத்திரமாக உள்ளது என்று சொல். மேலும் அவனை வாதாட அழைத்தும் நான் கண்ணிமைக்கும் நேரத்திற்குள் பறக்கிறேன் முடிந்தால் பிடித்துக் கொள் என்று கூறு. அப்படி நீ கூறினால் அதை கேட்ட சித்தர்கள் நீ உண்மையாகவே கொங்கணவர்க்கு சீடனென்றால் உம்மை எங்களால் பிடிக்க முடியாது என்று கூறுவார்கள். இவ்வாறே என்னுடைய ஐநூற்று ஐம்பத்தேழு சீடர்களும் வாதாடி வாதத்தில் வெற்றிக் கொடி நாட்டினார்கள்.

ரிஷபயோகி சீஷன் தர்க்கம்

நிறுத்தினதோர் மக்கள் முன்னேயெதிரோ காணேன்
நேரான ரிஷபசித்த யோகிசிஷன்
மறுத்துநின்ற சுருபசித்து வுண்டோ வென்றான்
மைந்தரிலேயொரு பிள்ளை மகத்தாம் வெட்டை
நிறுத்துநின்ற சுருபத்திற் புக்கிறேன்யான்
நேர்ந்தென்னைப் பிடியென்று வடித்தானையோ
குறித்துநின்ற வடி யோடே கூடச்சென்றான்
கூடுமுன்னே கோடிசங்கு கொள்கினானே. 299

இவ்வாறு வெற்றிக் கொடி நாட்டி என்னுடைய சீடர்கள் முன்னே ஒருவரும் எதிர்த்து நின்றதில்லை. ஆனால் ரிஷிபயோகி என்ற சித்தருடைய மாணாக்கன். சொரூப

சித்து என்று ஏதேனும் உள்ளதா எனறு கேட்டு தர்க்கம் புரிந்தான். அப்பொழுது என் சீடர்களில் மகத்தான சித்தி பெற்ற ஒருவன் நான் சொருபத்தில் புகுந்து நிற்கிறேன் முடிந்தால் என்னை கண்டுபிடி என்றுகூறி ஆகாயத்தில் பறக்க ஆரம்பித்தான். ரிஷப யோகியின் சீஷனும் என் பிள்ளையுடன் பறந்து சென்றான். ஆனால் என் சீடனோ நிமிஷத்தில் கோடி சங்கம் தாண்டினான். (பலகோடி யோசனைகள்)

கொள்கினதோ ரென்மகனும் பிடிகொள்ளாமற்
கொப்பளித்த நீர்போலக் குதித்துவிட்டான்
தளகினதோர் பூரணத்தில் நின்றான் மைந்தன்
சார்வில்லா ரிஷபருடமைந்தா வென்றான்
அளகினதோர் கோபத்தி லவனுந்தாண்ட
அதுக்குமுன்னே வற்புதமோ கடந்து போனான்
உளகினதோர் பூரணத்தைச் சுற்றிச்சுற்றி
வுலைந்தலைந்து காணாம லேங்கினானே. 300

உடனே அங்கிருந்து அப்படியே கீழே குதித்து பூரணத்தில் மறைந்து நின்று ரிஷப யோகியின் சீடனே! எனக்கு நிகரற்றவனே என்று கூறினான். இதனால் கோபமடைந்த ரிஷபயோகியின் சீடனும் ஆகாயத்திலிருந்து கோபாவேசத்துடன் குதித்தான். ஆனால் அவன் குதிப்பதற்கு முன் என் சீடன் பூரணத்துடன் கலந்து வெகுதூரம் சென்றுவிட்டான். குதித்த ரிஷபயோகியின் சீஷன் பூரணத்தை சுற்றி சுற்றி அலைந்து என் சீடனைக் காணாமல் ஏங்கி நின்றான்.

ஏங்கினதோர் சித்தர்முன்னே வந்தான் மைந்தன்
ஓகோகோ யிம்மட்டோ யுங்கள் ஞானம்
வாங்கினதோ ரென்முன்னே யீடோ நீதான்
வாயிலையோ குளிகையில்லை மனத்தால் ஞானந்
தாங்கினையோ யென்னோடே யாடநீ தான்
தாயான குருவையெங்கே வரச்சொல்லென்றான்
ஆங்கினைய வார்த்தைக்கு வவனுஞ்சோம்பி
வையர்முன்னே போய்நின்று வழுதான் காணே. 301

அவ்வாறு ஏங்கி நின்ற ரிஷப யோகியின் சீஷன் முன்னே என் சீடன் வந்து நின்று உங்கள் வம்சத்தாரின் ஞானம் இவ்வளவுதானா என்று கேட்டான் அதுமட்டுமின்றி மேலும் நீ எனக்கு யீடாக மாட்டாய்! வாய் ஞானம் பேசும் உன்னிடம் குளிகையில்லை ஆகையால் நீ எனக்கு சமமாக மாட்டாய் என்று கூறி என்னுடன் சித்தாட உன் குருவை அழைத்து வா என்றான். எமது சீடனுடைய வார்த்தையை கேட்ட அந்த ரிஷப யோகியின் சீடன், தன்னுடைய குருவான ரிஷபரிடம் சென்றழுதான்.

காணப்பா யேனமுவாய் மூலவர்க்கங்
கைகடந்த சொருப சித்தி குளிகைசித்தி
தோணப்பா ரெண்டாலே சுருக்குமேற்றச்
சொருப மென்றே நமக்கல்லால் வேறேயில்லை
பூணப்பா லவனோடே நமக்கேன்வாது
போட்டுவிடு கோபத்தைப் போபோபிள்ளாய்
வீணப்பா தர்க்கமெல்லாம் ஞானத்திற்கு
வெறுவெளிக்சா யளவுமுண்டோ மிலேச்சாபோவே. 302

அழுது கொண்டு நின்ற தன் சீடனைப் பார்த்த ரிஷப யோகி குழந்தாய் ஏன் அழுகிறாய். மூல வர்க்கத்தாரின் சொரூப சித்தியும், குளிகை சித்தியும் ஏற்றம் வாய்ந்தவை ஆகையால் எதற்காக அவனிடம் வாதம் செய்கிறாய். கோபத்தை விட்டு சாந்தமாக இரு குழந்தாய். சாந்தமாக இரு!! தர்க்கத்தால் ஞானமடைய முடியாது. அப்படி நினைப்பது வீணாகும். மேலும் பரிவெளியான பிரமத்தை அளப்பதற்கு அளவுகிடையாது என்று அறிந்த கொள் மிலேச்சனே! அறிந்து கொள்!

போவென்ற வையர்பதந் தொழுதுசீஷன்
பூரணமே விண்ணப்பம் புகழ்ந்து கேட்கத்
தேவென்ற சொரூபமணிச் செய்வதற்குச்
சிட்சை சொல்ல வேணுமென்று தெண்டஞ் செய்தான்
மாவென்ற குளிகையது மூலர்க்கல்லால்
மற்றோர்க்கு வாராது மைந்தா வென்றார்
வாவென்றால் வருமதுக்குப் பூரணந்தானப்பா
மகத்தான குளிகையது மைந்தா கேளே. 303

இவ்வாறு கூறிய ரிஷப தேவரின் பாதத்தில் விழுந்து வணங்கி குருதேவா! அடியேனுடைய விண்ணப்பத்தை கேட்க வேண்டும் அது என்னவென்றால் சொருபமணி செய்யும் வகையை கூறியறிதல் வேண்டும் என்று சொல்லி மீண்டும் வணங்கி நின்றான். அதைக் கேட்ட ரிஷபதேவர் சொருப மணிக்குளிகை மூலவர்க்கத்தாரை அன்றி மற்றோர்க்கு சித்தியாகாது. அவர்களுடைய குளிகையால் பூரணத்தை அழைத்தால் பூரணம் உடனே எதிர்வந்து நிற்கும்.

மைந்தனே குளிகையினால் ஞானசித்தி
மகத்தான யோகசித்தி வாதசித்தி
மைந்தனே யறுபத்து நாலுஞ்சித்தி
வாக்கடங்காப் பூரணத்தை மருவச்சித்தி
மைந்தனே யிந்தமணி மூலருக்கு
மருவியதோர் நந்திசொன்ன மாற்கமாற்கம்
மைந்தனே மூலர்வித்தை நமக்கோவில்லை
வாக்கடங்காப் புருவமைய வழிதானாமே. 304

மேலும் அக்குளிகையால் ஞானசித்தி, யோகசித்தி, வாதசித்தி மற்றும் அறுபத்து நாலுசித்தும், பூரணத்தை மருவி நிற்கும் ஆற்றலும் உண்டாகும். இம்மணி திருமூலருக்கு நந்திதேவர் கூறியதாகும். இம்முறை மூலருடைய பரம்பரையை சார்ந்ததாகும். அவை நமக்கு கிட்டாது. நம்முடைய வழி என்னவென்றால் புருவ மையத்தில் ஏறி நிற்பதேயாகும்.

வழியோடே மேல்நோக்கிப் பதினொன்றேறி
மருவியபின் கீழ்நோக்க மகத்தாங் காயங்
கழியோடே நிராகார மாகுந் தேகங்
கைப்பிடிக்க வொன்றுமில்லைக் கவியும் போதம்
விழியோடே நின்றவெளி சொல்லக்கூடா
வெறும் பாழாய் நிற்கிறது நமது ஞானம்
பழியோடே போராட நமக்கேன் வாது
பார்த்தவர்கள் சிரிப்பார்கள் பதராபோவே. 305

வாசியை மேல்நோக்கி ப்செலுத்தி பதினாறு ஆதாரங்களையும் கண்டு பின்பு கீழ்நோக்கி செலுத்தினால் தேகமானது சித்தியாகி நிராகாரமாகும். ஆனந்தம் உண்டாகும் நம்முடைய ஞானம் இவ்வளவே. ஆகவே நமக்கு எதற்கு வீண்வாதம் எவரேனும் பார்த்தால் சிரிப்பார்கள் என்று கூறினார்.

போவென்று சொன்னமொழி புத்தி புத்திப்
புகழாக வினிப்பிடித்து வைத்தானப்பா
வாவென் றழைத்தவனைப் போதத்துள்ளே
மருவியதோர் ஞானமுண்டோ வென்பானேனீ
சேவென்ற சொல்லுக்கு வழிதானுண்டோ
சேர்ந்தேற வாவென்ற திறமேயல்லால்
கோவென்ற குருவினுட பலமோ காணேன்
குளிகையுட கொழுப்போ தான் கூறுவீரே. 306

இவ்வாறு புத்தி புகட்டிய பின்னர் அவனை அருகில் அழைத்து எதற்காக அவனிடம் சென்று ஞானம் உண்டா என்று கேட்டாய்! என்றார். அவனுடைய குருவின் மகிமையும், குளிகையின் மகிமையும் அறியாமல் கூறிவிட்டேன் ஆகையால் அவ்வளவு பெருமை அவன் யார் என்று சீடன் கேட்க!

ரிஷப யோகியிடம் போனது

கூறுவது வென்னவினிக் கண்டாற் சொல்வோங்
கோடான கோடியுண்டு மூலவர்க்க
மாறுவது மெந்தவர்க்க மென்று கேட்டால்
மகத்தான கொங்கணற்கு மைந்தனென்றான்
தேறுவது வைந்நூற்றுச் சில்வானத்திற்
றேடியெங்கே காண்பம் போஞ் சேர்ந்தாற் சொல்வோம்
ஆறுவது வெகுசாந்தம் ரிஷபயோகி
அம்மம்மா யாச்சரிய மதிகந்தானே. 307

அதற்கு ரிஷப தேவர் அவனை நேரில் பார்த்தால் யாருடைய சீடன் என்று கூறிவிடுவேன். அனுமானிக்க முடியாது ஏனெனில் மூலர் வர்க்கத்தில் கோடான கோடி பேர்கள் உள்ளார்கள். நீ அவனிடம் எந்த வர்க்கத்தைச் சேர்ந்தவன் என்று கேட்டாயா என்றார் ரிஷபர். அதற்கு சீடன் அவன் கொங்கணர்க்கு சீடன் என்றான். அதைக் கேட்ட ரிஷப தேவர் கொங்கணவர்க்கு ஐந்நூற்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் (சீடர்கள்) இருக்கிறார்கள். அவர்களை எங்கே தேடி அலைவது? ஆகையால் எப்பொழுதாவது நான் பார்த்தால் அவர்களிடம் பேசுகிறேன் என்று சொல்லி சீடனை சமாதானப்படுத்தி தானும் சாந்தமானார்.

தானென்ற ரிஷபருக்கு மடியேனுக்குஞ்
சாய்ப்பு வரலாகாது வென்று சொல்லி
வானென்றக் குளிகையிட்டு வடிக்கச் சென்று
வந்தனையான் பண்ணயிலே வாரியென்னை
கோனென்ற கொங்கணரே மூலர் பேராக்
கோடிதவம் பெற்றவரே வந்ததேது
பானென்ற மதத்தாலே யெந்தன் பிள்ளைப்
படுவாயன் சண்டையிட்டா னெனவந்தேனே 308

ரிஷப யோகிக்கும் அடியேனுக்கும் (கொங்கணவனான எனக்கும்) மனஸ்தாபம் வரக்கூடாது என்று எண்ணி குளிகைக்கொண்டு ரிஷபருடைய ஆஸ்ரமம் சென்று அவரை வந்தனம் செய்தேன். அப்பொழுது என்னை வாரி அணைத்துக்கொண்டு மகாதவ வன்மை கொண்ட கொங்கணவரே! மூலருடைய பேரரே! வந்த காரணம் யாது என்று கேட்க! அதற்கு நான் என் சீடன் தர்க்கம் செய்த காரணத்திற்காக மன்னிப்பு கேட்க வந்தேன் என்று கூறினேன்.

வந்ததென்ன நீர்வேறோ நாம்தான் வேறோ
மைந்தரெல்லா மொன்றன்றி வெவ்வே றுண்டா
உந்தரென்ன யெந்தரென்ன ரெண்ட துண்டோ
யொன்றாக நின்றதல்லோ நீரு நாமும்
அந்தரென்ன வெட்டோடே நாலுஞ் சேர்ந்து
வடங்கி நின்ற பொருள்போலே யெல்லா மொன்று
இந்தரென்ன நீரென்றும் நாங்க ளென்று
மேகமன்றி வேறுண்டா யென்னபோலே. 309

(அதற்கு ரிஷபதேவர்) நீர்வரவேண்டிய அவசியமில்லை ஏனெனில் உம்முடைய சிஷ்யர்கள், என்னுடைய சிஷ்யர்கள் உம்முடைய பொருள் என்னுடைய பொருள் என்ற பேதம் கிடையாது. நீரும், நானும் ஒன்றுதான். ஆகாயம் எவ்வாறு எங்கும் பரவி நிற்கிறதோ அதேபோல் நாமிருவரும் எங்கும் பரவி நிற்கிறோம். அப்படியிருக்க இதில் என்ன கோபம் கொள்ள வேண்டியிருக்கிறது.

என்னவென்று சொன்னமொழி சரிதானையா
வெங்களுக்கு முங்களுக்கும் போதும் போதும்
பன்னவென்ற ரசம்பிறந்தால் வேறாய்ப் போமோ
பனிமதியுங் கிரணமது வேறாய்ப் போமோ
உன்னவென்றால் நூலேணி யுங்கள் ஞான
மோடுகிற பெரும்பாதை யெங்கள் ஞானந்
தன்னவென்றால் நேர்சமனாம் ரெண்டுமையா
சாதகத்தி லதிகமுங்கள் சார்வுதானே. 310

எங்கள் வர்க்கத்தாருக்கும், உங்கள் வர்க்கத்தாருக்கும் இடையே எந்த ஒரு பேதமும் கிடையாது. உங்களுக்கென்றும் எங்களுக்கு என்றும் தனித்தனியே ரசம் (சூதம்) இருக்கிறதா என்ன? சந்திரனும் அதன் ஒளியும் எவ்வாறு பிரியாதோ அவ்வாறே நம்முடைய வர்க்கமும், உங்களுடைய மார்க்கம் நூலேணியாகும். எங்களுடைய ஞானம் பெரும்பாதையாகும். எப்படி பார்த்தாலும் இரண்டும் சமமாகும்.

சார்வான மனம் பிடித்தே யேறவென்றே
சங்கற்ப விகற்பமென்றே தடையோமெத்தக்
கார்வான யிருளுக்கு மாசைப் பாம்புக்
கடந்து தள்ளி யேறுகிற கடினமெத்த
ஊர்வான புருவமைய யோகஞான
முயர்த்தி மெத்தவு யர்த்திமெத்த வுண்மைவுண்மை
ஆர்வான ஞானசித்திச் செணத்திலாகு
மாச்சரிய மெங்களுட மணிதான் காணே. 311

மனதை நிலைப்படுத்தி அதன் மூலம் வாசியையேற்ற முயற்சித்தால் சங்கற்பமும் விகற்கமும் தடை செய்வதோடு மாயம் (மாயை) என்ற பாம்பானது சூழ்ந்து கொள்கிறது. இதை விடுத்து ஞானம் பெறுவதென்பது மிகவும் கடினமாகும். ஆனால் எங்களுடைய மணியால் வாசியானது ஒரு வினாடியில் மாயையைக் கடந்து புருவ மையத்தை அடையும். இதனால் ஞானமும் யோகமும் சித்தியாகும். இப்படிப்பட்ட ஆச்சரியம் வாய்ந்தது எங்களுடைய மணி.

மணியைவிட்டால் ஞானமென்ற வழிதானையா
 மாச்சல் மெத்தமாச்சல் மெத்தமருவப் போகா
கணியென்றக் குளிகையிட்டால் மூலங் காணுங்
 காட்டுமுன்னே புருவமையங் கடந்து போகும்
பிணியென்ற தொன்றுமில்லை காயசித்திப்
 பேசுமுன்னே துவாத சமாம் பேருந்தாண்டும்
அணியவிட்டு முன்மனைக்கு மேலேதாண்டி
 யாகாசந் தாண்டிவிடு யந்தந்தானே. 312

இம்மணியை விட்டால் யோகமும் ஞானமும் சித்தியடைவது மிகவும் கடினமாகும். மேலும் எங்களுடைய குளிகையை வாயில் வைத்துக் கொண்டால் மூலம் வெளிபோந்து பிரகாசிக்கும். குண்டலியானது ஒரு வினாடிக்குள் புருவமையம் கடந்து துவாத சாந்தம் அடையும், பிறகு அதையும் கடந்து ஆகாசம் தாண்டிப்பர வெளியை சென்றடையும்.

அந்தமுண்டோ வாதியுண்டோ வென்றீரானா
 லளவில்லாப் போதத்திற் போதும் போதும்
மந்தமென்ற மணியோசைக் காதிற் கேழ்க்கும்
 வருஷமொன்றி லெக்கமுண்டோ வழுத்துமையா
பந்தமென்றத் தீயொளியைக் காணமாட்டார்
 பயித்தியந்தான் பிடித்தவனை நன்றாய்க் கேட்டாய்ச்
சந்தமென்ற சிலம்பொலியைக் கேட்டீர் மூர்த்தி
 சாதகமாய் மூலரன்று மிருந்தார் காணே. 313

ஆதியந்த மற்ற நிஷ்கள பிரமத்தை காண்பிக்கும். இதனால் அளவில்லா ஆனந்தமயமான போதம் உண்டாகும். மேலும் மணியோசை காதில் கேட்கும். இவ்வாறு ஒரு வருஷம் பழகினால் எல்லாம் சித்தியாகும். உலகபந்தத்தில் ஈடுபட்டவர்களுக்கு ஒலியானது காதில் கேட்காது. தீபவொளி கண்ணிற்குப் புலப்படாது. (இதனால் மனம் கலங்கிப் போவான்) முறையாக குளிகை செய்து அதன் மூலம் சிலம்பொலியைக் கேட்டு ஆழ்ந்த சமாதியில் இருந்தார் திருமூலர்.

இருந்தேழு பத்துகந்தா னேகிக்கண்டா
 ரென்னசொல்வே னும்முடைய யியல்புநன்று
வருந்தேழு லெட்சமு மேயிருந் தாலுந்தான்
 மனத்தாலே யேறவென்றா லேறக்கூடா
பருந்தேற வெனக்கூடா தென்றீரானாற்
 பார்க்கையிலே மனமோடி யுதிர்ந்து போகும்
அருந்தேறத் தவமுடையார்க் கெய்யுஞ் சூத
 மானாலென் ஞானமெல்லா மொன்றுதானே. 314

இவ்வாறு எழுபது யுகங்கள் சமாதியில் நின்ற திருமூலரின் வம்சத்தில்வந்த கொங்கணவரே! உங்களுடைய மார்க்கம் நல்லதாகும். குளிகையில்லாமல் வெறும் மனதால் மட்டும் ஏழு லட்சம் சமாதியிலிருந்தாலும் வாசியானது மேலேறாது. (குண்டலி மேலேறாது). மனமானது பல இடங்களில் அலைந்து கெட்டுப் போகும். தவ வன்மை மிக்க முனிவர்கள் செய்யும் சூதமணியின் மார்க்கம் வெவ்வேறாக இருந்தாலும் ஞானமெல்லாம் ஒன்றுதான்.

தானென்ற பூரணத்திற் புக்கினாலென்
சத்தி கொண்டு மேலேறித் தாண்டினாலென்
வானென்ற வெட்டவெளி வடிவோ காணோம்
மகத்துவந்தா னென்னவெனில் மணியினோசைக்
கோவென்ற மணியாலே கூடிற்றங்கே
கொடுஞ்சூதக் குணவேகங் கொள்கப் போகாப்
பானென்று வுண்டமட்டுஞ் சிவன்தான் சொல்லப்
பார்வதியுங் கேட்டறிந்த பரிசுதானே. 315

பூரணத்தை சென்றடைந்து, பிராணன் சுழுமுனை கடந்து அதற்கப்பால் தாண்டி நின்று வெட்டவெளியோ வடிவோ அறியவில்லை. ஏனெனில் இவையாவும் மணியோசையை தோற்றுவித்த குளிகையின் பெருமையாகும். மணி செய்யும் முறையை சிவனால் சொல்லப்பட்டுபார்வதி தேவி கேட்டறிந்து எங்களுக்கு சொன்னதாகும்.

பரிசாலே கேட்டிருப்போம் வந்ததில்லை
பரன்முன்னே பலகாரம் பண்ணுவாருந்
தரிசாலே சிலம்போசைப் பின்னொன்றில்லை
சண்டையில்லைப் பிணிக்கில்லைச் சந்தோஷந்தான்
உரிசாலே பூரணத்தி லுற்ற பேர்க்கு
வொன்றுமில்லை யுண்ணுமுண்ணு முண்ணுங் காணுந்
துரிசாலே யாடுகுற குளிகையாலேச்
சுறுக்காச்சு மூலவர்க்கந் துடியுமாச்சே. 316

மணியான குளிகையால் மனதை நிலைப்படுத்தி பூரணத்தில் சென்றடங்கியவர்க்கு, புத்தியானது திடப்பட்டு மூலம் வெளித் தோன்றிப் பிரகாசிக்கும். இம்முறைய்ய பார்வதி சொல்ல கேட்கப்பட்டிருந்தும் நாங்கள் முறையான ஞானம் அடையவில்லை. சிவனால் உபதேசிக்கப்பட்ட அம்முறையை பல காலம் முயற்சித்து அதன்மூலம் சிலம்போசையை கேட்டு. இவ்வுலகத்தில் சண்டையும் சச்சரவும் இல்லாமல் மிகவும் சந்தோஷமாக வாழ்கிறோம். துருசைக் கொண்டு செய்யப்படும் குளிகையால் திருமூலவர்க்கம் பேர்பெற்றது.

துடியாச்சு துருசியென்ற குருவாற் சூதஞ்
சூட்டுகிற சாரணையைத் துய்த்து நீங்கள்
தடியாச்சுத் தாளகத்தா லெங்கள் சூதம்
சாட்டுகிற சாரணையோ சொற்பஞ் சொற்பங்
கெடியாச்சு வதினாலே யுங்கள் வர்க்கங்
கேளுமையா கொங்கணரே ரெண்டுமொன்று
பிடியாச்சுப் பூரணமுங் குளிகைகூடா
பேரொன்று பிறியொன்று பேணிப்பாரே. 317

மிகவும் சுலபமான முறையில் துருசு குருவைக்கொண்டு சூதத்தைக் கட்டி சாரணை தீர்த்துக் குளிகை செய்து பேர்பெற்றது உங்கள் வர்க்கம். தாளகத்தால் சூதத்தைக்கட்டி சொற்பமான அளவு சாரணை தீர்த்து குளிகை செய்யவே எங்களுக்கு தெரியும். ஆனால் இரண்டு முறையும் ஒன்றாகும் இதில் எந்த பேதமுமில்லை.

பேணியந்தப் பூரணத்தைப் புக்கவன்றோ
பேரான குளிகையுடப் பெருமையெல்லாம்
உணியங்கே பார்ப்பார்கள் மூலம் நெஞ்சு
வுயர்ந்தகண்டம் புருவமைய மூத்தனாலும்
அணியங்கே துவாதசத்தின் சிரசு மேலு
மங்கங்கே யெட்டெட்டு மதுமேல் மூன்று
பணியங்கே கடந்தவிடம் போதம் போதம்
போக்கறிந்தோன் சிவஞானி புனிதனாமே. 318

குளிகையானது எதற்கென்றால் பூரணத்தை அடைவதற்கேயன்றி வேறெதற்குமல்ல. மூலாதாரம், நெஞ்சு, கண்டம், புருவமையம், பிந்து. அதன் மேலுள்ள துவாதசாந்தம். இவையாவும் கடந்து அதற்கப்பால் உள்ள நிஷ்களத்தில் சென்றடங்கினால் ஆனந்தக் களிப்பு உண்டாகும். இம்முறையை அறிந்தவனே சிவஞானிகளில் மிகவும் புனிதனாவான்.

மேருவுக்கு வடக்கு முதல் நாலு திக்கும்

ஆமிந்த வழியறிந்தேன் ஞானயோகி
அறியாட்டால் ஞானியல்ல வசட்டுமாடு
வோமிந்த வழிக்கெல்லாங் கருவே போதம்
உற்றகரு கொங்கணரே வுண்மை வுண்மை
நாமிந்தக் கருவாலே யடுத்தோம் போதம்
நம்முடைய பிள்ளைகளுக் கிதுவே மார்க்கந்
தாமிந்தக் காரியத்தைச் சட்டை பண்ணித்
தகமையில்லைப் போய்வாருந் தன்மையோறே. 319

'இதன் வழிமுறைகளை அறிந்தவனே ஞானயோகி அறியாதவன். அசட்டு மாடாவான். இவ்வழிக்கெல்லாம் கருவே போதமாகும். இக்கருவாலேயே நாமும் ஆனந்தக் களிப்படைந்தோம். நம்முடைய சீடர்களுக்கும் இதுவே மார்க்கமாகும். ஆகையால் இதன் பொருட்டு சண்டையும் சச்சரவும் செய்து பயனில்லை. ஆகையால் கொங்கணரே நீர் உம்முடைய இடத்திற்கு அமைதியாகப்போய் வாரும்" என்றார் ரிஷபர்.

தண்மையே ஞான வாதாரமாச்சுச்
சாந்தமது யோகத்தின் சார்வுமாச்சு
வண்மையது விவேகமென்ற வாளுமாச்சு
வாய்திறக்க மவுனமன்றோ மனதுக்கின்பம்
உண்மையது ஞானத்துக் கோடும்வீதி
யுறைப்பான திடமல்லோ மகத்தாம்வீரம்
அண்மையது பூரணமாய் நின்றமூர்த்தி
யடியேனும் போய்வாறேன் அருள்தாரீரே. 320

தண்மையே ஞானத்திற்கு ஆதாரம், சாந்தமே யோகததின் சார்வு, வண்மையே விவேகமென்ற வாளாகும் மவுனமே மனத்திற்கு இன்பம். உண்மையே ஞானத்திற்கு செல்லும் வழி. மனோதிடமே மிகப்பெரிய வீரமாகும். இக்குணங்களெல்லாம் ஒருங்கே பெற்று பூரணமாய் பிரகாசிக்கும் மூர்த்தியே. நான் போய் வருகிறேன் விடைதந்தருளும்.

தாருமென்று குளிகையிட்டு நிமிஷத்துள்ளே
சச்சிதானந்த வெள்ளந் தன்னை மோந்துப்
பேருமென்றக் குகையினுள்ளே வந்து புக்கிப்
பேரான மைந்தர்களே வாரும் வாரும்
ஆருமென்றேன் சண்டை கொண்டு வந்தீரானால்
யவரவர்க்குச் சீஷர் மெத்த யறிவிப்பேனான்
சேருமென்ற கவனத்தை யோடிச்சென்று
சேர்ந்துணர்ந்த பெரியோரைத் தெண்டம் பண்ணே. 321

இவ்வாறு அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு குளிகையின் மகிமையால் சச்சிதானந்த வெள்ளத்தில் மிதந்து கொண்டு ஒரு நிமிஷத்தில் என்னுடைய ஆசிரமத்திற்கு வந்து சீடர்கள் எல்லோரையும் கூவியழைத்தேன். மைந்தர்களே இனிமேல் யாருடனும் சண்டை செய்யக்கூடாது. கவுன சித்தியால் ஆகாய மார்க்கமாகச் சென்று பலவகையான சித்தர்களைக் கண்டு போற்றி வணங்கவேண்டும்.

சித்தர் பெருமை சீஷருக்கு உபதேசம்

பண்ணாமல் கெருவித்துத் திரிந்தீரானால்
பார்த்தவர்கள் சிரிப்பார்க ளென்னையப்பா
விண்ணாமல் மேருவுக்கு மிப்பாலல்லோ
வீறாப்பு முங்களிட விருதுமப்பா
கண்ணான வடபாகம் போய்ப் பாருங்கள்
கருமணைபோ லொவ்வொருவர் கலந்தசித்தர்
தண்ணான சகத்திரந்தான் வயசுமப்பா
சார்ந்தத்திச் சாந்தம்வர தண்மைதானே. 322

தன்மையொத்த பெரியோர்கள் போதமென்றால்
ஜலபானம் போற்பண்ணி சஞ்சரிப்பார்
வன்மையென்ன வவர்களுக்கே யென்றாயானால்
வாய்திறக்கா மவுனமுற்ற மகத்தாஞ்சித்தர்
அண்மையென்ற சொரூபமணிக் குளிகைக்கப்பா
வாயிரத்தெண் மாற்றாலே யணைத்துத் தீர்ப்பார்
கண்மையென்ன வவர்கள் முன்னேபோங்கள் நீங்கள்
கவுபீனங் கொண்டு சண்ணிக் கடத்துவாரே. 323

அவ்வாறு வணங்காமல் கெருவித்து திரிந்தால் பார்ப்பவர்கள் உங்களைத்தான் தவறாக நினைப்பார்கள். மேருவான இமயமலைக்கு இப்பாகத்தில் உங்களுடைய மகாத்மியம் பரவி நிற்கும். நீங்கள் எல்லோரும் வட பாகம் சென்று பாருங்கள். அங்கே சித்தர்கள் ஒவ்வொருவரும் பனைமரத்தின் அளவு உயரம் உடையவர்களாகவும், ஆயிரம் வயது கொண்டவர்களாகவும், சாந்தமும், தன்மையும் உடையவர்களாக ஜலத்தையே

ஆகாரமாகக் கொண்டு ஜீவிப்பார்கள். இச்சித்தர்கள் யாவரும் மவுன விரதம் பூண்டவர்கள், சொருபமணிக் குளிகையை சித்தி செய்து கொண்டவர்கள். ஆயிரத்து எட்டு மாத்துடைய வாதம் செய்யும் திறன் கொண்டவர்கள். கௌபீனத்தையே ஆடையாக அணிந்துகொண்டு சஞ்சரிப்பார்கள்.

வாரென்ற மேருவுக்கு கிழக்கே போங்கள்
வயதவற்கு மஞ்ஞூறு மாற்றிப் பாதி
நேரென்ற தங்கமது வஞ்ஞூத்தெட்டு
நிலையான மாற்றாகும் நீங்கள் பாருங்
காரென்ற சித்தருக்குப் பூமிக்குள்ளே
காலொன்றுந் தட்டாது சேமமாவார்
வேரென்ற வசபை யெட்டு மவர்கட்கில்லை
விரைந்து நின்று நாலாக விளங்கினாரே. 324

மேருவுக்கு கிழக்கே சென்றீர்களானால் அவ்விடத்திலுள்ள சித்தர்கள் பாதி பனைமர அளவு உயரம் கொண்டவர்களாகவும், ஐநூறு வயது வரை ஜீவிப்பவர்களாகவும், ஐநூற்று எட்டு மாத்துக்கொண்ட தங்கம் செய்பவர்களாகவும், பூமிக்குள்ளே தடையில்லாமல் சஞ்சரிக்கும் சக்தி பெற்றவர்களாகவும் இருப்பார்கள்.

விளங்கினதோர் மேற்றிசையைப் பாரும் பாரும்
வெருவினதோர் பனைமரத்திற் காலாமவர்க்குத்
தளகினதோர் வயதவற்கு முன்னூற்றஞ்சு
சஞ்சாரங் கேசரத்தைத் தரையில்நில்லா
ரளங்கியதோ ரவரோடே பேசவென்றால்
அந்தரத்தே நின்றுகொண்டு பேசவேண்டும்
பளங்கினதோ ரவர்குளிகை பூரணமே யென்றால்
பார்க்கையிலே வந்திறங்கிப் பருவுவாரே. 325

பருவுவார் பூரணத்திலயிப்பார் மீள்வார்
பராபரத்தி லென்னாளும் பதியாய் வாழ்வா
ரருவுமாம் முருவுமா மவர்கள் தேகம்
யாடுறதோர் மாருதத்தி லனேகம் வேகம்
மருவுமா மவர்களிடஞ் சகலபட்சி
மகத்தான கருணையினால் வாவா வென்பார்
கருவுமாய் நின்றசித்தர் கடுகப் போங்கள்
கன்னத்தி லறைந்து சித்தர் காட்டுவாரே. 326

மேருவுக்கு மேற்கிலுள்ள சித்தர்கள் கால் பனைமர அளவு உயரம் உடையவர்களாகவும் முன்னூறு வயதுடையவர்களாகவும், ஆகாயத்தில் சஞ்சாரம் செய்பவர்களாகவும் இருப்பார்கள். இவர்களிடம் நீங்கள் பேச வேண்டுமானால் தரையில் நின்று பேசாமல் அந்தரத்தில் நின்றுதான் பேச வேண்டும். அவர்கள் ரசக் குளிகையின் மகிமையால் பூரணத்தில் லயிப்பவர்களாகவும், பராபரத்தை எந்நாளும் வணங்குபவர்களாகவும், வாயு வேகத்தில் சஞ்சாரம் செய்பவர்களாகவும், பொன்போல் பிரகாசிக்கும் தேகத்தைக் கொண்டவர்களாகவும், சகல பக்ஷிகளையும் கருணையால்

கூவியழைத்துப் பேசுபவர்களாகவும் இருப்பார்கள். ஆகவே இவ்வாறு உள்ள சித்தர்களிடம் சென்று தண்டம் செய்தால் சகலவிதமான வித்தைகளையும் காட்டுவார்கள்.

காட்டுவா ரவ்விடத்திற் போகவென்றால்
கைமுறையாய்ப் பூமியைத்தான் தெகிக்கவேணும்
மூட்டுவாய்ச் சமாதியைத்தான் குகையில் நின்று
முன்னான்கு வருஷமப்பா பொசிப்பை விட்டு
நீட்டுவாய்த் தேகமது பொன் போலாகும்
நேர்ந்தவுடன் வண்டதுபோல் நேரேயாடும்
ஆட்டுவர் யண்டமெல்லாம் உருவியோடு
மங்கங்கே சித்தருண்டு வமர்ந்து பேசே. 327

அவர்களிடம் நீங்கள் செல்ல வேண்டுமென்றால் குகையில் அமர்ந்து பனிரெண்டு வருடம் அன்ன ஆகாரமின்றி சமாதியில் நின்றால் தேகம் பொன்போல் பிரகாசத்தோடு வண்டுபோல் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் தன்மையை அடையும். இச்சித்தியால் உலகத்தையே சுற்றி வந்து அங்கங்கு உள்ள சித்தருடன் பேசலாம்.

பேசையிலே வந்தனையா யஞ்சல்பண்ணு
பெருமையது மகத்தெல்லாம் பெரியபாலம்
ஆசையிலே யாருமைந்த ரென்றரானா
லடியேன்தா னுமக்கடுமை யின்னார்பிள்ளை
தேசயிலே நாலுதிக்கு மென்பேர் சொன்னால்
சேர்ந்தணைந்து மோந்துகொள்வார் பெரியோரப்பா
மாசையிலே மூலர்வித்தை நாலுதிக்கும்
மகத்தான நந்திமைந்தர் வல்லோர் தானே. 328

பேசுவதற்கு முன் அவர்களை வணங்கவேண்டும். வணங்காமல் கெருவத்துடன் இருப்பது பெரிய பாவமாகும். அவர்கள் பேசும் பொழுது நீ யாருடைய சீடன் என்று கேட்டால் உமக்கடிமையான யான் கொங்கணவரின் சீடனானேன் என்று கூறு. என்னுடைய பெயரைக் கேட்ட மாத்திரத்தில் நாலுதிக்கிலுள்ள சித்தர்களும் உன்னைச் சேர்த்து அணைத்துக் கொள்வார்கள் திருமூலரின் பெருமை நாலா திக்கும் பரவியுள்ளது. அப்படிப்பட்ட பெருமை வாய்ந்தவர் நந்தியின் சீடர்கள்.

வல்லோற்கும் மூலருக்கும் வகுப்போ வொன்று
மணியொன்று ஞானமொன்று மார்க்கமொன்று
கல்லோற்கும் பூமியுட சாரத்தாலே
கடுவயது மூசரந்தான் கண்டுகொள்ளு
புல்லோற்கு மூலமென்ற வித்தையெய்தா
புகழ்பெரிய பெரியோற்கு மிதுதானெய்தும்
பல்லோற்கு மெய்தவென்றா லெய்வதுண்டோ
பருவமுடன் மைந்தர்களே பரிந்து போற்றே. 329

வல்லோரான மூலவர்க்கத்தாரின் வகுப்போ ஒன்று அதேபோல் அவர்களுடைய மணி, ஞானம், மார்க்கம் எல்லாம் ஒன்றாகும். பூமியுட சாரத்தால் நீண்ட ஆயுள் சித்திக்கும். புல்லோர்களான துஷ்டர்களுக்கு மூலவித்தையானது கி[illegible]து.

இவ்வித்தையானது நல்லோர்க்கும், பெரியோர்க்கும் கிட்டும். ஆகவே மைந்தர்களே! எல்லோரையும் பணிந்து போற்றுங்கள். அதனால் அனைத்தும் சித்தியாகும்.

போற்றி யல்லோ நாலுதிக்கு மாடிவந்தேன்
பூசைகொண்டே ணங்கங்கே புகழும்பெற்றேன்
மாற்றியல்லோ வண்டமெல்லாம் புக்கிப்பார்த்தேன்
மகத்தான பேரண்டம் புவனந்தாண்டி
ஆற்றியல்லோ பதந்தாண்டி யப்பாற்சென்று
மடங்காத முப்பழமே யாயிபாதம்
ஏற்றியல்லோ தொழுதிறஞ்சி யதுமேற்செல்ல
வியல்பான துவாதசித்தி னியல்பு கேளே. 330

கேளப்பா வாச்சரிய முன்மனாந்தைக்
கெடியான யெனமூன்று பேருங்கண்டு
நாளப்பா பூரணத்தில் குளிகைகட்டி
நன்பாக வோடுகிறேன் வருஷமொன்று
சூளப்பா வெட்டவெளி சுடற்போற்காந்தி
சொல்லுதற்கு மொன்றுமில்லை யதிலேநாதம்
ஆளப்பா சிலம்பொலிக்குள் புக்கிச் சென்றேன்
வப்புறமு மிப்புறமு மறிந்திலேனே. 331

இவ்வாறே நானும் சகலசித்தர்களையும் கண்டு போற்றி சஞ்சரித்தேன். மேலும் பூசைசெய்து புகழும் பெற்றேன். அதுமட்டுமின்றி, பேரண்டம் புவனம், ஆகியவற்றையும் தாண்டி துவாதசத்தில் சென்று அங்குள்ள வெட்டவெளியில் சுடர்போல் பிரகாசிக்கும் நாதத்தில் லயமடைத்தேன். லயமடைந்தபின், என்னுடைய பெயரையோ, மற்றொரு வஸ்துவையோ நான் அறியவில்லை. இந்த சமாதியில் ஒரு வருடம் இருந்தேன்.

அறிந்திலேன் புக்கியுள்ளே யடங்கியானும்
வதின்பிறகு கிழ் நோக்கக் குளிகை நோக்கிப்
பிறிந்திலேன் பதத்தளவு வந்தேன் வந்தேன்
பேரான புவனம்விட்டே யண்டம் வந்தேன்
பறிந்திலே னெனைப் போல மக்காள் நீங்கள்
பாயாமல் திரிவதென்ன பதரே போங்கள்
மறிந்திலேன் சண்டைகொள்ள வாயுண்டோ
மாடுகளை யாடுவது வணக்கம் நன்றே. 332

பிறகு படிப்படியாக கீழ்நோக்கி மெதுவாக அண்டத்திற்கு வந்தேன் என்னைப் போலவே நீங்களும் சமாதியில் நின்று போற்றுங்கள். இவ்வாறில்லாமல் பதரைப் போல் திரிவதாலும் சண்டை செய்வதாலும் வாயாடுவதாலும் ஒரு பயனுமில்லை. ஆகவே, அனைத்தையும் வணக்கத்துடன் செய்வதால் நன்மையுண்டாகும்.

நன்றெனவே யொருகருவைச் சொல்லக்கேளு
நாட்டோர்களறியார்கள் வாதத்துக்கு
கன்றெனவே சிராவணந்தான் கலந்து தானால்
கல்லேது மலையேது காடுமேது

வன்றெனவே துளைத்தோடி வேதையாகு
　　மகத்துவந்தா னிதைவிட்டால் வாதம் போச்சு
ஒன்றெனவே கருவென்பா ரிதுவேயுண்மை
　　யுத்தமனே கேள் நன்றா யுரைக்கிறேனே. 333

ஒரு கருவை சொல்கிறேன் கேளுங்கள். இது நாட்டிலுள்ளோர் அறியாததாகும். வாதத் தொழிலில் சிராவணம் சேர்த்து செய்தால் கல், மலை, காடு இவையாவையும் துளைத்துக் கொண்டு வேதையோடும். பெருமை வாய்ந்த இக்கருவை விட்டு வாதம் பார்த்தால் வாதம் பாழாகும். ஆகவே இக்கருவைப் பற்றி முறையாக கூறுகிறேன் கேள்!

சிராவணம்

உரைக்கிறேன் கோழிமயில் காக்காயோடே
　　யூர்க்குருவி பருந்தோடு கொக்குமாந்தை
கெரைக்கிறேன் செம்போத்தும் புறாவுந்தாரா
　　சேர்ந்துநின்ற கழுகோடு பதினொன்றேதான்
மறைக்கிறேன் யானையோடு குதிரை பன்றி
　　மனுஷனொடு பசுவாடு மானு மேதை
தரைக்கின்ற புலிகரடி நாயோடொக்கச்
　　சாங்கமுற்றப் பதினொன்றுந் தயவாய்க் கூட்டே. 334

கோழி, மயில், காகம், ஊர்க்குருவி, பருந்து, கொக்கு, ஆந்தை, செம்போத்து, புறா, தாரா, கழுகு ஆக பதினொன்று, பிறகு, யானை, குதிரை, பன்றி, மனுஷன், பசு, ஆடு, மான், எருமை, புலி, கரடி, நாய் ஆக பதினொன்று.

கூட்டப்பா வுடும்போடு மளுங்கு சாரைக்
　　கொடிதான தவளை மீன் ஆமையோந்தி
நீட்டப்பா மலைப்பாம்பு முதலையோடு
　　நிலையான கல்லாமை விலாங்கு கூட
ஆட்டப்பா பதினொன்று மாகக்கேளு
　　யடவாக முப்பத்து மூன்றுமாச்சு
ஊட்டப்பா தனித்தனியே பிச்சுவாங்கி
　　யுலர்த்தியதை யொவ்வொரு காசெடைதான் தூக்கே. 335

அதன் பின்னர், உடும்பு, அளுங்கு, சாரை, தவளை, மீன், ஆமை, பச்சோந்தி, மலைப்பாம்பு, முதலை, கல்லாமை, விலாங்கு ஆக பதினொன்று. இந்த முப்பத்து மூன்று வகையான உயிர்களின் பிச்சை தனித்தனியே வாங்கி உலர்த்தி வகைக்கு ஒரு காசெடை எடுத்துக்கொண்டு.

தூக்கியிதிற் போடுகிற மருந்தைக் கேளு
　　துறையான குதிரை பன்றி மனுஷன் யானை
வாக்கியந்தக் கிடாவொட்டை கலைமானேழும்
　　வகையாகக் குறும்பியது வாங்குவாங்கு
தூக்கியங்கே நாற்பதும் நால்பலமே யாச்சுச்
　　சாருதற்கு மருந்தினைச் சாற்று றேன்யான்
நோக்கியங் கேநாதவிந்து வழுரியோடே
　　நான்மெழுகு முலைப்பாலுந் தேனுங்கூட்டே. 336

இதனுடன் குதிரை, பன்றி, மனுஷன், யானை, ஆட்டு கிடா, ஒட்டகம், கலைமான் இவை ஏழின் குரும்பியை வகைக்கு காசெடை சேர்த்து பார். மொத்தம் நாற்பது வகையான சரக்கு சேர்ந்த இது நாலுபலம் எடை கொண்டதாயிருக்கும். மேலும் இதனுடன் சேர்க்க வேண்டிய மருந்தினத்தை பற்றி கூறுகிறேன் கேள். நாதம், விந்து, அமுரி, மெழுகு, முலைப்பால், தேன்,

கூட்டப்பா புழுகோடு மிந்திரகோபங்
　　கூறான வாய்நீருங் காரஞ்சாரம்
நீட்டப்பா வெடியுப்பு கவுரிவீரம்
　　நேரான யதிமதுரம் வெண்ணெய்பூரம்
ஊட்டப்பா குன்றிமணிப் பருப்போடொக்க
　　வுத்தமனே நாகவங்கங் காரீயந்தான்
ஆட்டப்பா துருசி முதல் நாலுஞ் சுன்ன
　　மளவெல்லாங் காசெடைதா னிறுத்தல் போடே. 337

புனுகு, இந்திரகோபம், வாய்நீர், காரம், சாரம், வெடியுப்பு, கவுரி, வீரம், அதிமதுரம், வெண்ணெய், பூரம், குன்றிமணிப்பருப்பு, நாகவங்கம், காரீயம், துருசு, இவற்றை வகைக்கு காசெடை முன் மருந்தோடு ஒன்றாக சேர்த்துக் கொள்க. (நாகம், வங்கம், காரீயம், துருசு, இவை நான்கினுடைய சுன்னத்தைதான் சேர்க்க வேண்டும். அப்படியே சேர்க்கக் கூடாது).

போட்டெல்லாம் வசம்புச்சார் வார்த்தேயாட்டுப்
　　புகழாகக் குளம்புதுபோல் வழித்துக் கொண்டு
காட்டெல்லாம் நல்லெண்ணைய் படிகால் வார்த்துக்
　　கலந்தெல்லாங் கொதிப்பித்து மெழுகாய் வாங்கி
ஊட்டெல்லாம் பீங்கானில் பதனம் பண்ணு
　　வுத்தமனே ரவியில் வைத்தே யொளித்துக் கொண்டு
ஆட்டெல்லா மிதினாலேயாட வேணும்
　　வாகாகா சிராவணந்தா னறிந்து கேளே. 338

ஒன்றாக சேர்த்த மருந்தை வசம்புச்சாறு விட்டு அரைத்து குழம்பு பதத்தில் வழித்துக் கொண்டு கால்படி நல்லெண்ணெயில் போட்டுக் கலக்கிக் கொதிக்கவைத்தால், மெழுகாகும். இம்மெழுகை பீங்கானிலிட்டு ரவியில் வைத்து பத்திரப்படுத்திக் கொண்டால் சகலவிதமான சித்தும் விளையாடலாம்.

கேளப்பா சவுசஷ்டி யறுவதாலே
　　கெடியான வீடாச்சே யதன்மேல் நாலு
வாளப்பா வாதமுதல் வயஸ்தம் பந்தான்
　　வரிசையுடன் பொற்கலசம் போலே நிற்கும்
ஆளப்பா லிவைநாலும் வீடாய்க் கட்டி
　　யதன்மேலே சிராவணமாங் கலசம் வைத்தால்
வேளப்பா வெரித்தசிவன் சொன்னார் சொன்னார்
　　வேதாந்தத் தாய்கேட்டு விளம்பினாளே. 339

இந்த சிராவணத்தால் அறுபத்து நாலு வகையான சவுசஷ்டி கர்மமும், வாதமும், வாயுஸ் தம்பமும் பலிதமாகும் இம்முறை முப்புரத்தை எரித்த சிவனால் பார்வதிக்கு உபதேசிக்கப்பட்டு பார்வதி தேவி அதைக்கேட்டு எனக்கு சொன்னார்.

விளம்பினதோர் சிராவணத்தை விட்டாயானால்
வேதையில்லைச் சாரணைக்கு விரைவுமில்லை
உளம்பினதோர் கல்மண்ணும் பொன்னாகாது
வோடாது வெகுதூரம் வுட்கொள்ளாது
துளம்பினதோர் தீபமுதற் றூமவேதை
சூட்டிலொன்று மாகாது சொன்னேன் சொன்னேன்
தளம்பினதோர் கொடிபோலே வாதங்கேட்டுத்
தாக்கியந்தச் சுண்ணமிட பொருத்தந்தானே. 340

சிராவணம் செய்யாமல் விட்டால் சாரணையும், வேதையும் பலிதமாகாது. அதுமட்டுமின்றி கல், மண் போன்றவை பொன்னாகாது. வேதை வீரியமின்றி தூமவேதை மற்றும் பரிசவேதை போன்றவை எதுவும் சித்தியாகாது. ஆகையால் இச்சிராவணம் இருந்தால் தான் வாதம் சொன்னபடி கேட்கும்.

தானென்ற சிராவணமு மிடைந்து போனால்
சாரணைக்கும் பிலமில்லைக் கக்கமாட்டார்
தானென்ற கல்மரமா மணலினுள்ளே
தாக்கிடினும் பழுக்காது சலிக்க வேண்டாந்
தானென்ற தீபமுதற் றூமவேதை
சாத்திடிலோ வொன்றுமில்லை தவறித்தானால்
தானென்ற முதற்காண்டம் வாதத்திற்கு
தரித்திருக்கச் சிரோமணியாய்ச் சாற்றினேனே. 341

வாதத்திற்கு செய்யப்பட்ட சிராவணம் வீரியமற்றதாக இருந்தாலும் சாரணையும், வாதமும் பலிதமாகாது. கல்லும், மரமும், மணலும் பழுக்காது. ஆகையால் தவறுவராமல் செய். தவறு ஏற்பட்டால் எல்லாம் கெட்டுப்போகும். முதற் காண்டத்தில் இந்த சிராவணம் சிரோமணியாய் விளங்குகிறது.

சாற்றினே னிப்படிதான் யோகஞானஞ்
சங்கற்பமாய் கையுட சாரஞ் சொன்னேன்
நேற்றினேன் வாசியுடக் கருவையெல்லா
மிடகலையின் பிங்கலையி னிதமுஞ் சொன்னேன்
நாற்றினேன் சீஷருட கோபமெல்லா
மங்கங்கே யாடுகிற யளவுஞ் சொன் னேன்
போற்றினேன் மேருவுக்கு வடக்கே போகப
பூமியிலே பன்னிரண்டு யாண்டென் றேனே. 342

இதைப் போலவே யோகம், ஞானம், வாசி, இடகலை, பிங்கலை போன்றவைகளைப் பற்றியும் விரிவாகக் கூறியுள்ளேன். ஆகவே சீடர்களே நீங்கள் கோபத்தை விட்டு வடபாகம் செல்லுங்கள். அதற்குமுன் பன்னிரண்டு ஆண்டு சமாதியில் நில்லுங்கள். (பிறகு வடக்கு நோக்கி செல்லலாம்). என்று கூறினேன்.

குண்டலி அமுர்தம்

ஆண்டிருக்க வெப்படியோ வென்றாயானா
லாத்தாளாங் குண்டலியை மேலேயேற்றிப்
பூண்டிருக்க மதியில்விட்டு அமுர்தமுண்ணு
பொன்னிறங்காண் குண்டலிக்குப் புகழ்ந்தமேனி

நீண்டிருக்க வேற்றாதே யுயரத்தூக்கு
நிலைத்து நிற்க நந்திகொண்டு வமுர்த முண்ணு
தூண்டிருந்த மீன்போலே யுயரவாட்டுத்
தூக்காமல் குண்டலியைச் சுழியில் மூடே. 343

பன்னிரண்டு ஆண்டுகள் எவ்வாறு சமாதியிலிருக்க வேண்டுமென்றால் குண்டலியை மேலே ஏற்றி சகஸ்ராரத்தில் கொண்டுபோய்ச் சேர்த்து மதியமுதம் உட்கொண்டால் தேகம் பொன்போல் மின்னும். மேலும் குண்டலி சக்தியை நந்தியின் அருளால் சுழியில் ஏற்றி நிறுத்த வேண்டும்.

மூடுவது மெப்படியோ யென்ன வேண்டாம்
மூதண்டச் சிகரத்தை யுள்ளே கும்பி
ஆடுவது வேணுமென்றா லுள்ளே ரேசி
அஷ்டமா சித்தியிதி லாட லாகும்
நீடுவது பிரமனிட பதியில் நிற்க
நேராக குழந்தையைப் போலாவா யப்பாத்
தேடுவது சதாசிவத்தில் சேர்ந்து நிற்கில்
தேகமில்லைக் கற்பூரத் தேகமாமே. 344

எவ்வாறு ஏற்றி மூடுவது என்று தயங்க வேண்டாம். வாயுவான சிகாரத்தை உள்ளே கும்பித்து நிறுத்தினால் அஷ்டமா சித்தியும் செய்யலாம். இவ்வாறு குண்டலியை ஏற்றி பிரமன் பதியான ஸ்வாதிஷ்டானத்தில் நின்றால் குழந்தையைப் போலாவாய்; சதாசிவமான ஆக்ஞையில் நின்றால் தேகம் கற்பூரத்தைப் போல் பிரகாசிக்கும்.

ஆமப்பா மாலுடைய பதியில் நிற்க
வாச்சரியம் பதினாறு வயதேயாகும்
போமப்பா ருத்திரனில் நின்றாயானால்
பளிச்சென்று மின்னலைப்போல் பூணுந்தேகம்
வோமப்பா வகாரமதற் குள்ளே நிற்க
வுருவில்லைக் காற்றுப்போ லோட லாகும்
வேமப்பா வைம்புலனும் வெந்துநீறும்
வேதாந்தப் பதத்தில்நிற்க வெளியாப் போமே. 345

மாலின் பதியான மணிபூரகத்தில் குண்டலியை ஏற்றி நிறுத்தினால் பதினாறு வயதான பாலனாவாய், ருத்திரனின்பதியான அநாகதத்தில் நின்றால் தேகம் மின்னல்போல் பிரகாசிக்கும். வகார ஸ்தானமான விசுத்தத்தில் நின்றால் வாயு வேகத்தில் சஞ்சரிக்கும். சித்தியைப் பெறலாம். ஐம்புலனும் வெந்து நீறும். வேதாந்தப் பதியில் நின்றால் தேகம் வெளியாய்ப் போகும்.

வெளியான நாலுக்குள் நின்றாயானால்
வேருமில்லை தூருமில்லை தேகமில்லை
யொளியான குருபதத்தி னின்றாயானா
லுயர்தலுமாம் பறத்தலுமா மொன்றுமில்லை
தெளியான மூலந்தி னின்றாயானாற்
சேரவெளிச் சூனியமாய்ச் சேர்ந்து போகும்
வளியான வஷ்டகன்ம மாடலாகும்
வரைகடந்து ஞானத்திற் புகலாம்பாரே. 346

பிந்துஸ்தானத்தில் நின்றால் தனனையோ பிறிதொன்றையோ தேகத்தையோ அறியமாட்டாய். குருபதத்தில் நின்றால் உயர்வு தாழ்வற்ற நிலையை அடைவாய். மூலாதாரத்தில் நின்றால் சூன்யமான பரிவெளியில் மனம் லயிக்கும். இதனால் அஷ்டமா சித்தும் செய்யலாம். மெய்ஞானம் உண்டாகும்.

புகலாக வாயினியி னின்று பார்க்கப்
புகைபோலே போகுமுன்றன் றேகமப்பா
வகலாம லங்கங்கே நின்றாயானா
லாடலா மூடலா மனேகங் கோடி
பகலாகப் போகுமப்பா வாறுபத்தும்
பாக்கியமாய் மூலத்தே நின்ற யோக
மிகலாதே யொருநாளு மூட்டுமூட்டே
யிருக்கிறதோர் சமாதிக்கு மியல்புதானே. 347

இவ்வாறு மூலாதாரத்தில் நின்றால் தேகம் புகைப்போலாகும். முறையாக எல்லா ஸ்தானத்திலும் நின்று பழகினால் வாயு வேகத்தில் சஞ்சரிக்கலாம். அனேகங்கோடி அண்டத்தை ஒரு வினாடியில் சுற்றி வரலாம். இதே போல் தினமும் மூலாதாரம் முதல் குருபதம் வரை குண்டலியை ஏற்றினால் சமாதியானது கைகூடும்.

இயல்பான விருக்காமன் மாயத்தோடி
யிருதலையாங் கொள்ளி மையத் தெறும்புபோலப்
பயலாகப் போகாதே மைந்தா கேளாய்
பாழாசை தொடர்ந்துவிடில் விடவேலாது
கயலான விழிமடவார் மயலிற் சிக்கிக்
காமுகனாய்ச் சமாதிவிட்டுக் கலைந்தாயானாற்
செயலான தொன்றுமில்லை நீயாய்க் கெட்டாற்
செய்வதென்ன மைந்தாநீ தெளிந்து கொள்ளே. 348

இவ்வாறு முறைப்படி யோகத்தில் நிற்காமல் இருதலை கொள்ளிப் போல் பெண் மாயையில் சிக்கி சமாதியோகத்தை விடுத்தால் நீ முன்னேறமாட்டாய். ஆகையால் நீ எப்போதும் தெளிந்த மனம் கொண்டவனாயிருக்க வேண்டும்.

தெளிந்திந்த யோகமெவர் பார்த்தாரென்றாற்
செப்புகிறேன் சூடாலையென்ற பெண்தான்
நெளிந்துநின்ற மூலர்பிள்ளை சுவாலை மூர்த்தி
நேராக வவளுக்கே யுபதேசித்தார்
களித்துநின்றே வாசியெல்லாம் போகொட்டாமற்
காட்டியவள் குண்டலியிற் கருத்தையோட்டி
யளித்துநின்ற வயதெல்லாம் விர்த்தப்பாக்கி
யாச்சரியம் பதிக்கென்றே யருள் செய்தாளே. 349

செய்தவளைப் பெண்ணென்றே யறியான் மன்னன்
செகத்துவச னவளாலே சேர்ந்தான் ஞானம்
பைதததனுள் பதினாறு யூகக்கற்பம்
பாத்தோடே யொன்றாகப் பரிந்து போனார்

கைதவளத் துவாபரத்தி லேமுமண்தான்
கடந்தபின்பு மவளிருந்து கடந்து போனா
ளைததவள் தவயோகி யவளே பெண்தா
னப்படியே பெண்ணானா லணைய நன்றே. 350

ஒரு சம்பவம் சொல்கிறேன் கேள். முன் ஒரு சமயம் சூடாலை என்ற பெண் இருந்தாள். அவளுக்கு மூலரின் அருமைசீடரான சுவாலைமுத்தி என்பர் வாசி யோகத்தை உபதேசித்தார். அதைப் பெற்றுக் கொண்ட அப்பெண் வாசியை வீணாக்காமல் குண்டலியிற் கருத்தை வைத்து இளம்பெண்போல் தன் ரூபத்தை யோக பலத்தால்மாற்றிக் கொண்டாள். மேலும் அவள் இவ்வித்தையை தன் பதிக்கு உபதேசித்தாள். இப்படி உபதேசம் செய்தவளை பெண் என்று எண்ணாமல் அவள் கூறியபடி அப்பியாசித்து ஞான மடைந்தான். மேலும் பதினாறு வகையான கற்பத்தை உட்கொண்டு பரப்பிரமத்துடன் ஐக்கியமானார். பிறகு துலாபாரத்தின் மூலம் தன் கடன்களைத் தீர்த்துக் கொண்டு அவ்விடத்தை விட்டகன்று காட்டிற்குச்சென்றாள் இவ்வாறு செய்தவளும் ஒரு பெண்தான். இப்படிப்பட்ட பெண்ணாக இருந்தால் நீ திருமணம் செய்து கொள்ளலாம்.

நன்றான பெண்ணவர்க்கு வந்ததேது
நாலுகத்திற் செய்ததவம் பெண்ணேயாச்சு
பன்றான குருவாச்சு பெண்டிராச்சு
பழக்கமுக்காற் பெண்ணோடே மூலயோகங்
கன்றான பெண்ணைவிட்டா லாகாதென்றீர்
கனவினிலே காயப்பெண் கலப்பாள் சொன்னேன்
வின்றான வுறுதியுண்டேற் பெண்ணை நீங்கு
வேதாந்தப் போகரன்று விட்டிட்டாரே. 351

நல்ல மனைவி வாய்ப்பதென்பது நான்கு யுகத்தில் செய்த தவத்தாலேயே ஆகும். தான் செய்த புண்யத்தால் தான் குருவும் பெண்டிரும் வாய்ப்பார்கள். ஆகவே இவ்வகை பெண்ணைத் தவிர மற்ற எந்த ஒரு பெண்ணாக இருந்தாலும் கனவிலும் ஏறெடுத்துப் பாராதே! ஒருக்கால் அவர்களே உன்னிடம் வலுக்கட்டாயமாக வந்துசேர்ந்தால் உன்னுடைய மன உறுதியால் அவர்களை நீக்கு என வேதாந்த முனிவரான போகர் எனக்கு உபதேசித்தார்.

விட்டபின்பு பிள்ளைகளை வேறே வேறே
விரவியெங்குந் திரியுமென்று விடையுமீந்தார்
நட்டபின்பு கருவூரார் தெற்கே சென்று
நற்பெரிய ரிஷிகையிற் சாபங்கொண்டார்
பட்டபின்பு போதுமப்பா வென்று சொல்லி
பருவமுடன் காந்திமதிக் குள்ளே சென்றா
ரிட்டபின்ன ரெனையாண்ட போக நாய
னேக வெளியம்பலத்தே யேகினாரே. 352

இவ்வாறு உபதேசம் செய்தபிறகு தன்னுடைய சீடர்கள் அனைவரையும் உலகெங்கும் சுற்றி வரும்படி கட்டளையிட்டார். இதன் பிறகு கருவூரார் தெற்கே சென்று அங்குள்ள முனிவரிடம் சாபம் பெற்றார். சாபமடைந்த கருவூரார் பட்டது

போதும் என கூறி காந்திமதிக்குள்ளே சென்றார். அதன் பிறகு என் குருநாதரான போகரானவர் அம்பலத்தில் கலந்து சமாதியில் நின்றார்.

ஏகியங்கே யுரைத்து நின்றார் யார்யாரென்றார்
யானென்றாற் சேணேறி யிறங்கி வந்தேன்
பாகியென்ற குளிகையினால் வந்தேன் வந்தேன்
பரத்தோடே யுறவாகிப் பழக்கமாகித்
தாகியங்கே மனமூன்றி மக்காள்நீங்கள்
சங்கற்பக் கோபமெல்லாம் தள்ளும் தள்ளும்
நாகியங்கே நானென்ற மலத்தைச் சுட்டு
நாடுவது மிக்க நன்று நண்பாய்க் கேளே. 353

பரத்தோடே உறவாகி நின்ற நான் உங்களுக்கு உபதேசம் செய்யும் பொருட்டு குளிகையினால் இங்கே வந்தேன். நீங்களும் பரப்பிரமத்துடன் கலந்து நின்று மனதை நிலைப்படுத்தி கோபத்தை எல்லாம் போக்கி நான் என்ற ஆணவ மலத்தைச் சுட்டுப் பொசுக்கி யோகம் பார்த்தால் மிகவும் நல்லது. மேலும் கூறுகிறேன் கேள்!

நண்பான மூலம்விட்டால் மனம் வேறாச்சு
நலம் பெரிய மனம் விட்டால் ஞானம் வேறு
பண்பான சூதம் விட்டால் வாதம் வேறு
பாய்ச்சியதோர் தங்கம் விட்டால் வர்ணம் வேறு
வுண்பான வுப்புலிட்டா லுரிசை வேறு
வோடுகிற மனத்தை விட்டாற் கருவி வேறு
தண்பான சிரவணத்தை விட்டாயானாற்
சாற்றுகிற வேதையெல்லாந் தவறிப் போமே. 354

மூலத்தை விட்டால் மனம் வேறாகும், மனம் விட்டால் ஞானம் வேறாகும்; சூதம் விட்டால் வாதம் வேறாகும்; தங்கம் விட்டால் வர்ணம் வேறாகும்; உப்பை விட்டால் ருசி வேறாகும்; ஓடும் மனதை விட்டால் கருவி வேறாகும், சிராவணத்தை விட்டால் வேதையெல்லாம் சிதைந்து போகும்.

(வேறாகும் என்றால் சிதறும் அல்லது பிரியும் அல்லது பலியாது என்று பொருள்படும்)

துருசிக் கட்டு

போமப்பா வண்ட மெல்லாந் துளைத்தேயாடப்
புகழாகத் துருசியொன்று புகலக்கேளு
வோமப்பா குருவண்டு குழியில்வண்டு
வுத்தமனே புன்முனையில் நுரைத்த பூச்சி
யாமப்பா வாறுபுள்ளி வண்டின்முட்டை
யடைவான சவ்வீரஞ் சூதம் பூரம்
நாமப்பா புழுகோடு வுரமுங்கூட
நலமான குக்குட வெண்மலமுங் கூட்டே. 355

கூட்டுவது பத்தெடையுங் கால்தான் றூக்கு
குறப்பான சவுக்காரச் சுன்னமொன்று
ஆட்டுவது வாய்நீரா லரைத்துக் கொண்டே
யப்பிடுவாய் துருசியொரு பலத்தின் மேலே
காட்டுவது ரவிபடவே கலந்தபின்பு
கற்சுண்ணஞ் சூடனுமே கலந்திட்டப்பு
பூட்டுவது கற்சுண்ணங் கீழ்மேலிட்டுப்
புகழாக வடுப்பேற்றி யெரித்திடாயே. 356

அண்டமெல்லாம் துளைத்து ஆடுவதற்கு துருசி சொல்கிறேன் கேள்! குருவண்டு, குழிவண்டு, புல்முனையில் நுரையால் கூடு கட்டிக் கொண்டு வாழும் பூச்சி, ஆறு புள்ளி வண்டின் முட்டை, சவ்வீரம், சூதம் (இரசம்) பூரம், புனுகு, உரம், கோழியின் வெண்மலம், ஆகிய பத்து வகையான சரக்கையும் வகைக்கு கால் பலம் எடுத்துக் கொண்டு இதனுடன் சவுக்கார சுண்ணத்தை ஒரு பலம் சேர்த்து வாய்நீர் விட்டரைத்து ஒரு பலம் துருசின் மேல் பூசி சூரியனில் காயவைத்து பின்னர் அதன் மேல் கற்சுண்ணத்தையும், சூடனையும் கலந்து பூசி ஒரு சிறு பானையில் அரைவாசி கற்சுண்ணத்தைப் போட்டு அதன்மேல் கவசித்த துருசை வைத்து மேலும் கற்சுண்ணத்தைப் போட்டு மூடி அடுப்பில் வைத்து,

துருசிச் சுண்ணம்

எரித்திடுவா யொருசாம மப்பாநீயு
மியல்பாகத் துருசியுள்ளே வெளுத்துக்கட்டு
மரித்திடுவா யிதைநிறுத்தே நாலுக்கொன்று
மடைவாக வெள்ளையுடன் வீரஞ்சூதம்
வரித்திடுவாய் வழலையுடன் சுண்ணமொன்று
வாகாக விவைநாலுஞ் துருசிநாலும்
பரித்திடுவாய் வெண்கருவா லரைத்தேயப்பா
பதறாமல் வில்லைதட்டி யுலர்த்திடாயே. 357

உலர்ந்தபின்னே யஞ்சுவகைச் சுண்ணந் தன்னை
யுத்தமனே சிமிள்போலச் செய்துவைத்தே
யலர்ந்துநின்ற சுண்ணாம்பைக் கீழ்மேலிட்டே
யமுக்கியதை யடுப்பேற்றி யெரிப்பாய் சாமம்
புலர்ந்துநின்ற வில்லையது சுண்ணமாகும்
பொன்பிறந்த கற்பகந்தான் புகழ்ந்து நீறுங்
குலந்தனக்குக் கோடாலிக் காம்புமாச்சு
கூறுவேனி தன்பெறுமைக் கூறுவேனே. 358

ஒரு சாமம் எரித்தால் துருசானது வெளுத்துக்கட்டும். இத்துருசை நான்கு பலம் எடுத்து இதனுடன் வெள்ளை, சூதம் வீரம், வழலைச் சுண்ணம் ஆகியவற்றை வகைக்கு ஒரு பலம் சேர்த்து வெண்கருவால் அரைத்துவில்லைத்தட்டி பஞ்ச சுண்ணத்தால் சிமிழ் செய்து அதில் அரைவாசி கற்சுண்ணத்தை போட்டு அதன்மேல் மேற்படி வில்லைகளை வைத்து மேலே சுண்ணத்தால் அழுத்தி மூடி ஒரு சாமம் எரித்தால் துருசானது வெந்து நீறும் பொன்னை உண்டாக்கும் சக்தி வாய்ந்த இத்துருசின் மகிமையை கூறுகிறேன் கேள்,

கூறுவது மென்மையெனறு கேட்பாயாகிற்
குருபதத்திற் குற்றமது கூறொணாது
வூறுவது யில்லையொன்று வீரமொன்று
மொக்க வரைத்துக் கருவாலுறவாய் வைத்தே
யாறுவது துருசுபத்தி லிதைநீ பூசி
யதன்மேலே சுண்ணாம்பு சூடன்பூசித்
தேறுவதாம் வங்கத்தில் முக்கியப்பா
சிற்பரிதான் செகச்சால மாடுவாளே. 359

முன்செய்த வில்லை ஒரு பங்கும் வீரம் ஒரு பங்கும் சேர்த்து வெண் கருவால் அரைத்து துருசின்மேல் பூசி உலர வைத்து அதன் மேல் சூடனும் சுண்ணமும் பூசி வங்கத்தில் அமுக்கி எடுத்துக் கொண்டால் சிற்பரியான தேவி செகச்சாலமாடுவாள்.

ஆடுவா ளிப்படிதான் தொந்தமாக
வளவில்லை கணக்கில்லை யாத்தாளேற்ற
மோடுவாள் ரசக்காட்டை யுறிஞ்சி, வன்னி
யுத்தமியைக் கண்டுடனே சிவந்தான் சேர்த்தான்
தேடுவா ளுபரசங்கள் பாஷாணங்கள்
சேர்ந்துடனே சத்தாகு மணியுமாகும்
நாடுவா ளிவள்பெயரே வாதராசி
நலமாகத் துரிசியைநீ நாட்டிப்பாரே. 360

இவ்வாறு கணக்கற்ற அனேகவித தொந்த வித்தை புரிவாள். இதையே ரசத்தைக் கட்டும் வன்னி என்றும், வாத ராசி என்றும் சித்தரால் போற்றப்படுகிறது. மேலும் இதனால் உபரசங்கள் பாஷாணங்கள். போன்றவை சத்தாகும் சத்துக்கள் மணியுமாகும். இப்படிப்பட்ட மகிமை வாய்ந்த துருசை முறையாக செய்து பார்ப்பாயாக.

நாட்டியப்பா துரிசியைத்தான் லோகவாதி
நலமாகக் குருபண்ணிப் பசந்ததென்று
நீட்டியப்பா வெறிவார்க ளென்ன சொல்வேன்
நினைவு கெட்ட முந்தடிகா ணவர்க்கு நாமம்
கூட்டியப்பா சரக்கோடே செய்யமாட்டார்
குருபதத்தை யடுத்தணைத்துக் கேட்கமாட்டார்
ஊட்டியப்பா வாய்கழுவ வென்னாலாகா
வுத்தமனே வெளியாகப் பாடினேனே. 361

துருசை லோகவாதியானவர் குரு செய்து பார்த்து சித்தியாகவில்லை எனில் தூக்கி எறிந்துவிட்டு புலம்புவார்கள் ஏன் அவர்களுக்கு சித்தியாகவில்லை எனில் முறையான சரக்கோடு சேர்க்காமலும் குருவை வணங்கி அவருடைய உபதேசம் பெற்றுக் கொள்ளாமலும் செய்வதே சித்தியாகாததற்கு காரணமாகும். அவர்களுக்கு ஊட்டி விடுவதற்கும் கழுவுவதற்கும் என்னால் முடியாது.

பாடினே னென்பாட்டிற் றுருசு பண்ணிப்
பசித்து தென்றா லெறியாதே பாங்கு சொன்னே
ஹூடினே னிப்படிதான் லோகவாதி
யுங்களுக்குப் பசித்துதென்றா லிதுவே மார்க்க

மோடினேன் பார்த்தணைந்தேன் காணேனென்றா
லொருவருக்கா யொருவர் சென்றே யுழலுவார்கள்
தேடினேன் வாதமில்லை யென்றானானால்
செருப்பாலே வாய்மேலே சேர்ந்து சண்ணே. 362

நான் கூறிய முறைப்படி துருசை குருவாக செய்ய முயன்று வாதம் செய்து அதனால் உன் பசியை ஆற்றிக் கொள். இவ்வுபதேசம் எல்லா வாதிகளுக்கும் பொருந்தும். நான் கூறிய முறையை பொய்யோ! மெய்யோ! என்று மனதில் ஐயங்கொண்டும் வாதம் செய்து பார்த்துப் பலிதமாகவில்லை என்ற காரணத்தால் வாதம் பொய் என்று யாராவது கூறினால் அவர்களை உன்னுடைய செருப்பால் அடித்தனுப்பு.

சண்ணுறது மாரையென்றாற் சொல்லக் கேளாய்
சார்ந்த நூற்பாரனைச் சண்ணுசண்ணு
விண்ணுருகு மெய்ஞ்ஞானம் பொய்யோ வென்று
வேளையந் நாளெரித்த சிவன் பொய்யோவென்று
கண்ணுருகும் பெண்மாயை பொய்யோவென்று
காலூன்றுஞ் சிவயோகம் பொய்யோவென்று
பண்ணுவதை யறியாமற் சொன்னாயென்று
பாதரட்சை கொண்டு பல்லைப் பரவத் தட்டே. 363

யாரையெல்லாம் செருப்பால் அடிப்பது என்று கேட்டால் சித்தர்களால் எழுதப்பட்ட நூல்களைப் படிக்காதவனையும், மெய்ஞ் ஞானத்தை பொய் என்று சந்தேகிப்பவனையும், கண்ணை கவரும் பெண் மாயை பொய் என்று அறியாதவனையும், சிவயோகம் என்பது உண்மைதானா என்று கேட்பவனையும் செருப்பால் அடித்து பல்லைக் கழற்றி அனுப்பு.

தட்டாங்காண் துரிசியுள்ளே யிருந்த செம்பு
சார்ந்து நின்ற லவணமது தாயுமாச்சு
கட்டாங்காண் சூதமுத லானவெல்லாங்
கைமுறையாய்த் துரிசிவிட்டாற் கட்டுப்போச்சு
வொட்டாங்காண் மனக்குரங்கு குருவைக் காக்க
வுத்தியாய்ச் சொல்லுமென்பா ருலுத்த மாடு
தொட்டாங்கா ணதுநிலையைச் சிவன்றானன்று
சூட்டினா ரேழுலட்சஞ் சூட்டினாரே. 364

துருசில் இருக்கும் செம்புடன் கலந்திருக்கும் லவணமான உப்பு தாயாகும். இத்துருசை விட்டால் சூதம் முதல் எல்லா சரக்குகளும் கட்டாது. மனக்குரங்கானது எவ்வாறு தன்னுள்ளிருக்கும் குருவை அறியாதோ! அவ்வாறே உலுத்த மாண்பர் இம்மார்க்கத்தை அறியமாட்டார். இந்த துருசு முறையை சிவபெருமான் முன்னொரு சமயம் தன் நூலான ஏழு லட்சம் என்ற கிரந்தத்தில் கூறி வைத்தார்.

சூட்டியதோ ரேழுலட்ச முறையும் பார்த்துச்
சுறுக்கெல்லாம் பொறுக்கிவிட்டான் மூலநாயகன்
மூட்டியதோ ரிதற்குள்ளே சுறுக்கை வாங்கி
முத்துப்போற் கோர்த்துவைத்தேன் மூன்றுகாண்ட

மாட்டினதோ ராட்டெல்லாந் துரிசியாட்டே
　　யறிந்தானே முழுவாதி யறியான் மாடு
காட்டினதோர் பாட்டெல்லாங் கையுள்ளாகக்
　　கண்டபடி பாடினது கருதிப்பாரே. 365

அவர் கூறி வைத்த நூலிலிருந்து முக்கியமானதெல்லாம் பொறுக்கி எடுத்து திருமூலர் தன்னூலில் கூறி வைத்தார். அதிலிருந்து சிலவற்றை எடுத்து முத்துப்போல் கோர்த்து மூன்று காண்டமாக பாடி வைத்தேன். எல்லா வகையான செயலும் துருசால்தான். இதை முழுமையாக அறிந்தவனே வாதியாவான்; அறியாதவன் மாட்டிற்கு சமமாவான்.

கருதிப்பார் துரிசியினாற் கட்டுஞ்சூதங்
　　கைமுறையா யிருநூறு கடுகியோடும்
பருதியப்பா வாதத்துக் கிதுவேசீவன்
　　பாய்கிறதும் பறக்கிறது மிதனாலப்பா
சுருதியப்பா முடிந்திடத்தே யெத்திக்காட்டுஞ்
　　சொல்லற்று மௌனத்திற் சொக்கப்பண்ணு
மருதியப்பா வரத்தாறா மப்பனொன்றா
　　யலியாக நின்றதிந்தத் துருசிதானே. 366

முறையாக செய்த துருசால் சூதம்கட்டும். மாற்றானது இருநூறையும் தாண்டியாடும் வாதம் என்ற சொல்லுக்கே இதுதான் உயிர். ஆகாயத்தில் பறப்பதற்கும், மலையிலிருந்து தாவுவதற்கும் இத்துருசு இருந்தால்தான் முடியும். மேலும் சுருதிப் பொருளான மூலப்பொருளை ஒரு நொடியில் காட்டும். மனதை மவுனத்தில் சொக்கச் செய்யும். இப்படிப்பட்ட மகிமை வாய்ந்த இத்துருசு ஆணா, பெண்ணா என்று அறியமுடியாமல் அலியாக நிற்கிறது.

தானென்ற துரிசியொன்று வீரமொன்று
　　சாரித்துத் தங்கமது பத்திற் பூசிக்
கானண்ட வோடுதனைக் கீழ்மேலிட்டுக்
　　கனக்கவொரு புடம்போடு கனகநீறும்
வேனென்ற வந்நீறு குருவுமாச்சு
　　வேதைக்காஞ் சூதத்தை விரைந்து காட்டு
ஊனென்ற நிமிளைக்குக் குருவைப் பூசி
　　யுருக்கினாற் பொன்போலே யுருகுந்தானே. 367

துருசையும், வீரத்தையும் வகைக்கு ஒரு பலமெடுத்து பத்து பலம் தங்கத்தின் மேல் பூசி, மேலும் கீழும் அண்ட ஓட்டை வைத்து புடம்போட்டால் குருவாகும். இக்குருவானது சூதத்தைக் கட்டும். இக்குருவை நிமிளையின் மேல் பூசி உருக்கினால் பொன்போல் உருகும்.

உருக்குவதற் கினங்கேளா யூட்டும் போதி
　　லுத்தமனே சவாதோடு தாரங்கூட்டு
பருக்குவது சரக்கெல்லாங் கண்விட்டாடும்
　　பருவமுடன் சவாது விட்டாற் கட்டுப்போச்சு

சுருக்கிறது காரமொடு சவாதிரண்டுந்
துறைக்கெல்லா முருக்கினந்தான் சொன்னேன் சொன்னேன்
தருக்கிறது நிமிளை நின்றே யாடும் போது
சமனாகத் தங்கத்தைச் சாத்து சாத்தே. 368

உருக்கினங்களில் இக்குருவை சேர்த்து உருக்கும் பொழுது அதனுடன் காரமும் சவ்வாதும் சேர்த்தால் சரக்குகள் கண்விட்டாடி உருகும். சவ்வாதை சேர்க்காமல் செய்தால் லோகங்கள் கட்டாது. காரமும் சவ்வாதும் உருக்கினங்களுக்கு மித்துருவாகும். (367 ஆம் பாடலில் கூறிய நிமிளை) உருகும் பொழுது சம அளவு தங்கம் சேர்த்து உருக்கி,

சாத்தியிதை யிரண்டு மொன்றா யாடும்போது
தனியெட்டுச் செயசூத மதிலே போடு
போத்தியது பத்துமொன்றா யாடும்போது
புகழாகச் சவ்வீரம் பத்துப் போடு
ஒத்தியிந்த விருபதுமே மணியாய் வாங்கி
யிதன்மேலே பூசுதற்கு மருந்து கேளாய்
மாத்தியந்தச் சவுக்காரச் சுன்னம் பூரம்
வாகான குருவண்டு புழுகு கூட்டே. 369

கூட்டப்பா காத்தோடே வீரஞ்சூதங்
குக்கிடத்தின் வெண்மலமு நாபிதானு
மாட்டப்பா வெண்கருவால் வராகன் கால்கா
லரைத்தப்பி யுலரவைத்தே யையா கேளாய்
நீட்டப்பா வஞ்சு சுன்னக் குகையினுள்ளே
நேராகச் சீலைசெய்து நிறையக் கட்டி
மூட்டப்பா கனபுடமா யீசானத்தில்
முத்திபெற மதுவை வைத்து மூட்டுமொன்றே. 370

அதனுடன் செயசூதம் எட்டு பலமும், சவ்வீரம் பத்து பலமும் சேர்த்து மணியாய் வாங்கி வைத்துக்கொள். இம்மணியின் மேலே பூசும் மருந்தைப் பற்றி கூறுகிறேன் கேள். சவுக்காரச் சுண்ணம், பூரம், குருவண்டு, புனுகு, காரம், வீரம், சூதம், கோழியின் வெண்மலம், நாபி இவையாவையும் வகைக்கு கால்வராகன் எடுத்து முட்டையின் வெண்கருவால் அரைத்து மேற்படி மணிக்கு பூசி அஞ்சு சுன்னக் குகைக்குள் வைத்து சீலைசெய்து ஈசானனுக்கு பூசை செய்து கெஜபுடம் போட்டு மதுவை உட்கொள்.

ஒன்றான தாமரைநூ லாயிரமாம் பங்கா
மோகோகோ கூடாதே யொருவராலும்
பன்றான சிகாரமது பிராணவாயு
பருவமுடன பானத்தின் பழக்கங் கேளாய்
தன்றான வதிற்பாதி யைஞ்ஞூறாகத்
தன்னொத்த வபானந்தான் கீழே நோக்கும்
வின்றான மும்மலத்தைத் தள்ளுந்தள்ளு
மேவிநின்ற வகார சத்தி விரைந்து பாரே. 371

ஆயிரம் இதழ்கொண்ட சிகாரமான தலை உச்சியில் பிராணவாயு ஆயிரம் பங்காய் கூடிநிற்கும். இதை சித்திசெய்து கொள்ள ஒருவராலும் முடியாது. இதற்கு

நேர் பாதியளவு ஐந்நூறு பங்கு அபானனாகும். இவ்வபானன் கீழ்நோக்குடையதாகவும் மும்மலத்தையும் வெளித்தள்ளக் கூடியதாகவும் இருக்கும். இதற்கடுத்து வகார சக்தியைப் பற்றிக் கூறுகிறேன் கேள்!

பாரப்பா நெஞ்சினுள்ளே நினைவை யோட்டிப்
பனிப்புகை போலிழைந்தோடும் பத்தி பாராய்
நேரப்பா மேற்கொண்டோ வுன்னியோடு
நிலைப்பாக மயேசுரத்தே நின்று பாராய்
சேரப்பா விதற்குள்ளே நாலைக் கூட்டுஞ்
செய்தவரா ரிரண்டாகப் புசுண்டர் செய்தார்
காரப்பா சதாநித்தங் காத்தாயானாற்
கற்பாந்த கோடியெல்லாங் கடிகை யாமே. 372

நெஞ்சினுள் மனதை வைத்து மெல்லியதாக மின்னல் கொடிபோற் பிரகாசிக்கும் வகார சக்தியை பக்தியுடன் பார்த்து அதற்கடுத்த உள்ள மயேஸ்வரத்தின் ஸ்தானத்தில் நின்று உள்நோக்கினால் (சாக்கிரதம், ஸ்வப்னம், சுஷீப்தி, தூரியம்) ஆகிய நான்கும் இவ்விடத்தில் கூடும். இவ்வாறே புசுண்ட ரிஷியும் செய்தார். நீயும் இதேபோல் செய்தால் கற்பாந்த கோடியுகமெல்லாம் உனக்கு கடிகை நேரமாகும்.

ஆமென்றே யார்செய்த வகையைக் கேளா
யப்பனே கும்பகந்தா னறுபானாலு
வாமென்ற பூரகந்தான் முப்பத்திராம்
வகையான ரேசகந்தான் முப்பத்தாறு
நூமென்ற வவரிருந்தே பெற்றார் பேறு
வுத்தமனே கற்பகமா மரத்தின் மேலே
காமென்ற காகமென வுருவைக் கொண்டு
கண்டிருந்தார் கோடியுகங் கரைகாணேனே. 373

கும்பகத்தில் அறுபத்து நாலு வினாடியும், பூரகத்தில் முப்பத்திரண்டு வினாடியும், ரேசகத்தில் முப்பத்தாறு வினாடியும் நிறுத்தி சித்தர் என்று பேறு பெற்று கற்பக விருக்ஷத்தின் மேல் காக்கை உருக்கொண்டு கோடி யுகம் சமாதியிருந்து கரைகாணாத அளவு ஆயுள் பெற்று வாழ்ந்தார்.

காணாத கோடி பிர்மா கண்டாரையா
கரையற்ற விண்டுவையுங் கண்டுவிட்டார்
பூணாத சங்கரருங் கோடி கண்டார்
போக்கோடே மயேசுரத்தைத் தாண்டிநின்று
தோணாத சதாசிவந்தா னொடுங்கிச் சத்தி
தொலையாத நாதமுடன் விந்து வற்று
ஆணாத சிவனுஞ் சிற்பரையிற் சேர்ந்தே
யவள்கடந்து பூரணத்தி லடங்கினாரே. 374

அவருடைய ஆயுட்காலத்தில் கோடி பிரம்மாக்களைக் கண்டார். கோடிக்கணக்கான விஷ்ணுக்களையும், சங்கரர்களையும் கண்டார். கோடி மகேஸ்வரரையும் பார்த்தார். அதையும் தாண்டி சதாசிவன் சக்தியுள் ஒடுங்கி

நாதவிந்துவற்று சிவன் சிற்பரையினுள் கூடி நின்று பூரணத்திலாடுங்கும் போது (இவ்விடத்தில் ப்ருக்ருதி லயம் கூறப்படுகிறது).

அடங்கையிலே புசுண்டருமே யவளைத் தொட்டு
மகண்டத்திற் சுழுத்தியெனக் கணந்தானின்றார்
படங்கவிந்த்ர சாலவித்தை போட்டாள் மாயி
பாரப்பா கணப்பொழுதிற் பின்னும் வந்து
திடங்கதிக மெனவிரித்தாள் கூடாரத்தை
நிமிஷத்தி லண்டமெலா நிறைந்து போச்சு
முடங்கவிதை வேண்டுமென்றால் முடக்கவல்லாள்
முத்திக்க வித்தான முத்தித் தாயே. 375

புசுண்ட மூர்த்தியும் அவளுள் சென்று கணப்பொழுது நின்றார். மீண்டும் தாயானவள் இந்திரசாலமான தன் மாயையால் உலகத்தை சிருஷ்டி செய்தாள். ஒரு வினாடிக்குள் அவள் பிரபஞ்சத்தை ஜீவராசியால் நிரப்பினாள். அதை முடக்க வேண்டுமென்றால் தாயைத் தவிர வேறு யாராலும் முடியாது.

முத்தியிலே நின்றுவந்து புசுண்ட மூர்த்தி
முன்போலே கற்பகமே யாவாயென்றாள்
பத்தியிலே யவர்மேலே கூடாரமென்றார்
பார்க்கையிலே கூட்டோடே லிருட்சமாச்சு
வத்தியிலே நின்றுரைத்த சித்தைப் போலே
யையரந்த கூட்டுக்கு ளமர்ந்தாரப்பா
கத்தியிலே யூதுகிற பூவைப் போலே
கண்டத்தே நின்றுரைத்துக் கருதினாரே. 376

கணப்பொழுது தாயுடன் கூடிநின்ற புசுண்டமூர்த்தியே முன்போல் நீர் கற்பகமாவீர் என்று தாய் கூறியவுடன், ஒரு வினாடிக்குள் கற்பகமரம் கூண்டோடு உண்டாயிற்று. அக்கூண்டினுள் அமர்ந்து மனதை கண்டத்தினுள் நிறுத்தினார்.

கருதியதோர் புசுண்டருடைப் பிறப்பைக் கேளாய்
கலந்துமது வுண்டன்னங் களிக்கும்போது
பருதிமுதற் சோமனையுந் தரித்த வீசன்
பார்ப்பதியுஞ் சென்றங்கே பார்த்தார் பார்த்தார்
நிருதியென்றே சிவகளைதான் காகம்போல
நேர்ந்தனைய வன்னமங்கே நிறைந்தகர்ப்பஞ்
சருதியென விருபத்தோர் பிள்ளைக்குள்ளே
தானுமிவ ரொருவரப்பா சனித்தார் காணே. 377

புசுண்டருடையப் பிறப்பைப் பற்றி கூறுகிறேன் கேள்! ஒரு சமயம் சிவபெருமான், மது உண்டு களித்திருந்த அன்னங்களின் ஜோடியைப் பார்த்தார், அப்போது பார்வதியும் அருகில் இருந்தாள், சிவகலையால் கற்ப முற்ற அன்னம் இருபத்தொரு குஞ்சுகளைப் பொறித்தது. அன்னக் குஞ்சுகளிடையே காகத்தின் உருவத்தோடு புசுண்டரும் தோன்னார்.

காணப்பா விருபதுபேர் கன்மத்தாலே
கைகடந்து போனார்கள் கழிந்து தானே
பூணப்பா லிவர்பிடித்தார் பிராணயோகம்
பொற்பூவும் வாசனையும் போலேயாச்சு
ஆணப்பா பிறந்ததென்றாற் பிள்ளையாமோ
வவர்போலே பெறும் பேறிங் காருக்காகு
மூணப்பா முந்தி முந்தி மூலயோக
முத்தமனே கண்டபின்பு நெஞ்சிற்பாரே. 378

இவர்களில் இருபது பேர் கன்ம வினையால் மாண்டு போனார்கள். ஆனால் புசுண்ட மூர்த்தியானவர் பிராணாயாம யோகத்தை அநுஷ்டித்து தேகத்தை பொன் போல் மாற்றிக் கொண்டார். ஆணாகப் பிறந்தால் மட்டும் பிள்ளையாக முடியாது. முறையாக புசுண்டரைப் போல் யோகம் அநுஷ்டித்தவர்கள்தான் ஆண் மகனாவார்கள். முதலில் மனதை மூலத்தில் வைத்து பின்பு நெஞ்சில் நிறுத்த வேண்டும்.

நெஞ்சிலே நின்றதுதான் மூலம்பார்த்து
நேராக வந்ததென்றார் புசுண்டமூர்த்தி
பஞ்சிலே பொறிபட்டாற் போலேயேறும்
பரத்தேறுங் கொங்கணரே யென்றாரையா
குஞ்சிலே யிறகொடிந்து காலும் போனாற்
கூடாத தினத்தோடே கொள்கை போல
வஞ்சிலே மூலத்தை நாடாவிட்டா
லரிதரிது பிராணனென்றா ரய்யர்தானே. 379

நெஞ்சிலும், மூலத்திலும் மனதை வைத்துப் பழகி வந்தால் யோகம் சித்தியாகி, காயஸம்பத் உண்டாகும். ஆகவே கொங்கணரே பஞ்சில் நெருப்பு பட்டால் எவ்வாறு சுலபமாக நெருப்பு பற்றுமோ அதேபோல் நீரும் மூலம் முதற்கொண்டு ஒவ்வொரு ஆதாரமாக ஏறிப் பார். பறவையின் குஞ்சு சிறுவயதிலேயே சிறகையும் கால்களையும் இழந்தால் எவ்வாறு ஆகாயத்தில் பறக்காதோ அதேபோல் அஞ்சுவயதில் பழக்கமில்லாத பிராண யோகம் அறுபது வயதில் வருவது என்பது மிகவும் கடினம் என்றார்.

அய்யரன்று சொன்னமொழி கேட்டுப் பொங்கி
யடியற்ற மரம்போல விழுந்தேன் யானு
மய்யரன்று கொங்கணரே யப்பா வென்றே
யடியேனைப் போல் வாழென் றெடுத்தாரய்யா
வய்யரன்று சொன்ன மொழி மூலமாதி
யதுகண்டு பிராணனைத் தானறிய வேண்டு
மய்யரன் றிருப்பதெங்கே மேருவின்றெற்
கவருடைய் வாட்டெல்லாந் துரிசியாட்டே. 380

அவருடைய இவ்வுபதேசத்தைக் கேட்டு ஆனந்தப் பெருக்கால் மரம்போல் பூமியில் வீழ்ந்து வணங்கினேன். அச்சமயம் அப்பா! கொங்கணா என்னைப் போல் நீயும் யோகத்தில் வெற்றி கண்டு நீடூழி காலம் வாழ்வாய் என்று ஆசீர்வாதம் செய்தார். அவருடைய உபதேசம் கேட்டு நானும் மூலத்தில் மனதை வைத்துப்பிராணனை ஜயித்து காயசித்தியும் யோக சித்தியும் பெற்றேன். அவருடைய சித்து முறைக்கெல்லாம் மூலகாரணம் குருநாதம்.

ஆட்டுறது மளிக்கிறதும் படைக்கிறதுஞ் செய்தா
ராசையற்ற சிவயோக வாண்மை யோடே
மூட்டுறதும் படைக்கிறது மளிக்கிறதும் பண்ணு
மூதண்ட நிமிளைபட்ட துரிசி வெள்ளைக்
கூட்டுறதுங் கழிக்கிறது மாகச் சேர்த்துக்
கொள்ளாத பூரணத்தைக் குமட்டுஞ் சூதம்
நீட்டுறது மலய்த்தலொடு வருதல் பண்ணும்
நேரான துரிசியினாங் குளிகை தானே. 381

ஆக்கல், அழித்தல், காத்தல், ஆகாயத்தில் பறத்தல், வரவழித்தல், ஓட வைத்தல் போன்ற செயல்கள் யாவும், நிமிளையுடன் சேர்த்து செய்யப்படும், துருசு சுண்ணத்தின் மகிமையால் செய்யப்படும் இரசக்குளிகையின் மகிமையாகும்.

குளிகையினாற் பெருமைக்கிங் கொப்புக் கேளாய்
கூர்ந்துநின்ற பெரியோர்கள் மனந் தானப்பா
வளிகையென்ற குளிகைக்கு மனோன்மணித் தாயொப்பு
வாக்கடங்கி மவுனமுற்று மூலம்பாரா
யிளிகையென்று விட்டாக்கா லெடுத்துப் போட்டே
யிறக்கிறதும் பிறக்கிறது மிரண்டு மூடு
மளிகை நன்றே யென்றாக்கான் மூலம் போக்கே
யழியாத பதிவேண்டின் மூலம் பாரே. 382

இக்குளிகைக்கு சமமான வஸ்து என்னவென்றால் பெரியோர்களின் அடங்கிய மனது, மனோன்மணித்தாய் போன்றவையாகும். இக்குளிகையைக் கொண்டு வாக்கை மனதில் அடக்கி மவுனமாகி மூலம் பார்த்து பிறப்பையும், இறப்பையும் அகற்றிவிடு மிகவும் கடினம் என்று விட்டால் யோகம் பலியாது. அழியாத பதவி வேண்டுமானால் மூலத்தைப் பார்.

மூலமென்ற யோகத்தால் ஞான சித்தி
மூட்டுகிற மனத்தாலே யிதய சித்தி
கோலமென்ற லட்சியத்தா லாயுள் சித்தி
கூறாத மவுனத்தாற் புலன்கள் சித்தி
யோலமென்ற கண்டத்தா ன்நாலுஞ்சித்தி
யுற்றுப் பாரதைக் கொண்டே யெட்டுஞ்சித்தி
யாலமுண்ட கண்டர் சித்தி மையம் பார்த்தா
லர்க்ரா வாதசித்தி துரிசியாச்சே. 383

மூல யோகத்தால் ஞானசித்தியும், மனதால் ஆத்ம சித்தியும், லட்சியத்தால் ஆயுள் சித்தியும், மவுனத்தால் புலன்கள் சித்தியும், கண்டத்தால் நாலு வகை அவஸ்தை சித்தியும், மேலும் அணிமாதிசித்தியும் சிவயோக சித்தியும் வாத சித்தியும் துருசு சித்தியும் உண்டாகும்.

துரிசிக் கட்டு (வேறு)

ஆச்சப்பா பச்சைநிறம் போலேகட்ட
வறைகின்றே னாச்சரிய மதிகம் வேதை
வாச்சப்பா பச்சை நிறம்போலே நின்றால்
வாக்கடங்காத் தூபமுதல் வேதையாகும்

போச்சப்பா வாதமென்ற வேலை தாண்டிப்
பொன்னென்ன வெள்ளியென்ன புகழோ மெத்த
வோச்சப்பா வெடியுப்புச் செயநீராலே
யுத்தமனே சாரத்தி லாட்டி டாயே 384

துருசானது பச்சை நிறம் மாறாமல் அப்படியேகட்டினால், வாக்கிற்கு அடங்காத தூமவேதையும் பரிச வேதையும் உண்டாகும். மேலும் கட்டுக் கடங்காத பொன்னும், வெள்ளியும் உண்டாகும். வெடியுப்புச் செயநீரால் சாரத்தை அரைத்து,

ஆட்டையிலே நெட்டேறி யடங்கும் போதி
லதிற்போடு சாரவிடை சீனக்காரம்
நீட்டையிலே குழம்பாகுமத் துரிசிதோய்த்து
நிலையாக ரவியிலிட்டுத் தினந்தான் மூன்று
வூட்டையிலே வாட்டியதைத் தோய்த்துத் தோய்த்து
வுத்தமனே கரியோட்டி லுரக்க வாட்டு
தீட்டையிலே யிதுமேலே கவசம் போட்டுச்
செப்புவேன் நிறமாகச் செப்புவேனே. 385

நெட்டேறி அடங்கிய பின்பு அச்சாரத்தின் எடைக்கு சீனாக்காரமும் சேர்த்து அரைத்து குழம்பு பதத்தில் துருசை தோய்த்து மூன்று நாள் ரவியில் உலர்த்தி பின்னர் அத்துருசை மீண்டும் தோய்த்து கரியோட்டில் வாட்டி கவசம் செய்ய வேண்டும். கவசம் செய்யும் முறையைக் கூறுகிறேன் கேள்!

திறமான கல்லுப்பும் சீனம் ரெண்டுஞ்
சேர்சமனாய்ப் பழச்சாற்றா லாட்டிக் கொண்டு
பிறமான கவசமது போட்டு போட்டு
பேரான சீலை செய்து புடத்தைப் போடா
யறமான துரிசியது மாத்தாளைப் போ
லாச்சரியம் பச்சைநிற மாகக் கட்டு
முறமான கண்டவர்க்குக் குருவுமாகு
மோட்டுகிற செந்தூரக் களங்கு மாமே. 386

கல்லுப்பையும், சீனத்தையும் சமஅளவு எடுத்து எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து துருசின் மேல் பூசி வாட்டி சீலை செய்து புடம்போட்டால் துருசானது பார்வதியைப் போல் பச்சை நிறமாய் கட்டி நிற்கும். இத்துருசை முறைப்படி செய்தவர்களுக்கு குருமருந்து, செந்தூரம், களங்கு போன்றவை சித்தியாகும்.

துருசுச் செந்தூரம்

களங்கமென்ன மனக்களங்கோ வென்ன வேண்டாங்
கைமுறையாய்ச் செந்தூரக் கருத்தைக் கேளாய்
தளங்கமென்ன நாகமொன்று சூதம்பாதி
தாக்கியொன்றாய் வில்லையைப் போற் கல்வத் திட்டே
யளங்கமென்ற சவ்வீர மதனிற்பாதி
யப்பனே தூவி வைக்கச் செயநீராகும்
புளங்கமென்ற துரிசியதிற் தோய்த்துத் தோய்த்துப்
பொற்றகட்டைச் சுற்றியதைப் பொலிய வாட்டே. 387

வாட்டையிலே பறித்தகட்டை யிழுத்துக் கொண்டு
மருவியது சிவப்பாகு மளவும் வாட்டு
ஆட்டையிலே செந்தூர மென்ற பேரே
யாடவல்லோர்க்கிது போதும் வாதத்திற்கு
நீட்டையிலே நவலோகம் பத்தும் பத்தாம்
நேரான சூதமதில் நேர்ந்து சாகும்
பூட்டையிலே பாஷாண மெல்லாஞ் சாகும்
போக்குமெத்த போக்கு மெத்த புகழ்ந்து பாரே. 388

நாகம் ஒரு பங்கு, நாகத்தின் அளவிற் பாதி சூதம் இவை இரண்டையும் ஒன்றாய்ச் சேர்த்து கல்வத்திலிட்டு நன்றாய் இடித்து இவ்வெடைக்குப் பாதி செவ்வீரத்தைப் பொடி பண்ணித் தூவினால் செயநீராகும். இச்செயநீரில் துருசைத் தோய்த்து அதன்மேல் தங்கத் தகட்டைச் சுற்றி வாட்ட வேண்டும். துருசானது தங்கத்தை உறிஞ்சும் வரை மீண்டும் மீண்டும் துருசை செயநீரில் தோய்த்து வாட்ட வேண்டும். இவ்வாறு வாட்டினால் துருசு தங்கத்தையிழுத்துக் கொண்டு சிவப்பு நிறமுள்ள செந்தூரமாக மாறும். வாதம் செய்யத் தெரிந்தவர்க்கு இச்செந்தூரம் ஒன்றே போதுமானது. இச்செந்தூரத்தால் நவலோகமும் தங்கமாகும். மேலும் சூதம் மடிந்து கட்டும். அறுபத்து நாலு பாஷாணமும் சாகும். இப்படிப்பட்ட மகிமைகளைக் கொண்டது இத்துருசுச் செந்தூரம்.

துருசிக் குரு

புகழ்ந்திந்தத் துரிசிதனைக் குருவாய்ப் பண்ணப்
போடுகிறேன் சேகண்டி யொளிப்பை விட்டுப்
புகழ்ந்திந்தத் துரிசியொரு பலமேயானாற்
புகழ்ந்து வங்கச் சுண்ணமது பலமே கால்தான்
புகழ்ந்துநின்ற வீரமது பலமே கால்தான்
புகழ்பெரிய சாரநீர் காசு போடு
புகழ்ந்துவொரு காசிடைதான் பூரம்போடு
போற்றி நன்றாய் வெண்கருவாற் பூசுபூசே. 389

பூசியதை யுலரவைத்தே யப்பாற் கேளாய்
புகழான வைந்து சுண்ணக் குகையில் வைத்து
வாசியுறச் சீலைசெய்து கரிமேலிட்டு
வளமாக வூதிடப்பா மகத்தாஞ் சுண்ணம்
வீசியிந்த வலையெறிந்தால் வாதமீனை
விட்டுவிடா தொன்றினையும் விரைந்து சுண்டும்
பாசிவலைக் காரிக்கு ஆயம் பூசை
பண்பாகச் செய்துடனே பலிக்குந்தானே. 390

துருசைக் குருமருந்தாகச் செய்யும் முறையைக் கூறுகிறேன் கேள். கால்பலம் வங்கச் சுண்ணம். வீரம் கால் பலம், சாரச் சுண்ணம் காசிடை, பூரம் காசிடை இவை நான்கையும் வெண்கருவால் அரைத்து ஒரு பலம் துருசின் மேல் பூசி, உலர்த்தி பஞ்ச சுண்ணக் குகைக்குள் வைத்துச் சீலை செய்து கரியடுப்பில் வைத்து ஊதினால்

சுண்ணமாகும். இச்சுண்ணத்தைக் கொண்டு வலை வீசினால் வாதம் என்ற மீன்கள் சிக்கும். ஆனால் முதலில் தாயான தேவிக்கு பூசை செய்தால்தான் பலிதமாகும்.

அப்பிரக ரசம்

பலிக்கவோ ரப்பிரக ரசத்தைக் கேளாய்
பாங்கினொடு தகடாக வாங்கிக் கொண்டு
வலிக்கவது வேகவென்றாற் கோடாசூரி
வாங்கியொரு காசெடைதான் காசு போட்டே
மொலிக்க விந்தத்துரிசி வெள்ளை காசு போட்டே
யுறவாக வெலியால மெண்ணெய் குத்தி
யலிக்கரைத்து பத்திடையாந் தகட்டிற் பூசி
யதன் மேலே யிந்த வெண்ணெய்ச் சீலை சுற்றே. 391

சுற்றினதைத் தீபத்திற் கொளுத்தி யப்பா
சுகமாக வெந்தபின்பு தகட்டைச் சூத
மற்றினதிற் பொடிபொடியாய் விழு மேசூத
மாச்சரிய மப்பிரகச் சூதம் பாராய்
முற்றினது ஜெயசூத மென்று பேரா
மூட்டிடவே நற்சூதந் தொந்தித் தேறப்
பற்றினது வாயிட்டாற் சேர்ந்து வெண்ணைப்
பருவமா யிருக்குமிதைப் பகுந்துப் பாரே. 392

அப்பிரக ரசத்தைப் பற்றி கூறுகிறேன் கேள். கோடா சூரி, துருசுச்சுண்ணம் இவையிரண்டையும் வகைக்கு காசெடை எடுத்து எலியாலம் எண்ணெய் (எலியால்-காட்டாமணக்கு) விட்டரைத்து பத்தெடை உள்ள அப்பிரக தகட்டின் மேல்பூசி அதன்மேல் மேற்படி எண்ணையாலேயே சீலைசெய்து தீபத்தில் வாட்டினால் தகடானது வெந்து பொடியாக ரசமாய் விழும். இந்த ரசத்திற்கு ஜெயசூதம் என்று பெயர் இந்த ஜெய சூதத்துடன் ரசத்தை சேர்த்தால் இரண்டும் சேர்ந்த வெண்ணையாகும்.

பகுந்திந்த வெண்ணையைத்தான் பகரக் கேளாய்
பரிசிக்க நவலோகம் பொன்னுமாகும்
வகுந்துப்பு வுபரசங்களும் பொன்னாகும்
வாய் திறக்கக் கூடாதே யிதற்குள் வேதை
மகிழ்ந்திந்தச் சூதமுண்டாற் காயசித்தி
மாறிப்போம் நரையெல்லாம் வயதோ வேறும்
தகிழ்ந்திந்த நவ்நீதம் பூசிவாட்டச்
சரக்கெல்லாங் கட்டுண்ணுஞ் சங்கை கேளே. 393

இந்த வெண்ணையால் நவலோகங்கள், உபரசங்கள் போன்றவை யாவும் பொன்னாகும். இதனுடைய பெருமையை வாயால் கூறமுடியாது. இச்சூதத்தை உட்கொண்டால் காயசித்தி உண்டாகும். நரைதிரைகள் மாறும். பால்யம் உண்டாகும். இந்நவநீதத்தால் எச்சரக்கை பூசி வாட்டினாலும் கட்டும்.

சங்கையென்ன கட்டினதையினத்தைக் கண்டு
சாத்திடவே பொன்னாகுந் தவறிப்போகா
மங்கையென்னத் திரண்டுடனே கங்கை கேவாழ்
மகத்தான கங்கையும் வேலைக்கே யாவாள்

பங்கையென்ற வேலைக்குப் போக்கில்லாப் போற்
பாலித்த வப்பிரக நவநீதந்தா
ஙங்கென்ன விங்கென்ன விரண்டு மற்ற
வானந்தம் போலாமே வேதை தானே. 394

கட்டிய சரக்குடன் இவ்வெண்ணையை சேர்த்துருக்கினால் பிசகில்லாமல் தங்கமாகும். மங்கை முதல் கங்கை வரை எல்லோரும் அடிபணிந்து தொண்டு செய்வார்கள். எவ்வகை துன்பமுமற்று ஆனந்தமுண்டாகும். இப்படிப்பட்ட பெருமை வாய்ந்தது இந்த அப்ரக வெண்ணை.

வேதையென்ன சொல்வதப்பா துரிசு நீற்றில்
வெருவிடவே சரக்கெல்லாம் விரைந்து சாகும்
பாதையென்ன நவலோகம் படவேநீறும்
பரிசத்திற் சூதமென்ற வானை சாகும்
காதையென்ன மெத்தவில்லாத் துரிசி மார்க்கங்
மைமுறை யாய்ப் பண்ணு முன்னே வாதசித்தி
பேதையென்னச் சிறுபிள்ளை சொன்னான் கேட்டுப்
பேரான துரிசி பண்ணப் பேர் பெற்றேனே. 395

அப்பிரக வெண்ணைக்கு அவ்வளவு சக்திவர காரணம் அதில் சேர்ந்த துருசு சுண்ணத்தால் தான் சகல சரக்கும் சாகும். நவலோகமும் நீறும் சூதம் சாகும், துருசைமுதலில் செய்து பிறகு வாதமும், யோகமும் செய்து பார்த்தால் இரண்டும் சித்தியாகும்.

துருசிக் களங்கு

பெற்றதெல்லாஞ் சொல்லுகிறேன் மக்காள் கேளும்
பேரான சாம்பிராணி கெந்தராசி
யுற்றதுதான் மூன்றெடையாஞ் சூடனைந்து
வொக்கவரைக் காசெடைதான் கெந்தியோடு
கற்றதுதான் கற்பூரங் காலே போடு
கடியதொரு வெள்ளூரமுங் காலே போடு
ஒற்றதுதான் கரண்டியிலே யுருகும்போது
வொரு பணந்தான் வெண் காரச் சுன்னம்போடே. 396

துருசு களங்கு சொல்கிறேன் கேள்! சாம்பிராணி மூன்று எடை சூடன் ஐந்து எடை, கெந்தகம் அரைக்காசெடை, கற்பூரங் கால் காசு, வெள்ளூரம் கால் காசு இவையாவையும் ஒரு அயக்கரண்டியிலிட்டு உருக்கும் பொழுது பண எடை வெண்காரச் சுண்ணம் சேர்க்க வேண்டும்.

போடப்பா தைலம்போ லுருகும்போது
புகழான துரிசியிரு காசுதூக்கி
நீடப்பா லிங்கமொரு காசுபோடு
நேரான தாளகந்தான் காசுபோடு
வூடப்பா சவ்வீரங் காசுபோடு
வுற்றுமெள்ளக் கிண்டியிதை யுறவாய்வாட்டு
ஆடப்பா விவைநான்குங் கறுத்துப் போகு
மப்பனே பிறட்டிவிட்டு வேறே வாங்கே. 397

சேர்த்த பிறகு தயிலமாய் உருகிநிற்கும். அம்மருந்துடலா துருசு இருகாசிடையும், லிங்கம், தாளகம், சவ்வீரம் மூன்றையும் வகைக்கு ஒரு காசிடையும் சேர்த்து கிண்டினால் இவை நான்கும் கருத்துப் போகும். இதை கல்வத்திலிட்ட பிறகு செய்ய வேண்டிய முறையைக் கேள்.

வாங்கியிந்த நான்குவகை கல்வத்திட்டு
வாகான சூதமொன்று தங்கமொன்று
மாங்கியதோர் சுத்திசெய்த துத்தமொன்று
மருவியரை பழச்சாறுங் கருவுங்கூட்டி
யோங்கியிதை வில்லைபண்ணி யுலரப்போடு
யுரைத்திடவே கல்லுப்பும் பிரட்டிக்கூட்டிப்
பாங்கிட வெங்கார மிட்டுப் பழச்சாறு விட்டுப்
பருவமுடன் சிமிள்போலே பண்ணிப் போடே. 398

பண்ணியதோர் சிமிளுக்குள் வில்லைவைத்துப்
பாங்காகச் சீலைசெய்து பறியிற் காய்ச்சி
யண்ணியதோ ரைந்தெருவிற் புடத்தைப் போட்டா
யப்பனே களங்காகுந் துரிசிராயன்
குண்ணியிடை ரெண்டேகால் வெள்ளி கூட்டு
குப்பென்று பத்தாகுங் குறையுங் கேளாய்
கண்ணியென விரும்புமுதல் நவலோகங்கள்
காட்டுமுன்னே பத்தரையாங் கனகந் தானே. 399

மேற்கூறிய கருத்த சரக்குடன் சூதம், தங்கம், துத்தம் இவை மூன்றையும் சேர்த்து பழச்சாறும் வெண்கருவும் சேர்த்தரைத்து வில்லையாகச் செய்து உலரவைத்துக் கொள். பிறகு கல்லுப்பையும், வெங்காரத்தையும் சேர்த்து பழச்சாறு விட்டரைத்து சிமிழ்போல் செய்து கொண்டு இச்சிமிழுள் வில்லைகள் வைத்து சீலைசெய்து ரவியிற்காய்ச்சி ஐந்தெருவிற் புடம்போட்டால் துருசானால் களங்காகும். குன்றி எடை களங்குடன் ரெண்டே கால் பங்கு வெள்ளி சேர்த்துருக்கினால் பத்து மாற்றுள்ள தங்கமாகும். அதுமட்டுமின்றி இரும்பு முதற்கொண்டு எல்லா சரக்குகளும் பத்தரை மாற்று உள்ள பொன்னாக மாறும்.

தானென்ற களங்காலே சரக்கைத் தொட்டாற்
றனித்தனியே வேதையுமாஞ் சகலதாதுங்
கானென்ற சூதமிதிற் கட்டிப் போகுங்
கரையில்லை துரிசிமுகங் காணவென்றால்
வேனென்று என்னசொல்வே னென்னாற் கூடா
வேதாந்தி செகச்சால விரிவுக் கொக்கும்
பானென்று மூண்டுரைத்தால் வாத சித்தி
பசுக்களுக்கோ வாதமில்லை பாருபாரே. 400

இக்களங்கு பட்ட சரக்கெல்லாம் வேதையாகும். இக்களங்குடன் சூதம் சேர்ந்தால் கட்டிப்போகும், இத்துருசின் பெருமைக்கு எல்லையில்லை. இதைப் பற்றிக் கூறவேண்டுமென்றால் இப்பிரபஞ்சம் எவ்வளவு தூரம் விரிந்துள்ளதோ அவ்வளவு கூறவேண்டும். தூரிசை நீக்கி விட்டுச் செய்யும் எந்த ஒரு வாதமும் பலியாது.

மூல குருவர்க்கம்

பாரப்பா மூலகுரு வர்க்கஞ் சொல்வேன்
பரிவாக நந்தியென்ற நாமம் நால்வர்
சீரப்பா சிவயோக முனிதா னொன்று
சிறப்பான பதஞ்சலி வியாக்கிரமர் ரெண்டு
நேரப்பா மூலகுரு வோடே யெட்டு
நேராக நந்தியினற் பிள்ளை யென்பார்
பேரப்பா மூலகுரு பிள்ளைகேளாய்
பேரான மாலாங்கன் பிள்ளைதானே. 401

பிள்ளையென்ற கஞ்சமலைச் சித்தரோடு
பிரமனோ டிந்திரனுஞ் சோமனப்பா
தன்னையென்ற காலாங்கி யுடனே கேளாய்
சார்ந்து நின்ற ருத்திரனோ டேழுபேரு
முள்ளையென்ற காலாங்கி மூர்த்திக் கன்றே
யுத்தமனே யறுபத்து நான்குசீட
ரள்ளையென்ற முதற்சீடரையா போக
ரறுபத்து மூன்றுபேர் பிறகுதானே. 402

மூலகுரு வர்க்கம் கூறுகிறேன் கேள்! நந்தி என ஒரே பெயர் கொண்ட நாலு பேர், சிவயோக முனி, பதஞ்சலி, வியாக்கிரமர், திருமூலர் ஆகிய எட்டு பேர்களும் மூல குருவாவார்கள். நந்தி என்பவர்களுக்கு எட்டு சீடர்கள், திருமூலருக்கு மாலாங்கன், கஞ்சமலை சித்தர், பிரம்மன், இந்திரன், சோமன், காலாங்கி, ருத்திரன் எனப் பெயர் கொண்ட ஏழு சீடர்கள். இவர்களில் காலாங்கி மூர்த்திக்கு அறுபத்து நாலு சீடர்கள், இவர்களில் முதல் சீடர் போக தேவராவார். மற்ற அறுபத்து மூன்று பேர் அவருக்கு பிறகே.

தானென்ற கஞ்சமலைச் சித்தருக்குச்
சாதகமா யைந்துபிள்ளை சீடர்வர்க்க
மூனென்ற மாலாங்க மூர்த்திக் கப்பா
வொன்பது பேர் சீடர்வர்க்க முரைக்கக்கேளாய்
கானென்ற விந்திரனும் பிரமன் சோமன்
கலந்துநின்ற ருத்திரர்க்கும் பிள்ளையில்லை
வானென்ற நாலுதிக்கும் நாலுமூர்த்தி
மகத்தான கீர்த்தி கொண்டார் மைந்தர் கேளே. 403

கேளப்பா பாட்டருட னெட்டுப் பேருங்
கெடியான நாலுநந்தி நாலுதிக்கு
மாளப்பா சேர்ந்துநின்றா ரகண்டம்போலே
யாச்சரியம் பதஞ்சலி வியாக்கிரமர் கேளாய்
நீளப்பா வம்பலத்தே நிறைந்து போனார்
நேரான சிவயோகி நெட்டாய்ச் சென்று
தாளப்பா பூரணத்திற் சேர்ந்தே யாடிச்
சமத்தாக மேருவிலே தாண்டினாரே. 404

கஞ்சமலை சித்தருக்கு சீடர்கள் ஐந்து பேர். மாலாங்க மூர்த்திக்கு ஒன்பது சீடர்கள் இந்திரன், சோமன், பிரமன், ருத்திரன், என்ற இவர் நான்கு பேர்களுக்கும் சீடர்கள் கிடையாது. ஆனால் இவர்கள் நாலுபேரும் நான்கு திக்குக்கு அதிபதியானார்கள். திருமூலருடன் சேர்ந்து எட்டு பேர் கொண்ட மூலவர்க்கத்தில் நந்தி எனப் பெயர் கொண்டவர்கள் நான்கு திக்குக்கு அதிபதியானார்கள். பதஞ்சலியும் வியாக்கிரமரும் அம்பலத்தில் நின்றார்கள். சிவயோகி மேல்நோக்கிச் சென்று பூரணத்துடன் கலந்து மேருவைத் தாண்டிச் சென்றார்.

தாண்டியங்கே யிருந்திடத்தில் வானோர்க்குள்ளே
சாதகமா யொன்பதுபேர் சீடராச்சு
வேண்டியங்கே யொன்பதுபேர் வர்க்கஞ் சொல்ல
வுத்தமனே யிந்திரனு முளறிவிட்டார்
காண்டிர்களோ மைந்தர்களே மூலவர்க்கங்
கரைசொல்லக் கூடாது கண்ணோக் கில்லை
பாண்டிகளா மறுபத்து மூன்று பேர்க்குப்
பாரப்பா சீடர்மெத்த பார்த்திலேனே. 405

அவர் மேருவைத் தாண்டி செல்லுகையில் வானோர்களில் ஒன்பது பேர் சீடரானார்கள். இந்த ஒன்பது பேர்களுக்கு இந்திரனும் உபதேசம் செய்தார். போகரைத் தவிர மற்ற அறுபத்து மூன்று சீடர்களுக்கும் எண்ணற்ற சீடர்கள். அவர்களின் பெயர்களைக் கூட நான் அறிந்தேனில்லை.

பார்த்திலேன் கிரேதமுத னாலுங்கூடிப்
பாங்காக முடிந்துடனே ஜலத்தான் மாயு
மேத்திலே னிப்படி நான் கோடி கண்டே
னெனையீன்ற போகர்கண்ட தெம்மட்டோ சொல்
ஆத்திலேன் யுகந்தோறும் வாதம் பண்ணி
யலுத்திட்டேன் சமாதிக்கு ளடங்கிப் போனேன்
போத்திலேன் சங்குமுக வடமேன் மூலை
புகழ் சுணங்க விருட்சத்தி லுறைந்திட்டேனே. 406

கிரத யுகம் முதலாய் நான்கு யுகம் முடிந்த பிறகு ஏற்படும் பிரளயத்தின் பின் ஜலமயமாயிருக்கும். இம்மாதிரிப் பிரளயங்களை நான் கோடி முறை பார்த்துள்ளேன். நானே இவ்வளவு பார்த்துள்ளேன் எனில் என்னுடைய குருவான போகர் எவ்வளவு பார்த்திருப்பார் என்று கூறவும் முடியுமோ? யுகம்தோறும் வாதம் செய்து அலுத்துப்போய், சங்கு முகமாய் இருக்கும் வடமேல் மூலையில் சுணங்க விருக்ஷத்தின் கீழ் சமாதியில் அடங்கி நின்றேன்.

உறைந்திட்டே னொருநாலு யுகந்தான் வாத
மோதினேன் பிள்ளைகட்கு முபதேசித்தேன்
மறைந்திட்டு நின்றாக்கா னந்திசொல்வார்
மயக்க முற்று நின்றாக்கான் மாயி சொல்வாள்
திறந்திட்ட விண்ணே நீர்போதஞ் சொல்லும்
செயலேது பூரணத்தின் செயலே யல்லால்
குறைந்திட்ட போகரது நல்லோர் பார்த்துக்
கொள்மக்காள் மைந்தர்களே கொள்ளுவீரே. 407

அவ்வாறு சமாதியில் அடங்கிநின்றபடி நாலு யுகங்கள் சீடர்களுக்கு வாதத்தை உபதேசித்தேன். நான் சொன்னபடி யோகம் பார்த்தால் மூலத்தில் அதையே நந்தி சொல்வார். மயக்கமுற்று நின்றால் மயங்காதே மகனே எனக்கூறி தாயானவள் உபதேசிப்பாள். இவையாவும் பூரணத்தின் செயலாலே என்றறிந்து கொள்ளுங்கள். (போகர் போன்றே பெரியோர் பார்த்துக் கூறியதை அறிந்து கொள்ளுங்கள்.)

கொள்ளுவதோ ரறுபத்து மூன்று போதங்
கூட்டியய்யர் பதம்போற்றிக் குவிந்து நின்றே
நள்ளுவதோ ரண்ணலுக்கு மைந்தரே போ
னாட்டிலே சீடர் வர்க்கம் படைத்தாய் மெத்த
வள்ளுவதோர் பூரணத்திற் புக்குவந்தா
ராண்மை யென்றா லுனதாண்மை யென்றாரய்யர்
பள்ளுவதோ ரண்டத்தி னாலுதிக்கும்
பார்த்திட்டேன் குவடுகளிற் பார்த்திட்டேனே. 408

முன்னொரு சமயம் காலாங்கி நாதரிடம் அறுபத்து மூன்று பேரும் கூடிநின்று பாதம் போற்றி மனங்குவிந்து நின்றார்கள். அப்பொழுது அவர் (நாட்டில் அதிகமான சீடவர்க்கம் படைத்து நிற்கும்) சீடர்களே இப்பொழுது பூரணத்தில் லயப்பட வந்திருக்கும் உங்களைக் கண்டு நான் பெருமையடைகிறேன் என்றார் அவர் கூறியதை போலவே இப்பொழுதும் எங்கு பார்த்தாலும் மூலவர்க்கமாகவே இயிருக்கிறது.

பார்த்திட்டேன் மூலவர்க்க மண்டந்தோறும்
பரிவான பேரண்டப் பதத்து மட்டுங்
கோத்திட்டே னுறவாடி வஸ்துவுண்டேன்
குவடெல்லாம் மூலகுரு கூட்டம் மெத்த
வேத்திட்ட யிந்திரன்றன் பட்டினத்தி
லெத்தனைபேர் தேவதைக ளெண்ணப் போகா
வாத்திட்ட திசையெல்லா மூலராச்சு
வப்பனே நீங்கள் சென்றே யறிந்திடீரே. 409

மூலவர்க்கத்தை மலைக்குவடு, அண்டம், பேரண்டம், ஆகிய இடங்களிலும் பார்த்தேன் அவர்களுடன் நான் உறவாடி வஸ்து உண்டேன். மலைக்குவடு மட்டுமல்லாமல், இந்திரனுடைய பட்டிணத்திலும், தேவதா வர்க்கத்திலும் நான்கு திசைகளிலும் மூலவர்க்கமே பரவி நிற்கிறது.

அறிந்திட்டே னொரு காலங் கல்லாமண்ட
மாகாகா வொருகால மண்ணாய் நிற்கும்
பிறந்திட்ட வொருகாலஞ் செந்துவாகும்
பேராக வொருகால மலராய் நிற்கு
மறந்திட்ட வொருகால மரமாய் நிற்கு
மாசற்றே யொலுகாலம் வெளியாய் நிற்குஞ்
செறிந்திட்ட வொருகால மசூரன் சென்று
சிறப்பான பூமியைத்தான் திரைத்தான் காணே. 410

நான் அறிந்தவற்றை கூறுகிறேன் கேள்! இவ்வண்டம் ஒரு காலத்தில் கல்லாகவும், பின் மண்ணாகவும், பிறகுபெகு காலம் ஜீவசெந்துவாக நிறைந்தும், ஒரு சமயம்

மலர்களாகவும், ஒரு காலத்தில் மரமாகவும், ஒரு காலத்தில் ஒன்றுமில்லாத சூனியமாகவும், பிறகு அசுரர்கள் நிறைந்ததாகவும், இருந்தது இவ்வசுரர்கள் பூமியை கடலுக்கடியில் ஒளித்தனர்.

திரைத்தவனை மால்தொடங்கிப் பிடித்து வாங்கிச்
　　சீராகப் பரப்பினதோர் திரமுங் கண்டேன்
சுரைத்தவனு மிராவணனும் ராமனாகச்
　　சூழ்ந்து பத்துப் பதினைந்துங் கண்டேன் கண்டேன்
முரைத்தவனுங் கோபால கிருஷ்ணனாகி
　　மூவாறு பாரதமு முடியக் கண்டேன்
கரைத்தவனே மால் பிரமர் மாண்டு மாண்டு
　　காட்டியதோர் கூத்தெல்லாங் கண்டேன் காணே. 411

அவர்களிடமிருந்து மகாவிஷ்ணு பூமியைமீட்டதையும், அதை ரஸாதளத்தின் மேல் மிதக்கச் செய்ததையும் கண்டேன். அதுமட்டுமின்றி பத்துப் பதினைந்து ராவணர்களையும், ராமர்களையும், பார்த்திருக்கிறேன், அதேபோல் பல கோபால கிருஷ்ணர்களையும், பதினெட்டு முறை பாரதத்தையும் பார்த்திருக்கிறேன், என் ஆயுட்காலத்தில் பல பல பிரமாக்கள் விஷ்ணுக்கள் தோன்றித் தோன்றி மறைந்து ஆடும் செகச்சால கூத்துகளையும் பார்த்திருக்கிறேன்.

கண்டிட்டே னொரு காலம் பொன்னா மண்டங்
　　கரையற்ற பட்சிகளோ யொரு காலத்திற்
பண்டிட்ட நீராக வொரு காலாகும்
　　பரவிய தோர் பூண்டுகளா வொரு காலாகு
மொண்டிட்ட சிததர்மய மொரு காலாகு
　　மோகோகோ தேவதைக ளொரு காலாகும்
விண்டிட்ட பூரணம்போ லொரு காலாகும்
　　வெவ்வேறாய்ப் படைத்த தெலாம் பெரியோர் காணே. 412

ஒரு சமயம் (ஒரு காலத்தில்) இந்த அண்டம் தங்கமயமாய் இருந்தது ஒருகாலத்தில் அண்டம் முழுதும் பட்சிகளாய் இருந்தது. ஒருகாலம் நீராகவும், ஒரு காலத்தில் பூண்டுகளாவும், ஒரு காலத்தில் சித்தர்மயமாகவும், ஒரு காலத்தில் தேவதைகளாகவும், ஒரு காலத்தில் பூரணத்தை போலவும் வெவ்வேறாய் பல வினோதத்துடன் இருந்தது. இவை யாவும் பெரியோர்களின் படைப்புக்களாகும்.

பெரியோர்கள் படைத்தவு மேதாலென்றால்
　　பேறான வைத்தெழுத்தின் பெலத்தினாலே
யரியோர்க்கு மொருகால நகராமீச
　　னாச்சரிய மொருகால மகாரமீசன்
வரியோர்க்கு மொருகாலஞ் சிகாரமீசன்
　　வரிசையுட னொருகாலம் வகார மீசன்
பரியோர்க்கு மொரு காலம் யகார மீசன்
　　பண்பாக வைந்தெழுத்தின் பரத்தின் சார்பே. 413

பெரியோர்கள் எதனால் படைத்தார்கள் என்றால் ஐந்தெழுத்தின் பலத்தினால்தான். ஒருகாலத்தில் நகாரம் ஈசனாக இருந்தது அதன் பிறகு ஒருகாலத்தில் மகாரம்ஈசனாக

இருந்தது ஒரு காலத்தில் சிகாரம் ஈசனாகவும், அதன்பின் வகாரமும் பிறகு யகாரமும் ஈசனாக இருந்தது இவையாவும் ஐந்தெழுத்தின் சார்பேயாகும்.

சார்பாக விவ்வுலகத்தில் முன்பின் நள்ளிச்
சமர்த்தாக நடுமைய மிரண்டுந் தூக்கி
யார்வாக வாதியென்ற பேரும் வைத்தே
யருளான பூரணந்தா னமர்த்தும் வாறு
கார்வாக விரண்டெழுத்தை யொட்டியேறி
கைகண்ட சிவயோகங் கையிற்சிக்கும்
பார்வானை யென்பார்க ளுலகத்தோர்கள்
பரத்துடனே வெளியாமோ பதராவென்னே. 414

இவ்வுலகத்தில் முன்னும் பின்னும் தள்ளி நடு மையம் இரண்டையும் தூக்கி வாசி எனப் பெயர் வைத்து இரண்டெழுத்தால் அவ்வாசியை மேல் ஏற்றினால் சிவயோகம் கையில் பெற முடியும். உலகத்தோரைப் போல் ஆகாயத்தைப் பார் என்று அண்ணாந்து பார்த்து அக்ஞானத்தில் உழன்றால் வெறும் வெளியைக் காணலாமே தவிர பரவெளியைக் காண முடியுமோ?

வெளியாகச் சொல்லுகிறேன் லட்சியங்களெல்லாம்
விடுபட்ட மதயானை வீதிபோல
வளியாகக் கண்டத்தி னின்று கொண்டே
யப்பனே நினைவாலே மூலம் பாரு
களியாகச் சுழுமுனையுங் குழலாய்க் காணுங்
கண்டுடனே வாசியைத் தாய்க் காலையாட்டு
ஒளியாகப் பளிச்சென்னும் நந்திகாந்தி
யுத்தமனே மதுவையுண்டே யூடிப்பாரே. 415

கண்டத்தில் நின்று நினைவால் மூலம் பார்த்தால் சுழுமுனையானது குழலைப் போல் காணும். அச்சமயம் வாசியைக் கொண்டு ஊணினால் நந்தியானவர் பிரகாசிப்பார் அப்பொழுது மதுவை உட்கொண்டு மேல்நோக்கியேறு.

ஊடிநின்று கண்டத்தைப் புருவமய்யம் பாரு
வோடுகிற சுடர்போலே யொக்கக் காணும்
நாடிநின்று குருபதத்தில் நேசத்தைப் பாரு
நண்பாகப் பதினொன்றுங் காணுமப்பா
நீடிநின்று கண்டத்தே யனாகதத்தைப் பாரு
நேரான பிராணனுமே நினைந்து காணு
மாடிநின்ற வனாகதத்தை மாலோடு பிரம
னடியினிற் பார்வெட்ட வெளியாகுங் காணே. 416

கண்டத்தில் நின்று கொண்டு நினைவால் புருவமையத்தைப் பார்த்தால் சுடர் போல் தீபம் பிரகாசிக்கும். அதைத்தாண்டி குருபதத்தில் மனதை வைத்தால் பதினொன்றும் வெளியாய்த் தோன்றும்; கண்டத்தில் நின்று கொண்டு அனாஹதத்தை பார்த்தால் பிராணன் நிலைத்துப் போகும். அதைக்கடந்து மணிபூரகத்திலும் சுவாதிஷ்டானத்திலும் நினைவால் பார்த்தால் தேகம் வெட்ட வெளியாகும்.

வெளியாகத் தேகத்தைப் பார்க்கவென்றால்
மேலேறி யுன்மனையி னின்று பாரு
ஒளியாகக் கீழ் நோக்கக் கண்டிப்பற்று
ஓகோகோ பிடித்தவிட மொன்று மில்லை
வளியாகச் சொல்லிவிட்டேன் லட்சியங்க ளெல்லாம்
வாராது நித்திரையும் பசியுங் கேளே
யளியாகப் பிறர்சத்தங் கேளாப் பக்க
மமர்ந்திருந்தே லட்சியத்தை யறிந்து மூட்டே. 417

வெளியான தேகத்தை பார்க்க வேண்டுமென்றால் உன்மனையில் நின்று பார்க்க வேண்டும். இவ்வாறு முறையாக கீழ்நோக்கினால் பசி, நித்திரையும் விலகும், இப்பயிற்சி யாவையும் பிறருடைய சத்தம் காதில் கேட்காத இடத்தில் அமர்ந்து பழக வேண்டும்.

மூட்டையிலே பிறர்சத்தங் கேட்டதாயின்
முட்கரமா யைம்புலனை முனிந்து போடு
நாட்டையிலே மனது சற்றே நழுவிற்றானா
னாய்கடித்த வெள்ளெலும்பாய் நலங்கிப் போவாய்
ஆட்டையிலே மனமலைக்குங் கூடொட்டாது
அப்பனே குளிகையிட்டா லசைவு போகும்
நீட்டையிலே கையேந்தக் கனிபோற் காணு
நேராகக் குளிகையிட்டு நிலைத்துப் பாரே. 418

அப்பியாச காலத்தில் பிறருடைய சத்தம் கேட்டால் ஐம்புலன்களையும் அடக்கி ஒரு நிலையில் குவிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் பிரத்யங்காரம் சித்தியாகும். அப்பியாச காலத்தில் மனம் நழுவினால் நாய் கடித்த வெள்ளெலும்பைப் போல் வீணாகப் போவாய். ஆகவே மனதை அலைப்பாயாமல் நிறுத்தி யோகம் புரிய குளிகையை வாயிலிட்டுக் கொள். குளிகையால் எல்லாம் சித்தியாகும். மனம் நிலைக்கும்.

நிலைத்துப் போங் கப்பலுக்கு நங்கூரம் போட்டால்
நேரான தீயிட்டால் ஜலம் போலாகு
மலைத்துப்போம் வறண்டு ஜலம் வாய்வு போற்கட்டு
மாகாகா ரவிகண்ட பனிபோல் நீங்கும்
தொலைத்துப் போம் வாருதிக்குள் வன்னிபோலச்
சொற்றிறமா முப்புடனே யப்புச் போல
மலைத்துப்போ மனத்துடன் வாய் வொன்றிற்
றானால் வாகாகக் குளிகையிட்ட மார்க்கந்தானே. 419

கப்பலுக்கு நங்கூரம் போட்டாற்போல் ஒரு நிலையில் நின்று விடும். மனம் அலைவதானது தீயில் நீர் விட்டாற் போலும், சூரியனைக் கண்ட பனி போலவும், வாருதிக்குள் அக்னிபோலவும், நீருடன் கலந்த உப்பு போலவும், மறைந்து போகும். மனதில் வாக்கு அடங்கி நிற்கும். இவையாவும் குளிகையினால் சித்தியாகும்.

மார்க்கமென்ற ரசம்விட்டால் வாதம் போச்சு
வாகான துரிசுவிட்டாற் குருவே போச்சு
தீர்க்கமென்ற லட்சியத்தை விட்டாயானாற்
செத்தாலுஞ் சிவயோகஞ் சேரமாட்டாய்

ஏர்க்கவென்ற குண்டலியை விட்டாயானா
லெட்டு வகைக் கன்மசித்தி யேற்றப் போச்சு
ஆர்க்கவென்ற மனம்பரப்பிற் போச்சுதானா
லனந்தசன மரைக்ஷணத்தி லாடுந்தானே. 420

ரசம் இல்லை என்றால் வாதம் இல்லை; துருசு இல்லையென்றால் குரு மருந்து இல்லை; லட்சியத்தை விட்டால் சிவயோகம் பலியாது. குண்டலியை மறந்தால் கன்மசித்திகள் எட்டும் அகன்றுபோய் விடும். மனம் நாலா பக்கம் சிதறிப் பரபரப்பு அடைந்திதன்றால் எல்லாமே ஒரு வினாடியில் அழிந்து விடும்.

படிகச்செம்பு

ஆடுவது போலப்பா பளிங்குக் கல்லை
யப்பனே செம்பாக்கு மடைவு கேளாய்
நீடுவது படிகக்கல் லிடிசமர்த்தாய்
நிலவரமாய்ப் பலம்பத்து நிறுத்துக் கொண்டு
வூடுவது வெண்காரம் பலந்தான் மூன்று
வுத்தமனே யாவாரை வேர்தான் பத்து
கூடுவது மழிஞ்சில்வேர் பலந்தான் பத்து
குமரியிட வேர்தானும் பத்து கூட்டே. 421

கூட்டெல்லாங் காரமுட னரைத்துக் கொண்டு
குலாவி யந்தக் கல்மாவில் பிசறிக்கொண்டு
தீட்டெல்லாம் திரிவகையா மித்திரத்தைக் கூட்டிச்
செம்மியொரு குகையில் வைத்துச் சிறக்கமூடி
யூட்டியெல்லாந் தூணியதிற் கரியோமாய
வுருக்கப்பா வோருருக்கு வுண்மை கேளு
பூட்டியெலா மிப்படியே மூக்காலூது
புகழான வெள்ளைக்கல் புகழ்ந்து மாவே. 422

படிகத்தை செம்பாக்கும் முறையைக் கூறுகிறேன் கேள். படிகத்தை மாவுபோல் இடித்துப் பத்து பலம் எடுத்துக் கொண்டு, இதனுடன் வெண்காரம் மூன்று பலம், ஆவாரை வேர் பத்து பலம், அழிஞ்சில் வேர் பத்து பலம், கற்றாழை வேர் பத்து பலம் கூட்டி நன்றாய் அரைத்துக்கொண்டு காரம் சேர்த்துப் படிகக்கல் மாவுடன் சேர்த்துப் பிசறி மூன்று வகை மித்திரம் கூட்டி, குகையில் வைத்து மூடி குகை பழுக்க ஊத வேண்டும். இவ்வாறு மூன்று முறை ஊதினால் வெண்மை நிறமுள்ள மாவாகும்.

மாவோடே குறிப்பாகச் சூதம் சேர்த்து
மத்தியப்பா பழச்சாற்றால் மருவ மாட்டு
தாவோடே வாதமென்ற குடோரி தானுந்
தனியேழுக் கொன்றிட்டுச் சாரவாட்டு
காவோடே காரமது நாலொன்றிட்டுக்
கலந்தரைத்தே யுருட்டி வைத்துக் கழறக்கேளு
கூவோடே பரிக்குளம்புச் சீலை கீழ்மேல்
குமட்டி வைத்தே யுருக்கப்பா கொடிய செம்பே. 423

மாவுடன் ரசத்தை சேர்த்துப் பழச்சாற்றால் அரைத்து, அரைத்த சரக்குடன் குடோரியை ஏழுக்கு ஒரு பங்கு சேர்த்து அரைத்துப் பின்பு காரத்தை நாலுக்கு ஒரு பங்கு சேர்த்தரைத்து உருட்டி வைத்துக்கொண்டு, இதற்கு பரிக்குளம்பால் சீலைசெய்து குமட்டி வைத்து உருக்கினால் செம்பாகும்.

செம்பினிட திறஞ்சொன்னார் மூலநாயன்
செப்பினதிற் குறையில்லை தெரியப் போகா
அம்பினிட பெலனுரைப்போ னாணின்வன்பே
ராச்சரியம் வாதமென்ற குடோரி யாட்டு
கொம்பினின்ற தீமுகத்திற் செத்தை போலக்
கோடிரச மிதிற்சாகுங் கூறமாட்டேன்
கும்பினின்ற தங்கத்தி னூற்றுக் கொன்று
காட்டப்பா விச்செம்பு கனகச் செம்பே. 424

இச்செம்பினுட மகிமை பற்றி மூலநாயகர் எனக்கு கூறினார். அவர் கூறியதில் ஒன்றும் தவறவில்லை. இச்செம்பைக் கண்டவுடன் ரசம் சாகும்; படிகச் செம்பை தங்கத்தில் நூற்றுக்கொன்றிட்டால் கனகச் செம்பாகும்.

கனகமென்ற செம்பொன்று வெள்ளி நூற்றிற்
காட்டிடவே வெள்ளிசெம்பு காணீர் மக்காள்
மனகமென்ற மதிச்செம்பு ஒன்று கேளு
மாச்சரியங் காரீய நூற்றி லூட்டு
பனகமென்ற காரீயஞ் செம்பே யாகும்
பாச்சப்பா விதிலொன்று நாகம் நூற்றில்
தனகமென்ற நாகமது களங்கேயாகும்
தாக்கிடவே முறைசொல்வேன் சார்ந்து கேளே. 425

கனகச்செம்பு ஒரு பங்குடன் வெள்ளி நூறு பங்கு சேர்த்தால் வெள்ளியானது செம்பாகும். இதற்கு மதிச்செம்பு என்று பெயர். காரீயம் நூறு பங்கில் ஒரு பங்கு மதிச்செம்பு சேர்த்தால் காரீயம் செம்பாகும். ஒரு பங்கு காரீயச் செம்புடன் நாகம் நூறு பங்கு சேர்த்து உருக்கினால் நாகமானது களங்காகும். இக்களங்கின் பெருமையைப் பற்றி கூறுகிறேன் கேள்.

கேளப்பா விக்களங்கு நவலோகத்திற்
கெடியாக நூற்றொன்று கேளுவதை
யாளப்பா மாற்றெண்ணி லறுபத்தாறா
மாச்சரியம் படிகமென்ற ஜலத்தினாட்டு
நாளப்பா வீண்போக்கிச் சாக வேண்டா
நலம்பெரிய களங்கை யுண்ணு குண்ணி நித்தம்
கோளப்பா மண்டலந்தா னுண்டாயானாற்
கொள்கைபோற் காயமது வலுக்கும் பாரே. 426

இக்களங்கை நவலோகத்தில் நூற்றுக்கொன்று கொடுத்தால் அறுபத்தாறு மாற்றுடைய தங்கம்கிட்டும். தங்கத்தை செய்து காலத்தை வீணாக்காமல் தினம் ஒரு குன்றிமணி வீதம் ஒரு மண்டலம் இக்களங்கை உட்கொண்டால் தேகம் வலுத்து சித்தியாகும்.

கெந்தகச் செம்பு

பாரப்பா கெந்தகத்தைச் செம்பு செய்யப்
பாச்சியதோர் முறைகளெல்லாம் பார் மாணாக்கா
நேரப்பா கெந்தகத்தைக் குமரியுள்ளே வைத்து
நேர்குமரிச் சோறதனைக் கீழ்மேலிட்டு
ஓரப்பா பாண்டத்தை யடுப்பி லேற்றி
யுத்தமனே மூன்று நாளுட்டுத் தீயைச்
சேரப்பா கெந்தகந்தா னூறலற்றுத்
தெளிவாக பொன்போலே நிறமாங் காணே. 427

கெந்தகத்தை ஒரு நிறையாக எடுத்து கற்றாழைக்குள் வைத்து கற்றாழையின் சோறை ஒரு பானையில் மேலும் கீழும் போட்டு இடையில் கெந்தகம் உள்ள கற்றாழையை வைத்து மூடி அடுப்பேற்றி மூன்று நாள் தொடர்ந்து எரித்தால் கெந்தகமானது ஊறல் நீங்கி (மாசு நீங்கி) பொன்போல் பிரகாசிக்கும்.

திறமான கெந்தகந்தான் பலமோ நூறு
சேர்கார மிதிற்பாதி சேர்த்த பின்னே
அறமான சூதமிதிற் பலந்தான் பத்து
அப்பனே மூன்று நாள் பழச்சாற்றாட்டு
நிறமான புரசான பூவைப் போட்டு
நேரான பழச்சாற்றிற் பிழிந்தே யாட்டு
பிறமான புரசம்பூத் தினந்தான் மூன்று
பேரான குமரிப்பூத் தினந்தான் மூன்றே. 428

சுத்தித்த கெந்தகத்தை நூறு பலம் எடுத்து அதில் சரிபாதி காரமும் பத்து பலம் சூதமும் சேர்த்து மூன்று நாள் பழச்சார் விட்டு அரைத்து வைத்துக் கொண்டு பின்னர் பூவரசம் பூவையும் பழச்சாறு விட்டு அரைத்து அச்சாற்றால் மூன்று நாள் கெந்தகத்தை அரைக்க வேண்டும்.

மூன்றுநாள் கண்டங் காரிச் சாறாட்டு
முலைப்பாலை யொருநாள் தான் விட்டேயாட்டு
நீன்றுதின மாந்துளிரும் பட்டைச் சாறு
நேராகத் தினமூன்று நிலைக்க வாட்டி
பூன்று நின்ற தாரமெடை சரக்கொன்றைக் காய்
புகழான பழத்துக்குள் புளியைப் போடு
கான்று கொள்ளு மைந்தர்களே யிதுவே சூட்சங்
கலந்தரைத்து வில்லைதட்டிக் காயப்போடே. 429

அதன் பிறகு மூன்று நாள் 'கண்டங் காரிச்' சாறுவிட்டரைத்து பின் முலைப்பாலால் ஒரு நாளும், பின்னர் மாந்துளிர் சாறிலும், பட்டை சாறிலும் மூன்று நாள் அரைத்துப் பின்னர் சரக்கொன்றைக்காய்ப் பழத்தினுள் ஐம்பது பலம் புளியைச் சேர்த்து மருந்துடன் வைத்தரைத்து வில்லைத்தட்டிக் காயவைக்க வேண்டும்.

காய்ந்தபின்பு குழிவெட்டி வங்க நாளங்
கலந்திரண்டு புறந்தனையுங் கவியமூடி
யாய்ந்துகுழிக் கரியிலிட்டுத் தணலாயூதி
யப்பனே வில்லையதி லாடப் போடு

ஒய்ந்தபின்பு குழிவெட்டி யைந்து தரங்கரியிட்டுது
வுத்தமனே கருகியெல்லாங் கிட்டம் போலாம்
மாய்ந்த பின்ன ரெடுத்துடைக்க மண்போற் காணு
மணிநிறந்தான் வெண்கலம் போன் மருவும்பாரே. 430

பின்னர் பூமியில் குழிவெட்டி இருபுறமும் இரண்டு வங்க நாளத்தை கவிழ்த்துமூடி குழிக்கரியிலிட்டு தணலாகும் வரை பழுக்க ஊதி அதில் மேற்படி வில்லைகளை போட்டு கரியில் வைத்து ஊதவேண்டும். இவ்வாறு ஐந்து முறை செய்தால் கெந்தகம் கருகி கிட்டம்போல் காணும். இதை எடுத்து உடைத்துப் பார்த்தால் வெண்கலம் போல் இருக்கும்.

மருவிநின்ற கெந்திரவி வெண்கலமே யாச்சு
மாயியுட நாதத்தில் விந்து சேர்த்து
கருவிநின்ற மனமலைந்தாற் போலேயப்பா
கரையில்லை யிதன்வேதை கண்டு சொல்லின்
உருவிநின்ற கெந்திசத்து நாதத்தைக் கட்டு
முத்தமனே தங்கத்தை யுறைக்கக் கட்டும்
பருவி நின்ற வங்கமுதற் காரீயங்கட்டும்
படுமுன்னே மண்கட்டும் பாரு பாரே. 431

பாரப்பா நவலோகக் கட்டினாலே
பலனேதோ வென்று சொல்லிப் பருவ வேண்டாஞ்
சேரப்பா விதிற் சூதஞ் செணத்திற் சாகுஞ்
சேர்த்துடனே நவலோகந் திரும்பிப் பொன்னாம்
வேரப்பா வேதைக்கு ரசமுங் கெந்தி
வேறில்லை தங்கத்தைக் கூடக் கூட்டு
நாரப்பா கிழித்ததிலே தொடுத்த பூப்போ
னாதவிந்து வெகுவே நாட்டக் கேளே. 432

நாட்டமென்ற கெந்திசத்தை யுண்டதங்கம்
நலம்பெறவே பொடியாகுங் குருவுமாகு
மாட்டமென்ற சூதத்தை நான்கு சேர்த்தே
யணைத்தரைக்கப் பொடியாகுமப்பா கேளு
நீட்டமென்ற சவுக்காரச் சுண்ணமொன்று
நேரான துரிசியுட சுண்ணமொன்றும்
பூட்டவொன்றி வெண்கருவா லரைத்துக் கட்டிப்
புகழான வைந்து சுண்ணக் குகையில் வையே. 433

வெண்கலம் போலிருக்கும் கெந்திச் செம்பால் செய்யப்படும் வேதையின் அளவு வாயால் கூறமுடியாததாகும். இச்செம்பு நாகம், தங்கம், வங்கம், காரீயம் போன்றவையெல்லாவற்றையும் கட்டும். நவலோகங்களைக் கட்டுவதால் மட்டும் என்ன பயன்? என்று விழிக்காதே.. இச்செம்பால் சூதம் சாகும்; நவலோகம் பொன்னாகும். வேதைக்கு ரசமும் கெந்தியும் விட்டால் வேறொன்றும் இல்லை. கெந்திச் செம்புடன் தங்கம் சேர்த்தால் செம்பு தங்கத்தை உட்கொள்ளும். இத்துடன் சூதத்தை சேர்த்தரைத்தால் தங்கம் பொடிப்பொடியாகும். இப்பொடியுடன் சவுக்காரச் சுண்ணமும்

தூரிசு சுண்ணமும் வகைக்கு ஒருபலம் கூட்டி வெண்கருவால் அரைத்து வில்லைதட்டி ஐந்து சுண்ணக் குகையில் வைத்து,

வைத்துமறச் சீலைசெய்து கரியைப் போட்டு
வாகறிந்து லகுவாக வளமாயூது
வுய்த்ததிலே நாகரச கெந்தி மூன்று
மோகோகோ கடுஞ்சுன்ண முறைக்கப் போகா
தைத்ததிலே வாயிருக்கப் பெறலாய்க் காற்றில்
தலைசுற்றிச் சூதமங்கே சாகுஞ்சாகு
மற்றதிலே சரக்கென்ன மாகமாச்சு
வாய்கொண்டு முடியாது வாதந்தானே. 434

முடியாத குருபட்டுக் கட்டுஞ் சூதம்
முக்கியங்காண் குளிகைக்கு முயன்று பண்ணு
அடியான வழலைபட்டுத் துரிசிபட்டு
ஆத்தாளு மப்பனுடன் தங்கம் பட்டுக்
கெடியான குருவென்று மிதற்கே பேராங்
கேளப்பா வீரத்திற் குருவே பூசி
மடியாகச் சீலைசுற்றித் தீயில் வாட்டு
மணிபோலே வீரமுள்ளே மருளும் பாரே. 435

சீலைசெய்து கரியைப் போட்டு முறையாக ஊதினால் ரசம், கெந்தி, தங்கம், இவை மூன்றும் சுண்ணமாகும். இச்சுண்ணத்தின் காற்றுப்பட்ட மாத்திரத்தில் சூதம்சாகும். மேலும் நவலோகங்கள் தங்கமாகும். இக்குருபட்ட மாத்திரத்தில் சூதம் கட்டும். முறையாக முயற்சி செய்து சூதத்தைக்கட்டி குளிகைசெய். வழலை துருசு, ஆத்தாளான கெந்தி, அப்பனான ரசம், மற்றும் தங்கம் இவை ஐந்தும் கூடி குருவாயிற்று மேற்கூறிய குருவை (சுண்ணத்தை) வீரத்தின் மேல் பூசி சீலைசெய்து தீயில் வாட்டினால் மணிபோல் கட்டும்.

மருளுகின்ற மணிவீரம் நூற்றுக்கொன்று
மாட்டிடவே நவலோகம் பத்தும்பத்தும்
மருளுகின்ற வீரத்தைத் தங்கத்தோடே
மாட்டுசமன் வில்லையைப் போல் வாங்கிக் கொண்டு
மருளுகின்ற துரிசி வெள்ளை வழலைச் சுண்ணம்
மத்தித்துப் புழுகோடே வளமாய்ப் பூசி
மருளுகின்ற மனமொழிந் தேயைஞ் சுண்ணச் சிமிளில்
வைத்ததிலே சீலைசெய்து வளமாய்க் காய்ச்சே. 436

காய்ச்சியதிற் கீழ்மேலுஞ் சுண்ணங் கொட்டிக்
காற்றடைப்பிற் கனக்கவொரு புடத்தைப்போடு
ஆய்ச்சியிது தங்கமுள்ளே சுண்ணமாகு
மப்பனே பரிக்குருத்தா னனேகம் வேகம்
ஒய்ச்சியிந்தக் குருப்பட்டாற் சூதஞ்சாகு
முத்தமனே யறுபத்து நாலுஞ்சாகும்
பாய்ச்சியிந்த குருவொன்று தங்கம் நாலிற்
பாங்காகப் பூசியொரு புட்த்தைப் போடே. 437

இவ்வீரத்தின் மணியை நூற்றுக்கொன்று நவலோகத்தில் ஈந்தால் இருபது மாற்றுள்ள தங்கமாகும். வீரத்தின் மணியும் தங்கமும் சமஎடை எடுத்து வில்லைப்போல் தட்டி அதன் மேல் துருசு சுண்ணத்தையும் வழலைச் சுண்ணத்தையும் புனுகையும் பூசி ஐந்து சுண்ணச் சிமிழில் வைத்து சீலை செய்து காய்ச்ச வேண்டும். பிறகு கற்சுண்ணத்தை சிமிழிற்கு மேலும் கீழும் கொட்டி காற்றுப் புகாமல் கெஜபுடம் போட்டால் தங்கம் சுண்ணமாகும். இதற்கு பரிக்குரு என்று பெயர். இதனுடைய வேகத்தால் சூதம் சாகும். அதுமட்டுமின்றி அறுபத்து நாலு சரக்கும் சாகும். இத்தங்கத்தின் குருவை ஒரு பங்கு எடுத்து நான்கு பங்கு தங்கத்தின் மேல் பூசி புடம் போட்டால்,

போடப்பா தங்கமது குருவேயாகும்
　　போக்கா யிப்படியென்று தொந்தமேறு
மாடப்பா வாதமுதற் குளிகையெல்லா
　　மறுபத்து நாலேது சூதமேது
நீடப்பா சார்ந்தோர்க்கே குருவைக் கூட்டி
　　நிலைத்திட்ட சரக்கெல்லாம் நேர்ந்து வாட்டு
வூடப்பா வுபரசங்கள் நவலோகத்தை
　　யுத்தமனே பத்துமுதல் நூறுமாற்றே. 438

தங்கம் குருவாகும் இவ்வாறு தொந்தித்துக் கொண்டேயிருந்தால் (மேல்மேலும் இதே போல் தங்கத்துடன் சேர்த்து புடம் போட்டால்) குளிகை முதல் வாதம் வரை நாம் சொன்னபடி கேட்கும். அறுபத்து நாலு சரக்கும், சூதமும் இக்குருவை கண்டமாத்தில் மடிந்து சாகும். அனைத்து சரக்கையும், உபரசங்களையும் நவலோகத்தையும் இக்குருவுடன் சேர்த்தரைத்து புடம் போட்டால் பத்து முதல் நூறு மாற்று வரை உள்ள தங்கமாகும்.

நூறுதொந்தம் பறிச்சென்றே யேறிற்றானா
　　னோக்காத நூறுதொந்த ரசமுமேறும்
மாறுதொந்தம் பாஷாணம் நூறுமேறும்
　　வளமான வுபசரங்கள் சத்துமாகும்
வேறுதொந்த மேற்றறிந்தால் மெத்தவேறும்
　　வேதையென்ன மசகத்தில் வேணும் வேண்டாங்
கூறுதொந்த மேற்றுதற்கோ வென்னாற் கூடா
　　குருவாச்சு தங்கமென்றாற் குணத்தைக் கேளே. 439

இக்குருச் சுண்ணத்தை நூறு தொந்தம்வரை தொந்தித்தால் ரசம் முதல் எல்லா பாஷாணங்களும் நூறு வரை மாற்று காணும் உபரசங்கள் எல்லாம் சத்தாகும். மேன்மேலும் தொந்தித்துக் கொண்டே சென்றால் வேதையானது ஒரு க்ஷணத்தில் கைகூடும். நூறுக்கு மேல் தொந்திக்க என்னாலும் முடியாது. அப்படிப்பட்ட மகிமையைக் கொண்டது இக்குருச் சுண்ணம்.

குணமான தங்கமது பலந்தான் ரெண்டு
　　கொடியதொரு கெந்திசத்து பலந்தான் ரெண்டு
உணமாக ரெண்டுமொன்றா யுருக்கும் போதி
　　லூட்டப்பா செயரசத்தை நாலு நீதான்

மணடாக மூன்றுமொன்றா யுருக்கி வாங்கி
மருவியிதைப் பொடியாக்கிப் புடத்தைப் போடு
தணமாகச் செந்தூர மாகுமட்டுஞ்
சாதகமாய்ப் புடம்போட்டுச் சாதித்தேறே. 440

தங்கம் இரண்டு பலமும் கெந்தகச் செம்பு இரண்டு பலமும் ஒன்றாகச் சேர்த்துருக்கி அதனுடன் செயசூதத்தை நாலு பலம் வார்த்து மூன்றை ஒன்றாய் உருக்கிப் பொடிசெய்து புடம் போட வேண்டும். இப்பொடியை சிவப்பாகும் வரை புடம் போட வேண்டும்.

சாதித்த செந்தூரங் குன்றியுண்ணு
சாதகமாய்ப் பன்னிரண்டு நாளிற் சித்தி
ஆதித்த னுள்ளமட்டும் தேகம் போகா
வதற்குமுன்னே சமாதிக்கு ளடைந்து கூடு
பேதித்த புஞ்சகர்த்தர் பிரமம் சேர்த்துப்
பேராகநீ சோறாப் பேணிக் கொள்ளு
ஓதித்த நூல்பார்த்தேன் வேதை பார்த்தே
னோகோகோ சடம்போனா லொக்கப் போச்சே. 441

சிவந்து செந்தூரமானபின் அனுதினமும் குன்றிமணி அளவு பன்னிரண்டு நாள் உட்கொண்டால் தேகம் அழியாமல் சித்தியாகும் தேகத்தை சித்தியாக்கிக் கொண்டு சமாதி யோகம் புரிந்து பஞ்சபூதத்தில் பிரமத்தினுள் ஐக்கியப்படுத்திக் கொள். பல நூல்களைப் படித்து வேதை செய்து பார்த்தும் முடிவில் தேகம் அழிந்து போனால் எல்லாம் அழிந்துபோகும். அந்த நூல்களைப் பிடித்ததினால் பயனே இல்லாமற்போகும்.

ஒக்கநின்ற கெந்திசத்து செம்பேயாகு
மோகோகோ சோதனையை யூட்டு வூட்டு
அககநின்ற சத்தற்று ரவியாமட்டு
மாட்டியப்பா சோதனையால் வாங்கிப் போடு
புக்கநின்ற செம்பேது தேவி நாதம்
போகின்ற தொந்தனையைப் புகலக் கேளு
சொக்கநின்ற தங்கத்தில் நூற்றுக் கொன்று
சூட்டிடவே செம்பாகுஞ் சொர்ணந்தானே. 442

கெந்தி சத்தான செம்பை சோதிக்கும் முறையைக் கூறுகிறேன் கேள். தேவிநாதமான கெந்தி செம்பை தங்கத்துடன் நூற்றுக்கொன்று சேர்த்தால் தங்கமானது சந்தேகமில்லாமல் செம்பாகும்.

சொர்ணமென்ற நாதத்திந்தச் செம்பொன்று
சூட்டிடவே செம்பாகும் சுறுக்கோமெத்த
வர்மமென்று நூறுதொந்தம் விரைந்தேயோடும்
வரையேறு கடைசியிலே யொன்று வாங்கி
பர்னமென்ற வாயிரமாம் வெள்ளிக்கீயப்
பதினாறு மாற்றாச்சு பாருமக்கா
ளிர்னமொன்று என்னசொல்வேன் மூலநாயக
னியல்பான நடனத்தி லிட்டார் காணே. 443

இத்தங்கச் செம்பை மீண்டும் தங்கத்தூடன் சேர்த்தால் தங்கம் உடனே செம்பாகும். நூறு தொந்தம் வரை ஆடும். நூறு தொந்தம் முடிந்த பிறகு இச்செம்பை வெள்ளியில் ஆயிரத்துக் கொன்று ஈந்தால் பதினாறு மாற்று உண்டாகும்' இச்செம்பை முன்பு ஒரு சமயம் திருமூல நாயனார் தில்லை நடராஜர் சிலையில் இட்டார்.

இட்டயெடை யெத்தனையோ வென்னவேண்டா
மியல்பான துலாநூறு வூசியொன்று
மட்டவெடை பற்றாது செம்பாய்ப் போச்சு
வாதத்தைப் போன்ற கலியுக னாதியாதி
தொட்டவிடம் பட்டவிடம் பொன்னேயாகத்
துப்புரவாய்ச் சீஷனதோர் பொடியைப்போட்டார்
சுட்டவிட மில்லையெங்க ளாயிநாதங்
காணிதொட்டாற் கோடானு கோடியாமே. 444

(தில்லை நடராஜ சிலையை பல சிற்பிகள் சேர்த்து மெழுகால் அச்சு செய்து அரச கட்டளையின் பிரகாரம் தங்கத்தை உருக்கி அச்சில் வார்த்த பொழுது சிலை நிலைக்காமல் நலங்கிற்று) அச்சயம் திருமூலர் நூறு துலா தங்கத்தில் (சிலைக்காக உருக்கிய தங்கத்தில்) ஒரு ஊசி அளவு கெத்தக செம்பை சேர்த்தவுடன் தங்கமெல்லாம் செம்பாயிற்று, ஆயிநாதமான கெந்தக செம்பின் பெருமையை கூறுதற்கு நாவில்லை. இது பட்டவிடம் தொட்டயிடமெல்லாம் கோடி மாற்றுக் கொண்ட தங்கம் உண்டாகும்.

கோடியென்ற செம்பொன்று தங்கமொன்று
கூட்டப்பா சூதமொன்று மூன்றுமாட்டி
யோடிதொன்றை நறுக்கியதிற் கெந்திபோட்டு
வுத்தமனே குப்பியிட்டே யடுப்பிலேற்றி
நாடியென்ற கெந்தகந்தான தற்கிரட்டி
நலமான தினமூன்று நன்றாயூட்டு
ஆடியன்று தேவிக்குச் சொன்ன மார்க்க
மைந்துரெண்டு லட்சத்தி லாதி காணே. 445

கெந்தக செம்பு ஒருபலம், தங்கம் ஒரு பலம், சூதமொரு பலம் ஆக மூன்றையும் கூட்டி நன்றாய் அரைத்து இம்மருந்தெடைக்கு சம அளவு கெந்தி சேர்த்து மூன்று தினம் புடம் போட வேண்டும். இவ்வாறு மீண்டும் கெந்தகம் சேர்த்து செத்தூரமாகு வரை புடம் போட வேண்டும். இம்மார்க்கம் ஏழு லட்சம் என்ற நூலில் சிவபெருமானால் தேவிக்கு கூறப்பட்டதாகும்.

ஆதியென்ற செந்தூரம் நிறைதானேழு
அப்பனே வீரமெடை நாலிலொன்று
காதியென்ற புதல்வனன்று திட்டித்தாப் போற்
கரையற்ற திட்டிப்பு காட்டலாகும்
பேதியென்ற நவலோக நூற்றிலூட்டு
பேரான செம்பாகு மஞ்சு நாலும்
வீதியென்ற வொவ்வொன்று நூறுதொந்தம்
விரைந்தேறிக் கடைசியிலே பொன்னுமாமே. 446

பொன்னில்லாத் தொந்தமுண்டோ வென்றாயானாற்
பூட்டினையே செந்தூரத்துள்ளே பொன்னைக்
கன்னில்லாச் சுக்கிலந்தான் காணிசென்று
கடுகிலே யெட்டிலொன்று கவியுங் கெர்ப்பம்
பன்னிலே வந்தவன்போ லானதென்ன
பார்மக்காள் பொன்னுக்கு முதுவே மட்டு
அன்னிலே ரசமென்றால் மெத்தவுண்ணு
மப்பனே உண்ணுமட்டு மதற்கு நீட்டே. 447

இச்செந்தூரத்தை ஏழு பலம் எடுத்து இவ்வெடைக்கு நாலிலொரு பங்கு வீரம் சேர்த்து நவலோகத்தில் நூற்றுக்கு ஒன்று சேர்த்து உருக்கினால் நவலோகங்களும் செம்பாகும். இதே போல் நூறுமுறை தொந்தித்தால் கடைசி தொந்தத்தில் கரைகாணாத அளவு மாற்றுடைய பொன்னாகும். எவ்வாறு சுக்கிலமானது காணியளவு கருப்பையினுள் சென்று அதில் எட்டில் ஒரு பங்கு கர்ப்பமாக மாறுகிறதோ அதே போல் தேவையான அளவு மருந்து சேர்த்து தங்கமாக்கியபின் மேலும் மருந்தை சேர்ப்பதென்பது வீண்! ஆனால் ரசத்திற்கு மட்டும் எவ்வளவு வேண்டுமானாலும் சேர்க்கலாம். அது தன்னுள் செந்தூரத்தை உட்கிரகித்துக் கொள்ளும். மருந்தை உட்கொள்ள உட்கொள்ள மேலும் மேலும் மருந்தை சேர்க்கலாம்.

நீட்டியதோர் செந்தூர மாயிரத்துக் கொன்று
நிலைப்பான களங்குக் கைந்நூற்றுக் கொன்று
கூட்டியதோர் மெழுகுக்கு முந்நூற்றுக் கொன்று
குறைவற்ற செயநீர்க்கு நூற்றுக் கொன்று
ஆட்டியதோர் திராவகத்துக் கைம்பதுக் கொன்றாகு
மப்பனே குருவுக்கு முப்பதுக் கொன்று
வூட்டியதோ ரசத்துக் கொன்றுக்கு நூறு
வுத்தமனே யதிகமிட்டே யுண்ணப்பாரே. 448

லோகங்களில் எந்தெந்த மருந்து எவ்வளவு சேர்க்க வேண்டும் என்று கூறுகிறேன் கேள்! செந்தூரத்தை லோகத்தின் எடைக்கு ஆயிரத்தில் ஒரு பங்கும், களங்குகளை ஐநூறுக்கு ஒரு பங்கும், மெழுகுகளை முன்நூறுக்கு ஒருபங்கும், செயநீரை நூறுக்கு ஒரு பங்கும், திராவகங்களை ஐம்பதுக்கு ஒரு பங்கும், குரு மருந்துகளை முப்பத்துக்கு ஒரு பங்கும் சேர்க்க வேண்டும். (இவை யாவும் நவலோகத்தில் சேர்க்கும் அளவுகளாகும்) இவை ரசமாக இருந்தால் ரசத்தின் எடையைப் போல் நூறு பங்கு அல்லது இன்னும் அதிகமாகவும் சேர்க்கலாம் ரசம் எல்லாவற்றையும் தன்னுள் கிரகித்துக் கொள்ளும்.

உண்ணுதற்கு ரசத்துக்கே யதிகமென்றா
லொருரசந்தா னூறுதங்க முண்டுதானால்
மண்ணுக்கும் விண்ணுக்கு மொன்றாய்த் தாண்டி
மால்தேடக் கிட்டாத மகத்தாம் வித்து
பண்ணுக்குள் தங்கமுண்டால் வேகம் மெத்தப்
பாய்ச்சியதோர் தங்கமெல்லாந் தின்று போட்டு
எண்ணுக்கு ளிருந்திடையே யிருக்குஞ் சூத
மிதன்பெருமை யேதக்கு மில்லை காணே. 449

ஒரு பலம் ரசம் நூறுபலம் தங்கத்தை உட்கொண்டால் மண்ணுக்கும் விண்ணுக்கும் தாண்டி விளையாடலாம். முறையாக உட்கொண்ட தங்கத்தால் குளிகைக்கு வேகம் அதிகமாகும், எத்தனை பலம் தங்கத்தை சேர்த்தாலும் அதை இரசம் உட்கொண்டு தன் எடையில் எந்த ஒரு மாறுதலும் அடையாமலிருக்கும். இதனுடைய பெருமையை இது நாள் வரை எவரும் அறிந்ததில்லை.

காணப்பா கெந்திரவிச் செந்தூரத்தைக்
கலந்துண்ட காயத்தின் வர்ணங்கேளு
பூணப்பா ரவியெப்போது தித்தானாப்போ
புகழான மதியெப்போ பொன்னுமெப்போ
தூணப்பா துரும்பாகும் துரும்பு பஞ்சாம்
தொலையாத காயமது சுக்குப் போலாம்
வீணப்பா மற்றதெல்லா மிதுவே கற்பம்
வேதாந்த ரகசியமும் வெளியாய்ப் போமே. 450

இக் கெந்திச்செம்பு செந்தூரத்தை உட்கொண்டவர்களின் தேகம் மிகுந்த ஒளி பெற்று பிரகாசிக்கும். இவ்வொளிக்கு சூரியனோ, சந்திரனோ பொன்னோ ஈடாகாது. மேலும் இதனால் தூண் துரும்புப் போலும் துரும்பானது பஞ்சு போலுமாகும். காயம் என்றும் அழியாமலிருக்கும். இதைத் தவிர மற்ற கற்ப மருந்தெல்லாம் வீண்! இக்கற்பத்தால் வேதாந்த ரகசியம் வெளியாய்த் தோன்றிப் பிரகாசிக்கும்.

கெந்தகச் செந்தூரம்

வெளியாகக் கெந்தகச் செந்தூரங் கேளு
விளங்கிதனை மூலகுரு வாயிரத்திற் சொன்னார்
வளியாக மூன்று தினங் குமுரியினில் வைத்து
வாங்கிய வக்கெந்தகந் தான் பலமோரெண்டு
களியாகக் கட்டுகின்ற சாரமொன்று
காய்ந்திருந்த வெண்காரம் பலந்தானொன்று
தளியாகச் சவுக்காரச் சுன்னங்கால்தான்
தானொக்க வுமிநீராற் சாரித்தப்பே. 451

கெந்தக செந்தூரம் சொல்கிறேன்கேள்! இம்முறையை திருமூலர் தன்னுடைய வாத காவியம் ஆயிரம் என்ற நூலில் கூறியுள்ளார். கெந்தகத்தை கற்றாழையினுள் மூன்று நாள் வைத்து (முன்பு கெந்தகத்தை செம்பாக மாற்றும் முறையில் கூறியபடி சுத்தி செய்து) அக்கெந்தகத்தை இரண்டு பலமெடுத்து, பின்பு சாரம் ஒரு பலம், வெங்காரம் ஒரு பலம், சவுக்காரச் சுண்ணம் கால் பலம் ஆக மூன்றையும் உமிழ் நீரால் அரைத்து கெந்தகத்தின் மேல் பூச வேண்டும்.

அப்பியந்த விரண்டேகாற் பலத்தை நீயு
மாறவைத்தே யதன் மேலே போடக் கேளு
கப்பியந்த கல்லுப்பு படிதான் ரெண்டு
காயவைத்தே யேழுதர மிடித்துக் காய்ச்சு
ஒப்பியொரு கலயத்தி லுப்புப் பாதி
யுத்தமனே யதன் மேலே யுண்டை வைத்துச்
செப்பியதன் மேற்பாதி யுப்பைப் போடு
சேரைரெண்டு பழச்சாறு சிறுக்கவாரே. 452

வாரப்பா வொரு சிரங்கை மேனிச்சாறு
வார்த்த பின்பு சில்லிட்டு சீலைசெய்து
நேரப்பா வொரு தினந்தான் வெயிலில் வைத்து
நேராகக் கனத்ததொரு புடத்தைப் போடு
பாரப்பா பூசை பண்ணிற் செந்தூரமாகும்
பசுமைநிற வாயி யிப்போ சிவப்பாய்ப் போனாள்
யாரப்பா விதன்வேதை சொல்லப்போரார்
அறிந்த மட்டுஞ் சொல்லுகிறே னறிந்துபாரே. 453

பூசி அம்மருந்தைக் காயவைத்துப் பிறகு கல்லுப்பை இரண்டுபடி எடுத்து ஏழு முறை தண்ணீரில் போட்டுக் காய்ச்சி உப்பாக்கி அவ்வுப்பை இரண்டு பங்காகப் பிரித்து வைத்துக் கொண்டு ஒரு பங்கை அடி கனத்த சட்டியில் பாதி வரைபோட்டு அதன்மேல் முன் காய வைத்துள்ள மருந்தை வைத்து அதன் மேல் மற்றொரு பங்கு உப்பைக் கொட்டி அதன் மேல் இரண்டு சேர் பழச்சாறும் ஒரு கையளவு குப்பைமேனிச்சாறும் வார்த்து சில்லிட்டுச் சீலை செய்து ஒரு தினம் சூரியனின் முன்பாக வைத்து மறுநாள் கெஜபுடமாக ஒருமுறை புடம் போட்டு தேவிக்கு பூசை, செய்தாயானால் கெந்தகமானது சிவந்து செந்தூரமாகும். இச்செந்தூரத்தால் கிட்டும் வேதையை பற்றி யாராலும் கூறமுடியாது. நான் அறிந்த வரை கூறுகிறேன் கேள்!

அறிந்திந்த செந்தூரத் தங்கத் தாட்ட
வப்பனே யைம்பதுதான் தொந்த மேறும்
பிறிந்துநின்ற வெள்ளி செம்பி லாயிரத்துக் கொன்று
பேரான லோகத்தைந் நூற்றுக் கொன்று
மறிந்து நின்ற மாற்றேது பதினெட்டப்பா
மகத்தான கெந்தகந்தான் செந்தூரித்தால்
செறிந்து நின்ற செந்தூரம் ரசத்தைக் கட்டுஞ்
செப்பறியேன் பாஷாணஞ் சேரச்சாமே. 454

இச்செந்தூரத்தை தங்கத்தின் மேல் பூசிப் புடம் போட்டால் ஐம்பது தொந்த மேலும். மேலும் இச்செந்தூரத்தை வெள்ளிச் செம்பில் ஆயிரத்துக்கொன்றிட்டாலும் நவலோகங்களில் நூற்றுக்கொன்று சேர்த்தாலும், பதினெட்டு மாற்றுள்ள தங்கம் கிட்டும். கெந்தகச் செந்தூரத்தால் ரசமானது கட்டும். அறுபத்து நாலு பாஷாணமும் சாகும்.

சாமென்ற பாஷாணம் வேதை போடச்
சார்வு சொல்ல முடியாது சமத்தாய்ச் செய்வார்
ஓமென்ற மூலத்தி லொளிமேற் கொண்டா
லொடுக்க முண்டோ பூரணந்தா னொன்று மட்டும்
தாமென்ற பரந்தவெளி தன்னைக் காண்பார்
சச்சிதா னந்தவெளி தன்னைக் காண்பார்
வாமென்ற வகாரசத்தி சிகாரந்தொந்தம்
மகத்துவம் போற் கெந்தகத்தின் வளப்பந்தானே. 455

மடிந்த இப்பாஷாணத்தால் வேதை புரிந்தால் சொல்ல முடியாத அளவிற்கு மாற்று காணும், மூலாதாரத்திலுள்ள ஒளியின் மேல் மனதை வைத்து தியானித்தால் பூரண வஸ்துவான சச்சிதானந்த ஒளி தோன்றும். வகாரத்துடன் சிகாரம் சேர்ந்து பிரகாசிப்பதுபோல், கெந்தகச் செம்பானது பாஷாணத்துடன் சேர்ந்து வேதைபுரியும்.

வாதகுடோரி

தானென்ற பூநீறு பலந்தான் ரெண்டு
சாங்க முற்ற வெடியுப்பு பலந்தான் ரெண்டு
கானென்ற வரைப் பலந்தான் சாரம் போடு
காணப்பா நாலரைதான் வெள்ளைபோடு
வேனென்ற தாளகந்தான் பலத்தைக் கேளு
விளங்கியஞ்சு நால்போடு வேறேயொன்றா
யானென்ற பொடிபன்னிப் பீங்கானில் வைத்தே
யதன் மேலே யெருக்கம்பா லடந்து வாரே. 456

வார்த்தேழு தினம் வைப்பாய் ரவியிற் றானும்
வாகாக வுலர்ந்த பின்பு மேருக்கேற்றிப்
போர்த்தேழு சீலைசெய்தே யுலர்ந்த பின்பு
போர்கோடே வாலுகையி லடுப்பி லேற்றி
யேர்த்தே ழைந்தாகிய சாமந்தான் தீயை
யியல்பாகப் பன்னிரண்டு கடந்த பின்பு
பார்த்தேழு பதங்கமு மாங்குப்பி வாயிற்
பக்குவத்தைப் பார்த்து மெள்ளப் பரிந்து வாங்கே. 457

பூனீறு இரண்டு பலம், வெடியுப்பு இரண்டு பலம், சாரம் அரைப்பலம், வெள்ளை நாலரைப் பலம், தாளகம் இருபது பலம் ஆக இவை ஐந்தையும், பொடி செய்து பீங்கானில் போட்டு அதன் மேல் எருக்கம்பாலை வார்த்து ஏழு தினம் சூரியன் முன்பாக வைத்து உலர்த்தி பின்பு அதைக் காசி என்னும் குப்பியிலடைத்து சீலை செய்து காயவைத்து வாலுகையிலேற்றி-விடாமல் பன்னிரண்டு சாமம் தீமூட்டி எரித்தால் மருந்தெல்லாம் குப்பியின் வாயில் பதங்கமாயிருக்கும். அப்பதங்கத்தை சிதறாமல் எடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்.

வாங்கப்பா வாதமென்ற குடோரி நாமம்
வாகாகா வாடுகிற வரிசை கேளு
பாங்கப்பா கல்முதலா மண்ணைத் தொட்டுப்
பரவியதை யுருக்கிடவே சத்துமாகு
மோங்கப்பா வுபரசங்க ளெல்லாஞ் சத்தா
முத்தமனே காரமொக்க வூட்டியாட்டு
தாங்கப்பா வெதிரில்லை குடோரி பட்டாற்
றன்னினம் போற் கன்முதலாய்த் ததும்பும் பாரே. 458

இப்பதங்கத்திற்கு வாத குடோரி என்று பேர். இதை எவ்வாறு பயன்படுத்த வேண்டுமென்று கூறுகிறேன் கேள்! இம்மருந்தால் கல் முதற் கொண்டு எல்லா பொருளும் சத்தாகும். எல்லா வகையான லோகங்களுடனும் உபரசத்துடனும் இம்மருந்தைக் கூட்டி அதற்கு சமன் வெங்காரத்தையும் சேர்த்து உருக்கினால் சத்தாகும். இக்குடோரிக்கு சமன் வேறொன்றும் கிடையாது.

பாரிந்தக் குடோரி பட்டாற் சத்தெல்லாமாம்
படுமுன்னே மூலிகையிற் செம்பெல்லாமாம்
சேரிந்தக் குடோரி விட்டாற் கடினம் வாதம்
செய்து கொள்வாய் குடோரியைத்தான் சிறக்க முன்னே

யாரிந்தப் படிசெய்வார் மக்காளெம்போ
லாயிக்கே யீசனன்றைக் கறைந்த வாறாம்
நேரிந்தப் படியார்த்து மூல நாயகன்
நிலவரமா யாயிரத்தி னிறுத்தினாரே. 459

இக் குடோரியால் சகல சரக்கும் சத்தாகும். மூலிகையினால் செய்யப்படும் செம்புகள் பலதாகும். ஆகையால் இக் குடோரியை முதலில் செய்துகொள். இல்லையேல் உருக்கினங்கம் சத்தாகாது. நான் கூறிய முறைப்படி யார் செய்யப் போகிறார்கள்! இம்முறை முன்பொரு சமயம் பார்வதிக்கு சிவபெருமானால் உபதேசிக்கப்பட்டதாகும். அதை திருமூலர் தன் வாதகாவியம் ஆயிரம் என்ற நூலில் கூறி வைத்துள்ளார்.

நிறுத்தினா ரேமுலட்ச மொன்றாய் மூர்த்தி
நேராகப் பார்க்க வென்றாற் கருதல் மெத்த
மறுத்து நானேமுலட்சச் சாரம் வாங்கி
வகைவகையாய்ப் பார்த்திந்தநூலைச் சொன்னேன்
பொறுத்தருளும் பெரியோரே தப்பினாலும்
போக்கொன்றுந் தப்பாது கைதப்பல்லால்
வெறுத்தனால் விட்டலந்தான் சேர்த்தாற்போல்
வேண்டியென் நூலை விட்டால் விருத்தமாடே. 460

சிவபெருமானால் எழுதப்பட்ட ஏழு லட்சம் என்ற நூலை படிப்பது மிகவும் கடினம். ஆகவே அதனுடைய சாரத்தை வாங்கி வாத காவியம் மூவாயிரம் என்ற இந்நூலைப் பாடி வைத்தேன். இதில் தவறு ஏற்படாது. அப்படி தப்பினாலும் பெரியவர்கள் மன்னித்தருளவேண்டும். இந்நூலில் மார்க்கங்கள் கடினம் என்று வெறுத்து நூலை கைவிட்டால் அவன் மாடாவான்.

விருதாவாய்ச் சுட வேண்டாம் தாளகத்தை
விரைந்ததுதான் சத்தாகும் விபரம் சொல்வேன்
கருதாவாங் கல்லான சுண்ணத்துள்ளே
கட்டிவைத்துத் தாளகத்தைத் தண்ணீர் வாராய்
மருதாவா யைம்பதினோ டைந்து வாட்டி
வைத்து வைத்துக் கல்லிட்டுத் தண்ணீர் வாராய்
பொருதாவாய்த் தாளகத்தி னூறல் போகும்
பொன்னிறம்போற் கறுப்பாகும் புகழைக் கேளே. 461

தாளகத்தை சத்தாக செய்யும் முறையைக் கூறுகிறேன் கேள். கல் சுண்ணத்தினுள்ளே, தாளகத்தை கட்டி வைத்து தண்ணீர் ஊற்றி ஊறவைத்து மறுநாள் அத்தாளகத்தை கழுவி முன்போல் சுண்ணக்கல்லின் நடுவே வைத்து ஊறவைக்க வேண்டும். இவ்வாறு ஐம்பத்தைந்து முறை செய்தால் தாளகம் ஊறலற்று பொன்போல் ஒளிரும்.

புகழான தாளகத்தைச் சத்து பண்ணப்
போக்கெல்லாஞ் சொல்லுகிறேன் மக்கான் கேளு
அழகான வெடியுப்பு பலந்தான் பத்து
அப்பனே புளியெட்டுச் சீனமொன்று

நிகழான கல்லுப்பு ஒன்று கூட்டி
நேரான வெண்கார மரைதான் கூட்டு
தகழான விருபதரைப் பலமுமொக்கத்
தாக்கி நன்றா யிடித்ததனை வடைபோற் கட்டே. 462

கட்டியதோர் வடையிலப்பா தீயைமூட்டு
கனிவாக வெந்தவுடன் வில்லையாகும்
ஒட்டியதோ ரிந்திடைக்குச் சாரம்போடு
வுரைக்கவரை நெட்டேறு முண்ணவாட்டு
மட்டியதோர் தீப்போடு குகையிலிட்டு
வாய்குழறிச் சாரமங்கே மாண்டு போச்சு
அட்டியென்ன பனியில் வைக்கச் செயநீராச்சு
வாச்சரியந் தாளகத்தி னாண்மை போச்சே. 463

ஊறல் நீங்கிய இத்தாளகத்தை சத்தாக செய்யும் முறையை கூறுகிறேன் கேள்! வெடியுப்பு பத்துபலம், புளி எட்டு பலம், சீனம் ஒரு பலம், கல்லுப்பு ஒரு பலம், வெங்காரம் அரை பலம் ஆக இவை ஐந்தையும் ஒன்றாக அரைத்து அடைபோல் தட்டி அடுப்பில் வைத்து தீயைமூட்டி எரித்தால் அடையானது வெந்து வில்லைப் போலாகும். இம்மருந்தின் எடைக்கு சமமாக சாரம் சேர்த்து நெட்டேறும் வரை அரைத்து குகையிலிட்டு தீயைமூட்டி எரித்தால் சாரம் மாண்டு போகும். இம்மடிந்த சாரத்தை பீங்கானிலிட்டு பனியில் வைத்தால் செயநீராகும்.

ஆண்மையென்ற செயநீரிற் பலந்தானெட்டு
மப்பனே தாளகத்தை யதிலே போடு
வாண்மையென்ற வயக்கிண்ணிக் குள்ளே யிட்டு
வாகாகக் கொதிப்பிப்பாய் வற்று மட்டும்
வேண்மையென்ற பனியில் வைக்கச் செயநீராகும்
விரைந்திந்தப் படிமுக்கால் வெதுப்பியாட்டு
தாண்மையொன்றித் தாளகந்தா னதிலே சாகுஞ்
சார்ந்த பின்பு சத்தாகச் சார்வு கேளே. 464

இச்செயநீரை ஒரு இரும்பகலில் விட்டு அதில் எட்டு பலம் தாளகத்தை போட்டு செயநீர் வற்றும் பரை எரித்து பனியில் வைத்தெடுத்தால் செயநீராகும். இச்செயநீரில் தாளகத்தை தோய்த்து வாட்டினால் தாளகம் சாகும். மடிந்த இத்தாளகத்தை சத்தாக செய்வதற்கு முறை சொல்கிறேன் கேள்!

கேளப்பா கட்டினதோர் காரமொன்று
கெடியாகக் கட்டினதோர் சாரமொன்று
நீளப்பா பலம் ரெண்டுங் கல்வத்திட்டு
நேரான குடோரியொரு காசு போட்டு
ஆளப்பா அமுரி விட்டே யரைத்து நன்றா
யடைவாகத் தாளகத்தை யப்பிக்காச்சு
நாளப்பா நாயுருவிச் சாம்பதற்குள்ளே
நாட்டி வைத்து நாற்சாமந் தீயை மூட்டே. 465

மூட்டினதை யாறவிட்டே யெடுத்துப் பாரு
முத்துப்போல் வெளுப்போடு கறுப்பாய் நிற்கும்
ஆட்டினதைக் காரமிட்டு வுருக்கிடப்பா
வடைவாகக் குகைபோலே வாரு வாரு
நீட்டியிந்தக் குகைக்குள்ளே ரசத்தை வாரு
நேர்ப்பாக வெதுப்பையிலே சூதங்கட்டும்
பூட்டியிந்தச் சூதந்தான் குருவுக்காகும்
பொன்முதலா நவலோகம் பொருமி நீறாம். 466

கட்டிய காரம் ஒரு பலம், கட்டிய சாரம் ஒரு பலம், குடோரி ஒரு காசெடை, இவை மூன்றையும் அமுரியால் அரைத்து தாளகத்தின் மேல் அப்பிக் காய்ச்சி நாயுருவிச் சாம்பலுக்குள் வைத்து நான்கு சாமம் தீயை மூட்டி எரித்து பின் ஆறவிட்டு எடுத்துப் பார்த்தால் முத்துபோல் சிறு கருமை நிறம் கலந்து வெள்ளை நிறமாய் இருக்கும். இதனுடன் காரம் சேர்த்து உருக்கி குகை போல் செய்து அக்குகைக்குள் ரசத்தை விட்டு வெதுப்பினால் சூதம் கட்டும். கட்டிய இச்சூதம் குருச்சூதம் எனப்படும். இக்குருவால் பொன் முதற் கொண்ட நவலோகங்களும் பொருமிநீறும். (சுண்ணமாகும்).

நீறாகச் சொல்லுகிறேன் வரிசை கேளு
நேரான தங்கமது நாலுக் குள்ளே
வீறாக விச்சூத மொன்று போட்டு
வெருவியொரு மணியாக வாங்கிக் கொண்டு
தாறாக வீரமொடு துரிசி வெள்ளை
தனினாலும் கொன்றப்பா மணிமேற் பூசிக்
கூறான வைஞ்சுண்ணக் குகையில் வைத்துக்
குறிப்பாகச் சீலைசெய்து புடத்தைப் போடே. 467

போட்டுடனே தங்கமது குருவேயாகும்
போட்டாலே சரக்கெல்லாம் புரண்டு சாகும்
நீட்டுடனே நவலோகம் பொன்னு மாகும்
நிலையான வுபரசங்கள் பொன்னுமாகும்
கூட்டுடனே யிக்குருவாற் சூதங்கட்டும்
கொண்டிடவே நூறுதொந்தஞ் சூதமேறு
மாட்டிடவே யிக்குருத்தா னல்லமார்க்க
மாதியென்ற முற்குறச்சி யாட்டுத்தானே. 468

நாலு பலம் தங்கத்துடன் ஒரு பலம் குருச் சூதம் கூட்டி மணியாய் உருக்கிக் கொண்டு இம்மணியின் மேல், துருசு, வீரம் வெள்ளை ஆகிய மூன்றை தனித்தனியே மணியின் எடைக்கு நாலிலொரு பங்கு எடுத்து மணியின் மேல் பூசி குகையில் வைத்து சீலைசெய்து புடம்போட்டால் தங்கமானது குருவாகும். இத்தங்க குரு பட்ட மாத்திரத்தில் சகல சரக்கும் சாகும். அதுமட்டுமல்லாமல் நவலோகங்கள், உபரசங்கள், போன்றவை பொன்னாகும். சூதம் திரண்டு கட்டும், கட்டிய சூதத்துடன் மேலும் இத்தங்க குருவை சேர்த்தால் சூதம் நூறுதொந்தமேறும், இத்தங்க குருமார்க்கமானது நல்ல அருமையான முறையாகும். பார்வதி தேவியால் செய்யப்பட்ட வேதையாகும்.

தானென்ற வெள்ளியப்பா நாலுக்குள்ளே
தாக்கியிந்தச் சூதமொன்று மணியாய் வாங்கி
வானென்ற வீரமொடு துரிசிநீறும்
வாகாக நாலிலொன்றை மணிக்குப் பூசித்
தேனென்ற வைஞ்சுண்ணக் குகையில் வைத்துச்
சிறக்கவொரு புடம்போட ரசிதச் சுண்ணம்
வேனென்ற வங்கத்தைந் நூற்றுக்கூட்டு
வெள்ளியப்பா பதினாறு விரைந்து மாற்றே. 469

வெள்ளி நாலு பலமெடுத்து அதனுடன் குருச்சூதம் ஒரு பலம் கூட்டி குகையில் வைத்து மணியாய் உருக்கி எடுத்துக் கொண்டு. இம்மணியின் மேல் வீரம், துருசு, வெள்ளை ஆகிய மூன்றையும் தனித்தனியே மணியின் எடைக்கு நாலிலொரு பங்கு எடுத்துப் பூசி ஐந்து சுண்ணக் குகைக்குள் வைத்து முறையாகப் புடம்போட்டால் வெள்ளி சுண்ணமாகும். இச்சுண்ணத்தை ஈயத்துடன் நூற்றுக்கொன்று சேர்த்தால் பதினாறு மாற்றுடைய வெள்ளியாகும்.

மாற்றாக வெள்ளியுமாம் நவலோகங்கள்
மாட்டுகிற முறையறிந்து மாட்டு மாட்டு
யேற்றுமிக் குருவைச் சூதத்திற் போட
வென்ன சொல்வேன் வெள்ளியப்பா விருபத்தைந்து
கூற்றாகக் களிமண்ணிற் குருவைக் கூட்டிக்
குகைபோலே பிடித்து வைப்பாய் மூசைவாதம்
ஆற்றாக மூசையிலே நவலோகத்தை
யாட்டிடவே வெள்ளியுமா மறிந்து பாரே. 470

மேலும் இச்சுண்ணத்தால் நவலோகங்களும் வெள்ளியாகும். சூதத்துடன் சேர்த்துருக்கினால் சூதமும் இருபத்தைந்து மாற்று கொண்ட வெள்ளியாகும். வெள்ளி குருச்சுண்ணத்தை களிமண்ணுடன் சேர்த்துப் பிசைந்து குகைபோல்செய்து அக்குகையில் நவலோகங்களை வைத்துருக்கினால் அனைத்து லோகங்களும் வெள்ளியாகும்.

அறிந்திந்த மூசையைநீ யறியவேண்டா
மப்பனே யையிரண்டு முறைதான் வெள்ளி
பிறிந்திந்தக் குகைக்குள்ளே காரம்பூசிப்
பேரான வெள்ளை ரொம்ப வதற்குள்வைத்து
மறிந்திந்த தணல்மூடி யூதுவூது
வைத்த வெள்ளை கட்டிப்போ மாட்டக்கேளு
நெறிந்திந்த வெள்ளைவாய் நீராலுரைத்து
நேராக நவலோகம் பூசிக் காய்ச்சே. 471

காய்ச்சியதோர் லோகமெல்லாம் பத்தும் பத்துங்
கையடங்கா வெள்ளியுமாங் காணுமைந்தா
ஓச்சியதோர் குகைக்குள்ளே யுருகும் வெள்ளி
யுத்தமனே பதினெட்டு மாற்றுமாகு
மாச்சியதோர் வெள்ளி வித்தை மால்தேவிக்குள்
அப்பனே யேமவித்தை மால்தேவிக்குள்
மாச்சியதோர் எனைப்பெற்றாள் மாச்சினையைமெச்சி
மயங்கியது லோகத்தோ ருமயக் கென்றாளே. 47_

முன்செய்த களிமண் குகைக்குள் பரத்தைப் பூசி வெள்ளை பாஷாணத்தை வைத்து குகை வாயைமூடி தணல் மூட்டி ஊதினால் வெள்ளையானது கட்டிப் போகும். கட்டிய இவ்வெள்ளையை வாய்நீரால் உரைத்து நவலோகங்களின் மேல் பூசி காய்ச்சினால் லோகங்களெல்லாம் இருபது மாற்றுடைய வெள்ளியாகும். சாதாரண வெள்ளியை இக்குகைக்குள் வைத்து உருக்கினால் அதிக மாற்று காணும். இவ்வெள்ளி வித்தை மற்றும் ஏம வித்தை யாவும் மாயதேவியின் (துரிசு) செய்கையாகும்.

குடோரி முறை

மயக்கமகத் திசைக்காகக் குடோரி கேளு
வளமாகக் கட்டினதோர் காரம் பத்து
வயக்கமற வாதமென்ற குடோரி கேளு
வரிசையுட னொன்பதெடை வாட்டிப்போடு
தயக்கமறத் தாளகத்தின் சத்தை யோட்டு
சார்வான வீரமப்பா வேழுபோடு
வியக்கமற லெண்கண்ட ராறுபோடு
விரவியதோர் முழுக்கட்டு சாரமைந்தே. 473

கட்டினதோர் வெடியுப்பு நாலுபோடு
கருவாக நீலரெங்கு மூன்றுபோடு
ஒட்டினதோர் மெழுகப்பா ரெண்டு போடு
வுத்தமனே குன்றியப்பா வொன்று போடு
மட்டினதோர் பத்துவகை யொன்றாய்க் கூட்டி
வளமான தேன்வார்த்து மத்தீயப்பா
வெட்டியதோர் சரக்கையெலா மயிரைத் தாவு
மெட்டாட்டாற் கால்வாரி யிழுக்குந் தானே. 474

காரம் பத்து பலம், வாதக்குடோரி ஒன்பதெடை, தாளகச் சத்து, வீரம் ஏழு பலம், வெண்கண்டர் ஆறுபலம், முழுமையாக கட்டிய சாரம் ஐந்து பலம், வெடியுப்பு நாலு பலம், நீலம் மூன்று பலம், மெழுகு ரெண்டு பலம், குன்றி ஒரு பலம், ஆக பத்தையும் ஒன்றாகச் சேர்த்து தேன் கூட்டி மத்தித்து வைத்துக் கொண்டு வேண்டிய பொழுது சரக்கின்மேல் தூவினால் சரக்குகளை கால்வாரி இழுக்கும். (இதற்கு குடோரி என்று பெயர்).

கால்வாரி யடித்த நெல்லின் கதிரைப் போலக்
கலகலத்து வுபரசங்கள் சத்தேயாகு
மேல்வாரி பாஷாணத் தொட்டாற் கட்டும்
வெருவிடவே சூதமங்கே விரைத்துப் போகும்
பால்வார மூலிகைக்குட் பிசறியாட்ட
வருகுமப்பா சத்துக்கள் செம்பாம் மெத்தச்
சூல்வாரி யிருந்த விரிந்தாற் போலச்
சுடர்க்கார சாரமெல்லாந் தூளாய்ப் போமே. 475

உபரசங்கள் எல்லாம் சத்தாகும், பாஷாணங்கள் கட்டும். ரசம உறைந்து போகும். மூலிகைகளுடன் சேர்த்தரைத்து உருக்கினால் மூலிகைகள் சத்தாக விழும். கார சாரங்களெல்லாம் தூளாய்ப் போகும்.

தூளாகிப் போனதெல்லாம் குருவேயாச்சு
சுழன்றுருகி வந்ததெல்லாஞ் சத்தேயாச்சு
நாளாகி யுபரசங்கள் நூறுபத்து
நாட்டி யொன்றா யுருக்கிடவே சுலையொன்றாகு
நீளாகி வாதியனாக் குபரசங்கள்
நேராக வுருகாது கடினமெத்தத்
தாளாகிக் கல்மண்ணு மொன்றாய்ச் சேர்ந்து
தண்ணீராஞ் சத்தாகுந் தாக்கு தாக்கே. 476

தூளாய் போகுமென்றால் குரு மருந்தாகும் என்று பொருள். உபரசங்கள் அனைத்துடன் மேற்கூறிய குடோரியை சேர்த்து உருக்கினால் அனைத்தும் சத்தாகும். இக்குடோரியை அறியாத வாதிக்கு உபரசங்கள் உருகாது. ஆகவே இக்குடோரியை கல்,மண் போன்றவற்றுடன் சேர்த்து உருக்கினாலும் தண்ணீர் போல் உருகி சத்தாகும்.

தாக்கப்பா சாரத்தைச் சேர்த்தே யாட்டு
சகலகலை யொன்றாக்குந் தயங்கொட்டாது
தேக்கப்பா நவரத்ன மொன்றாய்ச் சேருந்
திறமான வயிரமப்பா தண்ணீராகும்
வாக்கப்பா வடங்காது இதனி னாட்டு
வாய்மூடப் பிடறியினால் வார்த்தை பேசும்
போக்கப்பா மெத்தவிதிற் குருவுமாச்சு
பொற்சிலைக்கு வுயிர்கொடுத்த புகழ் போலாச்சே. 477

ஆனால் மறக்காமல் குடோரியுடன் சாரத்தை சேர்த்து உபயோகித்தால் உலகத்திலுள்ள அனைத்தும் தலைத்தூக்காமல் சுழன்றுசத்தாகும். நவரத்தினங்கள் அனைத்தும் உருகும். வயிரமானது தண்ணீர் போல் உருகியாடும். இதனுடைய பெருமையை வாயால் கூறி மாளாது. மேலும் இக்குருவால் குருமருந்தும் சித்தியாகும்.

ஆச்சப்பா மெழுகோடே காரங்கூட்டி
யணைத்துருக்கப் பூநாகம் செம்புமாகுங்
காய்ச்சப்பா நிமிளையந்தப் படியே செம்பு
கல்முதலா முபரசங்க ளெல்லாஞ் செம்பு
வாய்ச்சப்பா திசகாரம் சிக்கிற்றானால்
வாதமுதல் வயஸ்தம் பஞ்சகலமாச்சு
வூச்சப்பா விந்தவித்தை யாருக்கெய்து
முத்தமனாஞ் சிவயோகிக் குறுமென்றோதே. 478

முன்கூறிய குடோரி என்னும் மெழுகுடன் காரம் கூட்டி பூநாகத்துடன் சேர்த்துருக்கினால் பூனாகம் செம்பாகும். இதைப்போலவே நிமிளையை உருக்கினால் நிமிளையும் செம்பாகும். கல் முதல் உபரசங்கள் அனைத்தையும் குடோரி மெழுகை சேர்த்துருக்கினால் செம்பாகும். இதற்கு நல்ல வெங்காரம் தேவை. நல்ல காரம் கிட்டினால் வாதத் தொழில் முதல், வாயுவில் பறக்கும் சித்தி வரை நமக்கு பலிதமாகும். இவ்வித்தை யாருக்கு பலிதமாகும் என்றால் உத்தமனான சிவயோகிக்கே பலிக்கும்.

உருகிநின்றாற் சிவயோகி சத்தை வாங்கி
யூட்டி விப்பான் சாரணையைச் சத்துக்கப்பா
மருகிநின்ற சத்தோடே சத்தைச் சேர்த்து
வாகான செந்தூரம் வளமாய்ப் பண்ணித்
தருகிநின்ற சடத்தை முந்திச் சித்தி செய்வார்
சாங்கமுற்று மனமுறைத்துச் சார்வார் நாலில்
முருகிநின்ற கருவிவந்து மூடினாலு
மூலத் தீக்குள் ளமர்த்தி மூடுவாரே. 479

சிவயோகியானவன் எல்லா சரக்குகளிலிருந்தும் சத்தை வாங்கி மணிக்கு சாரணை ஊட்டி கெவுன குளிகையை சித்தி செய்து கொள்வான். அதுமட்டுமின்றி ஒரு சத்துடன் மற்றொரு சத்தையும் கூட்டி செந்தூரம் செய்து தேகத்தை அழியவிடாமல் பூரண வஸ்துவில் லயிக்க செய்வான். அப்பொழுது மாயை வந்து அணுகினால் அதை மூலத்தீக்குள் போட்டு எரித்து விடுவான்.

மூடுதற்கு மனமொத்துத் திறந்து சொல்வேன்
முத்திபுத்தி ரெண்டுக்கு மூர்க்கம் விம்பம்
நாடுதற்குப் படிகமென்ற செம்பு பத்து
நலம்பெரிய கெந்தகத்தின் செம்பு பத்து
வூடுதற்கு நிமிளையென்ற செம்பு பத்து
வுத்தமனே யயச்செம்பு பலந்தான் பத்து
கூடுதற்குப் பூநாகச் செம்பு பத்து
கூட்டப்பா செயரசந்தான் கூடப்பத்தே. 480

கூட்டப்பா நாகமென்ற செம்பு பத்து
குலாவியதோர் தங்கமப்பா பலந்தான் பத்து
மூட்டப்பா மயூரமென்ற செம்பு பத்து
மும்மூன்று மொன்பதப்பா செம்பாய் வாங்கி
யாட்டப்பா தொண்ணூறு பலமுமொன்றா
யடைவாகக் குகைக்குள்ளே யமர்த்தியாட்டு
நீட்டப்பா கணேசனோடு சிவனுந்தேவி
நேரான நிருவாணி நந்தி வாரே. 481

மனதை மூலத்தில் நிறுத்துவதற்கும், முத்தி அடைவதற்கும், புத்தியை பெறுவதற்கும் மூர்த்தி பிம்பம் (சிலை) செய்யும் முறையைக் கூறுகிறேன் கேள். படிகச் செம்பு பத்து பலம், கெந்தகச் செம்பு பத்து பலம், நிமிளைச் செம்பு பத்து பலம், அயச்செம்பு பத்து பலம், பூநாகச் செம்பு பத்து பலம், செயசூதம் பத்து பலம், நாகச் செம்பு பத்து பலம், தங்கச் செம்பு பத்து பலம், மயூரச் செம்பு பத்து பலம், ஆக ஒன்பது சரக்கையும் செம்பாகச் செய்து கொண்டு, வகைக்குப் பத்துப் பலம் வீதம் தொண்ணூறு பலம் எடுத்து குகைக்குள் வைத்து உருக்கி கணேசன், சிவன் பார்வதி, நிர்வாணி, நந்தி ஆக நான்கு வகையான சிலைகளை வார்த்துக் கொள்.

வார்த்தபின்பு விம்பத்தைத் திருத்தி நன்றாய்
வாங்கினதோர் பொடியெல்லாம் பதனம்பண்ணு
யேர்த்த பின்பு நடராச னீசனார்க்கு
மெனையீன்ற சிவகாமித் தாய்க்குமப்பா

போர்த்து மெத்த மூவருக்கு மதுவைப்பூரி
பூசைபண்ணி யைந்தெழுத்தில் மூன்றைச்சேரு
கோர்த்துற்று சூலத்தே செபித்திட்டேறு
கூப்பிட்டாற் சிவன் முன்னே கூறுவாரே. 482

சிலைகளை அழகாகத் திருத்தி இழைத்து வழவழப்பாக செய்து கொள். இரவிய பொடிகளை பத்திரமாக வைத்துக்கொண்டு, நடராசருக்கும் ஈசனுக்கும், சிவகாமியான தேவிக்கும் மதுவை வைத்து பூசை செய்து ஐந்தெழுத்தையும் மூன்று பீஜங்களையும் சேர்த்து மூலத்தில் நின்று செபித்தால் சிவன் கூப்பிட்ட நேரத்தில் முன்னே நின்று பேசுவார்.

கூறுவார் கேட்டதெல்லாங் கொடுப்பாரீசர்
குணங்கெட்ட மனநாலிற் கூடச்செய்வார்
ஆறுவா ரெத்தனைதான் பாவஞ்செய்து
அஞ்செழுத்தில் மூன்றையொக்க வணைத்தே யோங்கு
தேறுவாய் சிவகாமி புத்தி சொல்வாள்
செகமெல்லா மவளவன்றான் றெளிந்து கொள்ளு
மாறுவாய் பின்னொன்றுந் தெய்வமில்லை
மனமவன்தான் போதமவள் மக்காள் பாரீர். 483

அதுமட்டுமின்றி நீ கேட்டதெல்லாம் கொடுப்பார். மனதை புத்தியிற் நிறுத்தச் செய்வார். நீ எத்தனை பாவம் செய்திருப்பினும் அதனை விலக்குவார். அஞ்செழுத்துடன் மூன்று பீஜங்களை சேர்த்து செபித்தால் அனைத்தும் சித்தியாகும். தேவி சிவகாமி உனக்கு புத்திமதி சொல்வாள். உலகத்தில் உள்ள அனைத்து வஸ்துகளும் அம்மையப்பனான இவர்களின் ரூபமாகும். இவர்களைத் தவிர உலகத்தில் வேறு தெய்வமென்பது கிடையாது. மனம் சிவன்பெருமானாவர். தேவி ஆனந்த போத மயமானவள் என்றறிவாயாக.

பாரிருவர் நேர்ந்தவிட நிராகாரந்தான்
பளிச்சென்ற வொளியெல்லா மாயி மாயி
சேரிருவர் வெட்டவெளி யப்பனப்பன்
சித்துசித்து ரெண்டதுதான் சேர்ந்து தாண்டி
லூரிருவர் மனமங்கே யொன்றாய்ப் போச்சு
வோகோகோ உருவுமில்லை யருவுமில்லை
யாரிருவ ரென்றாக்கா லசபையாச்சு
வற்றநின்ற நாலுக்கு ளடைந்து கூட்டே. 484

இவர்கள் இருவரும் இணைந்த இடமே நிராகாரமாகும். இதில் பளிச்சென்று பிரகாசிக்கும் ஒளி ஆயியான தேவியாவாள். அது பிரகாசிக்கும் வெட்டவெளி அப்பனான சிவபெருமானாவார். மனமானது சித்தத்தையும் சித்தையும் கடந்து இவ்வெட்டவெளியில் சென்றடையும் அவ்வாறு மனம் இரண்டறக் கலந்தால் அங்கே அருவமும் உருவமும் அழியும். மனம் எதை அடைந்தால் இவையாவும் கைகூடுமென்றால் பிரம்மரந்திரத்திலுள்ள அசபையை அடைந்தால் மனம் நான்குவித அவத்தைகளையும் கடந்து ஆனந்த பரவசமடையும்.

கூட்டென்றால் வாய்ப்பேச்சு கூடப் போமோ
கொள்கவிந்த விம்பத்தி லபிஷேகப்பால்
நாட்டென்ற சூதத்திற் பாலை வார்த்து
நலம் பெறவே கொதிப்பித்தால் குளிகையாகும்
தாட்டென்ற சாரணையைத் தீர்த்து சொக்கும்
தயவாக வாயிலிட்டால் நாலிற் சொக்கும்
வீட்டென்றே காட்டென்றே விருந்துபாரு
வெட்டவெளி யாறுதல மேறுங்காணே. 485

மனமே! நீ கூடு என்று வாயால் சொன்னால் கூடிவிடுமோ! (கூடாது). முன் செய்த சிவன் பார்வதி சிலைக்கு பால் அபிஷேகம் செய்து அப்பாலில் சூதத்தை சேர்த்து கொதிக்க வைத்தால் குளிகையாகும். அக்குளிகைக்கு சாரணை தீர்த்து வாயிலிட்டால் மனம் சுழுத்தியில் அடங்கும். நீ! காட்டிலிருந்தாலும் வீட்டிலிருந்தாலும் உனக்கு சமாதி கைகூடும். ஆறு தளத்தையும் வரிசையாக ஏறி மனதை வெட்டவெளியில் செலுத்து.

மேலான அபிஷேகப் பாலையுண்டால்
விரைந்தேழு நாளையிலே காயசித்தி
சேலான பாலையப்பா நவலோகத்திற்
றெளித்தனலைக் கண்டுடனே சேரப் பொன்னாம்
கோலான சுழிமுனையும் திறந்து போகும்
கூப்பிட்டாற் பூரணமுங் கூவாவென்னும்
வேலான விழியுடைய மாயிதானும்
வெட்டவெளி நால்வரையில் விளங்கினாளே. 486

அபிஷேகப் பாலை உட்கொண்டால் ஏழே நாட்களில் காயம் சித்தியாகும். மேலும் இப்பாலை நவலோகத்தின் மேல்தெளித்து தீயில் வாட்டினால் உடனே பொன்னாகும். பாலை பருகிய மாத்திரத்தில் சுழுமுனை திறக்கும். பூரணவஸ்துவும் நாம் கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்கும். வேர் போன்ற கண்களையுடைய தேவியானவள் வெட்ட வெளியில் நின்று பிரகாசிப்பதை காணலாம்.

விளங்கியதோ ரிந்தவின்ப மாரார் செய்தார்
வேதாந்தங் கடந்த சித்தர் வெகுவாங் கோடி
யளங்கியதோர் குகைதோறுஞ் சக்கரங்கள் செய்வா
ரவரவர்கள் வேணுமென்ற விபரஞ்செய்வார்
பிளங்கியதோர் குருப்போலச் செய்வார்கோடி
பேரான மாயையைப் போற்செய்வார் கோடி
தளங்கியதோர் குகைதோறு மிதுவே பூசை
சாதகமாய்ச் சீடருக்குப் பாலைவாரே. 487

இவ்வாறு மகாபெருமை வாய்ந்த சிலைகளை, வேதாந்த உட்பொருளை அறிந்த சித்தர்களும் முனிவர்களும் கோடிக் கணக்கில் செய்து குகைக்குள் வைத்து பூசை செய்வார்கள். மேலும் அவர்கள் விரும்பும் சக்கரங்களும், செய்து கொள்வார்கள். அது மட்டுமின்றி சிவசித்தர்கள் குருவைப் போன்ற உருவமும் லோகமாயை போன்ற உருவமும் செய்து குகைக்குள் வைத்து பூசை செய்வார்கள். ஆகவே நீயும் நான்

கூறியபடி தேவதா ரூபங்கள் செய்து அபிஷேகம்பண்ணி அப்பாலை சீடனுக்கும் கொடு.

பாலாலே கட்டினதோர் குளிகையப்பா
பலபலவாங் குகைதோறும் சகட்டில் மெத்தக்
காலாலே நடக்கறியார் மக்களென்று
காய்கனிக்கும் வஸ்துவுக்கும் கவனஞ் செய்வார்
ஆலால முண்டசிவ னபிஷேகப்பா
லாடுகிற குளிகை யொரு லட்சங் காதம்
மேலான சாரணையோ வில்லை நூறு
விடுபட்டு குளிகைமெத்த விளங்கிக் காணே. 488

அபிஷேகப் பாலால் கட்டிய குளிகையை சித்தர்கள் மலைக் குகைக்குள் ஒளித்து வைத்துள்ளார்கள். இச்சித்தர்கள் காய் கனிகள் போன்றவைகளை எடுத்து வருவதற்கும் கூட கெவுன மார்க்கத்தில் செய்வார்கள். ஆலமுண்ட சிவன் சிலைக்கு அபிஷேகம் செய்த பாலால் கட்டிய குளிகையால் ஒரு லட்சம் காதம் தாண்டலாம். அதற்கு மேல் தாண்ட வேண்டுமென்றால் நூறு சாரணை தீர்த்தால் போதுமானது. இக்குளிகையாவும் குகைதோறும் உள்ளது.

காணப்பா விக்குளிகை முன்னேபோட்டுக்
கைமுறையாய்ப் புக்கி விட்டார் சித்தரெல்லாம்
தோணப்பா காயசித்தி பாலிற் செய்வார்
தோய்ந்த பின்பு செந்தூரஞ் சூட்டியீவார்
வேணப்பா மூலிகையைப் பின்னுண்ணென்பார்
விரைந்தப்போ சமாதியிலே மேவச் செய்வார்
ஆணப்பா பிள்ளையைப்போ னாயேனென்பா
மவ்வளவு மடையுமட்டு மடைந்துகாரே. 489

கார்க்கையிலே மாயை யுத்தி யாசானைக் கேளு
கடந்து நின்ற மாயையுட மயக்கஞ் சொல்வார்
பார்க்கையிலே மாயையொன்று தோணுந்தோணும்
பாழ்மாயை பிரதிவியில் பாரு மைந்தா
வார்க்கையிலே விரட்டாதி யஞ்சுந் தோன்றும்
வரட்டஞ் சின்னவத்தையிலே மைந்தா கேளு
ஆர்க்கையிலே பூதமைஞ்சு மதற்குள் தோன்று
மதற்குள்ளே லோகங்க ளனேகந் தானே. 490

சித்தர்கள் மிக எளிமையான இக்குளிகையை முதலில் செய்வார்கள் பிறகு பாலால் காயசித்தி செய்து கொண்டு பின்பு செந்தூரம் மற்றும் மூலிகைகளை உட்கொண்டு சமாதியில் புகுவார்கள். நீ உண்மையான ஆண் மகனாக இருந்தால் இவையாவும் அடையும்வரை பொறுமையாக குருவுக்குத் தொண்டு செய். அவ்வாறு தொண்டு செய்கையில் மாயை யுத்தியை பற்றி அவரிடம் கேள்! மாயைக்கெல்லாம் அப்பால் நிற்கும் குருவானவர் உனக்கு அதைப் பற்றி உபதேசிப்பார். அவர் கூறிய முறைப்படி நீயும் மனதை நிறுத்திப் பார்த்தால் மாயையான மூலப்பிரக்ருதியும், அதனிடமிருந்து விராட்டும் விராட்டிலிருந்து பஞ்ச பூதமும், பஞ்ச பூதத்திலிருந்து அனேக விதி உலகங்களும்.

தானென்ற லோகத்தில் தேசாபேதந்
　　தானாகுந் தேசத்திற் கிராமபேதம்
வானென்ற கிராமத்தில் கிரகங்கள் பேதம்
　　வகையான கிரகங்களிலே சரீரபேத
மூனென்ற சரீரத் திந்திரிய பேத
　　மோடுகிற விந்திரிய மொடுங்காதப்பா
நானென்ற வாணவத்திற் கூடிற்றெல்லாம்
　　நானென்ற நாமத்தால் நாசமாச்சே. 491

அனேக விதமான உலகங்களில் பலவகையான தேசங்களும் பலவகையான தேசங்களில் பலவகையான கிராமங்களும் பல வகையான கிராமங்களில் பல வகையான பேதங்கொண்ட கிரகங்களும் (வீடுகளும்) பலவகையான கிரகங்களில் பலவகையான சரீரபேதங்கள் கொண்ட பிராணிகள், மனித வர்க்கங்களும் தசையை அடிப்படையாகக் கொண்ட சரீரங்களில் இந்திரிய பேதங்களும் உனக்கே புரியும். ஓடுகிற குணம் கொண்ட இவ்விந்திரியங்கள் நான் என்ற ஆணவத்துடன் கூடி நாசமாகின்றன.

ஆமப்பா விவையெல்லாங் கண்டு நின்றே
　　யப்புறத்தே நிற்கிறதோ ரறிவுதானா
யோமப்பா நிறைந்து நின்றோம் நாமென்றெண்ண
　　வுத்தமனே வுயிரனைத்து நீயே யாச்சு
வாமப்பா விசிட்டனுக் காதார சூட்சம்
　　வாகான சூட்சத்திற் தூலதேகந்
தாமப்பா தூலமது கோடாகோடி
　　சரீரத்துக் காதாரம் விராட்டுக் கேளே. 492

ஆனால் இவை அனைத்தையும் பார்த்துக் கொண்டு மாயையை விட்டு விலகி நிற்கும் அறிவானது (சித்) நாம் எங்கும் பரவி நிற்கிறோம் என்று எண்ண ஆரம்பித்தவுடன் சகல வஸ்தும் நீதான் என்று கண்டு கொள்வாய். விசிட்டனான ஜீவனுக்கு ஆதாரம் சூட்சும தேகமாகும். இச் சூட்சும தேகத்தில் தூலம் ஒன்றி நிற்கிறது. கோடி கணக்கான தூல தேகங்களுக்கு ஆதாரம் விராட்டாகும். (விராட் என்பது ஈஸ்வரனுடைய ஸ்தூல தேகமாகும்). விராட்டானது அதிக மாயையைக் காரணமாய்க் கொண்டது. (அதிக மாயை என்பது மூலப் பிருக்குதியாகும். இதற்கே ஆத்ம மாயா சக்தி என்று பெயர்).

கேளப்பா விராட்டுக்கே யதிகமாயை
　　கெடியான வீசுரந்தா னதற்கனாதி
தாளப்பா சச்சிதானந்த மான தன்னிடத்தே
　　சகலமுமே தோன்றிற்றென்று
நீளப்பா நின்றிடத்தே தேகத்தில்லை
　　நேராக வீசுரனாய் நின்றோம் நாம்தாம்
நாளப்பா நாமன்றி வேறேயில்லை
　　நம்மை விட்டாற் சார்வில்லை யென்று காணே. 493

இம் மூலப்ருக்ருதிக்கு புருஷன் ஆதாரமாவான். இப்புருஷனே எங்கும் வ்யாபித்து நிற்கும் சச்சிதானந்த சொரூபியாவான். ஆகவே அப்படிப்பட்ட சச்சிதானந்த வஸ்துவான நம்மிடமிருந்து சகலமும் தோன்றிற்று. நாம் தேகமில்லை. எங்கும் நிறைந்த

பரம்பொருள், நாமன்றி இவ்வுலகத்தில் வேறு பொருள் இல்லை, நமக்கு நாமே அடைக்கல வஸ்துவாவோம் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

காணப்பா வறிவாலே நிராகாரந்தான்
காணாக்கா லொட்டாது கலரு மாயை
பூணப்பா சரீரத்துக் காதிபூதம்
பூதத்துக் காதாரம் விட்சே பசத்தி
தோணப்பா விதற்காதி மாயை மாயை
சொல்லுகிறேன் வித்தை வந்து சுற்றிக்கொள்ளும்
வீணப்பா விதற்கெல்லா மாதி நாம்தாம்
வேறொன்று மில்லை யென்று விரைந்துகூடே. 494

அறிவைக் கொண்டு நிராகாரத்தை அடையவிடாமல் ஆணவம் என்ற மாயை சூழ்ந்து கொள்ளும். இச்சரீரத்துக்கு ஆதி பஞ்ச பூதமாகும். இப்பூதத்திற்கு ஆதாரம் விட்சேபசக்தி. இவ்விட்சேப சக்திக்கு மூலப் ப்ருக்ருதி ஆதாரம். இம்மாயையால் அவித்தை வந்து பற்றிக் கொள்ளும். ஆக இதற்கெல்லாம் காரண கர்த்தா நாம் தான். நம்மை யன்றி வேறு ஒரு பொருளும் இல்லை என்று சீக்கிரத்தில் அறிவான புத்தியைக் கொண்டு அறிந்து கொண்டு நிராகாரத்தில் கூடி நில் (சுய ரூபத்தில் நில்)

கூட்டியந்த வாதிவஸ்து நாமே யென்று
கூத்தெல்லாஞ் சொல்லுகிறேன் குறிப்பாய்க் கேளு
ஆட்டியந்தச் சூட்சமா யிருக்குங்கால
மப்பனே தூலமிது வெய்தும் போகும்
நீட்டியந்தக் காரணமா யிருக்குங் கால
நிலையான சிருஷ்டி திதி லயங்கள் தோறு
மூட்டியந்த சூட்சந்தான் கோடா கோடி
யுற்பத்தி விசிட்டனுக்கு மில்லை காணே. 495

ஆதி வஸ்து நாமே என்றறிந்து நின்றால் சூட்சமதேகத்தை விட்டு தூலம் அகன்று போகும். தூலமானது அழியும் தன்மைக் கொண்டது. சூட்சம தேகமானது, சிருட்டியின்போது உண்டாகி லயத்தின்போது லயப்படும். காரண தேகமானது முக்காலத்திலும் இருக்கும். பிறகு இதுவும் லயப்படும். ஆனால் விசிட்டனான ஜீவனுக்கு உற்பத்தியுமில்லை அழிவுமில்லை.

இல்லாத காலத்தி னாதிசித்தி
யென் மக்காள் சீவன் முத்தி யிதுவே யாச்சு
நில்லாத விசிட்டனுக்குப் புறம்பே நின்று
நேரெல்லாம் நானென்றால் நீயே வஸ்து
வல்லாதே யுனக்குமே லாருமில்லை
யறிந்துரைக்கி லஞ்ஞான பேதமாச்சு
மல்லாதே யீசனென்றுஞ் சீவனென்று
மருவி நின்ற சுபாவமது மகிழ்ந்துபாரே. 496

இவ்வாறு என்றும் அழியாத ஜீவன் தன் சொருபத்தில் தான் அறிந்து நின்றால் ஜீவன் முக்தி ஏற்படும். சீ ர்கரோ இதை முழுமையாக அறிந்து கொண் டால் உனக்கு

மேல் ஒரு வஸ்துவுமில்லை என்று புலப்படும். ஈசன் என்றும் ஜீவன் என்றும் பல வகையாகப் பேசப்படும் வஸ்து நீயே என்று அறிந்துக் கொள்வாய். அதை அறிந்து கொண்டால் உன்னிடத்தே தோன்றியுள்ள அக்ஞானமானது உன்னிடமே லயப்படும். அப்பொழுது நீ உன் சுய ரூபத்தில் நிலைப்படுவாய். (பிரகாசிப்பாய்.)

பாரப்பா சைதன்ய செகமாய் நின்ற
பராபரந்தா னாலுவந்து பகிர்ந்து கேளு
நேரப்பா கற்பிதமா மனாதியஞ்சில்
நிலையான வதிஷ்டானம் நிலையைப் பாரு
வாரப்பா விசிட்டனைத்தான் வளைத்துக் கட்டி
மருவிநின்ற ததுவாச்சு சூட்சதேகங்
காரப்பா சூட்சமதைக் கட்டித் தள்ளிக்
கைகடந்து பண்ணிணது தூலமாமே. 497

செகமாய் நின்று பிரகாசிக்கும் சைதன்ய வஸ்துவைப் பற்றி மேலும் கூறுகிறேன் கேள்! ஆதியில் பஞ்சபூத தன் மாத்திரைகள் அதன் அதிஷ்டான மாத்திரைகளும் ஜீவனை வளைத்துக்கட்டி சூட்சும தேகமாக மாறியது. இச்சூட்சும தேகத்தைக் கட்டி தன்னுள் பின்னிக் கொண்டது இத்தூலதேகம்.

தூலமென்ற வனேகத்தைப் பரிசோதித்தாற்
றொலையாம லகன்று நின்ற பிரிதிவியாச்சு
தூலமென்ற பிரிதிவிக்குள் அடக்கமற்றுத்
தூலசென்ம மம்மம்மா சொல்லப் போகா
தூலசலத் தாலடங்காத் தூல வன்னி
தூல வன்னிக் கேயடங்காத் தூலவாயு
தூலவளிக் கடங்காத தூலவிண்தான்
சுழன்றடங்கா தேமகெர்ப்பச் சுறுக்குங்கேளே. 498

இத்தூலதேகத்தை பரிசோதித்தால் பிரிதிவியான பூமியின் கூறு என்று புலப்படும். இதை மேலும் சோதித்தால் தூல சலத்திலும், அத்தூல சலம் ஸ்தூல அக்னியிலும், ஸ்தூலவாயுவிலும், ஸ்தூல வாயு ஸ்தூல ஆகாசத்திலும் அடங்கும். இவ்வாறு அடங்காத சுழற்சி கொண்ட கர்ப்ப சூலைப்பற்றிக் கூறுகிறேன் கேள்.

சுறுக்கான வேமகெர்ப்ப முழுங்கி நின்று
சுகமான வவ்ய கிறுதன் துடிதானப்பா
மறுக்கான வவ்வியகிறு தந்தனை முழுங்கில்
மருவியதை விழுங்கிற்றுச் சுத்தமப்பா
நொறுக்கான வித்தனையும் வளைத்து மேலே
நோக்கி நின்றான் மர்யனென்ற விசிட்டனப்பா
முறுக்கான விவனாலே யடக்கமற்று
மூதண்ட விரிவான மூர்த்தி தானே. 499

ஆகாசத்தை ஏம கர்ப்பம் (இரண்ணிய கர்ப்பம்) முழுங்கிற்று. அவ்விரண்ய கர்ப்பத்தை அவ்யகிறதம் இழுத்துக் கொண்டது. அதை அவ்வியத்தம் தன்னுள் இழுத்துக் கொண்டது. அவ்வியத்தத்தை சுத்தவெளியானது தன்னுள் கிரகித்துக்

கொள்ளும் இவை அனைத்திற்கும் அப்பாற்பட்டு நிற்பவன் விசிட்டனான புருஷன் இவனிடமிருந்தே சகல தேவதைகளும் தோன்றினார்கள். (இவ்விரண்டு பாடலில் கூறப்பட்டவை யாவும் ப்ருக்ருதி லயம் அல்லது ப்ரளயம் எனப்படும்).

மூர்த்தியொன்றி லடக்கமில்லை யவர்க்குக் கீழ்தான்
மூதண்ட விபுவான மூர்த்தி மூர்த்தி
யார்த்தி கொண்டாரவர் மேலே யாற்றிக் கொள்ளு
மம்மம்மா விகபரங்கள் ரெண்டு மாகுங்
கீர்த்தி கொண்டா ரிவ்வழியே சித்தரெல்லாங்
கெடியான சமாதிக்கு மிதுவே மார்க்கம்
தூர்த்தி கொண்ட புத்தி விட்டே யின்னங்கேளு
சொல்லுகிறேன் நரசன்மச் சூட்சந்தானே. 500

இப்புருஷனுக்கு ஒடுக்க வஸ்து எதுவும்கிடையாது. சகல வஸ்துக்களும் அதற்குக் கீழ்ப்பட்டவைதான். ஆகவே அதன் மேல் பற்றுக் கொண்டால் இகபரசுகங்கள் இரண்டும் வாய்க்கும். ரிஷிகள் சித்தர்களின், சமாதி மார்க்கம் இதுவே (அதாவது பூரண வஸ்துவான புருஷனையே லட்சியமாய்க் கொண்டு செய்யும் தவமே சமாதி எனப்படும்) தூர்ப்புத்தியை நான் கூறுவதை மேலும் கேள். நர சென்மத்தைப் பற்றிய சூட்சமத்தை கூறுகிறேன்.

நரசன்ம நாற்சாதி பிராமணரைத் தொட்டு
நலமற்ற சண்டாள ரானாலேது
மரசன்மம் வேதாந்தம் பார்த்தானாகில்
மனுஷனல்ல சித்தனவன் மக்காள் கேளீர்
கரசன்மம் சித்தர்கள்தான் ரிஷியைப் பெற்ற
கலந்தரிஷி பிதிர்களைத்தான் பூசை செய்ய
அரசன்மம் தேவதைகள் திக்குப்பால
ரடிமை செய்வார் லோகபால ரழகுகேளே. 501

நரசன்மத்தில் பிராமணர் முதற்கொண்டு நான்கு சாதிகள் உள்ளது. இவற்றில் சண்டாளர் முதற்கொண்டு யாராக இருந்தாலும் சரி வேதாந்த ஞானத்தை முறையாக பார்ப்பவன் சித்தனாவான். சித்தர்கள் ரிஷிகளை வணங்குவார்கள். ரிஷிகள் பிதிர்கணங்களை பூசை செய்வார்கள் பித்ருக்கள் லோக பாலர்களையும், திக்கு பாலர்களையும் பூசை செய்வார்கள்.

கேளப்பா விந்திராதி பாலாள்கூடக்
கெடியான பூதமஞ்சும் பூசிப்பார்கள்
வாளப்பா பூதமஞ்சும் யோகிகளைப் போற்றும்
மகத்தான யோகிகளோ குமாரர்களைப் போற்றும்
தாளப்பா குமாரர்களும் சகலதேவாள்
தனிச்சித்தர் ரிஷிமுதலாய்ச் சகலபேரு
மாளப்பா வெனப் பணிந்து பூசைசெய்வா
ராதியென்ற சிவசத்தி யிரண்டைத் தானே. 502

லோக பாலர்களான இந்திராதிகள் பஞ்ச பூதத்தை பூசை செய்வார்கள். இப்பஞ்ச பூதங்கள் யோகிகளைப் போற்றும். யோகிகள் சனத்குமாராதிகளை வணங்குவார்கள்.

இச்சனத் குமாராதிகள், சகல தேவர்கள். சித்தர்கள், ரிஷிகள், முனிவர்கள் போன்ற யாவரும் இவ்வுலகத்து ஆதி வஸ்துவென்று சிவசக்தி இரண்டு பேரையும் போற்றி வணங்குவார்கள்.

இரண்டான சிவசத்தி பூசை பண்ணி
யிருந்ததப்பா நிராகாரப் போதம் போதம்
அரண்டான விவ்வழியே யறிந்தோன் ஞானி
யவன் வாதியவன்வாதி யதீதமுத்தன்
விரண்டான வெனைவிட்டே யதிகமில்லை
மேலொன்றுஞ் சத்தில்லை கீழேயல்லால்
பரண்டான பழங்கதைக ளெல்லாம் போகும்
பராபரத்தை மனமூன்றிப் பார்த்திடீரே. 503

இரண்டாக நிற்கின்ற சிவசக்தியை பூசைசெய்து பார்த்தால் நிராகாரப் போதம் வாய்க்கும். அப்படிப்பட்ட நிராகார போதத்தை அடைந்தவன் எவனோ அவனே ஞானி! அவனே வாதி! அவனே முக்தன்! இரண்டாக நிற்கின்ற சிவசக்தியான என்னை விட்டால் வேறு ஒரு வஸ்துவும் எனக்கு மேல் கிடையாது. எல்லா வஸ்துக்களும் எனக்குக் கீழ்தான் என்று மனதாரக் கூறிக் கொண்டு பராபர வஸ்துவில் மனதை நிறுத்த வேண்டும்.

பார்த்திடீர் முழுகினவன் மேலே தண்ணீர்
பற்றினதும் பற்றானதும் காணாப் போலக்
கோர்த்திடீர் பிரபஞ்சத்தின் வெளியு முள்ளுங்
கொண்டு நின்ற பூரணனுங் கூறொன்றில்லை
யோர்த்திடீர் நம்மிடத்தே யடங்கி நின்ற
வியல்பான திரியவத்தை யியல்பாய்க் காணும்
பார்த்திடீர் பேதமுற்றுப் பிரபஞ்சத்தோடு
பற்றற்ற வாகாசம் போலே நில்லே. 504

நீரில் மூழ்கியவன் மீது தண்ணீர் எவ்வாறு பற்றினதும், பற்றாததும் காண முடியாததுபோல் இப்பிரபஞ்சத்தினுள்ளும் வெளியும் காணும் வஸ்துக்கள் யாவும் பூரணத்திடமிருந்து தோன்றினாலும், பூரணம் அதில் பற்றுவதில்லை. இவ்வாறு தத்துவத்தை அறிந்து நோக்கினால் நம்மிடத்தில் அடங்கி நிற்கும் மூன்று விதமான அவஸ்தைகள் வெளிப்படையாய்க் காணும். அவ்வவஸ்தைகளைப் போக்கி பேதத்தை அறுத்து பிரபஞ்சத்தோடு ஆகாசம் போல் பற்றற்று நிற்க வேண்டும்.

ஆகாசத் தொடக்கத்துப் போலேயப்பா
வாதிவஸ்து நிரஞ்சனந்தான் அகண்டசோதி
மாகாச மூவகையாஞ் சரீரத்துக்கு
மக்களே காரணம் நாம் மற்றொன்றில்லை
பாகாகச் சரீரத்திற் கர்ம பூதம்
பதமான காரணத்தைப் பக்ரக் கேளு
வாகாகச் சூட்சமென்ற பூதம் பூதம்
மதுவுமதி பவுதிகந்தான் மனத்தாற் காணே. 505

இவ்வாகாயத்துக்கு காரணம் ஆதி வஸ்துவான அகண்ட சோதியேயாகும். அதே போல் மூவகையான சரீரத்துக்கு ஆதிகாரணம் நம்மைத் தவிர வேறொன்றுமில்லை. நாம் செய்த கர்மத்தாலும் சூட்சுமபூதத்தாலும், பௌதிக பூதத்தாலும் இத்தேகம் தோன்றுகின்றது. இதுவே அதி தெய்வ அதி பூத அதிபௌதிக என்று மூன்று வகையாய் கூறப்படுகிறது.

பவுதிகத்திற் காரணந்தான் மாயாசிட்டன்
பருவமுட னபித்த சிட்ட னிவர்களுக்கும்
மவுதிகமாம் சைதன்யம் நாலேயல்லால்
மற்றொன்றுங் காரணந்தான் மக்காளில்லை
கவுதியாம் காரணத்தை விட்டு நீங்கள்
காரியமாம் பிரபஞ்சத்திற் கவர வேண்டாம்
அவுதிகமாம் பிரபஞ்சத்தின் றூயநாம்தாம்
ஆதிமுத லந்தம் வரை நாமென்றெண்ணே. 506

பவுதிகத்திற்கு காரணம் மாயாசிட்டனாவான்! இம்மாயாசிட்டனுக்கும், அபித்த சிட்டனுக்கும் நான்கு வகையான சைதன்யத்தை தவிர மற்றொரு காரணம் இல்லை. அனைத்திற்கும் காரணமான வஸ்துவை விட்டு காரிய ரூபமான இப்பிரபஞ்சத்தில் மனதை செலுத்தக் கூடாது. பிரபஞ்ச வஸ்து முதல் அதி வஸ்துவரை நாம் தான் நம்மைத் தவிர வேறொன்றும் இவ்வுலகில் இல்லை என்ற பாவனையால் பற்றை ஒழிக்க வேண்டும்.

எண்ணிடப்பா வாதித்தன் சந்நிதியைப் போலே
யியல்பான காரணந்தான் லோகர்க் கெல்லாம்
கண்ணிடப்பா விந்திரிய வியாபாரமெல்லாங்
கலந்துநிற்குஞ் சைதன்னிய சந்நிதியினுள்ளே
தண்ணிடப்பா விரிந்தாலுஞ் சாட்சி நான்றான்
தாம்பிறவி விர்த்திகளும் பண்ணார் பண்ணார்
ஒண்ணிடப்பா பிரவர்த்திகளும் நிவர்த்திகளும் விட்டே
யுயர நின்ற பானுவைப்போ லொன்றாய்ப் பாரே. 507

சூரியனானது எவ்வாறு லோகத்தோர்க்கு ஒளியாகி நின்ற போதிலும் எப்படி அதன் மேல் பற்று கொள்வதில்லையோ, அதுபோல இந்திரிய வியலகாரமெல்லாம் என்னுடைய சைதன்னிய சத்தியினுள் கலந்து நிற்கிறது. அது பறந்து விரிவதை சாட்சியாக பார்ப்பவன் நான். அது என்னை ஒருக் காலும் பற்றுவதில்லை. என்ற பாவனையால் பிரவர்த்திகளையும் நிவர்த்திகளையும் விட்டு சூரியனைப் போல் அனைத்தையும் சம நோக்காகப் பார்க்க வேண்டும்.

ஒன்றாக நின்ற ரவி தோற்றுவித்தே
யுறுகின்ற சாட்சியைப் போல் நாமும்சாட்சி
கன்றாக விந்திரிய மனத்தோடு சேர்ந்து
கலந்தலையு மலையாம லிருக்க நன்று
வின்றாகச் சரீரங்க ளனேகங் கோடி
விரிந்தோடித் திரிகையிலு மசையாப் பூதம்
பன்றாக வசைந்துருண்டு மசையாப் போலப்
பரிந்தோட்டம் போல்வானில் மின்னாள் காணே. 508

சூரியனானது எவ்வாறு அனைத்துப் பொருள்களையும் தோற்றுவித்து. தோற்றுவித்த அப்பொருள்களை விட்டு விலகி நின்று அனைத்திற்கும் சாட்சியாய் விளங்குகிறதோ அதேபோல் நீயும் இந்திரியங்களை மனதில் அடக்கி அதை அலையாமல் நிறுத்தி சாட்சி பாவனையில் அனைத்தையும் விட்டு விலகி நிற்க வேண்டும். இந்த சரீரமானது நடந்தாலும் ஓடினாலும் உருண்டாலும் பிரண்டாலும் சரீரத்தைச் சேர்ந்த பூதங்கள் எவ்வாறு அசையாமல் நிற்கின்றனவோ அதே போல் நீயும் பூரண வஸ்துவான உன்பாவனையை விட்டு விலகக் கூடாது.

காணப்பா சூரியனுந் தீயுங்கூடிக்
கலந்தலைவோ வில்லையது மலை போற் காணும்
வாணப்பா வீசுவரன் வெகுபேர் கேளு
வழங்கியதோர் சஞ்சார பேதத்தென்பார்
தோணப்பா வகிலமென்ற சரீரமாச்சு
சொல்வதென்ன நானென்றே யபிமானித்தால்
வீணப்பா விதுவெல்லாஞ் சைதன்யத்தில்
வேண்டியதோர் குமாரர்களும் விளங்கினாரே. 509

சூரியனானது அக்னியுடன் கூடி வானில் சஞ்சரிப்பதை போல் தெரிந்தபோதிலும் உண்மையில் அது அசையாமல் மலைபோல் நிற்பதைப்போல பரிவெளியில் இருக்கும் ஈஸ்வரனும், தனக்கு இவ்வகில உலகங்களும் சரீரமாக இருந்தபோதிலும் நான்! நீ! என்ற அபிமானத்தால் ஈஸ்வரபாவனை வீணாக இடமளிப்பதில்லை. இவ்வாறே சனத்குமாராதிகள் நான் என்ற அபிமானத்தை விட்டு சுத்த சைதன்ய மாய் திகழ்கிறார்கள்.

விளங்கியதோ ரித்தனையு மற்றுத்தானாய்
வேறெங்கு மசையாமற் சாட்சிதானாய்
முளங்கியதோர் சைதன்ய ரூபமாக
முதலாகி நின்றதொரு தானு நாம்தாம்
புளங்கியதோர் கடத்தினினீர் பூரித்தாப் போற்
புகழான பிராணமயக் கோசமாச்சு
தளங்கியதோர் பிராணமயக் கோசத்தாலே
தனிப்பூர மன்னமயக் கோசமாச்சே. 510

சகலவிதமான பொருட்களின் மேல் உள்ள அபிமானம் ஒழிந்தால், மனமானதும் அசையாமல் நிற்கும். இந்நிலையில் நீ சுத்தசைதந்ய ரூபமாய் இருப்பதை உணர்வாய். கடத்தில் (பானையில்) நீர் நிரப்பியதைப் போல் ஆத்மாவை சுற்றி பிராணமய கோசம் நிற்கிறது. இப்பிராணமய கோசத்தால் அன்னமய கோசம் தாங்கப்பட்டு நிற்கிறது.

அன்னமயக் கோசத்தால் மனோமயமாங் கோச
மகம்பூரித்தா விருக்குமப்பா கேளு
மன்னமயக் கோசத்தாற் பூரிக்கப்பட்டு
மகத்தான பிராணமயக் கோசமாச்சு
மன்னமயக் கோசத்தாற் பூரிக்கப்பட்டு
மருவிநின்ற விஞ்ஞான மயமுமாச்சு
தன்னமய விஞ்ஞான மயத்தினாலே
சார்ந்தப்பா மனோமயமாங் கோசந்தானே. 511

கோசமென்ற மனோமயத்தா லானந்தமாச்சு
கொள்ளுவதோ ரானந்தப் பூரிப்பாலே
வாசமென்ற விஞ்ஞான கோசமாச்சு
மருவியது சிதாபாசன் பூரிப்பாலே
நேசமென்ற விந்தவழிப் பஞ்ச கோசம்
நேராகப் பூரித்த தஞ்சு பூதம்
பாசமென்ற வைம்பூதத் த்ராலே கேளு
படர்ந்ததப்பா பிரபஞ்சங்கள் பாருபாரே. 512

அன்னமயக் கோசத்தால் மனோன் மயக் கோசம் ஒட்டிக்கொண்டு நிற்கிறது அன்னமயக் கோசத்தால் இழுக்கப்பட்டு பிராணமயக் கோசம் உண்டாயிற்று அன்னமயக் கோசத்தால் இழுக்கப்பட்டு விஞ்ஞான மய கோசம் உண்டாயிற்று. விஞ்ஞான மய கோசத்தால் மனோன்மயமும், மனோன் மயக் கோசத்தால் ஆனந்தமய கோசமும், ஆனந்தமயப் பூரிப்பால் மனோன் மயமும் ஒன்றை ஒன்று கவர்ந்து நிற்கிறது. இவ்வனைத்து வகை கோசமும் நேசம், பாசம் என்ற இரண்டு காரணத்தால் உண்டாயிற்று இப்பஞ்ச கோசங்களில் பஞ்ச பூதங்கள் நிறைந்து நிற்கின்றன. இப்பஞ்சபூதத்தால் உலகிமெல்லாம் விரிந்து நின்றது.

பாரப்பா பிரபஞ்சங்க ளனேகந்தானாய்
பரவிநின்றார் மதியாகி விசிட்டர் தானும்
நேரப்பா வித்தனைக்கும் நாமே மூலம்
நேராக நம்மிடத்தே பூரிப்பெல்லாம்
வேரப்பா கோச மங்குந் திரைபோலாச்சு
வெளிக்குண்டோ திரையென்றாலிது தான் மாயை
யோரப்பா விதுகடந்தே யறிவாய் நின்றோ
முத்தமனே நாங்கண்டோ முரைத்திடாயே. 513

விரிந்த இவ்வுலகத்தில் ஆதிபுருஷன் தானே எங்கும் பரவி நின்றார். பரவி நின்றது மட்டுமல்லாமல் பின்வருமாறு சிந்திக்கலானார் நம்மிடத்திலல்லவா இப் பூதங்களும் உலகங்களும் உண்டாயிற்று என சிந்திக்கையில் இவ்வைந்து வகை கோசமும் திரைபோல் ஞானத்தை மறைத்து நின்றது இதற்கே மாயை என்று பெயர். இம்மாயையைக் கடந்து அப்பால் அறிவாய் நிற்பதும் நாம் தான் என்று சிந்திக்கத் தொடங்கியவுடன் மாயை விலகி ஞானம் உண்டாகும்.

உறைந்திட்ட சரீரத்தி லிந்திரியமோடி
யோடுறதை விரிவாக்குங் கரணமப்பா
அறைந்திட்ட கரணமொன்று கரணந்தாண்டி
லனேகமாய் வியாபிக்கும் பஞ்சபூத
மறைந்திட்ட பூதத்தைத் தூண்டி நிற்கு
மகத்தான விசிட்டனப்பா காலபேதம்
நிறைந்திட்ட தேசாதி பேதமாக
நின்றதப்பா விதைக்கண்டு நிலைத்திடாயே. 514

மேலும் சரீரத்திலுள்ள இந்திரியங்கள் அனைத்தும் அதனுடைய புறக்கரணங்களின் வழியாக விரிந்தும் திரிந்தும் சஞ்சலப்படுகையில் பஞ்சபூதத்திற்கு ஆதிகாரணமாய்

நிற்கும் (விசிட்டனிடம்) புருஷனிடம் காலம், தேசம், என்ற பாகுபாடு தோன்றிற்று. ஆகவே இதை அறிந்து ஞானத்தில் நிலைத்து நில்!

நிலைத்திட்ட விதற்கெல்லாஞ் சாட்சியாக
நின்றிருந்தோ மென்றுசொல்லி யறிவினாலே
தொலைத்திட்ட வுன்னகத்தில் சுத்தவின்பம்
சுகமாக வொன்றோடே யொன்றுபற்றி
யலைத்திட்ட சத்தியெல்லாம் குறைந்து நின்ற
வப்பனே யுதாரதன்மை யறிவிப்பேனான்
மலைத்திட்ட லோகங்கள சுரர்தேவர்
மனிதருடன் செந்துவுமாய் மருவிப்போச்சே. 515

எந்த வகை ஞானத்தில் நிலைக்க வேண்டுமென்றால் சொல்கிறேன் கேள்! பஞ்ச பூதத்திற்கும், கரணங்களுக்கும் இந்திரியங்களுக்கும் நாமே சாட்சியாய் நிற்கிறோம் என்று அறிவால் சிந்தித்து ஆனந்த மயமாய் நிற்க வேண்டும். ஞான மயமாய் நின்ற உன்னடத்தில் எவ்வாறு பேத முண்டாயிற்று என கூறுகிறேன் கேள். உன்னிடமிருந்து உண்டான (பூதங்களும், இந்திரியங்களும்) ஒன்றோடு ஒன்று மாயையுடன் சேர்ந்து லோகங்கள், அசுரர், தேவர், மனிதர், ஜீவஜெந்து போன்றவைகளாய் மருவி பேதம் உண்டாயிற்று.

மருவியது பூதங்க ளாகிநின்று
மகிமையுற்ற மத்திமமுந் தவிர்ந்தாய் தந்தாய்
தருவியது தாரதம்ய மாகச்சென்று
தனிப்பிரமன் றப்பவரை சரீரமாக
வுருவிநின்ற பரமாத்தாள் கர்மியோடு
முத்தமனே யுபாசகர்கள் யோகிஞானி
கருவியென்று சீவசெந்து பேதமெல்லாங்
கலந்துநின்ற வீஸ்வரன்றா னந்தமாச்சே. 516

உன்னிடமிருந்து உண்டான தாரதம்யத்தால் (அதாவது ஏற்றத் தாழ்வுகளால்) பூசி முதல் பிரம்மா வரை அனைத்திடமும் பேதம்உண்டாயிற்று. மேலும் பரமாத்மாவானவர் மாயையுடன் கூடி நிற்கும் பொழுது உபாசகன், கர்மி, ஞானி, சீவ செந்து போன்ற வகைகளில் பேதங்கள் உண்டாயிற்று இப்பேதங்கள் நீங்கினால் ஆனந்த மயமான ஈஸ்வரனே எல்லாம் என்று விளங்கும்.

ஆனந்தமாய்ப் பரந்தெங்கும் வஸ்துவாச்சு
அப்பனே தாரதம்மியம் சத்துமாச்சு
மானந்த மாயென்று மிருக்கும்போது
மக்களே சமனாக மருவினோம்நாம்
கானந்தமாய்ச் சூட்சம் விசிட்டனோடு
கைகடந்தே யதிட்டான தூலத்துக்கு
பீனந்த மரந்திட்டான் பூதத்துக்கு
மிதற்கதிக மாயமென்ற விசிட்டந்தானே. 517

எங்கும் பரவி நின்ற பிரம்மத்திடம் உண்டான மாயையால் நாம் அனைவரும் வெவ்வேறு வஸ்துவாய் பரவி நின்றோம் இவையாவும் விலகினால் அனைவரும் சமம்

என்பது விளங்கும் (எல்லாம் ஒன்றே என்பது விளங்கும்) மேலும் சூக்கும சரீரம் ஜீவனுடன் கூடி தூல சரீரத்திற்கு ஆதியாய் நிற்கிறது. மேலும் இதே ஜீவனே பூதங்களைந்திற்கும் ஆதாரமாய் நிற்கிறது.

(ஜீவன் = பிரம்மம் + மாயை)

தானென்ற வித்தனையுங் கேளுமைந்தா
தனிக்கிளிஞ்சில் வெள்ளியென்ற கதைபோலாச்சு
தேனென்ற வாய்ப்பேச்சே யெல்லாமப்பா
செகமெல்லாம் நாம்நிறைந்தோம் சின்னமாக
வானென்ற விசிட்டான மெல்லாந் தள்ளி
வந்ததென்றே நின்றவன்றான் மகத்தாம் ஞானி
கோனென்ற வதிட்டானந் தம்மைவிட்ட
குலாவில்லை யென்றுசொல்லிக் குறிப்பாய்க்காணே. 518

கிளிஞ்சலை வெள்ளி என்று நினைத்து ஏமாற்றம் கொள்வதுபோல் பிரம்ம மாயையால் இவை அனைத்தும் பேதங்காட்டி ஏமாற்றுகிறது. இப்பிரம்ம ஞானத்தை வாய்ப்பேச்சால் அடைய முடியாது. உண்மையான சமாதியோகத்தில் நின்று உலகமனைத்தையும் தன் சொருபமாய்ப் பார்ப்பவனே ஞானி. நான் எதனுடனும் சேராது தனித்து நிற்பவன் என்றும் சிந்திக்க வேண்டும்.

காணப்பா விக்கால முண்டோவென்று
கலந்தெந்தத் தேசத்தே யுண்டோவென்று
பூணப்பா வெத்தேசமில்லை யென்றும்
புகழான வஸ்துவிலே யுண்டோ வென்றும்
தோணப்பா விம்மூன்றாற் கண்டிப்பற்றுச்
சுத்தமாய் நின்றதுநா மென்றே கொள்ளு
மாணப்பா லோகத்தில் வழக்கங்கேளு
மாறாறு சமயத்தி னறிவைக் கேளே. 519

மேற்கூறியவாறு சிந்தித்துக் கொண்டு சமாதியில் நின்றால், தேசம், (இடம்) காலம், வஸ்து, (பொருள்) போன்ற பேதங்கள் விலகி எல்லாம் நாமே என்று விளங்கும். இனி ஆறு வகையான சமயத்தின் அறிவைக் கூறுகிறேன் கேள்.

அறிவாக நிற்குமொன்றாய்ச் சமயந்தோறு
மாகாமியத் தாலே கண்டிப்பாச்சு
பொறிவாகச் சித்தாந்த சாரமெல்லாம்
புகழ்ந்த பிரமாகமத்தாற் கண்டிப்பாச்சு
மறிவாகப் பிரமனிட சித்தாந்தத்தை
வைஷ்ணவத்தாற் கண்டிக்கப் படுங்களப்பா
நெறிவாக விட்டுவிட வாகமங்க ளெல்லாம்
நேரான ருத்திரனாற் கண்டிப்பாமே. 520

காமியத்தால் சமயங்கள் அழிந்தன அழிந்த இந்த சமயங்களை சிந்தாந்த சாரம் உள்ளடங்கிய ஆகமங்கள் உயிர் கொடுத்து எழுப்பின. உயிர் கொடுத்து எழுப்பின ஆகமங்கள் ஒன்றை மற்றொன்று கண்டித்தன. பிரம்ம சித்தாந்தம் வைஷ்ணவத்தையும், வைஷ்ணவத்தை ருத்திர ஆகமமும் கண்டித்தது.

கண்டிதமா யிந்தவகை யாகமங்க ளெல்லாங்
கரையற்ற பூரணத்தாற் கண்டிப்பாகும்
பண்டிதமாம் பூரணமும் பார்த்தாலே தள்ளும்
பரமான சித்தாந்த நீதிதோன்று
மண்டிதமாம் நீதியென்ற வேதத்தால்வந்த
மகாகர்ம காண்டத்தா லழிக்கும்பாரு
வுண்டிதமாங் கன்மமெல்லா முபநிஷத்துள்ளே
யுபசரணையா மகண்டறிவி லொதுக்கும் பாரே. 521

இவ்வனைத்து வகையான ஆகமங்களையும் பூரணப் பொருள் (பரப்பிரம்மம்) கண்டித்தது. ஆகவே பூரணப் பொருளை அறிந்து நின்றால் சித்தாந்தமும் வேதாந்தமும் இன்னதென்று தோன்றும் இஞ்ஞானமானது வேதத்தால் உண்டான கர்ம மார்க்கத்தை அடியோடு அழித்துவிடும். வேதத்திலுள்ள உபநிஷத்துகள் அனைத்தையும் பிரமம் இல்லை என்று கூறி வொதுக்கித்துத் தள்ளும்.

ஒதுக்கிநின்ற தித்தனையு மைந்தாகேளு
வோடுசித்த வேதாந்தம் ரெண்டால்தள்ளும்
மதிக்கநின்ற வேதாந்த மறியமாட்டார்
வாதிவஸ்து நாமானோ மார்தானீடு
பதிக்கவென்னைக் கண்டிக்க வாராலாகும்
பதியான வேதாந்த முடிவுந்தாண்டி
நிதிக்குள்ளே ஞானநெறியான வென்னை
நேரென்க்கே வில்லையென்று மறிந்திடீரே. 522

இத்தனை வகைகளையும் சித்தாந்தத்தாலும் வேதாந்தத்தாலும் சோதித்துத் தள்ளிவிட்டு பின்வருமாறு சிந்திக்க வேண்டும். அதாவது நமக்கு யாரும் சமமில்லை நம்மை கண்டிக்கவும் யாரால் முடியும். நாம் வேதாந்த முடிவையெல்லாம் கடந்து ஞான சொரூபமாய் நிற்கிறோம். ஆகையால் எனக்கு நேரான வஸ்து இவ்வுலகில் இல்லை என்ற சிந்திக்க வேண்டும்.

அறிந்திடிரோ வேளைக்கு ஒருவன் சென்று
ஆகாகா பரிச்சின்ன வேரினாலே
மறிந்திட ரவத்தையென்றேன் விசிட்டனப்பா
மகத்தான பரிசின்னமொன்றுக் கொன்று
பிறிந்திட ரிவர்களப்பா யிருந்தாற் போற்றோன்றும்
பேரான சூட்சமாஞ் சரீரந்தன்னில்
நெறிந்திடீர் பரிச்சின்ன மிதுகுறித்து
நேரான அபரியென்ற சின்னமாச்சே. 523

மேலும் கேள்! பரிச்சின்னம் என்ற வேரால் அவத்தை என்ற விசிட்டன் கூடி நிற்பதைப் போல் தோன்றும். ஆனால் உண்மையில் இது பொய்த் தோற்றமாகும். மாயையானது விசிட்டனுடன் கூடி பரிச்சின்னன் என்ற பெயருடன் இச்சரீரத்தில் புகுந்துறைகிறார்.

சின்னமது வாறாகப் பட்சித் தொன்றிற்
சிறப்பான தூலமென்ற தேகமாச்சு
பன்னமென்ன விவற்றைத்தான் குறித்தேயப்பா
பரிச்சின்னமென்று பூதத்தைக் குறித்து

அன்ன பரிச்சின்னமென்று தோன்றிநின்ற
வாதிமகா விசிட்டனுக்குச் சாட்சியாக
வன்னமென்று தமைக்குறித்துப் பரிச்சின்னமானார்
வளமாக நம்மைவிட்ட தில்லை காணே. 524

பலவகையான பூதங்களும், இந்திரியங்களும் ஒன்றோடு ஒன்று கூடி தூலம் என்ற தேகம் உண்டாயிற்று இத்தூலதேகத்திலுள்ள இந்திரியங்களுக்கும், பூதங்களுக்கும் ஆதி காரணமாய் நிற்பது விசிட்டனாகும். இவ்விசிட்டனுக்கு (ஜீவனுக்கு) சாஷியாய் நிற்பது பரிசின்னன் என்ற பரமாத்மா!

இல்லையப்பா நம்மைவிட்ட அபரிச்சின்ன
மியல்பான விசிட்டனையும் பரிச்சின்னம்
மல்லையப்பா சூட்சுமமாந் தேகந்தன்னை
யபகரித்து நின்றதப்பா தூலதேகம்
மல்லையப்பா விப்படியாஞ் சரீரந் தன்னை
மகத்தான பூதங்களொன்றே யொன்று
தொல்லையப்பா வபரிச்ச விராட்டேயாதி
தோன்றுகிற ப்ரபஞ்சமெல்லா மபரிச்சின்னே. 525

இப்பரிச்சின்னன் என்ற பரமாத்மா! ஜீவன் என்ற விஷிட்டனையும், விஷிட்டன் சூக்கும தேகத்தையும், சூக்குமம் தூலதேகத்தையும் பற்றி நிற்கிறது. இப்படியே சரீரங்களும் பூதங்களும் ஒன்றை ஒன்று சார்ந்து நிற்கிறது. இவ்வனைத்து சரீரத்திற்கும் ஆதியாக நிற்பது பரிச்சின்னனான விராட்டே! மேலும் பிரபஞ்சமும் அப்பரிச்சின்னன் சொரூபமே!

சின்னமென்ற மாயாதி விசிட்டராலுஞ்
சேர்ந்து நம்மை யபகரிக்கப் போகாதப்பா
பன்னென்று விவர்களை நாம் பரிகரித்துப்
பரிவாகச் சாட்சியென நின்றோம் நின்றோம்
மன்னென்ற அனாவினுதனா யிருந்த நம்மை
மருவியதோர் மூன்றவத்தைக் குள்ளே நாம்தாம்
கன்னென்ற பிரபஞ்சங்க ளெல்லாம் சாட்சி
கைகடந்து நின்றதொரு சாட்சி நானே. 526

இப்படி அனைத்திற்கும் ஆதியாக நிற்கும் பரிச்சின்னனான நாம் மாயையாலும், அவத்தையாலும் பாதிக்கப்படாமல் அனைத்தையும் சாட்சியாய் பார்த்துக் கொண்டு நிற்கிறோம். மேலும் மூன்று வகையான அவஸ்தைகளாகவும் பிரபஞ்சமாகவும் பரவி நின்று அதற்கு சாட்சியாகவும் நிற்கிறோம்.

சாட்சியெங்கும் நானாகிச் சீவனாகிச்
சகல சராசரமாகித் தாண்டி நின்று
சாட்சியொன்றி னுள்ளாகிப் புறம்புமாகிச்
சங்கற்ப விகற்பமுமாய்த் தாண்டி நின்று
சாட்சியென்ற காரணமா யறிவுமாகிச்
சகலமெல்லாந் தானாகித் தனியொன்றாகிச்
சாட்சியென்ற முக்காலத் திரையருமாகிச்
சங்கையற்ற விண்போலத் தானானோமே. 527

சாட்சி பாவமாய் நிற்கும் நாமே ஜீவனாகவும், பிரபஞ்சமாகவும், உள்ளாகவும், வெளியாகவும் நிற்கிறோம். மேலும் இவ்வாறு நின்றுகொண்டு சங்கற்பம், விகற்பம் போன்றவைகளை கடந்து ஆதிகாரணமாக ஞானமாய் நிற்கிறோம். மேலும் முக்கால மாயையாகவும், முக்காலமாகவும் ஆகாசம் போல் எங்கும் பரவி நிற்கிறோம்.

ஐந்து வகை சமாதியின் வகை-தத்துவல்ய சமாதி

தானான சமாதியஞ்சு குணத்தைக் கேளு
தத்துவலய சமாதியொன்று சாற்றுவேன்யான்
கானான தத்துவங்காண் முப்பத்தாறுங்
கலந்தூத பௌதிகத்தைச் சூட்சுமத் திலடக்கி
நானான சூட்சமத்தை யழித்து நன்றாய்
நம்பெரிய வரசனைப்போ லாக்கின் மைந்தா
வானான காரணமாஞ் சரீரத்தில டக்கி
மருவியதைப் பிரகிருதி யிலே மருவப் பண்ணே. 528

பண்ணினதோர் புருடனையுந் திட்டான்பான
பரவிநின்ற சைதன்ய மாகக் கண்டு
கண்ணினதோர் கர்த்தனிக ரழித் தொன்றேயாகிக்
காற்றசையா வறையினின்ற விளக்குப் போல
ஒண்ணினதோ ரலைச்சலற் றேயகண்டந்தானா
யொன்றாலு மலைச்சலற்றுத் தானே தானாய்
பண்ணினதோர் கரைதனித்து ஒன்றே யாகிப்
பந்தமற்றது தத்துவலய சமாதி யாச்சே. 529

சமாதியில் ஐந்து வகை உண்டு. அவற்றில் முதல் வகையான தத்துவல்ய சமாதியைப் பற்றிக் கூறுகிறேன் கேள். முப்பத்தாறு வகையான தத்துவங்களையும் கொண்ட இப்பௌதிக தேகத்தை சூட்சுமத்தில் அடக்கி சூட்சமத்தை அழித்து அதைக் காரணத்தில் அடக்கி-காரணத்தை மூலப்பிரகிருதியில் லயப்படுத்தி-அப்பிரகிருதியை புருஷனில் லயப்படுத்தி-புருஷனை சுத்த சைதந்யமாகவும் எங்கும் வியாபித்தவனாகவும் தியானித்து காற்றில்லா இடத்தில் வைத்த விளக்கொளியைப் போல் சலனமற்றுத் தான் தானாக நிற்பதே தத்துவல்ய சமாதியாகும்.

சவிகற்பச்சமாதி

ஆச்சப்பா சவிகற்பச் சமாதி கேளு
அடுத்தாக்கால் ரெண்டுவகை யதிலேயுண்டு
வாச்சப்பா சத்தானு வித்தையொன்று
வரிசையுடன் திரையவித்தைச் சமாதியொன்று
போச்சப்பா சத்தானு வித்தை மார்க்கம்
பெரியதொரு தத்துவலய சமாதிக்குள்ளே
ஒச்சப்பா சத்தங்கள் பட்சியோசை
வுன்மனத்தே படுகிறது உயிர்ப்புக்கேளே. 530

சவிகற்பச் சமாதியின் வகையைப் பற்றி கூறுகிறேன் கேள்! இதில் இரண்டு வகையுண்டு ஒன்று சத்தானு வித்தை மற்றொன்று திரையவித்தை. சத்தானுவித்தை

என்பது முன்கூறிய தத்துவலய சமாதியில் தன்னள்ளே பட்சியோசை எழுமபுவதைக் கண்டு அதில் லயப்படுவதே சத்தானுவித்தை எனப்படும்.

கேளப்பா சத்தானு வித்தையென்றுங்
கெடியான சவிகற்பச் சமாதியென்றும்
வாளப்பா திரிசானு வித்தைமார்க்கம்
வகைசொல்வே னன்றாகக் கேளுமக்காள்
நாளப்பா நின்றநிலை சமாதிக்குள்ளே
நலமாகத் தன்னையனு சந்தானித்துத்
தாளப்பா சஞ்சரிக்கில் திரிசானு வித்தை
தனத்த சவிகற்பமென்று மிதற்குப் பேரே. 531

தத்துவலய சமாதியில் தன்னைத்தானே அநுசந்தானம் செய்து நிற்றலே திரைய வித்தை எனப்படும்.

நிருவிகற்ப சமாதி

பேரான நிருவிகற்ப சமாதிகேளு
பெருத்து நின்ற தத்துவலய சமாதிமுத்தி
தாரான சத்தானு வித்தை முத்தி
தனைமறந்து தூக்கமுற்ற மயக்கம்போல
வாரான சத்தமொன்றுங் காதிற்கேட்கா
மருவியிந்த பூரணத்தே சித்தமப்பா
நேரான சைதன்ய மாகப்போனால்
நிருவிகற்ப சமாதியென்ற நேர்மையாச்சே. 532

நிருவிகற்ப சமாதி முறையைக் கூறுகிறேன் கேள்! தத்துவலய சமாதியும் சத்தானு சமாதியும் முழுமையாக சித்தியாகிவிட்டால் தன்னை மறந்த தூக்கத்தைப்போல் மயக்கம் ஏற்படும் இந்நிலையில் எந்த ஒரு சத்தமும் கேட்காது. சித்தமானது பூரணத்துடன் சேர்ந்து சுத்தசைதந்ய நிலையை அடைந்துவிடும். இந்நிலைக்கே நிருவிகற்ப சமாதி என்று பெயர்.

ஆச்சப்பா சமாதிவிட்டுச் சஞ்சரிக்கி
லடவாகச் சமாதியிலே யிருக்கும்போது
காச்சப்பா காலமென்ற திரயத்தினுள்ளுங்
கண்டிருந்த பிரபஞ்சமெல்லாம் பொய் யென்றெண்ணு
வீச்சப்பா விவகாரத் தாலே தோன்றி
விரிந்துநின்ற பிரபஞ்சத்தின் பாசந்தள்ளி
ஒச்சப்பா நிருவிகற்ப மாகி நின்றா
லுத்தமனே நிருவிகற்ப மிதுவே யாச்சே. 533

சமாதியை விட்டு எழுந்த பிறகும், சமாதியிலிருக்கும் பொழுதும் காலத்திற்குட்பட்டு இயங்கும் இப்பிரபஞ்சமெல்லாம் பொய் என்று மனதிற் கொண்டும் இவையாவும் மாயா விகாரத்தால் தோன்றியது என எண்ணி இவற்றின் மேலுள்ள பாசத்தை நீக்கி எதையும் நினைக்காமல் இருத்தலே முழுமையான நிருவிகற்ப சமாதியாகும்.

இதுவென்ற தத்துவலய சமாதிமுத்தி
யியல்பா நிருவிகற்ப மாகும்போது
அதுவென்ற நிருவிகற்ப சமாதிக்குள்ளே
யப்பனே விக்கினங்கள் நாலதுண்டு
யெதுவென்று கேட்டாக்காற் சொல்லக்கேளு
எழுந்தலயம் விசேஷ பரிச்சியமுமப்பா
சுதுவென்ற ராச்சமாஞ் சுவாசமென்று
கைமுறையாய்ச் சொல்லுவது நாலுந்தானே. 534

தத்துவலய சமாதி முழுமையடைந்து நிருவிகற்ப சமாதியாக மாறும் பொழுது இடையில் பல தடைகள் ஏற்படும். அவ்விக்கினங்கள்-தடைகள் என்னவென்றால் லயம், விக்ஷேபம், பரிச்சியம், ராசச்சுவாசம் என்ற நான்கு தடைகளாம்.

தானென்ற விதற்குள்ளே லயத்தைக் கேளு
தனித்துநின்ற நித்திரை விக்ஷேபம் போல
கானென்ற ராகமுந் துவேஷத் தாலே
கலந்துவரும் வாசனையி னாலேயப்பா
மானென்ற மனோ ராச்சியத்தினாலே
வரும்பேர் சஞ்சேப னித்திரையு மல்ல
ஆனென்ற மனோ ராச்சியமுமல்ல
வறிவான சருவமுந்தான் மறந்துபோமே. 535

முதல் தடையான லயத்தினால் விக்ஷேபத்தை போல் நித்திரை உண்டாகும். அதுமட்டுமின்றி பூர்வஜன்ம வாசனையால் ராகத் துவேஷங்கள் உண்டாகும். மேலும் அனைத்தையும் மறந்த தூக்கம் உண்டாகும்.

மறந்துபோய் மூடமாய்த் தம்பித்து நிற்கும்
மருவியதில் ராசமென்ற சுவாசமாவான்
மறந்துபோய் நமக்குமன மொழிந்த யிந்த
மருவிநின்ற சொரூபத்தே சந்தோஷித்து
மறந்துபோய்த் தனைச் சூழ்ந்த சமாதியுள்ளே
மருவிநின்ற வானந்த வனுபோகத்தை
மறந்துபோ யிதனாலும் விக்கினமுமற்று
மருவியதோர் சொரூபத்தில் வியக்க நன்றே. 536

இந்நிலையில் மனமானது அனைத்தையும் மறந்து மூடமாய் தம்பித்து நிற்கும். அப்பொழுது அவன் ராஜச்சுவாசமாய் நிற்பான். இதனால் தன் மனதை மறந்து போவான். இவையாவும் சிறிதுசிறிதாக குறைந்து, முடிவில் மனம் தனக்குள்ளிருக்கும் ஆத்ம ரூபத்தை அறிந்துகொண்டு தன் சொரூபத்தில் லயித்து ஆனந்த அனுபவத்தை அடைந்து சகல விக்னங்களையும் கடந்து நிற்கும்.

நிருவிகற்ப சமாதி

நன்றான வகண்டவிர்த்தி யாவதப்பா
நலம்பெரிய காற்றில்லா விளக்குப் போல
அன்றான வலைச்சலற்றுத் தண்ணீருமுப்பு
மடங்கிநின்ற வாறதுபோன் முத்தி நிற்குந்

தன்றான பிறமனதி னுருத்தான் கெட்டுத்
தனிப்பெறவே வேற்றுருவாய்ப் பிரமந்தானாய்
பன்றான விப்படிதான் கடிகையொன்று
பருவமுடன் சமாதியுற்றாற் பலத்தைக் கேளே. 537

இந்நிலை எவ்வாறு இருக்குமெனில் காற்றில்லா இடத்தில் வைக்கப்பட்ட ஜோதியைப் போலவும் தண்ணீரில் கரைத்த உப்பைப் போலவும் யோகத்தில் மனம் முதிர்ந்து நிற்கும். இந்நிலையில் மனம் பிரம்மத்தில் இரண்டறக் கலந்து வேற்றுமை இல்லாமல் தானே பிரம்மமாய் நிற்கும். இந்த ஆனந்த அனுபத்தில் ஒரு கடிகை நேரம் லயித்ததால் ஏற்படும் பலனைப் பற்றி கூறுகிறேன் கேள்!

பலன்கேளு அசுவமேத யாகங்கோடி
பண்ணினதற் கொக்கு மொக்கும் பரிந்துகூடு
நிலன்கேளு யிப்படிதான் சமாதி மூட்டில்
நிலையாகச் சுழுத்தியென்றேயெண்ண வேண்டாந்
தலன்கேளு சுழுத்திக்குச் சித்தந்தானுந்
தயங்கிநின்று நின்றுற்று நசித்துப் போகும்
புலன்கேளு சமாதிக்கு நாம் பிரமமென்று
புடவாக வதிலிருந்து யிருக்கும் பாரே. 538

அதாவது கோடி அஸ்வமேத யாகம் செய்த பலன் உண்டாகும். இவ்வாறு அனுதினமும் பழகி நின்றால் மனம் சுழித்தியில் அடங்கும் இதை வெறும் சுழித்திதானே என்று எண்ணாமல் முறையாகப் பழகி வந்தால் அனைத்தும் சித்தத்திலடங்கி முடிவில் அந்த சித்தமும் பிரம்மத்திலடங்கும். அப்பொழுது நீயே பிரம்மம் என்ற வஸ்து என அறிவாய். சதாநேரமும் இந்த பிரம்மரூபத்தில் நிலைக்க வேண்டும். (இதுவே சமாதியின் முடிவு).

சஞ்சார சமாதி

இருக்கிற தாகையினால் ரெண்டுக்கும் பேத
மியல்பான நிருவிகற்ப சமாதி மார்க்கந்
தருக்கிறதோர் சஞ்சார சமாதி கேளு
சார்ந்து நின்ற நிருவிகற்பம் விட்டேயப்பா
வருக்கிறதா யெழுந்திருந்து பிரபஞ்சத்தைப் பார்த்தே
யடைவாக விவகரிக்குங் காலமெல்லா
மருக்கிறதோர் பிரபஞ்ச மெல்லாஞ் சமுத்திரத் தலைபோல்
மருவிநின்ற நுரைபோல மாயந்தானே. 539

பிரம்மரூபத்தை அறியும் மார்க்கத்தால் நிருவிகற்ப சமாதி இரண்டு வகையாக பேதமுற்றது. இதற்கடுத்து சஞ்சார சமாதியைப் பற்றி கூறுகிறேன் கேள். நிருவிகற்ப சமாதியை விட்டு எழுந்து வெளியுலகமான பிரபஞ்சத்தில் சஞ்சரிக்கும் பொழுதும் பிரபஞ்ச விவகாரத்தில் ஈடுபடும் பொழுதும் சமுத்திரத்தின் அலையால் ஏற்படும் கடல் நுரையைப்போல் அனைத்தும் மாயையே என்று அறிய வேண்டும்.

மாயமுற்றுச் சிலந்தியி னல்வலையைப்போல
மயங்கிநின்ற கூர்மத்தி னங்கம்போலத்
தோயமுற்ற வாகாச மேகம்போலச்
சொப்பனமாம் பிரபஞ்சத்தி லறிவைப் போல

வாயமுற்று நம்மிடத்தே யுண்டாச்சப்பா
வாச்சரிய நம்மிடத்தே யிருந்துகொண்டு
காயமுற்று அறிவழிந்து போறதாலே
கலந்து நம்மை விடவொன்றுங் கண்டிலேனே. 540

அதுமட்டுமின்றி மேலும் சிலந்திப் பூச்சியானது தன்னிடத்தில் உண்டான ஒரு பசை போன்ற பொருளால் வலை உண்டாக்கிக் கொண்டு, தானே அதில் சஞ்சரித்து வாழ்வதை போலும், கூர்மமான ஆமை தன்னகத்தே உண்டான ஒட்டினுள் தன்னை அடக்கிக் கொள்வது போலவும், ஆகாயமானது அனைத்தையும் தோற்றுவித்து தன்னுள் தானே ஒடுங்கி நிற்பது போலவும், சொப்பனத்திற்கு (கனவிற்கு) சமமான இப்பிரபஞ்சத்தை திடமான அறிவால் பிரபஞ்சத்தை மயக்கும் மாயை தன்னிடத்தில் உண்டாயிற்று என்றும் தன்னிடத்திலேயே அடங்கி அனைத்தும் அழிவுறும் என்றும் ஆகவே நம்மைத் தவிர வேறொன்றுமில்லை என்றும் சிந்தித்து மகிழவேண்டும்.

கண்டிலேன் சகலமும் யானென்று நில்லு
கலந்து நாமொன்றல்லால் வேறொன்றில்லை
யெண்டிலே னென்னிடத்தே பிறந்த தெல்லா
மியல்பாக வழிந்ததெல்லா மென்னிலெய்தும்
பண்டிலே னென்னைவிட்ட தொன்று மில்லை
பருவமுட னுரைத்து நில்லா யெந்நேரந்தா
னொண்டிலேன் மனத்தோடு சந்தானித்தே
யுள்ளிட்டுக் கொண்டுமக்கா ளுறத்தல் நன்றே. 541

மேலும் சகலமும் நானே! நானன்றி வேறொன்றும் இல்லை. சகலமும் என்னிடத்தே தோன்றி என்னிடத்திலேயே வளர்ந்து என்னிலேயே அழிவுறுகின்றன என்றும், என்னை விட்டால் இவ்வுலகில் மோக்ஷம் தரும் வஸ்து வேறொன்றுமில்லை என்றும் மனதால் எண்ணி புத்தியால் சிந்தித்து எப்பொழுதும் இதே பாவனையில் நின்றால் மிகவும் நல்லதாகும்.

நன்றான ரசவாதப் பயன்தான் வந்தும்
நலம்பெரிய பிராணனுக்குப் பயன்தான் வந்தும்
கன்றான மானபங்கங் கலந்து வந்துங்
கண்முன்னே தேவதைகள் வந்து நின்று
மொன்றான குருவுன்னைப் பரீட்சித்தாலு
முத்தமனே விகற்பமென்ற மரியாதைக்குத்
தன்றான பரிசாலந் தள்ளிப் போட்டுத்
தனிவிகற்பமான திங்கே யில்லையென்னே. 542

அதுமட்டுமின்றி ரசவாதம் செய்யும் திறமை பெற்றாலும், பிராணனை செயிக்கும் சக்தி பெற்றாலும், மானபங்கம் ஏற்பட்டாலும், (இரசவாதம் செய்யும் சக்தி ஏற்பட்டு பின்பு அது மறைந்தாலும்) கண் முன்னே பல தேவதைகள் வந்து நின்றாலும், குருவானவர் பரீட்சை செய்தாலும், மனதால் கலங்காமலும், இவ்விஷயங்களால் ஏற்படும் புகழ்ச்சி இகழ்ச்சியால் சலனம் வேறுவகையான விகற்ப வஸ்து கிடை யாது என எண்ணுதல் வேண்டும்.

இல்லையப்பா வென்னிடத்தே யொன்றுங்காணே
னியல்பாக நானொருவ னென்னாலெல்லாம்
எல்லையப்பா நாம்கண்ட தெல்லாம் பொய்பொய்
என்னிடத்தே பிறந்தசத்தி யிந்த்ரசாலம்
நில்லையப்பா மனமுறைத்துச் சஞ்சரித்தால்
நேரான சஞ்சார சமாதியாச்சு
அல்லையப்பா வாரூட சமாதி கேளு
அறிந்தமட்டும் சொல்லுகிற னணைந்து பாரே. 543

இவையாவும் என்னிடமிருந்து உண்டாயிற்று. நானே இவையெல்லாம். ஆகவே என்னால் பார்க்கப்பட்ட வஸ்துவெல்லாம் பொய்த் தோற்றமே அன்றி உண்மையல்ல. உண்மையல்லாத இப்பொய்த் தோற்றமான மாயையும் என்னிடமிருந்தே பிறந்ததுவாகும் என்ற திடமான புத்தியால் அனைத்தையும் சோதித்தலே சஞ்சார சமாதி எனப்படும்.

ஆரூட சமாதி

அணைந்து முன்னே தேவதைகள் வந்தாலுந்தான்
அதைச்சட்டை பண்ணாதே யகண்டமாய் நில்
லணைந்து நின்ற வத்துவித நெறியிற்கூடி
யப்பனே சஞ்சார சமாதிக்குள்ளு
மணைந்து நின்று திடப்பட்டாற் பின்புகேளு
அப்பனே சகலத்தி லசத்தியம் போக்கி
யணைந்துநின்று சுட்டசட்டி விட்டாற் போலே
யாச்சரியந் தேவதைக ளசத்தாய்க் காணே. 544

உனக்கு முன்னே தேவதைகள் வந்து நின்றாலும், அதைப் பொருட்படுத்தாமல் அகண்டமாய் நிற்கவேண்டும். இவ்வாறு சஞ்சார சமாதியில் மனம் திடப்பட்டால் அதற்கு பிறகு அசத்தியமான வஸ்துவைப் போக்கி, சுட்டசட்டியைக் கையிலிருந்து கீழே விட்டாற்போல் தேவதைகளையும் அசத்து (பொய்) என அறிதல் வேண்டும்.

அசத்தாகத் தேவதையை மனதிலெண்ணி
யசையாத மலைபோலே யசைவுமற்று
நிசத்தான காற்றுப்போல் தேவதைக ளென்று
நிச்சயித்து நன்றாக நில்லு நில்லு
பசத்தான வத்துவித நிலைநாமென்று
பாராகத் திடப்பட்டு நில்லுநில்லே
உசத்தாகச் சாதகத்தி னிலையைக் கூட்டி
யுத்தமனே யாரூட சமாதியாச்சே. 545

தேவதைகளை அசத்தாக மனதில் கொண்டும், அவற்றை (தேவதைகளை) காற்றுக்கு சமமாகக் கருதி அவையாவும் தன்னிடத்தே தோன்றி மறையும் வஸ்துக்களே அல்லாமல் தனக்கு மேற்பட்டவை அல்ல என்று திடமான புத்தி கொண்டு சிந்தித்து மலைபோல் அசையாமல் தன் சொரூபத்தில் நிற்பதே ஆரூட சமாதி எனப்படும்.

ஆச்சிந்த சமாதியெல்லாம் பார்க்கு முன்னே
யப்பனே வாசியைநீ பூட்டு பூட்டு
ஒச்சிந்த வாசிகொண்டு மூலங்கண்டு
வுரைத்தபின்பு யோகமெல்லா மூன்றிற்பாரு
மாச்சிந்த மாயமெல்லாந் தள்ளிப்போடு
வரையாகச் சமாதியைந்தும் வாய்க்கும் வாய்க்கும்
மூச்சந்த நாலுமப்பா முன்னே தோன்றும்
மூட்டென்றால் சமாதிக்குள் முறையிதாமே. 546

மேற்கூறிய சமாதி முறைகளை பார்க்கும் முன்னே வாசியை மூலத்தில் வைத்து கும்பகம் செய்து மூலாதாரத்திலுள்ள ஒளியைக் கண்டு பிறகு யோக முறைகளைப் பழகி மாயைகளைத் தூர ஒதுக்கிவிட வேண்டும். அப்படிச் செய்தால் வெகு விரைவில் சமாதி கைகூடும். இதுவே சமாதிக்குச் செல்லும் முறையான வழியாகும்.

அஷ்டாங்க யோகம்

முறையான அஷ்டாங்க முறையைக் கேளு
முன்இயம நியம வாசனத்தி னோடு
மறையான பிராணாயம் பிரத்தியாகாரம்
மருவியதோர் தாரணையுந் தியானத்தோடு
அறையான சமாதியுட னெட்டுமப்பா
அடைவாகச் சொல்லுகிற னறிந்துகேளு
நிறையாகச் சித்தாந்தம் வேதாந்தம் ரெண்டும்
நேராகச் சொல்லுகிறேன் மக்காள் பாரே. 547

அஷ்டாங்க முறையைக் கேள்! இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என எட்டு வகைப்படும். இவற்றை பற்றி விளக்கமாக கூறுகிறேன். அதுமட்டுமின்றி வேதாந்த சித்தாந்த கருத்துக்களையும் சொல்கிறேன் கேள்.

பாரப்பா வியமமது பதினொன்றுக்கும்
பருவமுறச் சொல்லுகிறேன் பண்பாய்க் கேளு
நேரப்பா விங்கிசையும் சத்தியத்தினோடு
நேரான ஆர்த்திகம் பிரமங்கேளு
ஆரப்பா வாச்சரியந் தயவினோடு
மாட்சேபம் கடிமையோடு திரிதியுங்கூடஞ்
சேரப்பா மிதாகார சவுசத்தோடு
செப்பினேன் பதினொன்றுஞ் செப்பினேனே. 548

இயமம் என்பது மொத்தம் பதினொறு வகைப்படும் அவையாவன 1. அஹிம்ஸை (உயிர்களை கொல்லாதிருத்தல்). புலால் உண்ணாதிருத்தல், 2. ஸத்யம் (உண்மையே பேசுதல்), 3. ஆர்த்திகம் (திருடாதிருத்தல் அதாவது பிறர் பொருள் மேல் ஆசை வைக்காதிருத்தல்), 4. பிரம்மச்சரியம் (உயிர் சக்தியான விந்துவை சேமித்தல்), 5. தயை (அனைத்துயிர்களின் மீதும் இரக்கம் காட்டுதல்), 6. ஆட்சேபம்

(நேர்மையாயிருத்தல்) 7. பொறுமை, 8. தைரியம், 9. மிதமான ஆகாரம். 10. பெரியோர்களுக்கு தொண்டு செய்தல், 11. சௌசம் (சுத்தமாய் இருத்தல்) என பதினாறு வகைப்படும்.

செப்புறே னியமமென்ற பத்துமக்காள்
சேர்ந்து நின்ற தவசோடு சந்தோஷந்தா
னொப்புறே னாஸ்த்தீக முயர்ந்ததான
வுத்தமனே சிவபூசை யோடு சிறார்த்த
மப்பிறேன் லெச்சையொடு மாதிதான
மருவினின்ற விரதமொடு மக்காள் பத்தும்
அப்பிறே னாசனங்க ளொன்பதையுங் கேளு
அறையுறேன் வகையாக அறிந்து பாரே. 549

நியமங்கள் மொத்தம் பத்து வகைப்படும். தவம், சந்தோஷம் (போதுமென்ற மனம்), ஆஸ்திக்யம் (தெய்வநம்பிக்கை), தானம், சிவபூஜை, வேதமோதுதல் (தெய்வத்தை பற்றி கூறும் நூல்களை படித்தல்), வெட்கம் (படாடோபமின்மை), தெளிந்த மனம், ஜபம், ஹோமம் (இந்திரியங்களை பிராணனில் ஒடுக்குதல், பிராணனை பிரம்மத்திடம் ஒடுக்குதல் இதற்கே ஹோமம் என்று பெயர்) இதற்கடுத்து ஒன்பது வகையான ஆசனங்களை பற்றிக் கூறுகிறேன் கேள்!

அறிந்துசொல்வேன் சொத்திகங் கோமுகத் தினோடே
யப்பனே பதுமமொடு வீரங்கேளு
மறிந்து சொல்வேன் சிங்கமொடு பத்ரங்கேளு
மருவினின்ற முத்தமொடு மயூரமப்பா
பிறிந்துனின்ற சுகமோ டொன்ப தாசனந்தான்
பேர்பிராணா யாமத்தின் பிரிவைக்கேளு
கறிந்துனின்ற ரேசமும் பூரகங் கும்பகமும்
கைமுறை சப்பீசனிற் பீசமஞ்சே. 550

சொஸ்திகாசனம், கோமுகாசனம், பத்ராசனம், வீராசனம், சிங்காசனம், பத்மாசனம், முத்தாசனம், மயூராசனம், சுகாசனம் என ஒன்பது வகைப்படும். இதற்கடுத்து பிராணாயாமம் இது ரேசகம், பூரகம், கும்பகம் என்ற மூன்று உட்பிரிவை கொண்ட ஐந்து வகைகளை உடையது.

அஞ்சாதே யாறுதொகை பிரத்தியாகார
மப்பனே சரீரமென்ற பிரத்தியாகாரம்
எஞ்சாதே யிந்திரியம் பிரத்தியாகார
மியல்பான பிராணமென்ற பிரத்தியாகாரம்
கஞ்சாதே காணமென்ற பிரத்தியாகாரங்
கைகலந்த காமியமாம் பிரத்தியாகாரம்
தஞ்சாதே சர்வகன்மப் பிரத்தியாகாரந்
தனியாறுஞ் சொல்லிவிட்டேன் சார்ந்து பாரே. 551

ஆறு வகையான பிரத்தியாகாரத்தைப் பற்றி கூறுகிறேன் கேள். சரீர பிரத்தியாகாரம், இந்திரிய பிரத்தியாகாரம், பிராண பிரத்தியாகாரம், கரண பிரத்தியாகாரம், காமியபிரத்தியாகாரம், சர்வ கன்மபிரத்தியாகாரம் என ஆறு வகைப்படும்.

பாரப்பா தாரணை யிலாறுவிதஞ் சொல்வேன்
பருவமுடன் பூதத்தி லைந்து கேளு
நேரப்பா பிராணமென்ற தாரணை தானாகு
நிலையான கர்மமென்ற தாரணையுங்கேளு
தாரப்பா தேகமென்ற தாரணையினோடு
தத்துவமென்ற தாரணையுஞ் சார்ந்து கேளு
ஓரப்பா பிரமமென்ற தாரணையி னோடு
முத்தமனே யாறுவித முற்றுப் பாரே. 552

இதற்கடுத்து தாரணையில் ஆறு விதங்கள் உள்ளன. பூத தாரணை, பிராண தாரணை, கர்ம தாரணை, தேக தாரணை, தத்துவ தாரணை, பிரம்மதாரணை என்பவை அவை.

உற்றுப்பார் பத்துவிதத் தியானஞ் சொல்வே
னுத்தமனே சடாதாரத் தியானமொன்று
மற்றுப்பார் தேகமென்ற தியானமொன்று
மருவினின்ற மண்டலத்தின் தியானமொன்று
ஒற்றுப்பார் பிரமத்தின் தியானமொன்று
ஓகோகோ விஷ்ணுவினிற் றியானமொன்று
நெற்றுப்பார் ருத்திரனற் றியானமொன்று
நேரான தேவதாத் தியானமொன்றே. 553

ஒன்றான விசுவமென்ற தியானமொன்று
வுத்தமனே பிரணவமென்ற தியானமொன்று
பன்றான னிராகாரத் தியானமொன்று
பார்மக்காள் பத்துடைய பருவஞ்சொன்னேன்
வின்றான சமாதியஞ்சும் விளம்புறேன் கேள்
விரைந்துனின்ற தத்துவலய சமாதியொன்று
நன்றான சவிகற்பச் சமாதியொன்று
நலம்பெற்ற னிருவிகற்பச் சமாதியொன்றே. 554

சமாதிக்குள் சஞ்சார சமாதியொன்று
தனிப்பெறவே யாரூட சமாதியொன்று
அமாதிக்கு ளஞ்சுவிதம் சொன்னேன் சொன்னே
னப்பனே யஷ்டாங்க மெட்டுமாச்சு
யெமாதிக்குள் னியமமென்ற பத்துங்கேளு
மெளிதாக லட்சணத்தை யியல்புறேனான்
புமாதிக்குள் நரமிருக பட்சியெல்லாம்
போந்துன்றன் சுகதுக்கம் போலப்பாரே. 555

தியானத்தில் பத்து வகைகள் உள்ளன. சடாதாரத் தியானம், தேக தியானம், மண்டல தியானம், பிரம்ம தியானம், விஷ்ணு தியானம், ருத்திரத் தியானம், தேவத் தியானம், விஸ்வத்தியானம், பிரணவத் தியானம், நிராகாரத் தியானம், எனப் பத்து வகைப்படும். அடுத்து சமாதியின் வகைகளை கூறுகிறேன் கேள். தத்து வலய சமாதி, சவிகற்ப சமாதி, நிருவிகற்பச் சமாதி, சஞ்சார சமாதி, ஆரூட சமாதி என ஐந்து வகைப்படும்.

இயம நியம முதற்கொண்டு சமாதி வரையுள்ள இவையே அஷ்டாங்க யோகமெனப்படும்.

இனி இயமத்தின் லட்சணத்தை கூறுகிறேன் கேள்! பூமியிலுள்ள அனைத்துவித ஜீவராசிகளையும் அதாவது பட்சி, மிருகம், மனிதன் எல்லாவற்றையும் தன்னுயிர்போல் எண்ணி துன்புறுத்தாமல் இருத்தல் வேண்டும்.

பார்ப்பதுவு மிங்கிடையோ வென்பார்களப்பா
பரவினின்ற சித்தாந்தி சொல்லும் வாறு
காப்பதுவும் வேதாந்தி சொல்லும்வாறு
கைகடந்த பொறிவழியே யறிந்துனின்று
ஆர்ப்பதுவு மகண்டமென்ற பூரணத்தையப்பா
வறிந்திருந்தும் பரிச்சின்ன னாகக் கண்டு
சேர்ப்பதுவுஞ் சாதிவர்ண மாச்சிரமத்தாலே
செறிந்துனின்ற விகற்பமெலாஞ் சேரத்தள்ளே. 556

அதாவது சித்தாந்தத்திலும் வேதாந்தத்திலும், கூறியவற்றை அறிவால் உணர்ந்து பிரபஞ்சமனைத்தும் ஆத்ம ஸ்வரூபமாகவே கண்டு சமநோக்குடையவனாய் மாச்சரியத்தால் உண்டாகும் சாதி குலம் போன்ற விகற்பங்களை நீக்குதல் வேண்டும்.

தள்ளினின்று வேறுகூறாகப் பண்ணிச்
சாராம லிங்கிஷையைச் சார்ந்தோராகி
அள்ளினின்ற நிலையல்லோ வங்கிஷையே
யென்பா ரப்பனே பரியாசம் விளையாட்டாலும்
மள்ளினின்று போய்விட்டா லசத்தியந்தானென்பார்
மருவினின்ற மதங்களால் கண்டிக்கப் போகா
கள்ளினின்ற அங்கிஷையிற் கூடினின்று
கலந்தெங்கும் பூரணமா யிருக்குந்தானே. 557

இம்மார்க்கத்தை கடைப்பிடிப்பவர்களைக் கண்டு உலக வாழ்க்கையிலுள்ளவர்கள் பரிகாசம் செய்வார்கள். இதைக் கேட்டு வருத்தமடையாமலும், பரியாசம் செய்யும் மதவாதிகளை கண்டிக்காமலும், தன்னுடலில் உறையும் ஆத்மாவான பூரணப் பொருளுடன் கூடி நிற்றல் வேண்டும்.

தானென்ற வஸ்துவையுந் தவிரவேறே
சாதகந்தா னில்லையென்று சந்தானித்துப்
பானென்ற சத்தியமாய் வாக்குக் காயம்
பாலோடு சோற்றையென்றுங் கிரகியாமல்
ஆனென்று மிருக்கிறதே யார்த்தீக மென்பார்
அனாதமாம் சரீரத்தைச் சயாவமாகக்
கோனென்று மபகரிக்காதே யென்று
கூடுறதே யார்த்தீக மென்று சொல்லே. 558

ஆத்மா என்ற வஸ்துவைத் தவிர வேறு வஸ்துக்கள் உலகிலில்லை என்று திடமாக மனதிலெண்ணி மனதையும், வாக்கையும் அடக்க வேண்டும். பாலையும் அன்னத்தையும் உட்கொள்ளாமல் இருப்பதே ஆர்த்தீகம் என்பார்கள். இது

ஆர்த்தீகமில்லை. அதாவது இவ்வுடலை வளர்ப்பதற்காக மற்றவர்களின் ஆஸ்திகளை அபகரிக்காமல் இருப்பதே ஆர்த்தீகம்.

சொல்லரிது சுககால மில்லாதோடிச்
சொன்னத்தை வெறுத்தல் விம்மசார மென்பார்
நல்லான சரீரமது சுவகதமென்று
நலம்பெறவே வேஷசன்ம விர்த்தியாலே
வல்லான மர்மமது சுபாவமாக
மனத்தோடே னிரந்தரமுஞ் சஞ்சரிக்கும்
அல்லான விதுபிரம சரியுமென்றே
யறிந்துரைப்பார் வேதாந்தி யறிந்துபாரே. 559

சுகத்தின் மீது மனதை செலுத்தாமல் அதைவெறுத்தல் விம்மசாரமென்பர். இச்சரீரத்தை சாஸ்வதம் என்று எண்ணி அதனால் ஏற்படும் சுகத்தையும் சாஸ்வதம் என்று எண்ணும் இயற்கை சுபாவத்தோடு மனது இந்திரியங்களுடன் சேர்ந்து காய சுகத்தை அனுபவிக்காமல் சரீரம் பிரம்மமன்று ஆத்மாவே பிரம்மம் என்று உணர்ந்து புலன்களை ஒடுக்குவதே பிரம்மச்சரியமாகும்.

அறிந்துபார் சகலமெல்லாந் தன்னைப்போலே
அறிந்துகொண்டிருப்பதுவே தயையென்பார்கள்
மறிந்துபார் தன்னுடம்பில் வருத்தமெல்லாம் விட்டு
வல்லோர்க்குச் சுகம்வருத்தல் தலையாமப்பா
பிறிந்துபார் தனக்கனர்த்தம் வந்தாலுந்தான்
பேரான சத்துருவுக் கிதமே செய்யில்
நெறிந்துபா றாச்சேப மிதையென்பார்கள்
நேராக விதுவல்ல சொல்லக் கேளே. 560

சகல வஸ்துக்களையும் தன்னுயிர்போல் மனதால் எண்ணி அதன் மேல் இறக்கம் காட்டுதலே தயை எனப்படும், தன்னுடலில் உண்டாகும் வருத்தத்தைக் கவனிக்காமல் அடுத்தவர் துன்பத்தை போக்குவதே மகான்களின் செயலாகும். தனக்கு எவ்வளவு துன்பம் ஏற்பட்டாலும் அதை பொருட்படுத்தாமல் தன்னைத் துன்புறுத்திய சத்துருவுக்கும் நன்மை செய்வதே பொறுமை என்பார்கள். (ஆனால் உண்மை இதுவன்று)

சொல்லக்கேள் வேதாந்த சாத்திரமே நன்று
சுழன்றலையுஞ் சமயமெல்லாந் தொல்லை தொல்லை
அல்லக்கேள் திடப்படலாச் சேயராகு
மப்பனே சத்துருவும் வியாதி பீடை
நல்லக்கே ளிதுகளிலே புத்திமலைப் பற்று
நலமாக விருக்கிறதே கடிமையென் பார்கள்
வல்லக்கேள் சுகதுக்க மதிசீ தங்கள்
வகையான உஷ்ண மபிமானம் பாரே. 561

வேதாந்தம் கூறும் கருத்துக்களே நன்மை பயப்பவை. மனதை அலைபாயச் செய்யும் சமயமெல்லாம் தொல்லை என்று மனதில் உறுதிகொண்டு திட மில்லாத

புத்தியுடையவர்கள், சத்துரு, வியாதி, பீடை, இவற்றால் ஏற்படும் துன்பத்தால் மயங்கி வருத்தமடையாமல் தவத்தால் சந்தோஷம் கொள்வதே பொறுமை.

அபிமானம் வந்தாலுஞ் சொப்பனத்தைப் போலே
யசத்தாக மனதினிலே தாங்கல் தாங்கல்
கபிமான தவைதனிலை பெற்றானாகிற்
கைகண்ட சமயமிதுதான் காணு மக்காள்
உபிமான காரியத்தில் மனத்திற் கோழை
யுறாம லிருக்கிறதுவே திமிதி யென்பார்
இபிமான வேதாந்தத் தாலே முத்தி
யிதைவிட்டான் மற்றொன்றா லில்லைதானே. 562

சுகம், துக்கம், குளிர், வெப்பம், அபிமானம் போன்றவைகளை பொருட்படுத்தாமல் இருத்தல் வேண்டும். எப்பொழுதேனும் அபிமானம் ஏற்பட்டால் அதை கனவுக்கொப்பாக கருதி அசத்தான அவ்விஷயத்தை மனதிலிருந்து அகற்றி, நாம் எடுத்த காரியத்தில் யோக வாழ்க்கையில் முன்னேறி சித்தியடைதல் என்ற லட்சியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பதும் இயற்கையால் உண்டாகும் துன்பங்களை வெல்லக்கூடிய மனஉறுதியை உண்டாக்குவதுமே தைரியம் எனப்படும். இவ்வாறு நல்விஷயங்களை கூறும் வேதாந்தக் கருத்தின்படி சென்றால் முக்தி கிட்டும். இல்லையேல் கிட்டாது.

இல்லையில்லை யிதைவிட்டால் முத்தியென்றே
யெனையாண்ட போகர்சொன்னார் மக்காள்கேளு
மல்லையில்லை மற்றதெல்லா மென்றே யூன்ற
வப்பனே திரிதியென்ற திதுவு மாச்சு
மல்லைமல்லை விருதாவா யாகாரஞ் சுருக்கி
மருவினின்ற திதாகார மென் பரையோ
வல்லைவல்லை சொப்பனத்திலவத்தைக் கண்ட
மருவினின்ற பிரபஞ்சத்தி லகிலந் தானே. 563

அகிலமெல்லாம் விழுங்கி னின்றோ மசைவுமற்றே
யகண்டபரி பூரணமா யிருந்தே நாம்தாம்
தகிலமெலா முண்டகிலம் போலே யாம்தாம்
தனைப்போலே யுறைப்பாகில் மிதாகாரந்தான்
பகிலமென்ற மிருத்திகையும் சலத்தினாலே
பரவினின்ற வசத்தையப்பா பருவமாகி
யொகிலனின்ற காமமொடு குரோதந் தன்னை
யுட்சவ்வும் பிறச்சவ்வு மென்பார் காணே. 564

காணப்பா வேதாந்த சாரத்தாலே
காலமென்ற திரிதியத்தி லெய்யுங்கா ணென்றும்
வீணப்பா வந்ததில்லை போனதில்லை
வேதாந்தக் குருமுகத்தே தெளிந்து கொண்டு
தோணப்பா யெக்காலம் வ்ஸ்து தானாய்ச்
சுகமாக விருப்பதுவே சவுசமாச்சு
ஆணப்பா வியமமென்ற பத்துஞ் சொன்னே
னறிந்துகொள்ளு னியமத்தை யறைகிறேனே. 565

இதையே போகநாதர் எனக்கு முன்னொரு சமயம் உபதேசித்தார். அளவிறகு மிஞ்சிய ஆகாரத்தை உட்கொள்ளாமல் மிதமான ஆகாரத்தை உட்கொள்ளுதல் வேண்டும். இதற்கே திதாகாரம் என்பார்கள். இவ்வுலகமானது கனவில் தோன்றிய வஸ்து போன்றது. இவற்றை உட்கொண்டு அசைவற்று அகண்ட பரிபூரணமாய் இருப்பது நாம்தான். நாமே அனைத்தையும் விழுங்கும் எமன். காமமும் குரோதமும் இச்சரீரத்திற்கு உள்ளும் வெளியும் பரவி நிற்கிறது. போவதும், வருவதும், இச்சரீரத்திற்கேயன்றி ஆத்மாவுக்கல்ல. கால மாற்றத்தால் இச்சரீரம் அழிவுறும் என்ற பாவனையை குருவின் மூலம் அறிந்து மனதை சுத்தமாக்கி சித்தத்திலுள்ள மாசுக்களை அகற்றி தானே எக்காலத்தும் இருக்கின்ற வஸ்து என அறிந்து கொள்ளுதலே சவுசம் அல்லது சுத்தித்தல் எனப்படும்.

மேற்கூறியவையே இயமம் எனப்படும். இவற்றைக் கண்டிப்பாகக் கடைபிடித்து அனுஷ்டித்தாலே யோகம் சித்தியாகும். இனி நியமத்தைப் பற்றி கூறுகிறேன் கேள்!

அறைகின்றேன் மறையினுள்ளே பிறந்ததென்று
அறிவான நிற்சல சந்திராயணத்தை
யிறைகின்றேன் விரதங்களால் சரீரம் வற்றி
யிருப்பதையா தவசென்பா ரென்ன சொல்வேன்
கறைகின்றேன் சத்தியந்தா னென்பதேது
கைகலந்து மித்தையென்று சொல்வதேது
நறைகின்றே ணானென்னப் பட்டதார்தா
னலமாக நானென்று சொல்லாதாரே. 566

சொல்லாக நமக்குவந்த பேதமேது
சோத்தியங்க ளெதனாலே வந்ததென்று
நல்லாக வேதாந்தத் தாலேபார்த்து
நலமாக நிரந்தரமு மாலோசித்துப்
பொல்லாக வானதெல்லாம் விட்டுப்போக்கிப்
புகழாகத் திடப்படுதல் தவசாச்சப்பா
நில்லாகக் கிடைத்த மட்டும் சந்தோஷித்து
நிற்பதுவே சந்தோஷ மென்பார் காணே. 567

வேதத்தில் சொல்லப்பட்டுள்ள சந்திராய்ணம் போன்ற விரதத்தால் சரீரத்தை வற்றச் செய்து தேகத்தை சுத்தியாக்குவதே தவம் என்பார்கள். (உண்மையிலிதுவன்று) அதாவது உண்மைக்கும் பொய்க்கும் அப்பாற்பட்டும் நான் நீ என்ற பேதத்திற்கு அப்பாற்பட்டும் நிற்கின்ற வஸ்துவை வேதாந்தத்தால் அறிந்து, அழியா வஸ்துவுடன் சேர்ந்து நின்று அழியக் கூடிய வஸ்துவை நீக்குவதே தவசாகும். கிடைத்ததைக் கொண்டு சந்தோஷிப்பதே சந்தோஷமென்பார். (உண்மை சந்தோஷம் இதுவன்று).

காணப்பா பிரமாதி லோகத்துள்ளே
கலந்தசுரர் பீடமுதற் சிந்திச்சென்னி
தோணப்பா நாகம்போல் வெறுப்புவந்து
சொப்பனம் போலசத்தென்று தூரத் தள்ளி
யூணப்பா வுண்மையென்ற வேதாந்தத்தை
யுற்றுணர்ந்து சச்சிதானந்த மாகிப்
பூணப்பா தடையற்றுத் தெளிந்து நின்று
புகழான வானந்த வடிவுமாமே. 568

பிரம்மலோகத்திலுள்ள பதிவிகளும் சுரர் அசுரர் போன்ற லோகங்களின் பதவிகளின் மீதும் ஆசைவைக்காமல் அவற்றை வி\ப்பாம்புகளைப் போல் எண்ணி உதறித்தள்ளி விட்டு உண்மையான பொருள் என்று வேதத்தால் கூறப்படும் வஸ்துவை மனதால் அறிந்துகொண்டு அச்சச்சிதானந்தப் பொருளுடன் சேர்ந்து ஆனந்தமாய் நிற்பதே சந்தோஷமாகும்.

வடிவாக விருக்கிறதே சந்தோஷ மப்பா
வகையான வாகமமாம் புராணந்தன்னை
நெடிவாக விட்டுவிட்டு நின்றுகொண்டு
நேராக வேதாந்தச் சொல்லில் நின்று
கடிவாக விசுவசித்தா லார்த்தீகமென்பார்
கலந்துநின்ற வேதாந்தம் பொருளென் றெண்ணி
யடிவாகச் சொல்லுகிற குருவைக் கேட்டே
யவர்சொல்லும் பூரணமு மறிந்து கொள்ளே. 569

ஆகம புராணம் போன்றவற்றை நீக்கி வேதாந்தம் கூறிய பொருளை தெய்வம் என்றும் சார்ந்து நிற்பதே ஆஸ்தீகம் என்பார்கள். வேதாந்தப் பொருளையும், அது உணர்த்தும் பூர்ணவஸ்துவையும் குருமுகமாக அறிந்து நிற்பதே ஆஸ்தீகமாகும்.

அறிந்துகொள்வா யார்த்தீக மிதுவேயாச்சு
அப்பனே தேடுகின்ற சொத்தையெல்லாம்
புறிந்துநின்ற புண்ணியமாங் காலதேசம்
புகழாகக் கொடுப்பதை தான் றானமென்பார்
மறிந்துநின்ற குருவார்த்தை தானுட்கொண்டு
மருவித்தான் முத்தனாய் மனமொன்றாக
நெறிந்துநின்று தன்னுடைய சொத்தை யெல்லாம்
நேராகக் குருபதத்திற் றானம் பண்ணே. 570

புண்ணியவசமாய் கிட்டிய நம்முடை!! செல்வத்தை காலதேசமறிந்து மற்றோருக்கு கொடுப்பதே தானமென்பார். நம்முடைய சற்குருவின் உத்தரவுப்படி நம் சொத்துக்களில் தலைசிறந்த தான மனதைக்கொண்டு முழுப்பொருளையும் அவர் திருவடிகளில் சேர்ப்பதே தானம் எனப்படும்.

பண்ணுவார் சிவன்விஷ்ணு பிரமன் மூன்றும்
பரிவாக நிரைநிரையாய்ப் பிராமணரைத் தொட்டு
நண்ணுவார் க்ஷத்திரியர் வைசிய ரோடு
நலம்பெறவே யிந்திரனைப் பூசியென்பார்
ஒண்ணுவாய்ப் பூசையது வீசர்பூசை
யுத்தமனே செய்யென்பா ருலகத் தோர்கள்
அண்ணுவாய் தன்தேக சுகபோகம் போ
லறிவாகச் சகலமெலா மறியக்கேளே. 571

கேளப்பா சகலசெந்து புசித்த போகம்
கெடியாக நமக்கென்று நிறுத்திப் போந்து
நாளப்பா வொருமித்தா லீசுரர்க்குப் பூசை
நலமாக வாச்சுதென்று அறிந்து கொள்ளு

வாளப்பா சாஸ்திரத்தில் சுத்தியோடே
வளமாகக் கேட்கிறது சித்தாந்தத் திரட்டி
ஆளப்பா சாஸ்திரங்க ளெல்லாம் விட்டு
அசத்தாகும் பிரவிர்த்தி யெல்லா மடித்துத் தள்ளே. 572

தள்ளியப்பா தன்னிழல்போற் குருவின் பின்னே
சச்சிதானந்த வெள்ளந்தா னென்றெண்ணி
தெள்ளியப்பா தெளிவிக்கு முபநிஷத்துக் குள்ளே
சேர்ந்தென்றுங் கேட்கிறதே சிரவணமாகும்
நள்ளியப்பா பிரவர்த்தியற்று நிவர்த்தாளாகி
நலம்பெறவே யிருக்கிற சன்மங்களெல்லா
மள்ளியப்பா பூரணமே தெய்வமென்று
அறிவிக்கும் பூரணந்தான் சிரவணமாமே. 573

சிவன், விஷ்ணு, பிரம்மா, இந்திரன் இவர்களை, பிராமணர்களை மையமாகக் கொண்டு க்ஷத்திரியரும், வைசியரும் யாகாதி கர்மங்களால் பூசிப்பார்கள். உண்மையில் இது பூசையன்று. மோக்ஷத்தை கொடுக்கக்கூடிய ஈசனுடைய பூசையை மனதால் செய்வதே உண்மையான பூசையாகும். நம் தேகத்தை எவ்வாறு சுகபோகங்களுடன் வளர்த்துக் கொள்கிறோமோ! அதேபோல் சகல உயிரினங்களுக்கும் உணவிட்டு வளர்த்தலே சரீரத்தால் செய்யப்படும் பூசையாகும்.

மாயா சாஸ்திரத்தை அகற்றி பேதமுண்டாக்கக்கூடிய பிரவிர்த்திகளைத் தூர அடித்துத் தள்ளி நம் நிழலானது நம்முடன் எவ்வாறு தொடருமோ அதேபோல் குருவின் பின்னே சென்று அவரிடம் உபநிஷம் கூறும் கருத்துக்களை அறிந்துகொண்டு பிரவிர்த்தி மற்றும் நிவர்த்திகளையும் தாண்டி முக்காலத்திலும் சாஸ்வதாமாய் இருக்கும் பொருளைப் பற்றிக் கூறும் நூல்களைப் படிப்பதே சிரவணமாகும்.

ஆமப்பா வாகாத வியாபாரத்தில்
ஆதாய மனேகமாய் வந்தாலுந்தான்
போமப்பா வதன்மேலே யபேகைக்ஷ விட்டுப்
பொறிவாக மரியாதை லச்சையென்பார்
ஓமப்பா கேட்டிருந்தால் ஞானமெல்லா
முதவாமல் நிலைகுலைந்தே யுலகத்தில் சிக்கி
வாமப்பா வாசனையாம் பெண்டீர் பிள்ளை
வருகிறதோர் பாசமெல்லாம் லச்சையெண்ணே. 574

எண்ணியந்த மரியாதை வந்தாலுந்தா
னியல்பாக வழிசகத்தி லிருந்து கொண்டு
உண்ணியந்தச் சித்தாந்த நிலையினின்றா
லுத்தமனே லச்சையென்று சொல்லலாகும்
பண்ணியந்தக் கோழைவிட்டுத் தெளிவு வந்தாற்
பருவான மதியென்பார் பாருபாரு
தண்ணியந்த வேதாந்த நிலையில் நின்று
தனித்துநின்ற பூரணத்தைத் தினந்தா னோக்கே. 575

வியாபாரத்தில் ஆதாயம் வந்தாலும், அதன்மேல் உள்ள ஆசையை விட்டு அதனால் ஏற்படும் கர்வத்தையும் நீக்கியிருப்பதே லச்சை என்பார்கள். உண்மையில் லச்சை இதுவன்று. வாயால் கேட்கப்பட்ட ஞானத்தைக் கொண்டு அதனால் முழுஞானம் பெறாமல் மாயா வாழ்க்கையான பெண்டாட்டி பிள்ளை போன்றவற்றில் சிக்கி அதனால் ஏற்படும் பாசமே லச்சை. இவற்றால் நமக்கு எவ்வளவு மரியாதை ஏற்பட்டாலும் அதைவிடுத்து மனதை சித்தாந்த நிலையில் நிறுத்தி பாசத்தை ஒழித்தல்வேண்டும். இதற்கே லச்சை என்று பெயர்.

கோழைத் தனத்தை விடுத்து தெளிந்த புத்தி ஏற்பட்டால் மதி என்பார்கள். ஆனால் உண்மையில் தனியாக இருந்து கொண்டு வேதாந்தப் பொருளான பூரணத்தை அனுதினம் நோக்குவதே மதியாகும்.

ஜெபம் என்ன மோனம்

நோக்கியொன்றை நோக்கிடவே நோக்கு நோக்கு
நுட்பமுற்றால் மதியென்று சொல்லலாகும்
ஆக்கமொடு குருசொன்ன மந்திரத்தைச் செபித்து
அது செபந்தா னென்பார்க ளப்பாகேளு
தாக்கவொன்றில் மனச்சத்து வேதாந்தம் பார்த்துத்
தனித்துநின்ற பூரணமாத் தள்ளியெல்லாம்
வாக்கடங்கா மோனமுற்றாற் செபமதாச்சு
மற்றதெல்லாம் செபமல்ல மக்காள் காணே. 576

குரு முகமாக அறிந்த மந்திரத்தை அனுதினமும் செபிப்பது செபம் என்பார்கள். ஆனால் உண்மையில் ஜெபம் என்பது மனதை நழுவவிடாமல் பூரணத்தில் சேர்த்து அசையாமல் மௌனத்தில் நிற்பதே செபமாகும். மற்ற வகையில் செய்யப்படும் எதுவும் செபமாகாது.

காணப்பா குருசொன்ன சாத்திரத்தின் படியே
கைமுறையாய் நடக்கிறதே விபரமென்பார்
பூணப்பா யெந்தெந்தக் காரியங்கள் வந்தும்
புகழாகத் தயக்கம் வந்தும் பிரமமென்றும்
தோணப்பா நிரந்தரமும் வேதாந்தம் பார்த்துச்
சொன்முறையாய் நிற்பதுவே விரதமாச்சு
ஆணப்பா நியமமென்ற பத்துஞ் சொன்னே
னறிந்திந்த விருபதையும் மறுட்டித்தேறே. 577

குரு சொன்ன சாத்திரத்தின்படியே நடப்பது விரதமென்பார். (உண்மையில் இது விரதமென்று). எக்காரியம் வந்தாலும், எவ்வளவு தடங்கல் ஏற்பட்டாலும் அனுதினமும் வேதாந்த பொருளை பிரம்மன் என்று விடாமல் தியானித்தலும், சொன்ன முறை தவறாமல் முடிப்பதும் விரதமாகும். இதுவே நியமம் என்ற பத்து வகையாகும். இயம நியமமான இவை இருபதையும் முறையாக கடைபிடிப்பதாலேயே யோகத்தில் முன்னேற முடியும்.

ஏறியிந்த விருபதையும் மநுட்டியாட்டால்
என்னசொல்வேன் சீவனில்லாச் சித்ரம் போலாம்
தேறியிந்த வடிப்படையை வைக்கு முன்னே
சிற்றெடுத்த சுழிகைக்கு மொக்குமொக்கும்
ஆறியிந்தக் காயசித்தி பண்ணுமுன்னே
யாயிரமாங் கலியுகத்தைக் கண்டதொக்கும்
மாறியிந்தச் சடத்தோடே முத்தி காணான்
மாண்டபின்பு முத்தியென்ற வாறுபோமே. 578

இவ்விருபதையும் முறையாக அநுஷ்டித்தவன் சித்தர் போலாவான். முறையாக தொடங்கப்பட்ட எக்காரியமும் பாதியளவு முடிந்ததற்கு சமம். காய சித்தி செய்ய வேண்டும் என்று நினைத்தாலே ஆயிரம் கலியுகத்தை பார்த்ததற்கு சமமாகும். இவ்வுடலில் இருக்கும்பொழுதே முக்தியடையாதவன், இறந்த பின்பு எவ்வாறு முக்தியடைய முடியும்.

போமப்பா பிராணாயாமஞ் செய்யும்போது
புகழான மாத்திரைதா னன்றேயேற
ஆமப்பா கம்பமுறும் வேர்வை கொள்ளு
மாச்சரியங் கபாலத்தை யசைத்துத் தூக்கும்
வேமப்பா மேபலமுங் களிம்பு போகும்
விரைத்து நின்ற நாடியெல்லாஞ் சுத்தியாகும்
ஓமப்பா பிராணாயாம முறைத்ததானால்
ஓங்குமப்பா திசைநாத முற்றுப் பாரே. 579

பிராணாயாமம் செய்யும் பொழுது மூச்சையடக்கும் நேரம் அதிகரிக்க அதிகரிக்க கபமும் வேர்வையும் உண்டாகி கபாலம் அசைந்து தூக்கும். மேலும் பலமும் அதிகமாகி, சகல நாடிகளும் சுத்தியடைந்து தசநாதங்களும் உறுதியாகி பிரகாசிக்கும்.

உற்றெட்டுப் பருவமுண்டு பிராணாயாமத்தி
லோகோகோ சொல்லுகிறேன் மக்காள் கேளு
மற்று நின்ற வேர்வைதான் முந்தி முந்தி
மருவிநின்று தம்பிக்கு மிரண்டாம் பட்சம்
ஒற்று நின்ற தீபனமா மூன்றாம்பட்ச
மோகோகோ லகுவாகும் நாலாம் பட்சம்
அற்று நின்று பிரகாசிக்கு மைந்தாம் பட்சம்
யப்பனே குண்டலிமே லேறலாமே. 580

பிராணயாமம் பலவகைப் பருவம் கொண்டது. அதைப் பற்றிக் கூறுகிறேன் கேள்! முதலில் வேர்வை உண்டாகும். பிறவு வாயு தம்பிக்கும், அதற்கடுத்து அதிக பசியுண்டாகும் நான்காம் பருவத்தில் தேகம் லேசாகும். ஐந்தாம் பருவத்தில் முகத்தில் தேஜஸ் உண்டாகும். இப்பருவத்தில்தான் குண்டலி விழித்துக் கொள்ளும்.

ஆமப்பா வேழுக்குளாகாசகமன
மாச்சரியந் தூரதிஷ்டி யறியப் பண்ணு
மோமப்பா வெட்டினுடைப் பெருமை கேளு
மோகோகோ கேசரத்தில் திசை நாதங்கள்

வேமப்பா நல்வினையுந் தீவினையும் நிறாய்
வெந்தபின்பு நாடிசுத்தி யாகுமாகும்
காமப்பா லுடம்போடே கலந்து போகும்
கைமுறையாம் பிராணாயாமங் கண்டு கொள்ளே. 581

ஏழாம் பருவத்தில் ஆகாச கமனம் உண்டாகும். மேலும் தூரத்தில் உள்ளதை அறியக்கூடிய சக்தியும் ஏற்படும். எட்டாம் பருவத்தில் தசநாதங்களும் கேசரத்தில் சென்றொடுங்கும், நல்வினையும் தீயவினையும் சாம்பலாகி வெந்து நீறாகும். மேலும் நாடிகள் சுத்தியாகி, காமப்பால் உடலுடன் கலந்து தேகசித்தியை பண்ணுவிக்கும்.

பிரத்தியாகாரம்

கண்டுகண்டு சொல்லுகிறேன் பிரத்தியாகாரம்
கையோடே வாசனையின் வழியிற் சென்று
கொண்டுகொண்டு நடத்துவிக்கு மிந்திரியமப்பா
குலையாத மனத்தை மெள்ளக் கூட்டிக் கொண்டு
விண்டுவிண்டு திரிவதனைத் திரியொட்டாமல்
வெட்டியதை மறிக்கிறதே பிரத்தியாகாரம்
தண்டுதண்டு இதற்குள்ளே யாறுவிதமுண்டு
தயவாகச் சொல்லுகிறேன் மக்காள் கேளே. 582

இந்திரியங்கள் தம்தம் பொறிகளின் வழியாக வெளிச்சென்று அலையும், இவற்றை மனதால் மெள்ள உட்புறமாக இழுத்து திரிய விடாமல் பிடித்து நிறுத்துவதே பிரத்தியாகாரம் எனப்படும். இவற்றில் ஆறுவகைகள் உண்டு. அதைப்பற்றி கூறுகிறேன் கேள்!

கேளப்பா சரீரமென்ற பிரத்தியாகாரம்
கெடியாக ரெண்டுவிதம் நன்றாய்க் கேளு
நாளப்பா பிரபஞ்சத்தில் மனம்போகாமல்
நலமாகச் சமாதியிலே யிருத்தலொன்று
தாளப்பா நாடிசுத்தி கடந்தபின்பு
தனிப்போன விளமையெல்லா மமைப்பதொன்று
நீளப்பா ரெண்டுவிதம் கண்டுகொள்ளு மக்காள்
நேராக விந்திரிய நேர்மை கேளே. 583

சரீர பிரத்தியாகாரம் இரண்டு வகைப்படும். அவற்றில் மனதை பிரபஞ்ச விஷயத்தில் செலுத்தாமல் சமாதியில் இருத்திவைத்தல் ஒருவகைப்படும். நாடி சுத்தி சித்தியான பின் இந்தந்த நாடிகளில் மனதை நிறுத்திவது மற்றொரு விதம். இதற்கடுத்து இந்திரிய பிரத்தியாகாரம் கூறுகிறேன் கேள்!

நேர்மையொத்த விந்திரியன் தன் தன்போக்கா
னிரையாகப் போகாமற் சமாதியிலே யழைத்து
வார்மையொத்துப் பூட்டுறது ஒன்று மக்காள்
மருவியதோர் பிராணமென்ற பிரத்தியாகாரம்
ஆர்மையொத்து நாடிசுத்தி யானபின்பு
அப்பனே யுச்சிமுத லாட்டத்தோடு
கூர்மையொத்த வாக்கினையும் சோத்திரத்தோடு
குறையாத நேத்திரமு நாசி வாயே. 584

வாயோடு மடிநாக்குக் கண்டம் நெஞ்சு
மருவியதோ ருதரமுட னிடுப்பு நாபி
காலோடு துடைமுழங்கால் பாதங் கேளு
கலந்து நின்ற அங்குட்டந்தனிலே மக்காள்
ஆயோடு பிராணனைத் தாளமிட்டுத் தா
னழைக்கிறது தலைகீழா யப்பாகேளு
வேயோடு பிராணமென்ற பிரத்தியாகாரம்
விளம்புறே னப்புறந்தான் விளம்புறேனே. 585

இந்திரியங்களை தன்தன் போக்கில் விடாமல் சமாதியால் அவற்றை இழுத்து உள்ளுக்குள் பூட்டுவதே இந்திரிய பிரத்தியாகாரமாகும். பிராண பிரத்தியாகாரத்தைப் பற்றி கூறுகிறேன் கேள்! நாடிகள் சுத்தியான பின்பு, கால் கட்டைவிரல், கணுக்கால், முழங்கால், தொடை, குதம், குய்யம், நாபி, நடுமார், கண்டம், புருவமையம், தலையுச்சி போன்ற இடங்களில் பிராணனை நிறுத்தி வைத்தல் பிராண பிரத்தியாகாரம் எனப்படும்.

விளம்புறே னந்தமாங் கரணந்தன்னை
லிரைந்திந்தப் பிரபஞ்சத்தி னுழையொட்டாமல்
கிளம்புறேன் காரியமாம் வஸ்துவோடு
கெடியான சங்கற்ப விகற்பமெல்லா
மளம்புறேன் மறைப்பித்துப் பிராணதாரை
யப்பனே பண்ணுகிற யோகந்தன்னில்
இளம்புறேன் சிரவணமென்ற வேதாந்தத்தி
லியல்பான ஞானத்தில் நிறுத்தல் நன்றே. 586

அந்தக் கரணத்தை உலக விஷயங்களில் சுழல விடாமல் காரிய வஸ்துவுடன் கூட்டி சங்கற்ப விகற்பமெல்லாம் அகற்றி பிராண தாரை என்ற யோகத்தில் நின்று ஞான சொரூபமாய் இருத்தல் கரண பிரத்தியாகாரம் எனப்படும்.

நன்றான காரியமாம் பிரத்தியாகாரம்
நலமான தனதான்யம் பொன்னுமண்ணும்
கன்றான புத்திரனுஞ் சகலவஸ்தும்
கருதுகின்ற நரகம்போற் காண வேண்டும்
ஒன்றான வைராக்யம் வந்ததானா
லுத்தமனே விடுதல் மெத்த வுயர்ச்சிகேளு
பன்றான சர்வசங்கப் பிரத்தியாகாரம்
பரிவாக வேதாந்த விசாரம்பாரே. 587

தாரணை

பாரப்பா சாட்சியெங்கும் நாமாய் நின்றோம்
பரவினின்ற மாயமெல்லாம் நமக்குக் கீழே
நேரப்பா நிரந்தரமும் முரைத்துனின்று
நிலையான பிரபஞ்ச மெல்லா மித்தை யென்றே
யாரப்பா னின்றவனோ வவனே முத்த
னப்பனே யாறுவித மறிவித்தேனான்
தாரப்பா வாறுவிதந் தாரணையைச் சொல்வேன்
சார்ந்துனின்ற பூதமைந்து சமர்த்தாய்க் காணே. 588

காரிய பிரத்தியாகாரம் கூறுகிறேன் கேள்! தனம், தான்யம், பொன், மண், புத்திரன் போன்ற வஸ்துக்களை நரகம்போல் எண்ணி, ஆசையை அகற்றி வைராக்கியம் ஏற்படுதலே காரிய பிரத்தியாகாரம் எனப்படும். சர்வசங்கப் பிரத்தியாகாரம் என்பது, அனைத்துப் பொருட்களின் மீதும் பற்றற்று, வைராக்கியம் கொண்டு, நாம் அனைத்திற்கும் சாட்சியாய் நிற்கிறோம். நமக்கு கீழுள்ளது இப்பிரபஞ்ச மாயை. இது நிலையில்லாதது அவித்தை வடிவானது என்ற பாவனையில் நின்றால் சர்வசங்கப் பிரத்தியாகாரம் கைகூடும். இதற்கடுத்து ஆறுவகையான தாரணையை கூறுகிறேன் கேள்!

சமர்த்தான சரீரத்திற் பஞ்சபூதம் தான்
தானா யிருக்கின்ற தானத்துள்ளே
யமர்த்தான மண்டலத்தில் வர்ணமுத்தி
யப்பனே தரித்துடனே பிராணதாரை
பமர்த்தான பதினாலும் மூலந்தொட்டுப்
பருவமுடன் பிராணனைத் தான் தரிக்கப்பண்ணி
கமர்த்தான கிரமத்தோடே தரிக்கப்பண்ணு
கைகலந்தா லிராப்பகலாய்ச் சுன்னமுண்ணே. 589

சரீரத்திலுள்ள பஞ்ச பூதத்தின் மீதும், அது நிற்கும் ஆதாரத்திலும், சகல மண்டலத்திலும், வர்ணத்திலும், பிராணிகளிலும், பதினாலு ஆதாரத்திலும் மனதை முறையாக லயப்படுத்துதல் தாரணை எனப்படும். தாரணைகள் பழகுங் காலத்தில் நல்ல சுன்ன வகைகளை உட்கொள்ள வேண்டும்.

பரிவங்கக்குரு

சுன்னமுண்ணே சொன்னதெல்லாம் விடையக்கச் சிவக்கும்
சுகமாகப் பறிச்சுன்னம் துடியாமற் கொல்லும்
வன்னமுன்னே சொன்னதெல்லாம் பதினாறு வட்டம்
வாகாக வோடுறது மாயிரமே லில்லை
பன்னமுன்னே பறிச்சுன்னம் பறக்கையிலே யினிசாம்
பாங்கான சரக்கெல்லாம் படுமுன்னே சாகும்
தன்னமுன்னே வேதையிடத் தூரமுநான் காணேன்
சதகோடி சங்கவரை தாண்டும் பாரே. 590

பரிச்சுன்னம் சேர்த்த அனைத்துவித சரக்குகளும் மடிந்து சாகும். இதில் ஏற்படும் வேதைக்கு அளவேயில்லை. இதனால் ஏற்படும் கவுன குளிகை ஒரு வினாடியில் ஆயிரம் காதம் ஓடும். இம்மணியால் சதகோடி அண்டமும் தாண்டலாம்.

தாண்டினதோர் பிலமதற்கு வந்ததென்ன
தங்கத்தில் வங்கமுற்ற சார்பினாலே
வூண்டினதோர் வர்ணமீதி லீனமேது
வுத்தமனே வஸ்துக்கள் சுருக்கினாலே
தோண்டினதோர் குருவுக்குச் சுருக்கங்கென்ன
சொல்லாத சவுக்காரச் சுன்னத்தாலே
சீண்டினதோர் வழலைவங்கம் ரெண்டும் போனால்
சேரவெறும் பொய்யாச்சுச் செபித்துப் பாரே. 591

இச்சுண்ணத்திற்கு இவ்வளவு பலம் ஏிதனில் தங்கத்துடன் வங்கம் சேர்ந்த காரணத்தாலேயேயாகும். இதன் வர்ணத்தில் பங்கம் கிடையாது. பரிவங்கக் குரு எவ்வாறு வெகு எளிதாக சுன்னமாயிற்று என்று கேட்பாயாகில் அதில் சேர்ந்த சவுக்காரச் சுண்ணத்தால் என்றறிக. வங்கமும் வழலையும் சேர்க்காத சுன்னம் பாழாகும்.

சுபமூலம்

செபிக்கிறது வாய்விட்டுச் செபிப்பதல்லாற்
சேர்ந்தசடம் முளைத்தவித்து மூலத்துள்ளே
யபிக்கிறது யாராலு மவிக்கப் போகா
வகன்று நின்ற வதிகமென்ற வன்னிவன்னி
நபிக்கிறதோர் பிரபஞ்சத்தின் வாசனையை விட்டு
நாடுகிற பிறவிமுளை தன்னைத் தீய்த்து
சுபிக்கிறதோர் சுகந்தந்த வுள்ளேகொள்ளும்
துரியா தீத மென்ற மூலந்தானே. 592

மூலத்தில் மனதை வைத்து வாய்விட்டுச் செபித்தால் சடமானது சித்தியாகும். மூலத்தில் யாராலும் அணைக்கமுடியாத அக்கினியுள்ளது. அவ்வக்கினியில் பிரபஞ்ச வாசனையை ஒழித்து மனதை நிறுத்தினால் பிறவிகள் விலகும். இவையாவும் தூரியாதீத ஸ்தானமான மூலாதாரத்தால் பலிதமாகும்.

மூலத்தால் முத்தி பெற்றார் மூலநாயகன்
மூலத்தில் நந்தியல்லோ வுபதேசித்தார்
மூலத்தால் முத்திபெற்றா ரெட்டுப் பேரும்
மூதண்ட விபு கடந்த மூலம் மூலம்
மூலத்தால் விரிந்ததப்பா வுலகமெல்லாம்
மூச்சோடி யடங்கிற்று மூலத்துள்ளே
மூலத்தே சகலமெல்லா மொடுங்கிப் போச்சு
மூலமென்று மூச்சுவிட்டுப் பேசொணாதே. 593

மூலாதாரத்தை சித்தி செய்து அதனால் முக்தி பெற்றார் திருமூலர். நந்திதேவர் ஜோதிமயமாய் இருந்து கொண்டு சித்தர்களுக்கு உபதேசிக்கும் ஸ்தானம் மூலாதாரம். இம்மூலாதாரத்தால் முதன்மையான எட்டு சித்தர்கள் சித்தி பெற்றார்கள். இப்பிரபஞ்சம், தோன்றி மறைந்து ஒடுங்கும் இடமும் மூலாதாரமே.

பேசாதே மூலத்தே யெல்லாந் தோன்றிப்
பேராக விரிந்துனின்று பிரபஞ்சமாதி
நேசாதி போகமெல்லா மனுபோகித்து
நிலையான மூலத்தே வந்து சேரும்
வாசா மகோசரமா முற்பனமும்லயமும்
வரத்தொன்று போக்கொன்று ரெண்டும் சொல்வேன்
ஆசாதி யகாரமது வுற்பனத்தைப் பண்ணு
மறிந்துகொள்ளு முகாரத்தா லயமுமாமே. 594

பிரபஞ்ச வஸ்துக்கள் தோன்றி மறையும் இடமான மூலாதாரத்தில் மனதை வைப்பதால் சகல விதமான போகமும் நமக்கு கிட்டும். இம்மூலாதாரத்தில் எங்கெங்கு

உற்பத்தியும், லயமும் உண்டாகின்றது என்று கூறுகிறேன் கேள்! அகாரம் என்ற ஸ்தானத்தில் உற்பத்தியும் உகாரம் என்ற ஸ்தானத்தில் லயமும் ஏற்படுகிறது.

ஆமப்பா நிஷ்களமாம் வன்னி யொன்றில்
அதன்பேரே நந்தியென்பா ரதுவே போதம்
ஓமப்பா வோங்கார மிதிலேனின்று
ஒராறு தலமுருவி யுயர்ந்து தாழ்ந்து
நேமப்பா பனிரெண்டா னின்றே யாடி
நிலைத்து னின்ற வெட்டினுட களையை வாங்கிக்
காமப்பா லிறைத் திறைத்து மாண்டுபோகுங்
கள்ளருடன் கூடாமற் கருதிப் பாரே. 595

அதற்கு சற்று கீழே நிஷ்களமான ஒரு ஜோதியுள்ளது இதற்கே நந்தி என்றும் ஆனந்த போதம் என்றும் பெயர் வழங்கப்படுகிறது. இச்சோதியில் ஓங்காரம் நின்று பிரகாசிக்கிறது. இவ்விடத்திலிருந்தே ஆறாதாரம் தோன்றி உயர்ந்துள்ளது. இம்மூலத்தில் வாசியானது ஆனந்த நடனமாடிக் கொண்டு பதினாறு கலைகளையும் தன்னுள் வாங்கி லயப்படுத்தி கொள்ளும். இம்மூலாதாரப் பொருளை மனதை ஒருமுகப்படுத்திக் கொண்டு துஷ்டர்களுடன் சேரோமல் அனுதினமும் உள்நோக்கிப் பார்க்க வேண்டும்.

கருதுவது மெதனையென்றால் மூலத்தீயைக்
கண்டவுடன் வாசனையுங் கைவிட்டேகுங்
கருதுவது வாய்ப்பேச்சாற் கருத வேண்டாங்
சாமப்பேய் பிடித்தது போற் கடுகவூன்று
கருதுவது மனமொத்திட்டுள்ளே பார்த்தாற்
கள்ளரஞ்சு பேருமங்கே கடந்து போவார்
கருதுவது மென்னபின்னை யென்றாயானாற்
காலனில்லை மூலத்திற் காலனாச்சே. 596

மூலாதாரத்தில் ஜோதியைப் பார்த்த மாத்திரத்தில் நம்மிடமுள்ள கெட்ட வாசனைகள் அனைத்தும் விலகும். வாய்ப்பேச்சால் நேரத்தை வீணாக்காமல் மூலாதாரத்தில் மனதை வைத்துப் பார்த்தால் (ஐந்து பொறிகளும்) ஐந்து பூதங்களும் ஒடுங்கும். என் சீடனாக இருந்தால் நான் கூறியபடி முறையாக பார்ப்பான். மூலத்தைச் சித்தி செய்யவில்லையெனில் அம்மூலத்திலுள்ள எமனாலேயே மாண்டு போவான்.

காலனுண்டே யென்றுலகர் சொன்னாரானாற்
காலனங்கே வேறில்லை மூலன் காலன்
ஆலமுண்ட சிவனங்கே நடனஞ் செய்தார்
அதைக் கண்ட பதஞ்சலியு மன்பாய்க் கூர்ந்து
கோலமுடன் பிரபஞ்சத்தில் தில்லைக்குள்ளே
கூப்பிட்டு யாட்டிவித்துக் கூத்தைப் பார்த்தார்
சேலையுண்டு கன்னியன்று யாலங்காட்டில்
திருநடன மாடுவித்தாள் சிவனைத்தானே. 597

எமன் (காலன்) என்ற ஒருவன் இருக்கிறான் என்று உலகத்தோர்கள் சொல்வார்கள். இந்த எமன் (காலன்) வேறு யாருமில்லை. மூலத்திலுள்ள மூலப்பொருளே எமனாவான்.

(காலனாவான்). ஆலம் உட் கொண்ட சிவபெருமானும் இங்குதான் (மூலாதாரத்தில்) நடனமாடினார். பதஞ்சலி முனிவரும் இந்த நடனத்தை பார்த்து அன்பினால் சிவனை தில்லைக்குள்ளே அழைத்து நடனமாடச் செய்து ஆனந்தக் களிப்புடன் அதைப் பார்த்தார். கன்னியாகுமரியான தாய் சிவபெருமானை இதேபோல் (பதஞ்சலியைப்போல்) சிவனை அன்பினால் கட்டிப் பிணைத்து ஆலங்காடு என்ற இடத்தில் திருநடனமாடச் செய்தாள்.

தானென்ற வுந்தியிலே சிவமும் சத்தி
சார்ந்துநின்ற விடம்பார்க்கத் துரியவீடு
வானென்ற வபானமது நின்று கொண்டு
மலசலத்தைக் கழிப்பிக்கும் ஏவல் கேட்குங்
கோனென்ற சமானத்திற் கூடிக்கொண்டு
கொண்டதெல்லாம் சமனாகக் கொழிக்கச் செய்யும்
வேனென்ற நெஞ்சான சுழுத்தியுள்ளே
விளங்கியதோ ரணவாச லீசன்றானே. 598

துரியஸ்தானமான உந்தியில் சிவனும் சக்தியும் கூடிநின்றுகொண்டு அபானவாயுவால் மலசலத்தை வெளியே தள்ளுகிறார்கள். மேலும் சமான வாயுவை ஏவி நாம் உட்கொண்ட உணவை உடலெங்கும் சமமாகப் பரவும்படிச் செய்கிறார்கள். இதற்கடுத்து சுழுத்தியின் ஸ்தானமான நடுமார்பில் சக்தியுடன் சிவபெருமான் கூடி.,

தானென்ற விடத்துள்ளே பரனைக் கேளு
தனித்திருந்த பன்னிருவர் காவலாச்சு
கானென்ற பதினொருவர் கருவி கூட்டம்
கைமுறையாய் பிராணனங்கே நிற்குமப்பா
வேனென்ற கொலுவிருந்தா ரீசன்சத்தி
மேலான சொப்பனத்தின் வீட்டைக் கேளு
வூனொன்றிப் பரத்தினுட வடிவுமாச்சு
வுத்தமனே யுதானனங்கே யிருந்தான் பாரே. 599

நிற்கிறார். இவர்களுக்கு பன்னிரண்டு கருவிகள் காவல் புரிகின்றனர். இங்கேதான் பிராணவாயு நின்று கொண்டு, உடலில் உயிரைத் தாங்குகிறது. இதற்கடுத்து சொப்பன ஸ்தானமான கண்டத்தில் ஈசனும் சக்தியும் கூடிகொலுவீருக்கிறார்கள். இவ்விடத்தில் உதானன் என்ற வாயு நிற்கிறது.

இருந்திடத்தே பதினாறு கருவிகூட்ட
வியல்பாகக் கொலுவிருந்தா ரய்யராத்தாள்
அருந்திடத்தே நின்றவனார் விராடனப்பா
வதிலுறைந்தால் முன்பின்னாம் ரெண்டுங்காணும்
சொரிந்திடத்தே யெட்டினுட களையை வாங்கிச்
சூறையிட்ட விடமிதுதான் சூட்டிப்பாரு
தெரிந்திடத்தே கடந்துமெள்ளப் புகுமையத்தே
நேரான சாக்கிரமாந் தலமிதாச்சே. 600

பதினாலு கருவிகள் புடைசூழவீற்றிருக்கும் விராடனின் மேல் மனதை வைத்து நோக்கினால் நிகழ்காலமும், கடந்த காலமும் பளிச்சென்று தோன்றும். இதற்கு அடுத்து உள்ள புருவமையம் சாக்கிரதாஸ் தானமாகும்.

தலத்திலே பதினாலு கருவிகூடச்
சதாசிவனு மனோன்மணியு மதிலே நின்றார்
பிலத்திலே வியானனங்கே கூட நின்றார்
பேரான கொலுவாச்சு பிரபஞ்சமாச்சு
அலத்திலே கருவியென்ற தொண்ணூற்றாறு
மம்மம்மா வதினுடைய தொழிலை செய்யுங்
குலத்திலே பிறந்ததெல்லாந் தோற்ற மாகுங்
குவிந்துநின்ற பூரணத்தின் கொலுவிதாமே. 601

இவ்விடத்தில் பதினாலு கருவிக் கூட்டங்கள் புடைசூழ சதாசிவனும் மனோன்மணியும் வீற்றிருக்கிறார்கள். இங்கே வியானன் என்ற வாயு நின்றுகொண்டு தொண்ணூற்றாறு கருவிகளையும் தத்தம் வேலைகளில் ஈடுபடச் செய்கிறது. இது சகல வஸ்துக்களையும் தோற்றுவித்து மறையச் செய்யும் பூரணத்தின் கொலுவாகும்.

கொலுக்கண்டு சாலஞ்செய் கருவிகூட்டங்
கூடியங்கே யிந்திரியக் கூத்துங்கண்டு
பிலுக்கென்ற மாமாயை பெண்ணினாசை
பெருங்குழியில் விழுகையிலும் பேணிக்காண்பார்
துலுக்கென்ற வடிவெடுத்தாங் காரங்கூட்டிச்
சொக்கிட்ட மயக்கம்போல் தான்மேலாகி
மலுக்கென்ற பாவத்தை மேலே சுத்தி
வாசகீனயிற் கூடிமெள்ள மருவுவாரே. 602

சாலம் புரியும் கருவிக் கூட்டங்கள் இந்திரியங்களுடன் கூடி மாயை என்ற பெண்ணாசையில் சிக்கி மயக்கம் உண்டாகி பூர்வ ஜென்ம பாவத்தை தன் மேலே சுற்றிக் கொண்டு பிறவி எடுத்து மீண்டும் மாயையால் பெண்ணுடன் சேர்ந்து மருவுவார்கள்.

மருவையிலே மனம்புத்தி சித்தமூன்றும்
வாய்திறந்து பேசாதே மறைந்து போகும்
அருவையிலே சகலமுந்தான் பார்த்துக் கொண்டே
யகண்டபரி பூரணந்தா னிருக்குமக்காள்
தருவையிலே யிதற்கொக்கு மிந்தச் சூதம்
சாரணையைத் தீர்த்தபின்பு மக்காள் கேளு
முருவையிலே பளிச்சென்று வான்மீன் போல
வுத்தமனே சூதத்தி னொளியுமாமே. 603

இவ்வாறு ஏற்படும் பெண்ணாசையில் சிக்கி மருவும் பொழுது மனம், புத்தி, சித்தம் இவைமூன்றும் தானிருக்கும் இடம் தெரியாமல் மறைந்து போகும். ஆனால் இத்தனை விதமான செயல்களையும் பூரணப்பொருள் சாக்ஷி பாவத்தில் பார்த்துக் கொண்டுநிற்கும். இதற்கு சாரணை தீர்த்த இரசமணியின் ஒளியும் வானத்திலுள்ள நட்சத்திரத்தின் ஒளியும் உதாரணங்களாகும்.

இரசப்பதங்கக் கட்டு

ஒளியான பதங்கத்தின் முறைமை சொல்வே
னுத்தமனே வெகுசுளுவா மோடும் வேதை
தளியான மனோசிலையுங் கெவுரி வெள்ளை
தாளகமும் வீரமொடு லிங்கமப்பா

நெளியான சிங்கியொடு தொட்டிகூட
நேரான யரிதார மொன்பதுமே கேளு
களியான காசெடைதா னொன்பது மேயப்பா
காணுமிந்த வெடைக்கொக்கச் சூதங் கூட்டே. 604

இரசப் பதங்கத்தின் முறையைச் சொல்கிறேன் கேள்! இப்பதங்கத்தால் வேதையானது வெகு சுலபமாய் சித்தியாகும். மனோசிலை, கஷரி, வெள்ளை, தாளகம், வீரம், லிங்கம், சிங்கி, தொட்டி, அரிதாரம் ஆக ஒன்பதையும் வகைக்கு காசெடை எடுத்து ஒன்றாக சேர்த்தால் ஒன்பது காசெடை மருந்தாகும். இம்மருந்தின் எடைக்கு சூதம் சேர்த்து.

கூட்டியப்பா வழிஞ்சியுட தைலத்தா லாட்டிக்
குறிப்பாகச் சட்டிவைத்து ரவிக்கிண்ணி மூடி
ஆட்டியப்பா சந்துக்குச் சீலை செய்தே
யடுப்பேற்றி யெரித்திடவே பதங்கமேறு
மூட்டியப்பா பதங்கத்தைக் காரமிட்டே
யுருகையிலே நாகத்தை யூட்டக்கட்டும்
தீட்டியப்பா தங்கமொடு நாகஞ்சேர
நேராகக் காரமிட்டு நிலைக்க வாட்டே.. 605

அழிஞ்சித் தைலத்தால் அரைத்து சட்டியிலிட்டு அச்சட்டியின் வாயை தாமிரக் கிண்ணியால் மூடி சந்துக்கு சீலைசெய்து அடுப்பேற்றி எரித்தால் பதங்கமேறும். இப்பதங்கத்துடன் காரம் சேர்த்து உருக்கி அதனுடன் நாகம் சேர்த்தால் கட்டிப்போகும். இதனுடன் தங்கமும், நாகமுஞ் சேர்த்து காரமிட்டு அரைக்க வேண்டும்.

ஆட்டையிலே யைந்துபுகை யுள்ளே சாகு
மப்பனே ரெண்டுபுகை காரத்தாற் சாகும்
நீட்டையிலே ரசம்பிடிக்குந் தங்கந்தின்னும்
நேரான பச்சையிலே தொழிலைச் சொன்னேன்
பூட்டையிலே கட்டுவகை தேடவேண்டாம்
புத்தியுள்ள வாதியென்றால் பொருளைக் காண்பான்
மூட்டையிலே யாசையில்லாச் சூதக்கட்டு
முட்டாலே தூரமெத்த வோடா தென்னே. 606

இவ்வாறு அரைக்கும் பொழுது காரத்தால் புகையடங்கும். ரசமானது தங்கத்தை உட்கொள்ளும். நெறுப்பில்லாமலேயே வேதை முறையை சொன்னேன். வேதைத் தொழிலுக்கும் கட்டுவகை சரக்குகளை தேடிஅலையவேண்டாம். புத்தியுள்ள இரசவாதியென்றால் நான் கூறிய முறைப்படி பொருளை அறிந்து செய்வான். முறையாகக் கட்டாத சூதம் வேதைத் தொழிலுக்கு உதவாது என்றறிவாயாக!

ஓடாமல் சூதமொன்று நாகமொன்று
வுரைத்தாக்கால் மலைகளெல்லாம் பொன்னே யாகும்
ஓடாமல் வங்கமொன்று சூதமொன்று
வுருக்கினா லண்டமெல்லாம் பொன்னாய்ப் போகும்
ஓடாமல் தங்கமொன்று சூதமொன்று
வொன்றுபட்டாற் காயசித்திக் கேமன்சித்தி
ஓடாமல் செம்பொன்று சூதமொன்று
வுரைத்திட்டாற் குருவாச்சு வுற்றுப்பாரே. 607

சூதமும் நாகமும் சேர்த்து செய்த சரக்கால் மலையெல்லாம் பொன்னாகும். வங்கம் சேர்த்து கட்டிய சூதத்தால் அண்டமெல்லாம் பொன்னாகும். தங்கம் சேர்த்து கட்டிய சூதத்தால் காயசித்தியும் கவுனசித்தியும் பலிதமாகும். சூதத்துடன் செம்பு சேர்த்துக் கட்டினால் குருமருந்து சித்தியாகும்.

உற்றுப்பார் மூலிகையால் சூதங்கட்டி
யுருக்கிடினும் பலனேது வுறவுகேளு
கொற்றுப்பார் நாகமிட்டுத் தங்கம் போடு
கொடிதில்லை காயசித்தி லோகசித்தி
இற்றுப்பா ரிதைவிட்டு முன்னே கட்டி
யெடுத்தாட மாட்டார்க ளெருமை மாடு
ஒற்றுப்பா ரிதையெல்லா மாசை யென்றா
லுதையப்பா வாய்மேலே யுதைப்பாய் நீயே. 608

மூலிகையினால் சூதத்தை கட்டி அதை உருக்கு முகத்தில் வைத்து உருக்கினால் பலனொன்றும் இல்லை, சூதத்துடன் நாகமும் தங்கமும் சேர்த்தால் காயசித்தியும் லோகசித்தியும் கைக்குள்ளாகும். இதை அறியாமல் மானிடர்கள் மூலிகையைத் தேடி அலைவார்கள். லோகம் சேர்த்து கட்டுவதை ஏளனமாகப் பேசி நகைத்தால் அவர்களின் வாயில் ஒரு குத்துவிடு.

செம்பு மூலிகை

உதைப்பான மூலிகைதான் சூதந்தன்னை
யுற்றங்கே கட்டுகிற வுண்மை கேளு
நிதைப்பாக மூலிகையிற் செம்புமெத்த
நேரான செடிகளிலே யீயமெத்த
கதைப்பாகத் திதைக்கார மிட்டே யூது
கைமுறையாய் மூலிகையுஞ் செம்பேயாகுந்
துதைப்பாக வச்செம்பென விச்செம்பென்ன
சுணங்களே யிரண்டுமொரு துறையதாச்சே. 609

மூலிகையினால் சூதத்தை கட்டுகிற முறையைக் கூறுகிறேன் கேள். சில மூலிகையில் செம்பும், சில மூலிகையில் ஈயமும் இருக்கும். அச்செடிகளின் இலைகளை காரமிட்டு ஊதினால் மூலிகைகள் செம்பாகும். ஆகையால் இலைகளிலுள்ள செம்பின் சக்தியால்தான் சூதம் கட்டுகிறது. நாம் நேரடியாகவே செம்பை சேர்த்து கட்டுகிறோம். ஆகையால் இரண்டு முறையும் ஒன்றுதான்!

துறையாக வஞ்சுவகை லோகந்தானும்
சூட்டினாற் சூதமது மெழுகேயாகும்
நிறையான தணலுக்குள் நின்றாடாது
நின்றாடக் கருச்சொல்வே னினைவாய்க்கேளு
அறையான லோகங்கள் சுட்ட சுண்ண
மப்பனே புளியாச்சு சூதமாமே
முறையான சுண்ணமென்றால் வாசனைக்குக் கட்டும்
முதிர்ந்துநின்ற சுண்ணமென்றால் முன்பின்னாமே. 610

ஐந்து வகையான லோகமும் சூதத்துடன் சேர்த்தால் சூதம் மெழுகாகும். இச்சூதத்தை நெருப்பிலிட்டால் உருகாது. ஆகவே நெருப்பிலிட்டால் கண்விட்டாட முறை சொல்கிறேன் கேள்! லோகங்களை சுண்ணமாக்கி அதனால் சூதத்தை கட்டலாம். முறையாக செய்த சுண்ணமென்றால் அதன் வாசனை பட்டமாத்திரத்தில் சூதம் கட்டும். உதிர்ந்த சுண்ணமென்றால் அரைக்குறையாக கட்டும்.

தங்கச் சுண்ணம்

முன்னான பதங்கரசம் வராகனொன்று
மூட்டப்பா தங்கமது ரெண்டுக்குள்ளே
மன்னான வீரமொடு துருசுபூசி
மகத்தான வஞ்சுசுண்ணக் குகையில் வைத்துப்
பன்னான சுண்ணாம்பு கீழ்மேலிட்டுப்
பதையாமற் கனக்கவொரு புடத்தைப் போடு
தன்னான பறியோடே ரசமும் சேர்ந்து
தவளம்போல் சுண்ணாம்பாம் சமர்த்தைக் கேளே. 611

முன்செய்த இரசப்பதங்கத்தை ஒரு வராகன் எடை எடுத்து அதை ரெண்டு வராகன் எடை தங்கத்துடன் சேர்த்து உருக்கிக் கொண்டு அதன்மேல் வீரம், துருசு இவை இரண்டையும் பூசி அஞ்சு சுண்ண குகையில் வைத்து அதை மேலும் கீழும் சுண்ணாம்பிட்டு கெஜபுடம் போட்டு ஆறிய பிறகு எடுத்துப் பார்த்தால் தங்கத்துடன் இரசம் சேர்ந்து சுண்ணாம்பாயிருக்கும்.

சமத்தான சுண்ணாம்பு குருவுமாச்சு
சார்வான சரக்கெல்லாந் தடவக்கட்டும்
அமத்தாரால் முடியாது சூதத்தைக் கட்டும்
அப்பனே நவலோகந் தடவியூத
எமத்தான மாகவது சுண்ணமாகு
மிப்படியே யுபரசங்கள் சுண்ணமாகும்
நிமத்தான குருப்பட்டால் வேதை சித்தி
நேரான தொழில்மெத்த நினைவாய்ப் பாரே. 612

இச்சுண்ணாம்பு குருமருந்தாகும். இச்சுண்ணத்தால் எல்லாவகையான சரக்கும் கட்டும். சூதமும் கட்டும். இதை நவலோகத்தின் மேல் தடவி குகையில் வைத்து ஊதினால் லோகங்கள் சுண்ணமாகும். மேலும் இத்தங்கச் சுண்ணத்தால் உபரசங்கள் அனைத்தும் சுண்ணமாகும். வேதைத் தொழில் ஒரு வினாடியில் சித்தியாகும்.

நினைவாய் பதங்கரசம் தங்கங் கூட்டி
நேராகச் செந்தூரக் களங்கம் பண்ணு
மனைவாகப் பதங்கமென்றே யெண்ண வேண்டாம்
மகத்தான தாதுவினாற் சூதப்பத்தாம்
கனவாகக் கண்டத்தைப் போலேயல்ல
கைமுறையாய்ச் சாக்கிரத்திற் கண்டமார்க்கம்
இனமாகக் கூட்டினதை யறிந்து கூட்டு
எடுத்ததெல்லாஞ் சித்தியுமா மெழுந்தே யோடே. 613

பதங்க ரசத்துடன் தங்கம் சேர்த்து செந்தூரமும் களங்கும் செய்து அதை இரசத்துடன் சேர்த்தால் இரசம் கட்டி வேதைத் தொழில் புரியும். இதனால் எடுத்திதெல்லாம் சித்தியாகும். ஆனால் நான் சொன்ன முறைபடி கவனமாக ஒன்றும் தப்பாமல் செய்து பார்.

வீர குரு

ஆடவொரு சவ்வீரக் குருவைக் கேளு
அப்பனே கட்டியதோர் வீரந்தானும்
நீடவொரு பலந்தூக்கி வைத்துக்கொண்டு
நிலையான தங்கமொரு பலத்திலூட்டு
வூடவொரு மணியாக வாங்கிக் கொண்டு
வுத்தமனே வெண்கண்டர் வழலைச் சுண்ணம்
கூடவினிச் சவ்வீரம் நாலுங்கேளு
குறையாம ணாற்காசு நாலு தூக்கே. 614

கட்டிய வீரத்தை ஒரு பலமெடுத்து அதனுடன் ஒரு பலம் தங்கத்தைக் கூட்டி ஒன்றாகச் சேர்த்து உருக்கிக் கொண்டு அதை மணியாக வாங்கிப் பின்னர் துருசு, வெள்ளை, வழலைச் சுண்ணம், சவ்வீரம் ஆகிய நான்கையும் வகைக்கு நான்கு காசு எடை எடுத்துக் கொண்டு, பின்பு

தூக்கியிந்த நாலையுந்தான் கருவாலாட்டிச்
சுகமாக மணிமேலே சேரப்பூசித்
தாக்கியதை யஞ்சுசுண்ணக் குகையில் வைத்துச்
சாதகமாய்ச் சுண்ணமிட்டுப் புடத்தைப் போடு
பாக்கியந்தான் தருவதற்குக் குருவே யாகும்
பாரப்பா விதற்குள்ளே பலந்தான் தூக்கி
வாக்கியமாஞ் சவ்வீர மரைதான் போடு
வாகான துருசுவெள்ளை கால்தான் போடே. 615

இவை நான்கையும் முட்டையின் கருவால் அரைத்து மணியின் மேல் பூசி அஞ்சு சுண்ணக் குகைக்குள் வைத்து மேலும் கீழும் சுண்ணமிட்டுப் புடம் போட்டால் வீரம் குருவாகும். இக்குருவை ஒரு பலமெடுத்து அரைப்பலம் சவ்வீரமும் சேர்த்து மேலும் துருசும், வெள்ளையும் வகைக்கு கால் கலம் சேர்த்து

போட்டெல்லாம் பொடிசெய்து வைத்துக் கொண்டு
போட்டாலே தசாண்டத்தின் புதுமைசொல்வேன்
ஆட்டெல்லா மினிக்கேளு கருடன் கோழி
யப்பனே மயிலோடு குருவிகாக்கை
நீட்டெல்லா மஞ்சுவிதம் பறப்பினத்தைச் சொன்னேன்,
நேரான வூர்வன வினிலையைக் கேளு
யூட்டெல்லா முடும்போ மளுங்குமாமை
யுறவான முதலையொடு முற்றுபாம்பே. 616

பாம்போடு மூர்வன விலஞ்சுவிதஞ் சொன்னேன்
பருவமுடன் றசாண்டத்தின் பரிசுகேளு
காம்போடு பத்தண்டம் பணம்போற் போர்த்துக்
கைமுறையாய்ச் சவ்வீரக் குருவைக் கேளு

தாம்போடு பணவெடைதா னதிலேபோடடுத்
தாக்கிடுவாய் குக்குடமா மண்டத்துள்ளே
வேம்போடு வேகமப்பா ரவியில் வைப்பாய்
வெந்துள்ளே தைலம்போல் விளங்குங்காணே. 617

ஆக இவை நான்கையும் பொடி செய்து வைத்துக் கொண்டு நான் கூறுவதை கவனமாக கேள்! பத்து வகையான முட்டை வர்க்கத்தைக் கூறுகிறேன். அவை யாவன கருடன், கோழி, மயில், குருவி, காக்கை ஆகிய ஐந்து வகையான பறவை இனத்தின் முட்டையும் பின்பு உடும்பு, அளுங்கு, ஆமை, முதலை, பாம்பு ஆகிய ஐந்து வகையான ஊர்வனவற்றின் முட்டைகளையும் எடுத்துக் கொண்டு அம்முட்டைகளின் மேல் சிறு துவாரமிட்டு அத்துவாரத்தின் வழியாக முன்பு பொடி செய்து வைத்துள்ள மருந்துகளைப் போட்டு ரவியில் வைத்தால் தைலமாகும்.

காணப்பா வஞ்சுவிதப் பறப்பினமுந் தைலங்
கைமுறையா யிப்படியே கண்டு பண்ணு
பூணப்பா நவலோகப் பரிசத்தில் வேதை
புகழான வறுபத்து நாலுமாற்று
தோணப்பா வுபரசமும் பரிசத்திற் பொன்னும்
தொலையாது யிதன்வேதை சொல்லமாட்டேன்
ஊணப்பா வூர்வனவா மண்டமஞ்சு
முத்தமனே தமர்போட்டு முன்போற் செய்யே. 618

செய்துபா ரஞ்சண்ட மெழுகே யாவுஞ்
சிவசிவா தாம்பிரத்தில் வேதையாகு
மெய்துபார் கபரியொடு சவ்வீர மெழுகி
லென்ன சொல்வே னவலோகம் புகையிற் பொன்னாம்
கைதுபார் மாற்றப்பா நூற்றுப் பத்துக்
கனகந்தான் சிவப்புநிற மாகநிற்கும்
கொய்துபா ருபரசமும் மண்மணலுங் கூடக்
கொடும்பகைக்குப் பொன்னாகும் கூறினேனே. 619

சூரியனில் வைத்துள்ள அஞ்சு வகையான பறவையின முட்டைகளும் தைலமாகும். இத்தைலத்தால் நவலோகத்திலும், பாஷாணத்திலும், உபரசத்திலும், நூறு மாற்றுக் கொண்ட பரிசவேதை கிட்டும். அஞ்சு வகையான ஊர்வனத்தின் முட்டைகளும் ரவியின் ஒளியால் மருந்துடன் கூடி மெழுகாகும். இம்மெழுகால் செம்பு பொன்னாகும். பஞ்சலோகமும் பொன்னாகும். பொன் என்றால் சாதாரண பொன் என்று நினைத்துக் கொள்ளாதே. நூற்றுப் பத்து மாற்றுடைய சிகப்புநிற பொன்னாகும். இம்மெழுகால் மண், கல் போன்றவையும் பொன்னாகும்.

கூறினேன் ரசாண்டத்தின் கூறையான்றான்
கொள்ளையோ கொள்ளையதில் வர்ணமெத்த
தேறினேன் யுகம்பார்த்துத் தேறமாட்டேன்
சித்தைப்போ லிதுவுமொரு வாதசித்து
ஆறினே னின்னமுண்டோ காணேன் காணே
னாத்தாளைக் கேட்டாலு மடங்காதென்றாள்
மாறினேன் சிவநூலே தாய்நூலாச்சு
மதத்தோர்க்கும் சிரத்தோர்க்கும் வழியொன்றாச்சே. 620

மேலும் இதேபோல் பலவகையான முட்டைகளிலும் வேதை உண்டாகும். இதை ஒரு யுகம் முழுதும் செய்து பார்த்தாலும் அடங்காது. சித்துகளில் இது ஒருவகையான வாத சித்தாகும். இதில் இன்னும் எத்தனையோ முறைகள் உள்ளன. அதை நானும் அறிந்ததில்லை. தாயாரைக் கேட்டாலும் தாயும் இது வாக்கிற்கு அடங்காது என்று கூறிவிட்டாள். ஆகவே அவள் கூறியவரை நான் இந்த நூலில் சொல்லியுள்ளேன். இந்நூல் உலக மக்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகும்.

கேச திராவகம்

ஒன்றான கேசத்தைத் திராவகமாச் சொல்வேன்
உத்தமனே மூன்றுபத்து பலந்தான் கேசம்
நன்றான ரெண்டுபத்து பலந்தான் கேளு
நலமான வெடியுப்பு நண்பாஞ் சீனம்
பன்றான பதினைந்து பலந்தான் போடு
பருவமுடன் பலம்பத்து சாரம் போடு
கன்றான சவுட்டுப்பு பலந்தான் பத்து
கைமுறையாய் வலுத்ததொரு துருசுகேளே. 621

துருசியப்பா வறுத்தபொடி பலந்தானெட்டு
சுகமான வீரமது பலந்தானஞ்சு
அருவியப்பா பலமஞ்சு நாயுருவியுப்பு
ஆகாகா வாழையுப்பு பலந்தானாலு
துருசியப்பா நாலுபலந் தாழையுப்பு
தன்னிலொக்க நாலுபலங் கெந்திபோடு
வருசியப்பா மூன்றுபலந் துத்தம் போடு
வாகான சூடனொரு பலந்தான் போடே. 622

தலை முடி முப்பது பலம், இருபது பலம் வெடியுப்பு, பதினைந்து பலம் சீனம், சாரம் பத்து பலம், சவுட்டுப்பு பத்து பலம், வறுத்த துருசு எட்டு பலம், வீரம் ஐந்து பலம், நாயுருவியுப்பு ஐந்து பலம், வாழையுப்பு நாலு பலம், தாழையுப்பு நாலு பலம், கெந்தி நான்கு பலம், துத்தம் மூன்று பலம், சூடன் ஒரு பலம்,

போட்டதொரு சரக்கெல்லாம் பொடியாய்ப்பண்ணிப்
புகழான அஞ்சுவகை மித்திரத்தை வெருவி
நீட்டதொரு பாவனைதான் தீர்ந்தபின்பு
நேரான அஞ்சுவகை புளியைப் பூட்டு
காட்டதொரு விதுவெல்லாம் கேசத்திற் புரட்டிக்
கைமுறையா யுலர்த்தியொரு கலயத்திற்போடு
வூட்டதொரு அதன்மேலே செங்கற்சில்லை
யுத்தமனே பெருவிரல்போல் தமரைப் போடே. 623

இச்சரக்கையெல்லாம் பொடி செய்து ஐந்து வகையான மித்திரத்துடனும் பாவனை செய்து அதனுடன் ஐந்து வகையான புளியைப் போட்டு கேசத்தில் (தலைமுடியில்) புரட்டி, உலர்த்தி கலயத்திற் போட்டு அக்கலயத்தின் மேல் செங்கல் சில்லை வைத்து மூடி அச்சில்லில் கட்டை விரல் அளவு துளை போட்டு,

தமரிலே மூசைவைத்துப் பணம்போற் போத்துத்
தனித்ததொரு மேருவிலே விரல்போற் பொத்து
அமர்மேலே யிரண்டுதா னொன்றாய்ச் சேர்த்து
அப்பனே கொக்குப்போற் சாய்த்து வைத்துக்
கமர்மேலே சந்துக்குச் சீலைசெய்து
காய்ந்தபின்பு அடுப்பேற்றிக் கனலை மூட்டு
குமர்மேலிற் குப்பியிட மூக்கிற் பீங்கான்
கொள்ளிடவே சாணிவைத்துக் கொள்ளுவாயே. 624

அத்துளையின் மேல் மூசை வைத்து அம்மூசையிலும் ஒரு துளையிட்டு இரண்டு துளைகளை ஒன்றாய் சேர்த்து ஒரு குழாய் சொருகி கலயத்தை சாய்த்து வைத்து சந்துகளுக்கெல்லாம் சீலை செய்து அடுப்பேற்றி தீயை மூட்டி குழாயின் நுனியில் ஒரு பீங்கான் குப்பியை வைத்து,

கொள்ளிடவே தீயெரிக்கக் குப்பிமூக்கிற்
குப்பென்று புகையோடே சலந்தான் வீழும்
நள்ளிடவே புகைநின்றால் திராவகமு நிற்கும்
நன்றான பதமிதுதான் நாட்டிப்பாரு
அள்ளிடவே திராவகத்தை வாங்கிக் கொண்டு
அப்பனே முன்போலே சரக்கைத் தூக்கித்
தள்ளிடவே திராவகத்தாற் பாவுனையைப் பண்ணித்
தனித்ததொரு கேசத்தைப் பிசறிப் போடே. 625

போட்டுலர்த்திக் கலயத்தி லெடுத்து மக்காள்
புகழாக முன்போலே யெந்திரத்தைக் கட்டி
நாட்டுலர்த்தி முன்போலே திராவகத்தை வாங்கு
நலம்பெறவே வெகுவேகம் நண்பாய்க் கேளு
ஆட்டுலர்த்தி யிப்படியே யஞ்சுதரம் வாங்கு
அரகரா குப்பியைத்தான் கரைத்துப் போடுங்
கூட்டுலர்த்திப் பீங்கானுந் தண்ணீராகுங்
கூறரிது கேசமென்ற கொள்ளை நீரே. 626

கணக்க எரித்தால் குழாயின் வழியாக புகையோடு நீர் வடியும், புகை நின்றவுடன் திராவகமும் நிற்கும். இப்பதத்தை அறிந்து இத்திராவகத்தால் முன்கூறிய சரக்கனைத்தையும் பாவனை செய்து கேசத்துடன் பிசிறி முன்போல் கலயத்திலிட்டு எரித்து திராவகம் வாங்க வேண்டும். இவ்வாறு ஐந்து முறை மீண்டும் மீண்டும் திராவகத்தால் பாவனை செய்து எரித்தால் அதிக அமிலத் தன்மைக் கொண்ட திராவகம் கிட்டும். இத்திராவகத்தை முறையாக செய்தால் எப்பொருளையும் கரைத்துவிடும். பீங்கான் மற்றும் கண்ணாடிக் குப்பி போன்றவையும் கரைந்து நீராகும். இவ்வளவும் கேசத்திராவகத்தின் மகிமையாகும்.

கொள்ளையென்ற கேசத்தின் திராவகத்தையப்பா
குழப்பிவைக்கப் பாத்திரத்தைச் சொல்லக்கேளு
பள்ளையென்ற வரக்காலே குப்பிபோலப்
பண்ணியதில் வார் திராவகத்தை யசையொட்டாது

நள்ளையென்ற சூதமொரு பலத்தினுள்ளே
நாட்டப்பா மூன்றுதுளி சாம்பலாகும்
விள்ளையென்ற சாம்பலிலே தங்கத்தைச் சேர்த்து
மேலிடித்துப் பொடியாக வரைத்து வையே. 627

திராவகத்தை வாங்கும் பாத்திரத்தின் விபரம் கூறுகிறேன் கேள். அரக்கால் பாத்திரம் போல் செய்து அதில் திராவகத்தை வாங்கினால் பாத்திரம் உருகாது. சூதம் ஒரு பலமெடுத்து அதில் மூன்று துளி திராவகம் விட்டால் சூதம் சாம்பலாகும். இச்சாம்பலில் தங்கத்தை சேர்த்து பொடிப் பொடியாய் அரைத்துக் கொண்டு,

வைத்தபொடி யொன்பதி னாயிரத்துக் கொன்று
மாட்டிடவே பதினாறு மாற்றுமாகும்
கைத்த வுபரசத்தோடு கல்லுச் செங்கல்
காட்டிடவே திராவகத்தைச் சத்தேயாகும்
மொய்த்த தண்ணீர் தங்கத்திற் குத்தினாக்கால்
மூச்சாடு முன்னையப்பா தங்கத் தண்ணீர்
ஒத்தவினங் கண்டுகண்டு வேதை பார்க்க
ஓகோகோ கரையில்லை யூணிப்பாரே. 628

இப்பொடியை ஒன்பதாயிரத்துக்கு ஒரு பங்கு சரக்குகளுடன் சேர்த்தால் பதினாறு மாற்று தங்கமாகும். அது மட்டுமின்றி உபரசம், கல், செங்கல் போன்றவைகள் திராவகத்தால் சத்தாகும். இத்திராவகத்தை தங்கத்துடன் குத்தினால் தங்கமானது தண்ணீர் போலாகும். இந்த தங்க நீரினால் வேதை செய்து பார்த்தால் அளவிட முடியாத மாற்று கிட்டும்.

ஊணியப்பா தங்கமென்றால் தண்ணீர்தன்னை
யுறவாகுஞ் சூதத்தைக் கட்டிப் போடும்
ஆணியப்பா விந்தரசம் சாரணைக்கு நன்று
அம்மம்மா பூநாகமுன்னே யூட்டிப்
பாணியப்பா வுபரசத்தைப் பின்னே யூட்டிப்
பருவமுடன் நவலோக மதன் பின்னூட்டு
வாணியப்பா நவரத்ன மூட்டித் தீர்ந்தால்
மகத்தான சூதமிது பரிசமின்னே. 629

தங்கநீரை சாதாரணமாக எண்ணாதே. இத்தங்க நீரில் சூதம் கட்டி மணியாகும். இந்த மணியை சாரணை தீர்ப்பதற்கு பயன்படுத்தினால் மிகவும் நன்று. முதலில் இம்மணிக்கு பூநாக சத்தையூட்டி, அதன்பிறகு உபரசத்தின் சத்தையும் பிறகு நவலோகத்தின் சத்தையும், அதன் பின்னர் நவரத்தினங்களின் சத்தையும் ஊட்டி தீர்த்தால் முழு குளிகையாகும். இதனால் பரிசவேதை பலிக்கும்.

பரிசமுமாந் தெரிசமுமா மீயத்தாற் பொன்னாம்
பாழானசாவு பொய்யாந் தேகம் பொன்னாம்
வரிசமுமாய் வாழ்ந்ததெல்லாம் க்ஷணம்போல் தோன்றும்
வாய்விட்டால் மேருவிலே மருவலாகும்

புரிசமுமாய் மதுவையுண்டு சித்தரோடு
பேசலாம் பதத்தளவு புகழாய்க் கூடிச்
சரிசமமா யிதற்கேது மொப்பேதென்றாற்
சச்சிதானந்த மென்ற சாரமெய்யே. 630

அது மட்டுமின்றி ஈயம் பொன்னாகும், சாவு பொய்யாகி தேகம் பொன்னாகும், வருஷமெல்லாம் ஒரு க்ஷணத்தை போல் தோன்றும் இக்குளிகையை வாயிலிட்டால் கெவுனசித்தி ஏற்படும். பிரமரந்திரத்திலிருந்து அமிர்தம் கசியும், அதை உட்கொண்டு சித்தர்களோடு பேசி மகிழலாம். இக்குளிகை எதற்கு நிகரென்றால் சச்சிதானந்த பொருளுக்கு சமமாகும்.

ஒப்பான சாரணையைத் தீர்க்கச் சூத
முத்தமனே வெள்ளிக்கு மொப்பு மொப்பும்
கொப்பான வேதையிதில் கொஞ்சம் கொஞ்சம்
குழந்தைக்கு மரனுக்குங் கூறதொக்கு
மப்பாகேள் சூதமென்றே சிவனோடொக்க
வணைத்து மெள்ள வுபரசமாம் பெண்ணைச்சேரு
நப்பாக விடுவித்தால் பூரணத்தைக் காட்டும்
நாட்டியிதை யறியாதோ னழுவல்தானே. 631

சாரணை தீர்த்த சூதம் வெள்ளிக்கு சமமாக பிரகாசிக்கும் இதில் புரியும் வேதையை குழந்தைக்கும் தெய்வத்திற்கும் சமமாக கூறலாம். சூதமென்ற சிவனுடன் உபரசம் என்ற பெண்ணை சேர்த்தால் பூரணத்தைக் காட்டும்.

தானென்ற திராவகத்தில் வழலைபோட்டுச்
சமரசமாய்க் கேசத்தைத் தேய்த்துக் கொண்டு
வேனென்ற சட்டியிலே வறுத்தாயானால்
விடுபட்டு கேசமுமோ சுண்ணமாகும்
கானென்ற மயூரமொடு கவரிமான்றான்
கைமுறையாய் மயிரெல்லாம் சுண்ணமாகும்
ஆனென்ற விதையரைத்தே யூதிப்போட
வம்மம்மா கடுஞ்சுண்ண மாட்டைக் கேளே. 632

கேசத்திராவகத்துடன் வழலையை போட்டு கேசத்தை தோய்த்து சட்டியிலிட்டு வாட்டினால் கேசம் சுண்ணமாகும். இதைப்போலவே கவரிமான் முடியும், மயிலிறகும் இத்திராவகத்தால் சுண்ணமாகும். தலைமுடி சுண்ணத்தை மீண்டும் திராவகத்தால் அரைத்து குகையில் வைத்து ஊதினால் கடுஞ்சுண்ணமாகும். இதனுடைய பெருமையை கூறுகிறேன் கேள்.

கேளப்பா சுண்ணத்தில் தங்கங் கூட்டிக்
கெடியாக வில்லைகட்டி யூதிப்போடு
வாளப்பா விச்சுண்ணம் வீசமெடை வாங்கி
மருவிவிடு ஒருசேரை ரசத்துக்குள்ளே
வேளப்பா தீயிட்டு மெள்ளவூது
விளங்கியது கண்விட்டுப் பொன்னுமாகும்
நாளப்பா விவ்வேதை கண்டானானால்
நலம்பெரிய விந்திரனு நாயனாமே. 633

இச்சுண்ணத்துடன் தங்கம் சேர்த்து அரைத்து வில்லையாகத் தட்டி குகையில் வைத்து ஊதினால் சுண்ணமாகும். இச்சுண்ணத்தை ஒரு சேர் எடுத்து ரசத்துடன் சேர்த்து தீயிலிட்டு மெதுவாக ஊதினால் ரசம் கண்விட்டாடிப் பொன்னாகும். இவ்வேதையை யார் செய்கிறார்களோ அவர்கள் மூலநாயனாருக்குச் சமமாவார்கள்.

நாயனென்ற கேசத்தின் சுண்ணம்போல
நலம்பெரிய மயூரமயிர்ச் சுண்ணம்பண்ணு
தாயனென்ற கவரிமான் சுண்ணம்பண்ணு
தனிப்பெரிய கரடிமயிர்ச் சுண்ணம்பண்ணு
வேயனென்ற கேசமெல்லாஞ் சுண்ணம்பண்ணு
வெவ்வேறே துறைகோடி விளம்ப மாட்டேன்
ஆயனன்று ஆடியதோர் மாயம்போல
அம்மம்மா மயிர்ச்சுண்ண மாடுங் காணே. 634

காணப்பா கவரிமான் சுண்ணத்தோடே
கலந்திடிலோ சவ்வீரம் சிவப்பு மெத்த
பூணப்பா சிவப்பெடுத்துச் சீனம் மேலே
புகழான ரவியிலிடச் சீனச் சுண்ணம்
ஆணப்பா விச்சுண்ணம் வராகனொன்று
அப்பனே வெண்ணெயொரு பலத்திற்போடு
தோணப்பா வெரித்து மெள்ளப் புடத்தைப்போடச்
சொற்பெரிய வெண்ணெயது புட்டுமாமே. 635

தலைமுடியைப் போல், மயிலிறகு, கவரிமான் முடி, கரடிமயிர் போன்றவைகளை சுண்ணம் செய்தால் பலவகையான தொழில்கள் புரியலாம். இதை நான் தனித்தனியாக சொல்லப் போவதில்லை. கிருஷ்ண பரமாத்மா செய்த லீலைபோல் இந்த மயிர்ச் சுண்ணமும் லீலை புரியும். கவரிமான் சுண்ணத்துடன் சவ்வீரம் சேர்த்தால் மிகவும் சிவந்தநிறம் கொள்ளும். இச்சிவப்புநிறங் கொண்ட சவ்வீரத்தை சீனத்தின் மேல் பூசி சூரிய ஒளியில் வைத்தால் சீனம் சுண்ணமாகும். இச்சீன சுண்ணத்தை வராகனிடை எடுத்து ஒரு பலம் வெண்ணையுடன் சேர்த்து புடம் போட்டால் வெண்ணை புட்டு போலாகும்.

புட்டெடுத்தக் கருவாலே யரைத்துக் கட்டிப்
புகழாக வூதிடவே சுண்ணமாகும்
கட்டெடுத்த பாஷாண மறுபத்தாறும்
காற்றடித்தாற் சூதஞ்சாம் கெந்திசாகும்
மட்டெடுத்த வேலையல்ல வெண்ணெய்ச் சுண்ணம்
வாசனைக்குக் கெந்தகமோ சலவையாகும்
நெட்டெடுத்த லவணமுதற் காரசாரம்
நிமிஷத்திற் கட்டியது தந்தமாமே. 636

இப்புட்டை முட்டையின் கருவால் அரைத்து வில்லை போல் தட்டி குகையில் வைத்து ஊதினால் சுண்ணமாகும். அறுபத்து நாலு பாஷாணம் மற்றும் சூதம், கெந்தி, போன்றவையெல்லாம் இச்சுண்ணத்தின் காற்றுப்பட்ட மாத்திரத்தில் மடிந்து சாகும். அதுமட்டுமின்றி லவணம் முதல் காரசாரம் வரை தந்தம்போல் கட்டும்.

தந்தம்போ லிருகிநின்ற காரசாரஞ்
சகச்சாலக் கூத்தெல்லாந் தனக்காகச் சென்று
பந்தம்போ லெரிகிறதோர் வெண்ணெய் மக்காள்
பாக்கோடு வெற்றிலைக்குச் சுண்ணாம்பானா
லந்தம்போய் வெளிகடந்து மேலேயோடு
மம்மம்மா குளிகையுமாஞ் சித்துக்காகு
மெந்தனம்போல் சிலநூலைக் கடந்துபாரு
எளிதாகச் சொல்வார்கள் சொல்வார்தானே. 637

இவ்வாறு செய்கை புரியும் வெண்ணைச் சுண்ணத்தை வெற்றிலையுடன் பயன்படுத்தினால் பரவஸ்துவான வெளியில் கொண்டுபோய் சேர்க்கும். மேலும் இச்சுண்ணம் குளிகை முடிப்பதற்கும் சித்து விளையாடுதற்கும் பயன்படும் என் நூலைப் போல் வேறு எந்த நூலிலாவது இதைப்போன்று கூறியிருக்கிறார்களா என்று பார்! யாரும் சொல்லியிருக்க மாட்டார்கள்.

தானென்ற வெண்ணெய்போல் காயச்சுண்ணம்
சாதகமா யபின்மருந்து பாகுஞ்சுண்ணம்
வானென்ற விதன்வேதை மட்டோவில்லை
வாசனைக்குச் சூதஞ்சாஞ் சரக்குச் சாகும்
கோனென்ற வேதையுமோ கோடிக்கோடும்
குறிப்பென்ன தாவரத்தின் ருதுவின் வேதை
வேனென்று விரிந்தாக்கா லண்டங்கொள்ளா
வேதைசொல்ல வேடுமில்லை விளங்கிக் காணே. 638

வெண்ணையைப் போன்று பெருங்காயத்தையும், சுண்ணமாக செய்தால் அதிக வேதை கிட்டும். இப்பெருங்காயச் சுண்ணத்தின் வாசனை பட்ட மாத்திரத்தில் சகலசரக்கும் சாகும். சூதம் கட்டும். தாவர ருதுவான இப்பெருங்காய சுண்ணத்தின் வேதையை விரித்து சொன்னால் உலகமே கொள்ளாது. இதைப்பற்றி முழுமையாக கூறியவரும் இல்லை. எழுதியவரும் இல்லை.

காணப்பா சீனமென்ற சுண்ணம் போட்டுக்
கட்டான கொடியிலையைத் துவைத்துப் போட்டு
பூணப்பா தண்ணியிலே பிசைந்து வைக்கப்
புகழான யீரலைப்போல் உறைந்து போமே
தோணப்பா விதன்மேலே பத்துக்கொன்று
தூவிடுவாய் சவுக்காரச் சுண்ணமப்பா
ஊணப்பா வடுப்பேற்றி யெரித்தாயானா
லுத்தமனே புட்டாகு முரைத்துப் பாரே. 639

முன் செய்த சீனச் சுண்ணத்தை இலைக கொடியுடன் சேர்த்து துவைத்து தண்ணீரில் வைத்தால் ஈரலைப் போல் உறைந்து போகும். இதன் மேல் பத்துக்கு ஒரு பலம் சவுக்கார சுண்ணம் போட்டு அடுப்பேற்றி எரித்தால் புட்டுப்போலாகும்.

உரைத்து நின்ற புட்டெடுத்துச் சவுக்காரமிட்டு
வூதிடவே மதுலைப்பூப் போலே சுண்ணம்
மரைத்து நின்ற சலந்தானே சுண்ணாம்பானால்
வாய்திறக்கப் போகாது மர்யியாட்டு

விரைத்து நின்ற ரசம்கட்டும் தாதுகட்டும்
வேண்டியதோர் லோகமெல்லாம் சுண்ணாம் பாகும்
அரைத்து நின்ற சுண்ணாம்பாம் சரக்குக் கெல்லா
மப்பனே வீரத்தைக் கூட்டியாட்டே. 640

இப்புட்டை மீண்டும் சவுக்கார சுண்ணமிட்டு ஊதினால் மாதுளைப் பூப்போல் சுண்ணமாகும். சலமானது சுண்ணமானானல் அதன் பெருமை வாயிலடங்காது. இச்சுண்ணத்தால் ரசம் முதல் அறுபத்து நாலு தாதுவும் கட்டும். சகல லோகமும் சுண்ணமாகும். சரக்குகளுடன் சுண்ணத்தை சேர்ப்பதற்கு முன்பு வீரத்தை சேர்த்து அரைத்துக் கொள்.

ஆட்டையிலே சிவக்காட்டால் சுண்ணாம்பல்ல
வப்பனே யெறியாதே கருவாலூதி
நீட்டையிலே சிவக்குமட்டுந் தெளிவாயூதி
நிலையாகச் சிவந்த பின்பு தொழிலையாடு
பூட்டையிலே தட்டுருவில் சரக்கிற் புக்கும்
பொன்முதலாம் நவலோகம் பொருமி நீறு
மீட்டையிலே நவலோகத் தூளால் சூதம்
மெய்மறந்து சொக்கியுள்ளே விரைத்துப் போமே. 641

வீரத்துடன் சேர்த்தரைக்கும் பொழுது சுண்ணம் சிவக்க வேண்டும். சிவக்கவில்லை என்றால் எறிந்துவிடாதே சுண்ணத்தை கருவால் (முட்டையின் கருவால்) அரைத்து குளிகையில் வைத்து ஊதவேண்டும். இவ்வாறு சுண்ணம் சிவக்கும் வரை அரைத்து ஊத வேண்டும். சுண்ணம் சிவந்த பிறகு சகல தொழில்களுக்கும் பயன்படுத்தலாம். இச்சுண்ணத்தால் நவலோகங்கள் சுண்ணமாகும். இந்நவலோக சுண்ணத்தால் சூதம் சொக்கிப் போகும்.

விரைத்ததென்றால் சூதமென்ற வாளைதானும்
வேறேகோடி சரக்கிடோ வேதையீடோ
வுரைத்த தென்றால் கல்லுப்புச் சுண்ணமுன்னே
யோகோகோ வாதமிதி லொடுங்கிப் போச்சு
நிரைத்த தென்றால் கல்லுப்பைக் கட்டப்போகா
நேரான முழுவாதி கட்டவேணு
மரைத்துநின்ற மனோன்மணிக்கு நாதம் நாதம்
வாய்ப்பேச்சோ வுப்பென்றால் வாய்மேற் போடே, 642

சூதம் விரைந்து சொக்கினால் இதற்கு ஈடாக வேறொன்றையும் கூறமுடியாது. இவ்வாறு சூதம் சொக்கினால் தண்ணீர் சுண்ணத்தைக் கொண்டு கல்லுப்பைக் கட்டி சுண்ணம் செய்ய வேண்டும். கல்லுப்பைக் கட்டி சுண்ணம் செய்தால் சகலவாதமும் கைக்குள்ளாகும். முழுவாதியாக இருந்தால் முதலில் கல்லுப்பைக் கட்டவேண்டும். இதற்கு மனோன்மணி நாதம் என்று பெயர். இதைப் பற்றி வாய் பேசுபவர்களை (வாயால் மட்டும் நான் கட்டி விடுவேன் என்று சொல்பவர்களை) ஓங்கி ஒரு குத்துவிடு.

கேசத் தைலம் (வேறு)

போடப்பா ரோமமென்ற தைலஞ் சொல்வேன்
,புகழாக விளவயதாம் கேசந்தன்னை
நீடப்பா நாலுபத்துப் பலந்தான் தூக்கி
நேராகப் பொடிப் பொடியாய் நறுக்கிக் கொண்டு

ஊடப்பா சாரமொரு பலந்தான் பத்து
வுத்தமனே கல்லுப்புச் சுண்ணமஞ்சு
கூடப்பா வஞ்சுவகை லவணந்தானுங்
குறையாம லஞ்சுபலங் கூடப் போடே.. 643

கூடவிடு மூன்று பலம் வீரமப்பா
குறையாமல் மூன்றுபலங் கெந்திபோடு
நாடவிடு விதுவெல்லாம் முலைப்பாலா லாட்டி
நலம்பெறவே யெருக்கம்பால் விட்டேயாட்டி
தேடவிதைக் குழம்பாக்கிக் கேசத்தைப் பிசறிச்
சேர்த்துலர்த்தி மேருவிலே செலுத்தி மூடி
ஆடவிதைக் கழுதை லத்தி கீழ்மேலிட்டு
அப்பனே குழிக்குள்ளே மூடி வையே. 644

ரோம தைலம் கூறுகிறேன் கேள்! இளம் வயதினருடைய கேசம் நாற்பது பலம் எடுத்து அதைத் துண்டு துண்டாய் நறுக்கி வைத்துக்கொள். பத்து பலம் சாரம், ஐந்து பலம் கல்லுப்புச் சுண்ணம், ஐந்து வகை லவணம் வகைக்கு ஐந்துபலம், மூன்றுபலம் வீரம், மூன்றுபலம் கெந்தி இவையாவற்றையும் முலைப்பால் விட்டரைத்துப் பிறகு எருக்கம்பால், விட்டரைத்துக் குழம்பாக்கி, இக்குழம்பில் நாற்பது பலம் கேசத்தை பிசறி, உலர்த்தி மேருவில் வைத்து மூடி, குழித்தோண்டி அதில் கழுதை லத்தி போட்டு அதன் மேல் மேருவை வைத்து அதே சாணியால் மூடிப் புதைத்து வைக்க வேண்டும்.

வைத்ததுவும் பட்சமொன் றானபின்பு
வாங்கியதை வாய்க்குள்ளே மயிரைவிட்டு
கைத்ததுவே பூப்புடத்தில் தைலம் வாங்கு
கரையில்லை தைலத்தின் வேதை சொல்ல
வுய்த்ததுவு மித்தைலம் படிதானொன்று
வுத்தமனே பீங்கானில் வார்த்துக் கொண்டு
பைத்ததுவும் துரிசியென்ற சுண்ணந்தானும்
பாங்காகப் பலமொன்று நிறுத்து வையே. 645

வைத்துமே கலையத்து ளப்பாகேளு
வாகாக குப்பிவைத்துச் சீலைசெய்து
ஒத்தாப்போல் மேஷத்தின் யெருவைப் போட்டு
உத்தமனே புடம்போடத் தயிலம் வீழும்
கைத்தலத்தில் நெல்லிக்காய்ப் போலே வாதம்
காட்டுகிறேன் நிமிஷத்தில் காணுமக்காள்
அத்தவிந்தத் தயிலத்தில் கறண்டி வார்த்து
அப்பனே யிதற்கெட்டுச் சூதம்வாரே. 646

பதினைந்து நாள் சென்ற பிறகு அதை எடுத்து பூப்புடத்தில் தைலம் வாங்க வேண்டும். இத்தைலத்தால் செய்யப்படும் வேதைக்கு எல்லையில்லை. இந்த தைலத்தை ஒரு படி எடுத்துக்கொண்டு அதை பீங்கானில் வார்த்து துருசுச் சுண்ணம் ஒரு பலம் போட்டு கலையத்துள்ளே வைத்து அதன் வாயை மூடி, முன்பு கூறியதைப்போல் துளையிட்டு குழாய் வைத்து சந்துகளை அடைத்து சீலை செய்து

ஆட்டின் சாணத்தால் புடம்போட்டால் குழாயின் வழியாக தயிலம் விழும். இத்தைலத்தால் வாதம் உள்ளங்கை நெல்லிக்கனி போலாகும் அதன் முறையை காட்டுகிறேன் கேள். இத்தைலத்தை ஒரு கரண்டியில் வார்த்து இத்தைலத்தின் நிறைக்கு எட்டு பங்கு சூதம் வார்த்து.

வார்த்திந்தக் கரண்டிதன்னை அனல்மேலே வைக்க
மருவியொரு கொதிப்பிலே சூதங்கட்டும்
கோர்த்தி யிந்தச் சூதந்தான் ஒன்றுதானே
குடிக்குமப்பா பச்சைரசம் கூறப்போகா
ஆர்த்தியிந்தப் படியேறும் பத்து தொந்தம்
அம்மம்மா தேவியுட னாதத் தாண்மை
ஏர்த்தியிந்தப் படிசெய்தால் சரக்கெல்லாம் கட்டும்
என்னென்ன விதங்களுக்கு மிதுதானன்றே. 647

இக்கரண்டியை அனல்மேல் காட்டி கொதிக்க வைத்தால் சூதம் கட்டும்; கட்டிய யிந்த சூதம் கணக்கில்லாமல் பச்சை ரசத்தை குடிக்கும். இவ்வாறு பத்து தொந்தம் செய்தால் சகல சரக்கும் கட்டும். எல்லா முறைகளைக் காட்டிலும் இம்முறையே சிறந்த முறையாகும்.

இந்தநல்ல தயிலத்தைத் தங்கத்திற் குத்த
என்னசொல்வேன் தங்கமெல்லாம் செம்பாய்ப் போச்சு
அந்தநல்லப் பறிச்செம்பு வெள்ளிக்குள்ளே
அப்பனே நூறுதொந்த மப்பால் பொன்தான்
பந்தநல்ல பறிச்செம்பு பத்துக்குள்ளேப்
பாச்சப்பா செயசூதம் பத்து நீதான்
எந்தயிந்த ரெண்டையுமே பொடியாய்ப் பண்ணி
ஏழுபுடங் குகையிலிட்டே யிசைந்து போடே.. 648

போட்டெடுத்த பற்பத்தைக் குன்றிதின்னப்
புகழான மண்டலத்தில் பொன்னாம் தேகம்
நீட்டெடுத்து லோகத்தி லாயிரத்துக் கொன்று
நேரான மாத்தப்பா பதினாறாகும்
ஊட்டெடுத்துக் கைக்குருவால் சூதங்கட்டும்
உத்தமனே கல்பமிது வுயர்த்திமெத்த
ஆட்டெடுத்துத் தயிலத்தின் வேதை யெல்லாம்
ஆயிரத்தில் மூலகுரு அறைந்திட்டாரே. 649

இத்தைலத்தை தங்கத்தில் விட்டால் தங்கமெல்லாம் செம்பாகும். இந்த தங்கச் செம்பை வெள்ளியில் கொடுத்து நூறு தொந்தம் ஏற்றினால் பொன்னாகும். இத்தங்கச் செம்பு பத்து பலத்துடன் செயசூதம் பத்து பலம் சேர்த்து இரண்டையும் பொடி செய்து ஏழு முறை குகையிலிட்டு புடம் போட்டால் பற்பமாகும். இப்பற்பத்தை தினமும் குன்றி அளவு ஒரு மண்டலம் வரை உட்கொண்டால் தேகம் பொன் போலாகும். இப்பற்பத்தை லோகத்தில் ஆயிரத்துக்கு ஒன்று சேர்த்தால் பதினாறு மாற்றுக் கொண்ட பொன்னாகும். மேலும் இப்பற்பத்தால் சூதம் கட்டும். இது மிகவும் உயர்ந்த வகை கற்பமாகும். இத்தைலத்தின் வேதை முறைகளை எல்லாம் திருமூலர் வாதகாவியம் ஆயிரம் என்ற நூலில் உரியுள்ளார்.

அறைந்திட்ட ரசமப்பா பலந்தான் பத்து
அப்பனே தாளகந்தான் பலந்தானஞ்சு
நிறைந்திட்ட மனோசிலைதான் பலந்தான் மூன்று
நேரான வீரமது பலந்தா னொன்று
உறைந்திட்ட காரமதிற் பலந்தா னொன்று
உத்தமனே வெண்கண்டர் விராகனஞ்சு
திறைந்திட்டத் தயிலத்தில் யெட்டு சாமம்
சேர்த்தரைத்தே யயக்குப்பிக் குள்ளே போடே. 650

போட்டப்பா குப்பியை வாலுகையினுள்ளே
புகழாக வெண்சாமந் தீயை மூட்ட
நீட்டப்பா குப்பிக்குள் செந்தூரந்தான்
நேரான அருணனைப் போல் பிரகாசிக்கும்
ஆட்டவிந்தச் செந்தூரம் தங்கம் பத்தி
லணைத்திடவே செம்பாகு மப்பாகேளு
ஊட்டவிந்தச் செம்பொன்று வெள்ளிபத்தில்
உத்தமனே நூறுதொந்தம் நற்பொன்னாமே. 651

ரசம் பத்து பலம், தாளகம் ஐந்து பலம், மனோசிலை மூன்று பலம், வீரம் ஒரு பலம், காரம் ஒரு பலம், வெண்கண்டர் ஐந்து விராகன் எடை, இந்த ஆறு சரக்குகளையும் தைலத்தால் எட்டு சாமம் அரைத்து இரும்புக் குப்பிக்குள் வைத்து குப்பியை வாலுகையினுள்ளே வைத்து எட்டு சாமம் தீயை மூட்டி எரித்தால் குப்பிக்குள் அருணனைப் போல் செந்தூரம் இருக்கும். இச்செந்தூரத்தை பத்தெடை தங்கத்துடன் சேர்த்தால் தங்கம் செம்பாகும். இத்தங்கசெம்பை வெள்ளி பத்தில் நூறு தொந்தமிட்டால் நல்ல பொன்னாகும்.

நலமான செந்தூரம் சூதம்பத்தில்
நயம்படவே தொந்தித்து விபரங்கேளு
நிலமான ஜலமுத்திரை பாகஞ் செய்தால்
நேராக பரிசத்தில் வேதை யாகும்
குலமான யிச்சூதம் தங்கத் தூட்டிக்
குமுறவே புடமிட்டால் குருவுமாகும்
தலமான இச்சூதம் குன்றியுண்ணத்
தங்கம்போல் தேகமுமாம் சாகாதென்றே. 652

சாகாம லிருப்பதற்கு மிந்தக் கற்பம்
தாய்சொன்னா ளெமனுக்குச் சாதகமாயுண்டான்
வாகாமல் சிவனுதைத்தா னென்று சொல்லி
மாயியைத்தான் பூசித்தா னேமனப்பா
பாங்காக மெச்சியன்றே யிந்தக் கற்பம்
பாலித்தா ளெனைப் பெற்ற பாலைபாலை
வேகாத தலையோடும் சாகாக் காலும்
வெளியாகப் போகுமக்காள் விரைந்துமுண்ணே. 653

இச்செந்தூரத்தை பத்தெடை சூதத்தில் சேர்த்து நூறு தொந்த மேற்றினால் பரிசவேதை பலிதமாகும். இச்சூதத்தை தங்கத்திலிட்டு புடமிட்டால் குருவாகும். இந்த

சூதத்தை குன்றியளவு உட்கொண்டால் தேகம் பொன்னாகும். சாவு பொய்யாகும். இக்கற்பத்தை தேவியான தாய் எமனுக்கு உபதேசித்தாள். எமனும் அதை முறையாக செய்து உட்கொண்டு சாவை வென்றான். (இதை எப்பொழுது உபதேசித்தார் என்று கேட்பாயாகில்) முன் ஒரு சமயம் சிவபெருமான் எமனை உதைக்கவே எமன் தேவியை பூசிக்க (தேவியானவள்) என்னை ஈன்ற பாலா சக்தியானவள் மனம்மகிழ்ந்து இக்கற்பத்தை உபதேசித்தாள். இதை உட்கொண்ட மாத்திரத்தில் வேகாத தலையும் சாகாத காலும் வெட்ட வெளியை அடையும்.

மூலிகைகளிற் சாறெடுக்க

விரைந்துநின்ற பூக்களுந் தழைகளுமே மற்றும்
விசையாகப் பிசைந்தாலும் சாறுவாரா
உறைந்துநின்று சாறுவரக் குருத்தான் சொல்வேன்
உத்தமனே வெண்காரம் கழுவிப் போட்டு
நிறைந்து நின்ற எருக்கம்பால் தோய்த்து தோய்த்து
நேராக யஞ்சுதிரம் ரவியிற்போடு
கரைந்துநின்ற கல்மதத்தை விளக்கில் வாட்டக்
கைமுறையாய்த் தயிலமுமாம் வீரம் போடே. 654

பூக்களையும், தழைகளையும் சாதாரணமாக பிசைந்தழுத்தினால் சாறு வராது. இலைகளிலிருந்து சாறு வரவேண்டுமானால் ஒரு முறையை கூறுகிறேன் கேள்! வெண்காரத்தை கழுவி, அதை எருக்கம்பாலில் ஐந்து முறைதோய்த்து தோய்த்து சூரியனில் காயவைத்துக் கொண்டு பிறகு கல்மதத்தை எடுத்து விளக்கொளியில் வாட்டினால் தைலமாகும். இத்தைலத்தில் வீரம் சேர்த்து.

வீரம்விட்டுத் தயிலத்தை யிளக்கிக் கொண்டு
விளங்கியதோர் வெண்காரப் பலகைக்கப்பி
ஆரம்விட்ட ரவியிலே போடுபோடு
அப்பனே வெண்காரம் குருவுமாச்சுக்
காரமிட்ட னாயுருவிச் சாம்பற்கேளு
கைமுறையாய்ப் படியொன்று பாண்டத்திற் போட்டு
வாரமிட்ட வாழையதுக் கிழங்கு தண்ணீர்
வார்த்ததிலே னாலுபடி கரைத்து வையே. 655

வைத்ததிலே தேற்றாம் நற்கொட்டை தேய்த்து
வகையாகத் தெளிவிருந்து வைத்துக்கொண்டு
கைத்ததிலே பூரமொரு பலத்தைப் போட்டு
கைமுறையா யெரித்திடவே பூரவுப்பு
எய்த்ததிலே யிதின் பெருமை மூலனாயன்
னொளித்ததிது கற்பூர வுப்பென்றே சொன்னார்
கைத்ததிலே சாறுவராத் தழையிற் போட
தனிக்கரும்பா மாலையைப் போல் தண்ணீராமே. 656

தைலத்தை இளக்கிக்கொண்டு இதை வெங்காரத்தின் மேல் பூசி ரவியில் காயவைத்தால் வெங்காரம் குருவாகும். மேலும் கூறுகிறேன் கேள். நாயுருவிச் சாம்பலை

ஒரு படி எடுத்து பாண்டத்தில் போட்டு வாழைக்கிழங்குத் தண்ணீர் நான்குபடி வார்த்து கரைத்துக்கொண்டு இதில் தேற்றாங்கொட்டையை இழைத்துப் போட்டுத் தெளியவைத்து தெளிந்த நீரை இறுத்துக் கொண்டு அந்நீரில் பூரம் ஒரு பலம் போட்டு எரித்தால் பூர உப்பு கிடைக்கும். இதன் பெயரை திருமூலர் தன்நூலில் கற்பூர உப்பு என்று மறைவாகக் கூறிவிட்டார். இப்பூர உப்பை சாறு எடுக்க வேண்டிய தழையுடன் சேர்த்தால் சாறு தண்ணீர்போல் பெருகி வரும்.

ஆமப்பா முடக்கொத்தான் சுட்டசாம்பல்
அப்பனே படியொன்று பாண்டத்தி லிட்டு
வாமப்பா நாலுபடிக் கோமியத்தை வார்த்து
வகையாகத் தெளிவுதனில் யிறுத்துக் கொண்டு
ஓமப்பா வெண்காரம் பலந்தானிட்டு
உத்தமனே காய்ச்சிடவே வெண்மையாகும்
தாமப்பா வெண்கார லவணமொன்றுச்
சாதசத்திற் குருவாச்சு சார்ந்து கேளே. 657

கேளப்பா சாறுவராத் தழையிற் றூவிக்
கெடியாகப் பிழிந்திடவே தண்ணீராகும்
தூளப்பா விதன்பெருமை சொல்லப் போமோ
துலக்கமுள்ள ஞானிக்கே தோன்றுந் தோன்றும்
நாளப்பா கைமுறையாய்க் கண்டுநீயும்
நல்லோரை யடுத்துநிதந் தொண்டு செய்து
தாளப்பா பணிந்திடவே மறைப்பை யெல்லாம்
தயவாக விபரமதாய்ப் பாடினேனே. 658

முடக்கொத்தான் சுட்டச் சாம்பலை ஒருபடி பாண்டத்திலிட்டு அதில் நான்குபடி கோமியத்தை வார்த்து தெளிய வைத்து, தெளிந்த நீரில் வெங்கார குருவை ஒரு பலம் போட்டு காய்ச்சினால் வெண்மை நிறங் கொண்ட வெங்கார லவணமாகும். இதை சாறு எடுக்கப்பட வேண்டிய தழைகளுடன் தூவி அழுத்திப் பிழிந்தால் சாறானது மழைபோல் கொட்டும். இம்முறையானது ஞானிக்கே சித்தியாகும். நீயும் முறையாக செய்து பார்த்தால் பலிதமாகும். பெரியோர்களான சித்தர்களைக் கண்டு போற்றி அவர்களுக்கு தொண்டு செய்து பணியவே மறைப்பையெல்லாம் வெளிப்படையாய் பாடினேன்.

பாடினே னவலோக வர்ணங்கேளு
பத்துமுத லஞ்சுவரை பரிந்து காணும்
ஆடினே னிந்தமுறை யுப்புக் காவிக்
கஞ்சாது கரைகட்டி யிறங்கிப் போகும்
நீடினேன் வெண்கலமும் வங்கம் ரெண்டும்
நேராக மாற்றப்பா வஞ்சுமேழு
மூடினே னித்தொழிலை நுழைத்து பார்த்தே
யுத்தமனே மற்றதெல்லாம் பத்தும்பத்தே. 659

இவ்வெங்கார குருவை பஞ்ச லோகத்தில் பாய்ச்சினால் பத்து முதல் ஐந்து மாற்றுவரை காணும், இந்த முறை உப்புக்கும் காவிக்கும் அஞ்சாது, இக்குருவை வெங்கலத்திலும், வங்கத்திலும் கொடுத்தால் பனிரெண்டு மாற்று காணும். மற்ற லோகங்களிலெல்லாம் இருபது மாற்று காணும்.

பத்தான விக்குருவும் விராலியிலைக் குள்ளே
பாய்ச்சிமெள்ளப் பிழிந்திடுங் கோள் சாற்றினோடு
மத்தான சாற்றிலே யிரும்பைத் தோய்த்து
மக்களே காய்ச்சிடவே பொன்னுமாகு
மத்தான செம்புமிந்தப் படியே யாகு
மப்பனே குடவனு மிப்படியே யாகுங்
கொத்தான மூன்று வங்க முருக்கிச் சாய்க்கக்
குணுக்குப் போற் பொன்னாகும் குபேரன் தோற்றே. 660

வெங்கார குருவை விராலியிலையுடன் சேர்த்துப் பிழிந்து அச்சாற்றில் இரும்பைத் தோய்த்துக் காய்ச்சினால் பொன்னாகும். இதைப்போலவே செம்பு பித்தளை, கார்வங்கம், வெள்வங்கம், வங்கம் ஆகியவற்றையும் தோய்த்து காய்ச்சினால் பொன்னாகும். வேதை செய்பவன் குபேரனாவான்.

தோத்திட்டான் குபேரனென்றா லெதிரோ மக்காள்
சொல்லுகிறே னின்னமிதில் தொழிலோ மெத்தக்
காத்திட்ட விலவங்கா யுடைந்து தோன்றிற்
கண்ணுக்குக் காணாத பஞ்சு போல
ஏத்திட்ட விதன்வேதை சொல்ல மாட்டே
னென்மக்கா ளறைந்த மட்டுஞ் சொல்லக்கேளு
மாத்திட்ட லிங்கம்போல் மெழு கேயா
மப்புனே விவரத்தை யறிந்து செய்யே. 661

செய்திடுவாய் கெந்தகமுந் தாளகமே சிலையுஞ்
சேர்ந்துநின்ற கெவுரியோடும் வெள்ளையுடனப்பா
கைதிடுவாய் நவதரத்து மெழுகேயாகும்
கைமுறையாய் வெவ்வேறே வேதையாகும்
கொய்திடுவா யேமமென்ற வித்தையிட்டுக்
கொள்ளாட்டால் வித்தையிதில் முளைத்திடாது
நொய்திடுவாய் தங்கத்தைத் தகரே போட்டு
நுட்பமுடன் வந்திடும் நுணுக்கங்கேளே. 662

இதேபோல் அனேக தொழில்கள் உள்ளன. இலவங்காயைப் பார்க்கும் பொழுது இருக்கும் பஞ்சுதெரியாததைப் போல் இதன் வேதை வெளிப்படையாகத் தெரியாது. சொல்லவும் முடியாது. முறையறிந்து செய்தால் லிங்கம் மெழுகாகும். இம்மெழுகால் வேதை பலிதமாகும். இதைப் போலவே கெந்தகம், தாளகம், மனோசீலை, கெவுரி, வெள்ளை போன்றவைகளை மெழுகாய் செய்து வெவ்வேறு முறையில் வேதை செய்து பார். இவ்வாறு மெழுகு செய்யாவிடில் ஏமவித்தை பலிதமாகாது. தங்கத்தை தகடாக செய்து குருவாக்கும் முறை விபரம் கூறுகிறேன் கேள்!

நுணுக்கமுகக் குருக்கேளு வராகனொன்று
நுகர்ந்த நல்ல வீரமது வராகனொன்று
அணுக்கமுற்ற பறித்தகடு நாலிற்பூசி
அப்பனே யண்டத்தூள் கீழ்மேலிட்டு

தணுக்கமுற்றுப் புடம்போடத் தங்கம்நீசேர்
தங்கத்திற் குருவாகும் தானாம் வித்து
துணுக்கமுற்ற நித்திரையிற் சொரூபங் கண்ட
சோதியாக்கு மிக்குருவின் சொல்லுந் தானே. 663

முன் குருவை ஒரு வராகன் எடுத்து அதனுடன் நல்ல வீரத்தை வராகன் ஒன்று சேர்த்து, தங்கத் தகட்டின் மேல் பூசி அண்டத்தோலை அத்தகட்டிற்கு மேலும் கீழும் போட்டு புடமிட்டால் தங்கம் குருவாகும். இத்தங்க குருவே வேதைக்கு மூலமாகும். இதனால் அனேகவித தொழில்கள் சித்தியாகும்.

சொல்லான விக்குருவை மெழுகுக் கெல்லாம்
துறைதோறும் விடுவதற்கு மிதுவேவித்து
கல்லான வுபரசங்கள் பாஷாணத்தோடு
கைமுறையா யிந்தவித்தை கலருமக்கா
ளில்லாதே மறந்து விட்டால் வாதம்போச்சு
எடுத்தவுடற் கடுத்தபொறி யிந்தவித்து
நல்லான வித்துத்தான் பாருமக்காள்
நலம்பெறவே பறிவிட்டால் தூரமட்டே. 664

இத்தங்கக் குருவை மெழுகுடனும், உபரசங்களுடனும், பாஷாணங்களுடனும் சேர்த்தால்தான் வேதை சித்தியாகும். இக்குருவை சேர்க்க மறந்தால் வேதையானது விழலாய்ப் போகும். இக்குருவே வேதைக்கு வித்தாகும்.

மட்டாக வெருக்கம்பால் படியதொன்று
வார்த்தொரு பீங்கான் றன்னிற் குருவைப்போட
வொட்டாக வொருசாம மிருந்ததானா
லுத்தமனே பால்முறிந்து சலமுமாகும்
நட்டாகத் தெளிவிறுத்தே யதற்குள்ளாக
நாலு பலம் சூதமிட்டே யயப்பாண்டத்திற்
கட்டாகப் பறிக்குருத்தான் வராகனிட்டுக்
காய்ச்சுகையிற் சூதமுள்ளே கத்துந்தானே. 665

கத்தியது மிட்டலிபோற் கட்டிப்போகுங்
கைமுறையாய் வேதைக்காங் குருவுக்காகு
மத்தியது குளிகைக்காந் தாவடத்துக்காகு
மைந்தெழுத்தைத் தாவடத்திற் செபித்தாயானால்
முத்தியது முத்தி முத்தி சீவன்தான் சித்தி
முன்வந்து சகலதொழி லேவல் கேட்கும்
சித்தியது காயமுமாம் தேவதேவன்
சிவனவனா மவன் சிவனாஞ் செபித்துப் பாரே. 666

எருக்கம்பால் ஒரு படி வாங்கி பீங்கானில் வார்த்து இத்தங்க குருவை போட்டால் ஒரு சாமத்தில் பால் திரிந்து சலமாகும். இச்சலத்தை தெளிவிறுத்து நாலு பலம் சூதம் சேர்த்து அயப்பாண்டத்தில் விட்டு மேலும் அதில் தங்கக் குருவை ஒரு வராகன் எடை சேர்த்து காய்ச்ச வேண்டும். அச்சமயம் சூதம் சத்தமிட்டுக் கொண்டே கட்டும் இவ்வாறு

கட்டிய சூதத்தை குரு முடிக்கவும், வேதை புரிவதற்கும், குளிகை செய்வதற்கும், செபமணியாகவும் பயன்படுத்தலாம். இச்சூதத்தை மணியாக கோர்த்து தாவடம் செய்து அதில் பஞ்சாட்சரத்தை செபம் செய்தால் சகல தொழிலும் ஏவல் கேட்கும். காயம் தேவனைப் போல் பிரகாசிக்கும். ஜீவதரிசனம் ஏற்பட்டு சிவனுடன் லயமடைந்து முக்தி பெறுவான்.

வழலை வங்கச் சிங்கி

பாரப்பா சிங்கியொன்று சொல்வேன்கேளு
பராபரமும் பூரணமும் பரவித்தாண்டும்
நேரப்பா நின்மலமுங் கடந்து போனால்
நிலையாத கண்டத்தில் கண்ட சிங்கி
யோரப்பா வுடும்பினோடா மைபன்றி
யுற்றதொரு மயிலலுங்கு நுணலையோடு
தேரப்பா புத்தீச லிவையொடேழும்
சிறக்கவேழ் கழஞ்சியதைத் திறமாய்த்தூக்கே. 667

தூக்கியிந்தக் கொழுப்பேழும் ரவியில் வைத்துத்
துணையான புழுகஞ்சு சவாது மஞ்சு
தாக்கியதை யொன்றாகக் கலந்து கொண்டு
தன்னிலிடச் சுன்னமினிச் சாற்றக் கேளு
ஆக்கியினிப் பறினிமிளை வங்கஞ்சார
மடவான காரமொடு துருசியுப்பு
பாக்கியதைக் கொடுத்தாடும் வழலைச் சுன்னம்
பருநாக வீரமொடு பதினொன்றாச்சே. 668

சிங்கி சொல்கிறேன் கேள்! உடும்பு, ஆமை, பன்றி, மயில், அலுங்கு, நரணலை, புத்தீசல், இவை ஏழினுடைய கொழுப்பையும் வகைக்கு ஒரு கலஞ்சி வாங்கி அதனுடன் சவ்வாதும் புனுகும் கலந்து வைத்துக் கொண்டு இதில் சேர்க்க வேண்டிய சுண்ண வகையை கூறுகிறேன் கேள்! தங்கம், நிமிளை, வங்கம், சாரம், காரம், துருசு, கல்லுப்பு, வழலை, நாகம், வீரம் போன்ற பதினொன்றையும், (பாட்டில் ஒரு சரக்கு குறைவாக உள்ளது)

பதினொன்றின் சுண்ணாம்பி னெடையைக்கேளு
பதினொன்றும் பதினொன்றே களஞ்சுதூக்கு
வதினொன்று நாதத்தில் சேரைவாரும்
மயங்கா தேசுக்கிலத்தில் சேரைவாரு
கதினொன்று சுன்னமெலா மரைத்துக் கொண்டு
கவிரிதிலே சேர்ப்பைகுருக் களஞ்சி யொன்று
அதினொன்றாய்க் கொழுப்போடே புழுகும்போட்டு
அரைத் தப்பிப் பீங்கானில் ரவியில் வையே. 669

நிறுத்தி வைத்துத் துருசுக்கு எடைதான் வீரம்
நேராகப் போட்டரைக்கச் சிவப்புமாகும்
மறுத்துவைத்த தைலத்தி லிதனைப் போட்டு
வாகாகக் கிண்டியப்பா பதனம் போட்டு

சிறுத்து வைத்த நாதரசம் க்ஷணத்திற் சாகும்
சேர்ந்து நின்ற சரக்கெல்லாம் கட்டிப்போகும்
இறுத்துநின்ற நாகமொடு லிங்கஞ்சூத
மியல்பான சிலையொடு காரங் கூட்டே. 670

இப்பதினொறு சரக்கையும் பதினொறு கழஞ்சி எடுத்து நாதம் ஒரு சேரும் சுக்கிலம் ஒரு சேரையும் வார்த்து நன்றாக அரைத்து குருவை ஒரு கழஞ்சி சேர்த்து அதனுடன் கொழுப்புகளையும், புனுகுவகையும் சவ்வாதையும் போட்டு பீங்கானிலிட்டு ரவியில் வைக்க வேண்டும். துருசையும் வீரத்தையும் சமயெடை எடுத்து நன்றாய் அரைத்துப் பார். சிவந்த நிறமாகும் இதை தைலத்துடன் சேர்த்து பத்திரமாக வைத்துக் கொள், இதனால் நாகரசம் ஒரு வினாடியில் கட்டும் மேலும் கூறுகிறேன் கேள். நாகம், லிங்கம், சூதம், மனோசிலை, காரம் இவற்றை எடுத்து

காரமுட னஞ்சுவகை சமனாய்க் கூட்டிக்
கலந்தரைத்துத் தயிலத்தா லயச்சல்லிக்கப்பி
யாரமுடன் யந்திரத்தா னுருக்கி வைப்பா
யாச்சரிய மயச்செம்பு அதிகம் வேதை
தாரமென்ற பத்திலெட்டிச் செம்பொன்றுந் தான்
தாக்கிடவே திசைமாற்றாற் தங்கமொவ்வா
போரமென்ற விச்செம்பு தங்கந்தானும்
புகழாக சமன்சேர்த்துத் தகடுபோடே.. 671

இவை ஐந்தையும் சமஅளவு கூட்டி தைலத்தால் அரைத்து அயச்சல்லிக்கு பூசி, யந்திரத்தில் வைத்து உருக்கினால் அயச்செம்பாகும். இவ்வயச்செம்பால் அதிக வேதையுண்டாகும். இச்செம்பை லோகங்களுடன் சேர்த்து உருக்கினால் பொன்னாகும். சாதாரண பொன்னல்ல; பத்து மாற்று கொண்ட பிரகாசமான தங்கமாகும். இந்த அயச் செம்பையும், தங்கத்தையும் சமஅளவு சேர்த்து தகடாக அடித்துக் கொண்டு.

போட்டெடைக்கு னிக்கெந்தி சமனாய்க் கூட்டிப்
புகழாக வெருக்கம்பால் விட்டேயாட்டிக்
கூட்டெடைக்குத் தகடுமேற் பூசிப்பூசிக்
குறையாமற் பதினொருக்கால் புடத்தைப்போடு
மூட்டெடைக்குப் பொடியாகும் வாரிக்கொண்டு
முசியாம லொன்பதிலும் நூற்றொன்றிட்டு
நீட்டெடைக்கு நவலோகம் பத்தும் பத்தாம்
நேரான அயச்செம்பு நேர்மைதானே. 672

இத்தகட்டின் எடைக்கு சமமாக கெந்தகத்தை எடுத்து எருக்கம்பால் விட்டரைத்து புடம்போட்டால் பொடியாகும். இப்பொடியை நவலோகத்தில் நூற்றுக்கொன்று சேர்த்து உருக்கினால் லோகங்கள் இருபது மாற்று கொண்ட தங்கமாகும். இவ்வளவு பெருமையை அயச்செம்பு தன்னகத்தே கொண்டுள்ளது.

நேர்மையென்ற அயப்பொறியைச் செந்தூரிக்க
நேராகச் சொல்லுகிறேன் மக்காள் கேளு
ஆர்மையென்ற அயச்செம்பு பலந்தானொன்று
அப்பனே தங்கமொரு பலமுங்கூட்டி

சேர்மையொன்றி நின்றாடி யுருகும்போது
செயரசத்தை ரெண்டுபல மதிலேபோடு
ஓர்மையென்று சேர்ந்து நின்றே யாடும்போது
வுத்தமனே ரெண்டுபலம் நாகம் போடே. 673

இவ்வயச் செம்பை செந்தூரம் செய்யும் வகையை கூறுகிறேன் கேள்! அயச்செம்பிற்கு சமஅளவு தங்கம் சேர்த்து குகையில் வைத்து உருக்கி அச்சமயம் இதனுடன் இரண்டுபலம் செயசூதத்தையும், இரண்டு பலம் நாகத்தையும் சேர்த்து,

போட்டெல்லா முருக்கியொரு மணியாய் வாங்கிப்
புகழாக மணியெடைக்குக் கெந்தி கூட்டிக்
காட்டெல்லாம் கெந்தியெடை தாளகமும் சிலையும்
கைமுறையாய் மணியோடே பொடியாய்ப்பண்ணி
ஆட்டெல்லாம் குப்பியிலே யடைத்து வைத்து
அதன்மேலே ரோமமென்ற தைலங்குத்தி
நீட்டெல்லாம் வாலுகையி லேற்றிக் கொண்டு
நேரான வெண்சாமந் தீயை மூட்டே. 674

மூட்டையிலே யீசான மூலைக் குள்ளே
முகிழ்விரியா மல்லிகையு மதுவுஞ்சுற்றி
நாட்டையிலே சிவனோடு தேவிக்கப்பா
நலக்கறவே பூசைபண்ணு நிர்வாணிக்கு
நீட்டையிலே பாத்திரமும் சுற்றி வைத்து
நேராகப் பூசைசெய்து தீயையாட்டிக்
கூட்டையிலே யெண்சாமம் தீர்ந்ததானாற்
குமுறியுள்ளே யருணனைப்போற் குப்பலாமே. 675

மணியாய் உருக்கி வாங்கிக்கொண்டு அம்மணியின் எடைக்கு கெந்தகம், தாளகம், மனோசிலை இவை மூன்றையும் பொடித்து மணியுடன் சேர்த்து குப்பியில் அடைத்து ரோம தைலம் விட்டு வாலுகையின் மேல் வைத்து தீயை மூட்டி எரிக்கத் தொடங்குமுன் ஈசான மூலையில் சிவன், தேவி, நிர்வாணி இவர் மூவருக்கும் மல்லிகைப் பூ சுற்றி மது வைத்து பூசை செய். எட்டு சாமம் சென்ற பிறகு குப்பியை உடைத்துப் பார்த்தால், அருணனைப்போற் செந்தூரமிருக்கும்.

குப்பலென்ற செந்தூரம் நவலோகத்திற்
கொடுத்திடப்பா வாயிரத்துக் கொன்று நீதான்
கப்பலென்ற பொன்தானு மிதனுக்கீடோ
கைமுறைதான் பதினாறு மாற்று மாகும்
செப்பலென்ற செந்தூரத் தினந்தான் குன்றிச்
சேர்த்துண்ணப் பாலோடே தினத்தைக் கேளு
அப்பலென்ற விருபது நாளுண்டாயானா
லருணன்போற் காயமுமாம் கண்டசித்தே. 676

சித்தான கற்பமுண்ட தேகங்கேளு
சிறந்திட்ட பொன்போலே சேர்ந்துமின்னு
மத்தான வானையைப்போ லாட்டிரெட்டுப் பலமாம்
வச்சிரம்போற் கற்பாந்தம் வயிரத்தோலாம்

முத்தான தந்தமெல்லா முருக்குப் போலாம்
மூச்சுவிட்டா லுனைவிட்டு முனைக்கேறாது
கொத்தான ஆறுதலம் வெளியாய்க் காணும்
கொள்கிறேன் பிரமத்தின் கூறைக் கேளே. 677

இச்செந்தூரத்தை நவலோகத்தில் ஆயிரத்துக்கொன்று சேர்த்தால் பதினாறு மாற்று கொண்ட பொன் கிட்டும். இச்செந்தூரத்தை அனுதினமும் குன்றியளவு பாலோடு சேர்த்து இருபது நாள் உட்கொண்டால் தேகம் சூரியனைப் போலும் சுத்தமான பொன்னைப் போலும் பிரகாசிக்கும். இரண்டு யானை பலம் உண்டாகி தேகம் வயிரத்தைப் போல் திடப்பட்டு என்றும் அழியாமல் நிற்கும். வாசியானது வெளியோடாமல் உள்ளேயே அடங்கும். ஆறு தளங்கள் வெளியாய்த் தோன்றி பிரகாசிக்கும்.

கூறான மூலத்தில் நாதங்கண்டு
கொள்ளவைத்து தீயொளியிற் கூடக்கூட்டித்
தாறான கலையிருந்த பானு வீட்டில்
தயங்காமற் கலந்தந்த வொளியுங் கண்டு
வேறான சந்திரனாம் விந்து வீட்டில்
மேன்மையாய் ரவிதணலை மேவப்பண்ணி
யாறான சோனையைப்போ லமுதந்தூவ
அப்பனே யுடல்குளிர்ந்து புளகமாமே. 678

இவ்வாதாரத்தில் முதலாவதான மூலாதாரத்தில் நாதத்தைக் கண்டு அதை சோதியுடன் கூட்டி சந்திரனான விந்து வீட்டில் சூரியனை அடக்கி மேல்நோக்கி ஏற்றினால் உடலானது குளிர்ந்து புளகாங்கிதமடையும்.

புளகமாம் சாம்பவியாம் முத்திரையைக் காட்டிப்
போக்கோடே குருபதத்திற் புகழைக் கண்டு
நளகமா நாதவிந்தா மீசன்சத்தி
நற்கமல மாயிரத் தெட்டிதழின் மையம்
தளகமாம் ரவிகோடி மதிதான் கோடி
சார்ந்துநின்ற மூலத்தீ சதமாங் கோடி
யளகமா மவ்வொளிக்கு ணின்று மேலே
அக்கிரத்தே தேசுவென்ற பிரமந்தானே. 679

அச்சமயம் சாம்பவி முத்திரையை காட்டி குருபதமான ஆயிரத்தெட்டு கமலம் கொண்ட ஸ்தானத்தில் நாதவிந்தான சிவன்சக்தி இரண்டும் கூடி கோடி சூரியனைப்போல் பிரகாசிக்கும். தீபத்தில் மனதை நாட்டி நிற்க வேண்டும்.

தானென்ற பிரமமென்பார் போதமென்பார்
சச்சிதா னந்தவொளி சார்வதென்பார்
வேனொன்றி நில்லாத நிற்குணந்தா னென்பார்
வேதாந்தங் கடந்துநின்ற வெளிதானென்பார்
ஊனென்ற பிரபஞ்ச மெல்லா நிறைந்ததென்பா
ரோகோகோ வெளியான வொளியா மென்பார்
வானென்றுங் கடந்தவெளி யொளிதா னென்பார்
வாய்ப்பேச்சே யல்லாமல் வரை காணாரே. 680

இந்தப் பொருளையே பிரமம் என்றும், போதம் என்றும், சச்சிதானந்த ஒளி என்றும், நிற்குணப் பொருளென்றும், வேதாந்தம் காட்டும் பொருள் என்றும், எங்கும் பரவியிருக்கும் பொருளென்றும், ஒளிக்கு ஒளியான பொருளென்றும், விண்ணையும் கடந்து அப்பால் நிற்கும் பரிவெளி என்றும் பலவகையான பெயர்களால் அழைக்கிறார்கள். இதைப்பற்றி வாயால் பேசுபவர் அதிகம் உள்ளனர். ஆனால் அறிந்தவர்களோ சிலபேர்தான்!

காணாத பூரணத்தி னொளியைச் சொல்லக்
கதிரேது மதியேது தீத்தானேது
தோணாத நிரஞ்சனமா மொளியைக் காணச்
சுகமாகக் கேசரியாற் சூட்டிப்பாரு
பூணாத மூடருக்கு வொன்றுமில்லை
புத்தியுள்ள சித்தருக்குப் பொருடான் மேலே
யூணாதே மூலத்தே யென்னைப் பார்த்தே
னுப்பில்லா வாதம்போ லூறிப்போச்சே. 681

கண்காணாத பூரணத்தின் ஒளிக்கு சூரியனோ, சந்திரனோ நிகராகாது. இவ்வொளியைக் காணவேணுமென்றால், கேசரியில் மனதை நாட்டிப் பார்த்தால் விளங்கும். இம்முறை சித்தர்களைத் தவிர மற்றவர்களுக்கு பலிதமாகாது.

போச்சப்பா வகாரமுத லைம்பத்தொன்று
புகழான பதினாறிற் பிறந்ததப்பா
ஆச்சப்பா யகாரமது வீசனாச்சு
அதற்கடுத்த யார்த்தீகஞ் சத்தியாச்சு
ஓச்சப்பா யிப்படியே பதினாறு சுரமும்
உத்தமனே சிவசத்தி யாகநின்று
தோச்சப்பா விதனாலே முப்பத்தஞ்சும்
சூழுல்க ரெழுத்தாகச் சூழ்ந்தவாறே. 682

அகாரம் முதற்கொண்ட ஐம்பத்தோர் அட்சரமும் (இதிலிருந்துதான் உண்டாயிற்று) அதாவது பதினாறு கலைகளைக் கொண்ட இப்பொருளிடமிருந்தே உண்டாயிற்று. இவற்றில் யகாரம் ஈசனையும், அதற்கடுத்துள்ள எழுத்து சக்தியையும் குறிக்கும். இவ்வாறு மாறிமாறி பதினாறும் சிவசக்தியின் ரூபமாயின. இதிலிருந்தே உயிர், மெய் எழுத்துக்கள் உண்டாயின.

வாறுகேளைப் பதினோ டொன்றால் வேதம்
வகையான புராணமொடு சாத்திரங்க ளெல்லாம்
தாறுகேளி தற்குள்ளே விரிந்துதப்பா
சச்சிதா னந்தநிலைச் சார்பினாலே
ஆறுகே ணதிகளெல்லாம் சமுத்திரத்திற் புக்கி
யமர்ந்தாப்போற் பூரணத்தி லெல்லாஞ் சேரும்
வேறுகே ளொன்றுமில்லை நீயுமில்லை
வெருவியதோர் நானுமில்லை வெளிதான் காணே. 683

இவற்றிலிருந்தே புராணம், சாஸ்திரம் போன்றவை விரிந்தன ஆறுகள் எவ்வாறு கடலைச் சென்றடைகின்றனவோ அதேபோல், உண்டான பொருளனைத்தும்

பூரணவஸ்துவான சச்சிதானந்த வஸ்துவைச்சென்றடையும். அப்பொழுது நீ, நான் என்று தனியான பொருளாக இல்லாமல், ஒரே பரஒளியில் சென்று கலப்போம். அப்பரிவொளியைத் தவிர வேறு எந்தப் பொருளையும் பார்க்க முடியாது.

காணப்பா கேசரத்தால் வந்ததீநீர்
கலந்திந்த வெளிக்கொக்குங் கறையுமில்லை
பூணப்பா வாதமொடு ஞானம் ரெண்டும்
புகழாகச் சமன்சொன்னேன் வல்லோர்க்கப்பா
ஊணப்பா மூலத்தைக் குருவைக் கேட்டே
னுரைத்தபின்பு ரசசித்தி ஞானசித்தி
வீணப்பா குருகாட்டா வாதம் ஞானம்
மிலேச்சரே வுப்புறைந்தால் ரெண்டு மாமே. 684

கேசத்தால் செய்த தீநீரானது, மேல்கூறிய சச்சிதானந்தப் பொருளுக்கு நிகராகும். கேச திராவகத்தால் வாதமும் ஞானமும் சித்தியாகும். அதேபோல் சச்சிதானந்த பொருளைக் கண்டமாத்திரத்தில் வாதமும் ஞானமும் சித்தியாகும். இவ்விரண்டு பொருள்களின் மூலத்தையும் குருவின் மூலம் அறிந்தால் ஞானமும், வாதமும் சித்தியாகும். குருவால் காட்டப்படாத வாதமும் ஞானமும் பலிக்காமல் போய்விடும்.

இரண்டுசித்தி வரவேண்டு மென்றாற் கேளு
நேராகக் குருபதத்தை வணங்கிச் சேர்ந்து
கண்டசித்தாம் லவணத்தைக் குருவைக் கேட்டுக்
கட்டுகிற யினங்கேட்டுச் சுன்னங் கேட்டு
மண்டுசித் தரங்கூட்டி மனதிற் கூட்டி
மாருதத்தைத் தீயோடே மாட்டிக் கொண்டு
ஒண்டுசித்தர் கூட்டத்திற் கூடுகூடு
வுத்தமனே கேசரியைக் குருவைக் கேளே. 685

இரண்டு வகையான சித்தியும் வரவேண்டுமானால் குருவை அடைந்து அவருக்கு தொண்டுசெய்து லவணம், கட்டினங்கள் சுன்ன வகைகள் போன்றவற்றைக் கேட்டுத் தெரிந்துகொண்டு மனதை புத்தியால் அடக்கி, வாயுவை மூல அக்கினியில் அடக்கி சாதுகள் கூட்டத்தில் சேர்ந்து நின்றால் அனைத்தும் சித்தியாகும்.

குருச்சொன்னால் கேசரியும் சாம்பவியும் வெளியாங்
கூறானவாசியுட குறிப்புங்காணுங்
குருச்சொன்னால் வழலையுட சுன்னங்காணுங்
குறையாத கல்லுப்புக் கட்டுங்காணுங்
குருச்சொன்னால் வங்கமுதற் பூரநீறுங்
குருடனைப்போல் துழாவினால் கூடாதொன்றும்
குருச்சொன்னால் துவாதசத்தின் போதங் காணுங்
குபேரனுட பொக்கிஷமாந் துரிசியாமே. 686

மேலும் கேசரி மற்றும் சாம்பவிப் பொருளைப் பற்றி உன் குருவிடம் கேட்டுத் தெரிந்துக் கொண்டால் வாசியின் உட்பொருளும், வழலைச் சுன்னத்தின் உட்பொருளும், கல்லுப்பின் கட்டுமுறையும், வெளிப்படையாய் காணும். குருவை விட்டு குருடனைப்

போல் துழாவினால் ஒன்றும் பலியாது. ஆகவே குருவை அறிந்துகொண்டால் துவாதசத்தின் ஒளியானது தோன்றும். குபேரனுட பொக்கிஷமான தூசும் கைக்குள்ளாகும்.

உப்பால்தான் வாதமென்பது

துரிசியாந் துரியமுமாஞ் சொல்லுமாகும்
சொற்கடந்த மவுனமுற்ற போதங்காணும்
பரிசியாந் தெரிசியாந் தீபதூபம்
பறக்கிறதோர் குளிகையுமாம் பரமுமாகு
முரிசியா முதுயிடியாம் யோகம் ஞான
முத்தமனே யுப்பாலே வாதமாகும்
அரிசியாங் குருவெங்கே கிடையாதென்றா
லன்றைக்கு வாயிலே மண்ணமர்ந்தவாறே. 687

தூரிசால் தூரியம் என்ற சொல்லுண்டாயிற்று. இத்தூரிசால் ஆனந்த போதமும், தீபதரிசனமும், குளிகை சித்தியும், யோக சித்தியும், ஞான சித்தியும், வாதசித்தியும் பலிதமாகும். இதையெல்லாம் கற்றுணர்ந்தாலும் குரு எங்கே கிடைக்கப் போகிறார் என்று திகைத்து நிற்பாயாகில் உன் வாயில் மண்தான் விழும்.

வாறான வாயில்மண் வேணுமென்றால்
மகத்தான குருத்தேடித் திரிய வேண்டாம்
தாறான வாதத்தை நினைக்க வேண்டாம்
தனிப்பெரிய கல்லுப்பை யெடுக்க வேண்டாம்
கூறான வாசியிலே கூட வேண்டாம்
கொள்கையதாய்க் கேசரியைப் பார்க்கவேண்டாம்
வீறான வுலகத்திலிருந்து வாழ்ந்து
வீழ்ந்திறந்து வீழ்ந்திறந்து வெருவனன்றே. 688

உன் வாயில் மண் விழவேண்டும் என்று நீ எண்ணினால், குருவைத்தேடி அலையவேண்டாம்; வாதத்தைப் பற்றி நினைக்க வேண்டாம்; கல்லுப்பை எடுக்க வேண்டாம்; வாசியைக் கூட்ட வேண்டாம்; கேசரியைப் பார்க்க வேண்டாம். இவ்வாறு நீ இருந்துகொண்டு இவ்வுலக வாழ்வில் ஈடுபட்டு கடைசியில் வீழ்ந்திறந்து மீண்டும் பிறவி எடுத்து உழன்று கொண்டிரு.

வெருவாமற் கரையேற வேணுமென்றால்
வேதாந்த யந்தமென்ற துவாத சத்தைப்பாரு
அருவான திதுமக்காள் ராஜயோகம்
அம்மம்மா கேசரியா லறிய வேண்டும்
குருவான தேசிகன்றான் சொன்னாற் காணும்
குருவைவிட்டா லேதுமில்லை குருடாய்ப் போச்சு
திருவான வுப்பைவிட்டால் வாதம்போச்சு
செப்பினேன் சலிக்குமட்டும் செப்பினேனே. 689

சலிக்குமட்டுஞ் சொன்னாலும் பிள்ளைகளே நீங்கள்
சாதகமாய்ப் பிரீதியுடன் றழுவாதேனோ
வலிக்குமட்டு மடித்தாறு முதறிப் போட்டு
மாடுபோல் திரிந்தாக்கா லென்ன சொல்வேன்

பலிக்குமட்டும் வாதத்தைப் பார்த்துத் தீர்த்துப்
பருவமுடன் குளிகையொன்று பண்ணிக் கொண்டு
அலிக்குமெட்டா வகண்டவெளிக் குள்ளேபுக்கி
யாடவல்லோ தீட்சைசொன்னே னறிவுள்ளோரே. 690

இவ்வாறு இல்லாமல் கரைசேர எண்ணினால் வேதாந்த அந்தமான துவாதசத்தை பார்த்து நில். இதுவே ராஜயோகமாகும். இதை முறைப்படி கேசரியால் அறிந்து கொண்டால் ஞானகுருவான தேசிகன் பிரகாசிப்பார். இவரை விட்டால் கண்ணில்லாத குருடனைப் போலாவாய் உப்பை விட்டால் வாதம் சித்தியாகாமல் தவிப்பாய்; இவ்வார்த்தைகளை சலிக்கும் வரை மீண்டும் மீண்டும் கூறியுள்ளேன். சலிக்கும் வரை நான் கூறியது எதற்காகவெனில் நீங்கள் யோகத்தின் மேல் பற்று கொண்டு வழுவாமல் நிற்பதற்கே. அவ்வாறில்லாமல் வலிக்கும் வரை அடித்தாலும் அதை மாடுபோல் உதறித் தள்ளினால் நான் என்ன செய்ய முடியும். ஆகவே வாதத்தை பலிக்கும்வரை (சித்தியாகும் வரை) விடாமல் செய்து பார்த்து அதனால் ஒரு குளிகை செய்து அக்குளிகையை வாயிலிட்டு பரவெளியில் சென்று கலப்பதற்காகவே இத்தீட்சையை சொன்னேன்.

அறியாமற் பாமரராய்த் திரிந்தால் மக்காள்
யையோ மூலருக்கு மனேகங் கொஞ்ச
மறியாமல் திரிந்தாக்கால் காலாங்கி நாயன்
மக்கள் பெற்று மணங்கொஞ்ச மானேனென்பார்
பிறியாமல் மூடமன மானால் மக்காள்
பெற்றெடுத்த போகரென்னைப் பேயனென்பார்
நெறியாக நின்றாக்கா லெனக்குக் கீர்த்தி
நிறுத்தினீர் மூலவர்க்கம் நிறுத்தினீரே. 691

பரவெளியை அறிந்துகொள்ளாமல் பாமரர் போல் திரிவதால் மூலருக்கும், காலாங்கி நாதருக்கும், இழுக்குண்டாகும். அதுமட்டுமின்றி குருவான போக நாதர் என்னைப் பேயன் என்று கூறுவார். ஆகவே பரம்பொருளை அறிந்து கீர்த்தி பெற்று நின்றால் அது எனக்கும் பெருமை. மூலவர்க்கத்தாருக்கும் பெருமை உண்டாகும்.

சீஷவர்க்கம்

நிறுத்துமென்று சொன்னதென்ன வென்னைப்பெற்ற
நிட்களமே நின்மலமே நிலையா வொன்றே
மறுத்துவென்று பேசுதற்கு ஐந்நூற்றுள்ளே
மைந்தருண்டோ மனத்தாபம் வேண்டாமையா
நிறுத்திநின்ற முதற்சீஷன் சோமன் சொன்னான்
நேரான சூரியனும் பிறகு சொன்னான்
வெறுத்துநின்ற பூரணத்திற் புக்கியாடி
மீளுகிறோம் விடைதாரு மென்றார் காணே. 692

இதற்கு சீடர் மறுமொழியாக: எங்களை பெற்ற நிஷ்களமான குருதேவா, என்று முதல் சீடனான சோமனும் இரண்டாவது சீடனான சூரியனும் என் முன்னே வந்து எங்களுக்கு தங்களுடைய ஆசியிருக்குமேயானால் இப்பொழுதே, பூரணத்துடன் கலந்து ஆடுகிறோம் என்று கூறினார்கள்.

என்றுசொல்லிப் பதஞ்சலியா மென்றன் பிள்ளை
யெண்பாகப் பாதத்தைத் தொட்டுக் கொண்டு
நன்றுசொல்லிக் குளிகைதந்து திருநீறிட்டால்
நாலுகடல் போய்முழுகி மேருவேறிக்
கன்றுசொல்லி மூலர்பதந் தெண்டன் பண்ணிக்
கைமுறையாய்ப் பூரணத்தைப் புக்கிச் சென்று
அன்றுசொன்ன நடனவொலி காண்பேன் காண்பே
னப்படியே விடைதந்து மருள்செய்வீரே. 693

இதற்கடுத்து மூன்றாவது சீடனான பதஞ்சலியும் என்பாதத்தை தொட்டு வணங்கி, குருதேவா எனக்கு தங்களின் திருக்கரத்தால் குளிகைதந்து தீருநீறிட்டு அனுப்பிவைத்தால் நாலு கடலிலும் மூழ்கி மேருவுக்குச் சென்று அவ்விடத்தில் திருமூலரின் பாதத்தைப் பணிந்து அவரருளால் பூரணத்தில் கலந்து நடனவொலியை கேட்பேன் என்று கூறினான்.

அருள்தாரு மென்றுவந்தே னானந்தநாத
னையருட னேயந்த வறுவரையுங் கண்டு
அருள்தாரும் பதந்தாண்டிப் பூரணத்திற்
புக்கிய மர்ந்து நின்றநடனத்துப் கப்பாற் செல்வேன்
அருள்தாரு மூலவர்க்க மெல்லாங்கண்டே
யங்கங்கே மதுவுண்டு யணைந்து பேசி
அருள்தாரு மேருவிலே மூலநாய
னடிப்பணிந்து வருகிறே னையாவென்றான் 694

இதன் பிறகு நான்காவது சீடனான ஆனந்தநாதன் என்னைப் பார்த்து குருதேவா! ஆதிமுதல் அந்தம் அனைத்தும் கண்டு அதற்கப்பாலுள்ள பூரணத்தின் நடனத்தையும் கண்டு பிறகு மூல வர்க்கத்தாரை கண்டு பேசி மதுவுண்டு உறவாடி மேருவிலிருக்கும் திருமூலரை கண்டு பிறகு மூல வர்க்கத்தாரை கண்டு அவருடைய ஆசீர்வாதம் பெற்று வருகிறேன். அருள் பாலித்தனுப்புங்கள் என்று கூறினான்.

அய்யனே யெனைப்போலே பிள்ளைபெற்றே
னம்மம்மா சலிப்புவந்தா லென்ன சொல்வே
னையனே யெனக்கேட்டான் போதானந்த
னண்டத்து மேலேறிப் பிள்ளாய்ப் பண்ணி
யையனே மற்றவெலாந் தாண்டித்தாண்டி
யதற்கடுத்த புவனமெல்லாம் பிள்ளாய்ப் பண்ணி
வையனே பதமெல்லாம் பிள்ளாய்ப் பண்ணி
யடுத்துநின்ற மனோன்மணியைக் கடக்கிறேனே. 695

கடக்கிறேன் முப்பாழைத் தெப்பம்புக்கிக்
கரையற்ற பூரணத்தி னொளியைத் தாண்டி
யடக்கிறேன் விராட்டியனை நிறத்துக்குள்ளே
யாண்மையுண்டோ வெனக்கேட்டா லுன்பதத்தினாண்மை
முடக்கிறேன் க்ஷணமெல்லாம் சகத்துக்குள்ளே
மூச்சான வாசியினால் க்ஷணத்தில் சித்தி
ஒடுக்கிறேன் சொரூபமென்ற குளிகைதந்து
ஓடுகிற கமலினியு முதவிடீரே. 696

அதன் பிறகு போதானந்தன் என்ற சீடன் குருதேவா என்னைப் போன்ற பிள்ளைகளை சீடனாக அடைந்த பிறகு நீர் சலித்தல் கூடாது. அடியேனும் முன் சீடர்கள் கூறியதைப்போல் அண்டமெல்லாம் தாண்டி புவனத்தையெல்லாம் கடந்து அதற்கு மேலுள்ள பதங்களையெல்லாம் தாண்டி மனோன்மணியையும் கடந்து வருகிறேன். மேலும் முப்பாழையும் தாண்டி கரைகாணாத பூரத்தின் ஒளியையும் தாண்டி விராட்டியனான புருஷனையும் கண்டு வருகிறேன். இதனையெல்லாம் செய்வதற்கு உனக்கு ஆண்மை உண்டோ என்று கேட்பீராயின் உம் முடைய அருளால் அனைத்தும் ஒரு வினாடியில் எனக்கு வந்துசேரும் அந்த அருளைக் கொண்டு வாசியை அடக்கி சித்திபெற்று வருகிறேன். ஆகையால் சொருப குளிகையும் கமலினிக் குளிகையும் தந்து அருள்புரிய வேண்டும் என்றான்.

உதவுமென்று அஞ்சுபேர் சொன்னாரையா
வோகோகோ ஐந்நூற்றோ டஞ்சுபத்தும்
கதவுமல்ல நிலையுமல்ல வேருமல்ல
கைமுறையா யானந்த நாமநூறு
நிதவுமென்ற பூரணமா நாமநூறு
நிலையான அங்கியென்ற நாமநூறு
பதவுமென்ற பரிச்சின்ன நாமநூறு
பாங்காக வின்னமுண்டு பரிவாய்க் கேளே. 697

கேளப்பா நாதமென்ற நாமநூறு
கெடியான வைந்நூற்றுக் காதியைவர்
தாளப்பா நந்தியென்றுங் கும்பனென்றும்
சாரலிலே யைம்பதுபே ருண்டுவுண்டு
நாளப்பா வைந்நூறோ டைம்பத்தேழ்பேர்
நலம்பெறவே கும்பாகக் கூடிக்கொண்டு
ஆளப்பா வென்னையீன்ற போகமூர்த்தி
யைவர் முதலாயவர் போலாடுவோமே. 698

இவ்வாறு ஐநூற்று ஐம்பது பேரில் ஐந்து பேர் கூறினார்கள். இவ்வைந்து பேரும் என் சீடர்களில் வேறானவர்கள் இல்லை. எப்படி என்றால், ஆனந்தன் என்ற பேர்கொண்ட சீடர்கள் நூறுபேர் பூரணன் என்ற பெயர் கொண்ட சீடர்கள் நூறுபேர் அங்கி என்ற நாமம் கொண்ட நூறு சீடர்கள், பரிச்சின்னன் என்ற நாமமுடையவர் நூறு சீடர்கள். நாதன் என்ற பெயர் கொண்ட நூறு சீடர்கள் உள்ளனர். இவர்களில் முன்கூறிய ஐந்து பேரும் ஒவ்வொரு நூறு பேருக்கு முதன்மையானவர்கள். ஆகவே இவர்களின் கருத்தும் ஐநூறு பேர்களின் கருத்தும் ஒன்றானது. சற்றும் மாறுதலில்லாதது. இவர்களைத் தவிர நந்தி என்றும் கும்பன் என்றும் பெயர் கொண்ட ஐம்பது சீடர்களும் உண்டு. இவர்கள் அனைவரும் ஒன்றாய்க்கூடி ஐயனே! நாங்களைவரும் போக தேவரைப் போல் இவ்வுலகத்தில் பெருமை பெற்று சஞ்சரிப்போம் என்றார்கள்.

ஆடுவோ மெழுவரைப்போ லதீதம்சித்தி
யைவர்சொன்ன வீறாப்பு மறியுமைவர்
ஓடுவோ மவர்கள்முன்னே பாகந்தாண்டி
யொருநொடிக்குள் பதமனவும் திரிந்து மீள்வோம்

கூடுவோம் பூரணத்தில் நிமைக்குமுன்னே
கொப்பளித்த நீர்போலக் குதிப்போ முன்னே
நாடுவோ மெங்கள்செய லல்லாமூர்த்தி
நம்பினதோர் குருபதத்தின் செயல்தான் காணே. 699

மேலும் மிகுந்த சித்தி பெற்று வீராப்பு பேசுபவின் முன்பாகவே ஒரு வினாடிக்குள் எல்லா பதமும் தாண்டி பூரணத்தை தொட்டு மீண்டும் பூமியில் வந்து குதிப்போம். இவையாவும் உம்முடைய செயலால்தான் எங்களுடைய செயல் ஒன்றுமில்லை.

காணப்பா வைவர்சொன்ன விருதுமெத்த
கடைப்பிள்ளை நாங்களெல்லாம் வயதுகொஞ்சம்
வீணப்பா யெங்கள் சென்மம் பேசமாட்டோம்
வெறுவெளியும் பூரணமும் நீயேயாச்சு
தாணப்பா வுமதுபத மெங்களுக்குச்
சார்ந்துகுரு பதத்தோடே சார்வோம் சார்வோம்
தோணப்பா தோணாத வெளியு நீதான்
சுத்தசை தன்யமென்ற குருவைக் கேளே. 700

கேளய்யா ஆடுவது உம்முள் நாங்கள்
கெடியான அண்டரண்ட பதமுநீர்தான்
நாளய்யா எட்டாத போதம் நீர்தான்
நற்கரையு மடிமுடியு மில்லாத நீர்தான்
வேளய்யா எரித்தணிந்த மூர்த்தி நீர்தான்
வேதாந்த அந்தமுதல் வெளியு நீர்தான்
தாளய்யா பிடித்துநின்ற பிள்ளை நாங்கள்
சற்றுமொரு பிழைப்பை பிரசாதிப் போமே. 701

மேலும் நாங்களெல்லாம் வயதில் சிறியவர்கள். ஆகையால் எங்களைப்பற்றி தற்பெருமை பேசமாட்டோம். உமது பெருமையையும் உமது சித்தியைப் பற்றியும் தான் பேசுவோம். ஏனென்றால் நீங்கள்தான் உண்மையான பூரணம், சுத்த சைதன்ய வஸ்துவும் நீர்தான், வெளிப்படையாக தோணாத பிரம்ம ஒளி ஆகையால் உமது பாதத்தை தவிர வேறொன்றையும் நாங்கள் வேண்டோம். அதுமட்டுமின்றி நாங்கள் செய்யும் அனைத்து செயலும் உம்முள்ளேயே உள்ளது, அண்டரண்ட பதமுநீர்தான் மனதிற்கும் வாக்கிற்கும் எட்டாத ஆனந்த போதமும் நீர், சிவபெருமானும் நீர், வேதாந்தப் பொருளும் நீர்தான், எனவே நாங்கள் தங்கள் பாதத்தை பிடித்துக் கொண்டு நிற்கும் குழந்தைகள் என்று கூறினார்கள்.

சாதிப்போ மென்றுசொன்ன வார்த்தை கேட்டுச்
சந்தோஷ மாகவிப்போ தடமும் பொங்கி
வாதிப்போ மென்றுசித்தர் வந்தால் மக்காள்
வரிசையுடன் றன்மைசொல்லி வணக்கம் பேசும்
போதிப்போ மென்றுசித்த ரெதிரே வந்தால்
போக்கோடே தொழிலறியீர் போனீரென்றும்
சேதிப்போ மிளைத்தினதோர் மூலவர்க்கம்
சேர்ந்தாடி வாருமென்று செப்பிடீரே. 702

செப்பையிலே துடுக்கவர்கள் செய்தாலுந்தான்
சேர்ந்துமக்காள் பொறுப்பதுவு மெத்தநன்று
ஒப்பையிலே முலவர்க்கத் தோடேயாட
வொருவருக்குந் தெரியாது வுயர்த்திமூலர்
குப்பையிலே கிடந்தாலுந் தங்கம் மக்காள்
குன்றாது அதிகமென்ற வர்ணமாகும்
உப்பையல்லோ வாதத்துக் காதியென்றே
யுத்தமனே மனம்போதத் தாதியாச்சே 703

இவ்வார்த்தைகளைக் கேட்ட நான் மிகவும் சந்தோஷமடைந்து குழந்தைகளே! வாதத்திற்கு சித்தர்கள் வந்தால் அவர்களிடம் தன்மையாக பேசுங்கள். உங்களுக்கு போதனைகள் செய்வோம் என்றும், எந்த தொழில் அறிந்துள்ளீர் என்றும் கேள்விகள் கேட்டு வந்தால் எங்களுடன் சேர்ந்து சித்து விளையாடிப் பார்த்து பின்னர் அறிந்து கொள்ளுங்கள் என்று கூறுவீர்களாக! இவை மட்டுமல்லாமல் பல துடுக்கான செயல்கள் புரிந்தாலும் அதைப் பொறுத்துக் கொள்ளுங்கள். அது மிகவும் நன்மை தரும். எதற்கும் அஞ்ச வேண்டாம். ஏனென்றால் மூலவர்க்கத்தாருடன் சரிசமமாக விளையாடுதற்கு எவராலும் முடியாது. குப்பையில் கிடந்தாலும் தங்கம் தங்கந்தான். அதன் பெருமை ஒருக்காலும் குறையாது. உப்பை வாதத்திற்கு ஆதியாக கூறியதைப் போல் மனம் ஆனந்த போதத்திற்கு ஆதியாகும்.

கற்பத்தின் பெருமை

ஆதியென்ற வுப்பெடுத்தால் வாதமாச்சு
அப்பனே மனமெடுத்தால் ஞானமாச்சு
பேதியென்ற ரசமெடுத்தாற் கமனமாச்சு
பேசாதே கற்பமுண்டால் சாவுபோச்சு
ஓதியன்று கட்டிவைத்தா லறிவுபோச்சு
வுள்புகுந்து பாராட்டால் மூலம்போச்சு
சாதியென்று சொன்னாக்கால் தவசுபோச்சு
சஞ்சரித்தால் பெண்ணோடே சடமும் போச்சு. 704

ஆதி உப்பால் வாதம் பலிதமாகும், மனதை ஒருநிலைப்படுத்தினால் ஞானம் உண்டாகும். ரசத்தைக் கட்டினால் ஆகாய பிரவேசம் உண்டாகும். கற்பங்கள் உட்கொண்டால் மரணம் என்ற பெயரே விலகும். படித்ததை ஒரு மூட்டையாகக் கட்டிவைத்துவிட்டால் அறிவு பாழாகும். சாதியைப் பற்றி பேசுமிடத்தில் (உயர்ந்த சாதி என்றும் தாழ்ந்த சாதி என்றும் பேசுவதால்) தவம் அழிந்து போகும். பெண்ணுடன் கூடி மருவினால் காயம் என்று சொல்லப்படும் இவ்வுடல் அழிந்து போகும்.

போகாம லிருப்பதற்குக் கற்பஞ் சொல்வேன்
போக்கோடே யுன்கையிலே நெறியைக் கேளு
வாகான புளியுப்பு எண்ணெய் சுண்ணம்
மருவியதோர் மாங்கிசங்கள் மோருமாகா
தாகான சுடுகுள்ளி காயமாகா
சஞ்சாரம் பண்ணுகிற பெண்ணுமாகா
பாகான நித்திரையும் சோம்பலாகா
பலசிந்தை விட்டுவிட்டு மூலம்பாரே. 705

இவ்வுடலை அழியாமல் பாதுகாக்க கற்பம் சொல்கிறேன்! கற்பத்தை உட்கொள்ள சில நெறி முறைகளும் பத்தியங்களும் உள்ளன. அவையாவன: புளி, உப்பு, பூண்டு, எண்ணெய், கண்ணாம்பு, மாமிசம், கள், மோர், கடுகு, பெருங்காயம் போன்ற வஸ்துக்கள் கற்பத்திற்கு ஆகாது. ஆகவே இவற்றை உட்கொள்ளக் கூடாது. மேலும் பெண் சேர்க்கை, சோம்பல், நித்திரை இவை மூன்றையும் விலக்க வேண்டும். இவையாவையும் விலக்கி சித்தத்தை ஒருமுகப்படுத்தி மூலாதாரத்தைப் பார்க்க வேண்டும்.

பார்க்கையிலே யுண்கிறதோர் பத்தியத்தைக் கேளு
பாலாகும் நெய்யாகும் பழமுமாகும்
கார்க்கையிலே மிளகாகும் தேனுமாகும்
கைமுறையாய் வெல்லமுமாம் கஞ்சாவாகும்
சேர்க்கையிலே பயறு பொன்னாங் காணியாகும்
செப்பினேன் சிறுகீரை தின்னலாகும்
தோர்க்கையிலே தூதுவளை யிலைகாயாகும்
சுகமாக வுண்டுகற்பம் சேரப் பண்ணே. 706

கற்பத்திற்கு ஆகும் பொருட்கள். (அதாவது கற்ப சாதனையின் பொழுது உட்கொள்ளும் உணவின் வகைகள்) பால், நெய், பழம், மிளகு, தேன், வெல்லம், கஞ்சா, பயறு, பொன்னாங்கண்ணி, சிறுகீரை, தூதுவளையின் இலை, காய் இவையாவும் உட்கொள்ளலாம் (தோஷமில்லை). இதனால் கற்பம் சித்தியாகும்.

பண்ணையிலே கடுக்காயை யமுரியோடு
பாங்காக வெருகடிதானிருபது நாளுண்ணு
தண்ணையிலே கள்ளிக்காய் குமரியோடு
சமனாகக் கூட்டியதைப் பொடியாய்ப் பண்ணி
கண்ணையிலே யமுரியொடு மிருபது நாளுண்ணு
காயத்திற் றுன்மலங்கள் கழன்று போகு
மண்ணையிலே மிளகோடு அமுரிகூட்டி
யப்பனே பத்துமுதல் நூறு வுண்ணே. 707

கடுக்காயை அமுரியுடன் ஒரு வெருகடி (இருவிரல் பிரமாணம்). கூட்டி இருபது நாட்கள் உட்கொள்ள வேண்டும். பின் கள்ளிக்காயை கற்றாழையுடன் சேர்த்துப் பொடித்து அமுரியுடன் இருபது நாட்கள் உட்கொள்ள வேண்டும். இதனால் உடலில் உள்ள மலங்கள் கழலும். பிறகு மிளகை அமுரியுடன் கூட்டி உட்கொள்ள வேண்டும். இதேபோல் பத்துமிளகு முதல் நூறுமிளகு வரை உயர்த்திக் கொண்டே உட்கொள்ள வேண்டும்.

உண்ணப்பா மண்டலந்தா னோய்மூன்றும்போ
முத்தமனே கடுவஸ்து வுண்டால் பங்காங்
கண்ணப்பா துலக்கமுமாங் கடுநரையு போம்
கைமுறையா யிதுகடந்த பின்பு கேளு
மண்ணப்பா வெட்டியிதில் செங்கொட்டை போட்டு
வளமாப நீர்கட்டி யமுகப்பண்ணி
பண்ணப்பா பிரட்டியதை யாறவிட்டுப்
பருவமுடன் பாத்திகட்டிப் பதிக்கக் கேளே. 708

இவ்வாறு ஒரு மண்டலம் வரை மிளகை உட்கொண்டால் வாதம், பித்தம் சிலேற்பனம் என்ற தோஷங்களும் அதனால் ஏற்படும் நோய்களும் விலகும். மேலும் நரை திரை விலகிக் கண்கள் பிரகாசிக்கும். இவ்வாறு செய்த பின்பு, பூமியைத் தோண்டி அதில் செங்கொட்டைகளைப் போட்டு நீர் வார்த்து அழுக வைக்க வேண்டும். கொட்டைகள் அழுகிய பிறகு அதன்மேல் மண் கொட்டிக் கிளறி ஆறப்போட்டு பாத்தி கட்ட வேண்டும்.

பதிக்கிறது வொருபக்கம் குமரியப்பா
பாங்கான.காக்கை ரெண்டு கிளுவைவை
மதிக்கிறது வல்லாரை கரிசாலை பாவு
மருவியதோர் பொற்றாலையுங் கஞ்சாப்போடு
விதிக்கிறதோர் ரோமமிடு செருப்படையைப் போடு
விளைந்து முற்றிக் காய்ந்தபின்பு விரையைவாங்கு
உதிக்கிறதோர் முக்காலு மிப்படியே போட்டு
வுத்தமனே மூன்றுதரம் பயிரைப் பண்ணே. 709

அப்பாத்திகளில் குமரி, காக்கை மூலி, வல்லாரை, கரிசாலை, கிளுவை, பொற்றலை, கஞ்சா, ஓமம், செருப்படை இவைகளின் விதைகளை விதைத்து பயிராக்க வேண்டும். இச்செடிகளின் விதைகளை மீண்டும் அதே இடத்தில் விதைத்து பயிராக்கி விதைகளை வாங்கி மீண்டும் முன்போல் பயிராக்க வேண்டும். இவ்வாறு மூன்று முறை செய்து பின்பு,

பயிராக மூன்றுதர மானபின்பு
பருவங்கள் சொல்லுகிறேன் பண்பாய்க் கேளும்
வயிராலின் பாலிலே கெந்தகத்தைச் சுத்தி
வாங்கியிதைக் கல்வமிட்டுக் குமரிவாரு
கயிரான மூன்றுநாளாட்டு ஆட்டுக்
கைமுறையாய்ச் செருப்படையை மூன்றுநா ளாட்டு
கயிரான பதத்திலே யுலரப்போடு
சாதகமாய்க் காய்ந்தபின்பு எடுத்துவையே. 710

பாலில் கெந்தகத்தை சுத்திசெய்து முன்பு பயிராக்கிய செடிகளில் ஒன்றான குமரியின் சாற்றால் கெந்தகத்தை மூன்று நாள் அரைத்து பிறகு செருப்படை சாற்றால் மூன்று நாட்கள் அரைத்து உலரவைக்க வேண்டும்.

வைத்தபின்பு சூதத்தைக் கல்வத்திட்டு
வாகான கஞ்சாவும் ஓமம்வாரு
உய்த்தபின்பு ஆறுநா ளாட்டு ஆட்டு
வுத்தமனே பொடியாகும் சூதந்தானும்
நைத்தபின்பு வுலரவைத் தெடுத்துக் கொண்டு
நாட்டி ரெண்டு ஞ்சமனாகச் சேர்த்துக் கொண்டு
கைத்தபின்பு மிளகுவிட்டுக் குமரியுண்ணு
கைமுறையா யிருபதுநாள் காணுங்காணே. 711

பின்னர், சூதத்தை சுத்திசெய்து கஞ்சாவும் ஓமமும் சேர்த்து ஆறுநாட்கள் அரைத்தால் சூதம் தூளாகும். இச்சூதத்தை உலரவைத்து இதற்கு சமனாக முன் உலர

வைத்துள்ள கெந்தகத்தைச் சேர்த்து மிளகுடன் கூட்டி குமரிச்சாற்றில் இருபது நாட்கள் உட்கொள்ள வேண்டும்.

காணப்பா யிதுகடந்தால் கரிசாலை யுண்ணு
கைமுறையாய் மண்டலந்தான் கறுக்குங்காயம்
பூணப்பா யிதுகடந்து காக்கை ரெண்டு
பொற்றலை வல்லாரை யவுரியஞ்சுந்
தோணப்பா சமனாக்கிப் பாக்களவு பாலிற்
சுகமாக மண்டலந்தா னுண்ணுவுண்ணு
ஆளப்பா காயத்தி னரைதான் போகு
மழகாக மன்மதன் போலாவாய் காணே. 712

இருபது நாட்கள் உட்கொண்ட பிறகு கரிசாலையை ஒரு மண்டலமும், பின்னர் இரண்டு வகை காக்கை மூலி, வல்லாரை, அவுரி, பொற்றலை, இவை ஐந்தையும் சம அளவு பாலுடன் சேர்த்து ஒரு மண்டலம் உட்கொண்டால் தேகம் சித்தியாகி நரைதிரை மாறி மன்மதன்போலாவாய்! பிறகு

ஆனபின்பு முன்சொன்ன ரசமுங்கெந்தி
யப்பனே ரெண்டுகுன்றி தினந்தானுண்ணு
ஆனபின்பு தினங்குன்றி யேற வேற
வடவாக மண்டலந்தா னுண்ணுவுண்ணு
ஆனபின்பு பச்சைரசம் கெந்தகமு மக்கா
ளடவாக வுண்டுவர வேதுஞ்செய்யா
ஆனபின்பு சட்டைபோம் நாதவிந்து ரெண்டு
மடவாக ரசத்தாலே தேக மாமே. 713

முதலில் சொன்ன ரசகெந்தியை இரண்டு குன்றி வீதம் ஒரு மண்டலம் உட்கொள்ள வேண்டும். மருந்து உடலில் ஏறஏற தேகத்தில் சட்டை உரியும். நாதமும் விந்தும் பிரகாசிக்கும். பச்சை ரசமும் கெந்தகமும் உட்கொள்கிறோமே என்ற பயம் கொள்ள வேண்டாம். அளவோடு உட்கொள்ள தேகம் அவதிப்படாது.

ஆமப்பா தேகமது வருணன்போலா
மாத்தாளு மப்பனுமாம் ரசமுங்கெந்தி
யோமப்பா சிவசத்தி யிரண்டால்தேக
முத்தமனே சடந்தானும் வண்டுபோலாம்
போமப்பா கவனமது கோடி காதம்
போமிடத்தே கடுவிருட்சப் பாலையுண்ணு
நாமப்பா யிப்படித்தா னுண்டு தீர்ந்தோம்
நமைப்போலே யுண்டுமக்காள் நலத்திடீரே. 714

தேகம் சூரியன்போல் பிரகாசிக்கும், அம்மையப்பனான சிவனும் சக்தியுமான ரசம், கெந்தி இவை இரண்டால், தேகம் வலத்து வண்டு போலாகும். கோடி காதம் வரை ககன பிரவேசம் செய்யலாம். ககன பிரவேசம் செய்து காட்டிலுள்ள கற்பக விருக்ஷத்தின் பாலை உட்கொண்டு மேலும் தேகத்தை திடமாக்கு. நாங்களும் அவ்வாறே செய்தோம் நீங்களும் என்னைப் போல் காயசித்தி செய்து கொண்டு வாழ்வீர்களாக!

நலத்தபின்பு குளிகையிட்டு அகஸ்தியரைக் கண்டு
நலமான காஷாய வடமும் வாங்கிப்
பிலத்தபின்பு பூமியைத்தான் தகித்து மக்காள்
பேரான மேருவுக்கு வடக்கே போங்கோள்
கொலத்தவன்ன சித்தர்வர்க்கம் கோடானுகோடி
குலத்தோடே கூடிமக்கா ளிழைந்து பேசி
நிலைத்தபின்பு சித்தரென்ன நாமமாச்சு
நிலையாட்டால் வாதியென்ற நாம மாச்சே. 715

குளிகை செய்து அதன் முலம் கவுன பிரவேசம் செய்து அகஸ்தியரைக் கண்டு போற்றி அவரிடம் காஷாயமும் ஜப மாலையும் வாங்கிக் கொண்டு பூமியை சுற்றிப் பார்த்து மேருவுக்கு வடக்கே செல்லுங்கள். அங்கே சித்தர்களின் கூட்டம் மிகுந்து இருக்கும். அவர்களைப்பார்த்து பேசினால் நீயும் ஒரு சித்தனாவாய். இல்லையேல் வாதியென்ற பெயரைப் பெறுவாய்,

வாதியென்றா லுண்டுடுத்துச் சுகித்துச் சாவான்
மக்களே சித்தனென்றால் சாகானென்றும்
ஓதியென்றும் ஞானியென்றாற் பூரணத்தைச் சேர்வான்
ஓகோகோ யோகியென்றா லொடுங்கானென்று
மாதியென்றும் சமாதிக்குள் ளிருந்தாரானா
லப்பனே ரிஷியான நாமமாச்சு
பேதியென்ற நவலோக ஏமங்கண்டு
பேயாகப் போகாமற் பிழைத்திடீரே. 716

வாதி என்றால் சுகபோகமாக வாழ்க்கையை அனுபவித்து சுகமாக வாழ்ந்து சாவான். சித்தனென்றால் என்றென்றும் சாகாமல் வாழ்வான். ஞானி என்றால் பூரணத்துடன் கலந்து நிற்பான். யோகி என்றால் சித்த விருத்திகளை ஒடுக்கி வாழ்வான், சமாதிக்குள் இருந்து வாழ்வோருக்கு ரிஷி என்று பெயர். ஆகையால் நவலோகத்தை பொன்னாக்கி பேயாகத் திரியாமல் தேகத்தை சித்திசெய்.

உப்புக்கட்டின் பெருமை

பிழைத்திடவே முக்காண்டம் வரிசையாகப்
பேரான வுப்புமுதல் பிறப்புஞ் சொன்னேன்
பிழைத்திடவே வுப்பைநன்றாய் விரித்துச் சொன்னேன்
பிறந்ததொழி லஷ்டாங்க முப்பாழப்பா
பிழைத்திடவே வுப்பேது சூதஞ்சூதம்
பேரான ஆயியுட நாதம்நாதம்
பிழைத்திடவே யென்மக்கா ளுங்கட்காகப்
பேர்மறைப்பும் சீர்மறைப்பும் பேசுவேனே. 717

முக்காண்டமான இந்நூலில் உப்பின் பிறப்பு வகைகளையும் கட்டு வகைகளையும், விரிவாக சொன்னேன். ஆயிநாதமான இவ்வுப்பால் செய்யக் கூடிய தொழிலையும், அதன் முறைகளையும் நீங்கள் பிழைப்பதற்காக வெளிப்படையாக கூறியுள்ளேன்.

பேசாதே வுப்பைமுந்திப் பாருமக்காள்
பின்னையொன்று பார்த்துழன்றாற் பேய்க் கூத்தாகும்
கூசாதே வுப்பெடுத்து முன்னே கட்டிக்
கொள்ளையிடு வாதத்தைக் குளிகை பண்ணு
ஏசாதே காயத்தைச் சித்தி பண்ணு
யிசைந்து கொண்டு மூலத்தை யிறுக்கிப்பாரு
வூசாதே யோகசித்தி ஞானசித்தி
யுத்தமனே வாதசித்தி மூன்றுமாமே. 718

ஆகவே இவ்வுப்பை முதலில் கட்டிக் குளிகை செய்து வாதம் பார்த்தால் மிகவும் எளிதாக சித்தியாகும். இவ்வுப்புக் கட்டால் காயத்தை சித்தி செய்துகொண்டு மூலத்தை நோக்கினால் காய சித்தியும் யோகசித்தியும் வாத சித்தியும் கைகூடும்.

கற்பத்திற்கனுபானக் கிஷாயம்

மூன்றுமாங் கடுக்காயை யுண்ணும்போது
மூதண்டக் கியாழமொன்று சொல்லக் கேளு
ஆன்றுமா மறுகம்வேர் பிடிதானொன்று
அப்பனே மிளகதுதா னிருபத்தைந்து
தொன்றுமாம் படியொன்று சலத்தை வார்த்துச்
சுகமாக எட்டிலொன்றாய்க் காய்ச்சிக் கொண்டு
பூன்றுமாம் வெண்ணெயொரு பாக்களவு போட்டுப்
புகழான மாலையிலே பொருந்த வுண்ணே. 719

மூதண்டக் கடுக்காயை உட்கொள்ளும் பொழுது அனுபானக் கியாழம் ஒன்று சொல்கிறேன் கேள்! அறுகம் வேர் ஒரு பிடி, இருபத்தைந்து மிளகு, இவை இரண்டையும் ஒரு படி சலத்தில் போட்டு எட்டில் ஒரு பங்காக கண்டக் காய்ச்சி பாக்களவு வெண்ணையை சேர்த்து மாலையில் உட்கொள்ள வேண்டும்.

உண்ணப்பா யிப்படிதான் கடுக்காய் தொட்டு
வுத்தமனே கற்பமெல்லா மாகுமட்டும்
உண்ணப்பா கஷாயத்தை விட்டிடாதே
யுத்தமனே கற்பத்துக் குறுதிமெத்த
உண்ணப்பா சடமிருக்குஞ் சயந்தான் போகு
மோகோகோ மருந்தீடு மொழிந்து போகும்
உண்ணப்பா நித்திரையைக் கொள்ளொட்டாது
ஒடுக்குவிக்கு மூலத்தை யுற்றுப்பாரே 720

இவ்வாறு கடுக்காய் முதற்கொண்டு எல்லா வகையான கற்பத்திற்கும் கியாழத்தை விடாமல் மாலையில் உட்கொண்டால் கற்பம் சித்தியாகி தேகம் என்றென்றும் நிலைத்து நிற்கும். மேலும் இடுமருந்து க்ஷயம் போன்றவையும் விலகும், நித்திரை ஏற்படாது. மனது மூலத்தில் லயிக்கும்.

உற்றுப்பாரறுகொன்று வெளிதேயல்ல
வுத்தமனே சிவனெடுத்துச் சிரசில் வைத்தார்
கொற்றுப்பார் கணபதிக்குச் சிகையுமாச்சுக்
கூறரிது இதன்பெருமை கொள்ள மாட்டேன்

முற்றுப்பார் மிளகு சத்தியறு கோவீசன்
மூதண்ட சூரணந்தான் வெண்ணெ யாச்சு
ஒற்றுப்பா ரிதுமூன்றும் விடாதே யுண்டால்
ஒருதோஷஞ் சடத்துக்கு வுறாது வுண்ணே 721

அறுகு என்றால் மிகவும் சாதாரணம் என்று எண்ணி விடாதே! இவ்வறுகை சிவன் தன்னுடைய தலையில் சூடிக்கொண்டார். கணபதியான விநாயகருக்கும் இதுவே அலங்காரப் பொருளாகும். இதன் பெருமை அப்படிப்பட்டது. மிளகு சக்தியாகும். அறுகானது ஈசனாகும். இதனுடன் சேர்த்துள்ள வெண்ணையே மூதண்ட சூரணமாகும். இம்மூன்றையும், விடாமல் உட்கொண்டால் ஒரு தோஷமும் அணுகாது.

உறுகாது மயக்கங்கள் தியக்கங்க ளொன்று
முத்தமனே தாகமில்லை சலக்கட்டில்லை
மறுகாது வுடலுக்கு வலியுமில்லை
மற்றுமுள்ள கற்கத்தின் தோஷமில்லை
தறுகாது வாசியெங்கும் மூலத்தே பாயுஞ்
சண்டாள னானாலும் ஞானமெய்தும்
அறுகாது சீவகளை சாகா னென்றும்
அம்மம்மா கஷாயத்தி னாண்மைதானே 722

ஒரு மாத காலம் தொடர்ந்து உட்கொண்டால், தாகம் சலக்கட்டு கற்பத்தின் தோஷம் போன்றவை விலகும். உடலில் எந்தவித வலியும் ஏற்படாது. வாசி மூலத்தில் சென்று ஒடுங்கும் இக்கஷாயத்தை உட்கொண்ட மாத்திரத்தில் சண்டாளனும் ஞானம் பெறுவான். மேலும் பிராணன் உடலை விட்டு விலகாது என்றென்றும் சாவை ஜயித்து வாழ்வான்.

ஆண்மையின்னு மொன்றுண்டு சொல்லக் கேளு
அப்பனே வாசியிலே முனையைக் கூட்டி
தாண்மையிலே மூலத்தைச் சித்திபண்ணு
சாதகமா யானபின்பு சொல்லக் கேளு
வாண்மையிலே பிரண்டையென்ற கொழுந்து வாங்கி
வாயாலே தியானமுற்று வூதுவூது
கேண்மையிலே தின்றாக்காற் கரும்பு போலாம்
கெடியான மூலமது சித்தி யாச்சே. 723

இன்னுமொரு விஷயம் சொல்கிறேன் கேள்! வாசியை மூலத்தில் வைத்து மனதை அம்மூலத்தில் நாட்டினால் மூலம் சித்தியாகும். மூலம் சித்தியானதற்கு பரீக்ஷை சொல்கிறேன் கேள். பிரண்டையின் கொழுந்தைக் கொண்டு வந்து மூலத்தை தியானித்து உன் வாயால் பிரண்டையின் மீது காற்றை ஊதி பின்பு அப்பிரண்டையை உட்கொண்டால் கரும்புபோல் இனிக்கும். இதுவே மூலம் சித்தியானதற்கு பரீக்ஷையாகும்.

பிரண்டைப் பரிக்ஷை

சித்திக்கு லட்சணந்தான் பிரண்டை முந்தி
செய்தபின்பு என்மக்காள் கேளுகேளு
மத்திக்குப் பாஷாண மெல்லாந் தின்னு
மலசலமும் பொன்னாகும் வயிரந் தேக

மொத்திக்கு மூன்றுடம்பில் தேகந் தங்க
முத்தமனே செம்பாகு மோடுந் தூரம்
அத்திக்குஞ் சூதமொடு கெந்தகத்தை யுண்ணு
அம்மம்மா தேகமெல்லாம் களங்க மாச்சே. 724

இவ்வாறு செய்து பார்த்து மூலம் சித்தியானதை தெரிந்து கொண்டு பிறகு எல்லா வகையான பாஷாணக் கற்பங்களையும் உட்கொள்ள வேண்டும். பாஷாணக் கற்பங்கள் சித்தியானால் தேகம் உறுதியாகி மலஜலத்தால் வேதனை ஏற்படாது. தேகமும் தங்கம் போல் பிரகாசித்து அதிக தூரம் கவுனம் பாயும். இச்சமயம் முன்போல் கெந்தகம் சேர்த்த சூதத்தை உட்கொள்ள தேகம் களங்குப் போலாகும்.

கற்ப முழுக்குச் சுத்தி

ஆச்சப்பா முழுக்குக்கு மருந்து கேளு
அப்பனே நெய்வார்த்துத் தேய்த்துக் கொண்டு
ஒச்சப்பா சிறுபயறு அரைப்பாய்ப் பண்ணி
யுத்தமனே முழுகிவர வுடம்புக் கேற்கும்
வாச்சப்பா கடுக்காயும் நெல்லிக் காயும்
வாகான மிளகோடு மஞ்சள் வேம்பு
தேச்சப்பா அமுரியுடன் முழுகிவாநீ
சிறக்கவொரு திங்களுக்கு ஒருக்காற் காணே. 725

ஆவின் நெய்யை தேய்த்துக் கொண்டு சிறுபயறின் மாவால் முழுகினால் உடல் தேறும். அதேபோல் கடுக்காய், நெல்லிக்காய், மிளகு, மஞ்சள், வேம்பு, இவை யாவையும் அமுரியுடன் சேர்த்தரைத்து தலை முழுகுதல் வேண்டும். இவ்வாறு மாதம் ஒருமுறை குளிக்கவேண்டும்.

காணப்பா முழுகிவந்தாற் கபாலவாயு
கைகடந்து போகிவிடுங் கபாலங்கெட்டி
பூணப்பா கண்ணுக்குட் புகைச்சல் போகும்
போக்கான சடம் நன்றாயிருக்கும் பாரு
வீணப்பா நல்லெண்ணெய் தொட்டால் மோசம்
வேதித்துச் சடமெல்லாம் விரிந்து போகும்
ஊணப்பா வுள்ளபடி சொன்னேன் சொன்னே
னுத்தமனே யுறைந்தாக்கால் முத்தியாமே. 726

மாதம் ஒருமுறை முழுகி வருவதால் கபாலத்திலுள்ள வாயுக்களெல்லாம் ஒடுங்கி கபாலம் கெட்டிப்படும். மேலும் கண் புகைச்சல் விலகி தேகம் திடப்படும். இவ்வாறின்றி வெறும் நல்லெண்ணெய் கொண்டு முழுகினால் தேகம் வெந்து விரியும். ஆகவே நான் கூறியபடி செய்து நல்ல பலனை அடைவாய்.

பாகம ஆசனம்

முத்திக்குப் பராபரையைப் பூசைபண்ணு
மூதண்ட மதுவோடே சுத்திபண்ணு
அத்திக்கும் சுத்திக்கும் பாகங்கேளு
அப்பனே நெய்வாரு வெல்லம்போடு

பத்திக்கு மிளகுபொடி மெத்தப்போடு
பாங்காக நீர்வற்ற வறுத்துப்போடு
எத்திக்கும் சித்தரெல்லாம் செய்வார் மக்காள்
யானுமென்னைப் பெற்றார்க்குச் செய்திட்டேனே. 727

இட்டபடி யானுண்டு சித்திசெய்தேன்
என்மக்கா ளென்னைப்போ லுண்டுதேறு
இட்டபடி வாசனைக்குச் சீரகத்தைப் போடு
இதமான கருவேம்பு கிராம்பு போடு
இட்டபடி சாதிக்காய் கஸ்தூரி போடு
எளிதாக மஞ்சளிட்டு மியல்பாய்ப் பண்ணு
இட்டபடி யிதைக்காட்டிச் சுத்தியென்ன
இதமான புளியுப்பு இழந்துபோடே. 728

போட்டுநன்றாய்ச் சுத்தியைத்தான் சமைத்துக் கொண்டு
போக்கோடே நீர்வற்றி நின்றபோது
வாட்டுநன்றாய் நெய்விட்டு வறுத்துக்கொண்டு
மாயிக்கு வெகுபிரியம் வைத்துப்பூசி
பூட்டுநன்றாய் மூலத்தே தானுநீயும்
பூசைபண்ணி மதுவையுண்டு பொங்கிப் பாரு
காட்டுநன்றாய்ச் சுகாசனமா யிருந்து கொண்டு
கைமுறையாய்க் கேசரியைப் பிடித்துப்பாரே. 729

பராபரைக்கு மது மற்றும் சுத்தியை வைத்து பூசை செய். சுத்தி முறையை கூறுகிறேன் கேள். (சுத்தி என்பது ஒரு கற்பமருந்து). நெய், வெல்லம் இவை இரண்டையும் எடுத்துக் கொண்ட பின் மிளகு, சீரகம், கருவேம்பு, கிராம்பு, சாதிக்காய், கஸ்தூரி மஞ்சள் போன்றவற்றை நீர்வற்ற வறுத்துக் கொண்டு முன்பு எடுத்துக் கொண்ட நெய்யும் வெல்லத்தையும் சேர்த்து காய்ச்சிக் கொண்டு தாயாருக்கு வைத்து பூசை செய்தல் வேண்டும். இச்சுத்தி தாய்க்கு மிகவும் பிரியமாகும். மதுவையும் சுத்தியும் வைத்து தாய்க்கு பூசை செய்து பூஜா பிரசாதமாக நீயும் உட்கொண்டு மனதை மூலத்தில் நிறுத்தி கேசரியை நோக்கினால் பூரணம் கைகூடும்.

பாரப்பா கடுக்காயும் கள்ளிக்காயும்
பருவமுடன் மிளகோடு மூன்றுங்கொண்டு
நேரப்பா சஞ்சாரஞ் செய்யலாகும்
நிலைத்தகரு மூலிகையை யுண்ணும்போது
வூரப்பா திரியாதே யுள்ளறையில் வாழு
வுத்தமனே ரசகெந்தி யுண்ணும்போது
காரப்பா குகைக்குள்ளே பஸ்பமிட்டுக்
கைமுறையாய் மலசலமுங் குகையில் நீக்கே. 730

கடுக்காய், கள்ளிக்காய், மிளகு இவை மூன்றையும் உட்கொண்டு வெளியே சஞ்சாரம் செய்யலாம். கருப்புநிற மூலிகையை உட்கொள்ளும் பொழுது வீட்டிலேயே யிருந்துகொண்டு வாழ வேண்டும். (சூரிய ஒளி தேகத்தின் மேல் படக்கூடாது).

ரசமும் கெந்தியும் சேர்த்த மருந்தை உட்கொள்ளும் பொழுது குகைக்குள் வாழவேண்டும். மேலும் குகைக்குள் பஸ்மத்தை (சாம்பலை) பரப்பி அதன் மேல் உட்கார்ந்து கொள்ள வேண்டும். மலசலங்களையும் குகைக்குள்ளேயே கழித்தல் வேண்டும்.

நீக்கிவிடும் பஸ்பத்திற் படுத்துக் கொள்ளு
நீங்காமல் மூலத்தே யூன்றுவூன்று
தாக்கிவிடு மறக்காதே மக்காள் நீங்கள்
சஞ்சலத்தை யடையாதே பேயாகாதே
யாக்கியிடு கறிசோற்றை யாசிக்காதே
யணைத்துவிட்ட பெண்ணையெண்ணி நினைந்திடாதே
பேய்க்கிட்ட பூசையைப் போற் போகும் போகும்
பேராக மூலத்தைப் பேணிப்பாரே. 731

படுத்துறங்கும் பொழுது பஸ்பத்தின் மேல்தான் படுக்க வேண்டும். படுக்கும் பொழுதும், உட்காரும் பொழுதும், புரண்டாலும், மூலத்தில் மனதை நிறுத்தல் வேண்டும். ஆனால் ஒருபொழுதும் மனசஞ்சலம், கறிசோற்றின் ஆசை, பெண்ணாசை கொள்ளக் கூடாது.

பேணியப்பா பஸ்பத்திற் படுத்துக்கொண்டு
பிரண்டாலு மிருந்தாலும் பேணிமூலம்
ஆணியப்பா பிடித்தாப்போ லொக்கக்கூடு
அப்பவொரு விக்கினங்க ளணுகிடாது
வூணியப்பா முழங்கால்மேல் முழங்கால் போட்டு
வுத்தமனே கோமுகா சனத்திற்கூடு
தோணியப்பா வலுத்தாக்கால் வலக்கால் மேலே
சுகமாக வீரா சனத்தைக் கூட்டே. 732

இவ்வாறு படுக்கும் பொழுதும், உட்காரும் பொழுதும், புரளும் பொழுதும் மனதை மூலத்தில் இருத்துவதால் சகலவிதமான விக்கினங்களும் விலகும். முழங்கால் மேல் முழங்காலைப் போட்டுக் கொண்டு கோமுகாசனத்தில் இருந்து யோகம் பழகவேண்டும். அச்சமயம் கால் வலி எடுத்தால் வலக்காலை மேலேவைத்து வீராசனத்தில் அமரவேண்டும்.

படிகை யோகம்

கூட்டையிலே வாசனைகள் கிண்டிற்றானால்
கொள்ரெண்டு துடைமேல் ரெண்டுபதத்தை வைத்து
நீட்டையிலே பத்மவாசன மாயக்கூடி
நிலையான நுனிமூக்கை நேர்ந்துபாரு
வூட்டையிலே சுழிமுனையில் வாசிகூடு
வுத்தமனே வாசனைதா னோடிப் போகும்
ஆட்டையிலே யிதுமார்க்கந் தாயைக்கண்டு
ஆடலாம் பூரணத்தி லழுந்தலாமே. 733

வீராசனத்தில் அமரும் பொழுது வாசனைகள் மனதை சஞ்சலப்படுத்தினால் இரண்டு தொடையின் மேல் இரண்டு பாதத்தை வைத்து பத்மாசனத்திலிருந்து நுனி

மூக்கில் பார்வை நிறுத்தி மனதை சுழுமுனையில் நிறுத்தி வாசியை கூட்டினால் வாசனைகள் ஓடிப்போகும். இதுவே முழுமையான மார்க்கமாகும். இதனால் பூரணமான தாயைக் கண்டு மேன்மை பெறலாம்.

அழுந்தினாற் சிவயோகி ஞானியாவா
　　னப்பனே கற்பந்தா னுடலிற்சேரு
மழுந்தினால் மூலத்தீ வெளியே வீசு
　　மாறுதலக் கிராந்தி யெல்லா மற்றுப் போகு
மழுந்தினால் கும்பத்தே மிதக்கலாகு
　　மப்பனே தணலாலே யசைக்கப் போகா
தழுந்தினால் வாயுவென்ன மசகமாச்சு
　　அந்தந்த சித்தருமே தண்டவாறே. 734

இம்முறையை பழகினால் சிவயோகி எனப்பெயர் பெற்று ஞானியாவாய். மேலும் கற்பம் உடலில் சேர்ந்து மூலம் சூரியன் போல் ஒளி வீசும். அறுதலத்திலுள்ள முடிச்சுக்களெல்லாம் விலகும். சதாநேரமும் கும்பகத்தில் இருக்கலாம். தேகமானது நெருப்பினால் அழியாது. வாயு நம்முள் ஒடுங்கி ஆகாய பிரவேசம் ஏற்படும். இவையாவும் சித்தர்கள் கற்பம் உட்கொண்டு தன் சொந்த அனுவத்தினால் கண்டு கொண்டவையாகும்.

கண்டபடி யான்கண்டு சொன்னேன் மக்காள்
　　காற்றான பேச்சல்ல காணாதல்ல
உண்டபடி கற்பமெல்லா முற்றுச்சொன்னே
　　னொருசொல்லுந் தப்பில்லையுரைத்துப் பார்த்தால்
விண்டபடி மக்களே யுங்களுக்கே யானும்
　　வெளியாகப் பாடிவிட்டேன் மூன்றுகாண்டம்
ஒண்டவண்ட னென்றாக்காற் காணமாட்டா
　　னுத்தமோத் தமனானாற் காணுங்காணே. 735

நானும் இதேபோல் கற்பமுட்கொண்டு சித்தியடைந்தேன். இதில் கூறியுள்ளவை அனைத்தும் சாதாரண வாய்ப்பேச்சல்ல உண்மையில் நான் உட்கொண்டு அனுபவித்த முறைகளாகும். ஆகையால் ஆராய்ந்து பார்த்தால் ஒரு சொல்லும் பிசகாது. சகலவிதமான கற்ப முறைகளையும் வெளிப்படையாக மக்களான உங்களுக்காக மூன்று காண்டமாகப் பாடியுள்ளேன். ஒழுக்கமில்லாதவன் இதை அறிதல் முடியாது. உத்தமனானால் மட்டுமே அறிந்து கொள்ள முடியும்.

செம்பு மூலிகை

காணப்பா மூலிகையிற் செம்பு சொல்வேன்
　　கலந்தவுரி யோரிதழ்த் தாமரையுங் கேளு
பூணப்பா புளியரணை கோவையோடே
　　புகழ்சிவந்த கொடிவேலி சிறியகீரை
ஆணப்பா செந்திராயிப் பிடாரமுக்கி
　　யப்பனே கரிசாலை யங்கபாதி
தோணப்பா செவ்வல்லி கறுத்த செம்பை
　　சுகமான செங்கீரை கௌதும்பை காணே. 736

மூலிகையில் செம்பெடுக்கும் முறையைக் கூறுகிறேன். அவுரி, ஓர் இதழ் தாமரை, புளியரணை, கோவை, சிகப்புக் கொடிவேலி, சிறிய கீரை, செந்திராய், பிடாரமுக்கி, கரிசாலை, அங்கபாதி, செவ்வல்லி, கறுத்த செம்பை, செங்கீரை, கௌதும்பை,

தும்பையொடு பொற்றலையுங் கேளுமக்காள்
சுகமாகப் பதினஞ்சும் வெவ்வேறு சாறு
குப்பையெனச் சட்டியிலே பிழிந்து வைத்துக்
குறையாமல் மூன்றுநா ளிருந்த பின்பு
வம்பையென நாற்றம்வரு மதிலேகேளு
மாட்டுதிரி மித்திரத்தை வளமாய்ச் சேர்த்து
அம்பையென நாலுவகை மித்திரத்தைப் போட்டு
அடவாகப் பிசைந்துருட்டிப் புடத்தைப் போடே. 737

பொற்றாலை, இவை பதினைந்தையும் தனித்தனியாக வெவ்வேறு சட்டியில் சாறு பிழிந்துக் கொண்டு மூன்று நாள் தெளிய வைத்தால் நாற்றம் உண்டாகும். சாற்றில் திரிவகை மித்திரத்தை சேர்த்து கலக்கி மீண்டும் நாலுவகை மித்திரத்தையும் சேர்த்து பிசைந்து உருட்டி புடம் போட வேண்டும்.

போட்டுடனே பற்பமா யெடுத்துக் கொண்டு
புகழாக யஞ்சுவகை மித்திரத்தையூட்டு
நீட்டுடனே குடோரத்தைப் பத்துக்கொன்று
நிலையாக வில்லைதட்டி நிழலிலாட்டி
ஆட்டுடனே வங்கமென்ற நாளத்தூது
அப்பனே செம்பாகும் மூலிகையின்சாறு
கூட்டுடனே வேறுவே றிப்படியே யூது
குறையாமற் பதினஞ்சும் செம்புமாமே. 738

புடம் ஆறிய பின் எடுத்துப் பார்த்தால் மருந்து பற்பமாக இருக்கும். இப்பற்பத்துடன் ஐந்து வகை மித்திரத்தை கூட்டி பத்துக்கொரு பங்கு குடோரியைச் சேர்த்து வில்லை தட்டி நிழலில் காய வைத்து வங்க நாளத்தில் வைத்து ஊதினால் செம்பாகும். இதைப் போலவே ஒவ்வொரு மூலிகையின் சாற்றிலும் மித்திரத்தை சேர்த்து ஊதினால் பதினைந்து மூலிகையும் செம்பாகும்.

செம்பான மூலிகைதான் கேளுமக்காள்
க்ஷணத்திலே சூதத்தைக் கொல்லும்கொல்லும்
வம்பான வாதிகள்தான் சாற்றைவார்த்து
மத்திப்பார் கட்டாது மாய்வார்மாண்பர்
அம்பான செம்பொன்று சூதமொன்று
அப்பனே தங்கமொன்று மூன்றுமாட்டிக்
கொம்பான மணிக்குநேர் கெந்தகத்தைக் கூட்டிக்
குமட்டி நன்றாயரைப்பதற்கு மருந்துகேளே. 739

செம்பு சத்திருக்கும் மூலிகையால் சூதமானது கட்டி திடப்படும். இதை அறிந்த உலகவாதிகள் இம்மூலிகையிலிருந்து சாற்றைப் பிழிந்து சூதத்தைக் கட்ட நினைப்பர். ஆனால் அது கைகூடாது போகவே சாத்திரத்தைப் பொய் என்பார்கள். (உண்மை

சூதமானது மூலிகையிலிருந்து எடுத்த செம்பால் தான் கட்டும்). செம்பு ஒரு பங்கு சூதம் ஒரு பங்கு, தங்கம் ஒரு பங்கு மூன்றையும் சேர்த்து உருக்கினால் மணியாகும். இம்மணிக்கு சமஅளவு கெந்தகத்தை சேர்த்து

மருந்தப்பா பொற்றாலையின் காசான்பூவு
மருவியதோர் மாதளம்பூ புரசம்பூவு
மருந்தப்பா அங்கபாதிச் சாறோடொக்க
அப்பனே யஞ்சாறு அஞ்சுநாள்தான்
வருந்தப்பா யரைத்தெடுத்துக் குப்பியிலேயேற்றி
வாகாக வாலுகையில் வைத்துநீயும்
விருந்தப்பா யீசனுக்குந் தாய்க்கும்போட்டு
விரைந்துகன லொருநாள்தான் விளங்க மூட்டே. 740

பொற்றலை, காசான்பூ, மாதளம்பூ, புரசம்பூ அங்கபாதி இவை ஐந்து வகையான மூலிகையின் சாற்றால் தனித்தனியே ஐந்து நாட்கள் அரைத்து வாலுகையின் மேலே வைத்து ஈசனுக்கும், தாய்க்கும் பூசைசெய்து ஒரு நாள் முழுவதும் தீமூட்டி எரித்து

மூட்டியதீ யாறியபின் பாருமக்காள்
மூதண்ட அருணனிற மாகுமக்காள்
ஆட்டியிதை யாயிரத்துக் கொன்றுநீ தான்
அப்பனே நவலோகத் துள்ளேயூட்டப்
பூட்டியபின் திசைமாற்றா மிதினின்வேதை
டீகழாகத் தினங்குண்ணி மண்டலந்தானுண்ணு
வூட்டியதைத் தின்ன சடமருணன் போலாம்
உத்தமனே மூலிகையின் சித்திதானே. 741

ஆறியபின் எடுத்துப் பார்த்தால் உதயசூரியனைப்போல் சிவந்த நிறத்தில் செந்தூரமாயிருக்கும். இச்செந்தூரத்தை நவலோகத்தில் ஆயிரத்துக்கொன்று சேர்த்து உருக்கினால் பத்து மாற்றுள்ள தங்கம் கிட்டும். இச்செந்தூரத்தை அனுதினமும் ஒரு குன்றி அளவுவீதம் ஒரு மண்டலம் உட்கொண்டால் தேகம் சூரியனைப்போல் பிரகாசிக்கும்.

சித்தியொன்று பொன்னைப்போற் கேளுமக்காள்
திறமாகப் பதினஞ்சுஞ் செந்தூரித்தால்
அத்தியென்ற யோகசித்தி காயசித்தி
அளவில்லை கரையில்லை அம்மா அம்மா
பத்தியென்ற தழைபிடுங்கிச் சாறுவாங்கிப்
பாழாகச் சுறுக்கிட்டு யரைத்துப் பார்த்துக்
கத்தியென்று மலைவார்கள் வாதிமாண்பர்
கண்டுடனே வாய்மேலே கடிந்துசண்ணே. 742

இதை போலவே பதினைந்து வகையான மூலிகையிலிருந்து எடுத்த செம்பை முன்போல் செந்தூரம் செய்தால் யோகசித்தியும் காயசித்தியும் கைகூடும். இதன் மகிமையை கூறுவதற்கு அளவேயில்லை. இவ்வாறு மேற்கூறியபடி முறையாக செய்யாமல் மூலிகையை பிடுங்கி சாறு வாங்கி சுருக்கிட்டு அரைத்து பார்த்து வாதம் கிட்டாமல் அலைவார்கள். அப்படிப்பட்ட வாதிமார்களின் வாய்மேல் ஒரு குத்துவிடு.

ஈய மூலிகை

கடிந்துநின்று மூலிகையி லீயம்வரச் சொல்வேன்
கண்டபடியே சொல்வேன் களங்கெண்ணாதே
படிந்துநின்ற சுரைசீந்தி பொன்னாங்கண்ணி
பருவமுடன் சிறுபூளை விழுதியேர
மடிந்துநின்ற செருப்படையும் முசுட்டையோடே
மருவியதோர் முத்திருக்கும் செவிதான் கேளு
அடிந்துநின்ற வேலியொடு வெள்ளைக்குன்றி
அப்பனே வெள்ளைச் சாறுவளையுங் கூட்டே. 743

மூலிகையிலிருந்து ஈயமெடுக்கும் முறையைக் கூறுகிறேன் கேள்! சுரை, சீந்தில், பொன்னாங்கண்ணி, சிறுபூளை, விழுதிலை, செருப்படை, முசுட்டை, முத்திருக்கன்செவி, கொடிவேலி, வெள்ளைச்குன்றி, வெள்ளைக் சாற்வேளை,

கூட்டப்பா வெள்ளறுகு வெள்ளைக் காக்காய்
குலாவியதோர் வெட்பாலை வெதுப்படக்கியோடு
ஆட்டப்பா வெவ்வேறு சாறுவாங்கி
அப்பனே மூன்றுநாள் வைத்துவைத்து
நீட்டப்பா நாலுவகை மித்திரத்தைகூட
நிலையான குடோரிமக்காள் திசைக்கொன்றிட்டு
மூட்டப்பா பிசைந்தழுத்திப் புடத்தைப் போடு
மூதண்ட பற்பமா முயன்று பாரே. 744

வெள்ளறுகு, வெள்ளைக் காக்கரட்டான், வெட்பாலை, வெதுப்படக்கி, இவை அனைத்தையும் தனித்தனியாக தனித்தனி பானையில் சாறுபிழிந்து கொண்டு மூன்று நாட்கள் தெளிய வைத்தால் நாற்றம் உண்டாகும். அச்சயம் நாலு வகை மித்திரத்தைக் கூட்டி பிசைந்துருட்டி பத்துக்கு ஒருபங்கு குடோரியைச் சேர்த்துப் புடம்போட்டால் பற்பமாகும்.

பாரப்பா சாம்பலிலே காரங்கூட்டிப்
பதமாக அரைத்து நன்றாய் வில்லைகட்டி
வாரப்பா வங்கமென்ற நாளத்திட்டு
வாகாகக் கரியிட்டு வூதுவூது
போரப்பா ஈயம்வரும் மூலிகையினுள்ளே
புகழான வீயத்தின் தொழிலைக் கேளு
நேரப்பா யீயமொன்று நாகமொன்று
நிலைத்தாடு மிரும்பொன்று பறிதானொன்றே. 745

இப்பற்பத்துடன் காரங்கூட்டி அரைத்து வில்லை தட்டி காயவைத்து வங்கநாளத்தின் மேலிட்டு கரி அடுக்கி ஊதினால் ஈயம் வரும். இவ்வீயத்தின் தொழிலைக் கூறுகிறேன் கேள்! ஈயம் ஒரு பங்கு, நாகம் ஒருபங்கு, இரும்பு ஒரு பங்கு, தங்கம் ஒரு பங்கு இவை நான்கையும் உருக்கி

ஒன்றாக வுருகையிலே சூதமொன்று
மூட்டியொரு மணியாக எடுத்துக் கொண்டு
நன்றாகக் கெந்தகத்தைச் சமனாய்ச் சேர்த்து
நலம்பெறவே குப்பியிலே யெடுத்து மக்காள்

பன்றாக வாலுகையிலே தினந்தா னொன்று
பருவமுட னெரித்திடவே களங்கமாகும்
அன்றாக நூற்றொன்று நவலோகத்தி
லணைத்திடவே பொன்னாகு மறிந்துபாரே. 746

அதனுடன் சூதம் ஒரு பங்கு சேர்த்து மணியாய் வாங்கிக் கொண்டு இதற்கு சமன் கெந்தகத்தை சேர்த்து அரைத்து குப்பியிலிட்டு வாலுகையின் மேல் வைத்து எரித்தால் களங்காகும். இக்களங்கை நவலோகத்தில் நூற்றுக்கு ஒரு பங்கு சேர்த்தால் தங்கமாகும்.

அறிந்துண்ணு மண்டலந்தான் குன்றிகுன்றி
ஆகாகா காயசித்தி யாகுமாகும்
பிறிந்திந்தப் பதினைந்துங் களங்கமாகப்
பேராகச் செய்தாக்கால் பெரியபாதை
மறிந்திந்த மூலிகையில் வந்த ஈயம்
மக்களே திரிவங்க மணுகக்கட்டும்
வெறிந்துநின்ற ரசங்கட்டுங் குளிகையாலே
வேதைக்குக் கரைசொல்ல விளம்பினேனே. 747

இக்களங்கை ஒரு மண்டலம் குன்றியளவு உட்கொண்டால், காயசித்தி ஏற்படும். இதேபோல் பதினைந்து வகையான ஈய மூலிகைகளிலிருந்து ஈயமாக சத்தெடுத்து வேதை புரிந்தால் அதிக வேதை உண்டாகும். மூலிகை ஈயத்தால் மூன்று வகையான வங்கமும் கட்டும். அதுமட்டுமின்றி இரசமும் இறுகிக்கட்டும். இம்மூலிகையீயத்தின் மகிமையை கூறுதற்கு வாய் கிடையாது.

மித்திர விபரம்

விளம்பினேன் மூலிகையிற் சாறுவருஞ்சிறிது
விரைந்தொக்க விடித்தாலு மெருப்போலாஞ்சிறிது
விளம்பினேன் சாறுவரா மூலிகைகளெல்லாம்
விரவிநன்றா யிடித்ததிலே மித்திரத்தைப் போட்டு
விளம்பினேன் புடமிட்டு வூதுவூது
வெருளாது முப்பதிலே யேதென்றாலும்
விளம்பினேன் மூலிகைக்கு யிதுநல்ல முறைதான்
வேணுமென்ற மூலிகைக்கு பாதிதான் போக்கே. 748

மூலிகையிலிருந்து சாறு எடுப்பதென்பது மிகவும் கடினம். அப்படி எடுத்தாலும் மிகக் குறைந்த அளவே வரும். ஆகவே சாறுவராத மூலிகையுடன் மித்திரத்தை போட்டு புடம்போட்டு ஊதவேண்டும். இதுவே நல்லமுறையாகும். அதாவது மூலிகையின் அளவிற்கு சரிபாதி மித்திரத்தை சேர்க்க வேண்டும்.

போக்கோடே மித்திரத்தை விரித்துச் சொல்வேன்
புத்தியுள்ள பிள்ளைகளே கேளுங் கேளும்
வாக்கோடே யேகமப்பா காரம் காரம்
மருவியதோ ரிரண்டதுவும் காரசாரம்

16

தேக்கோடே மூன்றினத்தைச் சொல்லக் கேளும்
சிறந்தகுன்றி வெண்கருவும் சீனமப்பா
ஆக்கோடே நாலேது சாரம் வெண்ணெ
யப்பனே யிந்துப்பு மெழுகு தானே. 749

மித்திரத்தில் பலவகைகள் உள்ளன. அவற்றைப் பற்றி விரிவாகக் கூறுகிறேன் கேள். யேகமித்திரம் என்பது காரத்தை மட்டும் குறிக்கும். இரண்டு வகை வித்திரம் என்பது காரம் சாரம் என இரண்டு மருந்தை குறிக்கும். குன்றிமணி, வெண்கரு, சீனம் இவை மூன்றும் சேர்த்த மருந்து மூன்றின மித்திரமாகும். நான்கு இன மித்திரமாகப்பட்டது சாரம், வெண்ணெய், இந்துப்பு, மெழுகு இவை நான்கையும் குறிக்கும்.

தானென்ற வைந்துவகை மித்திரத்தைக் கேளும்
தனிக்குன்றி நெய்யோடு வெல்லங்காரம்
கானென்ற தேனோடு மைந்துமக்காள்
கைமுறையாய்ப் பாருங்கோள் சகலத்துக்கும்
தேனென்ற தசவிதத்தைச் சொல்லக் கேளு
சேர்ந்து வெண்ணெய் வெண்காரம் குன்றிவெல்லம்
ஆனென்ற ஆமணக்குப் பழமும் தேனும்
அப்பனே அளிகாடி புறாவினெச்சம். 750

குன்றி, நெய், வெல்லம், காரம், தேன் இவை ஐந்தும் சேர்ந்த மருந்துக்கு ஐந்தின மித்திரம் என்று பெயர். வெண்ணெய், வெங்காரம், குன்றி, வெல்லம், ஆமணக்கு, பழம், தேன், காடி, புறா எச்சம், அளி இவை பத்தும் சேர்ந்த மருந்துக்கு தசஇன மித்திரம் என்று பெயர்.

எச்சமொடு பத்துவகை மித்திரத்தினாலே
எடுக்கலாம் சகலசித்து மின்னுங் கேளு
மொச்சையொடு கோதுமை யுளுந்து மெள்ளு
மூதண்ட எவக்ஷாரம் சத்திக்ஷாரம்
மச்சையென்ற சிறுமீனும் யானைக் கொம்பு
மருவியதோர் கலைக்கொம்பு மெருமைக் கொம்பு
வச்சையென்ற வறத்தவளை குதிரையுட நகமும்
மருவியதோர் முயலெலும்பு பன்றிக் கொம்பே. 751

கொம்போடு வாழையுட கிழங்கு குன்றி
கொடியதொரு ஆதளையின் விரையுங் கூட்டி
வம்போடு புறாவினெச்சம் குக்குலங் கூட்டு
மருவியதோர் சர்க்கரையும் சமனாய் வெல்லம்
நம்போடே யிவைகளுக்கு நாலுக்கொன்று
நலம்பெறவே வெண்காரம் போடு போடு
செம்போடே யிருபத்து ஒன்றாய் நின்ற
சூஸ்திரத்தை வெளியாகத் திறந்திட்டேனே. 752

இந்த பத்து வகை மித்திரத்தால் சகல சித்தும் விளையாடலாம். இதற்கடுத்து இன்னுங் கேள்! மொச்சை, கோதுமை, உளுந்து, எள்ளு, எவசாரம், சத்திசாரம்,

சிறுமீன், யானைத்தந்தம், மான்கொம்பு, எருமைக்கொம்பு, வறட்டு தவளை, குதிரைக் குளம்பு, முயல் எலும்பு, பன்றிக்கொம்பு, வாழைக் கிழங்கு, குன்றி, ஆதளைவிரை, புறா எச்சம், குக்குல், சர்க்கரை, வெல்லம் இவை மொத்த எடைக்கு நாலில் ஒரு பங்கு வெங்காரம் சேர்க்க வேண்டும். இவை இருபது சேர்ந்த மருந்தின் பெருமையை வெளியாக சொல்கிறேன் கேள்!

திறந்திட்ட மித்திரத்தாலு பரசங்களெல்லாம்
திறமான பாஷாண மண்ணுங்கல்லும்
நிறந்திட்ட சத்தாக வருங்காண் மக்காள்
நேரிதற்கு மேலொன்று மித்திரங்களில்லை
கறந்திட்ட பாலுக்குள் கவடு வந்தால்
காப்புமுதல் மூன்றுகண்டம் கவடுமாச்சு
இறந்திட்டுப் போனாக்கா லேச்சோமெத்த
எளிதாகக் கற்பமுண்டு மூலம் பாரே. 753

மேல்கூறிய இருபது வகை மித்திரமும் சேர்ந்த மருந்தால் உபரசம், பாஷாணம், மண், கல் இவையாவும் சத்தாக மாறும். இந்த மித்திரத்தை காட்டிலும் வேறொரு உயர்ந்த மித்திரம் கிடையாது. இதை முடிப்பது மிகவும் எளிதா என்ன? மிகவும் கடினம். ஆகவே முதலில் கற்பத்தை உட்கொண்டு மூலத்தை பார்.

மூலத்தே அவ்வுமென்று முன்னே யூன்று
முனைகொண்டா லங்கென்று பின்னேயூன்று
காலத்தே பளிச்சென்றால் சிங்கென்றூன்று
கைமுறைதான் மூன்றுவகை காணுங்காணும்
தாலத்தே மின்னலுட னொளிபோற் காணுந்
தயங்காதே மனமுள்ளே சாரவுண்ணு
ஆயத்தை யுண்டசிவன் முக்கண் போலே
அடங்காத தீயொளியை யமுத்திப் பாரே. 754

மூலத்தில் மனதை வைத்து முதலில் 'அவ்வும்" என்று செபித்து பின்னர் லங்கென்றும் அதற்கு பிறகு சிங்கென்றும் வாசி வைத்து செபம் செய்தால் மூலம் வெளிப்படையாக தோன்றி பிரகாசிக்கும். அப்பொழுது மின்னல் போல் ஒரு ஒளி உண்டாகும். அந்த ஒளியில் மனதை வைத்து நோக்க வேண்டும்.

அமுத்தியங்கே பளிச்சென்றால் பிரண்டையிலேயூது
அப்பனே தித்தித்தால் சித்தியாச்சு
வமுத்தியங்கே கும்பகமா முனைக்கேறாது
வாயங்கே மவுனமாய் மாயம்போகும்
கொமுத்தியங்கே சமைப்பதற்குத் தீயும் வேண்டாங்
கூறான சிகாரத்தை யூதப் பத்தும்
சுமுத்தியங்கே நெடும்பாதை யோடியாடச்
சொல்லாகக் கைமுறையாய்ச் சூட்டிப்பாரே. 755

இவ்வாறு மனதை மூலத்தில் நிறுத்தி பிரண்டையின் மேல் காற்றை ஊதி சுவைத்து பார்க்க தித்திப்பாக இருந்தால் மூலம் சுத்தியாகியது என்று பொருள். அவ்வாறு

மூலம் சித்தியானால் வாசியானது ஓடாமல் மூலத்திலேயே ஒடுங்கும். வாசியானது மூலத்தில் ஒடுங்கி நின்றால் நம்வாயால் காற்றை ஊதிய மாத்திரத்தில் பொருட்கள் தீப்பற்றி எரியும் சாதாரண நெருப்பு தேவையில்லை. நிலையாக குவிந்த வாசியை சுஷிம்னா நாடியின் வழியாக மேல்நோக்கி ஏற்ற வேண்டும்.

யோக மார்க்கம்

சூட்டியங்கே பார்ப்பதற்கு முறையைக் கேளு
சொல்லுகிறேன் பேய்மக்காள் சும்மாவல்ல
ஆட்டியங்கே யிடைகலையில் பூரித்தப்பா
அடவாக மூலத்தே நினைவாய்க் கும்பி
நீட்டியங்கே பின்கலையி லுள்ளேரேசி
நேர்ப்பாக மெள்ளமெள்ள ஏற்றிவாநீ
பூட்டியங்கே யுரைத்தாக்கால் நாடிசுத்தி
புகழான வாதபித்த சேத்மம் போமே. 756

வாசியை ஏற்றுவிதன்பது சாதாரண காரியமில்லை. முதலில் இடதுநாசியின் வழியாக காற்றை உள்ளே இழுத்து அதை மூலாதாரத்தில் கும்பகம் செய்து வலது நாசியின் வழியாக வெளியேற்ற வேண்டும். இப்பயிற்சியில் கும்பகத்தின் நேரத்தை மெள்ள ஏற்றிக்கொண்டு வந்தால் நாடியானது சுத்தியாகி வாதம் பித்தம் சேத்துமம் என்ற மூன்று வகை தோஷம் விலகும்.

போமப்பா மூன்றுவகை நோயும் வெந்து
புகழான காயந்தா னிறுகுமெத்த
வேமப்பா நல்வினையும் தீவினையும் நீறாம்
விதமான வைம்புலனும் விரைந்து போகும்
ஓமப்பா வோங்கார நாதமேலே
யொருகோடி யிடிபோலே யோங்குமோங்கும்
ஆமப்பா யிப்படிநான் கண்டேன் கண்டேன்
அப்பனே நீங்களு மிப்படிதான் பாரே. 757

மேலும் மூன்று வகையான நோய்களும் அகன்று தேகம் இறுகி திடப்படும். நல்வினைகளும் தீயவினைகளும், ஐம்புலன்களும் வெந்து சாம்பலாகும். ஓங்காரமான நாதம் விரைந்தேறி பிரகாசிக்கும். இந்த அனுபவங்களை நானும் பெற்றேன். நீங்களும் செய்து பயன் பெறுங்கள்.

பார்க்கையிலே அவ்வென்றா லுவ்வுங் கூடும்
பரவியதோர் மகாரமதிற் சேருங் காலம்
ஏர்க்கையிலே உகாரமாய் மேலேயேறும்
இதுதானும் பிராசாத மென்ற மார்க்கம்
ஆர்க்கையிலே பளிச்சென்று நந்திகாந்தி
அப்பனே யிதனோடு வாசிசேரும்
மார்க்கையிலே அக்ஷரமு மகரத்தோடே
மருவியதோர் வாசிரெண்டும் நாத விந்தே. 758

மேலும் கூர்ந்து யோகம் பார்க்கையில் அகாரமானது உகாரத்தில் கலந்து உகாரமானது சோதிமயமான நந்தியான மகாரத்தில் சேர்த்து வாசியாக பிரகாசிக்கும்.

நாதமென்றும் விந்தென்றும் வாசிக்கே பேரு
நலம்பெரிய ரவிமதியு மதற்கே பேரு
வாதமென்றும் சித்தியென்று மதற்கே பேரு
மருவியதோர் சிவசத்தி யதற்கே பேரு
போதமென்று மனமென்று மிதற்கே பேரு
பூமியென்றும் விண்ணென்று மிதற்கே பேரு
வேதமென்று மந்தமென்று மிதற்கே பேரு
வெளியொளியாய் நின்றதிது ரெண்டுந்தானே. 759

வாசியானது இரண்டு வகையான பொருளால் ஆனது. அவையே நாதம் விந்து எனப்படும். இந்த நாத விந்திற்கே ரவி மதி என்றும், வாதம் சித்தி என்றும், சிவன் சக்தி என்றும், மனம் மற்றும் ஆனந்த போதம் என்றும், பூமி என்றும் ஆகாயம் என்றும், ஆதி அந்தம் என்றும் பராபரிவொளி என்றும் பலவாறு பல பெயர்களில் வழங்கப்படுகிறது.

ரெண்டாகி நின்றெழுத்தை யொன்றாய்க் கூட்ட
நிலையில்லை கரையில்லை நேசமில்லை
ஒண்டான மனமில்லை யுயரமில்லை
யோகோகோ தாழ்த்தியில்லை யொன்றுமில்லை
கண்டான வெளியில்லை யொளியுமில்லை
காண்பதுவுங் காணாத ரெண்டுமில்லை
மண்டான முதற்கொண்டு விண்ணுமில்லை
மாசுமில்லை தேசுமில்லை மதித்திலேனே. 760

ரெண்டெழுத்தாகி நிற்கும் அகார உகாரத்தை ஒன்றாகச் சேர்த்தால் அதில் ஏற்படும் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. கரையும் இல்லை. இவ்விரண்டு எழுத்தும் சேருமிடத்தில் மனம் என்ற வஸ்து இல்லாமல் போகும். மேலும், உயர்வு, தாழ்வு, வெளி, ஒளி, காண்பது, காணாதது, ஆகாயம், பூமி, சூரியன் போன்ற வஸ்துக்களும் இல்லாமல் போகும். (அதாவது ஜீவன் தன்னுள் தானே ஒடுங்கி விடுவதால் அது பிற வஸ்துவை (மாயாவஸ்துவை) காண்பதில்லை).

மதிப்பற்று நிதிப்பற்று மனமுமற்று
மருவியதோர் யோகமற்று ஞானமற்று
கொதிப்பற்று கூச்சமற்று லச்சையற்று
கூடுவதுங் கூடாதும் ரெண்டுமற்று
பதிப்பற்றுப் போதமற்றுப் பரவுமற்று
பாழ்வெளிக்குள் மூடிவைத்துப் பார்ப்பதற்று
உதிப்பற்று வொடுக்கமற்று வொன்றாய் நின்ற
வுத்தமனே யொருபொருளை யுணர்த்தி லேனே. 761

உணர்வற்று அறிவற்று வுண்மையற்று
ஒன்றென்ற சொல்லற்று ஒன்றுமற்று
பணர்வற்றுக் கொம்பற்றுக் காமப் பூவற்றுப்
பதிந்துநின்ற மூவரற்றுப் பரப்புமற்றுச்

சுணர்வற்றுச் சூட்சமற்றுச் சோதியற்றுச்
சுத்தவெளிக் காடுமற்று அலியுமற்று
எணர்வற்ற தேதோதான் யானுங்காணே
னென்மக்காள் ரிஷிசித்த ரியம்பிலரே. 762

இந்நிலையில், அறிவு, அறியும் பொருள், மனம், யோகம், ஞானம், கூச்சம், லச்சை, ஆனந்தம், சூன்யம், சூன்ய மல்லாதது, உண்மை, பொய், சொல், காமம், சூட்சம், சோதி, சுத்தவெளி, காடு, மேடு, ஆண், பெண் போன்ற எதையும் நான் காணவில்லை. (இந்நிலையில் நின்ற ரிஷிகளும் சித்தர்களும்) இவ்வொடுக்கத்தைப் பற்றிச் சரிவரக் கூறவில்லை.

இயம்பரிதாம் பூரணத்திற் றானேஞானம்
இதற்கு மக்காள் கரையில்லை யிலக்கமில்லை
இயம்பரிதாம் போதமென்பா ரதுவேதென்றா
லெம்மட்டோ கண்டமட்டுக் கெய்யாதென்பார்
இயம்பரிதாம் நிஷ்களந்தா னென்பார்வல்லோ
ரென்னவென்றா லென்னென்போ மென்பாரையா
இயம்பரிதா நின்மலத்தைக் கரைகாண் பாராரோ
வேதுபோ பேச்சல்ல வென்று சொல்லே. 763

பூரணத்தைப் பற்றிக் கூறுவதற்கு கரையே இல்லை. இப்பூரணத்தைக் கண்டவர்களுக்கு ஆனந்த போதம் வாய்க்கும். இவ்வானந்த போதத்திற்கு அளவுகோல் வேறொன்றுமில்லை. நிஷ்களங்கமான இப்பூரணத்தைப் பற்றி வாய்ப் பேச்சால் அறிதல் என்பது மிகவும் கடினமான காரியமாகும்.

சொல்லான சத்தியப்பா வுப்புக்கொப்பு
சொற்பெரிய வீசனப்பா பூரம்பூரம்
வல்லான துரிசியப்பா மாயிமாயி
மருவியதோர் காரமப்பா வீசனீசன்
கல்லான சாரமப்பா சத்திசத்தி
கடியதொரு சூடனப்பா வீசனீசன்
வல்லான ரெண்டினங்கள் வாசியாச்சு
மக்களே சிவசத்தி சுண்ணம் பண்ணே. 764

சத்தியானது உப்பிற்கும் சிவம் பூரத்திற்கும் சமமாகும். மேலும் துரிசு சத்திக்கும், காரம் ஈசனுக்கும் சமமாகும். அதேபோல் சாரம் சக்திக்கும், சூடன் சிவனுக்கும் சமமாகி இவ்விரட்டை இனங்கள் இணைந்தால் வாசிக்கு சமமாகும். சிவசக்தியான இச்சரக்குகளை சுண்ணம் செய்ய வேண்டும்.

பண்ணியதோ ரிரண்டுசுண்ண மொன்றாய்க் கூட்டிப்
பச்சையிட்டாற் சூதத்தைப் பதைக்கக்கொல்லும்
ஒண்ணியதோர் சூதமது வொன்றேயொன்று
வோகோகோ நிஷ்களத்துக் கொடுக்குமொக்கும்
புண்ணியம்ாம் தேகமொத்த சீஷனானாற்
பொருளருளுங் கைவசமாம் புகன்றுபாரு
அண்ணியமாய் முன்சொன்ன மித்திரத்துக் கொப்பா
யறைந்திட்டேன் வேதாந்த மறைந்திட்டேனே. 765

சிவசக்தி சரக்குகளை சுண்ணம் செய்து துருசு சுண்ணத்துடன் சேர்த்து ரசத்தில் சேர்த்தால் ரசமானது திரண்டு மணியாகும். இவ்வொரு ரசமணி நிஷ்களாத்தின் ஒடுக்கத்திற்குச் சமமாகும். (ஒழுக்கமுள்ள) சீடனாக இருந்தால் அனைத்தும் கைவசமாகும்.

சண்முக திராவகம்

அறைகிறேன் சண்முகமாந் திராவகத்தை மக்காள்
அண்டபகிரண்ட மெலாமசைந் தேயாட
அறைகிறே னாயுருவி முருங்கை வாழை
அப்பனே தென்னிலையு மறுகுதாழை
அறைகிறேன் வெவ்வேறாய்ச் சுட்டுமக்காள்
அடவாக வெவ்வேறு பாண்டத்திட்டு
அறைகிறேன் சாம்பலுக்கு ஒன்றுக்காறு
அடவாகச் சலம்விட்டுக் கரைத்துவையே. 766

அண்டமெல்லாம் கரைப்பதற்கு சண்முக திராவகம் கூறுகிறேன் கேள்! நாயுருவி, முருங்கை, வாழை, தென்னை இலை, அறுகு, கற்றாழை, இவை ஆறு மூலிகையை தனித்தனியாகச் சுட்டு சாம்பலாக்கி, வெவ்வேறு பாண்டத்திலிட்டு ஒரு பங்கு சாம்பலுக்கு ஆறுபங்கு தண்ணீர் விட்டுக் கரைத்து

வைத்ததெல்லாம் நாலாநா ளிறுத்துக் கொண்டு
வகைவகையாய் வெவ்வேறாய்க் காய்ச்சியப்பா
மொயத்தவுப்பை வெவ்வேறு பலமுந்தூக்கி
முனையன்ன பேதியது பலந்தானாறு
வைத்தபின்பு சீனமது பலத்தைக் கேளு
மருவியதோர் பதினெட்டுப் பலந்தான்போடு
கைத்தபின்பு வெடியுப்பு பலந்தான் கேளு
கைமுறையாய் மூன்றுபத்து பலந்தான் போடே. 767

நான்கு நாட்கள் தெளியவைத்து தனித்தனியாக காய்ச்சி உப்பெடுக்க வேண்டும். இவ்வாறு வகை மூலிகையின் உப்பை வகைக்கு ஒரு பலம் எடுத்துக் கொண்டு அதனுடன் ஆறுபலம் அன்னபேதி, பதினெட்டு பலம் சீனம், வெடியுப்பு முப்பது பலம்,

போடப்பா சவுட்டுப்பு பலந்தானொன்று
பொலிவான துருசியது பலந்தான் ரெண்டு
ஆடப்பா கல்லுப்பு பலந்தா னொன்று
அப்பனே அரைத்துநன்றாய்ப் பொடித்துக் கொண்டு
ஊடப்பா நாயுருவிச் சாம்பல் தண்ணீர்
ஊறவிட்டுப் பிசைந்துநன்றா யுலர்த்திக் கொண்டு
நீடப்பா கலசத்தி லிட்டு நீயும்
நினைவர்கச் செங்கலென்ற சில்லுப்போடே. 768

ஒரு பலம் சவுட்டுப்பு, துருசு இரண்டு பலம், கல்லுப்பு ஒரு பலம், இவையாவையும நன்றாகச் சேர்த்துப் பொடித்துக் கொண்டு, நாயுருவிச் சாம்பல் கரைத்த

தண்ணீரில் ஊறவிட்டு பிசைந்து நன்றாக உலர்த்திக் கொண்டு ஒரு பானையில் போட்டு ஓடால் வாயை மூடு.

சில்லுக்குத் தமரிடுவாய்ப் பெருவிரல்தான் பூதச்
சிறப்பாகக் குகையொன்று மேலேவைத்து
மல்லுக்குக் கைத்தூரிற் பணம் போற் பொத்து
வளமான மேருவுக்கு விலாப்புறத்தில்
தல்லுக்குத் தமரிட்டு விளங்கச் சேர்த்துத்
தடையின்றிச் சீலைசெய்தே யாறவைத்து
நல்லுக்குச் சிவசத்தி பூசைபண்ணி
நயம்படவே யடுப்பேற்றித் தீயை மூட்டே. 769

அவ்வோட்டின் மத்தியில் கட்டை விரல் பிரமாணம் துளை செய்து அதன்மேல் குகை வைத்து அக்குகையின் தூரில் பணம் அளவு பொத்தலிட்டு மேருவுக்கு விலாப்புரத்தில் தமரிட்டு இரண்டையும் சேர்த்து சீலை செய்து காயவைத்து சிவ சத்தி இருவருக்கும் பூசை செய்து அடுப்பில் வைத்து தீமூட்டி எரிக்க வேண்டும்.

மூட்டியே குமுறாமல் தீயைமெள்ள
மெதுவாக யெரித்துவந்தால் வளப்பங்கேளு
தூட்டியாய்க் குப்பியின் மூக்குக்குள்ளே
துலங்கிவருந் திராவகந்தான் புகையோடொக்க
கூட்டியாய்ப் பீங்கானில் வைத்துக் கொண்டு
குமுறவே மறுகாலுங் கலசத்திற்போடு
நீட்டியே முன்போல திராவகந்தான்
நீடித்து வருமங்கே முன்போல்வாங்கே. 770

முறையாக எரித்தால் குப்பியின் மூக்கின் வழியாக புகையோடு கலந்த திராவகம் வரும். அதைப் பீங்கானில் வடித்துக் கொண்டு மீண்டும் இதை கலசத்திலிட்டு முன்போல் தீ மூட்டி எரித்தால் திராவகம் வரும் இதையும் பீங்கானில் வாங்கிக் கொள்.

வாங்கடா கூறான பதினொன்றுந்தான்
மைந்தனே யெடுத்தல்லோ குப்பியில்விட்டு
ஓங்கடா முதிர்ந்துநின்ற கிளிஞ்சில்தன்னை
உவருமண்ணுஞ் சுண்ணாம்புங் கரைத்துவிட்டு
தேங்கடா தீயெரிக்க வெளுத்துப் போகும்
சிறப்பான சிப்பியல்லோ சுத்தியாச்சு
தாங்கடா விதையெடுத்து நொறுக்கித் தூளாய்த்
திராவத்தை வார்த்திடவே சலமாய்ப் போமே. 771

வாங்கிய இத்திராவகத்தை முன்பு கூறிய பதினாறு வகை உப்புடன் சேர்த்துக் கரைத்து முன்போல் குப்பியிலிட்டுத் திராவகம் வாங்க வேண்டும். பின்பு முக்கிய கிளிஞ்சலை எடுத்து உவர்மண்ணும் சுண்ணாம்பும் சேர்த்து நீர்விட்டுக் கரைத்து அந்நீரில் கிளிஞ்சலைப் போட்டெரித்தால் வெளுத்து சுத்தியாகும். இக்கிளிஞ்சலை எடுத்து நறுக்கி தூள் செய்து சண்முக திராவகத்தை விட்டால் கிளிஞ்சல் போலாகும்.

சலத்தினுள்ளே தெளிவதெல்லா மிறுத்துக்கொண்டு
சாதகமா யடியில்நின்ற மட்டியெல்லாம்
மலத்தியதைக் காய்ச்சிடுவாய் மயனம்போல
வாங்கியல்லோ சாரமஞ்சு பலத்துக்கப்பி
குலத்தியல்லோ குகையிலிட்டுப் புடத்தைப் போடக்
குலையாமற் சாரமங்கே கட்டிப்போகும்
அலத்தியல்லோ திரியாதே வாதசித்தி யாச்சு
ஆச்சரியங் குளிகைமுதல் சித்தியாச்சே. 772

தெளிந்த சலிமெல்லாம் வடித்துக் கொண்டு அடியில் நிற்கும் வண்டலை காய்ச்சினால் மயனம் போலாகும். இதை ஐந்து பலம் சாரத்தின் மேல் பூசிக் குகையிலிட்டுப் புடம் போட்டால் சாரம் கட்டிப் போகும். இக்கட்டிய சாரத்தால் வாதசித்தி முதல் குளிகை சித்திவரை கைக்குள்ளாகும். (சித்தியாகும்).

ஆச்சடா விச்சாரம் சிப்பிநீரால்
அரைத்தல்லோ வீரத்துக் கப்பிநீயும்
ஓச்சடா அப்ரேகப் பொடியிலிட்டு
உத்தமனே புடம்போட வீரங்கட்டும்
போச்சடா சாவுபொய்யாம் வீரஞ்செத்தால்
புகழ்பெரிய சூதத்தைக் கட்டக்கேளு
வாச்சடா சூதமது பலந்தானொன்றில்
வையடா செயசாரம் பலந்தானொன்றே. 773

கட்டிய சாரத்தை சிப்பி நீரால் அரைத்து வீரத்தின் மேல் பூசி அப்பிரகப் பொடியில் வைத்து புடம் போட்டால் வீரம் கட்டும். வீரம் மடிந்து கட்டினால் இறப்பு பொய்யாகும். (இக்கடிய வீரத்தாலும் சாரத்தாலும் சூதத்தை கட்டும் வகையைக் கேள்!) ஒரு பலம் சூதத்துடன் கட்டிய சாரத்தையும் வீரத்தையும் வகைக்கு முறையே ஒரு பலமும் ஒரு பணமும் சேர்த்து.

தானென்ற செயவீரம் பணமும்போடு
சாதகமாய் சிப்பிநீர் விட்டேயாட்டி
கானென்ற குகையினுள்ளே வைத்தேயூத
கண்விட்டு ஆடுமடா சூதந்தானும்
கோனென்ற சூதமது பலந்தானொன்று
கொடிதான முன்சாரம் பணந்தானொன்று
வானென்ற முன்வீரம் பணந்தானொன்று
வைத்தல்லோ சிப்பிநீர் விட்டேயாட்டே. 774

ஆட்டியல்லோ குகையிலிட்டு உருக்கிப்பாரு
அரகரா மணிபோல யாடுமாடும்
ஒட்டியல்லோ இப்படியே நூறுதொந்தங்கட்டும்
உத்தமனே சித்தரெல்லாம் பத்தேசொன்னார்
மூட்டியல்லோ சூதமொன்றில் துறைகள்கோடி
மூதண்ட கெவனமாங் குளிகை கோடி
நாட்டியல்லோ ஒவ்வொன்றின் பெருமைமெத்த
நயந்திடவே சித்தரசம் முன்ரசத்தின்பேரே. 775

சிப்பி நீர் விட்டு அரைத்து குகைக்குள் வைத்து ஊதினால் சூதமானது கண்விட்டாடும். மீண்டும் இதே சூதத்தை முன்போல் சாரமும் வீரமும் சேர்த்து சிப்பிநீர் விட்டு அரைத்து குகையிலிட்டு உருக்க மணிபோல் கண்விட்டாடும். இதே போல் நூறு முறை திரும்ப திரும்ப அரைத்து உருக்கினால் பலவிதமான சித்திகள் கைக்குள்ளாகும். ஆனால் சில சித்தர்கள் பத்துமுறை அரைத்து உருக்கினால் போதும் என்று கூறுவார்கள். நூறு முறை தொந்தித்த மணியால் வேதை முதல் கெவுனம் வரை சித்தியாகும். இந்த ரசமணிக்கு 'சித்த ரசம்" என்று பெயர்.

பேரான சித்தரசம் பணந்தானொன்று
பெருமையுற்ற சாரமது பணந்தானொன்று
நேரான வீரமது பணந்தானொன்று
நீட்டியப்பா பச்சைரசம் பலந்தானொன்று
ஆரான சிப்பிநீர் விட்டேயாட்டி
அப்பனே திரட்டியிதை எடுத்துக்கொண்டு
தாரான சேங்கொட்டைத் தைலமப்பா
தணிக்கவொரு படிவார்த்துக் குளிகைபோடே. 776

போட்டிதனை யடுப்பேற்றித் தீயைமூட்டிப்
புகழாக வொருசாம மெரித்துவாங்கி
நாட்டுபின்பு மண்தகையில் குளிகைவைத்து
நலமாகச் சில்லிட்டுச் சீலைசெய்து
லூட்டுநன்றாய்த் துருத்தி கொண்டு லூதவூத
வுயர்ந்தசெய நவநீத மென்று பேரு
ஆட்டுமிந்த நவநீதம் பணந்தானொன்று
அப்பனே சாரமொன்று வீருமொன்றே. 777

சித்த ரசத்தை ஒரு பண அளவு எடுத்துக் கொண்டு அதனுடன் (சண்முக திராவகத்தால்) கட்டிய சாரத்தையும், வீரத்தையும் வகைக்கு ஒரு பண அளவு சேர்த்து சாதாரண ரசம் ஒரு பலமும் கூடவிட்டு சிப்பி நீரால் அரைத்து திரட்டி எடுத்து ஒரு படி சேங்கொட்டை தைலத்தில் போட்டு அடுப்பேற்றி. தீ மூட்டி ஒரு சாமம் எரித்து மண் குகையில் வைத்து சில்லிட்டு சீலை செய்து துருத்தி கொண்டு ஊதினால் நவநீதமாகும். இதற்கு செய நவநீதம் என்று பெயர்.

ஒன்றாகச் சூதமதில் பலந்தான்வாரு
வுத்தமனே சிப்பிநீர் விட்டுஆட்டி
நன்றாகக் குளிகையிலிட்டுச் சீலைசெய்து
நலம்பெறவே குழலூதா யூதுவூது
பன்றாக வுருகியது குளிகையாகும்
பார்க்கநல்ல சித்தமணி யென்றுபேரு
தன்றாக விம்மணியில் பணந்தானொன்று
சாரமொன்று வீரமொன்று பணந்தான் தூக்கே. 778

இச் செயநவநீதம் ஒரு பலமும் இதனுடன் சாரம், வீரம், சூதம் இவை மூன்றையும் வகைக்கு ஒரு பலம் சேர்த்து சிப்பி நீர் விட்டு அரைத்து குழலால் ஊதினால் குளிகையாகும் இதற்கு சிந்தாமணிக் குளிகை என்று பெயர். இச்சிந்தாமணியிலிருந்து ஒரு பண அளவு எடுத்துக் கொண்டு,

தூக்கியிதிற் பச்சைதரசம் பலந்தான்வார்த்துச்
சுகமான சிப்பிநீர் விட்டேயாட்டு
தாக்கியிதைக் குகையிலிட்டே யுருக்கிடப்பா
க்ஷணத்திலே நவநீதத் தொடுப்புரசம் பேரு
ஆக்கியந்த வஞ்சுரச மரைப்பதற்குச் சொன்னேன்
அப்பனே சிப்பிநீர டைவுகேளு
வாக்கியிந்தச் சிப்பிதனைச் சுத்திபண்ணி
வாரிதற்குள் திராவகத்தைக் கரைந்து போமே. 779

இதனுடன் சாதாரண ரசம், சாரம், வீரம் இவை யாவையும் வகைக்கு ஒரு பலம் சேர்த்துக் கொண்டு சிப்பி நீர் விட்டு அரைத்து குகையில் வைத்து உருக்கினால் ஒரு க்ஷணத்தில் நவநீதமாகும். இதற்கு தொடுப்பு ரச நவநீதம் என்று பெயர். ஐந்து வகையான ரசவகை கூறினேன். இனி சிப்பி நீரை பற்றிக் கூறுகிறேன் கேள். முத்திய சிப்பியை சுத்தித்து சண்முக திராவகத்தை வார்த்தால் சலம் போல் கரைந்து போகும்.

கரைந்துநின்ற தெளிவிறுத்து வைத்துக் கொண்டு
கல்லுப்பு சுண்ணமொடு பூரச்சுண்ணம்
உரைந்தொன்று காசெடைதா னொவ்வொன்றப்பா
வுத்தமனே சிப்பிநீர்க் குள்ளேபோட்டு
வரைந்திந்த நீர்விட்டு அரைத்துவாநீ
மறக்காதே மயங்காதே மக்காள்மக்காள்
விரைந்திந்தத் தொடுப்புரசம் பணந்தானொன்று
மேலான சாரமொரு பணந்தான் தூக்கே. 780

பணம்போடு முன்வலிந்த சவ்வீரத்தைப்
பச்சைரசம் பலமொன்று அதற்குள் வாரு
தணம்போடு சிப்பிநீர் விட்டு ஆட்டித்
தனிப்பெறவே குகையிலிட்டுச் சீலைசெய்து
குணம்போடு புடம்போடப் புட்டுப் போலாம்
குறிப்பான சிராவண ரசந்தான் பேரு
அணம்போடு யிந்தரசம் பணந்தான் தூக்கு
அப்பனே சாரமொடு வீரம்போடே. 781

கரைந்த நீரைத் தெளியவைத்து இறுத்துக்கொண்டு, பிறகு சிப்பிநீரில் கல்லுப்புச் சுண்ணத்தையும் பூரச்சுண்ணத்தையும் வகைக்கு ஒரு காசெடை போட்டு தெளிவிறுத்து வைத்துள்ள நீரால் அரைத்துக்கொண்டு அதில் ஒரு பணஎடையும், சாரம், வீரம், சாதாரண ரசம் இவை மூன்றும் வகைக்கு ஒரு பண எடையும் சேர்த்து சிப்பிநீர் விட்டு அரைத்து குகையில் வைத்து சீலைசெய்து புடம்போட்டால் புட்டுப்போலாகும். இதற்கு சிராவண. ரசம் என்று பெயர். இந்த ரசத்திலிருந்து ஒரு பணவெடை அளவு எடுத்துக்கொண்டு, இதனுடன் சாரம், வீரம், சாதாரண சூதம்,

போடப்பா சூதமதில் பலந்தானொன்று
புகழான சிப்பிநீர் விட்டேயாட்டி
நீடப்பா குகையிலிட்டு வுருக்க ஆகும்
நிலையான சுத்தரச மென்று பேரு

ஆடப்பா யிந்தரசம் பணந்தானொன்று
அப்பனே சாரமொன்று வீரமொன்று
வூடப்பா சிப்பிநீர் விட்டேயாட்டி
யுறவாகப் புடம்போட்டு வுருக்கிடாயே. 782

இவை யாவையும் வகைக்கு ஒரு பலமெடுத்து சிப்பிநீர் விட்டு அரைத்து குகையிலிட்டு உருக்க ரசமாகும். இதற்கு சுத்த ரசம் என்று பெயர். இச்சுத்தரசம் ஒரு பணவெடை, சாரம் ஒருபலம், வீரம் ஒருபலம், இவை மூன்றையும் சிப்பி நீர் விட்டரைத்துப் புடம் போட்டு உருக்கினால் கண்விட்டாடும்.

உருகுமப்பா கண்விட்டு ரெண்டுசாரி
யுத்தமனே நின்மலமாம் ரசந்தானமம்
பெருகுமப்பா யிதனிலொரு பணந்தான்வாங்கிப்
பேரான சாரமொன்று வீரமொன்று
வருகுமப்பா பச்சைரசம் பலந்தான்வாரு
மருவியதோர் சிப்பிநீர் விட்டேயாட்டி
அருகியதோர் சூதமல்ல வுருக்கிப்பாரு
அக்ஷயமாம் சூதமிது அறிந்திடீரே. 783

இந்த ரசத்திற்கு 'நிர்மல ரசம்" என்று பெயர். இந்த நிர்மல ரசத்திலிருந்து ஒரு பணவெடை அளவு எடுத்துக் கொண்டு இதனுடன் சாரம், வீரம், சாதாரண ரசம் இவை மூன்றையும் சேர்த்து சிப்பிநீர் விட்டரைத்து உருக்கிப் பார். இதற்கு அக்ஷயசூதம் என்று பெயர்.

அறிந்திந்த சூதத்திற் பணந்தானொன்று
அப்பனே வீரமொன்று சாரமொன்று
பிறிந்துநின்ற பச்சைரசம் பலந்தானொன்று
பேரான சிப்பிநீர் விட்டேயாட்டி
மறிந்துநின்ற பூசைக்குள் வைத்துவூது
மலைபோலே யசையாம னின்றே யாடும்
செறிந்துநின்ற விந்திரச மென்று பேரு
செப்பினேன் திசரசமும் செப்பினேனே. 784

இவ்வக்ஷய சூதத்திலிருந்து ஒரு பண அளவு எடுத்துக் கொண்டு இதனுடன், வீரம், சாரம், சாதாரண ரசம் இவை மூன்றையும் வகைக்கு ஒருபலம் சேர்த்து சிப்பிநீர் விட்டரைத்து குகைக்குள் வைத்து ஊதினால் அசையாமல் மலைபோல் நின்றாடும். இதற்கு விந்திரசம் என்று பெயர். இதுவரை பத்து வகையான ரசத்தைப் பற்றி கூறினேன்.

செப்பினதோ ராண்மையெல்லா மென்னத்தாலே
சிறந்திட்ட சிப்பியுட பீஜத்தாலே
செப்பினதோ ராண்மை யெல்லாம் சாரத்தாலே
சிறப்பான வுப்பாலே பூரத்தாலே
செப்பினதோ ராண்மையெல்லாம் வீரத்தாலே
சேர்ந்துநின்ற திராவகத்தின் திறத்தினாலே
செப்பினதோ ராண்மையெல்லாம் போகமூர்த்தி
சீர்பதத்தின் திறத்தாலே செப்பினேனே. 785

இதுவரை கூறியவை யாவும், (பத்து வகையான ரசத்தின் பெருமையாவும்). சிப்பிநீராலும், சாரத்தாலும், வீரத்தாலும், பூரத்தாலும், சண்முகத் திராவகத்தின் பெருமையாலும் உண்டாயிற்று என்றறிதல் வேண்டும். இவை அனைத்திற்கும் ஆதிகாரணம் போக மூர்த்தியின் அருளே யாகும்.

செப்பியதோர் காங்குரசம் பலந்தானொன்று
சிறப்பான தங்கமப்பா பலந்தானொன்று
ஒப்பியதோர் நாகமப்பா பலந்தானாலு
வொன்றாக வுருக்கியொரு மணியாய் வாங்கி
அப்பியதோ ரிந்தெடைக்குக் கெந்திகூட்டு
அப்பனே யிதில்பாதி சிலையுந்தாரம்
கொப்பியதோர் பொடியாக்கிக் குப்பிகூட்டிக்
குறையாமல் செயலவணம் வராகன் போடே. 786

போடப்பா வாலுகையி லேற்றி மூட்டுப்
புகழான செந்தூர மருணன் போலாம்
ஆடப்பா வொன்பதிலு மாயிரத்துக் கொன்று
அப்பனே குன்றியுண்ணக் காயசித்தி
நீடப்பா செந்தூரம் தொந்தமேறும்
நேர் பறிந்தால் வெகுதூர மோடுமோடும்
வூடப்பா வுபரசங்கள் பொன்னுமாகு
முரைக்கரிது காங்குரசத் துண்மைதானே. 787

காங்குரசத்தை ஒரு பலம் எடுத்துக்கொண்டு அதனுடன் தங்கம் ஒரு பலமும் நாகம் நாலு பலமும்சேர்த்து உருக்கி ஒரு மணியாய் வாங்கிக்கொண்டு இம்மணியின் எடைக்கு சரிபங்கு கெந்தகமும் கெந்தகத்தின் எடைக்கு பாதி மனோ சிலையும், அரிதாரமும் சேர்த்து பொடியாக்கி குப்பியிலிட்டு ஒரு வராகன் செயலவணமும் போட்டு வாலுகையின்மேல் வைத்து தீமூட்டி எரித்தால் சிவந்த நிறமுள்ள செந்தூரம் கிட்டும். இதை நவலோகத்திலும் ஆயிரத்துக்கு ஒரு பங்கு சேர்த்தால் தங்கமாகும். இச்செந்தூரத்தை குன்றியளவு ஒரு மண்டலம் உட்கொண்டால் காயசித்தி ஏற்படும். இச்செந்தூரத்தை முறையாக தொந்தித்தால் வாதம் வெகுதூரமோடும். மேலும் தொந்தித்த செந்தூரத்தை உபரசங்களுடன் சேர்த்து உருக்கினால் உபரசங்கள் அனைத்தும் பொன்னாகும். இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த காங்கு ரசத்தின் ஆண்மையை விரிவாக கூறுதல் என்பது மிகவும் கடினம்.

தானென்ற சித்தரசத் தொழிலைக் கேளு
சாகோப சாகியென்ன விரிக்கலாகும்
வானென்ற சித்தரசம் பலந்தானொன்று
மாட்டப்பா தங்கமதிற் பலந்தானொன்று
வேனென்ற கெந்திசத்து பலந்தானொன்று
விளங்கியதோ ரயநாகம் பலந்தானொன்று
ஆனென்ற நாகமது பலந்தான் ரெண்டு
அப்பனே யொன்றாக வுருக்கிக் கொள்ளே. 788

உருக்கியதோர் மணியெடைக்குக் கெந்தகத்தைக் கூட்டி
யுத்தமனே யிதிற்பாதி தாளகமும் சிலையும்
பருக்கியதோர் சவ்வீரம் வராகனஞ்சு
பண்பாகக் கட்டினதோ ருப்புரெண்டு
நெருக்கியதோ ரெல்லாந்தான் பொடியாய்ப் பண்ணி
நேராகக் குப்பியிலே யெடுத்தேயேற்றித்
தருக்கியதோர் தீயெரிக்கச் செந்தூரமாகும்
தாக்கு பதினாயிரத்துக் கொன்று ஒன்றே. 789

சித்த ரசத்தின் தொழிலைக் கூறுகிறேன் கேள்! சித்தரசம் ஒருபலம், தங்கம் ஒருபலம், கெந்திசத்து ஒருபலம், அயநாகம் ஒருபலம், நாகம் ஒருபலம், இவை ஐந்தையும் ஒன்றாக உருக்கி மணியாய் வாங்கி மணியின் எடைக்கு சமஅளவு கெந்தகமும் கெந்தகத்தின் எடைக்கு பாதிதாளகமும் மனோசிலையும் சேர்த்து இதனுடன் சவ்வீரம் ஐந்துவராகன், கட்டிய உப்பிரெண்டுபலம், இவை யாவையும் ஒன்றாய்ச் சேர்த்து குப்பியிலிட்டு தீ மூட்டி எரித்தால் செந்தூரமாகும். இதை நவலோகங்களில் பதினாராயிரத்துக்கு ஒரு பங்கு சேர்த்து உருக்கினால்.

ஒன்றான நவலோகம் பொன்னுமாகு
முத்தமனே யுபரசங்கள் பொன்னுமாகும்
கன்றான செந்தூரம் வீசமூன்றக்
காந்திமெத்த காயமப்பா பொன்னுமாகும்
பொன்றான பெண்ணவளும் சேர்ந்தாளானால்
பொருமியே யுடல்விரிந்து புழுத்துச் சாவான்
நன்றான கற்பமெல்லாம் சாரமட்டும்
நலம்பெறவே விரித்துமுற்றி நாசமாமே. 790

நவலோகங்கள் பொன்னாகும். மேலும் இச்செந்தூரத்தால் உபரசங்களும் பொன்னாகும். இச்செந்தூரத்தை மூன்றுவீசம் உட்கொண்டால் தேகம் வலுத்து சூரியனைப் போல் பிரகாசிக்கும், கற்பம் உட்கொண்டவன் பெண்ணுடன் சேர்ந்தால் அவன் உடல் விரிந்து, முற்றி, பழுத்து நாசமாகும்.

ஆச்சப்பா செயமான நவநீதத்தை
அப்பனே பலமொன்று தங்கமொன்று
ஓச்சப்பா நிமிளையுட சத்துவொன்று
வுத்தமனே யுருக்கினதோ ருப்புவொன்று
தாச்சப்பா கவுரியுட சத்துமொன்று
சார்வாக வுருக்கியெல்லாம் மணிபோலாக்கித்
தேச்சப்பா விந்தெடைக்குக் கெந்தகத்தைச் சேர்த்துச்
சிறந்ததற்குப் பாதியப்பா தாளகமும் சிலையே. 791

செயநவநீதத்தை ஒரு பலம் எடுத்து அதனுடன் தங்கம் நிமிளைச்சத்து, உருகிய உப்பு, கஷரிச்சத்து இவை எல்லாம் வகைக்கு ஒரு பலம் சேர்த்து உருக்கி மணிபோல் வாங்கிக் கொண்டு, இம்மணியின் எடைக்கு சரி அளவு கெந்தகமும் கெந்தகத்தின் எடைக்குப்பாதி தாளகமும் மனோசிலையும் சேர்த்து இதனுடன்,

சிலையோடே சவ்வீரம் வராகனஞ்சு
செயமான கல்லுப்பு வராகன் ரெண்டு
குலையோடே பொடிசெய்து குப்பிக்கேற்றிக்
குலாவியதோர் வாலுகையி லேற்றியாட்டு
நிலையோடே செந்தூர மருணன் போலாம்
நேரான வொன்பதிலும் வேதைகேளு
மலையோடே மூன்றுபத்து ஆயிரத்துக் கோடும்
மகத்தான வுபரசங்கள் பொன்னுமாமே. 792

பொன்னாகும் செந்தூரம் வீசமூன்று
புகழான மன்மதன்போல தேகமாகும்
கன்னானைக் கண்டப்பா கூடுகூடு
கைமுறையாய் மூலத்தில் துருத்திபோட்டு
மன்னான யோகத்தைச் சேர்ந்து மக்காள்
மருவியதோர் கற்பமெல்லா முண்ணுவுண்ணு
தன்னாகும் பிராணாயம் சாதிக்காட்டால்
சகலகற்பம் விழல் விழலாய்த் தவறிப்போமே. 793

சவ்வீரம் வராகன் ஐந்தும், கல்லுப்பு ரெண்டுவராகனும், சேர்த்து பொடிசெய்து குப்பியில் அடைத்து வாலுகையின் மேல் வைத்து தீ மூட்டி எரித்தால் செந்தூரமாகும். இச்செந்தூரத்தை நவலோகங்களில் முப்பதாயிரத்துக்கு ஒரு பங்கு சேர்த்து உருக்கினால் பொன்னாகும். இதேபோல் உபசரங்களும் பொன்னாகும். அதுமட்டுமின்றி இச்செந்தூரத்தை மூன்றுவீசம் உட்கொண்டால் தேகம் வலுத்து மன்மதன் போலாவாய். செந்தூரத்தை உட்கொண்டு மூலத்தில் மனதை வைத்து பிராணயாமம் செய்து யோகத்தில் இருந்துகொண்டு மற்ற கற்பங்களெல்லாம் உட்கொள்ள வேண்டும். பிராணன் ஜெயிக்காமல் கற்பம் உட்கொண்டால் அனைத்தும் வீணாய்போகும்.

தவறாத சித்தரசக் குளிகை கேளு
சாரணையைத் தான்கேளு சாற்றுறேன்யான்
உவறான பூநாகம் கெந்திசத்து
வுத்தமனே அப்பிரக மயூரசத்து
தவறாத கிளிஞ்சிலொடு கவரிசத்து
கைமுறையாய்த் தாளகந்தான் சிலையின்சத்து
நிவறாத கெவுரியொடு அண்டசத்து
நேரான நிமிளையுட சத்துவாங்கே. 794

வாங்கப்பா காந்தமொடு ராசாவர்த்தம்
வகையான கற்பூர சிலையின்சத்து
வோங்கப்பா கல்நாரு வுடைந்த சுக்கான்
வுத்தமனே னவக்கிராந்த முடைந்தநண்டு
பாங்கப்பா கார்முகிவும் கருடப்பட்சி
பருவமுடன் வெள்ளையப்பா நாகப்பச்சை
தேங்கப்பா அஸ்தியொடு சாஸ்திர பேதி
சிறந்துநின்ற நாகரத்ன வண்டுதானே. 795

தானென்ற விருபத்து மைந்து சத்துஞ்
சாதகமாய் வாங்கி மக்காள் சாரணையைத் தீர்த்துக்
கோனென்ற நவலோகங் கொடுத்தப் பின்பு
குன்றாமல் ரத்தின மொன்பதையுமூட்டு
வானென்ற சாரணைதான் நாற்பத்து மூன்றும்
வரிசையுடன் தீர்ந்தபின்பு மக்காள் கேளு
வூனென்ற வாயில்தா னடக்கிக் கொண்டு
வுமிழ்ந்தாக்கா லுபரசங்கள் லோகங்கள்பொன்னே. 796

சித்தரச குளிகைக்கு சாரணை ஏற்றும் முறையைக் கூறுகிறேன் கேள்! பூநாகம் கெந்தி, மயூரம், கிளிஞ்சல், கவரி, தாளகம், மனோசிலை, கெவுரி, அண்டம், நிமிளை காந்தம், ராசவர்த்தம் கற்பூரசிலை, கல்நார், சுக்கான்கல், வைக்கிராந்தம், நண்டு, கார்முகில், கருடப்பட்சி, வெள்ளை நாகப்பச்சை, அஸ்தி, சாஸ்திரபேதி, நாகரத்னம், வண்டு, ஆக இவை இருபத்தைந்து சரக்குகளிலிருந்து சத்தெடுத்து சாரணைத் தீர்த்து மணியை வாயில் வைத்துக்கொண்டு உமிழ்நீரை துப்பினால் லோகங்கள் முதல் உபரசங்கள்வரை பொன்னாகும்.

பொன்னொன்றோ வாகுமக்காள் ரசத்தினாண்மை
போட்டுடனே யாகாசம் வழியும் பாதை
கன்னொன்றோ வுமிழ்நீரை யுள்ளே கொள்ளக்
கடிகையிலே காயசித்தி யாகுமாகும்
மன்னொன்றோ விந்திரனும் சகமாச்சு
மற்றுமுள்ள பிரபஞ்ச மாயமாச்சு
இன்னொன்று என்னசொல்வேன் சாரணை யினாண்மை
ஏதுக்கோ அரகரா யியம்பிலேனே. 797

இரசத்தின் மகிமையால் அனைத்தும் பொன்னாகும் அதுமட்டுமின்றி உமிழ்நீரை வெளியே துப்பாமல் உள்ளே விழுங்கினால் ஒரு வினாடியில் தேகம் சித்தியாகும். இக்குளிகையை வாயிலிட்ட மாத்திரத்தில் ஆகாய கமன சித்தி ஏற்படும். இச்சித்தினால் பிரபஞ்சத்தை ஒரு வினாடியில் சுற்றி வரலாம். இக்குளிகையைத் தவிர மற்ற வஸ்துக்கள் எல்லாம் மாயாவஸ்துவாகும். இக்குளிகையில் பெருமையை என்னவென்று கூறுவேன்.

இயம்பாகக் குளிகையிலே வராகன் வாங்கி
யிதனோடே பச்சைரசம் நாலுங் கூட்டிச்
சயம்பான தங்கமது நாலுங் கூட்டிச்
சாதகமாய்க் கெந்திசத்து நாலுங்கூட்டி
உயம்பான கல்லுப்பு கட்டினது ரெண்டு
வுத்தமனே கெந்தகந்தா னீரெட்டப்பா
அயம்பான குப்பியிலே யெடுத்துமக்காள்
அடவாக வாலுகையி லேற்றியாட்டே. 798

ஆட்டப்பா வெண்சாமந் தீயைநீயும்
அடவாகச் செந்தூர மாகு மாகும்
நீட்டப்பா மதுமாங்கிச வீசனுக்குந்தாய்க்கும்
நேரான மாங்கிசந்தா னீசனுக்குப் பிரியம்

ழூட்டப்பா அவனுக்குள் ளவளுமாச்சு
வுத்தமனே யவளுக்குள் ளவனுமாச்சு
பூட்டப்பா வுபரசமும் நவலோகத்தில்
புகழான லட்சத்துக் கொன்றுதானே. 799

இக்குளிகையிலிருந்து ஒரு வராகன் எடை ரசத்தை எடுத்து இதனுடன் சாதாரண ரசம் நாலுபலமும், தங்கம் நாலுபலமும், கெந்திசத்து நாலுபலமும், கட்டிய கல்லுப்பு ரெண்டுபலம், கெந்தகம் பதினாறு பலமும், சேர்த்து குப்பியிலிட்டு வாலுகையின் மேல் வைத்து எட்டு சாமம் தீமுட்டி எரித்தால் செந்தூரமாகும். இச்செந்தூரத்தை சிவசக்தியின் முன்பு வைத்து மதுமாங்கிசங் காட்டி பூசை செய். தாயானதேவி சிவனுள்ளும் சிவனான ஈசன் தாயுள்ளும் அடக்கம். இதை அறிந்து பூசை செய். இச்செய்தூரத்தை லட்சத்துக்கு ஒரு பங்கு நவலோகத்திலும், உபரசத்திலும் போட்டு உருக்கினால் ஏமமாகும்.

தானென்ற செந்தூரம் ஊசிகொண்டு குத்தித்
தனிப்பாலிற் கலக்கியங்கே குடித்தாயானால்
கானென்ற கடிகையிலே காயசித்தி
கண்தொட்டு நகம்வரைக்குங் கழலுஞ்சட்டை
வானென்ற மனமோடி நிற்குணத்தில் சாரும்
வாய்ப்பேச்சி தல்லமக்காள் வருத்தம்மெத்த
தேனென்று குண்டலியைக் கண்டாலுண்ணு
சிதையாத தங்கம்போல் தேகமாமே. 800

இச்செந்தூரத்தை ஊசிமுனையிலிலெடுத்து பாலில் கலக்கி உட்கொண்டால் ஒரு கடிகையில் காயசித்தியாகும். கண் முதல் நகம்வரை சட்டைகழன்று மனம் நிற்குணத்தில் ஒடுங்கும், வாய்ப்பேச்சால் ஒன்றுமில்லை குண்டலியை ஏற்றி செந்தூரம் உட்கொண்டால் தேகம் பொன் போலாகும்.

ஆமப்பா தொடுப்புரசத் தாண்மைசொல்வே
னாகாகா வுப்புவுப்பாய்ச் சுண்ணம்பண்ணி
யோமப்பா வுப்பொன்று சாரமொன்று
வூட்டியொன்றா யரைக்கையிலே தண்ணீராகும்
வாமப்பா தண்ணியிலே தொடுப்புரசம் போட்டு
மாட்டிதிலே காசெடைதான் கற்பூரச் சுண்ணம்
யேமப்பா அண்டரண்ட மமிதமிந்த தண்ணீர்
விளங்கியொரு கரண்டியிலே விட்டுக்கொள்ளே. 801

தொடுப்பு ரசத்தைப் பற்றி கூறுகிறேன் கேள்! முன்பு சொன்ன நாதவிந்து உப்புக்களை சுண்ணம் செய்து வைத்துக் கொண்டு பின் கல்லுப்பு ஒரு பலத்துடன் சாரம் ஒருபலம் சேர்த்து அரைத்தால் தண்ணீர்போலாகும் இந்நீரில் தொடுப்பு இரசத்தைபோட்டு காசெடை கற்பூரச் சுண்ணத்தையும் சேர்க்கவேண்டும். சுண்ணத்தை சேர்த்த மாத்திரத்தில் மிகுந்த நீராகும்.

விட்டதொரு கரண்டியைத்தான் தணல்மேல் வைத்து
வெதுப்பையிலே தங்கமென்ற தகட்டைப்பூட்டு
பட்டதொரு தங்கமெல்லாஞ் சூதமுண்ணும்
பரிந்துண்ண வந்நீரை நீட்டு நீட்டு

மட்டதொரு எவ்வளவோ என்ன வேண்டாம்
வாங்காமல் நின்றாக்கால் பதந்தான்மக்காள்
அட்டதிக்குக் கிரிகளெல்லாம் பூசிக்காய்ச்சு
அப்பனே நூற்றெட்டு மாற்றுமாமே. 802

இந்நீரை ஒரு கரண்டியில் விட்டு தணல்மேல் வைத்துக்கொண்டு வெதுப்பி அதில் தங்கத் தகட்டை சேர்த்தால் தங்கத்தை சூதம் உட்கொள்ளும். மேலும்மேலும் தங்கத்தை போட்டு வாட்டவேண்டும் எப்பொழுது வாங்காமல் நிற்கிறதோ அதுவே முறையான பதமாகும். காய்ச்சிய இந்த சரக்கை கொண்டு எட்டுதிக்கில் உள்ள மலைகளின் மேல் பூசி வூதினால் நூற்று எட்டு மாற்றுக் கொண்ட தங்கமாகும்.

மாற்றான சிராவணத்தின் சத்தைக்கேளு
மக்களே பலமொன்று தூக்கிக் கொண்டு
ஏற்றான வெடைக்கெடைதான் கெந்தகத்தின் சத்தை
யிட்டுருக்கிப் புடம் போட்டுச் சோதித்துநீற்றுப்
பேற்றான பூநாக மயூரமொடுநிமிளை
புகழ்பெரிய காந்தமொடு கவுரிச்சத்தும்
ஆற்றான ஆறுவகை யிட்டுநீற்று
அப்பனே யெடைக்கெடைதான் தங்கஞ்சேரே. 803

சிராவண இரசத்தின் மகிமையை கூறுகிறேன் கேள்! ஒருபலம் சிராவணத்தை எடுத்துக்கொண்டு இதற்கு சமஅளவு கெந்தகத்தின் சத்தை சேர்த்துச் சுருக்கி புடம் போட்டு எடுத்துக்கொண்டு பிறகு இதேபோல், பூநாக சத்தும் மயூரச்சத்தும் நிமிளைச்சத்தும் காந்தசத்தும், கவுரிச் சத்தும் சேர்த்து உருக்கிப் புடம்போட்டு எடுத்துக் கொண்டு, இம்மணியின் எடைக்கு சமஅளவு கெந்தகத்தையும் தங்கத்தையும் சேர்த்து

சேர்த்தெடை கெந்தகத்தின் கூடப்போட்டுச்
சிறப்பான தாளகமுஞ் சிலையுங்கால்தான்
ஆர்த்தவெடை யெல்லாந்தான் பொடியாய்ப்பண்ணி
அப்பனே குப்பியிலே யெடுத்துக் கொண்டு
மார்த்தயெடை வாலுகையில் வைத்துமூட்டு
மருவியதோ ரருணன்போல் நிறமேயாகும்
போர்த்தவெடை யுபரசங்கள் நவலோகத்தில்
பூட்டப்பா வஞ்சுபத்து ஆயிரத்துக் கொன்றே. 804

மேலும் தாளகமும் மனோசிலையும் கால் பங்கு சேர்த்துக் கொண்டு பொடி பண்ணி குப்பியிலேற்றி வாலுகையின்மேல் வைத்து தீமூட்டி எரித்தால் சிவந்த நிறமுள்ள செந்தூரம் கிட்டும். இச்செந்தூரத்தை ஐம்பதாயிரத்துக்கு ஒரு பங்கு லோகங்களுடனும் உபரசங்களுடனும் சேர்த்து உருக்கினால் தங்கமாகும்.

இரத்தாடச் சுத்தரச வியல்பைக் கேளு
மென்மக்காள் நூறுமட்டுஞ் சாரணையைத் தீர்த்தால்
சுரத்தாடக் கெமனமென்ற குளிகையென்றா
மப்பனே முன்போலச் செந்தூரித்தால்

விரத்தாட லட்சமஞ்சுக் கொன்று வேதை
வேண்டியதோ ருபரசங்கள் லோகமெல்லாம்
பரத்தாடக் குளிகையுமாம் வேதையாகும்
பார்க்கிறபேர் சூதத்திற் பார்க்கநன்றே. 805

சுத்த இரசத்தின் இயல்பைக் கூறுகிறேன் கேள்! இவ்வகை ரசத்துக்கு நூறு வகை சத்துக்களை ஊட்டி சாரணை தீர்த்தால் கெவுனகுளிகையாகும். இக்குளிகையை முன்போல் செந்தூரம் செய்து உபரசத்திலும், நவலோகத்திலும் ஐந்து லட்சத்துக்கு ஒரு பங்கு சேர்த்தால் வேதையாகும். இதே அளவு ரசத்துடன் சேர்த்தால் இரசம் குளிகையாகும்.

நன்றான நின்மலமாம் சத்தைக்கேளு
நாட்டியிரு நூற்றொன்று சாரணையைத் தீர்த்து
வின்றான பேருமுதல் திரியலாகும்
விளங்கியிந்தப் படியேழு சாரணையும் தீர்த்தால்
கன்றான கமலியென்ற குளிகையாகும்
கடல்வற்றும் தீச்சுவறுங் காற்றேசுண்ணும்
ஒன்றான குளிகையதி லாயிரத்தெட்டண்ட
மோடலாம் பதமளவு மோடலாமே. 806

நின்மல ரசத்தை பற்றிக் கூறுகிறேன் கேள்! இந்த ரசத்துக்கு இருநூற்று ஒரு வகையான சத்துக்களை ஊட்டி சாரணை தீர்த்தால் மேரு முதல் எல்லா மலைகளிலும் சஞ்சரிக்கலாம். இதே போல் ஏழுமுறை சாரணை தீர்த்தால் கமலி என்ற குளிகையாகும். இக்குளிகையினால் கடல்வற்றும். காற்றும் சுண்டும். நெருப்பும் அடங்கும். மேலும் இதனால் ஆயிரத்து எட்டு அண்டம் வரை ஓடலாம்.

ஓடலா மட்சயமாம் ரசத்தைக்கேளு
வுத்தமனே பதினொருக் கால்விடுவித்தாக்கா
லாடலா மஷ்டமா சித்தியெட்டு
மணிமாவுங் கிரிமாவும் லகுமாவோடும்
தேடலா மசிமாவும் பிராத்தி யோடு
சேர்ந்தயெட்டு மாடலாஞ் செப்பக்கேளு
நீடலாம் பூரணத்தே சென்று புக்கி
நிலைக்கலாம் திரும்பலாம் நீங்கள்கேளே. 807

அட்சய ரசத்தைப் பற்றி கூறுகிறேன் கேள்! முன்போல் (நின்மல ரசத்துக்கு சாரணை தீர்த்ததைப் போல்) பதினாறு முறை சாரணை தீர்த்தால் அணிமாதி அஷ்டசித்துகளை விளையாடலாம். அஷ்டமா சித்தியாவது அணிமா, கரிமா, லகிமா, மகிமா, பிராந்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் எனப்படும். மேலும் பூரணத்தில் சென்று கலந்து மீண்டும் திரும்பி வரலாம்.

கேளப்பா விந்திரனும் ரசத்தைத்தானும்
கெடியாக விருநூற்று வொன்றொன்றாக
நீளப்பா சாரணைதான் நூறுதீர்த்தா
நிலையான சொரூபமென்ற குளிகையாச்சு

நாளப்பா வாயிலிட்டாற் கத்தியோடும்
நலம்பெறவே பிடித்தவிடம் பொய்யாய்ப் போகும்
யாளப்பா பூரணமே யென்றாற் கேளும்
அது அவளு மவனதுவா மறிந்திடீரே. 808

அறிந்திந்தக் குளிகையைத்தான் வாயில்வைத்து
அப்பனே யூதையிலே மலைபொன்னாகும்
பிறிந்திந்தக் குளிகைவிட்டால் சாய்கையில்லை
பெருத்தசட முருவமில்லை யருவமாகும்
மறிந்தந்தப் பூரணத்திற் புக்கியாடி
வருகலாம் போகலாம் மக்காள் மக்காள்
பறிந்து சென்றே னிக்குளிகை மூன்றினாலே
பராபரத்திற் சிலம்பொலியைப் பார்த்திட்டடேனே. 809

விந்திரன் என்ற ரசத்துக்கு இருநூற்று ஒரு வகையான சாரணைகளை ஊட்டி தீர்த்தால் சொரூப குளிகையாகும். இதை வாயிலிட்டுக் கொண்டு நின்றால் சப்தமிட்டுக் கொண்டு ஓடலாம். மேலும் ஒரு வினாடியில் பூரணத்துடன் கலக்கலாம். இக்குளிகையே தாய். தாயே இக்குளிகை என்று அறிந்துக் கொள். இக்குளிகையை வாயில் வைத்துக் கொண்டு மலையை நோக்கி ஊதினால் மலைகள் பொன்னாகும். மேலும் இதே வாயில் வைத்தால் சடம் உருவமிழந்து அருவமாகும். பூரணத்துடன் கலந்துறவாடி வரலாம். மேற்கூறிய மூன்றுவகையான குளிகையால் சிலம்பொலியைக் கேட்டு சித்தியடைந்தேன்.

பார்த்திட்ட முறைபாடு எல்லாம் மக்காள்
பாடினே னனுபவித்த வரிசையெல்லாம்
மார்த்திட்ட மானவென்னூல் யார்பார்த்தாலு
மக்களே யுங்களைப் போல வரும்பிள்ளை
கோர்த்திட்ட பத்துவகை ரசத்துக்குள்ளே
கொட்டினேன் ஞானமுந்தி வாதம்பிந்தி
கார்த்திட்ட நெற்போலே பதரை நீக்கிக்
களங்கறவே தசரசத்தைக் காட்டினேனே. 810

நான் சித்தியடைந்த முறைகளையும் அனுபவித்த முறைகளையும் இந்நூலில் கூறியுள்ளேன். இதை யார் படித்தாலும் சித்தியாகும். இந்நூலில் பத்து வகையான இரசத்தைக் கொண்டு ஞானம் அடையும் முறையையும், வாதம் செய்யும் முறையையும் பதர் நீக்கிய நெல்லைப் போல் தப்பில்லாமல் கூறியுள்ளேன்.

காட்டியதோர் சூதத்திற் கொப்பங் கேது
காணரிதாய் நின்றதொரு போதம் போதம்
மூட்டியதோர் மூலத்துள் நந்திநந்தி
மூழ்கிவந்தால் கடத்துநின்ற மோக்ஷம்மோக்ஷம்
பூட்டியதோர் மனமிறந்த பொருள்தானப்பா
போக்கற்று வரவற்று நின்றபோதும்
ஆட்டியதோ ராட்டெல்லாம் சூதத்தாட்டு
அப்பனே நவகோடி சித்தர் தானே. 811

இந்த சூதத்திற்கு நிகர் ஆனந்த மயமான பூரணமும், மூலத்தில் இருக்கும் நந்தியும், அதற்கப்பால் உள்ள மோக்ஷமும் நிகராகும். இம்மணிகளினால் மனமடங்கி போக்கு வரவற்ற முக்தி உண்டாகும். இவையாவும் சூதத்தின் செயலாகும். நவகோடி சித்தர்களும் இதனாலேயே சித்தியடைந்தனர்.

பாஷாண அக்ஷயம்

சித்தான பாஷாண அக்ஷயத்தைச்சொல்வேன்
திறமான கெந்தகந்தான் பலமதொன்று
மத்தான சாரமது பணந்தா னொன்று
மருவியதோர் வீரமது பணந்தானொன்று
முத்தான நவநீதம் பணந்தா னொன்று
மூதண்டச் சிப்பிநீர் விட்டேயாட்டு
எத்தான குளிகையிட்டுச் சீலைசெய்து
யிதமாகக் கரியோட்டில் வைத்துவூதே. 812

ஊதப்பா குழலாலே கெந்தகந்தான்கட்டி
யுருகிநிற்கு மிதனோடே கெந்தகத்தைச் சேர்த்துப்
போதப்பா யிப்படியே வூதவூதப்
பணைந்தேறும் நூறுதொந்தம் புகலக்கேளு
ஆதப்பா அக்ஷயமாங் கெந்திதானு
மாச்சரிய மாச்சரிய மம்மாள்நாதம்
வாதப்பா சொல்லாலாங் கட்டப் போகா
மருவியதோ ரெரிச்சலொடு புகைச்சல்தானே. 813

கெந்தகம் ஒரு பலமெடுத்து இதனுடன் சாரமும் வீரமும் நவநீதமும் வகைக்கு ஒரு பலம் சேர்ந்து சிப்பிநீர் விட்டரைத்து குகையிலிட்டு சீலைசெய்து கரியோட்டில் வைத்து குழலால் ஊத வேண்டும். இவ்வாறு ஊதிய பின் எடுத்துப் பார்த்தால் கெந்தகம் கட்டி நிற்கும். இதனுடன் மேலும் கெந்தகம் சேர்த்து முன்போல் அரைத்து ஊத வேண்டும் இவ்வாறு நூறு முறை தொந்தித்தால் கெந்தகம் கட்டி அக்ஷயமாகும். ஆச்சரியமான பல செய்கைகளை புரியும் வாதத்தால் நாதம் கெந்தகத்தை கட்டுவது மிகவும் கடினம். இதை கட்டாமல் நெருப்பிலிட்டால் புகைந்தும் எரிந்தும் நாசமாகும்.

தானென்ற கெந்தகமோ கட்டிற்றானால்
தட்டுமுதல் தாவரமும் பொன்னேயாகும்
வானென்ற சூதமது கட்டிப்போகும்
மருவியதோர் தங்கமது செம்பாய்ப் போகும்
ஊனென்ற காயமது சித்தியாகு
முத்தமனே செந்தூரங் குருவுமாகும்
பானென்ற மூண்டவள்தான் முன்னே நிற்பாள்
பகராரிது யிதன்வேதை பார்த்திடீரே. 814

கெந்தகத்தை முறையாக கட்டினால் தட்டு முதல் தாவரம் வரை எல்லாம் பொன்னாம். சூதம் கட்டி மணியாகும். தங்கம் செம்பாகும். காயம் திடப்பட்டு சித்தியாகும். செந்தூரங்கள் அனைத்தும் குருவாகும். தேவியானவள் எதிரே நின்று பேசுவாள்.

கவுரி தொந்தம்

பார்த்திடப்பா கெவுரியது பலந்தானொன்று
பரிவான சாரமது பணந்தானொன்று
சேர்த்திடப்பா காரமது பணந்தானொன்று
திறமான சிப்பிநீர் விட்டே யாட்டிக்
கோர்த்திடப்பா குகைக்குள்ளே சில்லுப் போட்டுக்
குழலாலே யூதுநன்றா யுருகியாடும்
போர்த்திடப்பா கெவுரியது தொந்தமேறும்
புகழான நூறுதொந்தம் போக்காம்பாரே. 815

ஒரு பலம் கெவுரியை எடுத்து அதனுடன் சாரம் ஒரு பணமும் காரம் ஒரு பணமும் சேர்த்து சிப்பிநீர் விட்டரைத்து குகைக்குள்ளிட்டு கரியோட்டில் வைத்து ஊதினால் கெவுரி உருகி நிற்கும் இதனுடன் முன்போல் கெவுரி சேர்த்து அரைத்து கரியோட்டில் வைத்து ஊத வேண்டும் இதைப்போல் நூறுமுறை செய்தால் கெவுரி கட்டி திடப்படும்.

பாரப்பா கெவுரியினால் சூதங்கட்டும்
பதையாமல் கருநாகம் புரண்டு சாகும்
நேரப்பா வங்கமுதல் நாகங்கட்டும்
நிறைநிறையே நவலோகம் வேதையாகும்
ஆரப்பா கெவுரியுட ஆண்மைகாண்பார்
அம்மம்மா வெகுசுறுக்கு ஆட்டுமெத்த
வேரப்பா விதற்கேது என்றாயானால்
விளங்கியதோ ருப்பாலே வந்தநீரே. 816

வந்தநீர் சிப்பிநீர் ராகிற்றப்பா
மகத்துவந்தா னுப்புக்குச் சிப்பிகூட்சம்
இந்தநீர் கண்டாக்கால் காரம்சாகும்
என்மக்காள் பேசாதே யுப்புசாகும்
வெந்தநீர் கண்டுடனே பூரம்சாகும்
வெண்காரம் முதற்கொண்டு எல்லாம்சாகும்
எந்தநீ ரென்றாக்கால் சிப்பிநீர்தான்
ஏதுசொல்வேன் சிப்பிக்கு யீயநீரே. 817

கட்டிய இக்கெவுரியால் சூதங்கட்டும், கருநாகம் புரண்டு சாகும். வங்கம் முதல் நாகம் வரை அனைத்தும் கட்டும். நவலோகங்கள் வேதையாகும். பெருமை வாய்ந்த கெவுரியின் கட்டு மிகவும் எளிமையானதாகும். எதனால் கெவுரி மிகவும் எளிதில் கட்டி நிற்கிறது என்று கேட்பாயாகில் சிப்பியினிடம் உதித்த உப்பு நீரால் என்று அறி. இச்சிப்பி நீரால் சாரம் சாகும். உப்பு வகைகள் பூரம் சாகும். மீண்டும் கூறுகிறேன் சிப்பியினிடம் உள்ளே யீயநீரால் அனைத்தும் கட்டும்.

லிங்க தொந்தம்

ஈயமுள்ளே யிருக்குமப்பா சிப்பிக் கெல்லா
மென்மக்கா ளென்னாலே விசாரிக்கக்கூடா
காயமுள்ளே புரியட்ட மிருந்தாப் போலே
கண்டோர்கள் கண்டிருப்பார் காணார் காணார்

நாயமுள்ள லிங்கமது பலந்தானொன்று
நலமுற்ற சாரமது பலந்தானொன்று
தாயமுள்ள வீரமது பணந்தானொன்று
தாக்கியொன்றாய்ச் சிப்பிநீர் விட்டேயாட்டே. 818

எல்லாச் சிப்பிகளிலும் ஈயமிருக்கும். இதைப்பற்றி இங்கு என்னால் கூறமுடியாது. எப்படி இவ்வுடலுக்குள் எட்டு உடம்புகள் உள்ளனவோ அதேபோல் சிப்பிக்குள்ளே ஈயநீர் இருக்கும். இதைச் சிலர் பார்த்திருப்பர். ஆனால் அதுதான் சிப்பிநீர் என்றறிந்திருக்க மாட்டார்கள். லிங்கம் ஒருபலம், சாரம் ஒரு பலம், வீரம் ஒரு பணம் இவை மூன்றையும் சிப்பிநீர் விட்டரைத்து.

ஆட்டியப்பா குகையிலிட்டுச் சீலைசெய்து
அடவாக வூதையிலே மணிபோலாகும்
மூட்டியப்பா யேற்றிவர யேறு மேறும்
மூதண்ட தொந்தமது நூறு மட்டும்
நீட்டியப்பா விரும்பிலிடச் செம்பே யாகும்
நேரான நாகம்வங்கம் தங்கம் செம்பாம்
பூட்டியப்பா விச்செம்பு வேதை பார்க்கப்
பொற்கொடிக்கு யீசனன்று போதித்தாரே. 819

குகைக்குள்ளிட்டு சீலை செய்து ஊதினால் மணிபோலாகும். மீண்டும் இதனுடன் லிங்கம் சேர்த்தரைத்து குகையில் வைத்து ஊதவேண்டும். இதேபோல் நூறு முறை தொந்தித்த லிங்கத்தால் இரும்பு, நாகம், வங்கம், தங்கம் போன்ற லோகங்கள் செம்பாகும். இச்செம்பால் அதிகவேதை உண்டு. இவ்வேதை முறையை சிவபெருமான் முன்பொரு சமயம் பார்வதிக்கு உபதேசித்தார். அதை கூறுகிறேன் கேள்!

போதித்த செம்பெடைக்குத் தங்கங் கூட்டிப்
புகழான பறியெடைக்குச் சூதம் சேர்த்து
மாதித்த மூன்றெடைக்குக் கெந்தி சேர்த்து
மருவியெல்லாம் பொடியாக்கிக் குப்பிக்கேற்றி
வாதித்த வாலுகையில் வைத்து மூட்டி
மருவியந்தப் பதம்பாரு மக்காள் நீங்கள்
ஆதித்தன் வருணம்போற் சிவந்து போகும்
அப்பனே ரவிமதியில் நூற்றுக்கொன்றே. 820

மேற்கூறிய லோகச் செம்பை எடுத்து அச்செம்பு, எடைக்கு சமமாக தங்கமும் தங்கத்தின் எடைக்கு சூதமும், சேர்த்து இவை மூன்றின் எடைக்கு சரிஅளவு கெந்தகம் கூட்டி பொடி செய்து குப்பியிலடைத்து வாலுகையில் வைத்து தீ மூட்டி எரித்தால் சிவந்த நிறமுள்ள செந்தூரம் கிட்டும். இச்செந்தூரத்தை வெள்ளிச் செம்பில் நூற்றுக்கு ஒரு பங்கு சேர்த்தால் வேதையாகும்.

நூற்றுக் கொன்றோடு மிதைக்குன்றி யுண்ணு
நுகரப்பா மண்டலந்தா னோக்க மேனி
காற்றுக்கும் நீருக்குந் தீக்குமஞ்சாக்
கவனமென்றால் வெகுசுறுக்கு கடிந்துபாயும்

சோற்றுக்கும் பாலுக்கும் குறைவோவில்லை
தும்பினால் நவலோகம் பொன்னுமாகும்
கூற்றுக்கும் தீவினைக்கும் பயமோயில்லை
கூடலாம் வாசியிலே கூடலாமே. 821

இச்செந்தூரத்தை குன்றி அளவு ஒரு மண்டலம் உட்கொண்டால் தேகமானது நெருப்புக்கும், காற்றுக்கும் நீருக்கும் அஞ்சாது. மேலும் இதனால் கவுனசித்தி மிக எளிதில் கிட்டும். செந்தூரம் உட்கொண்டவன் தும்பினால் நவலோகமும் பொன்னாகும். தீவினைகள் அனைத்தும் மாயும். மனம் வாசியில் சென்று அடங்கும்.

மனோசிலை அட்சயம்

கூடலா மனோசிலைதான் வராகன் பத்து
கொண்டதொரு முன்சாரம் பணந்தானொன்று
நீடலாம் வீரமது பணந்தானொன்று
நேரலாம் சிப்பிநீர் விட்டு ஆட்டி
யூடலாங் குகையிலிட்டே யுருக்கவப்பா
வுருகிநிற்கு மட்சயமாம் சிலையுமாச்சு
ஆடலாம் தொந்தித்து ஏற்றியேற்றி
அப்பனே நூறுமட்டு மேறுந்தானே. 822

ஏறியதோர் சிலையாலே சூதங்கட்டு
மென்ன சொல்வே னவலோகம் பொன்னுமாகும்
மாறியதோர் சிலைகொடுத்தால் நவலோகத்தில்
மக்களே செம்பாகும் லோகமெல்லாம்
தேறியதோர் செம்பாலே வேதைமெத்த
செப்பரிது செப்பரிது வாணிநாதம்
கூறியதோர் தொழிலையெல்லாம் விரித்துப் பாடிற்
கூட்டுமைக்கு வேலைநீர் குறைந்து போமே. 823

மனோசிலை பத்துவராகன் எடுத்து அதனுடன் கட்டிய சாரமும் வீரமும் வகைக்கு ஒரு பண அளவு கூட்டி சிப்பிநீர் விட்டரைத்து குகையிலிட்டு உருக்கினால் அட்சய சிலையாகும். இதனுடன் மீண்டும் மனோசிலை சேர்த்து தொந்திக்க வேண்டும். இவ்வாறு நூறுமுறை தொந்தித்த சிலையால் சூதம் கட்டும். நவலோகமும் பொன்னாகும். மனோசிலையை கொடுத்து லோகங்களை உருக்கினால் அனைத்தும் செம்பாகும். இச்செம்பால் அதிக வேதை உண்டாகும். வாணி நாதமான மனோசிலையால் ஏற்படும் வேதையைப் பற்றி விரித்து கூறுவதற்கு முடியாது. அப்படி விரித்து கூறினால் உங்களுக்கு வேலை குறைந்துவிடும்.

தாளக அட்சயம்

குறையாமல் தாளகந்தான் பலந்தானொன்று
கூட்டப்பா சாரமது பணந்தான் தூக்கி
மறையாமல் வீரமது பணந்தான் போடு
மருவியதோர் சிப்பிநீர் விட்டேயாட்டி
நிறையாமல் குகையிலிட்டுச் சீலைசெய்து
நேர்பாக வூதையிலே மணிபோலாகும்
முறையான நூறுதொந்தம் முன்போலேறும்
முக்கணனார் சிவனத்துக் கெடுத்தார் காணே. 824

தாளகம் ஒரு பலம் எடுத்து அதனுடன் சாரம், வீரம் இரண்டையும் வகைக்கு ஒரு பணம் கூட்டி சிப்பிநீர் விட்டரைத்து குகையிலிட்டு சீலை செய்து ஊதினால் மணி போலாகும். இதை நூறு முறை தொந்தித்து சீவனத்திற்கு சிவபெருமான் எனக்கு கொடுத்தார்.

அய ஈயம்

எடுத்ததொரு தாளகத்தை யயந்தான் பத்தி
லென்மக்கா ளிட்டவுட னீயமாகும்
அடுத்தவிந்த யீயமொன்று நாகம்பத்தி
லப்பனே கொடுத்தவுடன் கட்டிப் போகும்
தொடுத்தவிந்த நாகமப்பா தொந்தமேறும்
சூதத்தைப் பதையாமல் சூட்டிக்கொல்லும்
மடுத்தவிந்த நாகத்தைச் செந்தூரிக்கும்
மக்களே பதினாறு மாற்றுமாமே. 825

தொந்தித்த தாளகத்தை அயம் பத்தில் கொடுத்தால் அயம் ஈயமாகும். இவ்வீயத்தை நாகம் பத்தில் கொடுத்தால் நாகம் கட்டும். கட்டிய நாகம் நூறு தொந்த வரையேறும். தொந்தித்த நாகம் சூதத்தைக் கொல்லும், கட்டிய நாகத்தை செந்தூரிக்கும் நவலோகங்களில் கொடுத்தால் பதினாறு மாற்றுண்டாகும்.

ஆமப்பா தாளகத்தால் வீரங்கட்டு
மாச்சரிய மினிக்கட்டும் லிங்கங் கட்டும்
ஓமப்பா கெந்திகட்டும் கெவுரிகட்டு
முத்தமனே சரக்கெல்லா மொக்கக்கட்டும்
வேமப்பா தாளகத்தா லுபரசங்க ளெல்லாம்
வெருவிடவே வெந்துவெந்து யீயமாகும்
போமப்பா போக்குமெத்த பாடமாட்டேன்
புத்தியுள்ளோ ரானாக்காற் புகழ்ந்து பாரே. 826

கட்டிய தாளகத்தால் வீரம் கட்டும். மேலும் லிங்கம், கெந்தி, கெவுரி, போன்ற சரக்கெல்லாம் கட்டும், அதுமட்டுமின்றி இத்தாளகத்தால் உபரசங்கள் அனைத்தும் வெந்து ஈயமாகும். இதனுடைய பெருமை அதிகம் உண்டு. இதை வெளிப்படையாக கூறமாட்டேன். புத்திசாலியாக இருந்தால் நீயே அறிந்துக் கொள்.

புகழான வெண்ணெயொரு பலந்தான் வாங்கிப்
பூட்டப்பா சாரமொரு பணந்தானொக்கப்
புகழான சவ்வீரம் பணந்தான் போடு
பொருந்த நன்றாய்ச் சிப்பிநீர் விட்டேயாட்டி
புகழான குகையிலிட்டுச் சில்லுப் போட்டுப்
போக்கோடே யூதுமக்காள் மணிபோல் நிற்கும்
புகழான விதுவேறும் நூறுதொந்தம்
பொன்னாகும் வெள்ளியுமாம் வெள்ளைதானே. 827

வெள்ளை ஒரு பலம் வாங்கி இதனுடன் சாரம் ஒருபலம் சேர்த்து சவ்வீரமும் ஒரு பணம் சேர்த்து சிப்பிநீர் விட்டே அரைத்து குகையிலிட்டு சில்லால் மூடி சீலைசெய்து ஊதினால் மணியாகும். இந்த மணியை நூறுமுறை தொந்தித்து வெள்ளையில் ஈந்தால் அனைத்தும் வெள்ளியாகும். சில சரக்குகள் பொன்னாகும்.

வெள்ளையிலே வராகனொன்று தூக்கிக்கொண்டு
மேலான வெள்ளையிலே சமனாய்த் தூக்கு
நள்ளையிலே யுருகியது களங்கே யாகும்
நாட்டப்பா செம்பிலே நூற்றுக்கொன்று
அள்ளையிலே மெடிகாசு வெள்ளியாகு
மப்பனே யறிந்ததெல்லாஞ் செய்யநன்று
கொள்ளையிலே கொன்றைக்காய்ப் புளியுங்கெந்தி
கூட்டியொன்றா யரைத்திடவே மெழுகுமாமே. 828

தொந்தித்த வெள்ளையை வராகனெடை எடுத்து சாதாரண வெள்ளையை சமனாய் சேர்த்து உருக்கினால் களங்காகும். இக்களங்கை செம்பில் நூற்றுக்கு ஒரு பங்கு சேர்த்தால் வெள்ளியாகும். இவைகளை அறிந்து செய்தல் மிகவும் நல்லது. கொன்றைக்காயும் புளியும் கெந்தகமும் சேர்த்து அரைத்தால் மெழுகாகும்.

மெழுகெடுத்து வெள்ளைக்குக் கவசங்கட்டி
மெள்ள மெள்ளக் கரியோட்டில் வாட்டு வாட்டு
ஒழுகெடுத்துச் சீலைசெய்து விளக்கில்வாட்டு
வுத்தமனே வெள்ளையுள்ளே சிவந்துபோகும்
தழுகெடுத்துச் செந்தூரம் தங்கத்தூட்டு
சமபாகம் சமபாகம் தவற வேண்டாம்
இழுகெடுத்த விக்களங்கு செம்பு நூறி
லிடுவொன்று பொன்னாகு மிதந்தான் காணே. 829

இம்மெழுகை வெள்ளையின் மேல் கவசமாகக் கட்டி கரியோட்டில் வைத்து வாட்டி பிறகு சீலைசெய்து விளக்கொளியில் வாட்டினால் வெள்ளையானது சிவந்து போகும். இச்செந்தூரத்துக்கு சமஅளவு தங்கம் சேர்த்து உருக்கினால் களங்காகும். இக்களங்கை செம்பு நூறுபங்கில் ஒரு பங்கு சேர்த்தால் பொன்னாகும்.

காணப்பா கவுரியது வராகன் பத்து
கட்டியதோர் முன்சாரம் பணந்தான் ரெண்டு
பூணப்பா வீரமது பணந்தான் ரெண்டு
புகழான சிப்பிநீர் விட்டேயாட்டி
வூணப்பா குகையிலிட்டு வூதுவூது
வுத்தமனே கவுரிசத்து மெதுவாய் வாய்க்கும்
தோணப்பா விச்சத்தில் கவுரி கூட்டில்
தொடர்பாகத் தொந்தம் நூறேறுந் தானே. 830

தானென்ற கவுரிசத்து முக்கழஞ்சு மக்காள்
தனித்துநின்று குகையிலே முன்லிங்கமொன்று
ஆனென்று கொடுத்ததன் மேற்பறியைக் கேளு
அப்பனே மூன்றுபணம் தூக்கம்போடு
கானென்ற களங்காகும் வெள்ளி செம்பிற்
காட்டப்பா நூற்றொன்று தங்கமாகும்
பானென்று மப்படியே சீலையை யூட்டப்
பாய்ச்சஞ்சு லோகமெல்லாம் பறியமாமே. 831

பத்து வராகன் எடை கவுரியை எடுத்து கட்டிய சாரமும், வீரமும், வகைக்கு இரண்டு பண அளவு சேர்த்து சிப்பிநீர் விட்டரைத்து குகையிலிட்டு ஊதினால் கவுரிமணியாய் நிற்கும். இதனுடன் கவுரி சேர்த்து நூறுமுறை தொந்தித்து இதனுடன் கட்டிய லிங்கம் ஒரு பலமும் தங்கம் மூன்று பணமும் சேர்த்து உருக்கினால் களங்காகும். இதை வெள்ளி செம்பில் நூற்றுக்கு ஒன்று கொடுத்தால் தங்கமாகும். இதனுடன் மனோசிலையும் சேர்த்தால் சகல லோகமும் தங்கமாகும்.

பறியொன்றோ கவுரியுட சத்தினாலே
பறக்கிறதோர் குளிகையுமாம் பரிசவேதை
மறியென்றால் மறிகொள்ளாத் தூமவேதை
மருவியதோர் சந்தான வேதையாகும்
குறியென்ற லேபனமும் வாசனையுமாகும்
கூகூகூ வாதமெல்லாங் கவுரிக்குள்ளே
நெறியென்ற விதன்வேதை சொல்ல மாட்டேன்
நினைவுமட்டு மட்டோடும் நிலைத்திடாயே. 832

கவுரியின் சத்தினால் குளிகை முதல் பரிசவேதை வரை சித்தியாகும். மேலும் தூம வேதை, சந்தான வேதை, லேபன வேதை, வாசனை வேதை போன்றவை கெவுரியினால் சித்தியாகும். இதனால் ஏற்படும் வேதையைப் பற்றி முழுமையாக கூறமாட்டேன்.

நிமிளைத் தொந்தம்

நிலையாத நிமிளையது பலந்தானொன்று
நேரான முன்சாரம் பணந்தான் ரெண்டு
அலையாத சவ்வீரம் பணந்தான் ரெண்டு
அதிற்சிப்பி நீர்விட்டே யாட்டுஆட்டு
மலையாதே குகையிலிட்டுச் சீலைசெய்து
மருவிநன்றா யூதிடவே மணிபோலாகும்
தொலையாத நிமிளையெல்லாந் தொந்தமேறும்
சொல்லரிது பராபரையி னாதந்தானே. 833

நாதமென்று சொன்னாக்கால் சூதம்சாகும்
நலம்பெரிய தங்கமங்கே நீறிப்போகும்
வாதமென்று சொன்னதெல்லாம் நிமிளையாலே
வாய்மூடி நின்றாலும் பிடறி பேசும்
நீதமென்று நிமிளையிலே குருவைச் செய்ய
நேர்பாகச் சொல்லுகிறே னினைவாய்க் கேளு
காதமென்றோ வாதமென்பார் காணார் மாண்பர்
கறிச்சோற்றில் ருசியேது கல்லுப்பாச்சே. 834

நிமிளை ஒரு பலம், எடுத்து அதனுடன் கட்டிய சாரமும் வீரமும் வகைக்கு இரண்டு பண அளவு சேர்த்து சிப்பிநீர் விட்டரைத்து சீலைசெய்து குகையில் வைத்து உருக்கினால் மணியாகும். இதை நூறு முறை தொந்தித்தால் இதன் பேர் சொன்ன மாத்திரத்தில் சூதம் கட்டும். தங்கம் நீறும். சகலவிதமான வேதையும் நிமிளையும் பலிதமாகும். இந்நிமிளையை குரு மருந்தாக செய்யும் முறையைக் கூறுகிறேன் கேள்.

வாதம் என்பது வெகுதூரம் என்று அதை அறியாமல் புலம்புவார்கள். உணவிற்கு உப்பு எப்படி முக்கியமோ அப்படிதான் நிமிளை வாதத்திற்கு

ஆச்சப்பா நிமிளையொன்று தங்கமொன்று
ஆடிநின்று வுருகையிலே சூதமொன்று
கூச்சப்பா கொடுத்ததனை மணிபோல் வாங்கி
குலாவியிதில் மேற்பூச மருந்துகேளு
வோச்சப்பா கண்டர் சுண்ணம் வீரச்சுண்ணம்
ஒக்கவிதில் சவுக்காரச் சுண்ணம் கூட்டி
வீச்சப்பா கற்பூர வுப்புச் சுண்ணம்
விதமாக அஞ்சுமொரு நிறையாய்க் கூட்டே. 835

தொந்தித்த நிமிளை ஒரு பங்கும் தங்கம் ஒரு பங்கும் சேர்த்து உருக்கி அதனுடன் சூதம் ஒரு பங்கும் சேர்த்து மணிபோல் வாங்க வேண்டும். இம்மணியின் மேல் பூசுவதற்கு மருந்தை கூறுகிறேன் கேள்! துருசு சுண்ணம், வீரச் சுண்ணம், சவுக்காரச் சுண்ணம், கற்பூரச் சுண்ணம், உப்புச் சுண்ணம் ஆக ஐந்து வகை சுண்ணத்தையும் ஒரு நிறையாய் வாங்கி

கூட்டியப்பா விதற்குள்ளே பச்சைவீரம்
குறையாம லிந்தெடைக்குப் போடுபோடு
நீட்டியப்பா குருவண்டு வுரமும் போடு
நிலையாகக் கற்பூரம் சூதம் போடு
ஆட்டியப்பா அரைப்பதற்குக் காமம் நன்று
ஆகாட்டால் வெண்கருவை விட்டே யாட்டி
மூட்டியப்பா மணிபோலே பூசிப்பூசி
முறியுமட்டும் ரவிக்குள்ளே யுலரப் போடே. 836

இதனுடன் பச்சைவீரம், சமஎடை சேர்த்து மேலும் குருவண்டு உரம், கற்பூரம், சூதம் இவையாவையும் ஒன்றாய்ச் சேர்த்து காமநீர் விட்டு ஆட்டுதல் வேண்டும். காமநீர் கிடைக்கா விட்டால் வெண்கருவைவிட்டு அரைத்து மணிமேல் பூசி ரவியில் காயவைக்க வேண்டும்.

போட்டதுமே லஞ்சுவகை சுண்ணங் கூட்டிப்
புகழாகச் சீலைகட்டிப் புடத்தைப் போடு
நீட்டியப்பா வஸ்துசுத்தி யீசானத்தில்
நிலையான தாய்தந்தை நிர்வாணிக்கும்
ஊட்டியப்பா மனங்குளிரப் பூசைபண்ணி
வுத்தமனே யெடுத்துப்பார் குருவுமாச்சு
ஆட்டியப்பா பிரபஞ்சம் மேருவோடே
யரகரா சிவசத்தி குருவுமாச்சே. 837

காய வைத்த மணியை ஐந்துவகை சுண்ணத்துள் வைத்து சீலைசெய்து புடம்போட்டு, வஸ்து சுத்தி வைத்து சிவனுக்கும் பார்வதிக்கும் ஈசானத்தில் பூசை செய்து மனங்குளிரச்செய்து புடம் ஆறியபின் எடுத்துப் பார்த்தால் குருவாய் நிற்கும். இக்குருவால் சகல சரக்கும் குருவாகும்.

ஆச்சிந்தக் குருவுக்குள் சவாதுகூட்டி
யப்பனே மத்தித்துச் சரக்கைத் தொட்டால்
வாச்சிந்த சரக்கெல்லா மணிபோலாடும்
மாட்டலா முபரசத்தில் நவலோகத்தில்

காச்சிந்த பொன்மாற்று இருபத்தைந்து
கைமுறையா யாயிரத்துக் கொன்றாம் வேதை
மூச்சிந்த இடங்காட்டும் மூலங்காட்டும்
மூதண்ட வுன்மனையில் மூட்டுந்தானே. 838

இக்குருவோடு சவ்வாது கூட்டி மத்தித்து சரக்கை தொட்டால் சரக்கெல்லாம் மணிபோலாகும். இம்மணியை உபரசத்திலும், நவலோகத்திலும் ஆயிரத்துக்கு ஒரு பங்கு சேர்த்தால் இருபத்தைந்து மாற்றுடைய தங்கங் கிட்டும். மேலும் இம்மணி மூலத்தின் பொருளை காட்டி சுழுமுனையில் சேர்க்கும்.

மூட்டியிந்தக் குருவோடே புழுகையொக்க
முனையாக மத்தித்துச் சரக்கில் தேய்த்து
ஆட்டியெந்தச் சரக்கையுமே யூதவூத
அரகரா சிவசிவா எல்லாம் சுண்ணம்
தோட்டியென்றே ஞரசனென்றேன் சொர்க்கத்துக்குச்
சொல்லாக வொருசுண்ண முன்னே கண்டாற்
கூட்டியொன்றே சரக்கெல்லாம் வெருவியூதக்
குப்பல்குப்பல் தெப்பல்தெப்பல் சுண்ணந்தானே. 839

இக்குருவோடு புனுகை சேர்த்து மத்தித்து சரக்கில் தேய்த்து சரக்கை ஊதினால் சகல சரக்கும் சுண்ணமாகும். இவ்வொரு சுண்ணத்தை முன்னே செய்தால் சகல சுண்ணம் பின்னால் நமக்கு கிட்டும்.

சுன்னமென்றால் வாய்க்கெளிதோ மக்காள் மக்காள்
சோத்திரமாய்ப் பேசுவதாற் சுன்னமாமோ
அன்னமென்று சொன்னாக்கால் பசிதான் போமோ
அடியடீ யென்றாக்கால் பெண்டாவாளோ
கன்னமென்று சொன்னவுடன் சோரமாமோ
கைமுறையாய் நெருப்பென்றால் வாய்தான் வேமோ
வுன்னவென்றா லாகாச முன்னப் போமோ
வோகோகோ சுணங்கனுக்குச் சொன்ன பேச்சே. 840

சுண்ணம் என்பது மிகவும் எளிதானதா என்ன? சுண்ணம் சுண்ணம் என்று வாயால் பேசுவதால் சுண்ணம் கிட்டிவிடுமோ? சாதம் என்று சொன்ன மாத்திரத்தில் பசி போய் விடுமா என்ன? அடி அடி என்று ஆயிரம் முறை அழைத்தால் பெண்டாட்டி ஆகிவிடுவாளா என்ன? நெருப்பு என்று சொன்னவுடன் வாய் வெந்து விடுமா என்ன? எந்த ஒரு காரியத்தையும் முறையாக செய்தால்தான் அடைய முடியும்.

பேச்சென்ன வுப்பினிட பெருமைகாணான்
பேராகக் கட்டினதோர் பிறிவுங்காணான்
ஆச்சென்ன அதையூதிச் சுண்ணங்காணா
னதனோடு சேருகிற பூரங்காணான்
காச்சென்ன கடுங்கார மேத்துங்காணான்
கைமுறையாய் வழலையுட கருவுங்காணான்
நீச்சென்ன நிலையென்ன யென்னுமாண்பர்
நிறமோடா வாதத்தை நினையார்காணே. 841

கணங்கன் என்று சொல்லப்படும் புத்திகெட்ட மானிடர்கள் உப்பின் பெருமையையும், அதன் கட்டு முறையையும், சுண்ணம் செய்யும் முறையையும் உப்போடு சேர்க்கின்ற பூரத்தையும், கடுங்காரம் ஏற்றும் முறையையும், வழலையின் மார்க்கமும், அறிந்திருக்க மாட்டார்கள். அதோடு மட்டுமில்லாமல் வாதம் என்ற வார்த்தையும் தெரியாமல் திரிவர்.

தொட்டிச் செந்தூரம்

காணப்பா தொட்டியது பலந்தானொன்று
கைமுறையாய்ச் சாரமது பணந்தான் போட்டு
பூணப்பா வீரமொரு பணந்தான் போட்டுப்
புகழ்முந்து நவநீதம் பணந்தான் போட்டு
வூணப்பா சிப்பிநீர் விட்டேயாட்டி
யுத்தமனே குகையிலிட்டு வூதுவூது
தாணப்பா வுருகியொரு மணியாய்நிற்கும்
தன்னெடைக்குக் கூட்டிநூறு தொந்தமேற்றே. 842

ஒரு பலம் தொட்டியை எடுத்துக் கொண்டு அதனுடன் கட்டிய சாரமும் வீரமும் வகைக்கு ஒரு பண எடை அளவு சேர்த்து நவநீதமும் பண எடை அளவு கூட்டி சிப்பிநீர் விட்டு அரைத்து குகையில் இட்டு ஊதினால் மணியாகும் அந்த மணிக்கு நூறு தொந்தம் ஏற்ற வேண்டும்.

ஏற்றியதோர் தொட்டியினாற் சூதங்கட்டு
மென்மக்காள் சரக்கெல்லா மிறுகிக்கட்டும்
மாற்றியதோர் தொட்டியொன்று தங்கமொன்று
மருவிநின்று வுருகையிலே சூதம்ரெண்டும்
போற்றியதோர் மூன்றுமொன்றாய் வாங்கிக்கொண்டு
புகழான ரெண்டெடைதான் கெந்திபோட்டு
ஆற்றியிதைப் பொடிபண்ணி குப்பிக்கேற்றி
அடவாக வாலுகையி லேற்றிமூட்டே. 843

நூறு முறை தொந்தித்த தொட்டியால் சூதங்கட்டும். சகல சரக்கும் இறுகி கட்டும், தொட்டி ஒரு பங்கு, தங்கம் ஒரு பங்கு இவை இரண்டையும் சேர்த்து உருக்கி இதனுடன் சூதம் இரண்டு பங்கு சேர்த்து இம்மொத்த எடைக்கு கெந்தகம் சேர்த்து பொடி செய்து குப்பிக்கேற்றி வாலுகையின் மேல் வைத்து தீமூட்டி எரிக்க வேண்டும்.

மூட்டியிதைச் செந்தூரமாகப் பண்ணி
மெழுக்கோடே கூட்டியிதை யரைத்துக்கொண்டு
நாட்டியிதை யொன்பதிலும் நூற்றுக்கொன்று
நலமாக் கொடுத்துப்பார் பத்துமாற்று
ஆட்டியிதைச் சூதத்தில் நூற்றுக்கொன்று
அணைத்துருக்கத் திசமாற்றா மப்பாகேளு
வோட்டியிதன் வேதையென்ன வுபரசத்திலோடு
முத்தமனே சுறுக்குமெத்த வுறைப்புப்பாரே. 844

எரித்து தீ ஆறிய பின் எடுத்துப் பார்த்தால் செந்தூரமாயிருக்கும் இச்செந்தூரத்தை மெழுகுடன் சேர்த்தரைத்து நவலோகங்களில் கொடுத்தால் பத்துமாற்று உண்டாகும் சூதத்தில் நூற்றுக்கொன்று சேர்த்தால் சூதம் பத்துமாற்று உண்டாகும். இதை உபரசங்களுடன் சேர்த்தால் வேதை வெகு எளிதில் கிட்டும்.

பாரப்பா வொன்பதுக்கும் பருவஞ்சொன்னேன்
பார்த்தமட்டும் பாடவென்றா லோலையில்லை
நேரப்பா வுப்புநே ராட்டுஆட்டு
நேரான வுப்புக்கு மெதிரோயில்லை
கூரப்பா வுப்புநீர் வாதத்துக்குக்
கூத்தாட்டும் சித்தாட்டு முப்பாலாச்சு
தூரப்பா திராவகத்தில் வெவ்வேறாகச்
சொல்லக்கே ளறுபத்து நாலுதுண்டே. 845

ஒன்பது விதமான சரக்கிற்கும் பருவம் சொன்னேன் இவை அனைத்திற்கும் உப்பு நீரே ஆதியாகும். இந்த உப்புக்கு எதிர் சரக்கு உலகில் இல்லை, சகல விதமான கூத்தும் இந்த உப்பால் கைக்குள்ளாச்சு, திராவகமும் இதனால் சித்தியாச்சு.

அறுபத்து நாலுக்கு வுப்புச் சீனம்
அணுகாட்டா லொன்றுமில்லை யெல்லாம் பொய்பொய்
அறுபத்து நாலு கர்மம் லோகத்துக்கும்
அப்பனே வுப்பாதி யறிந்து கொள்ளும்
அறுபத்து நாலுகலை யெத்தாலாச்சு
அப்பனே யுப்பென்ற வித்தினாலே
அறுபத்து நாலுக்கும் உப்பேயாதி
யாகையினாற் சொல்லிவிட்டே னறிந்துஆடே. 846

அறுபத்து நாலு சரக்குக்கும் சீனஉப்பே ஆதியாகும், அறுபத்து நாலு சரக்குக்கும் இந்த உப்பே ஆதியாகும், அறுபத்து நாலு கலைகள் எல்லாம் இந்த உப்பால் சித்தியாயிற்று ஆகவே உப்பை முதலில் அறிந்து செய்.

ஆடுதற்கு விரிக்கிறேன் ரசத்தையின்ன
மப்பனே தொடுப்புரசம் மூன்றே காசு
நீடதற்குத் தங்கமொரு காசுபோடு
நிலையாக வுருக்கையிலே அட்சயமாங்கெந்தி
வூடுதற்கு மிருகாசு அதிலே போடு
வுத்தமனே களங்காகு முருக்கிப்பாரு
கூடுதற்கு யிக்களங்கு செம்புக்குள்ளே
கொடுநூற்றுக் கொன்றுமக்காள் திசமாற்றாமே. 847

ரசத்தில் வேதை சொல்கிறேன் கேள்! தொடுப்பு ரசம் மூன்றுகாசு, தங்கம் ஒரு காசு, இவை இரண்டையும் சேர்த்துருக்கும் சமயத்தில் அட்க்ஷய கெந்தி இரு காசு எடை சேர்த்துருக்கினால் களங்காகும். இக்களங்கை செம்பில் நூற்றுக்கு ஒரு பங்கு சேர்த்தால் பத்து மாற்றுக் கொண்ட தங்கம் கிட்டும்.

நாகக் கட்டு

ஆமப்பா களங்குரசம் பணந்தானஞ்சு
அப்பனே நாகமது பணந்தானஞ்சு
வோமப்பா முன்சாரம் பணந்தானொன்று
வுத்தமனே முன்வீரம் பணந்தானொன்று

வேமப்பா சிப்பிநீர் விட்டேயாட்டி
விரைந்திதனைக் குகையிலிட்டு வுருக்குநீதான்
சாமப்பா நாகமதில் முழுக்கட்டாகும்
தாக்கதிலே பச்சையொன்று நாகந்தானே. 848

களங்கு ரசம் ஐந்து பண அளவு எடுத்து அதனுடன் நாகம் ஐந்து பணம், கட்டிய சாரம் ஒரு பணமும் வீரம் ஒரு பணமும் கூட்டி சிப்பிநீர் விட்டரைத்து குகையில் இட்டு உருக்கினால் நாகம் முழுகட்டாகும். இதனுடன் துருசு ஒரு பங்கும்

நாகமிட நாகமிடப் பத்துதொந்தம்
நண்பாகக் கட்டிப்போம் நல்லகட்டு
ஆகமுட னின்னாகம் பத்துக்குள்ளே
அட்சயமாம் மனோசிலையை யொன்றுபோடு
வேகமுடன் திசமாற்றாம் வேதைதானும்
விட்டவிடம் தொட்டவிட மெல்லாம் பொன்னாம்
பாகமுடன் கவுரிசத்து வராகன்ரெண்டு
பாங்கான சிராவண ரசந்தானொன்றே. 849

நாகம் சேர்த்து நாகத்தில் சேர்த்தால் நாகம் தொந்தம் ஏறும். இதேபோல் பத்து தொந்தம் ஏற்றினால் கட்டு நல்லக் கட்டாகும். இக்கட்டிய நாகத்தில் பத்து எடை எடுத்து அதனுடன் அட்க்ஷய மனோசிலையை ஒரு பங்கு சேர்த்து வேதைப் புரிந்தால் வேதை தசமாற்றுகிட்டும். இதனுடன் கவுரி சத்து ரெண்டு வராகனும் சிராவண ரசம் ஒரு பங்கும் சேர்த்து,

ஒன்றாக வுருகையிலே அட்சயமாம் சிலையை
வொருகாசு யெடைபோடக் களங்கேயாகும்
நன்றான இக்களங்கு ஒன்றுவாங்கி
நாட்டப்பா சமபாகம் தங்கத்துள்ளே
தன்றான தங்கமது களங்கேயாகும்
தாக்கஞ்சு லோகத்தில் நூற்றுக்கொன்று
மன்றான கல்முதலா யேமமாகும்
மார்க்கமெத்தக் கவுரியிலே வாதந்தானே. 850

அட்க்ஷய மனோசிலை ஒரு காசு எடை சேர்த்து உருக்கினால் களங்காகும். இக்களங்கிலிருந்து ஒரு பங்கு வாங்கி சமபாகம் தங்கம் சேர்த்து உருக்கினால் தங்கம் களங்காகும். இக்களங்கை கல் முதல் சகல லோகத்திலும் நூற்றுக்கு ஒரு பங்கு சேர்த்தால் வேதையுண்டாகும்.

தானென்ற சவ்வீரம் முதலாய்க்கேளு
சார்ந்துநின்ற அறுபத்து நாலுந்தாது
தேனென்று முன்போலே பலந்தான் தூக்கிச்
சேர்த்து முன்போல் சாரமொடு வீரம்போடு
கானென்ற சிப்பிநீர் விட்டேயாட்டிக்
கைமுறையாய்க் குகைக்குள்ளே யுருக்குமக்காள்
ஊனென்ற அறுபத்து நாலுங்கட்டு
முத்தமனே நூறு தொந்த மோடுந்தானே. 851

சவ்வீரம் முதல் அறுபத்துநாலு சரக்கையும் வாங்கி கட்டிய சாரமும் வீரமும் கூட்டி சிப்பிநீர் விட்டரைத்து குகைக்குள் வைத்து உருக்கினால் அறுபத்து நாலு சரக்கும் கட்டும். இதை நூறு தொந்தம் ஏற்றினால் வாதம் கிட்டும்.

ஓடுமப்பா யிப்படியே வுபரசங்கள் யாவு
மொருநூற்று யிருபத்து அஞ்சுதானே
கூடுமப்பா முன்போலே வீரம்சாரம்
கொள்ளுமதிற் சிப்பிநீர் விட்டேயாட்டி
நீடுமப்பா குகையிலிட்டே யுருக்கிப்பாரு
நிரைநிரையா யுபரசங்க ளெல்லாம் சத்து
ஆடுமப்பா அண்ட பகிரண்ட மெல்லாம்
அரகரா சிவசிவா அறிந்திலேனே. 852

இதேபோல் உபரசங்கள் நூற்று இருபத்தைந்தையும் கட்டிய சாரமும் வீரமும் கூட்டி சிப்பிநீர் விட்டரைத்து குகையிலிட்டு உருக்கினால் உபரசங்கள் அனைத்தும் சத்தாகும். இச்சத்தால் அண்ட பகிரண்ட வரை வேதையாடும்.

அறியாத வுபரசங்கள் குருவேயாகும்
அம்மம்மா களங்காகும் மெழுகுமாகும்
அறியாத செந்தூர மனேகமாகும்
அதற்கதற்கு இனங்கண்டு பூட்டியாடு
அறியாத வுபரசங்கள் சத்தி லூட்டி
அப்பனே சாரணையைத் தீர்த்துஆடு
அறியாத வுபரசத்தைச் சத்துபண்ண
வாராலு மாகாது வுப்பாலாமே. 853

அறியாத உபரசங்கள் அனைத்தும் குருவாகும். அது மட்டுமின்றி களங்கு மெழுகு செந்தூரம் போன்றவை சித்தியாகும். ஆனால் முறையாக இனம் அறிந்து பூட்டி ஆடவேண்டும். உபரசங்களின் சத்தை மணிக்கு ஊட்டி சாரணை தீர்த்து சித்தாட வேண்டும்.

அறிந்திராத உபரசத்தை சத்து செய்வதற்கு உப்பைத் தவிர வேறு ஒன்றாலும் முடியாது.

உப்புமுதல் காரமொடு சாரமான
வுறவானகூட்டமெல்லா முன்போலப்பா
செப்புமுதல் சாரமொடு வீரங்கூட்டிச்
சேர்ந்துநின்ற சிப்பிநீர் விட்டேயாட்டிக்
கொப்புமுதல் குளிகையிலிட்டு ருக்கக் கட்டும்
கூகூகூ வாதமெல்லாம் கொள்ளை கொள்ளை
அப்புமுதல் திரண்டாடும் மரமும்சத்தா
மாகாகா சொல்லுதற்கு மிடங்காணேனே. 854

அறியாத உபரசத்தை சத்து செய்வதற்கு கட்டிய சாரமும் வீரமும் சேர்த்து சிப்பி நீர் விட்டரைத்து குகையிலிட்டு உருக்கினால் எல்லாச் சரக்கும் கட்டும். இதனால் மரம் முதல் எல்லா வகையான சரக்கும் வேதையாகும்.

காணாத தொழில்முறையைக் காணவென்றால்
கைமுறையாய்த் தேவியைத்தான் நித்தம்பூசி
தோணாத வீசனைத்தான் நித்தம்பூசி
சுத்த சைதன்னியத்தை நித்தம்பாரு

ஆணாத வயிரவனை யடுத்துப்பூசி
அஷ்டதிக்குப் பந்தனத்தை யறிந்துபண்ணு
பூணாத பூசைக்குப் போக்கைப் பார்த்தால்
பொற்சடையோன் புழுதிமண்ணாய் போமென்பாரே. 855

இம்முறைகளை காண வேண்டுமென்றால் தேவியை முறையாக பூசித்து ஈசனையும் பூசிக்க வேண்டும். அது மட்டுமின்றி சுத்த சைதந்யத்தை தினமும் நோக்கி வயிரவனை பூசித்து அஷ்டதிக் பந்தனம் அறிந்து செய்து முறையாக பார்த்தால் சகல துன்பமும் புழுதி மண்ணாய்ப் போகும்.

போமெனவே வழலையெல்லாம் கழற்றமக்காள்
புகழான அங்குஷ்ட்ட விரலினாலே
தாமெனவே கரிசாலைச் சாற்றை யூட்டித்
தனித்ததொரு அண்ணாக்கில் விரலையேற்றி
யோமெனவே கழட்டிவிட்ட வழலை வீழும்
வுத்தமனே யுதயத்தில் செய்வாய்நித்தம்
காமெனவே கண்சிவக்கும் கமலம் போலக்
கசடெல்லாங் கீழ்நோக்கிக் கழிந்து போமே. 856

உடலில் உள்ள வழலையை கழற்ற வேண்டுமானால் சுட்டை விரலில் கரிசாலை சாற்றைத் தொட்டு அண்ணாக்கில் பூசினால் வழலை விழும். இதை அனுதினமும் உதயகாலத்தில் செய்தால் கண்சிவந்து போகும். சகலவிதமான கசடும் கீழ்நோக்கி கழிந்து போகும்.

கழிந்துமலம் போவதற்கு மக்காள் கேளுங்
கலந்து வெண்ணெய் தர்ச்சனையில் தடவிக் கொண்டு
தழிந்துயிடம் சுற்றுமக்காள் அறுபது நூறாறு
தனிவலமாய்ச் சுற்றுமக்காள றுபது நூறாறு
ஒழிந்துமெதி ரேற்றுவர அறுபது நூறாறு
வுதையமொடு மாலையுச்சி மூன்றுநேரம்
அழிந்துமல மாமமொடு மெல்லாம் வீழும்
அப்பனே மதிபோலே முகமுமாமே. 857

மலம் கழன்று விழவேண்டுமானால் கரிசாலை சாற்றுடன் வெண்ணையை கலந்து மலவாயில் தடவி இடது சாரியாகவும் வலது சாரியாகவும் அறுபது முதல் நூறு சுற்று வரை சுற்ற வேண்டும் இவ்வாறு காலை மாலை உச்சி ஆகிய காலங்களில் செய்தால் சகல மலங்களும் கழன்றுவிழும். முகம் மதிபோலாகும்.

ஆமப்பா வுதையத்தில் பித்தம் போகும்
அப்பனே யுச்சியிலே வாதம் போகும்
போமப்பா மாலையிலே கபங்க ளெல்லாம்
பொற்சிலைபோல் தேகமுமே பொருந்து மூலம்
ஓமப்பா வோங்காரம் நெட்டிட் டேறும்
உத்தமனே நந்தியுட ஒளியுங் காணும்
வேமப்பா நல்வினை தீவினைகள் ரெண்டும்
விளங்கியதோ ரெட்சியங்கள் விலக்கிடாதே. 858

உதயத்தில் பித்தமும், உச்சியில் வாதமும், மாலையில் கபமும் விலகும். தேகம் பொற்சிலை போலாகும், ஓங்காரம் ஒளி பெற்று பிரகாசிக்கும். நந்தியின் ஒளி வெளிப்படையாய் தோன்றும் நல்வினையும் தீவினையும் அகன்றுவிடும். பிறகு லட்சியத்தை விட்டு விலகாமல் நில்.

விலக்காமல் வழலைமலங் கற்பமுண்டால்
வேதனையாம் சடத்துக்கு விழலாய்ப் போகும்
விலக்காமல் பாஷாண மூறலெல்லாம்
வேதையிட்டால் வானமில்லை வெறும் பாழாகும்
விலக்காம லித்தோஷங் குளிகையாகில்
வேதையில்லை கவனமில்லை விளங்கிப்பாரு
விலக்காமல் பெண்மாய மூலம்பார்த்தால்
வெளிச்சமில்லை யிருள்வந்து மேவிப் போமே. 859

வழலையும் மலமும் வாங்காமல் கற்பங்கள் உட்கொண்டால் கற்பங்கள் பாழாகும். எப்படி பாஷாணங்களின் தோஷத்தை விலக்காமல் வேதை செய்தால் வேதை பலியாதோ, எப்படி இரசத்தின் தோஷத்தை போக்காமல் குளிகை செய்தால் வேதையும் கெவுனமும் பலியாதோ அதேபோல் பெண் மாயையில் இருந்துக் கொண்டு மூலம் பார்த்தால் ஞானம் கிட்டாது. அக்ஞானம் என்ற இருள் மூடும்.

மேவியிந்த முற்காண்டம் வரிசை பார்த்தால்
வேதாந்தச் சிரோமணியாய் விரைந்து பாரு
ஆவியொன்று மொடுங்காது கற்பமுண்ணு
அப்பனே யஷ்டாங்க மணைந்து பாரு
பாவியென்று படையாதே கோபம் போக்கு
பலதொழிலைப் பாராதே யுப்பைப் பாரு
தாவியந்தப் பூரணத்தே மனத்தை யூட்டு
சகலசித்தாம் சத்தியந்தான் தவறிடாதே. 860

முதற்காண்டத்தை வரிசையாகப் பார்த்தால், நீ சிரோன்மணியாவாய். முறையாக கற்பமுண்டால் ஆவி அடங்காது (சாவு விலகும்). பிறகு அஷ்டாங்க யோகத்தை பார்த்துக் கோபத்தை போக்கி, உப்பு கட்டை அறிந்து மனதை பூரணத்தில் வைத்து நின்றால் சகல சித்தும் தவறாமல் பலிதமாகும். இது சத்தியம்!!!

தவறாதே பாஷாண வூறல் போகச்
சாற்றுறேன் பிள்ளைகளே சார்ந்து கேளு
கவறாதே மலசலமும் பாண்டத்தில் விட்டுக்
கைமுறையாய் வெடியுப்பு சீனங்காரம்
வுவறாதே சாரமுடம் மூன்றும் போட்டு
வுத்தமனே பாஷாண மூறப்போடு
உவராத மண்டலந்தா னூறினாக்கா
லோகோகோ வூறலெல்லா மொழிந்து போமே. 861

பாஷாணத்தின் தோஷங்கள் விலகுவதற்கு முறை சொல்கிறேன் கேள்! மலசலத்தை பாண்டத்தில் வார்த்து அதனுடன் வெடியுப்பு, சீனக்காரம், சாரம் இவை மூன்றையும் போட்டு இதில் பாஷாணத்தை ஊறவைத்தால் மண்டலத்தில் பாஷாணம் சுத்தியாகும்.

ஒழிந்தபின்பு சத்தாகும் செந்தூர மாகு
மோடுகிற வேதைக்கு முறவாய்த் தாக்கு
கழிந்தபின்பு நவலோகம் பொன்னு மாகும்
காட்டுகிற சாரணைக்காங் குருவுக்காகும்

ஒழிந்தபின்பு பாஷாண வாசங்கேளு
செய்தபின் முப்பத்து ரெண்டு ரெண்டு
பொழிந்தபின்பு பூமியிலே பிறக்கிறது கேளு
புகழான முப்பத்து ரெண்டுதானே. 862

சுத்தித்த பாஷாணம், சத்து முதல் செந்தூரம் வரை சித்தியாகும். நவலோகங்களில் சேர்த்தால் பொன்னாகும். சாரணைக்கும், குருவுக்கும் ஏற்றதாகும். பாஷாணங்களின் உற்பத்தியை கூறுகிறேன் கேள்! வைப்பினத்தில் முப்பத்திரண்டு பாஷாணமும் பூமியில் முப்பத்திரண்டு பாஷாணமும் ஆக அறுபத்து ரெண்டு பாஷாணமும் உண்டாயிற்று.

தானென்ற வறுபத்து நாலுதாதுஞ்
சந்தேகந் தீரநன்றா யூறல் போக்கும்
கோனென்ற குருசொல்ல வாதம் பாரு
கூட்டுகிற வினங்கண்டு கூட்டியாடு
கானென்ற கடுங்கார சாரங் கட்டும்
கைமுறையாய் லவணத்தை முன்னேகட்டு
வானென்ற மூலத்தை யூன்றிப்பாரு
வாதமென்றா லென்னென்று வருகுந்தானே. 863

அறுபத்து நாலு சரக்கையும் சந்தேகமற ஊறல் போக்கி, குரு சொல்லிய முறைப்படி, வாதம் பார்க்க வேண்டும். இனத்தோடு இனம் சேர்த்துகூட்டி வேதையாட வேண்டும். கடுங்காரத்தையும், சாரத்தையும், லவணத்தையும் முதலில் கட்டி மூலத்தில் மனதை நாட்டி பார்த்து வாதத்தை வா என்று அழைத்தால் ஏன் என்று கேட்டு வரும்.

வருகிறதோர் பாஷாண சுத்தியேதால்
வந்ததென்றால் சொல்லுகிறேன் மக்காள் கேளு
பருகிறதோர் கல்லுப்பு மூலத் தீயில்
பகையாமல் வெந்தழஞ்சி யமுரியாச்சு
பெருகிறதோர் புள்ளியெல்லாம் லத்தியாச்சு
பேணியிதன் ரெண்டின்பேர் மூத்தாளப்பா
அருகிறதோர் சரக்கெல்லாம் பெருகப்பண்ணு
மாகாத வூறலெல்லாங் கழற்றுந் தானே. 864

பாஷாணத்தின் சுத்தி எதனால் ஆயிற்று என்றால் கல்லுப்பானது மூலத்தீயால் வெந்து அழிந்து அமுரியாயிற்று. உடலில் உள்ள புளி எல்லாம் மலமாயிற்று. இம்மலசலத்தால் சகலசரக்கும் ஊறல்நீங்கி சுத்தியாயிற்று.

கழற்றிவைக்கு மூறலெல்லாங் கறுக்குந்தாது
கைமுறையாய்ச் சரக்கிலுள்ள களங்கம் போகும்
உழற்றிவைக்குங் கோபமெல்லா மொடுங்கப் பண்ணு
முத்தமனே வெகுதூர மோடப் பண்ணு
மழற்றிவைக்கும் நோய்போக்கிச் சித்தி பண்ணு
மாடுகிற தொழில்களெல்லா மடவாய் வாய்க்கும்
குளத்திலுள்ள நீர்வடித்த மதகு போலக்
கூறியதோ ருப்பைவிட்டால் வாதம் போச்சே. 865

ஊறலெல்லாம் கழன்ற தாது கறுத்த நிறங்கொள்ளும். சகல சரக்கின் களங்கமும் விலகும். சகலவிதமான கோபத்தையும் ஒடுக்கும். வேதையை வெகுதூரம்

வோடச்செய்யும். நோய்களெல்லாம் போக்கி, தேகத்தை சித்தியாக்கும். சகல தொழில்களுக்கும் ஆதிகாரணமாய் விளங்கும் உப்பை விட்டால் வேதை பலியாது.

சவுக்காரம்

வாதத்துக் காதியென்ற சவுக்காரந்தான்
வைக்கிறதோர் முறைகேளு மக்காள் மக்காள்
வேதத்துக் காதியென்ற சவுக்காரந்தான்
விரைந்துவொரு கிழிபோலே விளங்கக் கட்டி
நீதத்துக் காதியென்ற கல்லுச்சுண்ணம்
நிலையாகக் கிழிதனக்குக் கீழ்மேலிட்டு
பேதத்துக் காதியென்ற நீரை வார்த்துப்
பேராக நீற்றிமெள்ளக் கிழியைவாங்கே. 866

வாதத்துக்கு ஆதியான சவுக்காரம் செய்யும் முறையை கூறுகிறேன் கேள்! சவுக்காரத்தைக் கிழிபோல் கட்டி அக்கிழிக்கு மேலும் கீழும் கல்லுப்புச் சுண்ணத்தை கிழிபோல் கட்டி வைத்து நீர் ஊற்றி நீற்ற வேண்டும்.

வாங்கியிந்தப் படிமக்காள் சுண்ணத்துள்ளே
வைத்துவைத்து நீர்வாரு நூற்றுப் பத்து
ஓங்கியிந்தக் காரமெல்லா முள்ளேபுக்கி
யுத்தமனே வெண்ணெயெல்லா மொழிந்து போகும்
தேங்கியிந்தக் கட்டிமக்காள் தந்தம் போலாம்
சிறப்பாக விதிலேற்றக் காரங்கேளு
போங்கியிந்த அண்டநீர் பலந்தானொன்று
போட்டதிலே சுண்ணாம்புத் தண்ணீர் வாரே. 867

இதேபோல் நூற்றுபத்து முறை செய்தால் சுண்ணத்தின் காரமெல்லாம் உள்ளே ஒடுங்கி சவுக்காரம் எண்ணையைக் கக்கி கட்டி தந்தம் போல் இறுகும். இதற்கு காரம் ஏற்றும் முறையைக் கூறிகிறேன் கேள்!

வார்த்ததனைக் கரைத்துவைத்துத் தெளிவை வாங்கி
வாகாகத் தெளிவிலிட மருந்துகேளு
சேர்த்ததனைத் தெளிவிறுத்துச் சிரங்கை தானும்
சிறப்பான நாவியொடு வீரம் பூரம்
போர்த்ததனைச் சாரமொடு உரமும் சூதம்
புகழான சீனமொடு குருவண்டேதான்
சார்த்ததனிற் குக்குடத்தின் வெண்மலமும் புழுகும்
சார்வாக வெங்காரம் கூடக்கூட்டே. 868

கூட்டுகிற யெடையேது வென்றாயானால்
குறையாமல் வகையொன்று வராகனொன்று
மூட்டுகிற முன்தெளிவில் கரைத்துக்கூட்டி
முறையான பதினொன்று மருந்துமொக்க
வூட்டுகிற அண்டமக்கா ளைம்பத்தொன்று
வுடைத்ததன்றன் வெண்கருவை யிதிலேவாரு
ஆட்டுகிற எருக்கம்பால் சேரை வார்த்து
அடவாக மத்தித்து அப்பால் வையே. 869

அண்டநீரை பலம் ஒன்று எடுத்து அதனுடன் சுண்ணாம்புத் தணணீரை வார்த்து தெளிய வைத்து அத்தெளிவில் நாவி, வீரம், பூரம், சாரம், உரம், சூதம், சீனம், குருவண்டு, கோழியின் வெண்மலம், புனுகு, வெங்காரம் இவையாவையும் வகைக்கு வராகன் எடை சேர்த்து கலக்கி அந்நீரில் மேலும் ஐம்பத்திொரு முட்டையின் வெண்கருவை விட்டு எருக்கம் பால் சேரை வார்த்து மத்தித்து அப்பால் வைத்து,

வைத்துடனே தெளிவாகும் மூன்றுநாள் மக்காள்
வாய்திறந்து சொல்லாதே யண்டநீர்தான்
யித்துடனே ஆட்டலல்லோ சுண்ணத்தாட்டு
யிதைவிட்டால் கடுஞ்சுண்ண மென்பதில்லை
கைத்துடனே முன்வைத்த சவுக்காரத்தைக்
கலந்திந்த நீர்தோய்த்த ரவியில் போட்டுப்
பொய்த்துடனே போகாமல் தினந்தான் பத்து
பூட்டியிந்தச் செயநீரில் துவைத்துப் போடே. 870

போட்டுடனே சவுக்காரம் காரமேறும்
பொற்பூவும் வாசனையும் போலேயாச்சு
கோட்டுடனே சுண்ணாம்பு நீரில் வைத்துக்
குறையாம லிருசாமம் தீயை மூட்டு
மூட்டுடனே யெடுத்தாக்கால் பூப்போல் நிற்கும்
மூதண்ட சவுக்காரங் கடிதாஞ்சுண்ணம்
ஆட்டுடனே பூட்டெல்லா மிதனின் ஆட்டு
அறியாதான் வாதியல்ல அசட்டுமாடே. 871

மூன்றுநாள் சென்று தெளிவை வாங்கி இத்தெளிவில் முன்பு சுத்தி செய்து வைத்துள்ள சவுக்காரத்தைப் போட்டு துவைத்து ரவியில் காயவைக்க வேண்டும். இவ்வாறு பத்து நாள் துவைத்து துவைத்து காயவைக்க வேண்டும். இச்செய்கையினால் சவுக்காரம் காரமேறும் இச்சவுக்காரத்தை சுண்ணாம்பு நீரில் வைத்து இருசாமம் தீமூட்டி எரித்து வாங்கினால் சவுக்காரம் பூப்போல் கடுஞ்சுண்ணமாயிருக்கும். சகலவிதமான தொழிலும் இதனால் சித்தியாகும் இதை அறியாதவன் வாதியல்ல மாடாவான்.

அசட்டுமக்காள் சவுக்காரம் விட்டீரானா
லாகாகா வாதமெல்லாம் மண்ணாய்ப் போச்சு
அசட்டுமக்காள் சுண்ணாம்பு யெல்லாம் போச்சு
அரகரா வுப்பினிட ஆண்மை போச்சு
அசட்டுமக்காள் குருவென்ற ஆதிபோச்சு
அடுக்கடுக்கா யேறுகிற தொழிலும் போச்சு
அசட்டுமக்காள் மஞ்சளொடு சுண்ணாம்பு போச்சு
ஆச்சரியம் ரவியோடு மதியும் போச்சே. 872

மதியென்ற புத்திகெட்டு மக்கினமு மாகும்
மனமான ரவியெங்கே மயங்கிப்போகும்
பதியென்ற வுப்புக்குப் பலந்தான் போகும்
பறக்கிறதோர் குளிகைக்கு மிடுக்குப் போகும்
கெதியென்ற போதத்தில் மணங்கூடாது
கெடுகிறது வாதமெல்லாம் வழலையாலே
விதியென்ற சொல்லுக்கு ஆதியாச்சு
வேதையென்ற சொல்லெல்லாம் விழலாய்ப் போச்சே. 873

இச்சவுக்காரத்தை விட்டால் வாதிமெல்லாம் மண்ணாய்ப் போகும். எந்தச் சரக்கும் சுண்ணமானது. உப்பிற்கு பலம் இருக்காது. குருமருந்து பலியாது. ஆறுதளம் ஏறுதல் என்பது முடியாது. மேலும் ரவிமதியும் அழிந்துபோகும். மதியான புத்தி மங்கியும் மனமான ரவி மயங்கியும் போகும். உப்பின் பலம் குறையும். குளிகையின் சக்தி குன்றும், போதத்தில் மனம் லயிக்காது. வாதிமெல்லாம் விழலாய்ப் போகும். விதி என்ற வார்த்தைக்கும் இதுவே ஆதி.

போகாமல் நிறுத்தவென்றால் வழலையை முன்பாரு
புகழான சுண்ணமுமாம் கட்டுமாகும்
வேகாமல் வேகுமப்பா சாரத்தூட்டி
விரைந்தாடச் சாரமெல்லாம் சலமாய்ப் போகும்
வாகாரும் சலத்துள்ளே கற்பூரம் போட்டு
வாரியிட்டு வூதுமக்காள் சுண்ணமாகும்
பாகாரும்·சுண்ணத்தில் வீரம் போட்டுப்
பதிமேலே பூசியொரு புடத்தைப் போடே. 874

புடமொன்றில் பறியப்பா சுண்ணமாகும்
போட்டிட்டா லத்தோடே யெல்லாங் கட்டும்
கடமொன்றிற் கண்டரவி கடங்கோடிக்குள்
கண்டதது போற்கலந்து ஆடுஆடு
விடமொன்றி யுண்டசிவ னாரெண்ணாதே
வேதாந்த முடிவான வழலைச் சுண்ணந்
திடமொன்றி வழலையைத்தான் பாரு மக்காள்
செப்பார்கள் பெரியோர்கள் செப்பார்தானே. 875

வாதத்தை விழலாய்ப் போகாமல் நிறுத்த வேண்டுமென்றால் வழலையைச் செய், இவ்வழலையால் சகல சரக்கும் கட்டி சுண்ணமாகும். வழலையை சாரத்துடன் சேர்த்து தாக்கினால் சாரம் சலமாய்ப் போகும். இச்சலத்தில் கற்பூரத்தைப் போட்டு அடுப்பில் வைத்து ஊதினால் சுண்ணமாகும். இச்சுண்ணத்தில் வீரம் சேர்த்து தங்கத்தின் மேல் பூசி புடம் போட்டால் தங்கம் சுண்ணமாகும். இச்சுண்ணத்தால் சகல சரக்கும் கட்டும் விஷத்தை உட்கொண்ட சிவன் யார் என்று எண்ணாதே. வேதாந்த முடிவான வழலைச் சுண்ணமே சிவனாவார்.

செப்பாதே வல்லோர்க னூலுக்குள்ளே
தெரியாமற் புதைப்பார்கள் வழலையொன்றாய்
ஒப்பாதே யென்னூலை வழலைதன்னை
யொருசொல்லு மொதுக்காமல் வெளியாய்ச் சொன்னேன்
தப்பாதே கடுங்கார மேத்துஞ் சொன்னேன்
தவறாம லரியினிட கடிகை சொன்னேன்
வுப்பாமற் புளிகித்துக் கெடுக்க வேண்டாம்
ஒகோகோ பிள்ளைகளே யொடுங்கி யாடே. 876

வல்லோர்களான சித்தர்கள் தங்கள் நூலில் வழலை முறையை மறைத்துப் பாடி தெரியாமல் புதைப்பார்கள். என்னூலில் வழலை முறையை மிக தெளிவாக பாடியுள்ளேன். நான் கூறிய முறைப்படி சவுக்காரத்திற்கு கடுங்கார மேற்றி தாயை அடிபணிந்து காக்க வேண்டும். இம்முறையை நீங்கள் தவறாக பொய்ச் சொல்லி திரியாமல் அடக்கமாக இருந்து செய்யுங்கள்.

ஆடுகிற வாதத்துக் கிதுதான் தெப்பம்
அதிகமாம் வேலைக்கு மிதுதான் தெப்பம்
ஓடுகிற குளிகைக்கு மிதுதான் தெப்ப
மொடுங்காத சித்திக்கு மிதுவே தெப்பம்
நாடுகிற போதத்துக் கிதுவேதெப்பம்
நலங்காமல் மனதுகட்ட யிதுவே தெப்பம்
கூடுகிற மூலத்துக் கிதுவே தெப்பம்
கொள்ளையிட்டு ஞானத்திற் கூடலாமே. 877

வாதத்திற்கும், குளிகைக்கும், சித்திக்கும், ஆனந்த போதத்திற்கும் மனதை கட்டுவதற்கும் மூலத்தை காண்பதற்கும் ஞானமடைவதற்கும் இதுவே, அதாவது சவுக்காரமான வழலையே தெப்பமாகும்.

கூடலாம் வழலையுட சுண்ணங் கண்டால்
கூடாது வழலையுட சுண்ணம்போனால்
ஆடலாம் வழலையுட சுண்ணங் கண்டால்
ஆட்டில்லை வழலையுட சுண்ணம் போனால்
ஊடலாம் பூரணத்தில் வழலையாலே
யூட்டில்லை வழலை விட்டால் யோகத்துள்ளே
நீடலாம் சமாதியிலே வழலையாலே
நேர்ந்ததில்லை வழலையென்றா னெறிதான் போச்சே. 878

வழலையுட சுண்ணத்தால் மனம் ஒரு நிலையில் கூடும். வாதம் சித்தியாகும். பூரணத்துடன் கலந்து உறவாடலாம். யோகத்திலும் சமாதியிலும் லயிக்கலாம். வழலை சுண்ணம் சித்தியாகவில்லையெனில் இவை யாவும் கை கூடாது.

நெறிபோச்சு குறிபோச்சு வழலை போச்சு
நேராகப் பறக்கிறதோர் குளிகை போச்சு
பொறிபோச்சு மதிபோச்சு புத்தி போச்சு
புளகித்து யேறுகிற மனமும் போச்சு
பறிபோச்சு புளிபோச்சு வுப்புப் போச்சு
பலதொழிலாய்ப் பாடியதோர் பாட்டுப் போச்சு
கறிபோச்சு கறிக்கிட்ட சோறு போச்சு
கைமுறையாய் வழலைவிட்ட கசடர்க்கென்னே. 879

நெறி, குறி, கெவுனம், மதி, புத்தி, பொறி, ஆனந்த போதம், வாதகாவியம், உணவு இவையாவும் வழலை செய்யாமல் விட்ட மானிடர்களுக்கு வீணாய்ப் போகும். (இத்தனையும் பெற்றிருந்தாலும் அவையாவும் அழிந்து இறந்து போவான்).

கசடரே கல்லுபபு கட்டினா லென்ன
மைமுறையா யிப்படியே காரமேற்று
கசடரே வெறுவுப்பு சுண்ணமானால்
கடுவேதை யோடாது கொஞ்சங் காணும்
கசடரே கடுங்கார மேறிற்றானால்
கைவிட்ட சூஸ்திரமாய் வாதமாடும்
கசடரே யுப்பைவிட்டு வாதம் பார்த்தால்
கடைப்புழுதி வாயில்வந்து கலக்குந்தானே 880

அதேபோல் கல்லுப்பை காரமேற்றி கட்ட வேண்டும். காரமேற்றாமல் கட்டினால் அனைத்தும் வீணாகும் வாதம் சிறிதளவே ஓடும். கடுங்காரமேறினால் சகலமும்

பலிதமாகும். அதற்காக உப்பிறகு காரமேற்ற முடியவில்லை என்று மயங்கி உப்பை நீக்கி வாதம் பார்த்தால் வாதம் பலியாது. வாயில் மண்தான் விழும்.

கல்லுப்புக் கட்டு

கலங்காமற் கல்லுப்புக் கட்டு சொல்வேன்
கைமுறையாய் வரிசையுடன் கண்டுபண்டும்
வலங்காமல் வெடியுப்பு பலந்தான் பத்து
மருவிடுநீ பிணியதனைப் பலந்தான் பத்து
விலங்காமல் சீனமது பலந்தான் ரெண்டு
வெருவியதோர் சாரமது வராகன் ரெண்டு
சிலங்காமல் கல்லுப்பு வராகன் மூன்று
சேரவொன்றா யிடித்து நன்றாய்த் தீயைமூட்டே 881

மூட்டையிலே வெந்துருகிச் சுண்ணமாகும்
மூதண்டங் கிழித்தாகு மினங்கள் சுண்ணம்
ஆட்டையிலே பனியில் வைக்கச் செயநீராகு
மப்பனே யிந்நீரி லுப்பைத் தீர்த்து
வூட்டையிலே யேழுதரம் வெய்யிலிலே போடு
ஓகோகோ கல்லுப்புக் குயிரே போச்சு
பூட்டையிலே யுப்புக்கு லேபனத்தைக் கேளு
பொற்சடையோ னென்றாய்க்குப் புகன்றவாறே. 882

மயங்காமல் கல்லுப்பின் கட்டு முறையைக் கேள்! வெடியுப்பு பத்து பலம் புளி பத்து பலம், சீனம் ரெண்டு பலம், சாரம் இரண்டு வராகன், கல்லுப்பு மூன்று வராகன் இவை அனைத்தையும் ஒன்றாய் கூட்டி அரைத்து அடுப்பிலிட்டு தீமூட்டி எரித்தால் வெந்து சுண்ணமாகும். இச்சுண்ணத்தை பனியில் வைத்தால் செயநீராகும். இச்செயநீரில் உப்பை தோய்த்து தோய்த்து ஏழு தரம் வெய்யிலில் போட்டால் கல்லுப்பு மடிந்து போகும். இவ்வுப்பிற்கு மேல் பூசம் மருந்தைக் கேள். இம்முறையை பார்வதிக்கு சிவன் சொன்னதைப்போல் சொல்கிறேன்.

வாறான சாரமொரு பலந்தான் போடு
மருவியதோர் சீனமொரு பலந்தான் போடு
கூறான வீரமது வராகன் ரெண்டு
கூடயிடு வராகன் ரெண்டு வழலைச் சுண்ணம்
தாறான வெடியுப்பு நீரை வார்த்துத்
தனியரைக்க நெட்டேறும் சாரவேகம்
வீறான சாரமொடு காரம் வீரம்
மெய்யழிந்து வுயிர்கலங்கி விரைந்து சாமே. 883

சாகிறதும் சாகாதும் காணவென்றால்
சமத்ததிக மானமக்காள் சாற்றுறேன் யான்
வேகிறதுக் கிதையெடுத்துத் தீயில் வைத்தால்
விளங்கியதோர் காரத்தின் பொங்கு மில்லை
ஆகிறதோர் சாரத்தின் புகைச்சலில்லை
யாச்சரியம் வீரத்துக் கிசைவோயில்லை
போகிறதுக் கிதுபோதும் மக்காள் கேளும்
புகழாக நெட்டடங்க ஆட்டு ஆட்டே.. 884

சாரம் ஒரு பலம், சீனமொருபலம், வீரம் இரண்டு வராகன், வழலைச் சுண்ணம் இரண்டு வராகன் இவையாவையும் வெடியுப்பு நீரால் நெட்டேறும் வரை அரைக்க வேண்டும். முறையாக அரைக்குங்கால் சாரம், காரம், வீரம் இவை மூன்றும் உயிர் கலங்கி விரைந்து சாகும். சரக்குகள் இறந்து விட்டதா இல்லையா என்று பார்க்க வேண்டுமாயின், அரைத்த சரக்கில் ஒரு துளி எடுத்துத் தீயில் வைத்தால் காரம் பொங்காமலும் சாரம் புகையாமலும், வீரம் உருகாமலும் அப்படியே வைத்தபடி இருக்கும். இதுவே சரக்குகள் மடிந்ததற்கு அடையாளமாகும்.

ஆட்டியிதையப் புறத்தே வைத்துக் கொண்டு
அப்பனே கல்லுப்பு பலந்தான் ரெண்டில்
மூட்டியிதை யொவ்வொன்றாய்ப் பூசிப்பூசி
முசியாமல் ரவிக்குள்ளே யுலரப் போடு
வூட்டியிதை யேழுதின முலர்ந்த பின்பு
வுத்தமனே பிரண்டையுப்பு முவரி மண்ணுங்
கூட்டியிதை யரைத்து நன்றாய் வில்லைபண்ணிக்
குறையாமற் கல்லுப்பை யிதற்குள் வையே. 885

வைத்தவுப்பு மேலிலொரு வில்லை போட்டு
மருவியொரு வோட்டிலிட்டே யோடு மூடிக்
கைத்தவெரு கனமாக அடுக்கிப் போடு
கைமுறையாய் வெந்தபின்பு எடுத்துப் பாரு
மொய்த்தவுப்பு கவசமொடு வெலும்பு போலே
முத்துப்போல் தந்தம்போல் கட்டும் கட்டும்
நைத்தவுப்பை வாங்கி மக்காள் காரமேற்று
நன்றுநன்று கடுங்கார மேறும்பாரே. 886

அரை மருந்தை புறம்பே வைத்துக் கொண்டு பிறகு கல்லுப்பு இரண்டு பலம் எடுத்து அதன்மேல் முன் அரைத்த மருந்தை கவசமாக பூசி உலர வைத்து ஏழு தினம் காய்ந்த பின்பு பிரண்டை உப்பையும் உவர் மண்ணையும் அரைத்து வில்லையாய் செய்து இவ்வில்லைக்குள் காய வைத்துள்ள கல்லுப்பை வைத்து வோட்டிலிட்டு மூடி சீலை செய்து கனமாக ஒரு புடம் போட்டு புடம் ஆறியபின் எடுத்துப்பார்த்தால் தந்தம்போல் இறுகி நிற்கும். இவ்வுப்பிற்கு காரமேற்றினால் கடுங்காரம் ஏறும்.

பாரப்பா காரமெல்லா முப்பிலேற்றிப்
பரிவாக மணிமணியாய்த் தங்கமாகத்
தாரப்பா சுண்ணாம்பு முப்புங்கூட்டிச்
சாரித்துப் புடம்போட்டுக் குகையாய்ப் பண்ணி
வாரப்பா குகைநிரம்ப விந்தவுப்பை
வளமாக மேல்மூடிச் சீலைசெய்து
ஓரப்பா கரியிலிட்டு வூதுவூது
வுத்தமனே கடுஞ்சுண்ண வுப்புமாச்சே. 887

காரம் ஏற்றிய உப்பை மணிமணியாய் வாங்கி வைத்துக் கொண்டு சுண்ணாம்பும் உப்பும் சேர்த்து புடம்போட்டு அப்புடம் போட்ட சுண்ணத்தால் குகைபோல் செய்து அதனுள் மணியை வைத்து மூடி சீலைசெய்து கரியிலிட்டு ஊதினால் கடுஞ்சுண்ணமாகும்.

உப்பென்றால் வாய்க்கெளிதோ மக்காள் மக்காள்
உருப்படவே கட்டரிது கட்டினாலும்
கப்பென்ற காரமதி லேற்ற மாட்டார்
கைமுறையா யேற்றுதற்குக் கருக்கண்டாலும்
செப்பென்ற குகை பண்ணி யூதமாட்டார்
சேர்ந்திந்தக் குகையறிந்து வூதினாலும்
கொப்பென்ற வுப்பினுட வர்மங் காணார்
கோடானு கோடியென்றாற் சூசுநாவே. 888

உப்பு என்று வாயால் எளிதாக கூறலாம். ஆனால் செய்து பார்த்தால் மிகவும் கடினம் என்பது புரியும். சிலபேர் அறிந்திருக்க மாட்டார்கள். அறிந்திருந்த சிலபேர் கட்டு முறையை அறிந்திருக்க மாட்டார்கள். கட்டுமுறையை அறிந்தவர்கள் அதற்கு காரம் ஏற்றும் வகை தெரிந்திருக்காது அப்படி காரம் ஏற்றினாலும் குகை அறிந்து ஊத மாட்டார்கள். அப்படி ஊதினாலும் அதனுடைய பயன்முறை தெரியாது. கோடிக்கு ஒருவர்தான் அறிந்திருப்பர்.

கூசாதே யுப்பினுட சுண்ணமொன்று
குறையாதே ரெண்டெடைதான் சாரம்போடு
ஆசாதே யரைக்கரைக்கச் சலமுமாகும்
அப்பனே சலத்தினுள்ளே வீரம்பூர
மோசாதே கூட்டியிதை வைத்துக் கொண்டு
வுத்தமனே வெண்காரம் சீனம் தோய்த்து
வாசாதே ரவியிலிட்ட காரம்சீனம்
வயிரம்போல் ரெண்டினமு மாறுந்தானே. 889

கல்லுப்பு சுண்ணம் ஒரு பலம், இரண்டு எடை சாரம், இவை இரண்டையும் சேர்த்தரைத்தால் மருந்து சலமாகும். இச்சலத்தில் வீரமும் பூரமும் போட்டு வைத்துக் கொண்டு இதில் வெண்காரத்தையும், சீனத்தையும் தோய்த்து ரவியில் இட்டால் இரண்டும் வயிரம் போல் இறுகி கட்டும்.

மாறுகிற விருகாரம் முள்ளைப் போலே
மாட்டியிதிற் கடுங்கார மேற்றுவேற்று
கோறுகிற சுண்ணாம்புக் குகையிலிட்டுக்
குமட்டிநன்றா யூதிடவே கடிதாஞ்சுண்ணம்
வாறுகிற வாதமெல்லாங் காரவாழ்வு
மகிமைசொல்ல முடியாது மகத்வமெத்த
ஆறுகிற வெனையாண்ட போகமூர்த்தி
யதிகமிரு காரமென வரைந்திட்டாரே. 890

இவ்விரண்டு வகை சரக்கிற்கும் (வெண்காரத்திற்கும் சீனத்திற்கும்) கடுங்காரம் ஏற்றி குகையில் வைத்து ஊதினால் கொடிய சுண்ணமாகும். இவ்விரண்டு வகை சுண்ணத்தால் சகல வாதமும் பலிதமாகும் என்று எனது குருவான போகர் எனக்கு உபதேசம் செய்தார்.

அரைந்திட்ட காரமொன்று சுண்ணமொன்று
அப்பனே சாரமது ரெண்டும் போடு
வுரைந்திட்டு அரைக்கையிலே சலமாய்ப் போகும்
வுத்தமனே யிந்நீரில் வீரங்கூட்டித்

திரைந்திட்ட சூடனைத்தான் துவைத்துப் போடு
சேர்ந்ததொரு கற்பூரம் துவைத்துப் போடு
இரைந்திட் டிரண்டுமெப்பா விறைத்துப் போகு
மேழுதரம் தோய்த்தெடுத்து ரவியிற்போடே. 891

வெண்காரச் சுண்ணம் ஒரு பலமும் சாரம் இரண்டு பலமும் சேர்த்தரைத்தால் சலமாய்ப்போகும். இச்சலத்தில் வீரம் போட்டு சூடனையும் கற்பூரத்தையும் துவைத்து துவைத்து ஏழுதரம் ரவியில் காயப்போட்டு,

போட்டிரண்டும் வெவ்வேறாய் மக்காள்கேளு
புகழான சுண்ணாம்புக் குகையிலிட்டு
ஆட்டிரண்டு மூதிடவே சுண்ணமாகு
மம்மம்மா கடுஞ்சுண்ணம் சூடன்பூரம்
மூட்டிரண்டின் வேதை சொல்ல முடியாதென்றால்
முந்திரியி னொளிகண்டாற் பறந்தசூடன்
கூட்டிரண்டும் சுண்ணாம்பாய் நின்றதானாற்
கூப்பிட்டாற் கும்பிடுமே வாதந்தானே. 892

தனித்தனியாய் சுண்ணாம்புக் குகைக்குள் வைத்து ஊதினால் சுண்ணமாகும். இச்சுண்ணத்தால் ஏற்படும் வேதை முறையை வாயால் விவரிக்க முடியாது. சூடன் சுண்ணத்தையும் பூரச்சுண்ணத்தையும் சேர்த்து வேதைப் புரிந்தால் வாதம் நமக்கு வணங்கும்.

தானென்ற சூடனுட சுண்ணாம்புக்குள்ளே
சவ்வீரம் போட்டிழைக்க ரத்தமாகும்
கோனென்ற துரிசியின்மே லிதனைப்பூசிக்
குலாவியதோ ரவியிலிடப் பச்சைசாகும்
ஆனென்ற குகையிலிட்டு வூதிப்போட
அரகரா கடுஞ்சுண்ணம் துரிசியாச்சு
வானொன்றி யாடலாம் துரிசிதொட்டு
வாதியெல்லாங் கடைமயிரா மக்காள்தாக்கே. 893

சூடன் சுண்ணத்துடன் சவ்வீரத்தை சேர்த்து இழைத்தால் இரத்தம் போல் சிவக்கும். இதை துரிசின் மேல் பூசி ரவியில் இட்டால் துருசு மடிந்து சாகும். இதை குகையிலிட்டு ஊதினால் கடுஞ்சுண்ணமாகும். இத்துரிசு சுண்ணத்தை தொட்டு வாதம் புரிந்தால் கோடி வரைபாயும்.

தாக்கிடவே துரிசிதன்னைச் சூதங்கட்டும்
தனித்தனியே சரக்கெல்லாம் கத்திச்சாகும்
போக்கிடவே வேதையிடும் முறையோ சொல்ல
பூமியுள்ள பனையெல்லாம் போதா போதா
வாக்கிடவே சிவகாமி விரிந்த மார்க்கம்
மன்னான சிவனுக்கு மயக்கமாச்சு
ஆக்கிடவே சோறுகறி வேண்டிலுப்பு
அணுகாட்டாற் சப்பென்ற ததுபோலாச்சே. 894

இத்தூரிசால் சூதம் கட்டும். சரக்கெல்லாம் மடிந்து சாகும். தூரிசுச் சுண்ணத்தால் செய்யப்படும் வேதை முறையை எழுதுவதற்கு பூமியிலுள்ள பனவோலைகள் போதாது. பார்வதிக்கு விரிவாகச் சொல்லிய சிவபெருமானும் இத்தூரிசை பற்றி கேட்டவுடன் மயக்கம் அடைந்தார். சாப்பாட்டில் உப்பில்லை என்றால் சப்பென்று இருக்கும். அதேபோல் தான் உப்பை விட்ட வாதமும்.

ஆச்சப்பா வுப்பைவிட்ட சுண்ணமெல்லா
மாறலுக்கு அப்புறத்தே யெறிந்துபோடு
போச்சப்பா வுப்பைவிட்டால் வாதம்பாழாய்ப்
பொன்னுக்கு வித்தேது வுப்புவுப்பு
வாச்சப்பா வுப்புமணி நீரிற்றானால்
வாதமென்ன வயதென்ன வளருங்கோடி
ஏச்சப்பா வுப்புமெள்ள நழுவிற்றானா
லேதுமில்லை சூனியமாய் வாதம் போச்சே. 895

உப்பில்லாமல் செய்த சுண்ணமெல்லாம் உபயோகமற்றதாகும். ஆகவே அதை தூர எரிந்துவிடு. உப்பு இல்லாமல் வாதம் பார்த்தால் வாதம் மண்ணாய்போகும். பொன்னுக்கு ஆதி கல்லுப்பாகும். இக்கல்லுப்பு சுண்ணமானால் இதைக் கொண்டு செய்யப்படும் தங்கத்தின் மாற்றுக்கு அளவே இல்லை. கல்லுப்பு நழுவினால் அனைத்தும் சூனியமாகும்.

வாதமொன்றோ போனதுவு மக்காள் கேளு
மருவியதோ ருப்பைவிட்டால் விந்துநாசம்
சேதமொன்றோ சீவன்தான் திஷ்டிநாசம்
செயலான ருசிகளெல்லாம் சேரநாசம்
காதமொன்றோ நடப்பதற்குக் காலேநாசம்
கையோய்ந்து மெய்யோய்ந்து களைமிக்காகும்
ஓதமொன்றோ வூற்றிருந்து சடமேநாறும்
உப்பைவிட்டா லொன்றுமில்லை யொக்கப்பாழே. 896

கல்லுப்பு இல்லாமல் போனால் விந்து நாசமாகும். சீவனும், பார்வையும் குறையும். அதுமட்டுமில்லாமல் ருசிகள் விலகும், கால் கடுக்கும், கை குடையும், உடல்நொந்து நாற்றம் உண்டாகும். இவ்வளவு ஏன், உப்பை விட்டால் அனைத்தும் பாழாகும்.

பாழாச்சு வுப்பைவிட்டா லென்றேமக்காள்
பரிவான கற்பத்துக் காகாதுப்பு
வூழாச்சு வுப்பிட்ட செந்தூரத்தை
யுண்ணலாம் வெளியுப்புக் காகாதென்றேன்
நாழாச்சு மாங்கிசத்தி லுப்பைப் போட
நலம்பெறவே விஷநீரை வடித்துப் போடும்
ஆழாச்சு செயலவண மதினாற்காயம்
அரகரா வயிரம்போ லிறுகுந்தானே. 897

உப்பில்லாமல் போனால் கற்பம் பாழாகும். (கட்டாத உப்பு கற்பத்தை நாசம் செய்யும்) உப்பிட்ட செந்தூரம் கற்பத்திற்கு ஆகும். (கட்டாத உப்புச் செந்தூரம் கற்பத்திற்கு

ஆகாது) முறையாக கட்டிய உப்பை மாங்கிஷத்தில் (மாம்ஸத்தில்) போட்டால் அதில் உள்ள விஷநீர் கழியும். செயலவணத்தால் காயம் இறுகிக் கல் போலாகும்.

இறுக்கிவைக்கும் செயலவணந் தின்றாயானால்
எழும்பலாம் கேசரத்தில் மதியின் மட்டும்
தறுக்கி வைக்கும் விதியெழுத்தைத் தள்ளிப்போடும்
சாகாமல் பண்ணுவிக்கும் சட்டைபோக்கும்
முறுக்கிவைக்கும் சடத்தை நன்றாய் வயிரம்போலே
மூச்சாட வொட்டாது மூலத்தேற்றும்
மறுக்கிவைக்கும் நித்திரையை வரவொட்டாது
மகத்துவந்தான் கட்டினதோர் லவணத்தாட்டே. 898

செயலவணத்தை (கட்டிய உப்பை) முறையாக உட்கொண்டால் குண்டலி மூலத்திலிருந்து எழும்பி சகஸ்ராரம் வரை செல்லும். விதியின் எழுத்தான தலை எழுத்தை அகற்றும். (மாற்றும்) சாவை அழிக்கும். சட்டைத் தள்ளும், தேகத்தை வயிரம் போலாக்கும். மூச்சை வெளியே பாயவிடாமல் மூலத்தில் அடங்கச் செய்யும். நித்திரையை போக்கும். இவையாவும் கட்டிய உப்பால் என்றறிக.

ஆட்டான வுப்பைவிட்டு வுப்பையுண்டால்
அப்பனே வேருவையிற் கக்கிப்போடும்
ஊட்டான அமுரியிலே யிறங்கிப்போகும்
உவந்துவுண்ட வுப்பாலே நரைமெத்தாகும்
கூட்டான புளியாலே திரைமெத்தாகும்
குலாமறையோ புளியுப்பைக் கொண்டு தின்பார்
பூட்டான வுப்புமக்காள் வேண்டிற்றானால்
புகழ்பெறவே கட்டியுப்பைப் பொசித்திடாயே. 899

சாதாரண உப்பைத் தின்றால் அது வேர்வையின் வழியாகவும். சிறுநீரின் வழியாகவும் வெளியேறும். அதுமட்டுமின்றி உப்புடன் சேர்ந்த புளியாலே நரை திரை மூப்பு ஆகமூன்றும் உண்டாகும். இதை அறியாமல் உலக மக்கள் உப்பும் புளியும் தின்பார்கள். உனக்கு உப்பின்மேல் ஆசையிருந்தால் கட்டிய உப்பை உட்கொள்.

பொசிக்க நன்றோ வாகாதோ வென்றால் மக்காள்
புகழான கல்லுப்பு கட்டிற்றானால்
மசிக்கவிந்தக் கல்லுப்பைச் சூதத்தூட்டு
வார்போலே யடிபட்டு வுண்டையாகும்
ஒசிக்கவிந்தச் சூதத்தை நவலோகத்தி
லூட்டையிலே பொன்னாகும் பொன்முன்னூட்டு
அசிக்கையிலே சிவவிந்து கட்டினாற்போ
லரகரா சிவனுள்ளே கட்டிப்போமே. 900

கட்டிய உப்பு என்பதை எப்படி அறிவது. மேலும் அது உடலுக்கு ஆகுமா ஆகாதா என்று எப்படி அறிய வேண்டும் என்றால் கேள்! கட்டிய உப்பை சூதத்துடன் சேர்த்தால் சூதம் கட்டிப்போகும். இக்கட்டியசூதத்தை நவலோகத்தில் கொடுத்தால் பொன்னாகும். இதுவே உப்பின் தரத்தை அறியும் மார்க்கமாகும். இவ்வாறு சோதித்த உப்பை உட்கொண்டால் ஜீவன் உள்ளே நிற்கும். காயம் அழியாது.

கட்டிப்போம் சூதமென்று வாதமாண்பர்
கைமுறையாய்த் தழைகளெல்லாங் கசியக் கொட்டி
யொட்டிப்போம் சூதமது கல்வத்தாட்டி
யோகோகோ வெண்ணையைப்போ லாச்சென்பார்கள்
தொட்டிப்போம் சூதமது ரவியில் வைத்தால்
செணத்தோடி யிதுநல்ல சுத்தியென்பார்
மட்டிப்பெண் சூதத்துக்குத் தண்ணீர்வார்த்த
மதிகெட்ட வாதிகளுக் கடுத்தவாறே. 901

இவ்வாறன்றி சூதத்தைக் கட்டி வாதம் செய்தேன் என்பார்கள். அதாவது இலைதழைகளை கொண்டு சூதத்தைக் கட்டி வெண்ணையாக்கி ரவியில் வைத்து சுத்தியாக்கி வாதம் பார்த்தேன் என்பார்கள். இப்படிப்பட்ட வாதிகள் மதியில்லாதவராவார்.

வாறான துரிசியுட சுண்ணமொன்று
மருவியதோர் வீரமது சமனாய்க்கூட்டி
தாறான பறித்தகட்டின் மேலேபூசித்
தணலிலிட்டு வூதையிலே தங்கம்நீறும்
கூறான விதுரெண்டில் தாளகத்தைக்கூட்டுக்
குலாவியந்தப் பறிமேலே தடவியூது
வீறான தாளகந்தான் வங்கம்வங்கம்
விரைந்துவிது விளைந்தவிடம் வெள்ளைநீறே. 902

துருசு சுண்ணத்துடன் வீரத்தைச் சமஅளவு கூட்டி தங்கத்தகட்டின் மேல்பூசி நெருப்பிலிட்டு ஊதினால் தங்கம் சுண்ணமாகும். இச்சுண்ணத்தை இரண்டு எடை எடுத்து இதனுடன் தாளகத்தைச் சேர்த்தரைத்து தங்கத் தகட்டின் மேல் பூசி ஊதினால் வங்கமாகும். மேலும் இத்தங்க சுண்ணம் பட்ட இடமெல்லாம் சுண்ணமாகும்.

நீறான தங்கத்தில் வேதைமக்காள்
நிமிஷத்தி லினிச்சாகு மெல்லாஞ்சாகு
மாறான கவர்போலக் கோடிவித்தை
யடிக்கடிதான்சொல்லவென்றா லனேகம்பாட்டாம்
வீறான பறியாகுஞ் சுண்ணத்தோடே
வீரமிட்டு மத்தித்தால் ரெத்தமாகும்
தாறான விதுரெண்டும் வங்கத்தில் தோய்த்துத்
தணலிலே போட்டிடவே தவளநீறே. 903

இத்தங்கத்தில் வேதை செய்து பார்த்தால் வேதை கைக்குள்ளாகும். இத்தங்கச் சுண்ணத்தால் சகல சரக்கும் சாகும் இதைப்பற்றி கூறவேண்டுமானால் அதிக பாட்டுபாட வேண்டும். தங்க சுண்ணத்துடன் வீரம் சேர்த்து மத்தித்தால் ரெத்தம் போல் சிவக்கும். இதை வங்கத்தின் மேல்பூசி தணலில் வாட்டினால் வங்கம் சுண்ணமாகும்.

தவளமென்ற வங்கத்தின் சுண்ணத்தோடே
சாரித்தச் சவ்வீரம் தங்கத்தூட்டு
தவளமென்ற தங்கமங்கே நீறிப்போகும்
சாதகத்தைச் சொல்லறியேன் தங்கப்போக்கில்

தவளமென்ன நூறுதொந்தம் வங்கத்தங்கம்
சார்ந்தேறும் நூறென்றேன் கோடிமட்டும்
தவளமென்ற வங்கத்தை நிமிளைகூட்டத்
தப்பாது பஸ்பம்போல் தவளமாமே. 904

வங்கச் சுண்ணத்துடன் சவ்வீரம் கூட்டித் தங்கத்துடன் சேர்த்து வாட்டினால் தங்கம் சுண்ணமாகும். இவ்வங்கச்சுண்ணத்தை நூறுமுறை தங்கத்துடன் சேர்த்து தொந்தித்தால் கோடி வரை மாற்று உண்டாகும். வங்கச் சுண்ணத்துடன் நிமிளையைக் கூட்டினால் நிமிளை தவளம்போல் பற்பமாகும்.

பற்பம்போல் நிமிளைநின்றால் மக்காள்மக்காள்
படுமுன்னே சூதம்சாம் தங்கம் சாகும்
பற்பம்போல் நிமிளைபட்டால் வங்கம்நீறும்
பாருமக்காள் நிமிளைபட்டால் சாரம்சாகும்
பற்பம்போல் சார்பரிது கண்டர்சுண்ணம்
பாட்டனுட மூட்டென்ன துரிசியாட்டு
பற்பம்போல் துரிசிநின்றால் சாக்ஷாதீசன்
பறக்கிறதோர் குளிகைக்காம் சிங்கிக்காமே. 905

நிமிளை பற்பமானால் சூதம், தங்கம் இவை இரண்டும் நிமிடத்தில் மடிந்து சாகும். மேலும் நிமிளைப் பற்பத்தால் வங்கம் சுண்ணமாகும். சாரம் சாகும் துரிசும் சுண்ணமாகும். இத்துரிசு சுண்ணத்தால் வேதைமுதல் ஆகாயத்தில் பறக்கும் குளிகை வரை சித்தியாகும். மேலும் சிங்கியும் சித்தியாகும்.

ஆமிந்த துரிசிக்கு ஒப்பார் சொல்வேன்
அகண்ட பரிபூரணந் தானப்பா வொப்பு
ஓமிந்தத் துரிசியினாற் குளிகைகட்ட
வுத்தமனே சொரூபமுதற் பதினாறாகும்
வேமிந்த துரிசிபட்டா லண்டங்கோடி
வேதையிதில் விரிக்கவென்றால் வெள்ளேடில்லை
சாமிந்த துரிசிக்குச் சகலதாதும்
தாயான வுன்மனையாள் தவளத்தாட்டே. 906

இத்துரிசுக்கு நிகர் அகண்ட பரிபூரணத்தைத் தவிர வேறொன்றும் இல்லை. இத்துரிசினால் சொரூப குளிகையும் வாதமும் சித்தியாகும். மேலும் இத்துரிசு பட்டால் வேதை கோடி அண்டம் வரை பாயும். இதைப்பற்றி விவரிக்க முடியாது. அப்படிபட்ட பெருமையைக் கொண்டது இத்துரிசுச் சுண்ணம்.

ஆட்டிதிலே மெத்தவுண்டு புத்தியோர்க்கு
அரகரா யென்னாலே சொல்லப்போகா
மூட்டிதிலே வெகுமூட்டாய் மூட்டிமூட்டி
மூலகுரு தொந்தித்தார் முன்னூற்றெட்டு
ஓட்டிதிலே மெத்தவென்று கீழேபோட்டா
ருத்தமனே யெழுபதென்ற கோடிகாலம்
பாட்டிதிலே நானென்ன பாடப்போறேன்
பரிவான சொரூபமிதில் பண்ணினாரே. 907

புத்தியுள்ளவனாக இருந்தால் அறிந்து கொள்வாய். மூலகுருவானவர் இச்சுண்ணத்தை முன்னூற்று எட்டு முறை தொந்தித்தார். தொந்தித்த அச்சுண்ணத்தால் எழுபது கோடி யுகம் வாதம் பார்த்து சொரூப குளிகை செய்தார்.

பண்ணினதோர் குளிகையிலே சித்தர்மெச்சும்
பார்வதியும் சதாசிவனு முயர்ந்துமெச்சும்
ஒன்னினதோர் பாட்டருட பேரைவிற்று
வோகோகோ கடந்திட்டேன் வாதவேலை
வெண்ணினதோ ரெண்பெற்ற போகநாய
னிந்நாளில் கொடுத்தாரோ யேறிற்றப்பா
சண்ணினதோர் சண்ணெல்லாம் தூரிசிச்சண்ணு
சார்வேது வுப்பினுட சார்வுதானே. 908

சித்தர்களும், சதாசிவனும், பார்வதியும், போற்றும் அளவிற்கும் மூலதேவருடைய அருளாலும் போகதேவரின் அருளாலும் திருமூலரைப் போல் நானும் வாதத்தை பல ஆண்டு காலம் செய்து முடிவில் சொரூப குளிகையும் செய்தேன். இவை யாவும் தூரிசு சுண்ணத்தால் தான் சித்தியாயிற்று (வாத வேலையும் குளிகையும்) இத்தூரிசுக்கு உப்பால் பலம் உண்டாயிற்று.

சார்வில்லா நிலையுண்டோ வுலகத்தோர்க்குச்
சமயோக மில்லாமற் பிள்ளையாமோ
வூரில்லாக் கீர்த்தியுண்டோ பாடுவோர்க்கு
வுப்பில்லா ருசியுண்டோ கறிகட்கெல்லாம்
தேரில்லாக் கோயிலுக்குத் திருநாளுண்டோ
சிறுக்கியென்று பிறக்காட்டால் காமமுண்டோ
ஆரில்லா மாயையெல்லா மூன்றுக்குள்ளே
யப்பனே வாதமெல்லா முப்பிலாச்சே. 909

சமயத்திற்கு உதவாதவன் பிள்ளையாவானா? ஊர் பேர் தெரியாமல் பாடுவோர்க்கு கீர்த்தி கிட்டுமா? உப்பில்லாமல் உணவிற்கு சுவை உண்டாமோ? தேர் இல்லாத கோவிலுக்கு திருவிழாக்கள் நடைபெறுமா? பெண் இல்லாமல் காமம் உண்டாகுமோ? அதேபோல்தான் உப்பில்லாத வாதம் குப்பைக்கு சமமாகும். சகல வாதமும் உப்பால்தான் உண்டாயிற்று.

ஆச்சப்பா வெண்காரச் சுண்ணாம்போடே
யப்பனே வெண்காரம் சமனாய்க்கூட்டித்
தேய்ச்சப்பா வரைக்கையிலே சலமாய்ப் போகும்
சிறுகவிடு சவ்வீர முப்புச் சுண்ணம்
மாச்சப்பா சலத்துள்ளே வீரந்தோய்த்து
மக்களே வாட்டையிலே யுருகிவீழு
மேச்சப்பா போகிவிடும் தீயில்வாட்ட
வென்மக்காள் நெய்வார்த்த விளக்கில்வாட்டே. 910

வாட்டியங்கே விழுந்ததெல்லாம் மெழுகாய்நிற்கும்
மக்களே யிதனோடே தங்கம்லிங்கம்
பூட்டியப்பா பிசைந்துகொண்டு நவலோகத்தில்
போடுநீ நூற்றொன்று பொன்னுமாகும்

ஆட்டியப்பா காரத்தின் ஆட்டைச் சொல்ல
அரியார்க்கு முடியாது அம்மாஅம்மா
நீட்டியப்பா காரத்தை விரித்துஆட
நிலையில்லை தலையில்லை நிலைத்திலேனே. 911

வெங்காரச் சுண்ணத்துடன் வெங்காரத்தை சமஅளவு சேர்த்து அரைத்தால் சலமாகும். இச்சலத்தில் சவ்வீரத்தையும் உப்புச் சுண்ணத்தையும் போட்டு வீரத்தைத் தோய்த்து வாட்டினால் வீரம் உருகிவிழும். உருகி விழுந்ததை நெய்விட்டு விளக்கில் வாட்டினால் மெழுகாகும். இம்மெழுகுடன் தங்கத்தையும் லிங்கத்தையும் சேர்த்துப்பிசைந்து நவலோகத்தில் நூற்றுக்கு ஒரு பங்கு சேர்த்தால் பொன்னாகும். காரத்தின் பெருமையை கூற விஷ்ணுவாலும் முடியாது. இதைப்பற்றி விரிவாகக் கூறமுடியாமல் நானும் விழிக்கிறேன்.

தங்கச் சுண்ணம்

நிலையாத கற்பூரச் சுண்ணத்தோடே
நேராக வீரமிட்டால் ரத்தமாகும்
தலையான தங்கத்தில் தோய்த்து வாட்டித்
தணிக்கவொரு புடம்போடத் தங்கச்சுண்ணம்
குலையான நெடுங்கோடி சரக்குக்கெல்லாம்
கூறரிது கூறரிது பூரச்சுண்ணம்
மலையான தெனக்கெதிரோ வாதியென்பார்
மண்ணெதிரோ மரமெதிரோ மாட்டியாடே. 912

கற்பூரச் சுண்ணத்துடன் வீரமிட்டு இழைத்தால் ரத்தம் போல் சிவக்கும் இதைத் தங்கத்தின் மேல் பூசிவாட்டி புடம்போட்டால் தங்கம் சுண்ணமாகும். பெருமை வாய்ந்த கற்பூரச் சுண்ணத்தைப்பற்றி கூறுவது மிகவும் அரிது. உனக்கு எதிரான வாதி கிடையாது என்று மனதில் கொண்டு பூரச்சுண்ணத்தால் வாதம் செய்து பார்.

ஆடுகிற வாதிவந்தால் பூரந்தொட்டு
ஆடுமக்கா ளுங்கள் முன்னே யெதிராரில்லை
ஓடுவதைக் கற்பூரம் வங்கம் நீற்றும்
உத்தமனே யுபரசங்க ளொக்க நீற்றும்
நீடுகிற சரக்கெல்லாம் தொடுமுன்னே நீறும்
நேர்பான வாதிவந்தால் கற்பூரங்கேளு
ஊடுகிற வேதையிலே யென்ன சொல்வேன்
ஓகோகோ பூரணமே யொக்கு மொப்பே. 913

உனக்கு எதிராக வேதை புரிவதற்கு யாரேனும் வந்தால் இப்பூரச் சுண்ணத்தை தொட்டு வேதை செய்தால், உனக்கு எதிர்பட்டவர் ஓடுவார். இக்கற்பூரச் சுண்ணத்தால் வங்கம் முதல் சகல சரக்கும் நீறும். அதுமட்டுமின்றி உபரசங்கள் அனைத்தும் சுண்ணமாகும். இதற்கு நிகர் பூரணப் பொருளைத் தவிர வேறொன்றும் இல்லை.

ஒப்பான தங்கமென்ற சுண்ணத்துள்ளே
யுத்தமனே லிங்கமிடு வீரம்போடு
தப்பாதே காரமிட்டுக் கூட்டியாட்டு
சார்வான செந்தூர மிதுவேயாச்சு

கொப்பான தங்கமென்ற குருவுக்கெல்லாம்
கூட்டுமக்கா ளிதுமூன்றும் பச்சைபச்சை
அப்பானா லென்னசொல்வே னித்தைக்காட்டி
அதிகமுள்ள பெரியோர்கள் மறைத்திட்டாரே. 914

தங்கச் சுண்ணத்துடன் லிங்கமும் வீரமும் காரமும் கூட்டியரைத்துப் புடம் போட்டால் செந்தூரமாகும். இந்நூலில் கூறியுள்ள தங்க குருவுக்கெல்லாம் இம்மூன்றையும் கூட்டி அரைத்து வேதை பார்த்தால் அனைத்தும் சித்தியாகும். இதை பெரியோர்கள் மறைத்து வைத்தனர்.

மறைத்திட்ட தேதுக்கு வென்றால் மக்காள்
மருவியதோர் பச்சையிட்டால் வேதையில்லை
நிறைத்திட்ட கயிலாச வாசராகி
நேரான வீசனுக்கு முக்கண்மூன்றும்
கறைத்திட்ட காளகண்டம் சதுர்ப்புஜங்கள்
கையிலே விளங்குகின்ற மழுவும்மானும்
உரைத்திட்டா லவன்வாதி மற்றோர்மாடு
வோடுகிற குருக்கிடையும் மூன்றுந்தானே. 915

எதற்காக மறைத்தார்கள் என்று கேட்பீராயின் அனைவர்க்கும் வேதை பலித்துவிடும் என்ற காரணத்தால் சாதாரண பச்சையை இட்டு வேதை புரிந்தால் வேதை சித்தியாகாது. கயிலாயபதியான ஈசனுக்கு மூன்று கண்களும் நான்கு புஜங்களும், மழுவும், மானும் உள்ளன. இவற்றின் உண்மையான கருத்தை அறிந்தவனே வாதியாவான்.

மூன்றுக்கும் பேரேது முக்கண்ணனென்பார்
மூலரென்பார் மூலமென்பார் மூர்த்தியென்பார்
மூன்றுக்கும் பொருளறிந்தால் அவனேவாதி
முப்பாழு மிதற்கொப்பு முடிவுமொப்பு
மூன்றுக்கும் பொருள்சொல்வார் வல்லோர் மக்காள்
மூலத்தே சிவகாமி சத்தே சொன்னாள்
மூன்றுக்குள் அடங்கிற்றுச் சுண்ணமெல்லாம்
மூன்றைவிட்டால் சுண்ணத்தின் மூர்க்கம் போச்சே. 916

மேற்கூறிய மூன்று வகையான சரக்குக்கு முக்கண் என்று பெயர். இதற்கே மூலர் என்றும், மூலம் என்றும், மூர்த்தி என்றும் பெயர். இதை அறிந்தவனே வாதியாவான். இம்மூன்று பொருளும் ஆதிஅந்தமான பொருளுக்கு சமமாகும். சிவகாமியான தாய் இதன் பொருளை எனக்கு மூலத்தில் சொன்னாள். இம்மூவகை சரக்கினால் வாதமும் சுண்ணமும் கைக்குள்ளாகும்.

மூர்க்கமென்ற படிகத்தைத் தொட்டீரானால்
மூவுலகும் விரலாலே சுற்றலாகும்
மார்க்கொத்த படிகத்தின் சுண்ணத்தோடே
மாட்டு சமன் சவ்வீரம் சிவப்புமெத்த
வார்க்கமொத்த வங்கத்தி லிதனைப்பூசி
யப்பனே புடம்போடக் கடிதாஞ்சுண்ணம்
பார்க்கவிந்த வீரத்தில் வங்கம் போட்டுப்
பதறாமல் நிமிளையிலே பூசிவையே. 917

வைத்ததுவே சுண்ணாம்புக் குகையில்வைத்து
வாகாக வூதுநன்றாய் நிமிளைச்சுண்ணம்
கைத்ததுவில் சவ்வீரம் கூட்டிக்கொண்டு
கடுகவுப்பு சாரத்தின் மேலேமக்காள்
பத்திதுவும் சாரத்தை மண்ணில்வைத்துப்
பருவமுடன் தீயெரிக்க நீரோவற்றும்
ஒத்திதுவும் சாரத்தில் வீரங்கூட்டி
யுறவரைத்து வெண்கருவால் வில்லைகட்டே. 918

படிகாரத்தை கொண்டு மூவுலகையும் ஆட்டிபடைக்கலாம். படிகாரச் சுண்ணத்துடன் சமஅளவு சவ்வீரம் கூட்டி இழைத்தால் இரத்தம் போல் சிவக்கும். இதை வங்கத்தின் மேல் பூசி புடம் போட்டால் கொடிய சுண்ணமாகும். இச்சுண்ணத்துடன் வீரம் போட்டு இழைத்து நிமிளையின் மேல் பூசி சுண்ணாம்புக் குகைக்குள் வைத்து ஊதினால் நிமிளைச் சுண்ணமாகும். இந்நிமிளைச் சுண்ணத்துடன் சவ்வீரம் சேர்த்துச் சாரத்தின் மேல் பூசி மண் மறைவில் வைத்து தீமூட்டி எரித்தால் வற்றி இறுகும். இச்சாரத்துடன் வீரம் சேர்த்து வெண்கருவால் அரைத்து வில்லை தட்டி.,

கட்டியப்பா சுண்ணாம்புக் குகையில்வைத்துக்
கலந்தூது காரமது கடியசுண்ணம்
ஒட்டியப்பா சாரத்தில் வீரம் போட்டு
வுறவரைத்து வெண்கருவால் துரிசிக்கப்பு
கெட்டியப்பா சுக்கான்போல் துரிசியாகும்
கெடியான குகையிலிட்டு வூதிப்போடு
அட்டியப்பா வொன்றுமில்லை துரிசிச்சுண்ணம்
ஆடுகிற சிவயோக மறிவுந்தானே. 919

சுண்ணாம்புக் குகைக்குள் வைத்து ஊதினால் சாரம் சுண்ணமாகும். இச்சாரச் சுண்ணத்துடன் வீரம் போட்டு வெண்கருவால் அரைத்து துரிசின் மேல் பூசினால் சுக்கான் போல் ஆகும். இத்துருசை குகையில் வைத்து ஊதினால் சுண்ணமாகும். இச்சுண்ணத்தால் சிவயோகம் பலிதமாகும்.

அறியாத துரிசியிலே வீரம்போட்டு
அப்பனே பறிமேலே பூசிநன்றாய்
மறியாத புடம்போடு தங்கச்சுண்ணம்
மக்களே யிதனோடே புழுகுகூட்டிப்
பிறியாதே தசாண்டத்தில் போட்டுப் போடப்
பிரண்டண்டத் தோட்டோடே மெழுகுமாகும்
வெறியாதே நவலோகம் பரிசித்தாட்ட
வேதையப்பா வாயிரத்தோ டெட்டுமாற்றே. 920

இத்துரிசுச் சுண்ணத்தில் வீரம் போட்டு இழைத்து தங்கத்தின் மேல் பூசி புடம்போட்டால் தங்கம் சுண்ணமாகும். இத்தங்கச் சுண்ணத்துடன் புனுகு கூட்டிதசாண்டத்தின் மேல் பூசி புடம்போட்டால் தசாண்டம் ஓடோடு மெழுகாகும். இம்மெழுகை நவலோகத்தில் தடவிய மாத்திரத்தில் ஆயிரத்தெட்டு மாற்று கொண்ட தங்கமாகும்.

மாற்றிதுவோ படிகத்தில் மக்காள்மக்காள்
வாகான படிகமொன்று சாரம்ரெண்டு
போற்றிதுவே யரைக்கையிலே சலமாய்ப் போகும்
போடிதிலே வீரத்தைப் பூரந்தோய்த்து
ஆற்றிதனைக் குகையிலிட்டே யூதிப்போடு
ஆச்சரியங் கடுஞ்சுண்ணம் பூரமாச்சு
யேற்றிதனைத் தொந்தித்துத் தங்கத்தாட்ட
வென்ன சொல்வேன் தாதுமுதல் சரக்குநீறே. 921

ஒரு பலம் படிகச் சுண்ணத்துடன் இரண்டு பலம் சாரத்தைச் சேர்த்து அரைத்தால் சலமாய்ப் போகும். இச்சலத்தில் வீரம் போட்டு கலக்கிப் பூரத்தைத் தோய்த்து குகையில் இட்டு ஊதினால் பூரம் கொடிய சுண்ணமாகும். இச்சுண்ணத்தை தொந்தித்த தங்கத்துடன் சேர்த்தால் அறுபத்து நாலு தாதுவும் சுண்ணமாகும்.

நீறான சரக்கினுட விந்தைகேளு
நிலவரமாய்ச் சொல்லுகிறே னொளிப் பில்லாமல்
கூறான நீறோடே சவாது போட்டுக்
கொள்ளவந்த வினத்தின்மேற் பூசிவாட்ட
தாறான வினந்தோறும் மணிபோலாடும்
சமுசயங்க ளொன்றுமில்லை சதமாங்கோடி
வீறான சுண்ணத்திற் புழுகுகூட்டி
வெருவியந்த வினத்தின்மேற் பூசியூதே. 922

ஊதையிலே யிச்சுண்ண மினத்திற் பாய்ந்து
வுத்தமனே கடுஞ்சுண்ண மாகுங்கோடி
பாதையிலே யெத்தனைநான் சொல்லப் போறேன்
பரிசமுதல் தூமவரை வேதையாகும்
போதையிலே சிவகாமி சீனம்சொன்னாள்
போக்கிதிலே விரித்தெடுத்தேன் கோடாகோடி
தாதையிலை தந்தையிலை யானவீசன்
தாய்சொன்ன வித்தையெல்லா முனக்கென்றாரே. 923

தொந்தித்த சுண்ணத்துடன் சவ்வாது கூட்டி சரக்கின் மேல் பூசி வாட்டினால் மணிபோலாகும். இம்மணியால் வேதை கோடிக்கு ஓடும். இதில் சந்தேகம் வேண்டாம். தொந்தித்த சுண்ணத்துடன் புனுகு கூட்டி சரக்கின் மேல் பூசி குகையில் வைத்து ஊதினால் கொடிய சுண்ணமாகும். இச்சுண்ணத்தால் பரிசவேதை முதல் தூமவேதை வரை சித்தியாகும். சிவகாமியான தாய் எனக்கு இம்முறைகளை எடுத்துரைத்தாள் அதை பார்த்த சிவன் தாயான பார்வதிதேவி கூறிய வித்தையனைத்தும் உன்னுடைய வித்தையாகும் என்று அருள்பாளித்தார்.

உனக்கென்று சொன்னதென்ன பூரணமேனய்யா
வும்முடைய அடியார்க்குப் பாததூள்யான்
எனக்கென்ற சுதந்தரத்தை யிழந்து விட்டேன்
ஏகமாய் நின்றபொரு ளானேனானேன்
தனக்கென்று சொன்னாக்கால் ரெண்டாய்ப்போச்சு
தனையறிந்து வுனைக்கூட வொன்றாய்ப்போச்சு
மனக்கண்ணா லுனையறிந்தேன் வாதயோகி
மற்றவனோ வாதியல்ல மனுஷமாடே. 924

எனக்கு என்று கூறிய பூரணமான ஐயனே! நான் தங்களுட அடியாரின் கால்தூசிக்கு சமமாவேன். நான் சுதந்திரம் அற்றவன் சகலமாய் நிற்கும் உம்மிடம் நான் அடங்கியிருக்கிறேன். நான் என்றும் நீர் என்றும் தனியாக பேதப்படுத்தினால் இரண்டு பொருளாகும். அப்படியில்லாமல் தன்னைத்தான் அறிந்து கூடினால் அனைத்தும் ஒரே பொருளாகும். அனைத்துள்ளும் ஒரே பொருளாய் நிற்கும் உம்மை யார் அறிகிறாரோ அவரே வாதியாவார். மற்றவர்களெல்லாம் மனித மாடாவார்.

மனுஷனாய்ப் பிறந்ததெல்லாம் மனுஷனாமோ
மற்றுமுள்ள காரமெல்லாம் சீனமாமோ
கணிசமாய்ச் சாரமெல்லாம் சாரமாமோ
கைமுறையா யுப்பெல்லாம் கல்லுப்பாமோ
அனிசமா யிருமூன்றில் வசியம்வாதம்
அப்பனே வயத்தம்பம் மூன்றுமாச்சு
இனிசனாய் அலைவார்கள் மூன்றுகாணார்
ஏற்றுமந்த வாதியென்று விகழ்ந்துதள்ளே. 925

மனிதனாகப் பிறந்தவர்கள் எல்லோரும் மனிதராவாரோ! சகலவிதமான சாரமும் சீனத்திற்கு ஈடாமோ (சீனமாகுமோ!) சாரம் என்ற பெயர் கொண்ட சரக்கெல்லாம் சாரமாகுமா! உப்பு என்று பெயர் கொண்ட சரக்கெல்லாம் கல்லுப்பாமோ! இம்மூன்று வகையான சரக்கால் சகல விதமான வாதமும் வசியமும் சித்தியாகும். இதை அறியாமல் வேறு விதத்தில் வாதத்தைதேடி அலைவார்கள்.

தள்ளுதள்ளு சீனத்துக் கெதிரோயில்லை
சச்சிதா னந்தத்துக் கீடொன்றில்லை
தள்ளுதள்ளு சீனமென்ன மனோன்மணிக்குவிந்து
சார்வான சீனத்தி லாயிர மோமாற்று
தள்ளுதள்ளு சீனத்தில் கல்லுப்பு சேர்ந்தால்
சாதகமாய் வீரத்தை யுள்ளே கொள்ளும்
தள்ளுதள்ளு மூன்றுமொன்றாய்க் கூடிற்றானால்
தயங்காத கற்பூரம் அதற்குள்சாமே. 926

மனோன்மணி நாதமான சீனத்துக்கு எதிர்ச் சரக்கு வேறொன்றும் கிடையாது சீனத்தால் ஆயிரத்துக்கும் அதிகமான மாற்று கிடைக்கும். சீனத்துடன் கல்லுப்பு சேர்ந்தால் வீரத்தை உள்ளே வாங்கும். சீனம், கல்லுப்பு, வீரம் இவை மூன்றும் ஒன்றாய்ச் சேர்ந்தால் கற்பூரம் மடிந்து சாகும்.

அதற்குள்ளே பூரமொன்றாய்க் கூடிற்றானா
லாகாகா வீரமதற் கசனமாச்சு
இதற்குள்ளே யிட்டதொரு வீருமெல்லா
மெழும்பாம லுள்ளடங்கி நீறிப்போகும்
எதற்குள்ளே யானாலு மந்தவேக
மென்மக்காள் கண்டதுண்டோ காணீர்காணீர்
வதற்குள்ள லகிரியைப்போற் கண்டத்தைத்தொட்டு
வாதமெல்லாம் சீனத்தி னாட்டுத்தானே. 927

சீனம், கல்லுப்பு, வீரம் பூரம் இவை நான்கும் ஒன்றாய்ச் சேர்ந்தால் சவ்வீரம் தனைத் தூக்காமல் மடிந்து சுண்ணமாகும். சவ்வீரம் சுண்ணமானால் அதன் வேகத்தை

யாராலும் கணக்கிட முடியாது. அப்படிப்பட்ட வேதை உண்டாகும். சகல விதமான வேதைக்கும் சீனமே ஆதி காரணம்.

ஆடுறதோர் நாலோடே வழலைசேரு
அப்பனே யஞ்சஞ்சு யெடைதான் கூட்டு
நீடுறதோ ரிந்தெடைக்கு வீரங்கூட்டி
நேரவே வெண்கருவா லரைத்துவூது
ஊடுறதோ ரிந்தெடைதான் வீரங்கூட்டி
யூதாது பத்துமட்டும் தொந்தமேறும்
கூடுறதோ ரிச்சுண்ணப் பேரேதென்றால்
கொள்ளுறதோர் போதமென்ற குருவுமாச்சே. 928

சீனம், கல்லுப்பு, வீரம், பூரம் என்ற இவை நான்கு சரக்குடன் வழலை கூட்டினால் அனைத்தும் சித்தியாகும். இவை ஐந்து சரக்கையும் ஐந்து எடையாக வாங்கி அதற்கு சமன் வீரம் சேர்த்து அரைத்து வூதி பின்பு மீண்டும் ஊதிய சுண்ணத்தின் எடைக்கு சமஅளவு வீரம் சேர்த்தரைத்து ஊத வேண்டும். இதுபோல் பத்துமுறை தொந்தித்தால் 'போதகுரு" என்ற பெயர் கொண்ட சுண்ணமாகும்.

ஆச்சிந்தக் குருவாலே துரிசிசூதம்
அறுபத்து நாலோடு வுபரசங்களெல்லாம்
வீச்சிந்தப் புழுப்பட்டா லெல்லாம் சுண்ணம்
வேறாச்சு வாதுபட்டா லுருகியாடும்
ஒச்சிந்தக் குருவாலே எடுத்தவேதை
யுரையாதே யாயிரத்தோ டைந்நூற்றெட்டு
மாச்சிந்த சீனத்தால் மேருவுக்கீசன்
மாட்டினதா லாயிரத்தோ டெட்டுமாற்றே. 929

மாற்றடியே னைந்நூற்றுக் கதிகம்சொன்னேன்
மருவியென்னைப் பெற்றெடுத்த சிவகாமித்தாய்
போற்றடியேன் றனைமெச்சியிக் குருவைச்சொன்னான்
போக்கெல்லாம் பார்த்தலைந்து புளகமானேன்
ஏற்றடியேன் மாற்றேறச் செம்புபோலாம்
யிருக்கையிலே ரசம்போல் விளகுமக்காள்
ஊற்றடியே வெட்டவெட்ட வூறினாற்போ
லொடுங்காது வொடுங்காது படிகந்தானே. 930

இந்த போத குரு சுண்ணத்தால் துரிசு, சூதம் அறுபத்து நாலு தாது மற்றும் உபரசங்கள் அனைத்தும் சுண்ணமாகும். இக்குருவால் ஆயிரத்து எட்டு மாற்று கொண்ட பொன் உண்டாகும். இதேபோல் பலவிதமான சரக்கில் வேதையை கூறியுள்ளேன். இம்முறைகளை சிவகாமியான தாய் எனக்கு உபதேசம் செய்தாள். அதைச்செய்து பார்த்து மனம் புளகாங்கிதம் அடைந்தேன். தங்கம் மாற்று அதிகமாக அதிகமாக இரசம் போல் இளகும் ஒருகாலும் இறுகாது. இவையாவும் படிகமான சீனத்தின் மகிமையால் என்றறிக.

தானென்ற தாதுமுறை பிறப்பைச் சொல்வேன்
சமுசயங்க ளெண்ணாதே யிடத்தைச் சொல்வேன்
ஏனென்ற பொதிகைக்கு வாயுமூலை
யேழா யிரங்காத மெழும்பிப் போனால்

கானென்று குறுக்கிலே மலைதானொன்று
கடந்துசென்றால் தேவனாம் பட்டணத்தின்பேரு
வானென்ற விசாலமது ஆயிரமாங்காதம்
மக்களே நான்கெல்லை மருவிப்பாரே. 931

தாதுக்களின் பிறப்பிடம் கூறுகிறேன் கேள்! பொதிகைக்கு வாயு மூலையில் அதாவது ஏழாயிரங்காதம் சென்றால் குறுக்கில் பல மலைகளைக் காணலாம். அந்த இடத்திற்கு தேவபட்டிணம் என்று பெயர். அப்பட்டிணம் ஆயிரங்காதம் விசாலம் கொண்டது.

பாரிந்தப் பட்டணத்தில் நவலோகங்கள்
பருவமலைபோல் நிற்கும் மக்காள்பாரு
போரிந்தக் கெந்தியொடு தாதுவகையெல்லாம்
புகழாக மலைமலையாய் நிற்கும்நிற்கும்
காரிந்தப் பட்டணத்தைக் கடந்தாயானால்
கைமுறையாயப் புறத்தே மலைதானொன்று
ஓரிந்த மலைக்குநேர் வடக்குமக்கா
ளூற்று மூவாயிரமாங் காதமோடே. 932

ஓடினாற் பருவதந்தா னொன்றதுண்டு
வுறுதியுமேற் பருவதந்தா னென்றுபேரு
ஆடனால் மேற்கடலி லைங்காதம் புக்கி
அப்பனே கீழ்கடலி லைங்காம் புக்கி
நீடினா லுயரமது வாயிரமாங் காதம்
நிலைத்தமலை யடிவாரத் தஞ்சுகூபம்
நாடினாற் கூபமென்ற விசாலங்கேளு
நன்றான நாற்காதம் நலந்தான் காணே. 933

இப்பட்டிணத்தில் நவலோகங்களும் மலைகளைபோல் ஓங்கி நிற்கும். அது மட்டுமில்லாமல் கெந்தியும் மலைப்போல் உயர்ந்து நிற்கும் இப்பட்டிணத்திற்கு வடக்காக மூவாயிரங்காதம் கடந்து சென்றால் ஒரு மலையுண்டு அதற்கு பருவதமலை என்று பெயர். இது மேற்கடலில் ஐந்து காதமும் கீழ்கடலில் ஐந்து காதமும் பரவி நின்று ஆயிரங்காதம் உயரம் கொண்டதாய் நிற்கும். இம்மலை அடிவாரத்தில் ஐந்து கூபங்கள் உண்டு. இவைகளின் மொத்த பரப்பளவு நான்கு காதமாகும்.

காணப்பா அஞ்சான கூபத்துள்ளே
கடியதொரு சூதமஞ்சில் நிறைந்து நிற்கும்
பூணப்பா யிச்சூத மெடுத்துவந்தால்
புகழான சுத்தியொன்றும் போட வேண்டாம்
தோணப்பா மலைதோறும் சூதமுண்டு
சொரூபமென்ற குளிகையிட்டா லெல்லாங்காணும்
வூணப்பா யிம்மலையில் பிறந்ததாது
வுத்தமனே யுரைக்கிறே னுணர்ந்துகேளே. 934

இவை ஐந்து கூபங்களிலும் சூதம் இருக்கும். இக்கூபத்திலிருந்து சூதத்தைக் கொண்டு வந்தால் சுத்தி செய்ய வேண்டிய அவசியமில்லை. அது மட்டுமின்றி அம்மலை முழுவதும் சூதமிருக்கும். சொரூப குளிகை செய்து அதைவாயில் வைத்துக் கொண்டால் சகலமும் வெளியாகத்தெரியும். இம்மலையில் இருக்கின்ற பாஷாணங்களின் பெயர்களைக் கூறுகிறேன் கேள்:

கேளப்பா கறடமொடு கோளகமும் சூதம்
கெடியான அரிதாரம் கெந்தகமும்வீரம்
வாளப்பா வைக்கிருந்த தாலம்பமூர்த்தம்
மருவியதோர் கிரபந்திதொட்டிக் குதிரைப்பல்லு
நீளப்பா கங்கமொடு கபரிதுத்தம்
நிலையான பலன்வர்க்கங் காந்தம் லிங்கம்
ஆளப்பா சரக்காண்டம் தாளகமும் சிலையும்
அப்பனே வுபலமும் சாலாங்கம் பேரே. 935

பேரான கற்பரியும் கற்பரசத்தோடு
பெருத்ததொரு அஞ்சனந்தா னஞ்சுவகை சாதி
வாரான சக்கரமும் கீதசங்கத்தோடே
மருவியதோர் சிலாமதமும் கார்முகியுங்கேளு
காரான மாட்சிக்கு மஞ்சுசாதி
கருவான அப்பிரகப் பாஷாணத்தோடு
நேரான பாஷாண முப்பத்திரண்டு
நிலவரமாய் மலைதோறும் பிறந்ததாதே. 936

கற்கடம், கோளகம், சூதம், அரிதாரம், கெந்தகம், வீரம், வைக்கிருந்தம், தாலம்பம், மூர்த்தம், சிரபந்தி, தொட்டி குதிரைப்பல்லு, சங்கம், கபரி, துத்தம், பலவங்கம், காந்தம், லிங்கம், சரகண்டம், தாளகம், மனோசிலை, உபலம், சாலாங்கம், கற்பரி, கற்பரம், அஞ்சனக்கல், சக்கரம், சங்கு, சிலாமதம், கார்முகில், அப்பிரகம், இவை முப்பத்திரண்டு பாஷாணமும் அம்மலையில் உண்டு.

தாதுவுக்குப் பதிலாகப் பறங்கியப்பா
தாய்சொல்லச் சமைத்துவிட்டாள் சகலதேசம்
கோதுவுக்கு மிதனோடே யறுபத்துநாலு
கூடிற்று பறங்கியுட் கூட்டத் தோடே
ஏதுவுக்குப் பூமிக்குத் தாதுவோடே
யிணையல்ல யிணையல்ல பறங்கித்தாது
மாதுவுக்கு மாதான சிவகாமித்தாய்
வரிசைசொல்லிப் பழக்குவித்தாள் மக்காள்கேளே. 937

இத்தாதுவுக்கு பதிலாக தாயால் முப்பத்திரண்டு வகையான வைப்பு பாஷாணமும் சொல்லித் தந்தாள். இவை இரண்டும் கூடி மொத்தம் அறுபத்து நாலு பாஷாணமாயிற்று. வைப்பு பாஷாணம் பூமியிலுள்ள பாஷாணத்தை காட்டிலும் சிறிது தாழ்ந்ததே. இவையாவும் சிவகாமியான தாய் எனக்கு சொல்லித் தந்தாள்.

கேளப்பா முப்பத்தி ரண்டுதாது
கெடியான மலைதோறு முண்டுவுண்டு
வாளப்பா மலையெதுவே னென்றுகேட்டால்
மருவிநான் பார்த்துவந்த மலைபேர் சொல்வேன்
நீளப்பா கலியாணி கந்தமாதம்
நிலையேம கூடமொடு ரோமகூடம்
ஆளப்பா ருத்திரகூடம் பூதகூடம்
அப்பனே கனிகண்ட மென்றும்பேரே. 938

பேரான லட்சுமியாம் விசாலமொன்று
பெருத்தநதி யதன்மேலே நூறுவோடும்
வாரான பத்தலய மென்றுவொன்று
மக்களே கேதுமந்த மென்றுவொன்று
கோரான கொங்கணர்தான மென்றுவொன்று
கொள்ளுமொரு காசிக்குத் தெற்கேகேளு
தாரான விந்தாரண்ய மென்றுவொன்று
தனித்துநின்ற சிந்துவென்ற மலைதானொன்றே. 939

மலைகேளு கிரவுஞ்ச மென்று மக்காள்
மருவியதோர் சாலக்கிராம மதுவென்றொன்று
மலைகேளு மல்லிகார்ச் சுனந்தானொன்று
மருவியதோர் மதுவிளையும் கொல்லிமலை யொன்று
மலைகேளு கோரக்கர் பன்றிமலையொன்று
மக்களே சதுர்முகந்தா னடுக்கவொன்று
மலைகேளு பொதியையிலே அகத்தியர்தான்
வாச மகேந்திராசலமென்ற மலைதானொன்றே. 940

இம்மலையைத்தவிர வேறுசில இடங்களிலும் இத்தாதுக்கள் உண்டு அம்மலைகளின் பெயர்களை கூறுகிறேன் கேள்! கல்யாணி, கந்தமாதம், ஏமகூடம், ரோமகூடம், ருத்திரகூடம், பூதகூடம், கணிகண்டன், லட்சுமி விசாலம், இந்த லட்சுமி விசாலத்தில் அனேகவிதமான நதிகள் உள்ளன. பிறகு கேள்! பத்தலயம், கேதுமந்தம், கொங்கணம், காசிக்கு தெற்கேயுள்ள விந்தாரண்யம், சிந்து மலை, கிரவுஞ்சம், சாலக்கிராமம், மல்லிகார்ச்சுனம், கொல்லிமலை, கோரக்கம், பன்றிமலை, சதுர்முகம், பொதிகை மலையான அகஸ்தியரின் வாசஸ்தலம் மகேந்திராசலம்,

ஒன்றொன்றாய்க் குறிப்பிட்ட மலையோ சொன்னே
னோகோகோ குட்டிமலை கோடாகோடி
ஒன்றொன்றாய் மலைதோறுந் தாதுவுண்டு
வுத்தமனே சூதமுண்டு மூலிகைகளுண்டு
ஒன்றொன்றாய் மலைதோறும் நாதாக்களுண்டு
வோடுகிற பிள்ளைகளோ ஒகோகோடு
ஒன்றொன்றாய்ப் பார்த்தலைந்து கண்டு சொன்னே
னுரைக்கிறேன் சங்கையற்று வுணர்ந்துகொள்ளே. 941

மேலே கூறிய மலைகளைத் தவிர அனேக விதமான குட்டி மலைகளும் கோடிக்கணக்கில் உண்டு. இக்குட்டி மலைகளிலும் அனேக வித தாதுக்களும், சூதமும் மூலிகைகளும், முனிவர்களும், முனிவர்களின் சீடர்களும் உண்டு. இவை யாவும் நான் நேரேசென்று பார்த்தவையாகும்.

உணர்ந்துநின்ற லவணமொடு காரசார
மொருமூன்றால் வெவ்வேறு வுறவு சேர்த்துக்
கணர்ந்து நின்ற சூதமொடு கெந்திசத்தைக் கூட்டிக்
காரசாரக் கரணம் பறங்கி செய்தான்
யிணர்ந்து நின்ற யிருபத்தோ டைந்துகூட்ட
மென்மக்கா ளுபரசத்தை யேற்றவென்றால்
புணர்ந்துநின்ற மண்கல்லு அஸ்திரோமம்
புகழான ஜீவன்முத லொருநூறாச்சே. 942

கார சார லவணம் மொத்தம் இருபத்தைந்து வகையாகும். இதனுடன் சூதமும் கெந்தியும் அளவு குறைத்தும் கூட்டியும் சேர்த்து செய்தால் முப்பத்திரண்டு வகையான வைப்பு பாஷாணம் உண்டாகும். இதற்கடுத்து உபரசங்கள் நூறுக்கு மேல் உள்ளன. இவற்றில் கல் மண் முதல் உயிர் இனத்தின் ரோமம் எலும்பு பல் போன்றவை அடங்கும்.

ஆச்சப்பா வுபரசத்தை விரித்துச்சொல்ல
வைந்நூறு பாட்டாகும் அனேகம்சொல்ல
ஒச்சப்பா ஞானத்தி லாயிரத்துச் சொச்ச
முத்தமனே யாயிரத்துச் சில்வானவாதம்
நீச்சப்பா வென்று சொன்ன வேழுலட்சமெல்லாம்
நிலையாகச் சோதித்து யிதிலே சொன்னேன்
பூச்சப்பா சகலநூலைந் நூறில்தங்கம்
புகழ்பெரியோர்க் கடுமையிட்டுப் புகட்டினேனே. 943

இவ்வுபரசத்தை விரித்து சொல்ல வேண்டுமானால் ஐநூறு பாட்டுகள் பாட வேண்டும். இதற்கு முன் ஞானம் ஆயிரம் பாடலும், ஆயிரத்து சொச்சம் வாதமும் கூறியுள்ளேன் ஏழுலட்சம் என்ற மூலக்கிரந்தத்தை ஆராய்ந்தும் என் சொந்த அனுபவத்தில் செய்து பார்த்ததையும் இந்நூலில் கூறியுள்ளேன்.

புகட்டியதோ ரென்னூலில் வாதம் பொய்யோ
புரிசடையோ னொளித்திருந்த மூலம் பொய்யோ
பகட்டியதோ ருலகத்தில் ஞானம் பொய்யோ
பராபரையைப் பூசித்த பருவம் பொய்யோ
அகட்டியதோ ரஷ்டாங்க யோகம் பொய்யோ
அப்பனே கல்லுப்புக் கட்டுப் பொய்யோ
சகட்டியதோர் மூலத்தில் சொரூபம் பொய்யோ
சாற்றினதோர் சுண்ணாம்பு பொய்யோ பாரே. 944

என்னூலில் கூறியுள்ள வாதம், ஞானம், பூசாவிதி, அஷ்டாங்க யோகம், கல்லுப்புக்கட்டு, சுண்ணம் போன்றவைகளை முறையாக செய்து பார்க்க நிச்சயமாய் பலிதமாகும் இதில் ஒரு ஐயமும் இல்லை.

பாரப்பா முதற்காண்ட முகமுமாச்சு
பரிவான நடுக்காண்டம் மார்புமாச்சு
வோரப்பா பிற்காண்ட முதரந்தொட்டு
வுத்தமனே பாதவரை யொக்குமொக்கும்
ஆரப்பா யம்முறையாய் நின்றதென்றா
லகண்டசிவ னிம்முறையாய் நின்றமார்க்கம்
நேரப்பா முதற்காண்டம் முற்றும் சொன்னேன்
நிலையான போகர்பதம் நினைந்துகூடே. 945

என்னால் எழுதப்பட்ட இம்மூவாயிரம் என்ற காவியத்தில் முதல் காண்டம் முகம் போன்றும் இரண்டாம் காண்டம் மார்பைப் போன்றும் மூன்றாம் காண்டம் வயறு முதல் கால் வரைக்கும் உள்ளஒரு முழு வாத மனிதனுக்கு சமமாகும். இவற்றில்

சிரசு போல் விளங்கும் முதல் காண்டம் முடிவடைந்ததை தெரிவித்து கொள்கிறேன். இவை யாவையும் கற்றறிந்து போகரின் பாதத்தில் தொண்டு செய்!

கூடுவது எவ்வாறு வேதாந்தமார்க்கம்
குறிப்பான மூன்றெழுத்து வுபதேசமுன்னே
நாடுவது னாலெழுத்து யிரண்டாந்தீட்சை
நலமான அஞ்செழுத்து மூன்றாந்தீட்சை
யூடுவது ஆறெழுத்து நான்காந்தீட்சை
யுத்தமனே யெட்டெழுத்து அஞ்சாந்தீட்சை
ஆடுவது பத்தெழுத்து ஆறாந்தீட்சை
யப்பனே பதினைந்தோ டேழுமாச்சே. 946

எவ்வாறு தொண்டு செய்வது என்று கேட்ப்பாயாகில் முதலில் மூன்றெழுத்தை உபதேசமாக அறிந்து முதல் தீட்சையை பெற்றுக் கொண்டும் பிறகு நாலெழுத்தை இரண்டாவது தீட்சையாகவும் ஐந்தெழுத்தை மூன்றாவது தீட்சையாகவும், ஆறங்யெழுத்தை நான்காவது தீட்சையாகவும் எட்டெழுத்தை ஐந்தாவது தீட்சையாகவும், பத்தெழுத்தை ஆறாவது தீட்சையாகவும், பதினைந்து எழுத்தை ஏழாவது தீட்சையாகவும்,

ஆச்சப்பா பதினாறு எட்டாந்தீட்சை
யாச்சரியம் சத்தியுட பிரசாதவித்தை
ஒச்சப்பா ஒன்பதுதான் பின்புகேளு
யுத்தமனே பரமான பிரசாதவித்தை
வாச்சப்பா பத்தாச்சு தீட்சை மார்க்கம்
மருவியதோர் பதினொன்று மவுனதீட்சை
மூச்சப்பா ஆடாது மெட்டில் சேரும்
மூதண்ட மனத்தைமெள்ள அறிவிற்சேரே. 947

பதினாறு எழுத்தை எட்டாவது தீட்சையாகவும், சக்திபிரசாத வித்தையை ஒன்பதாவது தீட்சையாகவும், பிறகு பரமான சிவபிரசாத வித்தையை பத்தாவது தீட்சையாகவும் செபித்து, பிறகு செபம் ஏதும் செய்யாமல் மவுனமாக அமர்ந்து மவுனத்தில் கூடுவதே பதினொன்றாவது தீட்சையாகும். இத்தீட்சை முறைகளை பழகுங்கால் வாசிமனதில் சேரும், மனம் புத்தியில் சேரும்.

இவ்வாறு முறையாக பதினொரு தீட்சையை முடித்து மனம் புத்தி இந்திரியங்களை ஒடுக்குவதே போகருக்குச் செய்யும் தொண்டாகும்.

வாதகாவியம் மூவாயிரம்
முதற்காண்டம்
முற்றிற்று.

ஓம்!! தத்!! ஸத்!!!

தாமரை

நூலகம்